# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடர்.

1979, மார்ச் 14, 15, 16, 17 ஆம் நாட்கள்

(தொகுதி 26—எண்கள் 1 முதல் 4 வரை) (2 to 4)

NO. 1 Nil

©
தமிழ்நாடு அரசு
1980

சட்டமன்றப் பேரவைத் துறை
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை—600009

விலை ரூ. 11

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

---

### இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர்.

---

1979 மார்ச் 14, 15, 16, 17 ஆம் நாட்கள்.

(தொகுதி 26—எண்கள் 1 முதல் 4)

**உள்ளடக்கம்.**


| | பக்கங்கள் |
| --- | --- |
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் அமைச்சர்களின் பேரவைச் செயலர்களும். | —iiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | vii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உட்பட.) | viii—xvi |
| 1. அமைச்சரின் அறிக்கை— | |
| சிம்கோ நிறுவனத் தகராறு குறித்து தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் அறிக்கை. | 63—68 |
| 2. அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| (அ) உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978. | 339—259 |
| (ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978. | 202—223 |
| (இ) கோயம்புத்தூர் நகராட்சிமன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979. | 112—115 |
| (ஈ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979. | 115—119 |

பக்கங்கள்


2. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உ) தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978. 223—244

(ஊ) தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு, 1979. 491—496

(எ) நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்ட முன்வடிவு, 1979. 74—77

(ஏ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979. 81—112

(ஐ) நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978. 302—338

(ஒ) (பயிரிடும் குத்தகைக்காரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979. 70—72

(ஓ) புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979. 72—73

(ஔ) மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979. 77—80

3. அரசினர் தீர்மானம்—

விதி 23-ஐத் தளர்த்தல். 191

விதி 41 (3)-ஐத் தளர்த்தல். 492

மத்திய கூட்டுறவு வங்கியின் கடன் வசதிக்கான உத்தரவாத வரையறையை உயர்த்துவது. 359—37[illegible]

4. அரசினர் தனித் தீர்மானம்—

பருத்தி போக்குவரத்துச் சட்ட விதிகளின் திருத்தம் 498—51[illegible]

மாவட்ட நகராட்சிச் சட்டம் (1920)-இன் கீழ் புதிய விதி 62-எ சேர்த்தல். 496—[illegible]




பக்கங்கள்


5. அறிவிப்பு—

ஆளுநர் இசைவு குறித்து. 74

பேரவையின் அலுவல்கள் குறித்து. 244—249

மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து. 461

6. உரிமைப் பிரச்னை—

மாலை முரசு நாளேடு மீதும், திரு. இரா. நெடுஞ்செழியன் மீதும். 171—186

மின்சாரத்துறை அமைச்சர் மீது. 443—453

7. ஒழுங்குப் பிரச்னை—

உரிமை மீறல் அறிவிப்பு குறித்து. 36—41

துணைக் கேள்விகள் அனுமதிப்பது குறித்து. 35—36

முருகையன் படுகொலை சம்பந்தமாக ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து கொடுக்கப்பெற்றுள்ள அறிவிப்பை எடுத்துக்கொள்வது குறித்து. 458—461

8. ஒத்திவைப்புத் தீர்மானம்—

என்.எம்.ஆர். தொழிலாளர்கள் உண்ணாவிரதம் குறித்து. 453—558

காவல் துறையினர் மதுரையில் ஓர் பட விழாவின் போது நடத்திய தடியடிப் பிரயோகம் குறித்து. 187—191

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களது மறியல் போராட்டம் குறித்து. 48—55

சிதம்பரத்தில் திரு. லத்தீப் அவர்களை சிலர் தாக்க முயன்றது குறித்து. 41—48

சென்னை மேற்கு மாம்பலத்தில் நடைபெற்ற கலவரம் குறித்து. 55—63

வெள்ளக்கோவில், வேலகவுண்டன்பாளையம் அரிசனக் காலனி தாக்கப்பெற்றது குறித்து. [illegible]

பக்கங்கள்

9. கவன ஈர்ப்புகள்—

அம்பைத் தொகுதியில் காட்டுப் பன்றிகளைக் கொல்லும் விவசாயிகளை காட்டு இலாக்கா அதிகாரிகள் மிரட்டுவது குறித்து. 464—465

அரிசனங்களுக்கு அனைக்கரைப்பட்டியில் ஒதுக்கப் பெற்ற சுடுகாடு நிலம் உயர்ந்த சாதியினரால் ஆக்கிரமித்துக் கொள்ளப்பெற்றிருப்பது குறித்து. 473—475

அரிசன மாணவர்களுக்கு உதவித் தொகை கிடைக் காதது குறித்து. 467—472

அரியலூர் கலைக் கல்லூரியினரும் மாணவர்களும் சமூக விரோதிகளால் தாக்கப்பெற்றது குறித்து. 299—300

9. கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.

அன்னப்ப நாயக்கன் அணை கால்வாயில் "துபா" வைத்து நீர் கொண்டு செல்ல அனுமதி மறுப்பது குறித்து. 478—479

இராமேஸ்வரத்தில் மர்மக் காய்ச்சலினால் சிறுவர்கள் இறந்தது குறித்து. 481—486

கிழக்கு இராமநாதபுரம் உள்ளாட்சித் துறை பணி யாளர்களுக்கு 'அடடா' வழங்காமல் இருப்பது குறித்து. 300—302

சித்தமல்லிப் பகுதியில் விவசாயிகளிடையே ஏற்பட் டுள்ள பதட்ட நிலை குறித்து. 462—463

சென்னை நகரில் பரவியுள்ள மர்மமான காய்ச்சல் குறித்து. 488—491

தஞ்சை மாவட்டத்தில் பதனீர் அருந்தியவர்கள் உடல் நிலை பாதிக்கப்பெற்றுள்ளது குறித்து. 486—488

தஞ்சை மாவட்ட தாளடிப் பயிருக்கு மேட்டூர் அணை யிலிருந்து தண்ணீர் விடுவது குறித்து. 475—478

துறையூர் கந்தசாரி சர்க்கரை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் குறித்து. 197—204

பருத்தி போக்குவரத்துச் சட்ட விதிகளின் திருத்தம். 500—519





பக்கங்கள்

9. கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.

புகுமுக வகுப்புகளுக்கு உரிய பாடங்கள் கல்லூரிகளில் முடிக்கப்பெறாதது குறித்து. 465—467

மதுரை திருப்பரங்குன்ற காவல் நிலையத்தில் ஓர் வழக்கறிஞர் தாக்கப்பெற்றது குறித்து. 192—197

முகவை மாவட்டத்தில் புது வழித் தடங்கள் ஏற்படுத்துவது குறித்து. 69—70

விவசாயிகள் கொடுத்துவந்த கரும்பை பெரம்பலூர் சர்க்கரை ஆலை வாங்க மறுப்பது குறித்து. 479—481

10. தகவல் கோரல்—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து. 441

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் நடைபெறும் திருட்டு குறித்து. 443

சட்டமன்றத் துறைக்குப் போதுமான இடம் ஒதுக்குவது குறித்து. 441—443

மதுரை திருப்பரங்குன்றம் காவல் நிலையத்தில் ஓர் வழக்கறிஞர் தாக்கப்பெற்றது பற்றிய விசாரணை குறித்து. 291—295

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 119, 249, 378, 520

12. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள். 1—35, 123—171, 253—291, 379—441

## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையை (Index) பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன; துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின்கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள் நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றை தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் "சட்ட முன்வடிவு" என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப்பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், உள்ளாட்சிகள் போன்ற அமைப்புகள் அனைத்தும் 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)', 'உள்ளாட்சி (கள்)', ஆகிய முக்கியத் தலைப்புகளின்கீழ் தொகுக்கப்பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத் தலைப்பின் கீழ் கொடுக்கப்பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் "தலைவர்" என்ற தலைப்பின்கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப்பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப்பெற்றுள்ளது—

அ. — அறிக்கை.

அறிவி. — அறிவிப்பு.

அ. வி. — அரைமணி விவாதம்.

கு. வி — குறுகிய கால விவாதம்.

பொ. வி. — பொது விவாதம்.
ஆ. உ. — ஆளுநர் உரை.
உ. பி. — உரிமைப் பிரச்சினை.
ஒ. பி. — ஒழுங்குப் பிரச்சினை.
க. ஈ. — கவன ஈர்ப்பு.
க. ஈ. அ. — கவன ஈர்ப்பு அறிக்கை.
ச. அ. நி. — சட்ட முன்வடிவின் அறிமுக நிலை.
ச. ஆ. நி. — சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை—இந்நிலையில்,

(1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பெறும் தீர்மானம்.

(2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசிலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம்.

(3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம்.

(4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம்.

(5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன.

ச. பிரி. ஆ. — சட்டமுன்வடிவு—பிரிவு வாரியாக ஆய்தல்.
ச. பே. — சட்டமன்றப் பேரவை.
ச. மே. — சட்டமன்ற மேலவை.
த. கோ. — தகவல் கோரல்.
த. வி. — தன்னிலை விளக்கம்.
தீ. — தீர்மானம்.
உ. தீ. — உரிமைத் தீர்மானம்.
ஒ. தீ. — ஒத்திவைப்புத் தீர்மானம்.
த. தீ. — தனித் தீர்மானம்.
து.மா.கோ. — துணை மானியக் கோரிக்கை.
மி.மா.கோ. — மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை.
பே. அ. — பேரவையின் அலுவல்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர்.

1979 மார்ச் 14, 15, 16, 17 ஆம் நாட்கள்.
(தொகுதி 26—எண்கள் 1 முதல் 4.)

பக்கங்கள்

அ.


அண்ணாமலை, திரு. மு.—
பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், கூடுகள் கட்டுதல் . 420—423

அணைகள்—
பார்க்க—நீர்ப்பாசனம்.

அப்துல் லத்தீப், திரு. கி.—
தொழுநோய் பிச்சைக்காரர்கள். 34—35
விரைவு போக்குவரத்துத் திட்டம், சென்னை. 274

அம்பிகாபதி, திரு. மு.—
அறநிலையக் கட்டட வாடகைதாரர் சங்கம், தீர்மானங்கள் 137—138
கல்லணை விரிவாக்கக் கால்வாய், சீரமைத்தல். 276—279
சிதம்பரத்தில் உறுப்பினர் திரு. லத்தீபை சிலர் தாக்க முயன்றது (ஒ.தீ.) 43
சென்னை மேற்கு மாம்பலத்தில் நடைபெற்ற கலவரம் (ஒ.தீ.) 57—58
நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978. 312—314
நில ஆர்ஜிதம், அரிசன நலத்துறை, கும்பகோணம். 415—418
படவிழா, மதுரை, தடியடி (ஒ.தீ.) 187—189
மர்மக் காய்ச்சல், சிறுவர்கள் இறப்பு, இராமேஸ்வரம் (க.ஈ.) 481—486
முருகையன், திரு. எச். ஜி., படுகொலை பற்றி கொடுத்த அறிவிப்பு (ஒ.பி.) 458—461
வடபாதிமங்கலம் கரும்புப் பண்ணைக்குச் சொந்தமான நிலம். 6—8

அ—தொடர்ச்சி.


பக்கங்கள்

**அமிர்தராஜ், திரு. இரா.—**

சடையனேரி கால்வாயில் தண்ணீர். 31—32

சடையனேரிக்குளம் ஆக்கிரமிப்பு, மெஞ்ஞானபுரம், திருநெல்வேலி. 427—428

**அரங்கசாமி, திரு. க.—**

தேயிலைத் தோட்டத் தெருக்களுக்கு விளக்குகள். 148—149

**அரங்கநாதன், திரு. அ. க.—**

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979. 93—96

**அரங்கநாதன், திரு. சென்னை, மு.—**

நோய்கள், மர்மக் காய்ச்சல், சிறுவர்கள் இறப்பு, இராமேஸ்வரம் (க.ஈ.) 481—482

485

**அரங்கநாயகம், திரு. செ.—**

அரியலூர் கலைக் கல்லூரியினரும் மாணவர்களும் தாக்கப் பெற்றமை (க.ஈ.அ.) 299—300

**அரசு இல்லங்கள்—**

தமிழ்நாடு இல்லம், டெல்லி, உணவு, குடியிருப்பு வசதிகள். 255—259

**அரிசன நலம்—**

அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம், அமைப்பு. 23—26

சுடுகாட்டு நிலம், திருவில்லிப்புத்தூர் (க.ஈ.) 473—475

நில ஆர்ஜிதம், கும்பகோணம் 415—418

மாணவர், உதவித் தொகை (க.ஈ.) 467—472

மாணவர், சிறப்பு உதவித் தொகை 418—420

**அழகர்சாமி, திரு. சோ.—**

சித்தமல்லியில் பலர் கைது (ஒ.பி.) 459—460

மருத்துவமனை, எட்டயபுரம், புதிய கட்டடம் 161—163

மாலை முரசு நாளேடு மீதும் திரு. இரா. நெடுஞ்செழியன் மீதும் (உ.பி.) 183—184





பக்கங்கள்


அ—தொடர்ச்சி.


**அறநிலையம்—**

அறநிலையக் கட்டட வாடகைதாரர் சங்கம், தீர்மானங்கள் 137—138

கோவில்களில் உள்ள கடைகள், கட்டடங்கள், வீடுகள், நியாய வாடகைக் குழு 138—142

**அறிக்கை அளித்தல்—**

சிம்கோ நிறுவன தகராறு 63—68

**அறிவிப்புகள்—**

பார்க்க—தலைவர்


ஆ


**ஆசிரியர்கள்—**

ஊதியம் வழங்கும் முறை 264—267

**ஆண்டி அம்பலம், திரு. மெ.—**

இருதய நோய் சிகிச்சை, மருத்துவமனை, மதுரை 434—436

கரானரி யூனிட், மருத்துவமனை, மதுரை 433—434

குட்டை திட்டம், நொச்சியாறு, கூவலூற்று கிராமம், மதுரை 159—160

மதுரையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு 33

**ஆறுமுகம், திரு. சி.—**

கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 217, 219, 221

தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 236—237

**ஆறுமுகம், திரு. சேலம் மு.—**

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களது மறியல் போராட்டம் (ஒ.தீ.) 59

சைக்கிள் ரிக்ஷாக்களில் பள்ளிச் சிறார்கள், எண்ணிக்கை 423—426

வேளாண்மை மண் அமைப்பு, தனிச் சிறப்பு ஆராய்ச்சி 428—429

**ஆறுமுகம், திரு. த.—**

அரியலூர் கலைக் கல்லூரியினரும் மாணவர்களும் தாக்கப் பெற்றமை (க.ஈ.) 299, 300

பக்கங்கள்

'இ'


இயற்கைச் சீற்றங்கள்—

புயலால் பாதிப்பு, மத்திய உதவி 130—133

மழை, வெள்ளத்தால் சேதம், கோவை 133—137

இராகவானந்தம், திரு. எஸ்.—

உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 339, 344—348, 354—359

சிம்கோ நிறுவனத் தகராறு குறித்து (அறி.) 63—65

இராசமாணிக்கம், திரு. இரெ.—

தாளடிப் பயிர், தஞ்சாவூர், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் (க.ஈ.) 476—477

பாலம், வீரசோழன் ஆறு, குத்தாலம் ஒன்றியம் 273

இராதா, திரு. எஸ். ஆர்.—

தகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 88, 91—98, 105—106

நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 311, 329—332

மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 77—78

இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—

அமைச்சரின் அறிக்கைமீது (உ.பி.) 452—453, [illegible]

இராமச்சந்திரன், திரு. ச.—

அமைச்சரின் அறிக்கை மீது (உ.பி.) [illegible], [illegible]

கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 [illegible]

சிதம்பரத்தில் உறுப்பினர் திரு. லத்தீபை சிலர் தாக்க முயன்றது (ஒ.தீ.)




பக்கங்கள்

இ—தொடர்ச்சி.


சென்னை மாம்பலத்தில் நடைபெற்ற கலவரம் (ஒ.தீ.) 58—63

தகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 102—105, 108—110

இராமச்சந்திரன், திரு. ச.—தொடர்ச்சி.

நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 306, 308, 318

மாலை முரசு நாளேடு மீதும் திரு. இரா. நெடுஞ்செழியன் மீதும் (உ.பி.) 174, 180—183, 185

வழக்கறிஞர் தாக்கப் பெற்றமை, திருப்பரங்குன்றம் (க.ஈ.) 193—194, 196, 197

வழக்கறிஞர் தாக்கப்பெற்றமை, திருப்பரங்குன்றம், விசாரணை (த.கோ.) 293, 294—295

விதி 41 (3)-ஐத் தளர்த்தல் (தீ.) 462

விவசாயிகளிடையே பதட்ட நிலை, சித்தமல்லிப் பகுதி, மன்னார்குடி (க.ஈ.அ.) 463

வேலகவுண்டன்பாளையம், கோவை, அரிசனக் காலனி தாக்கப் பெற்றமை (ஒ.தீ.) 297—299

இராமசாமி, திரு. எஸ். ஜே.—

கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 218

நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 303, 304, 318—32[illegible]

புயலால் பாதிப்பு, மத்திய உதவி 130—13[illegible]

மத்தியக் கூட்டுறவு வங்கியின் கடன் வசதி, உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (தீ.) 561—56[illegible]

மாக்னசைட் இரும்புத் தாது படிவங்கள், வட ஆற்காடு 129—1[illegible]

இராமசாமி, திரு. அ.—

சட்டமன்றத் துறை, கூடுதல் வசதிகள் (த.கோ.)

பக்கங்கள்

இ—தொடர்ச்சி.

இராஜா முகமது, திரு. கே.—

துறையூர் கரும்பு, வெல்லம் மற்றும் கந்தசாரி சர்க்கரை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், திருச்சி (க.ஈ.) 198—201

இளங்கோவன், திரு. கோ.—

மருத்துவமனை, திருக்காட்டுப்பள்ளி, தஞ்சை 393

இன்ஷ்யூரன்ஸ்—

அரசு வாகனங்கள் 391—393

ஈ

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களது மறியல் போராட்டம் (ஒ.தீ.) 49—50

விவசாயிகளை மிரட்டல், அம்பை, திருநெல்வேலி (க.ஈ.) 464

உ

உத்திராபதி, திரு. பொ.—

என்.எம்.ஆர் தொழிலாளர்கள், வேலை நிர்ணயம் கோரி உண்ணாவிரதம் (ஒ.தீ.) 454

தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 234—235

உமாநாத், திரு. ரா.—

அமைச்சரின் அறிக்கைமீது (உ.பி.) 449, 444—446

வழக்கறிஞர் தாக்கப்பெற்றமை, திருப்பரங்குன்றம், விசாரணை (த.கோ.) 291—292, 294

உரிமைப் பிரச்னை—

பார்க்க—தலைவர்

உள்ளாட்சிகள்—

மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, புதிய விதி (தீ.) 496—498

உறுப்பினர்—

திரு. கிட்டப்பாவுக்குப் பாராட்டு 201—202

பக்கங்கள்

ஏ.

ஏடுகள்—

பேரவை முன்வைக்கப்பெற்றவை 110, 249, 378, 520,

ஒ.

ஒத்திவைப்புத் தீர்மானம்—

பார்க்க—தலைவர்

ஒழுங்குப் பிரச்சினைகள்—

உரிமை மீறல் அறிவிப்பு 36—41

சித்தமல்லியில் பலர் கைது (ஒ.பி.) 459—460

துணை வினாக்கள் அனுமதிப்பது 35—36

மண்ணெண்ணெய் பற்றாக்குறை 461

முருகையன், திரு. எச். ஜி., படுகொலை பற்றி கொடுத்த அறிவிப்பு 458—461

க.

கட்டடங்கள்—

கடற்கரை சாலை, தூத்துக்குடி 274—276

கடன்கள்—

அவினாசியில் கூட்டுறவுக் கடன் வசூல் 8—9

கணேசன், திரு. எஸ்.—

ஆசியன் பேரிங்குகள் நிறுவனம், ஹோசூரில் அமைத்தல் 254—255

சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர்கள், சட்டப் பாதுகாப்பு 387—391

பட்ட மேற்படிப்பு, தமிழ் போதனா மொழி 407

மாவட்டத் தொழில் மையங்கள், மைய அரசு உதவி 287—291

கந்தசாமி, திரு. கே.—

சிதம்பரத்தில் உறுப்பினர் திரு. லத்தீபை சிலர் தாக்க முயன்றது குறித்து (ஒ.தீ.) 43—44

திருமங்கலம், உசிலம்பட்டி பகுதிகளில் பாசன வசதிகள் 1—4

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 96—99

க—தொடர்ச்சி.


**கருணாநிதி, திரு. தாழை மு.—**

அரிசன மாணவர்கள், உதவித் தொகை (க.ச.) — 467

**கருணாநிதி, திரு. மு.—**

சென்னை மேற்கு மாம்பலத்தில் நடைபெற்ற சம்பவம் (ஒ.தீ.) — 61—62

படவிழா, மதுரை, தடியடி (ஒ.தீ.) — 188

மாலை முரசு நாளேடு மீதும், திரு. இரா. நெடுஞ்செழியன் மீதும் (உ.பி.) — 174, 184, 185

**கரும்பு—**

வடபாதிமங்கலம் பண்ணைக்குச் சொந்தமான நிலம் — 6—8

**கல்லூரிகள்—**

தனியார் கல்லூரிகள் (ஒழுங்குபடுத்தும்) சட்டம், டிரிபூனல் — 146—148

புகுமுக வகுப்புகளில் பாடங்கள் முடிக்கப்பெறாமை (க.ச.) — 465—467

**கல்வி—**

இராணுவ வீரர், விடுதலைப் போராட்ட வீரர், அகதிகள் பிள்ளைகளுக்குப் படிப்பு உதவித் தொகை — 145—146

பட்ட மேற்படிப்பு, தமிழ் போதனா மொழி — 407

**கவன ஈர்ப்புகள்—**

'அடடா' வழங்காமை, கிழக்கு இராமநாதபுரம் — 300—302

அரிசனங்கள், சுடுகாட்டு நிலம், திருவில்லிபுத்தூர் — 473—475

அரிசன மாணவர்கள், உதவித் தொகை — 467—472

அரியலூர் கலைக் கல்லூரியினரும் மாணவர்களும் தாக்கப் பெற்றமை — 299—300

அன்னப்பநாயக்கன் அணை கால்வாய், செங்கல்பட்டு, நீர் கொண்டு செல்லல் — 478—479

சர்க்கரை ஆலை, பெரம்பலூர், கரும்பு வாங்க மறுப்பு — 479—481

தாளடிப் பயிர், தஞ்சாவூர், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் — 475—478

துறையூர் கரும்பு, வெல்லம் மற்றும் கந்தசாரி சர்க்கரை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், திருச்சிராப்பள்ளி — 197—201

நோய்கள், மர்மக் காய்ச்சல், சென்னை நகர் — 488—[illegible]

பதனீர், உடல் நிலை பாதிப்பு, தஞ்சாவூர் — [illegible]

புகுமுக வகுப்புகளில் பாடங்கள் முடிக்கப்பெறாமை — [illegible]

மர்மக் காய்ச்சல், சிறுவர்கள் இறப்பு, இராமேஸ்வரம் — [illegible]




க—தொடர்ச்சி.


**கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.**

பக்கங்கள்

முகவை மாவட்டத்தில் புது வழித்தடங்கள் ஏற்படுத்துதல் — 69—70

வழக்கறிஞர் தாக்கப் பெற்றமை, திருப்பரங்குன்றம் — 192—197

விவசாயிகளிடையே பதட்ட நிலை, ஒத்தாக்கிப் பகுதி, மன்னார்குடி — 462—463

**கனி வளம்—**

திட்டச்சேரிப் பகுதியில் எண்ணெய் கண்டுபிடிப்பு — 4—6

மாங்கனீசு இரும்புத் தாது படிவங்கள், வட ஆற்காடு — 129—130

விண்வெளிக் கல் உருவங்களின் தொகுதி, ஆராய்ச்சி — 128—129

**கால்நடைகள்—**

ஆடுகள், வைத்திய உதவி — 438—441

கால்நடை ஆய்வாளர் பயிற்சி — 436—437

**காவல்—**

வழக்கறிஞர் தாக்கப் பெற்றமை, திருப்பரங்குன்றம், (க.ச.) — 192—197

**காளிமுத்து, திரு. கா—**

'அடடா' வழங்காமை, கிழக்கு இராமநாதபுரம் (க.ச.அ.) — 301, 302

கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு—1979 — 112, 114, 115, 116, 118

விவசாயிகளை மிரட்டல், அம்பை, திருநெல்வேலி — 464—465

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு — 81, 110—111

மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 புதிய விதி (தீ.) — 496

**காளியப்பன், திரு. பி.—**

கதிர்களைக் கண்டுமுதல் செய்தல், நெடுஞ்சாலைகளில் — 155—158

**கிட்டப்பா, திரு. என்.—**

இராணுவ வீரர், விடுதலைப் போராட்ட வீரர், அகதிகள் பிள்ளைகளுக்கு படிப்பு உதவித் தொகை — 145—146

எலி ஒழிப்புத் திட்டம் — 26—30

சர்க்கரை ஆலை, மாயூரம் — 396—399

சென்னையில், வீடுகளுக்கு புது எண்கள் இடுதல், எதிர்ப்பு — 271—273

தினசரிப் பத்திரிகைகள், அரசு விளம்பரங்கள் — 401—403

[illegible] கோரிக்கை — 17—21

## க—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| **கிட்டப்பா, திரு. என்.—தொடர்ச்சி.** | |
| மத்தியசிறைகள், சிற்றுண்டிச் சாலைகள் | 142—145 |
| மலேரியா தடுப்பு நடவடிக்கை | 33—34 |
| **கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ.—** | |
| கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 | 202, 216—223 |
| மத்தியக் கூட்டுறவு வங்கியின் கடன் வசதி உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (தீ) | 359—360 375—377 |
| **கிருஷ்ணன், திரு. செ.—** | |
| வடக்கு தாமரைகுளம் அருகேயுள்ள ஆற்றின் குறுக்கே பாலம் | 31 |
| **கிருஷ்ணன், திரு. பி.—** | |
| நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 | 107—108 |
| **கிருஷ்ணன், திரு. ரா.—** | |
| தனியார் கல்லூரிகள் (ஒழுங்குபடுத்தும்) சட்டம், டிரிபூனல் | 146—148 |
| வழித்தடங்கள் அரசுடைமை, விவரம் | 152—155 |
| விவசாயிகளை மிரட்டல், அம்பை, திருநெல்வேலி (க.ஈ.) | 464 |
| **குடிநீர்—** | |
| கலசப்பாக்கம் தொகுதி | 413—418 |
| **குழந்தைவேலு, திரு. ப.—** | |
| அன்னப்ப நாயக்கன் அணை கால்வாய், செங்கல்பட்டு, நீர் கொண்டு செல்லல் (க.ஈ.அ.) | 478—47[illegible] |
| சர்க்கரை ஆலை, பெரம்பலூர், கரும்பு வாங்க மறுப்பு (க.ஈ.அ.) | 479—481 |
| தாளடிப் பயிர், தஞ்சாவூர் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் (க.ஈ.அ.) | 475—47[illegible] |
| பருத்திப் போக்குவரத்துச் சட்டம், 1923, திருத்தம் (தீ) | 498—4[illegible] |
| மத்தியக் கூட்டுறவு வங்கியின் கடன் வசதி, உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (தீ) | 500—[illegible] |




## க—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| **கூட்டுறவு—** | |
| கான்சாபுரம் கூட்டுறவு நாணய சங்கத்தில் கையாடல் | 9—10 |
| மத்தியக் கூட்டுறவு வங்கியின் கடன் வசதி, உத்தரவாத நடைமுறையை உயர்த்துதல் (தீ) | 359—378 |
| **கோதண்டராமன், திரு. வி. கே.—** | |
| கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 | 205—208 |
| டி.ஐ. சைக்கிள் தொழிற்சாலை, வேலை நிறுத்தம் | 407—412 |
| "தமிழ் நாடு இல்லம்", டெல்லி, உணவு குடியிருப்பு வசதிகள். | 255—259 |
| நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 | 314—318 |
| **கோபாலன், திரு. போ.—** | |
| பரிசு, கலையழகுடன் அச்சடிக்கப்படும் புத்தகங்களுக்கு | 262—264 |
| **கோவிந்தராசன், திரு. சி.—** | |
| உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 | 347—352 |
| மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 புதிய விதி (தீ) | 496—497 |
| **கோவேந்தன், திரு. மு. ரெ.—** | |
| நெற்பயிர்கள் நாசம், பேராவூரணி, தஞ்சாவூர் | 383—387 |


### ச


| | |
|---|---|
| **சங்கரய்யா, திரு. என்.—** | |
| மாலை முரசு நாளேடு மீதும், திரு. இரா. நெடுஞ்செழியன் மீதும் (உ.பி.) | 178—180 |
| **சட்டம்-ஒழுங்கு—** | |
| கைத்தறி நெசவுத் தொழிலாளர்களது மறியல் போராட்டம் | 48—55 |
| சிதம்பரத்தில் உறுப்பினர் திரு. லத்தீப்பை சிலர் தாக்க முயன்றது (ஒ.தீ.) | 41—48 |
| வழக்கறிஞர் தாக்கப் பெற்றமை, திருப்பரங்குன்றம், [illegible] (த.கோ.) | 201—20[illegible] |

ச—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| சட்ட முன்வடிவுகள்— | |
| உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 | |
| ச.ஆ.நி. | 339—358 |
| ச.பிரி.ஆ. | 358 |
| நிறைவேற்றம். | 359 |
| கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 | |
| ச.ஆ.நி. | 202—222 |
| ச.பிரி.ஆ. | 223 |
| நிறைவேற்றம் | 223 |
| கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 | 112—119 |
| தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978. | |
| ச.ஆ.நி. | 223—242 |
| ச.பிரி.ஆ. | 242—243 |
| நிறைவேற்றம் | 244 |
| தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு, 1979. | |
| ச.ஆ.நி. | 491—495 |
| ச.பிரி.ஆ. | 495—496 |
| நிறைவேற்றம் | 496 |
| நகர்ப்புறநிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும் குறித்த திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (ஆ.இ.) | 74 |
| ஆய்வு | 74—77 |
| நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல், திருத்த சட்ட முன்வடிவு, 1979 | |
| ச.ஆ.நி. | 81—112 |
| நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 | |
| ச.ஆ.நி. | 302—338 |
| ச.பிரி.ஆ. | 337—338 |
| நிறைவேற்றம் | 338 |
| பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 | [illegible] |




ச—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி. | |
| புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 | 72—74 |
| மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979— | |
| ச.ஆ.நி. | 77—80 |
| சதாசிவம், திரு. செ.— | |
| அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம், அமைப்பு | 23—26 |
| தொழிற்பேட்டைகளின் தொழில் பிரிவுகள், திருச்சி | 284—287 |
| சந்திரன், திரு. ப.— | |
| வழக்கறிஞர் தாக்கப் பெற்றமை, திருப்பரங்குன்றம் (க.ஈ.) | 197 |
| சந்திரன் ஜெயபால் திரு. இரா. எ.— | |
| சென்னை மாம்பலத்தில் நடைபெற்ற கலவரம் (ஒ.தீ.) | 56—57 |
| சமரசம், டாக்டர் கே.— | |
| தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 | 229—233 |
| நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 | 99—102 |
| சமூகநலம்— | |
| தொழு நோய் பிச்சைக்காரர்கள் | 34—35 |
| மதிய உணவுக்கான தொகை வழங்கல் | 21—22 |
| மறுவாழ்வு இல்லங்களில் இருந்து வெளிவந்த தொழு நோயாளிகள் | 34 |
| சர்க்கரை— | |
| துறையூர் கரும்பு, வெல்லம் மற்றும் கந்தசாரி சர்க்கரை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், திருச்சி (க.ஈ.) | 197—201 |
| பெரம்பலூர் ஆலை, கரும்பு வாங்க மறுப்பு (க.ஈ.) | 479—481 |
| சவுந்திரராஜன் திரு. ரெ. வீ.— | |
| சர்க்கரை ஆலை, பெரம்பலூர், கரும்பு வாங்க மறுப்பு (க.ஈ.) | 479—481 |
| தாளடிப் பயிர், தஞ்சாவூர் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் (க.ஈ.) | 475—[illegible] |
| படவிழா, மதுரை, தடியடி (ஒ.தீ.) | 187—[illegible] |

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

**சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.—**

அமைச்சரின் அறிக்கை மீது (உ.பி.) 453—454

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களது மறியல் போராட்டம் (ஒ.தீ.) 52—53

திட்டச்சேரி பகுதியில் எண்ணெய் கண்டுபிடிப்பு 4—6

நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 303

நோய்கள், மர்மக் காய்ச்சல், சிறுவர்கள் இறப்பு, இராமேஸ்வரம் (க.ஈ.) 481

நோய்கள், மர்மக் காய்ச்சல், சென்னை நகர் (க.ஈ.) 488

வழக்கறிஞர் தாக்கப் பெற்றமை, திருப்பரங்குன்றம், விசாரணை (க.ஈ.), (க.நோ.) 192, 194—195, 293—294

விண்வெளிக் கல உருவங்களின் தொகுதி, ஆராய்ச்சி 128—129

**சிவசாமி, திரு. செ.—**

'அடா' வழங்காமை, கிழக்கு இராமநாதபுரம் (க.ஈ.) 300—302

என்.எம்.ஆர். தொழிலாளர்கள், வேலை நிர்ணயம் கோரி உண்ணாவிரதம் (ஒ.தீ.) 454—455

கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 213—216

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களது மறியல் போராட்டம் (ஒ.தீ.) 50—52

சர்க்கரை ஆலை, மானாமதுரை 399—401

மத்தியக் கூட்டுறவு வங்கியின் கடன் வசதி, உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (தீ.) 373—374, 376

**சிறைகள்—**

மத்திய சிறைகள், சிற்றுண்டிச் சாலைகள் 142—145

**சின்னராசு, திரு. க. இரா.—**

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 108

மத்தியக் கூட்டுறவு வங்கியின் கடன் வசதி, உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (தீ.) 368—369





பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

**சுந்தரராஜ், திரு. நா.—**

என்.எம்.ஆர். தொழிலாளர்கள், வேலை நிர்ணயம் கோரி உண்ணாவிரதம் (ஒ.தீ.) 454

கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 208—211

படவிழா, மதுரை தடியடி (ஒ.தீ.) 188

**சுந்தரம், திரு. ப.—**

மருத்துவர்கள், திருப்பத்தூர் மருத்துவமனை, வட ஆற்காடு 394—395

**சுப்பிரமணியம், திரு. ஆர். சி.—**

தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 228—229

**சுப்பிரமணியன், திரு. ஒ.—**

படவிழா, மதுரை தடியடி (ஒ.தீ.) 187—188

**சுப்பிரமணியம், திரு. கே ஜே.—**

கால்நடை ஆய்வாளர் பயிற்சி 436—437

**சுப்ரமணியன், திரு. சின்னசேலம், மா.—**

எலி ஒழிப்புத் திட்டம் 26—30

பொது நூலகங்களை அரசு ஏற்றல் 16—17

மணிலா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, கள்ளக்குறிச்சி 158—159

**சுப்பு திரு. க.—**

அமைச்சரின் அறிக்கை மீது (உ.பி.) 443, 446—449, 451—452

அன்னப்பநாயக்கன் அணை கால்வாய், செங்கல்பட்டு நீர் கொண்டு செல்லல் (க.ஈ.) 478—479

உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 339—347, 356

உரிமை மீறல் அறிவிப்பு குறித்து (ஒ.பி.) 36—41

கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 211—21[illegible]

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு,
1978
துறையூர் கரும்பு, வெல்லம் மற்றும் கந்தசாரி சர்க்கரை 235
உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், திருச்சி (க.ஈ.)
, 197—198
201
நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978
திரு. இரா. நெடுஞ்செழியன் மீது (உ.மி.) 337
171—175,
நோய்கள், மர்மக் காய்ச்சல், சிறுவர்கள் இறப்பு, இராமேஸ் 183
வரம் (க.ஈ.)
481,
484—485
பருத்தி போக்குவரத்துச் சட்டம், 1923, திருத்தம் (தீ)
மத்தியக் கூட்டுறவு வங்கியின் கடன் வசதி உத்தரவாத வரை 518
யறையை உயர்த்துதல் (தீ.)
366—368
வழக்கறிஞர் தாக்கப் பெற்றமை, திருப்பரங்குன்றம் (க.ஈ.)
சுப்புலட்சுமி ஜெகதீசன், திருமதி— 192
கைத்தறி நெசவுத் தொழிலாளர்களது மறியல் போராட்டம்
(ஒ.தீ.)
சுப்ரவேலு, திரு கா.— 54—55
புன்னாக்குடி பருத்திக்கோட்டை, விலை நிர்ணயம்
மருத்துவமனை சீர்காழி, விரிவாக்கம் 279—284
சுவாமிதாஸ், திரு. அ.— 395
நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978
மத்திய கூட்டுறவு வங்கியின் கடன் வசதி உத்தரவாத 322—327
வரையறையை உயர்த்துதல் (தீ.)
சுற்றுலா— 369—370
திருவில்லிப்புத்தூரில் சுற்றுலா மையம்
செல்லப்பா, திரு. அ.— 404
அரிசன மாணவர்கள், உதவித் தொகை (க.ஈ.)
பதனீர், உடல் நிலை பாதிப்பு, தஞ்சாவூர் (க.ஈ.) 467—470
486—488



பக்கங்கள்.

ச—தொடர்ச்சி.

செல்வராஜ், திரு. மு.—
கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 202—205
சோமசுந்தரம், திரு. எஸ். டி.— ,
நகர்ப்புறநிலம் (உச்சவரம்பு நட்டுதலும், முறைப்படுத்தலும்) குறித்த திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 74—77
பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 70—72
புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு 72—74
சௌந்தரபாண்டியன், திரு. பெ.—
அரிசனங்கள், சுடுகாட்டு நிலம், திருவில்லிப்புத்தூர் (க.ஈ.அ.) 473—474
அரிசன மாணவர்கள், உதவித் தொகை (க.ஈ.அ.) 467—472
சௌந்திரராஜன், திரு. திருச்சி ஆர்.—
நோய்கள், மர்மக் காய்ச்சல், சிறுவர்கள் இறப்பு; இராமேஸ்வரம் (க.ஈ.அ.) 482—483, 485—486
நோய்கள், மர்மக் காய்ச்சல், சென்னை நகர் (க.ஈ.அ.) 488—491
பதனீர், உடல் நிலை பாதிப்பு, தஞ்சாவூர் (க.ஈ.அ.) 486—488
ஞானசிகாமணி, திரு. தே.—
கச்சா முந்திரி விநியோகம் 32
தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 226—228
தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு, 1979 494
விவசாயிகளை மிரட்டல், அம்பை, திருநெல்வேலி (க.ஈ.) 464

த

தகவல் கோரல்—
உறுப்பினர் அறை, திருட்டு 442
உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு 441
சட்டமன்றத் துறை, கூடுதல் வசதிகள் 441—442

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தண்டபாணி, திரு. ரா. க. சு.—

கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979

தண்ணீர்—

நீர் ஊற்றுக்கள் பாதிப்பு, வடஆற்காடு, தோல் பதனிடும் தொழிற்சாலைகளால் 429—433

தலைவர்—

அறிவிப்பு—

சட்ட முன்வடிவுகள்—

பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979

புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979

நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்ட முன்வடிவு, 1979

திருத்தம் எதுமின்றி பேரவைத் தலைவரிடமிருந்து வரப்பெற்ற செய்தி 461

பேரவையின் அலுவல்கள் 244—246

தீர்ப்புரைகளும்—குறிப்புரைகளும்—

அவையில் பயன்படுத்தப்பெறும் சொற்கள்—

"அலுவல் ஆய்வுக் குழுவைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை"; "தலைவர் ஒருதலைபட்சமாக நடக்கக் கூடாது. வேண்டியவர்கள் என்றால் சீக்கிரமாக எடுத்துக் கொள்கிறீர்கள்"; "அசெம்பளி நடத்துகிறீர்களா அல்லது மீன் மார்க்கெட் நடத்துகிறீர்களா?"; "சபாநாயகர் சபாநாயகராயில்லை" என்றெல்லாம் ஓர் உறுப்பினர் ஒரு பிரச்சினை மீது குறிப்பிட்டதை பேரவைத் தலைவர் வன்மையாகக் கண்டித்து "இதெல்லாம் அவையின் மரபை, மரியாதையை, காப்பாற்றுவதாக இல்லை. எதிர்க்கட்சித் தலைவர்கள் இதற்கு ஓர் முடிவு எடுத்தாக வேண்டும்" என்று குறிப்புரைத்தார். 36—41



பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும்-குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

அவையில் பயன்படுத்தப்பெறும் சொற்கள்—தொடர்ச்சி.

"இன்னார்" பாணி என்று சொல்வது தவறில்லை. இருக்கலாம் (அ.ச.மு.) 218

பெருச்சாளிகள்—அதுபற்றி கேட்கலாம். அதையே மக்களைச் சொல்வதாக ஆக்காதீர்கள் (வி.வி.) 29

உரிமைப் பிரச்சினை—

திரு. இரா. நெடுஞ்செழியன் மீதும், அவரது கருத்துக்களை வெளியிட்டுள்ள 'மாலை முரசு' நாளேடு மீதும் :—

"பேரவையில் சிம்கோ மீட்டர் பிரச்னை தொடர்பாக எதிர்க்கட்சிகள் நடந்துகொண்ட முறை பற்றியும் பேசிய பேச்சுக்களைக் குறித்தும் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் மீது நடந்த தாக்குதல் குறித்தும் பேரவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் குறித்தும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் திரு. இரா. நெடுஞ்செழியன் தெரிவித்த கருத்தும், அதனை 'மாலை முரசு' வெளியிட்டுள்ளதும் அவை உரிமையை மீறிய செயலாகும் என" ஓர் உறுப்பினர் 15—3—1979 அன்று உரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

"திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களையும் ஓர் நாளேட்டையும் இணைத்து இப்பிரச்னை எழுப்பப் பெற்றிருப்பதால் இரண்டு பேர்களுக்கும் எழுதி விளக்கம் பெற்ற பிறகு தம் தீர்ப்பினை * வழங்குவதாக" தலைவர் குறிப்புரைத்தார். 185

மின்சாரத் துறை அமைச்சர் மீது :—

மெட்ராஸ் பார் கவுன்சிலைத் சேர்ந்தவர்களும் மெட்ராஸ் பார் அசோசியேஷனைச் சேர்ந்தவர்களும், அரசாங்கம் தங்களைக் கலந்து பேசவில்லை எனச் சொல்கிற நிலையில் மின் துறை அமைச்சர் வக்கீல்களைக் கலந்து கொண்டு முடிவு எடுத்தோம்' என அவைக்குத் தெரிவித்த

* 27—4—1979 அன்று தேதி தீர்ப்பு வழங்கப்பெற்றது.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும்-குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி.

மின்சாரத் துறை அமைச்சர் மீது—தொடர்ச்சி.

தகவல்—

It will amount to misusing the names of these organisations to make the House belive that they have welcomed it.

என்பதாகவும், இது அவை உரிமையை மீறிய செயல் என்றும் 17—3—1979 அன்று மின்சாரத் துறை அமைச்சர் மீது உரிமைச் பிரச்னைகள் எழுப்பப் பெற்றன.

"வழக்கறிஞர் சங்கத்திலே நிர்வாகப் பொறுப்பில் உள்ள ஒருவரோடு தொலைபேசி மூலம் கலந்து கொண்டே, அவ்வாறு அறிவிக்கப்பெற்றது என்றும், அவர்களது சம்மதம் பெற்றே அறிவிக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை யென்றாலும், தாமும் 'கலந்து கொண்டு என்று கூறியதைத் தவிர, 'சம்மதம் பெற்று' என்று கூற வில்லையென்றும், உண்மை சர்ச்சைக்குரியதாக உள்ள நிலையில், பேரவைக்கு வேண்டுமென்றே தவறான தகவல் தரப்பெறவில்லை என்ற காரணத்தால் இதில் உரிமைப் பிரச்னை ஏதும் எழவில்லை என்பதாக மின் துறை அமைச்சர் விளக்கினார்.

"என்னுடைய தீர்ப்பைத் திங்கட்கிழமை * அறிவிக்கிறேன்" எனப் பேரவைத் தலைவர் அறிவித்தார் 443—484

ஒத்திவைப்புத் தீர்மானம்—

"உறுப்பினர் திரு. லத்தீப் 10—3—1979 அன்று இரவு 7.20 மணிக்குச் சிதம்பரம் நகரைக் கடந்து கொண்டிருந்தபோது சில காலிகளும், போலீசாரும் தடுத்து நிறுத்தித் தாக்க முயன்றதன் விளைவில் ஏற்பட்ட கொந்தளிப்பான நிலை குறித்து"

மின்சாரத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப்பின் இசைவு மறுக்கப்பெற்றது. 41—[illegible]

* 19—3—1979 ஆம் தேதி தீர்ப்பு வழங்கப்பெற்றது.



தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒத்திவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி.

"கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் பற்றிய ராஜா சுப்பிரமணியம் கமிட்டியின் பரிந்துரைகளை வெளியிட்டு அமுல் நடத்தவும் மற்றும் பல கோரிக்கைகளுக்காகவும் மாநிலம் முழுவதும் உள்ள கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் 12—3—1979 முதல் மத்திய-மாநில அரசு அலுவலகங்கள் முன்பு தொடர்ந்து மறியல் செய்து வருவதால் ஏற்பட்டிருக்கும் பதட்ட நிலை குறித்து"

கைத்தறித் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் இசைவு மறுக்கப்பெற்றது 48—55

"கோவை மாவட்டம், வெள்ளக் கோவில் அருகே வேல கவுண்டன்பாளையத்தில் 12—3—1979 அன்று அரிசனக் காலனியை சிலர் கோஷ்டியாகச் சென்று மிகவும் மூர்க்கத்தனமாகத் தாக்கிய காரணத்தினாலும் வீடுகள் இடிக்கப்பட்டு, கூரைகள் பிரித்து எறியப்பட்டு அரிசன பொது மக்களுக்கு அடி உதை ஏற்பட்டு பொருள்கள் சேதம் அடைந்த காரணத்தாலும் அப் பகுதியில் ஏற்பட்ட பதட்ட நிலையைக் குறித்து".

மின்சாரத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப்பின் இசைவு மறுக்கப்பெற்றது 295—29[illegible]

"சென்னை மேற்கு மாம்பலத்தில் 12—3—1979 அன்று திராவிட முன்னேற்றக் கழகம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இடையே ஏற்பட்ட பயங்கர மோதலில் தீ வைப்பு, கத்திக்குத்து, மத்திய போலீஸ் தடியடிப் பிரயோகம் ஏற்பட்டுள்ளதால் அந்தப் பகுதியில் மக்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலை குறித்து",

மின்சாரத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப்பின் இசைவு மறுக்கப்பெற்றது 55—[illegible]

"தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறை, கூவம் பக்கிங்காம் கால்வாய், அண்ணா சதுக்கம், கோட்டைப் பூங்கா, மெரினா மணல் சுத்திகரிப்பு ஆகிய பிரிவுகளில் 5 ஆண்டு

த—தொடர்ச்சி.


**தலைவர்**—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒத்திவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி.

களுக்குமேல் பணிபுரியும் என்.எம்.ஆர். தொழிலாளர்கள் வேலையை நிர்ணயம் செய்யக் கோரி 5—3—1979 முதல் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வருவது குறித்து "

நிதி அமைச்சரின் பேரவைச் செயலர் விளக்கத்திற்குப்பின் இசைவு மறுக்கப் பெற்றது. 458

" மதுரையில் 10-3-1979, 11-3-1979 நடந்த திரு. சிவாஜி கணேசன் அவர்களின் 200-வது பட விழாவின்போது காவல் துறையினர் தடியடி செய்தும், பலர்மீது வழக்குத் தொடர்ந்து இருப்பதாலும் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து "

நிதியமைச்சரின் விளக்கத்திற்குப் பின் இசைவு மறுக்கப் பெற்றது. 187—191

ஒழுங்கு முறை—

யாரும் உட்கார்ந்து பேசக்கூடாது (வி.வி.) 26

குற்றச்சாட்டு—

கேள்வியில் குற்றச்சாட்டு இருத்தல் கூடாது. (து.வி.) 256

தீர்ப்பு—

ஓர் பிரச்னைமீது தலைவர் முடிவு கூறியபின் மறுபடியும் அதுபற்றி கேட்கக் கூடாது. 28

நடைமுறை—

உரிமைப் பிரச்னை கொடுத்த உறுப்பினர் அதனை உடனே எடுத்துக் கொண்டாக வேண்டும் எனத் தலைவரை வற்புறுத்துவதற்கில்லை. (ஒ.பி.) 37

82-வது விதியின்கீழ் அறிக்கை கொடுத்தபின் அதன்மேல் விவாதம் கிடையாது. (அ.அ.) 66

ஓர் உறுப்பினர் கொடுத்துள்ள உரிமைப் பிரச்னையை, உடனடியாக எடுத்துக்கொள்ளா விட்டாலும், அவர். கொடுத்த பிரச்னை என்ன, யார் மீது' என்பதனை யாவது சொல்வதற்கு அவ்வுறுப்பினரை அனுமதிக்கலாம் என பேரவைத் தலைவருக்கு கருத்து வழங்கப் பெற்ற போது




த—தொடர்ச்சி.


**தலைவர்**—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறை—தொடர்ச்சி.

" விதிகளின்படி அனுமதி இல்லை. நான் அனுமதிக்காமல் பிரச்னையைச் சொல்ல முடியாது' எனக் குறிப்புரைத்தார் 42—4

ஓர் கவன ஈர்ப்பை, அதன் பொருள் குறித்த துறை அமைச்சரின் கவனத்திற்கே கொண்டு வரவேண்டும், அத்துறை அமைச்சரே அறிக்கை அளிக்க வேண்டுமென்று ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்னை ஒன்றை எழுப்பிய போது, " அப்படிக் கிடையாது. கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. எந்த அமைச்சர் வேண்டுமானாலும் அறிக்கை அளிக்கலாம் " எனத் தலைவர் தீர்ப்பளித்தார். (க.ஈ.) 19

தாம் கொடுத்த அறிவிப்புபற்றி ஓர் உறுப்பினர் தலைவரிடம் தகவல் கோரியதைத் தொடர்ந்து மற்றொரு உறுப்பினர் பேச முற்பட்டபோது தலைவர் அளித்த குறிப்புரை யாவது :

" இது விஷயம் என் ஆய்வில் இருக்கிறது. எல்லோரும் இதன்மீது கருத்து சொன்னால் பிரச்னை முடிவு அற்ற நிலைக்குப் போய்விடும். இதையொட்டி ஒழுங்குப் பிரச்னை என்று எழுப்பி, அதைப்பற்றிப் பேசினால் நம்முடைய மரபும் கெட்டுவிடும். (த.கோ.) 2

தாம் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானம் என்ன ஆயிற்று, ஏன் எடுத்துக்கொள்ளப் பெறவில்லை என தம் அறையில் வந்து கேட்கலாமே தவிர, பேரவையில் தாம் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானம் என்ன என்பதைச் சொல்லி, ஏன் எடுத்துக்கொள்ளவில்லை எனக் கேட்பது முறையாகாது. எந்த விதியின் கீழும் அனுமதிப்பதற்கு இல்லை. (ஒ.பி.) 458—4

துணை வினா கேட்க எல்லோருக்கும் வாய்ப்பு வேண்டுமென்று கேட்கிற முறையே தவறு. (வி.வி.)

வேறோர் வினாவை எடுத்துக் கொண்டபின் முன் வினாவிற்குச் செல்வது சரியல்ல. (வி.வி.)

நீண்ட விளக்கமாக இருந்தால் அமைச்சர் அதனை அச்சடித்து மேசையில் வைத்து விடலாம் (க.ஈ.) [illegible]

பக்கங்கள்

த—தொடர்ச்சி.


லைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும்-குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறை—தொடர்ச்சி.

போவைமுன் கொண்டு வரப்பெற்றுள்ள உரிமைப் பிரச்னை ஒன்றை நேரடியாக உரிமைக் குழுவிற்கு விட வேண்டுமென்று சில உறுப்பினர்கள் வற்புறுத்தியபோது

தலைவர் அளித்த குறிப்புரையாவது :—

"பேரவையில் நடந்த பிரச்னை நேரடியாக உரிமைக் குழுவுக்கு அனுப்பப் பெற்றது. இது வெளியில் உள்ள ஒருவரைப் பற்றியதாகவும், ஒரு நாளேடு பற்றிய தாகவும், உள்ளதால், அவர்களிடம் விளக்கம் கேட்ட பிறகு தீர்ப்பளிக்கப்பெறும்." (உ.பி.) 186

நீக்கம்—

ஆவேசமாகப் பேசியபோது ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட ஒருசில சொற்கள் நீக்கப்பெற்றன. 475

தாம் கொடுத்த அறிவிப்பில் இல்லாததை ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது நீக்கப்பெற்றது. (க.ஈ.) 462

பார்வையாளர் மாடம்—

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அமிர்தலிங்கம் பார்வையாளர் இருக்கையில் அமர்ந்துள்ளதை பேரவைக்கு அறிவித்து பேரவை சார்பில் வரவேற்பு அளித்தார். (அ.ச.மு.) 357

பேசும் முறை—

அமைச்சர் பதில் சொன்ன பிறகு, அதுபற்றியே கேட்கக் கூடாது. அதையொட்டி கூடுதலாகக் கேள்வி இருந்தால் கேட்கலாம். (க.ஈ.) [illegible]

உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளுதல் கூடாது. (அ.ச.மு.) [illegible]




த—தொடர்ச்சி.

பக்கங்கள்


தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும்-குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

பேசும் முறை—தொடர்ச்சி.

"உறுப்பினர் கொடுத்த அறிவிப்பில் உள்ளதையே படிக்க வேண்டும்" (க.ஈ.) 462

சுருக்கமாக, தெளிவாகக் கேட்க வேண்டும். (க.ஈ.) 484

பேச்சில் வினயம் இருத்தல் வேண்டும். (க.ஈ.) 475

பேரவைத் தலைவர் 'ஒன்றைத் தெரிந்து கொண்டே செய்திருக்கிறார்' என உறுப்பினர்கள் தாங்களாகவே கற்பனை செய்துகொண்டு பேசுவது கூடாது. (ஒ.பி.) 460

பேரவை முன்னுள்ள பிரச்னையையொட்டி, நேரம் கருதி பேச வேண்டும். (அ.ச.மு.) 232

பேரவை முன்னுள்ள பிரச்னை பற்றியே பேச வேண்டும். (அ.த.தி.) 497

வினாக்கள்-விடைகள்—

ஒரு சமயத்தில் ஒரு வினா தான் கேட்க வேண்டும். (து.வி.) 258—259, 291

ஒன்றைக் குறித்தே திருப்பித் திருப்பி கேட்கக் கூடாது. (து.வி.) 281, 401

புதிதாகத் தகவல் பெறக்கூடிய விதத்தில் கேட்க வேண்டும். (து.வி.) 281

"பதிலைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டும்." (து.வி.) 14, 290

மூலக் கேள்வியையொட்டி இல்லாவிட்டால் தனிக்கேள்வி போடவேண்டும். (வி.வி.) 135

ஒரே சமயத்தில் பலவற்றை ஒன்றாகச் சேர்த்து கேட்கக் கூடாது. (து.வி.) 18

வினாவைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும் (து.வி.) 29

வினாவை நீட்டித்துக் கொண்டே போனால் அனுமதி தருவதற்கில்லை. (து.வி.) [illegible]

பக்கங்கள்

**தனசேகரன், திரு. ந.—**

கட்டடங்கள், ஆத்தூர்க்குடி கடற்கரை சாலை 274—276

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 107

**தாமரைக்கனி, திரு. இரா.—**

அரிசனங்கள், சுடுகாட்டு நிலம், திருவில்லிப்புத்தூர் (க.ஈ.) 473—474, 475

கான்சாபுரம் கூட்டுறவு நாணயச் சங்கத்தில் கையாடல் 9—10

சட்டமன்றத் துறை, கூடுதல் வசதிகள் (த. சோ.) 442

சுற்றுலா மையம், திருவில்லிப்புத்தூர் 404

துளசிச் செடித் தோட்டம், திருவில்லிப்புத்தூர் 122—126

தொழிலாளர்கள், போனஸ் 379—383

மத்தியக் கூட்டுறவு வங்கியின் கடன் வசதி, உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (தீ.) 366

முகவை மாவட்டத்தில் புது வழித்தடங்கள் ஏற்படுத்துதல் (க.ஈ.) 69—70

**திருவேங்கடம், திரு. பெ. சு.—**

அரசு வாகனங்கள், இன்ஷ்யூரன்ஸ் 391—393

உறுப்பினர் திரு. கிட்டப்பாவுக்குப் பாராட்டு. 201—209

குடிநீர் வசதி, கலசப்பாக்கம் 413—415

சி.எம்.சி. மருத்துவமனை, வேலூர், மானியம் 33

தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 223—226

மத்தியக் கூட்டுறவு வங்கியின் கடன் வசதி உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (தீ.) 362—364

மறுவாழ்வு இல்லங்களில் இருந்து வெளிவந்த தொழு நோயாளிகள் 34



பக்கங்கள்

**தீர்மானங்கள்—**

ஒத்திவைப்புத் தீர்மானம்—

பார்க்க—தலைவர்.

பருத்திப் போக்குவரத்துச் சட்டம், 1923 திருத்தம் 498—499, 500—519

மத்தியக் கூட்டுறவு வங்கியின் கடன் வசதி, உத்தரவாத வரையறையை உயர்த்துதல் 359—378

மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, புதிய விதி 496—498

விதி 23-ஐத் தளர்த்தல் 191

விதி 41 (3)-ஐத் தளர்த்தல் 462

**துரை கலியமூர்த்தி, திரு.—**

ஆடுகள், வைத்திய உதவி 438—441

கிழக்கு கடற்கரைச் சாலையில் பாலங்கள் 30—31

சிதம்பரத்தில் உறுப்பினர் திரு. லத்தீபை சிலர் தாக்க முயன்றது (ஒ.தீ.) 45—46

**துரை கோவிந்தராஜன், திரு.—**

துணை வினாக்கள் அனுமதித்தல் (ஒ.பி.) 35—36

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 88—93

மத்திய கூட்டுறவு வங்கியின் கடன் வசதி, உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (தீ.) 304—306

விவசாயிகளிடையே பதட்ட நிலை, சித்தமல்லிப் பகுதி, மன்னார்குடி (க.ஈ.) 462

**துரை முத்துசாமி, திரு.—**

நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 327—329

பக்கங்கள்

**துரை முத்துசாமி, திரு.—தொடர்ச்சி.**

- படவிழா, மதுரை, தடியடி (ஒ.தீ.) — 188
- மரவள்ளி ஆலை, தென்னாற்காடு — 161
- மின்வாரியம், விழுப்புரம் திட்டத்தைப் பிரித்தல் — 253—254

**துரைமுருகன், திரு.—**

- தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 — 232
- நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 — 302, 311, 319, 320, 324, 325, 326, 327 334,
- மாலை முரசு நாளேடு மீதும், திரு. இரா. நெடுஞ்செழியன் மீதும் (உ.பி.) — 185, 186
- விவசாயப் பொருள்களுக்கான கொள்முதல் விலை நிர்ணயம் — 13—16

**துலுக்காணம், திரு. வ.—**

- அரிசன மாணவர்கள், உதவித் தொகை (க.ஈ.) — 467, 471

**தொழில்கள்—**

- ஆசியன் பேரிங்குகள் நிறுவனம், ஓசூரில் அமைத்தல் — 254—255
- மாவட்டத் தொழில் மையங்கள், மைய அரசு உதவி — 287—291

**தொழிலாளர்கள்—**

- சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர்கள், சட்டப் பாதுகாப்பு — 387—391

**தொழிற்சாலைகள்—**

- சர்க்கரை ஆலை, மாயூரம் — 396—399
- சர்க்கரை ஆலை, மானாமதுரை — 399—401
- டி.ஐ. சைக்கிள் தொழிற்சாலை, வேலை நிறுத்தம் — 407—412
- தொழிலாளர்கள், போனஸ் — 379—383
- மணிலா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, கள்ளக்குறிச்சி — 158—159
- மரவள்ளி ஆலை, தென்னாற்காடு — 161



பக்கங்கள்

**தொழிற்பேட்டைகள்—**

- தொழிற்பேட்டைகளின் தொழில் பிரிவுகள், திருச்சி — 284—287

**ந.**

**நடராசன், திரு. ஆ.—**

- என்.எம்.ஆர். தொழிலாளர்கள், வேலை நிர்ணயம் கோரி உண்ணாவிரதம் (ஒ.தீ.) — 454, 456—457
- ஒன்றிய மருத்துவ மனைகள், அரசு ஏற்றல் — 163—168
- வேலகவுண்டன்பாளையம், கோவை அரிசனக் காலனி, தாக்கப் பெற்றமை (ஒ.தீ.) — 296

**நல்லதம்பி, திரு. தீ. சு.—**

- ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கும் முறை — 264—267
- நோய்கள், மர்மக் காய்ச்சல், சென்னை நகர் (க.ஈ.) — 488 490—491
- மீன்பிடி படகுகளுக்கான யமாகா அவுட் போர்டு மோட்டார் வாங்குதல் — 11—13

**நாராயணசாமி, திரு. கே.—**

- வழக்கறிஞர் தாக்கப் பெற்றமை, திருப்பரங்குன்றம் (க.ஈ.) — 195
- நீக்கம் — 59, 68, 304, 344, 499

**நீர்ப்பாசனம்—**

- அன்னப்பநாயக்கன் அணை கால்வாய், செங்கல்பட்டு, நீர் கொண்டு செல்லல் (க.ஈ.) — 478—479
- கல்லணை விரிவாக்கக் கால்வாய், சீரமைத்தல் — 276—279
- குட்டைத் திட்டம், நொச்சியாறு, கூவனூற்று கிராமம், மதுரை — 159—160
- குமரி அணை, கன்னியாகுமரி, செப்பனிடல் — 160—161
- சடையநேரிக்குளம் ஆக்கிரமிப்பு, மெஞ்ஞானபுரம், திருநெல்வேலி — 427—[illegible]

பக்கங்கள்

## ப—தொடர்ச்சி.


**பாலங்கள்—**

- இழுக்கு கடற்கரைச் சாலையில், எண்ணிக்கை — 30—31
- வடக்குத் தாமரைக்குளம் அருகேயுள்ள ஆற்றின் குறுக்கே — 31
- விரசோழன் ஆறு, தஞ்சாவூர் ஒன்றியம் — 273

**புத்தகங்களும் வெளியீடுகளும்—**

- நோட்டுப் புத்தகங்கள் வழங்கல், கோவை — 267—271
- பரிசு, கலையழகுடன் அச்சடிக்கப்படும் புத்தகங்களுக்கு — 262—264

**புருஷோத்தமன், திரு. ஆ.—**

- பல் மருத்துவம் பட்டதாரிகள், வேலைவாய்ப்பு — 168—170

**புஷ்பராஜ், திரு. த.—**

- என்.எம்.ஆர். தொழிலாளர்கள், வேலை நிரந்தரம் கோரி உண்ணா விரதம் (ஒ.தி.) — 454
- நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 — 106
- போலையின் அறிக்கைகள் (அறிவிப்பு) — 244—249

**பேருந்துகள்—**

- கூடுகள் கட்டுதல், பல்லவன் போக்குவரத்துக் கழகம் — 420—423

**பொன்னையன், திரு. சி.—**

- முகவை மாவட்டத்தில் புது வழித்தடங்கள் ஏற்படுத்துதல் (க.ஈ.அ.) — 69—70
- மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 77, 78

**போக்குவரத்து—**

- கதிர்களைக் கண்டுபிடித்தல் செய்தல், நெடுஞ்சாலைகளில் — 155—158
- சைக்கிள் ரிக்ஷாக்களில் பள்ளிச் சிறார்கள், எண்ணிக்கை — 423—426
- வழித் தடங்கள் அரசுடமை, விவரம் — 152—155
- விரைவுப் போக்குவரத்துத் திட்டம், சென்னை — 274




பக்கங்கள்

## ம.


**மணிமாறன், திரு. மா.—**

- அரிசன மாணவர்கள், உதவித் தொகை (க.ஈ.) — 467, 470
- புதுமுக வகுப்புகளில் பாடங்கள் முடிக்கப் பெறாமை (க.ஈ.) — 465—466
- வேலகவுண்டன்பாளையம், கோவை, அரிசனக் காலனி தாக்கப் பெற்றமை (ஒ.தி.) — 296, 297

**மருத்துவம்—**

- மலேரியா தடுப்பு நடவடிக்கை — 33—34

**மருத்துவமனைகள்—**

- எட்டயபுரம், புதிய கட்டடம் — 161—163
- ஒன்றிய மருத்துவ மனைகள், அரசு ஏற்றல் — 163—168
- சி.எம்.சி., வேலூர், மானியம் — 33
- சீர்காழி, விரிவாக்கம் — 385
- திருக்காட்டுப்பள்ளி, தஞ்சை — 393
- பல் மருத்துவம், பட்டதாரிகள் வேலைவாய்ப்பு — 168—170
- மதுரை, இருதய நோய் சிகிச்சை — 434—436
- மதுரை, கரானரி யூனிட் — 433—434
- மதுரை, புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு — 33
- மருத்துவர்கள், திருப்பத்தூர், வட ஆற்காடு — 394—395

**மருதாசலம், திரு. க.—**

- உறுப்பினர் அறை, திருட்டு (த.கோ.) — 443
- கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 — 112—113

**மனோகரன், திரு. கி.—**

- படவிழா, மதுரை தடியடி (ஒ.தி.) — 190—191
- விதி 23-ஐத் தளர்த்தல் (தீ.) — 191

**மாணிக்கம் திரு. சி.—**

- தலைமையாசிரியர்கள், மேல்நிலைப்பள்ளிகள், கருத்தரங்கு — 405—406

பக்கங்கள்

ம—தொடர்ச்சி.

**மாநகராட்சி—**

சென்னையில் வீடுகளுக்கு புது எண்கள் இடுதல், எதிர்ப்பு — 271—273

**மார்க்கபந்து, திரு. ரா.—**

கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 — 115—116

தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 — 235—236

நீர் ஊற்றுக்கள் பாதிப்பு, வட ஆர்க்காடு, தோல் பதனிடும் தொழிற்சாலைகளால் — 429—433

வழக்கறிஞர் தாக்கப் பெற்றமை, திருப்பரங்குன்றம் (க.ஈ.) — 192, 194

**மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.—**

உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 — 353—354

என்.எம்.ஆர். தொழிலாளர்கள், வேலை நிர்ணயம் கோரி உண்ணாவிரதம் (ஒ.தீ.) — 454, 455

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களது மறியல் போராட்டம் (ஒ.தீ.) — 53—54

மத்திய கூட்டுறவு வங்கியின் கடன் வசதி, உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (தீ.) — 360—361

**மின்சாரம்—**

தேயிலைத் தோட்டத் தெருக்களுக்கு விளக்குகள் — 148—149

**மீனளம்—**

மீன்பிடி படகுகளுக்கான யமாகா அகுட் போர்டு மோட்டார் வாங்கல் — 11—13

**மீனாட்சிசுந்தரம், திரு. மா.—**

தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 — 239—240

**முசிறிப்புத்தன், திரு. பி.—**

நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 — 300



ம—தொடர்ச்சி.

**முத்தையா, திரு. இரா.—**

பக்கங்கள்

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 — 82—85, 85—86

நிறுவனங்களில் பெயர்ப் பலகைகள், தூய தமிழில் — 149—152

**முந்திரி—**

விநியோகம் — 32

**மூலிகைச் செடி—**

துளசிச் செடித் தோட்டம், திருவில்லிபுத்தூர் — 123—128

**மொழிகள்—**

நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள், தூய தமிழில் — 149—152

ய.

**யூசப் திரு. யா. சை. மு.—**

குமரி அணை, கன்னியாகுமரி செப்பனிடல் — 160—161

பொய்கை ஆற்றின் குறுக்கே அணை, தோவாளை, கன்னியா குமரி — 426—427

ர.

**ரகுமான்கான், திரு. அ.—**

மாலை முரசு நாளேடு மீதும், திரு. இரா. நெடுஞ்செழியன் மீதும் (உ.பி.) — 171, 176—178

**ரமணி, திரு. கு.—**

கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 — 220

கோவில்களில் உள்ள கடைகள், கட்டடங்கள், வீடுகள், நியாய வாடகைக் குழு — 138—142

சிங்காநல்லூரில் அரிசன நல சங்கம் என்ற பெயரால் வசூலிக்கப் பட்ட தொகை — 22—23

நோட்டுப் புத்தகங்கள் வழங்கல், கோவை — 267—271

ர—தொடர்ச்சி.


**ரமணி, திரு. கு.—தொடர்ச்சி.**

| | பக்கங்கள் |
|---|---|
| மழை, வெள்ளத்தால் சேதம், கோவை | 133—137 |
| மாவட்டத் தொழில் மையங்கள், மைய அரசு உதவி | 287—291 |

**ராமதாஸ், திரு. பி.—**

| | |
|---|---|
| வழக்கறிஞர் தாக்கப் பெற்றமை, திருப்பரங்குன்றம் (க.ஈ.) | 192, 196 |

**ராஜ்குமார் விஜயாகுநாத தொண்டமான், திரு.—**

| | |
|---|---|
| நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 | 81—82, 106 |

ல.

**லத்தீப், திரு. எம். ஏ.—**

| | |
|---|---|
| சட்டமன்றத்துறை, கூடுதல் வசதிகள் (த.கோ.) | 441—442 |

வ.

**வடிவேல், திரு. கு.—**

| | |
|---|---|
| நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 | 106—107 |

**வரதராஜன், திரு. சௌ. வே.—**

| | |
|---|---|
| நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 | 107 |

**வாசன், திரு. சீ. மு.—**

| | |
|---|---|
| நோய்கள், மர்மக் காய்ச்சல், சிறுவர்கள் இறப்பு, இராமேஸ்வரம் (க.ஈ.) | 481 |
| பால் விநியோக டெப்போக்கள், வாடகைக்கு விடுதல் | 82 |

**வாரியங்கள்—**

| | |
|---|---|
| மின்வாரியம், விழுப்புரம் திட்டத்தைப் பிரித்தல் | 253—254 |




வ—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| **விலைவாசி—** | |
| புண்ணாக்கு, பருத்திக் கொட்டை, விலை நிர்ணயம் | 279—284 |
| **விவசாயம்—** | |
| எலி ஒழிப்புத் திட்டம் | 26—30 |
| **வேளாண்மை—** | |
| நெற்பயிர்கள் நாசம், பேராவூரணி, தஞ்சாவூர் | 383—387 |
| மண் அமைப்பு, தனிச் சிறப்பு ஆராய்ச்சி | 428—429 |
| விவசாயிகளிடையே பதட்ட நிலை, சித்தமல்லிப் பகுதி, மன்னார்குடி (க.ஈ.) | 462—463 |
| விவசாயிகளை மிரட்டல், அம்பை, திருநெல்வேலி (க.ஈ.அ.) | 464—465 |
| விளை பொருள்களுக்கு கொள்முதல் விலை நிர்ணயம் | 13—16 |

**வின்சென்ட், திரு. எம்.—**

| | |
|---|---|
| என்.எம்.ஆர். தொழிலாளர்கள், வேலை நிர்ணயம் கோரி உண்ணாவிரதம் (ஒ.தீ.) | 457—458 |

**விஜயராகவன், திரு. பொ.—**

| | |
|---|---|
| அரியலூர் கலைக் கல்லூரியினரும் மாணவர்களும் தாக்கப் பெற்றமை (க.ஈ.) | 299, 300 |
| உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு (த.கோ.) | 441 |
| என்.எம்.ஆர். தொழிலாளர்கள், வேலை நிர்ணயம் கோரி உண்ணா விரதம் (ஒ.தீ.) | 454, 455—456 |
| மாலை முரசு நாளேடு மீதும், திரு. இரா. நெடுஞ்செழியன் மீதும் (உ.பி.) | 171 |

**வீரப்பன், திரு. ஆர். எம்.—**

| | |
|---|---|
| தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 | 223, 240—244 |
| தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு, 1979 | 491, 494—496 |

வ—தொடர்ச்சி.


**வீரப்பன், திரு. ஆர். எம்.—தொடர்ச்சி.**

| | பக்கங்கள் |
|---|---|
| நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 | 302, 332—337, 338 |
| விவசாயிகளை மிரட்டல், அம்பை, திருநெல்வேலி (க.ஈ.அ.) | 464—465 |
| **வெள்ளைச்சாமி, திரு. ஆ.—** | |
| புகுமுக வகுப்புகளில் பாடங்கள் முடிக்கப் பெறாமை (க.ஈ.அ.) | 466—467 |
| **வெளிநடப்பு** | 66, 67, 68 |
| **வேலுச்சாமி, திரு. ஒ. சோ.—** | |
| நோய்கள், மர்மக் காய்ச்சல், சிறுவர்கள் இறப்பு, இராமேஸ்வரம் (க.ஈ.) | 481 |
| படவிழா, மதுரை நடிகை (ஒ.தீ.) | 187—188, 189—190 |


ஜ.


| | |
|---|---|
| **ஜெபமணி, திரு. ர.—** | |
| அரியலூர் கலைக் கல்லூரியினரும் மாணவர்களும் தாக்கப் பெற்றமை (க.ஈ.) | 299 |
| **ஜேம்ஸ், திரு. ஜே.—** | |
| உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 | 344, 352—353 |
| சட்டமன்ற துறை, கூடுதல் வசதிகள் (த.கோ.) | 442 |
| சிதம்பரத்தில் உறுப்பினர் திரு. ஸந்தீப்பை சிலர் தாக்க முயன்றது (ஒ.தீ.) | 44—45 |
| தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 | 237—238 |




ஜ—தொடர்ச்சி.


**ஜேம்ஸ், திரு. ஜே.—தொடர்ச்சி.**

| | பக்கங்கள் |
|---|---|
| தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு, 1979 | 492—494 |
| நோய்கள், மர்மக் காய்ச்சல், சென்னை நகர் (க.ஈ.) | 488 |
| மண்ணெண்ணெய் பற்றாக் குறை (ஒ.பி.) | 461 |
| மத்தியக் கூட்டுறவு வங்கியின் கடன் வசதி, உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (தீ.) | 370—372 |
| மாலை முரசு நாளேடு மீதும், திரு. இரா. நெடுஞ்செழியன் மீதும் (உ.பி.) | 171, 175—176 |

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

## வியாழக்கிழமை, 1979 மார்ச்சு 15

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### I. வினாக்கள் — விடைகள்

### குறிக்குறியிட்ட வினாக்கள்

### துளசி செடித் தோட்டம்

குறுகிய கால வினா எண். 14

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதி செண்பகதோப்புக்கு அருகில் சித்த வைத்தியத்திற்கு மூலப் பொருளான துளசிச் செடித் தோட்டம் நிறுவ அரசு செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:

அந்த ஊர் துளசிச் செடி மண்டிக் கிடந்த இடம் என்பதால் அங்கு மூலிகைத் தோட்டம் உருவாக்கும் திட்டம் பரிசீலிக்கலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இப்போது மூலிகைத் தோட்டங்கள் எல்லாம் அழிந்து விட்டன. ஸ்ரீவில்லிபுத்தூரிலே ஏற்கனவே மூலிகை நந்தவனம் இருந்ததாகச் சொல்கிறார்கள். சூடிக் காடுத்த சுடர்க்கொடி ஸ்ரீ ஆண்டாள் இந்தத் துளசி நந்தவனத்திலே பிறந்ததாகச் சொல்லுகிறார்கள். ஆதலால், ஸ்ரீவில்லிபுத்தூரிலே எந்தெந்த மூலிகைகளை பயிரிட அரசு உத்தேசித்திருக்கிறது, அதை எப்போது ஆரம்பிக்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூரிலே துளசி நிறைய வளர்ந்ததாகச் சொல்லப்படுகிறது. அங்கே பல்வேறு விதமான துளசிகள் இருந்ததாகவும், அதிலே இன்றைக்கு சித்தவைத்திய மருத்துவ முறைக்கு பயன்படுத்தப்பட்டு வருவது கருந் துளசி என்று [illegible]டிய ஒருவகை துளசி என்றும், இது முக்கியமாக [illegible]

பிடித்திருந்தாலும், இருமல் போன்ற வியாதிகளுக்கும் கொடுக்கலாம் என்று சித்த மருத்துவக் குறிப்புகள் இருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மண்வளத்தைப் பொறுத்து, எத்தகைய சித்த வைத்தியத்திற்கு பயன்படும் மூலிகைகளைப் பயிரிடலாம் என்பதை ஆய்ந்து பார்த்து, பின்னால் அதைப்பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, சித்தவைத்திய மருத்துவ முறையில் இளம்பிள்ளை வியாதிக்கு மருந்து இல்லை என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா? ஆனால், கும்பகோணத்திற்கு அருகில் ஒரு வைத்தியர் இந்த இளம்பிள்ளை வியாதியை குணப்படுத்திக் கொண்டு வருவது இந்த அரசுக்குத் தெரியுமா? அப்படியென்றால், இந்த அரசு அதைப்பற்றி ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இளம் பிள்ளை வாத நோய் தீர்க்க முடியாத ஒரு நோய் என்று பல வைத்திய வல்லுநர்களாலும் நீண்ட காலமாக கணிக்கப்பட்டு வந்த ஒன்று. ஆனால், கும்பகோணத்திற்குப் பக்கத்திலே சோழவரம் என்ற ஊரில் ஒரு மூலிகைத் தோட்டம் வைத்து, அதிலுள்ள மூலிகையிலிருந்து எண்ணெய் தயாரித்து அந்த வியாதியை குணப்படுத்தி வருவதாக செய்தி இந்த அரசுக்குக் கிடைத்ததற்குப் பின்னாலே, அந்த எண்ணெயைத் தடவிப் பார்த்து, உண்மையிலேயே அது வியாதியை குணப்படுத்துகிறதா என்பதை அறிய, பொதுவாக இன்றைக்கு தமிழகத்தின் முதல்வர் அவர்களால் அதற்கான தீவிர முயற்சி எடுக்கின்ற வகையில், சேலத்திலே உள்ள மருத்துவ மனையிலே இன்றைக்கு அந்த எண்ணை இளம் பிள்ளை வாத வியாதியால் பாதிக்கப்பட்ட குழந்தை களுக்கு தடவப்பட்டு வருகிறது. பல குழந்தைகளின் தாய் மார்கள் தங்கள் குழந்தைகள் குணப்பட்டு வருவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அவருடைய மூலிகைத் தோட்டத்தில் என்னென்ன மூலிகைகளை இன்றைக்கு அவர் பயிரிட்டுக் கொண்டிருக்கிறார், எப்படிப் பயிரிடுகிறார் என்பதைப் பார்த்து, அந்த எண்ணையை முழு அளவுக்கு எல்லா இடங்களிலும் பயன்படுத்திக் கொள்வதற்கான வழி வகைகளைக் காண, மூலிகைத் தோட்டங்கள் அமைக்க எங்கெங்கு வாய்ப்பிருக்கின்றன என்பதை இந்த அரசு ஆய்ந்து, பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

டாக்டர் கே. சமரசம் ; பேரவைத் தலைவர் அவர்களே, சித்த வைத்தியத்திற்குப் பயன்படும் செங்கழுநீர் கிழங்கு தமிழகத்திலே இல்லை என்று சொல்லப்படுகிறது. அது வேறு எங்காவது இருக்கின்றதா? ஆம் எனில், இந்தத் தமிழகத்திலே வளர்க்க இந்த அரசு முயற்சி எடுக்குமா?



மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் ; பேரவைத் தலைவர் அவர்களே, செங்கழுநீர் கிழங்கு என்பது குறிப்பாக ரோமம் வளர்ப்பதற்காக பயன்படுத்தப்பட்டதாக பழம் பெரும் பாடல்களிலே குறிப்புகள் இருக்கின்றன. அந்தக் கிழங்கை வைத்து எண்ணெய் தயாரிக்கின்ற நேரத்தில், சாதாரணமாக மயிலின் இறகினாலே தான் அந்த எண்ணையைத் தயாரிக்க வேண்டும். கைவிரல் பட்டால்கூட, அங்கே ரோமம் வளர்ந்து விடும் என்ற குறிப்புகள் இருக்கின்றன, ஆனால், இன்றைக்கு அந்த செங்கழுநீர் கிழங்கு தமிழகத்திலே நிறைய கிடைக்க வில்லையென்றாலும், குறிப்பாக சிதம்பரத்திலும், திருவரங்கத்திலும் செங்குழுநீர் பூ பூத்துக் கொண்டிருக்கிறது. எப்படி யாவது இந்தக் கிழங்கைப் பெற்று, தமிழகத்தின் பல்வேறு இடங்களிலே உற்பத்தி செய்ய வேண்டுமென்று இந்த அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : வெளிநாடுகளில் இந்த மூலிகை களுக்கு அதிக கிராக்கி இருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் தமிழ்நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் மூலிகைத் தோட்டங்களைப் பயிரிட்டு வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலம் இங்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும், அந்நியச் செலாவணியும் கிடைக்கும். அதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் ; நம்முடைய மூலிகைகளுக்கு வெளிநாடுகளில் நல்ல கிராக்கி இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் மூலிகைத் தோட்டத்தை ஆரம்பித்த உடனே மூலிகைகளைப் பறித்து வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட முடியாது. அதை அதிக அளவில் பயிரிட்ட பிறகு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்பு ஏற்படும். அதையெல்லாம் இந்த அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. தமிழகத்தின் பல்வேறு இடங்களில் மூலிகைத் தோட்டங்களை உருவாக்க வேண்டும். எந்தெந்த மூலிகைகள் குறுகிய காலத்தில் பலன் தருகிறது. எந்தெந்த மூலிகைகள் நீண்ட காலத்திற்குப் பின் பலன் தருகிறது என்ற ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. அப்படி நடத்தி முடித்த பின்னால் மூலிகைகளைப் பயிரிட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பும் முயற்சி மேற்கொள்ளப்படும். தானாகக் கிடைக்கும் வெளிநாட்டுச் செலாவணியை வேண்டாம் என்று ஒதுக்கிவிட மாட்டோம்.

திரு. மு. ஆறுமுகம் ; கும்பகோணத்திற்கு அருகில் முட நீக்க சிகிச்சைக்காக மூலிகைத் தோட்டத்தில் தயாரிக்கப்படும் மூலிகைகளை அடையாறு பாமயசியில் வளர்த்து மாநில அளவில் விநியோகிக்க அரசு ஆவன செய்யுமா? தலையில் வழுக்கை விழுவதைத் தடுக்கவும், ஏற்கனவே வழுக்கை விழுந்து விட்ட தலையில் மீண்டு முடி முளைக்கச் செய்யும்-ஆன ஒரு நிகழ்ச்சியை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும்,

போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் நடத்திக் காட்டினார்கள். திரு. வைத்தியநாதன் என்ற மூலிகை வைத்தியர் அதை எடுத்துக் காட்டினார். அதை மாநில அளவில் வளர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் ; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னது இன்றைக்கு அரசினுடைய ஆய்வில் இருக்கிறது. கும்பகோணத்தில் சோழவரத்தில் இருக்கும் அந்த வைத்தியர் நீண்ட காலமாக இதைச் செய்து வருகிறார். இளம் பிள்ளை வாதத்தில் பாதிக்கப்பட்டவர்கள் நல்ல நிவாரணம் பெறுவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதேபோல் முடி விழுந்த இடத்தில் முடி முளைக்கும் எண்ணெயை அவரே தயாரித்துக் கொண்டிருக்கிறார். அதைப் பரிசீலனைக்காக பல இடங்களில் கொடுத்திருக்கிறோம். பரிசீலனை நடந்து வருகிறது. அவருடைய மருத்துவ மனைக்கு முடிவிழுந்தவர்கள் வந்து இந்த எண்ணெயைத் தேய்த்துக் கொண்டு முடி முளைந்த நிகழ்ச்சிகளை அவர் எடுத்துக் காட்டினார். சுமார் 63 வயது வரை உள்ளவர்கள் இந்த எண்ணெயைத் தேய்த்தால் முடி முளைக்கும் என்று சொல்லப்படுகிறது. நிச்சயமாக அவ்வாறு முடி முளைக்கிறது என்று பரிசீலனைக்குப் பின் தெரிந்தால், நிரந்தரமாக முடி முளைக்கிறது என்று வருமானால், உலகத்திலேயே அத்தகைய எண்ணெயைத் தயாரித்த முதல் பெருமையை தமிழ்நாடு பெறும். அத்தகைய பெருமையைப் பெறும் வகையில் இந்த அரசு அதைப் பற்றி ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : வழுக்கைத் தலை உள்ளவர்களுக்கும் முடி முளைக்கும் என்றவுடன் நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய தலையில் உள்ள இந்த வழுக்கை போகுமா என்று சுட்டிக்காட்டுகிறார். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களை ஆராய்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; தலைவர் அவர்களே எனக்கு 63 வயதாகிறது. ''Baldness is a sign of wisdom'' அதிலே நம்பிக்கை வைத்து வழுக்கைத் தலையாகவே இருக்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் ; மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே அப்படிச் சொன்னாலும் என்னிடத்தில் தனியாக அந்த எண்ணெய் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக அந்த எண்ணெய் அவருக்குத் தரப்படும்.



திரு. என். வரதராஜன் ; அலோபதி டாக்டர்களே மஞ்சள் காமாலை நோய்க்கு கீழாநெல்லி சாப்பிட வேண்டுமென்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சாதாரண மக்களுக்கு வைத்திய உதவி செய்கிற முறையில் தமிழகத்தின் பல டகுதிகளில் மூலிகைத் தோட்டங்களை விரைவில் அமைக்க நிபுணர் குழுவை அமைக்க அரசு முயற்சிக்குமா? மேலை நாடுகளிலே கூட இந்த அலபதிக்குப் பதிலாக இவ்வாறு மூலிகைத் தோட்டங்களை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : லிவர் டேமேஜஸ் என்று சொல்லக்கூடிய ஜாண்டிஸ்-மஞ்சள் காமாலை நோய்க்கு கீழாநெல்லி நல்ல வைத்திய முறை என்பதைத் தமிழகத்தில் தமிழ் வைத்தியத்தில் மட்டுமல்லாமல், அலபதியிலும் மேலைநாடுகளில் லிவர் 52 போன்ற ட்ராப்ஸ், தஞ்சையில் கூட மருத்துவ மருந்து தயாரிக்கும் நிலையத்தில் லிவரைட் என்ற மருந்தை கீழா நெல்லியைக் கொண்டு தயாரித்து பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 9.10]

அதை இன்றைக்கு நம்முடைய தமிழக அரசே சித்த மருத்துவ அகங்களின் மூலமாக மக்களுக்குக் கொடுப்பதற்கு வழிவகைகள் செய்யப்படுகின்றன. மேலும் நிறைய மூலிகை உள்ள இடங்களை தோட்டங்களை நாம் விருத்தி செய்ய வேண்டும். மேலை நாடுகளில் இதற்கு இருக்கிற நல்ல ஆர்வத்தை இந்த அரசு உணர்ந்து நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் மூலிகைத் தோட்டங்களை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நலவாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கும்பகோணத்திற்குப் பெருமை தருகிற வகையில் மிகப் பெரிய சித்த மருத்துவ நிலை அங்கே இருப்பதாகச் சொன்னார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் கும்பகோணம் நகரத்திலே சித்த வைத்தியத்திலே சிறந்து இருக்கிறார்கள். அவர்களின் மூலமாக கும்பகோணத்திலே சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கும்பகோணத்திற்கு நான் பெருமை சேர்ப்பதாகச் சொல்லி நன்றியைத் தெரிவித்தார்கள். அதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கும்பகோணத்திலே அப்படிப்பட்டவர்கள் நிறையப் பேர்கள்

இருக்கிறார்கள் என்று சொன்னார்கள்; கும்பகோணத்திலே மட்டுமல்ல, தமிழகத்திலே உள்ள பல இடங்களிலே பல கிராமங்களிலே சித்த வைத்தியத்தைக் கற்றறிந்தவர்கள் அதுபற்றிய ஓலைச் சுவடிகளைத் தங்களோடு வைத்துக்கொண்டு வெளியே தெரியாமல் இருக்கிறார்கள், அவைகளையெல்லாம் வெளியே கொணர்ந்து அப்படிப்பட்டவர்களின் மாநாடு ஒன்றைக் கூட்டி அதிலே பல்வேறு அரிய மருந்துகளை அவர்களிடமிருந்து பெறுவது என்பது இந்த அரசின் நீண்ட காலத் திட்டமாகும். அதற்காக வழிவகைகளைச் செய்வதற்கு சித்த வைத்திய மாநாட்டை, தமிழகம் தழுவிய மாநாட்டை நடத்துவதற்கு இந்த அரசு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

## Study on Mineral Deposits.

* Q. No. 400 : Thiru S. J. Sadiq Pasha: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) Whether the State Geological Unit has undertaken a study of Satalite imagery for mineral exploration in collaboration with the Indian space Research Organisation; and

(b) If so, the results of the Exploration?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) 1-11-77 முதல் இக்கூட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வுப் பணி ஒரு வருட காலத்திற்கு நீடித்து அடுத்த ஆண்டின் இறுதியில் தேடும் பணியின் முடிவுகள் கிடைக்கும்.

திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இது டெக்னிக்கலாக இருக்கிற காரணத்தால் அமைச்சர் அவர்களை முதலிலே நான் கேட்டுக் கொள்வது, விண்வெளிக் கல உருவங்களின் தொகுதி என்று இருக்கிறது, அப்படி என்றால் என்ன? அதற்கு என்ன விளக்கம் என்பதை, உறுப்பினர்களுக்கு விளக்கம் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது அந்த ஆராய்ச்சி எங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது? தமிழ்நாடு முழுவதும் அது விஸ்தரிக்கப்படும் திட்டம் இருக்கிறதா? அதனுடைய பலன்கள் யாவை?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் ; தலைவர் அவர்களே, சேடலைட் இமாஜரி என்பது சேடலைட் மூலமாக கிரணங்கள் செலுத்தப்படுகின்றன, பூமியிலே உள்ள படிவங்கள், மினரல்கள் இவைகளுக்குத் தகுந்தாற்போல் ரெப்ளக்ஷன் ஆகின்றன. அதை



வைத்து பூமியிலே என்ன என்ன மினரல்கள் கிடைக்கின்றன என்று கண்டுபிடிக்கப்படுவதற்கு சேடலைட் இமாஜரியைப் பயன் படுத்துகிறார்கள். இந்தத் திட்டம் சேலம், கோயம்புத்தூர், தென் ஆற்காடு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களிலே மேற் கொள்ளப்படுகிறது. ஜனவரி 1979 இல் இந்த சர்வே முடிக்கப் பட்டிருக்கிறது. அதன் இறுதி அறிக்கை ஏப்ரல் 1979 இல் எதிர் பார்க்கப்படுகிறது.

திரு எஸ். ஜெ. சாதிக் பாட்சா ; தலைவர் அவர்களே, என்ன என்ன கனி வளங்கள் ஆராயப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே அறிக்கை கிடைத்த பிறகு தான் அவைபற்றி அறிவிக்க இயலும்.

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சியின் மூலம் கண்டு பிடிக்கப்படும் கனி வளப் பகுதிகளில் கனி வளம் வெட்டியெடுக்கப்பட என்ன என்ன ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன? அதைப் போலவே 2, 3 இடங்களை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், குறிப்பாக தன்னுடைய தென் ஆற்காடு மாவட்டத்தையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். தஞ்சை மாவட்டத்திலே ஏதேனும் அத்தகைய கனி வளப் பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டனவா? இனியேனும் அத்தகைய முயற்சியை அங்கே மேற்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சேலம், கோயம்புத்தூர், தென்னார்க்காடு, வடார்க்காடு மாவட்டங்களில்கூட 'சர்டன் செலக்டெட் ஏரியாஸ்' என்ற முறையில் சில பகுதிகளில் அது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை கிடைத்த பிறகு அதன் மூலம் என்ன பலன் ஏற்படும் என்பதைப் பார்த்து வேண்டுமானால் மற்ற மாவட்டங்களுக்கும் அதை விஸ்தரிக்க அரசு ஆராயும்.

## வடாற்காடு மாவட்டத்தில் மாக்னசைட் படிவங்கள்.

*வினா எண். 401 திரு எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் மாக்னசைட் இரும்புத் தாது படிவங்கள் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை, செங்கம், போளூர் வட்டப் பகுதிகளில் கவுதி மலை, வேதியப்பன் மலை, உச்சி மலை (ஒதுக்கக்காடுகள்) மேல் செங்கம், கம்பகுடி வசந்தபுரம், பிஞ்சூர், (ஒதுக்கக்காடுகள்) ராதாபுரம் (ஒதுக்கக் காடுகள்) குட்டவாடி (ஒதுக்கக்காடுகள்) சதானந்தல் மற்றும் வைவிடந்தாங்கல் ஆகிய இடங்களில் மாக்னசைட் இரும்புத் தாது படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை மாக்னசைட் இரும்புத்தாது வெங்கக்கல் சேர்ந்த படிவங்கள். இப்படிவங் களில் முப்பத்தைந்து முதல் நாற்பது சதவீதம் வரை இரும்புச் சத்து உள்ளது. இம்மாவட்டத்தில் ஏறத்தாழ இருநூறு மில்லியன் மெட்ரிக் டன்கள் இரும்புப் படிவங்கள் கிடைக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, இரும்புத் தாதுக்கள் இருப்பதாக அமைச்சரவர்கள் அறிவித்திருக் கிறார்கள். ஏற்கனவே ஐந்தாண்டுக் காலத்திற்கு முன்பு ஜப்பானிலிருந்து பல்வேறு நிபுணர்கள் வந்து திருவண்ணாமலையில் தங்கி அதை ஆராய்ந்தார்கள். அப்பொழுதிருந்த அரசு, தமிழக அரசாங்கமும், இந்திய அரசாங்கமும் அனுமதித்தால் ஜப்பான் அரசுடன் கூட்டாகச் சேர்ந்து நாம் இரும்புத் தாது எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டதாக நான் அறிகிறேன். அந்த வகையில் இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? அந்தப் பகுதியில் இரும்புத் தாது எடுத்தால் இலாபகரமாக இருக்கும் என்று சொல்கிறார்கள். அதற்கான நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த 'மாக்னசைட் ஓர்' ஓர் இவைகளிலிருந்து இரும்புத்தாது எடுப்பது மிகவும் சுலபம். ஏனென்றால் காந்தத்தின் பயனை எடுத்து இரும்புத் தாது எடுக்கலாம் 'ஸ்பெஷல் அல்லாய் ஸ்டீல் உற்பத்தி செய்ய இது மிகவும் உகந்தது. ஜப்பான் நாடு இதை விரும்பிக் கேட்டிருக்கிறது. ஆனால் இந்தத் தாதுவிலிருந்து இரும்புத் தாதுவை எடுத்து நாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய மத்திய அரசு முன்னுரிமை அளிக்கவில்லை.

## புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மத்திய உதவி.

*வினா எண் : 402 திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்பு மிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் சமீபத்தில் அடித்த புயலில் பாதிக்கப் பட்ட இடங்களுக்கு மத்திய அரசாங்கத்தினால் அனுப்பப்பட்ட குழுவானது எந்தெந்த இடங்களை நேரில் சென்று பார்வை யிட்டது?





(ஆ) அதன் காரணமாக இழப்பு ஏற்பட்ட பகுதிகளுக்கு எவ்வளவு பணம் ஒதுக்க வேண்டும் என்று இக்குழுவை அரசு கேட்டுக்கொண்டது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே,

(அ) 1977 ஆம் ஆண்டு அடித்த புயலாலும், வெள்ளத் தாலும் பாதிக்கப்பட்ட அந்த இடங்களைப் பார்ப்பதற்காக மத்திய அரசினுடைய குழு தமிழகத்திற்கு வந்தது. வந்தவர்கள் தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினம், மற்ற பகுதிகளையும், திருச்சி மாவட்டத்தையும், புதுக்கோட்டை மாவட்டத்தையும், அதைப்போல் மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர், திண்டுக்கல் போன்ற இடங்களையெல்லாம் பார்வையிட்டுச் சென்றார்கள்.

(ஆ) தமிழக அரசு மத்திய அரசைக் கேட்ட தொகை ரூபாய் 128 கோடி.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, கடந்த புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மிகவும் அதிகமாகப் பாதிப்பு ஏற்பட்டது இராமநாதபுரம் ஜில்லாவின் பகுதி. அந்தப் பகுதிக்கு அந்தக் குழு வந்ததா? அந்தக் குழு எந்த அளவிற்கு அந்தப் பகுதியின் நிவாரண வேலைகளுக்கு ரெகமண்ட் செய்தது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது புயலால் பாதிக்கப்பட்ட அந்தப் பகுதிகளில் எந்த வேலையும் சரியான முறையில் நடைபெறவில்லை, ரோடு கூட செப்பனிடப் படவில்லை. எந்த அளவிற்குத் தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டது? குழு எவ்வளவு சிபார்சு செய்தது? அதன் விளைவுகள் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, கேள்வி 1977—ஆம் ஆண்டைப்பற்றியது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் இப்பொழுது கேட்பது 1978 ஆம் ஆண்டு புயலைப்பற்றி என்று கருதுகிறேன். (குறுக்கீடு) இங்கே இருக்கின்ற கேள்வி 1977 ஆம் ஆண்டைப்பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் இப்பொழுது கேட்பது 1978 ஆம் ஆண்டைப் பற்றியது என்று நினைக்கிறேன். இருந்தாலும், 1978 ஆம் ஆண்டிலே மத்தியக் குழு வந்தது. வந்தபொழுது, இராமநாத புரம் மாவட்டம், நீலகிரி, தஞ்சை மாவட்டங்களுக்குச் சென்று ஆய்வு செய்தது. இன்றைக்கு நம்முடைய அரசு கேட்ட தொகை 22.84 கோடி. கொடுக்கப்பட்ட தொகை 10.11 கோடி. இந்தப் பணத்தைக்கொண்டு ஆய்வு வேலை நடந்து கொண்டிருக் கிறது. அதுமட்டுமல்ல அந்தப் பணம் போதவில்லை என்று மாநில அரசும் அதற்காக ஒதுக்கி வேலைகள் நடந்து கொண்டிருக் கிறது.

(முற்பகல் 9.20)

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, புயல், வெள்ள காலத்திலே, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு மேடிட்ட நிலங்களைச் சர்க்கார் செலவிலேயே செம்மைப்படுத்தி, சாகுபடிக்கு லாயக்கானதாக ஆக்கிக் கொடுப்பது என்று அரசு ஜி. ஓ. போட்டது அதன்படி, மேடிட்ட நிலங்களைச் சீர்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அதே சமயத்திலே ஒரு பகுதியைப் பள்ளம் செய்தால் தான் இன்னொரு பகுதி மேடாக முடியும். மேட்டைச் சரி செய்யத்தான் ஜி. ஓ. வில் இடமிருக்கிறது, பள்ளத்தைச் சரி செய்ய வழியில்லையென்று சொல்கிறார்கள். விவசாயத் துறை அமைச்சரிடம்கூட இதுபற்றி சொல்லப்பட்டுள்ளது. இதனால், 100 பேர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, அந்த ஜி. ஓ. வை மாற்றி, மேடிட்ட நிலங்களோடு பள்ளமான பகுதிகளையும் சீர் செய்ய, அரசு ஆவன செய்யுமா? ஜி. ஓ. வை மாற்றுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே. போடப்பட்ட ஜி. ஓ. வை மாற்றத் தேவையில்லை. போடப்பட்ட ஜி. ஓ. நிச்சயமாக தேவைப்படுகிறது. ஆனால், இதற்காக புதிதாக ஜி. ஓ. போட வேண்டுமென்று உறுப்பினர் கேட்பதாக நான் அறிகிறேன். அப்படி பள்ளமான பகுதிகளானாலும், விவசாயிகள் பாதிக்கப்பட்டால் அதற்கு அரசு உதவி செய்யும். ஆனால், இதிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சிறு விவசாயிகளுக்கும், பெரிய விவசாயிகளுக்கும் பார்த்து செய்திருக்கிறது இந்த அரசு. இந்த அரசு வந்த பிறகு தான் பெரிய விவசாயிகள் சங்கடப்பட்டாலும் கேணி வெட்ட, விசையேற்றம் அமைக்க கடன் கொடுத்து, 10 12 வருஷங்களிலே அவர்கள் அதைத் திருப்பிக் கொடுக்கலாம் என உத்தரவு போட்டது, முதன் முதலாக இந்த அரசுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 403......

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருக்கலாம், அப்படி ஒவ்வொன்றையும் வலியுறுத்திக் கேட்டால் அவையை எப்படி நடத்த முடியும்.

(திரு. சதாசிவம், திரு. உச்சி நின்று கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மாரிமுத்து கேள்வி கேட்டுவிட்டார். கேள்வி எழுப்பப்பட்ட நேரம், 1978-ம் ஆண்டு அப்பொழுதே இது வந்திருந்தால், இவ்வளவு துணைக் கேள்வி





களுக்கு இடம் இல்லை. அடுத்த கேள்வி அதை ஒட்டித்தான் வருகிறது. சதாசிவமும், உச்சியும் அதில் கேள்வி கேட்கலாம்.

## கோவை மாவட்டத்தில் பெருமழை வெள்ளத்தால் ஏற்பட்ட சேதம்

* வினா எண். 403 திரு. கு. ரமணி ; மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டத்தில் நவம்பர் முதல் வாரத்தில் பெய்த பெருமழை வெள்ளத்தால் சேதம் ஏற்பட்டதன் மதிப்பென்ன? இறந்தோர் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அரசு எடுத்த நிவாரண நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ;

(அ) மற்றும் (ஆ) விவர * அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, கடந்த 1978 நவம்பரில் பெய்த பெரு மழையின் காரணமாக, வெள்ளம் அடித்து, ஏராளமான குடிசைகளும் நாசமாகி, அதில் உயிரிழப்பு ஏற்பட்டு ஒரு கோரமான நிகழ்ச்சி நடந்தது. அந்த நிகழ்ச்சியிலே பாதிக்கப்பட்ட பகுதிகளில், குறிப்பாக என் தொகுதியிலே கோவை நகரம் (கிழக்கு) தொகுதியிலே டாட்டாபேட், காந்திபுரம், பாப்பநாயக்கன்பாளையம் போன்ற பகுதிகளில் குடிசைகளை இழந்தவர்களுக்கு வெறும் ரூ.80 பணம் கொடுக்கப்பட்டு விடப்பட்டுள்ளது. அதுசம்பந்தமாக, அரசுக்கு பல விண்ணப்பங்களை அனுப்பியும் ஆரம்பத்தில் கொடுத்த தொகையை முதலமைச்சரவர்கள் அறிவித்தபடி, ரூ.200 ஆகக் கொடுக்கச் சொல்லியும் கூட, இதுவரையில் கொடுக்கப்படவில்லை. அந்த விவரங்களை மறுபடியும் அமைச்சருக்கு அனுப்பினால் கவனித்து நடவடிக்கை எடுப்பார்களா? ரூ. 200 குடிசை இழந்தவர்ளுக்கு குடிசை போட பணம் கொடுப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, இதுவரையிலே. புயலால், வெள்ளத்தால் குடிசை இழந்தவர்களுக்கெல்லாம் ரூ.60 தான் கொடுக்கப்பட்டது. அது இப்பொழுது ரூ.100 ஆகியிருக்கிறது. 1977—ஆவது ஆண்டில் அடித்த புயலின்போது மட்டும் தனி ஜி.ஓ. போட்டு ரூ.200 கொடுக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு நடைமுறையிலே இருப்பது ரூ. 100 தான். அதைக்

[ *250—ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

கொடுத்திருப்பார்கள் என்று கருதுகிறேன். இல்லாவிட்டால், அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் ஆவன செய்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, அவையிலே வைத்திருக்கிற விவர அறிக்கையிலே இறந்தவர் எண்ணிக்கை மொத்தம் 8 என்று இருக்கிறது. ஆனால் 4 பேருக்குத்தான் ரூ.1,000 கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு குடும்பத்தில் இரண்டு பேர் இறந்தாலும் வெறும் ரூ.1,000 தான் கொடுக்கப்படும் என்பது நியாயம் அல்ல. 98 கிராமங்களில் பாதிக்கப்பட்ட குடிசைகள் 6,508. ஒவ்வொரு குடிசையை இழந்தவருக்கும் ரூ. 100 வீதம் கொடுத்திருந்தால் கூட ரூ.6,50,800 கொடுத்திருக்க வேண்டும். ஆனால், கொடுக்கப்பட்டிருப்பது வெறும் ரூ.5,32,325-தான். அதிலிருந்து பல குடிசைகளை இழந்த பலருக்கு அத்தொகை கொடுக்கப்பட வில்லையென்று தெரிகிறது. முன்னர் ரூ.100 கொடுக்கப் பட்டது, அது போதாது என்றுதான் ரூ.200 ஆக மாற்றப் பட்டது. அதுவும் கொடுக்கப்படவில்லை. ஆகவே, இறந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 1000 கொடுத்திருக்கலாம் அல்லவா? குடிசைசள் ஒவ்வொன்றுக்கும் ரூ.200 கொடுத்திருக்கலாம் அல்லவா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னேன் 60 ரூபாயாக இருந்தது இந்த அரசு வந்து 100 ரூபாயாக உயர்த்தியது என்று. எதிர்பாராத வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப் பட்ட குடிசைகளுக்கு 200 ரூபாய் தரப்படலாம் என்பது தனியாக போட்ட அரசு ஆணை, அது நடைமுறையில் உள்ள அரசு ஆணை அல்ல. ஆளுக்கு 100 ரூபாய் கொடுத்திருந்தால் 6 லட்சம் ரூபாய் வந்திருக்கலாமே எனறு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். குடிசைகள் பாதிக்கப்பட்டதற்காக பணம் கொடுக்கிற போது பூராவும் அழிந்திருந்தால் அதற்கு 100 ரூபாய், பாதி அழிந்திருந்தால் 50, 60 என்ற முறையில் வருவாய்த் துறை அதை பகிர்ந்திருக்கும் என்று கருதுகிறேன். அரசு கஞ்சத்தனமாக இல்லாமல் எல்லாப் பணத்தையும் வாரி இறைத்து விட்டால் என்ன ஆகும் என்பது எல்லோருக்கும் தெரியும். குடும்பத்திற்கு ஆயிரம் என்று அரசு ஆணையில் இருக்கிறது. அப்படி குடும்பத்திற்கு ஆயிரம் என்கிற போது ஒரே குடும்பத்தில் 2 பேர் இறந்து போயிருந்தால் ரூபாய் ஆயிரம் மட்டும்தான் கொடுக்கப் பட்டிருக்கும். அது கூட முதலில் குடும்பத்தில் இறந்தவர்கள் அந்த குடும்பத்திற்கு வருவாய் தேடி தரும் நபராக இருந்தால் தான் கொடுக்க வேண்டும் என்று இருந்தது. ஆனால் அதை மாற்றி, வெள்ளத்தால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டபோது இறந்தவர் அந்த குடும்பத்திற்கு வருவாய் தேடித்தரும் தலைவன்





ஆகவோ, அல்லது தலைவியாகவோ இருந்தாலும், இல்லா விட்டாலும் கொடுக்க வேண்டும் என்று அரசு ஆணை மூலம் மாற்றப்பட்டது. இது கஞ்சத்தனம் ஆகாது என்று நினைக்கிறேன்.

திரு. செ. சதாசிவம் : தலைவர் அவர்களே, இந்த வெள்ளத்தாலும் புயலாலும் என்னுடைய தொகுதியிலே, குடகனாறு அணை உடைந்ததன் காரணமாக அதன் கீழ் பகுதியிலே அதிகமான பகுதி பாதிக்கப்பட்டது. அந்தப் பகுதியிலே 30 நபர்கள் இறந்து போயிருக்கின்றனர். கிட்டத் தட்ட 17 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அந்தப் பகுதியிலே இருக்கின்றனர். அவர்களிலே 2 பேருக்குத்தான் ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. சில குடும்பங்களில் அதன் தலைவர் ஆக இருந்து இறந்தவர்களுக்குக் கூட இவ்வுதவித் தொகை கொடுக்கப்படவில்லை. அதை அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த வெள்ளத்தாலும், புயலாலும் நிலங்கள் மணல் மேடிட்டு மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. அவைகளில் பெரும் பகுதி நிரவப்பட்டுள்ளன. சில நிலங்கள் நிரவப்படவில்லை. அந்த மண்மேடுகளை அப்புறப்படுத்தவும் ஆவன செய்யப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட தகவல்கள் என்னிடம் இப்போது கைவசம் இல்லை. தனிக் கேள்வியாக போட்டால் உடனடியாக அரசு ஆவன செய்யும் என்று தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் கவனிக்க வேண்டும். மூலக் கேள்வி கோவை மாவட்டத்தைச் சேர்ந்தது. மற்ற மாவட்டங்களைப்பற்றிய கேள்விகளுக்கு அமைச்சரிடம் குறிப்பு இருக்காது. தனிக் கேள்வியாக போட்டால் நல்லது.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கோவை மாவட்டத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும் கூட, கோவைக்கு பக்கத்தில்தான் நீலகிரி மாவட்டம் இருப்பதால் இந்தக் கேள்வியை கேட்க என்னை அனுமதிக்க வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் Valley View என்னும் இடத்தில் ரோட்டின் மத்தியில் ஒரு பாறை இருக்கிறது. அந்த நெடுஞ்சாலையும் அடிக்கடி பழுதாகிறது. அந்தப் பாறையை நீக்குவதாக முதலமைச்சர் சொன்னார். மத்தியக்குழுவும் நீக்குவதாக

சொன்னது. ஆனால் அந்த நெடுஞ்சாலையை பழுது பார்க்கும் வேலைகள் நின்றிருப்பதாகத் தெரிகிறது. அதை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே. நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அதை முன்னரே தனியாக கவனித்து அதிகமான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு அதிகமான பணம் என்பதை பொறுத்த வரையில் என்னிடத்தில் கணக்குகள் இல்லா விட்டாலும், ஏறத்தாழ 130 லட்சம் அதற்காக ஒதுக்கப்பட்டு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. கு. ரமணி ; தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குடிசைகள் கட்டுவதற்கு 100 ரூபாய் கொடுக்கும்படி அரசு ஆணை பிறப்பித்திருப்பதாக சொன்னார். ஒரு குடிசையை கட்டுவதற்கு மூங்கிலும் மட்டையும் வாங்கவே அந்தப்பணம் போதாது. இந்த ரூபாயை கொண்டு அவர்கள் எப்படி குடிசையைக் கட்டிக்கொள்ள முடியும். சுவரை சொல்லவில்லை. மூங்கிலும் மட்டைகளுக்குமே இது போதாது என்கிறேன். அதனால், அரசு இந்தப் பணத்தை 200 ரூபாயாக கொடுத்தால் அந்தக் குடும்பங்களுக்கு நல்லது. அல்லது அரசே மூங்கிலையும், மட்டைகளையும் வாங்கி அவர்கள் எல்லோருடைய குடிசைகளையும் கட்டிக் கொடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.30]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, குடிசை வாழ் மக்களிடத்தில் இந்த அரசுக்கும், மற்றவர்களுக்கும், உங்களுக்கும் எந்த அளவிற்கு அக்கறை இருக்கிறது என்பது நன்றாகத் தெரியும். தெளிவாகச் சொல்லப் போனால், யாருடைய நிலத்திலோ யாரோ குடிசை போட்டுக் கொண்டு, கொடுக்கிற பணத்தை நிலத்தின் சொந்தக்காரர்கள் வாங்கிக்கொண்டு இருந்தார்கள். இந்த அரசு அவைகளைக் கண்டுபிடித்து, உதவிப் பணம் கொடுக்கிறபோது யார் அங்கே குடியிருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் அந்தப்பணம், வாடகை பெறுபவருக்கு இல்லை என்பதை சொல்லி இருக்கிறோம். அங்கேயுள்ள குடிசை வாழ் மக்களின் சங்கடமும் எனக்குத் தெரிகிறது. அதே நேரத்தில் எங்களிடத்தில் இருக்கும் பணத்தின் குறைபாட்டையும் கருதவேண்டியிருக்கிறது. அந்த ரூ.100 கொடுப்பது போதாது என்று தெரிந்தாலும், அந்தப் பணத்தை ஒரு உதவிகரமாகத்தான் கொடுக்கிறோம், தனி ஜி.ஓ. போடுவதைப் பற்றி பின்னாலே யோசிக்கப்படும்.



திரு. இ. தமிழரசன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கோவை மாவட்டத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும், கடந்த புயல் வெள்ளத்தின் போது வாணியம்பாடியில் திடீரென்று வெள்ளம் இரவு நேரத்தில் வந்ததால், 7—8 பேர் உயிர் இழந்தார்கள். அந்த 7—8 பேர் குடும்பத்திற்கு உதவி கொடுக்கப் பட்டதா? டெம்பரரியாகக் கொடுக்கப்பட்ட இடத்தில் இருந்து அவர்களுக்கு நிரந்தர இட வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, வாணியம்பாடி பற்றிய தகவல் பூராவும் என்னிடத்தில் இல்லாவிட்டாலும், அதில் இருக்கும் சங்கடங்களை இங்கே சொல்வதற்குக் காரணம், இங்கே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைப்பார்கள் என்று எண்ணத்தில் தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குடிசைகள் போடுகிறபோது தாழ்வான இடத்தில், ஆற்றின் பள்ளமான இடத்தில் போட்டு விடுகிறார்கள். வெள்ளம் வருகிறபோது அது முழுகாமல் எப்படி இருக்கும். உடனே எல்லோரும் வந்து உதவி செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே, நான் அனைவரையும் கேட்டுக்கொள்வது, குடிசைகள் போடும்போது ஆற்றின் பள்ளத்தில் போடாமல், அந்த வகையில் அரசுக்கு உதவி செய்யவேண்டும். சமுதாயத்திற்கு உதவி செய்ய வேண்டும். இன்று வாணியம்பாடியில் நடந்ததையெல்லாம் நேரில் பார்த்தவர்கள்கூட அந்த ஆற்றுப் பள்ளத்தில் புதிதாக குடிசை போட்டு இருக்கிறார்கள். அங்கே அவ்வளவு பேர் உயிர் சேதம் அடைந்ததைப் பார்த்தவர்கள்கூட, அந்தச் சங்கடங்களை எல்லாம் நேரில் தெரிந்தவர்கள்கூட அப்படி செய்து இருக்கிறார்கள். வேறு இடத்தில் போடுவார்கள் என்று சொன்னால் 2 பர்லாங்கு, 3 பர்லாங்கு தூரம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்தக் காலத்தில் 2 பர்லாங்கு, 3 பர்லாங்கு நடப்பது ஒன்றும் கஷ்டம் இல்லை. இதை இங்கே நான் சொல்வதற்குக் காரணம், தமிழகம் பூராவும் இருக்கும் பொது மக்களோடு தொடர்புள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அரசுக்கும், சமுதாயத்திற்கும் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 404–405 ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம்.

அறநிலையக் கட்டட வாடகைதாரர்கள்.

*வினா எண். 404—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அறநிலையக் கட்டிட வாடகைதாரர் சங்கத்தின் 25-9-1977 மாநில மாநாட்டு தீர்மானங்கள் அரசுக்கு வந்துள்ளதா?

[1979 மார்ச் 15

(ஆ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) ஆம்.

(ஆ) ஓர் விவர அறிக்கை * அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

*வினா எண்.405— திரு. கு. ரமணி : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) இந்து அறநிலைய ஆட்சித்துறையினர் நியாய வாடகைக்குழு ஒன்றை அமைத்து கோவில்களில் உள்ள கடைகள், கட்டிடங்கள், வீடுகளுக்கு வாடகை உயர்த்தப்பட்டது உண்டா?

(ஆ) ஆம் எனில், அந்த வாடகை உயர்வு முன் இருந்ததை விட எவ்வளவு உயர்த்தப்பட்டது?

(இ) இந்த வாடகை உயர்வு என்ன அடிப்படையில் செய்யப்பட்டது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) பொதுப்பணித்துறை பின்பற்றும் விதிமுறைகளின் அடிப்படையில் நியாய வாடகைக் குழுவால் ஒவ்வொரு கட்டிடத்திற்கும், ஊர், இடம் உபயோகம் இவைகளுக் கேற்றவாறு நிர்ணயிக்கப்படுகிறது. முன்பு இருந்த வாடகையை விட, சுமார் அரை பங்கு முதல் $1\frac{1}{2}$ பங்குக்கு மேல் போகாமல் வாடகை உயர்வு செய்யப்படுகிறது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறையைச் சேர்ந்த இடங்களில் கட்டிடங்கள் கட்டிக்கொண்டும், கோவிலுக்குச் சொந்தமான இடங்களில் வியாபாரம் செய்யும் சிறு வியாபாரிகளுக்கு பல மடங்கு வாடகை விதிக்கப்பட்டு, நிர்பந்தமான முறையில் வசூலிக்கப்படுவதாக கூறப்படுகிறது. அந்த கோவில் நிலையங்களும் ரெண்ட் கன்டிரோல் ஆக்டின் கீழ் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா? கோவில்களுக்கும், கடவுள்களுக்கும் ரெண்ட் கன்டிரோல் ஆக்ட் பொருந்தும் என்று. அமைச்சர் அறிவிப்பார்களா என்று என் முதல் கேள்வி மூலமாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

[ * 251 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]



1979 மார்ச் 15]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, கடவுள் என்றால் சட்டத்திற்குக் கட்டுப்பட மாட்டாரா என்று மாண்புமிகு உறுப்பினர் வினா எழுப்பி இருக்கிறார்கள். நான் அவர்களுக்கு இன்னொரு வினாவின் மூலமாக விடைசொல்கிறேன். கடவுள் சொத்துக்கள் என்றால் எந்தச் சட்ட பாதுகாப்பும் இல்லாமல் யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் அனுபவிக்க அனுமதிக்கப்படவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் விரும்புகிறாரா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சட்டத்தை விட கடுமையான சட்டம் போடும் சக்தி உள்ளவர்கள் கடவுள். ருத்ராமூர்த்தி என்ற பெயரே அவர் எப்படிப்பட்டவர் என்பதைக் காட்டுகிறது. மகாகாளி என்கிற பெயரைக் கேட்கிற போதே அவர் எவ்வளவு சக்தி படைத்தவர் என்பது தெரிகிறது. அப்படிப்பட்ட கோவில்களில் கடைகளை வைத்துக்கொண்டு குறைந்த வருமானத்தில் அங்கே வியாபாரம் நடத்திக்கொண்டு இருப்பவர்களுக்கு, அவர்களுடைய வாடகை குறைக்கப்படுமா? அவர்களுக்கு 50—ல் இருந்து 150—சதம் வாடகை உயர்த்தப்பட்டு இருக்கிறது என்று சொல்கிறார்கள். அது நியாயமா, இவ்வளவு உயர்த்தலாமா? இவ்வளவு வியாபாரம் என்றால் இவ்வளவு வாடகை என்று குறிக்கோள் வைத்துக்கொண்டு அங்கே உள்ளவர்களுக்கு வாடகையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, 50 சதவீதம் முதல் 150 சதவீதம் வரை உயர்த்தப்பட்டிருக்கிறது என்று அந்த பர்சன்டேஜை பற்றிச் சொன்னார்கள். அப்படிச் சொல்லும்போது ஏதோ அதிகமாக உயர்த்திவிட்டார்கள் என்று தோன்றும். ஆனால் இதுவரையில் 2 ரூபாய், 3 ரூபாய், 5 ரூபாய், என்று வாடகை தந்துகொண்டிருந்தார்கள். அதை உயர்த்தி இடத்திற்குத் தகுந்தாற்போல் $7\frac{1}{2}$ ரூபாய், 10 ரூபாய், $12\frac{1}{2}$ ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறார்களே தவிர பெரிய அளவுக்கு அல்ல. அதுவும் வியாபாரத்தின் தன்மைக்கு ஏற்ப, கடை அமைக்கப் பட்டிருக்கிற இடத்திற்கு ஏற்ப, அதற்கு பக்கத்தில் தனியாருக்கு என்ன வாடகை கொடுக்கப்படுகிறதோ அதை ஒட்டித்தான் குறைந்தளவு வாடகை வசூல் செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் மதுரை புது மண்டபத்தில் இருக்கிற தையல் கடைக்காரர்களுக்கு முடியுமானால் மிகக் குறைந்த அளவு வாடகைதான் உயர்த்த வேண்டும்; இல்லாவிட்டால் அவர்களால் எவ்வளவு தரமுடியுமோ அதை வாங்குங்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அறநிலையத் துறைக்குச் சொந்தமான கட்டடங்களுக்கு மிகக் குறைந்த வாடகை வசூல் செய்யப்படுவதால் அறநிலையப் பணிகளைச்

சரியாகச் செய்வதற்கு போதுமான வருவாய் கிடைக்காமல் இருக்கிறது என்று கடவுள் மீது பக்தி உள்ளவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்; அதைத் தவிர்க்க இந்த அரசு, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்ததைப்போல வசதியற்ற ஏழை எளியவர்களை விட்டு விட்டு, அதிக வாடகை தர சக்தி படைத்த பெரிய கடைக்காரர்களிடம், பெரிய வியாபாரிகளிடம் அதிக வாடகை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா? மாயூரம் போன்ற இடங்களில் பெரிய பெரிய வியாபாரிகள் கடை வைத்திருக்கிறார்கள். இராஜராஜ சோழன் காலத்தில், இராஜேந்திர சோழன் காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட வாடகையைத்தான் இன்னமும் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இதை தேவையான அளவுக்கு உயர்ந்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். திரு. ரமணி அவர்கள் சிறிய, ஏழை எளிய கடைக்காரர்களையும் வியாபாரிகளையும் அதிக வாடகை விதிப்பிலிருந்து விட்டுவிட வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள்மீது தாங்க முடியாத அளவுக்கு அதிக வாடகைப் பளுவை சுமத்த வேண்டுமென்ற நோக்கத்தில் அறநிலையத்துறை வாடகை விதிக்கவில்லை. இப்போது நடைபெறுகிற காரியம் எப்படி இருக்கிறது என்றால் திரு, கிட்டப்பா அவர்கள் குறிப்பிட்டதைப்போல நீண்ட காலமாக இந்தச் சொத்துக்களை முறையின்றி அனுபவித்துக்கொண்டிருக்கிற மிகப்பெரும் வியாபாரிகள், இலட்சாதிபதிகள் எல்லாம் இருக்கிற வாய்ப்பைப் பயன்படுத்தி, ஏழை எளியவர்களின் பெயரால் அவர்கள் இந்த நிழலுக்குள்ளே வந்து உட்கார்ந்துகொண்டு இந்தச் சொத்துக்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது கண்காணிப்பு ஏற்படுத்தத்தான் இந்தமுறையில் வாடகை மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அரிய ஆலோசனையை ஏற்றுக்கொண்டு அறநிலையத்துறை மிகுந்த ஜாக்கிரதையாக இருந்து யார் யார் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து உரிய நடவடிக்கை எடுக்கும். இன்னொரு வேண்டுகோள். உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்த விவரங்களை, யார், யார் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அரசுக்கும் அறநிலையத் துறைக்கும் தெரிவித்தால் வசதியாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. சோ. அழகர்சாமி:</u> தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறும்போது அதிகமான வருமானம் வரக்கூடியவர்கள், பெரிய பெரிய வியாபாரிகள் எல்லாம் அறநிலைய சொத்துக்களை அனுபவித்துக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படிப் பட்டவர்களிடம் நீங்கள் பல மடங்கு வசூல் செய்து கொள்வதில் எங்களுக்கு ஆட்சேபமில்லை. ஆனால் இன்றைக்கு சிறு சிறு கடைகாரர்கள், சிறிய வியாபாரிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பழைய வாடகையே விதிக்கப்படுமா? அதோடு, வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தில் நியாயமான வாடகை நிர்ணயம் செய்ய விதி இருக்கிறது. அதன்படி செய்யலாம். அறநிலையத் துறையின் கட்டடங்களை அந்த விதியின்கீழ் கொண்டுவர என்ன தயக்கம்? அந்தச் சட்டத்தின் கீழ் கொண்டு வராததால் பலரிடம் அதிகாரிகள் லஞ்சம் வாங்கும் சூழ்நிலை கூட ஏற்படுகிறது. அதையெல்லாம் தடுக்கும் வகையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?





<u>மாண்புமிகு திரு, ஆர். எம். வீரப்பன் :</u> தலைவரவர்களே, இப்படிப்பட்ட சொத்துக்களை எல்லாம் ஒரு காலத்தில் தர்ம சிந்தையுடன் முன்னோர்கள் எழுதிவைத்துவிட்டுப் போனார்கள். அதை இன்றைக்கு அனுபவித்துக்கொண்டிருக்கிறவர்கள் அந்த உணர்வை மதிக்காமல் எந்த அளவுக்கு சுரண்டலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறிய வியாபாரிகள், ஏழை எளிய வியாபாரிகளைப் பற்றிச் சொன்னார்கள். சில இடங்களில் அவர்கள் அதிக வாடகைத் தர தயாராக இருக்கிறார்கள். ஆனால் வருமானவரி, விற்பனை வரி கட்டக்கூடிய பெரிய பெரிய வியாபாரிகள் அவர்களை தடுத்து நிறுத்தி, குடியிருப்பு வாடகைதாரர் சங்கம் என்று ஒரு அமைப்பை ஏற்படுத்தி, அந்த சிறு சிறு வியாபாரிகளை பட்டியலில் சேர்த்து, அவர்கள் போர்வையில் இந்த பெரிய வியாபாரிகள் நுழைந்துகொள்கிறார்கள். இதை நான் மதுரை புதுமண்டபத்தில் நேரிடையாகக் கண்டேன். யார் யாருக்கு எந்தெந்த இடத்தில் எந்த அளவுக்கு வாடகை விதிக்கலாம் என்பதை எல்லாம் கவனத்திற்கொள்ள வேண்டியிருப்பதாலும், அறநிலையங்களுக்கு இந்த சொத்துக்கள் சேர்ந்த முறையைக் கருத்திற்கொண்டு பாதுகாக்க வேண்டியிருப்பதாலும் வாடகைக் கட்டுப்பாடு சட்டத்திலிருந்து அறநிலையக் கட்டடங்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, நியாயமான முறையில் வாடகையை உயர்த்தும்போது வழக்கறிஞர்களுடைய துணை கொண்டு 'ஸ்டே' வாங்குகிறார்கள்; அறநிலையத் துறைக்கு வரவேண்டிய வருமானத்தை தடை செய்கிறார்கள். வாடகையும் தருவதில்லை, காலியும் செய்வதில்லை. இந்த முறைகளை மேலும் அனுமதித்தால் அறநிலையத் துறையில் இருக்கும் இந்த சொத்துக்கள் நாளாவட்டத்தில் இருந்த இடம் தெரியாமல் அழிந்துவிடும். அந்த அழிவிலிருந்து இந்தச் சொத்துக்களைப் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் வாடகைக் கட்டுப்பாடு சட்டத்திலிருந்து விலக்களிக்கப் பட்டிருக்கிறது.

[1979 மார்ச் 15

[முற்பகல் 9.40]

திரு. இரா. தாமரைக்கனி ; பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் வாடகை கூட்டுவது, குறைப்பது என்பது பற்றி அமைச்சர் அவர்களிடம் கேள்வி கேட்டார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்களும் பதில் சொன்னார்கள். ஆனால் ஸ்ரீவல்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலுக்குச் சொந்தமான கட்டிடங்களில் கடைகள் வைத்திருப்பவர்கள் வாடகையே கொடுப்பது கிடையாது. கிட்டத்தட்ட 8,10 வருடங்களாகக் கொடுப்பது கிடையாது. சம்பந்தப்பட்ட கோயில் மானேஜரைக் கவனித்துவிட்டால் போதும், கொடுக்க வேண்டாம் என்ற நிலை ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே இந்த நிலைமையைப் போக்குகின்ற வகையில் அவர்களிடமிருந்து வாடகையை வசூல் பண்ணுவதற்கு ஏற்பாடு செய்து அதன் மூலம் அவர்களுடைய சொத்துக்களை ஜப்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே. நான் முன்னாலே சொன்ன பதிலுக்கு ஆதாரமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் விவரங்களைத் தந்துகொண்டிருக்கிறார்கள். இவ்வாறு நடைபெற்று வருகின்ற அநீதியைப் போக்குவதற்கு வேகமான கண்டிப்பான நடவடிக்கைகள் அரசினரால் கடந்த 6, 7 மாத காலமாக எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய சிறைச்சாலைகளில் சிற்றுண்டி சாலைகள்

*வினா எண். 406—திரு. என். கிட்டப்பா ; மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) மத்திய சிறைச்சாலைகளில் சிறை கைதிகளுக்கென சிற்றுண்டி சாலைகளை அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த சிறைச்சாலைகளில்?

THE HON. THIRU K. NARAYANASWAMY :

(a) Yes.

(b) At present, for the benefit of the prisoners, canteens have been functioning in each of the four Central Prisons at Coimbatore, Madurai, Madras and Salem.



1979 மார்ச் 15] [Thiru K. Narayanaswamy]

Similar canteens for the benefit of the prisoners in each of the remaining five prisons viz., Central Prisons, Tiruchirapalli, Palayamkottai, Vellore and Cuddalore and also in the State Prison for Women, Vellore will be opened as and when funds are available in the Staff canteen fund for diverting it for this purpose.

திரு. என். கிட்டப்பா ; தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் நான்கு மத்திய சிறைச்சாலைகளில் சிற்றுண்டிச் சாலைகள் நடைபெற்று வருகின்றன என்று குறிப்பிட்டார்கள். தமிழகத்திலுள்ள மற்ற மத்திய சிறைச்சாலைகளிலும் இத்தகைய சிற்றுண்டிச் சாலைகளை அமைக்க அரசு ஆவன செய்ய முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்? அத்துடன் நடைபெறுவதாகச் சொல்லப்படும் சிற்றுண்டிச் சாலைகள் சிறைத் துறையினரால், நடத்தப்படுகிறதா அல்லது கூட்டுறவு முறை போன்ற வகையிலோ அல்லது வேறு வகையிலோ கைதிகள் மூலமாக நடத்தப்படுகிறதா அல்லது கான்ட்ராக்டர்களின் மூலமாக நடத்தப்படுகிறதா என்பதை அறிவிக்க இயலுமா?

Hon' the THIRU K. NARAYANASWAMY : Two supplementary questions have been fired at me. As for the first question, the Government are seriously considering the establishment of such canteens in all the Central Prisons. May I also add for the satisfaction of the Hon'ble Member Thiru Kittappa that with regard to the Jail for Women at Vellore the Government are contemplating the establishment of a canteen for them also and even at Pudukottai Borstal School also the Government are considering establishing one canteen. Then as regards the second question of the Hon'ble Member, whether it has been running on co-operative lines, I may submit that the source for the funds that have been invested in running the canteen for the prisoners is from the funds available in the Staff Canteen Fund in the respective Central Prisons. Therefore there is no question of running the canteen on co-operative lines. But it has been under the charge and supervision of a Welfare Officer, not by the prison officers.

திரு. என். கிட்டப்பா ; தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சிற்றுண்டிச்சாலைகள், சிறைச்சாலைகளிலே உள்ள வெல்ஃபேர் ஆபீஸர்கள் மூலமாக நடைபெற்று வருகின்றன என்று சொன்னார்கள். அங்கே இருக்கின்ற வெல்ஃபேர் ஆபீஸர்கள், வெல்ஃபேர் ஆபீஸர்களாகவே நடந்து கொள்வதில்லை. அவர்கள் எந்தெந்த வகையிலே தொல்லை தர முடியுமோ அந்தந்த வகையிலே தொல்லை தந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த சிற்றுண்டிச் சாலைகளைக் கவனிக்கின்ற பொறுப்பை வேறு வகையிலே மாற்றுவதற்கு அரசு முன்வருமா? அடுத்து மாண்புமிகு அமைச்சரவர்கள் இன்னும் சில

மத்திய சிறைச்சாலைகளில் சிற்றுண்டிகள் துவக்க இருப்பதாகச் சொன்னார்கள். என்னைப் போன்றவர்கள் எல்லாம் திருச்சி மத்திய சிறைச்சாலைக்குத்தான் செல்லவேண்டியிருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் திருச்சி மத்திய சிறைச்சாலையிலே சிற்றுண்டிச்சாலை ஒன்றை அமைத்திட விரைவாக ஆவண செய்ய முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE Hon. Thiru K. NARAYANASWAMY: If there are any lapses against the welfare Officers the Honable Member is welcome to give a list of the defects which will be rectified by the Government. So far as the establisment of a canteen at Trichi is concerned, the Government will take early steps to do it.

திரு. வி. கே. கோதண்டராமன்: இந்த சிற்றுண்டிச் சாலைகள் கைதிகள் சாப்பிடுவதற்கா அல்லது கைதிகளைப் பார்ப்பதற்கு வரக்கூடியவர்கள் சாப்பிடுவதற்கா அல்லது மற்றவர்கள் சாப்பிடுவதற்கா அல்லது வார்டர்கள் சாப்பிடுவதற்கா? காரணம், சிற்றுண்டிச்சாலை ஜெயிலுக்கு வெளியே இருக்கிறது, உள்ளே இல்லை. அப்படி உள்ளே இருந்தாலும் கைதிகள் சாப்பிடமுடியுமா? அவர்கள் கையில் காசு கொடுப்பதில்லை. அப்படியிருக்கும்போது சிற்றுண்டிச் சாலைகள் ஆரம்பித்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். லேசுபாசாக சொல்லிவிட்டால் போதாது. வெளியே இருந்து வருகிறவர்கள் தின்பதற்குத்தான் இருக்கிறதே தவிர கைதிகள் சாப்பிடுவதற்காக ஜெயிலுக்குள் சிற்றுண்டிச் சாலை அமைக்கப்பட்டிருக்கிறதா, அதற்கான வசதி உண்டா?

THE Hon. Thiru K. NARAYANASWAMY: It is only for the prisoners and not even for the members of the jail staff.

திரு. ரா. கிருஷ்ணன்: சில பாக்டரிகளில் குறைந்த விலையில் சில ஐட்டங்கள் கொடுப்பதுபோல் சிறைச்சாலைகளில் இருக்கக் கூடிய கான்டீன்களிலும் குறைந்த விலையில கொடுப்பதற்கு, அதற்கான நஷ்டயீட்டை அரசு ஏற்றுக்கொண்டு கொடுக்கக் கூடிய விதத்தில் குறைந்த விலையில் பண்டங்களைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? பாளையங்கோட்டையிலும் அப்படிப்பட்ட ஒரு கான்டீனுக்கு ஏற்பாடு செய்யப்படுமா?

THE Hon. Thiru K. NARAYANASWAMY: The articles that are sold, are purchased at wholesale prices and with a margin of 10% they are sold. So far as the canteen for Palayamkottai is concerned certainly the Government will take necessary measures to establish a canteen at Palayamkottai also,





திரு. அ. செல்வராசன்: சென்னை மத்தியச் சிறைச் சாலையைப் பொறுத்தவரையில்—அங்கே நான் ஒரு ஆண்டுக் காலம் மிசாக் கைதியாக இருந்திருக்கிறேன் — அங்கே ஜெயிலுக் குள்ளே எந்தவிதமான கான்டீனும் இல்லை. அப்படி ஒரு வேளை உள்ளேயே இருந்தாலும் அங்கே கைதிகளுக்கு இடம் தருவதில்லை. எனவே இந்த அரசு இனிமேலாவது உள்ளே இருக்கக்கூடிய கைதிகளுக்கு அந்தச் சலுகைகளைச் செய்துதர முன்வருமா?

THE Hon. Thiru K. NARAYANASWAMY: If the Hon'ble Member pleased to give the date of his release from MISA imprisonment, I would give a satisfactory answer for this question.

## முன்னாள் இராணுவ வீரர் முதலியோர் பிள்ளைகளுக்குப் படிப்புதவித் தொகை.

வினா எண். 407 திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1977–78–ம் ஆண்டில் தமிழ் நாட்டில் இராணுவ வீரர்கள், முன்னாள் இராணுவ வீரர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள், அகதிகள் இவர்களுடைய பிள்ளைகள் எத்தனைப் பேர்களுக்கு பள்ளிக் கல்வி படிப்பு உதவித் தொகை வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

780 இராணுவ வீரர்களின் குழந்தைகள். 2,814 முன்னாள் ராணுவ வீரர்களின் குழந்தைகள், 24 விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகள், 404 பர்மா அகதிகளின் குழந்தைகள், 294 இலங்கை அகதிகளின் குழந்தைகள் ஆகியோருக்கு 1977–78ம் ஆண்டில் பள்ளிக் கல்வி படிப்பு உதவித் தொகை வழங்கப் பட்டது. 1977–78ல் இவைகளின் மொத்த மதிப்பு ரூ. 2,15,696·65.

திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னாள் இராணுவ வீரர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள், அகதிகள் இவர்கள் பிள்ளைகளுக்கு அளிக்கப்படுகிற கல்விச் சலுகைகள்பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதே போல் உடல் ஊனமுற்றோர், விதவைகள் ஆகியோரது குழந்தைகளுக்கும் இத்தகைய சலுகைகள் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதற்கு தனிக் கேள்வி போடவேண்டும்.

[1979 மார்ச் 15

[முற்பகல் 9·50]

திரு. வி. கே. கோதண்டராமன்: ஐயா, இந்த ராணுவ வீரர்கள், முன்னாள் இராணுவ வீரர்கள், போராட்ட வீரர்கள், அகதிகள் இவர்களுடைய குழந்தைகளுக்கு எல்லாம் கல்வி படிப்பதற்காக உதவி தொகை கொடுத்திருப்பதைப் பற்றி கூறினார்கள். ரொம்ப சந்தோஷம். அது எந்த அளவுக்கு கொடுக்கப்படுகிறது என்பது வேறு விஷயம். முன்னாள் ராணுவ வீரர்களின் குழந்தைகளுக்கு உத்தியோகங்கள் வழங்குவதில் சலுகைகள் வழங்குவது போல், விடுதலை போராட்ட வீரர்களுடைய குழந்தைகளுக்கும் முன் உரிமை சலுகை வழங்கப்படுகிறதா? இல்லையென்றால் இந்தச் சலுகை அவர்களுக்கும் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இதற்கு தனியாக கேள்வி போடவேண்டும்.

திரு. இரா. முத்தையா: பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலை போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு இந்த சலுகைகள் கொடுக்கப்படுவதைப் போன்று இந்த கல்வி உதவித் தொகை இந்தி எதிர்ப்பு போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு தரப்படுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கா. சுப்ரவேலு: தலைவர் அவர்களே, இந்தக் கல்வித் துறையில் உதவித் தொகை கொடுக்கப்படுவதில், நான் அறிந்த வரையில், நாம் எந்த காரியத்திற்காக கொடுக்க வேண்டும் என்று முயற்சி எடுத்துக் கொள்கிறோமோ அந்தக் காரியத்திற்கு பயன்படுத்துகின்ற அளவுக்கு உரிய காலத்தில் நிச்சயமாக கொடுப்பதில்லை. ஒவ்வொரு ஆண்டின் கடைசி காலத்தில் கொடுக்கப்பட்டு வருகின்ற நிலைமை இருந்து வருகிறது. இதை மாற்றி வருட ஆரம்பத்திலேயே இந்த மாதத்திற்குள் நிச்சயமாக கொடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட ஒரு வரையறை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இந்தக் குறைபாட்டைப் போக்க அரசு முயற்சி எடுக்கும்.

## தனியார் கல்லூரிகளை ஒழுங்குபடுத்தும் சட்டம்.

*வினா எண். 408 திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார:



1979 மார்ச் 15]

(அ) தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குபடுத்தும்) சட்டம் 1976-ல் பிரிவு 38 (1), 21-ன்படி அப்பீல் செய்ய டிரிபூனல் (Tribunal) போடப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லையெனில் கால தாமதத்திற்கு காரணம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) & (ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன்; பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் போட்டு இன்றைக்கு மூன்று ஆண்டுகளாகி விட்டது. இன்னும் ஒரு டிரிபூனல் போடுவது பற்றி அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. ஏற்கனவே கேரளாவிலுள்ள ஒரு கேஸ்-க்கு வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில்-சுப்ரீம் கோர்டில்-கொடுத்த தீர்ப்பில்—A.I.R. 59 page 52, Supreme Court Judgement இதன்படி ட்ரிபூனல் அமைப்பதற்கு எந்தவிதமான தடையும் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பல்வேறு தனியார் கல்லூரிகளில் கல்லூரி ஆசிரியர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டு வருகிறார்கள். ஆகவே ட்ரிபூனல் அமைப்பதற்கு விரைவில் முடிவு எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; இது ஒரு முக்கியமான பிரச்னையாக இருக்கின்ற காரணத்தால் இதை விளக்கமாக சொல்ல விரும்புகிறேன். சென்னையில் ஒரு தனி நீதிபதியையும் அவருக்கு உதவியாக சில அலுவலர்களையும் நியமிக்க ஓர் செயற்குறிப்பை அனுப்பியிருந்தது. தனி நீதிபதி நியமிக்கத் தேவையான வேலைப்பளுவில்லாதக் காரணத்தால், மாவட்டங்களில் பணிபுரியும், மாவட்ட நீதிபதிகளை மேற்கூறிய சட்டத்தின் கீழ் வரும் மேல் முறையீடுகளை பரிசீலிக்க ஆணையிடலாம் என நீதித்துறை கருத்து தெரிவித்துள்ளது. இக்கருத்தினை ஏற்று மீண்டும் உயர்நீதிமன்றத்தின் கருத்து பெறப்பட்டது. உயர்நீதிமன்றம் ஏனைய நீதிபதிகளுக்கு அதிக பணிப்பளு உள்ள காரணத்தால் தனி நீதிபதியை அமைப்பதனை மீண்டும் வலியுறுத்தியது. இதனை அரசு ஏற்றுக் கொண்டது. உயர்நீதிமன்றத்தின் செயற்குறிப்பு பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. தலைமைச் செயலர் இவ்வழக்குகளை வணிகவரி மேல்முறையீட்டு நிதிப் பேராய நீதிபதியிடம் ஒப்புவிக்கலாமா என வணிகவரி மற்றும் அறநிலையத்துறை செயலரைக் கேட்டுக்கொண்டார். வணிகவரி மேல்முறையூட்டு நிதிப் பேராய நீதிபதியிடம் அதிக வழக்குகள் நிலுவையில் உள்ளமையால் இவரிடம் கல்லூரி வழக்குகளை ஒப்படைக்க இயலாது என தெரிவிக்கப்பட்டது. தொழிற் வழக்கு மன்றங்களில் உள்ள நீதிபதிகளுக்கும் வேலை மிக அதிகமாக உள்ளதால் கல்லூரி கல்வி வழக்குகளுக்கு தனி நீதிபதியை

சென்னையில் ஏற்படுத்தலாம் என கருத்து தெரிவிக்கப் பட்டுள்ளது. அனேகமாக விரைவில் இதன் மீது முடிவு எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் ; இப்போது ட்ரிபூனல் அமைக்கப்பட்ட பின்னால் பாதிக்கப்பட்டவர்கள் இதில் முறையிட்டுக்கொள்ள முடியுமா? அப்படி ட்ரிபூனலில் முறையிட்டுக் கொள்ளும்போது, முன்னாலேயே வேலையிழந்தவர்கள் வழக்குப் போட்டால், முன்னாலிருந்தே 'ரெட்ராஸ்பெக்டீவ் எபக்ட்' கொடுத்து வேலை அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

## தேயிலைத் தோட்டப்பகுதிகளில் தெரு விளக்குகள்.

வினா எண். 409 திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

தேயிலைத் தோட்டங்களில் உள்ள தெருக்களுக்கு விளக்குகள் போட தேயிலைத் தோட்ட அதிபர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தும் உத்தேசம் ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஆம். தேயிலை மற்றும் மலைத் தோட்ட நிறுவனங்களில் உள்ள தொழிலா ளர்கள் குடியிருப்புகளுக்கும், தெருக்களுக்கும் தேவையான மின்விளக்கு வசதிகள் செய்து தருவது குறித்து சம்பந்தப் பட்ட தோட்ட உரிமையாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தப்படுகின்றது.

திரு. கே. உச்சி ; தலைவர் அவர்களே, இப்படி போடப் பட்ட சில திட்டங்களில் போட்ட தெரு விளக்குகளும் வீடுகளில் உள்ள விளக்குகளும் எரியாமல் அடிக்கடி ரிப்பேர் ஆகிக் கொண்டிருக்கிறது. ஆகவே இதை நல்ல முறையில் ரிப்பேர் செய்து அவைகள் நிரந்தரமாக எரிவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதிகளிலே இந்தக் குறை பாடுகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்தால், அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களிடம் சொல்லி தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மானிடரிங் செல் என்று ஒன்றிருக்கிறது. அவர்தான் அந்தக் குழுவின் தலைவர்.





திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தத் தேயிலைத் தோட்ட அதிபர்கள் இதற்கு சம்மதித்து இருக்கிறார்கள்? எந்தெந்தத் தோட்டங்களில் இது அமுல்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி தெளிவாக அறிவிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அதோடு, மாஞ்சோலை என்ற தோட்டப் பகுதியிலே லைட் எரிவதில்லை என்பது இந்த அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கேள்விக்கு விடை—178 தேயிலைத் தோட்டங்களில் தெருவிளக்குகள் அமைக்கப்பட வேண்டும். 82 தோட்டங்களிலே பொருத்தியாகி விட்டது. மீதமுள்ள 96 தோட்டங்களில் தெரு விளக்குகள் பொருத்துவதற்குத் தேவை யான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. தேயிலைத் தோட்டங்களைத் தவிர, மற்றத் தோட்டங்கள் 188 இருக்கின்றன. இவற்றில் 25 தோட்டங்களில் தெரு விளக்குகள் போடப் பட்டிருக்கின்றது. மீதமுள்ள 163 தோட்டங்களில் தெரு விளக்குகள் அமைக்கப்பட இருக்கிறது. இரண்டாவது கேள்விக்கு என்னிடம் தகவல் இல்லை.

## நிறுவனங்களின் தமிழ்ப் பெயர்ப் பலகைகள்

* வினா எண். 410— திரு. இரா. முத்தையா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னை நகரிலும், பிற நகரங்களிலும் உள்ள நிறுவனங் களின் பெயர்ப் பலகைகளை தூய தமிழில் இருப்பதற்குரிய ஆணை ஏதேனும் அரசின் சார்பில் அனுப்பப்பட்டு நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : 1977ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் தேதியிலிருந்து தமிழ்நாட்டில் உள்ள கடைகள், நிறுவனங்கள் மற்றும் உணவகங்களில் தமிழில் பெயர் பலகைகள் வைக்கப்பட வேண்டுமென்றும், தமிழைத் தவிர வேறு எந்த மொழிகளில் பெயர் பலகைகள் எழுதப்பட்டாலும் அம்மொழி களில் எழுதப்பட்ட வாசகங்கள் தமிழ் வாசகங்களுக்கு கீழே தான் இருக்க வேண்டும் என்றும் அரசு உத்தரவிட்டுள்ளது.

திரு. இரா. முத்தையா : பேரவைத் தலைவர் அவர்களே, பெயர்ப் பலகைகள் தமிழில்தான் இருக்கவேண்டும் என்ற உத்தரவிட்டதற்கு அரசுக்கு நன்றி. ஆனால், சென்னை போன்ற இடங்களில் இன்னும் பல்வேறு பெயர்ப் பலகைகள் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன. குறிப்பாக, அண்ணா சாலை போன்ற இடங்களில் கிராமப் பகுதியிலே இருந்து மக்கள்

வந்தால், சிற்றுண்டிச் சாலைக்குள் நுழைவதற்குப் பதிலாக, துணிக் கடையிலே நுழைய நேர்கிறது என்று கேள்விப் பட்டேன். எனவே, உடனடியாக அங்கே பெயர்ப் பலகைகள் தமிழில் வைக்கப்பட வேண்டுமென்ற கடுமையான உத்தரவைப் பிறப்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை செயல்படுத்தப்படாத இரண்டு நிறுவனங்களுக்கு 75 ரூபாய் அபராதம் விதிக்கப் பட்டுள்ளது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தகவல்படி இரண்டு, மூன்று தினங்களுக்குள் ஸ்பெஷல் செக் ஏற்பாடு செய்து, தக்க நடவடிக்கைகளை எடுக்க இந்த அரசு ஏற்பாடு செய்யும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலத்திலே, பெயர்ப் பலகைகளிலே தமிழுக்கு முதலிடம் கொடுக்கவேண்டு மென்று ஆணை பிறப்பித்தது. அது தற்போது அமுல்படுத்தப் படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன். ஆனால் மிகவும் வருந்தத்தக்க நிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தனியார் நிறுவனங்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப் பிட்டார்கள். அரசு பேருந்துகளிலேகூட, அண்ணா சாலை என்று பெயர் மாற்றப்பட்டு இவ்வளவு நாட்களாகியும், இன்னும் வழி மவுண்ட் ரோடு என்றுதான் போடப்பட்டிருக்கிறது. நடத்துனர்களும், ஓட்டுனர்களும் மவுண்ட் ரோடு வந்துவிட்டது என்றுதான் சொல்லுகிறார்கள், பேருந்துகளில் அப்படியேதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இலாகாவிற்கு உட்பட்டதைத் தான் நான் சொல்ல வேண்டும். தி. மு. க. ஆட்சிக் காலத்திலே போடப் பட்ட ஆணையைப் பற்றிய தகவல் என்னிடம் இல்லை. 1977ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், 1948 ஆம் ஆண்டு தமிழக கடைகள், மற்றும் நிறுவனங்கள் விதியையும், 1959ஆம் ஆண்டு தமிழக உணவு விடுதிகள் விதியையும் அரசு திருத்தி யுள்ளது. அதிலே தான் இந்த உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. போ. கோபாலன் : தலைவர் அவர்களே, தமிழகத் திலே பெயாப் பலகைகள் தமிழிலே இருக்க வேண்டுமென்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால் அப்படிப் போடும்போது சில இடங்களிலே தூய தமிழிலே மொழிபெயர்ப்பு செய்கிறார்கள். சாதாரணமாக இது கிராமப் பகுதிகளிலே உள்ள மக்களுக்குப்



புரிவதில்லை. இப்போது உதாரணமாக பேக்கரி என்பதை எடுத்துக் கொண்டால், அதற்கு 'அடு மனை' என்று போடப் பட்டிருப்பதை, புரிந்துகொள்ள முடிவதில்லை. எனவே, சாதாரண தமிழில் [illegible] வாய்ப்பை ஏற்படுத்தித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்?

[முற்பகல் 10.00]

மாண்புமிகு திரு. எஸ், இராகவானந்தம் : ஆங்கிலச் சொல்லுக்கு ஏற்ற தமிழ் எது என்று நிர்ணயிக்க அரசு ஒரு குழுவை வைத்திருப்பதாக என்னுடைய ஞாபகம். தகவல் சரியாக இருக்குமென்று கருதுகிறேன். அதற்கேற்ப மொழி பெயர்க்கப்படுகிறது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர் களே,

மணக்கவரும் தென்றலிலே குளிரா இல்லை?
தோப்பில் நிழலா இல்லை?
தணிப்பரிதாம் துன்பமிது
தமிழ்நாட்டின் தெருக்களிலே தமிழ்தான் இல்லை.

என்று பாவேந்தர் பாரதிதாசன் வேதனைப்பட்டிருக் கிறார். ஒட்டுமொத்தமாக எல்லா நகரங்களிலும் இதனைச் செயல்படுத்த முடியவில்லையென்றாலும் சில நகரங்களாவது தேர்ந்தெடுக்கப்பட்டு அவைகளிலாவது முதல் முதலில் செயல் படுத்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : முன்பே சொல்லிவிட்டேன். என்னுடைய இலாகா சம்பந்தப்பட்டதைச் சொல்லிவிட்டேன். தெருக்கள், வீதிகள் பற்றி எனக்குத் தெரியாது. ஷாப்ஸ் அண்டு எஸ்டாப்ளிஷ்மென்ட் ஆக்ட் படி உள்ளதைச் சொல்லிவிட்டேன். பாக்டரி ஆக்டின்படி அப்படிச் செய்ய வேண்டுமென்றால் கூட மத்திய அரசாங்கத்தின் கன்கரன்ஸ் பெற்றாக வேண்டும்.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய இலாகாவுக்குத் தொடர்பு இல்லையென்று சொல்லுகிறார். பொதுவாக அமைச் சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு இருக்கும் என்ற காரணத்தால் தான் நான் அந்தக் கேள்வியைக் கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புவது அரசுப் பேருந்துகளிலேயே அண்ணா சாலை என்ப

[1979 மார்ச் 15

தற்குப் பதிலாக மௌண்ட்ரோடு என்று குறிப்பிடப்பட்டு இன்றையதினம் வரை ஓடிக்கொண்டிருக்கிறது. அதையாவது உடனடியாக மாற்ற அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அந்தத் துறை சம்பந்தப்பட்ட அமைச்சரும் இங்கே இருக்கிறார்கள், அதைப் பற்றியெல்லாம் கவனிப்பார்கள் என்று கருதுகிறேன்.

## பேருந்து வழித்தடங்களை அரசுடைமையாக்கல

* வினா எண். 411—திரு, ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ் நாட்டில் இந்த அரசு பதவியேற்ற பிறகு எத்தனை வழித்தடங்களை அரசுடைமையாக்கியிருக்கிறது?

(ஆ) அவ்வழித் தடங்களில் ஓடிய தனியார் பேருந்து களில் பணியாற்றிய எத்தனை பணியாளர்கள் அரசு கழகங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர் ?

(இ) இதனால் வேலை பாதிக்கப்பட்டோர் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இந்த அரசு பதவியேற்றது முதல் 31—12—78 முடிய 23 வழித்தடங்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

(ஆ) & (இ) மேற்கண்ட வழித்தடங்களில் பணியாற்றி போக்குவரத்து கழகங்களுக்கு விண்ணப்பம் செய்த 69 முன்னாள் பணியாளர்களில் 32 பேர்கள் தகுதி அடிப்படையில் போக்கு வரத்துக் கழகங்களில் வேலையில் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளனர்.

திரு. ரா. கிருஷ்ணன் : 23 தடங்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறது. தனியாருக்கு எத்தனை தடங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன? ஒரு நபர் எத்தனை பஸ்கள் வைத்துக் கொள்ளலாம் என்ற வரையறையை இந்த அரசு நிர்ணயித்திருக் கிறதா? மார்க் முறை என்று வைத்துக் கொண்டு பல்வேறு மோசடிகள் இருப்பதாக அரசு கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டிருக்கிறதா? அதை மாற்ற செயற்குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : 23 வழித்தடங்கள் நாட்டுடைமையாக்கப்பட்டிருக்கின்றன. தனியாருக்குக் கொடுக்க வில்லை. அரசே எடுத்துக் கொண்டிருக்கிறது, ஒருவேளை



1979 மார்ச் 15]

தனியாருக்கு எத்தனை பேருந்துகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். மொத்தம் 637 வழித் தடங்கள் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் 212 உரிமங்கள் தனியாருக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தனி யாருக்கு மார்க் சிஸ்டம் அனுசரிக்கப்படுவதில் சில தவறுகள் நடப்பதாகக் கூறினார்கள். 1939ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டம் நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகள் அதிக மாக இல்லாத காலத்தில் கொண்டு வரப்பட்ட சட்டம். அதன் காரணமாக அந்தச் சட்டத்திலேயே இயற்கையாகவே பல சலுகைகள் இருந்து வருகின்றன. அவற்றை மாற்றவேண்டு மென்று மத்திய அரசுக்கு இந்த அரசு பரிந்துரை செய்திருக் கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : ஒரு நபர் எத்தனை பஸ்கள் வைத்துக் கொள்ளலாம் ? ஒரே குடும்பத்தில் ஜெயவிலாஸ், ஜெயகுமாரி என்று பஸ்களை வைத்துக் கொண்டு மோசடி செய்வதை அரசு அறியுமா? அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; ஒரு தனி நபர் குறைந்தது 10 பேருந்துகள் வைத்துக் கொள்ளலாம் என்று சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டமும் நீதிமன்றத்தில் கேள்விக் குறியாக இருந்து கொண்டிருக்கிறது. தனி நபர்கள் பல பேருந்துகளை பலபேர் பெயரில் பினாமியாக வைத்துக் கொண் டிருக்கிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது அரசுக்குத் தெரியும். சட்டத்தில் உள்ள ஓட்டைகள் காரணமாக இத்தகைய தவறுகளைச் செய்கிறார்கள். இந்தக் குறைபாடுகளைக் களைய எந்த வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டுமென்பதுபற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேருந்துகளை அரசுடைமை யாக்கும் கொள்கை அண்ணா காலத்தில் வகுக்கப்பட்டது. செயல் திட்ட அடிப்படையில் இன்று தீவிரம் காட்டாததற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன். ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் கேட்டது போல் அண்ணா சாலை என்பது மவுண்ட் ரோடு என்று பஸ் களில் எழுதப்பட்டு ஓடிக் கொண்டிருக்கிறது. அதைப்போக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே அண்ணா அவர்களுடைய நாட்டுடைமைக் கொள்கையை இந்த அரசு ஒரு சிறிதும் குறைத்துவிடவில்லை. அண்ணா அவர்களின் கொள்கையை ஒட்டி முன்னால் ஆட்சி, கொண்டு வந்த சட்டம் உச்ச நீதி மன்றத்திலே இருக்கிறது. உச்ச நீதி

மன்றத்தினுடைய தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டுடைமைக் கொள்கையை சியாப்டர் 4 ஏ மூலமாக நடைமுறைப்படுத்தி வருகிறோம். நாட்டுடைமைக் கொள்கையின் காரணமாக 47.7 சதவீதமாக இருந்த பேருந்துகளின் எண்ணிக்கை 53.08 என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது. அடுத்து, மவுண்ட் ரோடு என்பதை அண்ணா சாலை என்று பேருந்துகளிலே மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். அண்ணா சாலை என்று மாற்ற வேண்டுமென்று உத்தரவிடப்பட்டு பல பேருந்துகளில் மாற்றப்பட்டிருக்கின்றன. எங்கெங்கே மாற்றப்படவில்லையோ அங்கேயும் மாற்றப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. நா. சுந்தரராஜ் ; தலைவர் அவர்களே, பொதுவாக இன்றைய தினம் புதிய பேருந்து வழித்தடங்கள் பழைய முதலாளிகளுக்கே போய்ச் சேருவதால் மினி பஸ் ரூட்களை பஸ்களே இல்லாதவர்களுக்கு வழங்குவதன் மூலமாக சோஷலிஸ சமுதாயத்தை அமைக்கிற அளவிற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, கிராமப் புறங்களிலே 70 சதவீதம் மக்களுக்கு பொருளாதார மேம்பாடு ஏற்படுத்துவதற்காக மினி பஸ்கள் குறுகிய சாலைகளில் விடவேண்டுமென்று ஆய்வு நடைபெற்று வருகிறது. ஜாயின்ட் சர்வே என்ற முறையிலே ஹைவேஸ், ஆர். டி. ஏ., நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துக் கழகங்கள் இணைந்து செய்யும் சர்வே அரசுக்கு வர இருக்கிறது. அதனுடைய அடிப்படையிலே பல்வேறு பகுதிகளுக்கு மினி பஸ் விட அரசு ஏற்பாடு செய்து வருகிறது.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே ஆம்னி பஸ்கள் தனி கார்ப்பரேஷன் போல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் அதை தேசியமயமாக்குவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் கூட்டத்திலேயே அதை தேசியமயமாக்கும் நிலை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, ஆம்னி பஸ்களைப் பொறுத்தவரையில் டூரிஸ்ட்களாகப்
பயன்படுத்தவேண்டுமென்று விதி இருந்தபோதிலும் பயணிப்
பேருந்துகளாக சட்ட விதிகளை மீறி நடைபெற்றுவருகிறது.
திமன்றத்திலே அவர்கள் தடையுத்தரவைப்பெற்று இயக்கி
வருகிறார்கள். அந்த அடிப்படையிலே அரசு அவைகளை
நாட்டுடைமையாக்கவேண்டுமென்று பரிசீலனை செய்து வருகிறது.
விரைவிலே அதைப்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, தனியார் பேருந்துகளை அரசு எடுத்துக்கொள்ளும்போது அவைகளிலே வேலைபார்த்த அந்த பணியாளர்களை அரசுப் பேருந்துகளில் பணியாளர்களாக அமர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பேருந்துகளில் பணியாற்றுகின்ற பணியாளர்களை, அந்தப் பேருந்துகளை அரசு எடுத்துக்கொள்கிறபோது அரசுப் பேருந்திலே பணியாளர்களாக அமர்த்த வேண்டுமென்று உத்திரவிடப்பட்டிருக்கிறது. ஆனால் தனியார் பேருந்துகளிலே பணியாற்றுகின்ற பணியாளர்களில் ஏறத்தாழ 80 சதவீதம் பேர்கள் நிரந்தரப் பணியாளர்களாகக் கணக்கிலே காட்டப்படாமல் இருக்கிறார்கள். நாட்டுடமையாக்குகின்றபோது அந்தக் கணக்கிலே அவர்களைப்பற்றிய ரிக்கார்டுகளே கூட இல்லாமல் போகிற காரணத்தால் அந்தத் தொழிலாளர்களின் நிலை பாதிக்கப்படுகிற காரணத்தால் ஏதாவது ஒரு ஆதாரம் கிடைத்தாலும் அந்த அடிப்படையிலே அவர்களுக்குப் பணி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## நெடுஞ்சாலைகளில் கதிர்களைக் கண்டுமுதல் செய்தல்

* வினா எண் 412—திரு. பி. காளியப்பன் ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :

(அ) தமிழக அரசிற்குச் சொந்தமான நெடுஞ்சாலைகளில் விவசாயிகள் அறுவடை செய்த கதிர்களைக் கண்டுமுதல் செய்வதனால் போக்குவரத்துக்கு இடையூறும் விபத்துக்களும் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கு ஏதும் மாற்றுத் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) இவ்விவகாரத்தால் பாதிக்கப்படுபவர்கள் ஏழை விவசாயிகள். ஆதலின் இதற்கு மாற்றுத் திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பில் தற்போது இல்லை,

திரு. ந. தனசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,
இது மிக முக்கியமான கேள்வி. பல்வேறு விபத்துக்கள் ஏற்பட்டு
இன்றைய தினம் பலபேர்கள் மடிந்திருக்கிறார்கள். அந்த
நிலையில் ஏழை விவசாயிகளைக் காப்பதற்காக இந்தத் திட்டத்தை
ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் ஏழை விவசாயிகளுக்காக

ரோடு ஓரங்களிலே அதற்கான அமைப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் கதிர்களைப் போடுவதற்கு ஏற்ற அளவிற்கு நடவடிக்கையை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, வினாவிலே கேட்கப்பட்ட ஆலோசனையை ஏற்கவில்லை என்று சொல்லவில்லை, தற்போது பரிசீலனையில் இல்லை என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சாலையை நெற்களமாக பயன்படுத்துவதால் போக்குவரத்துக்கு இன்னல்கள் ஏற்படுகின்றன, அதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

(முற்பகல் 10-10)

அந்த ஏழை விவசாயிகளுக்கு, குறிப்பாக நிலம் அதிகம் இல்லாத பகுதியில் இருக்கும் ஏழை விவசாயிகளுக்குப் பொதுக் களம் அமைத்து அதன்மூலம் இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டால் இத்தகைய இன்னல்கள் குறைக்கப்படும் என்று அதைப் பற்றி விவசாயத்துறைகூடப் பரிசீலித்து வருகிறது.

திரு. ப. சந்திரன் ; தலைவரவர்களே, குறிப்பாகத் தென்னார்க்காடு மாவட்டத்தில் இப்படிப்பட்ட விரைவுப் பேருந்துகள் செல்லும் சாலைகளிலேகூட கம்பு, சோளம், கேழ்வரகு போன்ற கதிர்களை அடிக்கின்ற காரணத்தால் அந்தத் தூள் வண்டிகளில் பிரயாணம் செய்யும் பிரயாணிகளின் தலையிலும், கண்களிலும் விழுகின்ற அளவிற்கு மிகுந்த குறை ஏற்படுகிறது. அந்தக் குறையைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; பேரவைத் தலைவரவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்தில் மட்டுமல்ல, குறிப்பாகத் திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலும் மிக அதிகமாக இப்படிப்பட்ட சிக்கல் இருந்துகொண்டு வருகிறது. இதை ஒரு சட்டத்தின்மூலம் நடைமுறைக்குக் கொண்டு வருவது என்பது இயலாத காரியம், காரணம், இதை நெடுஞ்சாலைகளில் என்ஃபோர்ஸ் பண்ணுவதில் சிக்கல்கள் இருக்கும். பஞ்சாயத்து மூலமாக, லோகல் பகுதிகளின் மூலமாக அறிவுரை கூறி அறிவுறுத்தி, விவசாயிகளுக்கு மாற்றுத் திட்டமாக பொதுக் களங்களை அமைத்துத் தந்தால் விவசாயிகள் இத்தகு தடைகளை நெடுஞ்சாலைகளில் ஏற்படுத்த மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

திரு. க. இரா. சின்னராசு : தலைவரவர்களே, நெடுஞ்சாலைகளில் அறுவடைக் காலங்களில் விவசாயிகள் நெல் மற்றும் ராகி போன்றவற்றை அறுவடை செய்து ரோடுகளிலே போட்டு





விடுவதால் நெடுஞ்சாலைகளில் செல்லும் லாரி, பஸ்களுக்கு மிகவும் இடைஞ்சலாக இருந்து அதனால் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே, நெடுஞ்சாலை ஓரங்களில் உள்ள புறம்போக்கு நிலங்களில் அரசுக் களங்களை அமைத்து விவசாயிகளுக்கு வேண்டிய வசதியைச் செய்து கொடுக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட வினாவிற்கு இதற்கான பதிலை நான் அளித்திருக்கிறேன். விவசாயத் துறையைப் போக்குவரத்துத் துறை கேட்டுக் கொண்டிருக்கிறது. விவசாய அமைச்சரவர்களும் விவசாயிகளின் நலன் கருதி இத்தகு திட்டத்தை ஆய்வு நடத்துவதாகக் கூறியிருக்கிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி ; தலைவரவர்களே, விவசாயிகள் அறுவடை காலங்களில் அறுவடை செய்யும் பயிர்களை ரோடுகளில் போடுவதால் லாரி, பஸ்கள் செல்வதன்மூலம் ஒரு மணி நேரத்திலே அதை பூராவும் அடித்துவிடுகிறது. ஆகவே, அவர்களுக்கு அது நன்மையாக இருக்கும். இல்லையென்றால் மாடு வைத்து அடிக்க வேண்டியிருக்கும். இதனால் நெடுஞ்சாலைகளில் போக்குவரத்துப் பிரயாணிகளுக்குத் தூசி ஏற்படாது. இந்த முறையில் இதைத் தடுக்காமல் அரசு இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, விவசாயிகளைப் பொறுத்தவரையில் உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இந்த நெல்லைக் களத்திலே அடிக்க, அதற்காக உழைக்கத் தயங்குவார்கள் என்று நான் கருதவில்லை. மாறாக, வைக்கோல் போரைச் சாலைகளிலே போடுவதால் விரைந்து செல்லும் உந்துகள், வாகனங்கள் ஆகியவைகளின் சக்கரங்களில் மாட்டிக்கொண்டு சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, சாலைகளில் விபத்துக்களைத் தடுக்கும் முகத்தான் இந்த நடவடிக்கை அவசியம் எனத்தான் அரசு கருதுகின்றது.

திரு. மு. செல்வராஜ் : பேரவைத் தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இருந்தபொழுது ஏறக்குறைய பஞ்சாயத்து யூனியனுக்கு பத்து இடம், இருபது இடம் என்ற முறையில் பொதுவான களத்தை நிரந்தரமாக, சிமென்ட் களத்தைக் கிராமங்களில் அமைத்துக் கொடுத்தார்கள். பிறகு அது கைவிடப்பட்டுவிட்டது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்ததைப் போன்று மீண்டும் அம்மாதிரி அமைத்தால்

[1979 மார்ச் 15

இப்படிப்பட்ட சிக்கல்களைத் தீர்த்துவிட முடியுமென்று நான் கருதுகிறேன். அதற்கான முயற்சியிலே விவசாயத் துறையாவது அல்லது போக்குவரத்துத் துறையாவது ஈடுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, விவசாயத் துறை, போக்குவரத்துத் துறை மட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுகின்ற நல்ல ஆலோசனையை அமல் செய்ய லோகல் அட்மினிஸ்ட்ரேஷன்—உள்ளாட்சித் துறையையும் இணைக்க வேண்டும். உள்ளாட்சித் துறையிடமும் விவசாயத் துறையிடமும் போக்குவரத்துத் துறை இதுபற்றிக்கூறி நடவடிக்கை எடுக்க முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. ர. ச. தங்கவேல்: பேரவைத் தலைவரவர்களே, பஞ்சாயத்து யூனியன் ரோடுகளில், சில விவசாயிகள் ரோட்டைக் குறுக்கே வெட்டி தண்ணீரைக் கொண்டு போகிறார்கள். அப்படி ரோடு ஓரத்திலே இருக்கும் வாய்க்கால்களைத் தூர்த்து, நெல் அடிக்கக் கொடுத்தால் திருப்தி அடைவார்கள். இதன்மேல் அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, விவசாயிகளின் நலன் கருதி அதற்குத் தடை ஏதும் அரசு விதிக்காது. ஆனால் தண்ணீரை சாலையின் ஒரு பகுதியிலிருந்து மறு பகுதிக்குக் கொண்டு செல்லும்பொழுது பழுதுபட்ட சாலையாக இருந்தால், பழுதடைந்த நிலையிலே இருந்தால் அவற்றைச் செப்பனிட வேண்டுமென அரசு உத்தரவிட்டிருக்கிறது.

## கள்ளக்குறிச்சியில் மணிலா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை

*வினா எண் 413—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெருவாரியாக மணிலா பயிரிடப்படும் தென் ஆற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியில் தொழில் இணையகத்தின் மூலம் ஒரு மணிலா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை துவங்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



1979 மார்ச் 15]

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டிலேயே வட ஆற்காடு மாவட்டத்திற்கு அடுத்தபடியாக தென்னாற்காடு மாவட்டத்தில் தான் மணிலா அதிகமாகக் கொள்முதல் செய்யப்படுகிறது. குறிப்பாக, கள்ளக்குறிச்சியில் மட்டும் ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் மூட்டைகள் மணிலா கொள்முதல் செய்யப்படுகிறது, எனவே, அங்கு மணிலா சுத்திகரிப்பு ஆலை துவங்க செயற்குறிப்பு இல்லையென்று அதிகாரிகள் சொன்ன காரணங்கள் யாவை. அப்படியே அதிகாரிகள் சொன்னாலும் பொதுமக்கள் பிரதிநிதிகளாக இருக்கிற நாங்கள் சொல்கிறோம் வேண்டுமென்று; ஆகவே, அங்கு சுத்திகரிப்பு ஆலை துவங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் விருத்தாசலம் என்னுமிடத்தில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கழகத்தினால் (Tamil Nadu Co-operative Marketing Federation) ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவப்பட்டுள்ளதாலும், மணிலா எண்ணெய் சுத்திகரிப்பு மத்திய அரசினால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாலும், மேலும் ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை தென்னாற்காடு மாவட்டத்தில் ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

## கூவனூற்று கிராமத்தில் குட்டை அமைப்புத் திட்டம்

*வினா எண் 414—திரு. மெ. ஆண்டி அம்புலம்; மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுரை மாவட்டம், கூவனூற்று கிராமம் நொச்சியாற்றின் குறுக்கே பொதுப்பணித் துறையால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிறைவேற்றப்படாமல் உள்ள குட்டைத் திட்டத்தை நிறைவேற்ற அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இது ஒரு சிக்கன மற்ற திட்டமானதாலும், 1978-79ஆம் ஆண்டில் இதனை எடுத்துக் கொள்வதற்கு வருவாய் வாரியத்தின் ஒத்திசைவு இல்லையாதலாலும் இத்திட்டம் இவ்வாண்டு எடுத்துக்கொள்ளப் படவில்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: தலைவரவர்களே, சாணார் பட்டி ஒன்றியம் ஏமக்கலாபுரம் கிராமத்தில் சர்வே நெம்பர் 550-ல் ஒரு குட்டைத்திட்டம் போட ஆய்விலுள்ளது. எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்? இவ்வேலைக்கு நஷ்டக்கணக்கு வருமானால் நில உரிமையாளர்கள் தங்கள் நிலத்தை அதற்குத்

தேவைப்படும் அளவிற்கு இனாமாக அரசுக்குக் கொடுக்க முன் வருகிறார்கள். இந்த வேலை ஆரம்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, மதுரை மாவட்டம், கூவனூற்று கிராமம் நொச்சியாற்றின் குறுக்கே ஒரு குட்டையை அமைக்க பொதுப்பணித் துறையால் ஒரு திட்டம் போடப்பட்டது. அதற்காக தற்போதைய விலை வீதப்படி மதிப்பீடு ரூ. 1.01 இலட்சம் ஆகும். இத்திட்டத்தினால் 106.60 ஏக்கர் நிலம் பயன்பெறும். கூடுதல் உணவு உற்பத்தி 26.71 டன் என எதிர்பார்க்கப்படுகிறது. 1978-79ல் இத்திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கான ஒத்திசைவை வருவாய் வாரியம் கொடுக்கவில்லை. ஆனாலும் இவ்வரசு மீண்டும் பரிசீலித்து வருகிறது.

## குமரி அணை.

*வினா எண் 415—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குமரி மாவட்டத்தில் சுசீந்திரம், தேரூர் ஆகிய பகுதிகளில் பாசனத்திற்காகக் கட்டப்பட்ட குமரி அணை பழுதடைந்து செப்பனிடப்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குமரி அணை 1970-ல் ஏற்பட்ட அதிக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. அதனுடைய ஆயக்கட்டு நிலங்கள் பாதிக்கப்படாதவாறு தாற்காலிக வளைகரைகள் அமைக்கப்பட்டு பாசனம் பாதிக்காமல் செயல்பட்டு வருகிறது.

(ஆ) குமரி அணையை செப்பனிடுவதற்கு ரூ. 12.57 இலட்சத்திற்கு மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் நீர் வளம் அதிகமாக இருக்கிற காரணத்தினால், வேளாண்மைக்குப் பயன்படுத்துகிற நீர் போக எஞ்சிய நீர் கடலிலே வீணாக கலக்கின்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தால் அங்கே இருக்கிற அத்தனை அணைக்கட்டுகளும் தகுந்த அளவில் பராமரிக்கப்படுவதால் தண்ணீரை உரிய முறையிலே



பாதுகாக்கமுடியும் என்ற காரணத்தால் இப்பொழுது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் மேற்கொண்டு இருக்கிற அணைகளைத் தகுந்த முறையிலே பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; பேரவைத் தலைவரவர்களே, மேற்கொண்டு அரசு பரிசீலனை செய்யும்.

## தென்னாற்காடு மாவட்டத்தில் மரவள்ளி ஆலை

* வினா எண் 416—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தென்னாற்காடு மாவட்டம் மணிமுக்தா நீர்ப்பாசன திட்டப்பகுதியில் ஒரு மரவள்ளி ஆலை ஆரம்பிக்க அனுமதி கோரி மனு ஏதேனும் வந்திருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) ஆம். திரு. இளங்கோவன் என்பவர் மரவள்ளி ஆலை நிறுவ, மரவள்ளிக்கிழங்கு மாவு தயாரிக்க தொழில் வணிகத் துறையில் சிறு தொழிலாகப் பதிவு செய்ய விண்ணப்பித்து இருந்தார்.

(ஆ) தொழில் வணிகத்துறை அவருடைய நிறுவனத்தை சிறு தொழிலாக தற்காலிக முறையில் பதிவு செய்து சான்றிதழ் வழங்கியிருந்தது. அச்சான்றிதழ் 6-5-1978 உடன் காலாவதியாகி விட்டது. அதைத் தொழில் முனைவோர் புதுப்பிக்கவில்லை.

## எட்டயபுரம் மருத்துவ மனைக்கு புதிய கட்டடம்

* வினா எண் 417—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எட்டயபுரம் அரசினர் மருத்துவ மனைக்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் புதிய கட்டடம் கட்டும் வேலை எப்பொழுது துவங்கும் ?

[1979 மார்ச் 15

மாண்புமிகு. திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ), மற்றும் (ஆ)—இல்லை.

[முற்பகல் 10-20]

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எட்டயபுரம் அரசினர் மருத்துவ மனைக்கு அடிஷனலாக பத்து படுக்கைகள் கொண்ட ஒரு கட்டிடம் கட்டுவதற்காக, பத்தாண்டுகளாக அதற்கு மதிப்பீடுகள் செய்ய வேண்டும் என்று போவதும் வருவதுமாக இருக்கிறார்களே தவிர கட்டிடம் கட்டுவதற்கான முயற்சிகள் இன்னும் ஏன் மேற்கொள்ள வில்லை. இந்தத் தொகுதியில் ஆளும் கட்சி உறுப்பினர் இல்லை. அதனால் தான் இதை செய்து முடிக்க அவரால் இயலவில்லை என்று சொல்கிறார்கள். இதை முக்கியமாக வற்புறுத்துவதற்கு காரணம், இங்கிருந்து சுமார் 20, 30 மைல்களுக்கு பெரிய ஆஸ்பத்திரிகள் வேறு எதுவும் இல்லை. ஆகவே இந்தக் கட்டிடம் கட்டும் வேலையை தயவு செய்து உடனடியாக முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, தற்பொழுது எட்டயபுரம் அரசு மருத்துவ மனையில் சிகிச்சைக்காக 6 படுக்கைகள் இருக்கின்றன. அங்கிருந்து பத்து மைலுக்கு அப்பால் ஒரு பெரிய ஆஸ்பத்திரியிருக்கிறது. கோவில்பட்டியிலிருக்கிற இந்த ஆஸ்பத்திரி 40 படுக்கைகள் கொண்ட ஒரு பெரிய மருத்துவ மனையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் இங்கே மக்கள் தேவை என்று சொல்கிற வகையில் 10 படுக்கைகள் கொண்ட கட்டிடம் ஒன்றை கட்டுவதற்கு மாவட்ட மருத்துவ அதிகாரிகள் கருத்து தெரிவித்தார்கள். கட்டுவதற்கு வரைபடம் வேண்டும் என்றார்கள். வரைபடம் அனுப்பி வைக்கப்பட்டது. பத்து படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவ மனை கட்டிடம் கட்டுவதற்கு 3 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. சிறு அறுவைப்பிரிவு அறை, துணி துவைக்கும் அறை, சமையலறை போன்றவைகளுக்கு 6,600 ரூபாய், மருத்துவ உபகரணங்கள் போன்றவைகளுக்கு 12,000 ரூபாய் ஆகும். அதிகாரிகள் மற்றும் மருத்துவ மனை உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளம் 16,228 மருந்துகளுக்காக 10,000 ரூபாய் ஆகும் என்றெல்லாம் கணக்கிடப்பட்டிருக்கிறது. இவைகளுக்குத் தற்பொழுது நிதி வசதி இல்லை. நிதி வசதி நிலைமை சீரானவுடன் இதை பரிசீலித்து எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1979 மார்ச் 15]

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியிலிருக்கிற மருத்துவ மனை பெரியது என்றாலும் கூட அங்குள்ள 1 லட்சம் மக்களுக்கே அது போதுமானதாக இல்லை. இங்கிருந்து—அதாவது எட்டயபுரத்திலிருந்து 40 மைலுக்கு அப்பால் உள்ள தூத்துக்குடியில் ஆஸ்பத்திரி இருக்கிறது. 30 மைலுக்கு அப்பால் உள்ள அருப்புக்கோட்டையில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. ஆனால், சுற்றுப்புறத்தில் உள்ள கிராம மக்கள் 20 மைல்கள் அடங்கிய சுற்றுப்புறத்தில் உள்ளவர்கள் இந்த மருத்துவ மனைக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. ஆகவே இந்த ஆண்டில் முடியாவிட்டாலும் கூட வருகிற ஆண்டிலாவது இந்த மதிப்பீடுகள் முடிக்கப்பெற்று கட்டிடம் கட்ட ஆவன செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களை வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே. உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஒன்றிய மருத்துவ மனைகள்.

*வினா எண். 418— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிதி வசதியற்ற ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தும் மருத்துவ மனைகளை அரசே ஏற்று நடத்தும் திட்டமுண்டா?

(ஆ) ஒன்றியங்களிலிருந்து அவ்வாறான கோரிக்கைகள் வந்துள்ளனவா?

(இ) அந்த மருத்துவ மனைகளில் மருந்து கிடைப்பதில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன்: (அ) உண்டு.

(ஆ) ஒன்றியங்களிலிருந்து பெறப்படும் இவ்விதக் கோரிக்கைகள் அரசின் விதிமுறைகளுக்கு ஏற்ப, அவ்வப்போது பரிசீலிக்கப்படுகின்றன.

(இ) தகவல் இல்லை. எனினும், மருந்துகள் வாங்க நிதி ஒதுக்கீடு இரட்டிக்கப்பட வேண்டுமென்று ஊராட்சி ஒன்றியங்களுக்கு அண்மையில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் நிதி வசதி இல்லாத காரணத்தினால் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் மருந்துகள் இல்லை என்ற நிலை இருக்கிறது. கோரிக்கைகள் ஏற்கனவே வந்திருப்பதாக தெரிகிறது. எந்தெந்த ஒன்றியங்களில் இருந்து கோரிக்கைகள் அரசிடம் வந்திருக்கின்றன என்பதை அறிவிப்பதோடு சென்னையிலிருந்து ஆஸ்பத்திரிகள் மருந்துகளை வாங்கி ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களுக்கு வினியோகிக்கப்படுகின்றன. அவைகளை மாவட்ட மருத்துவ நிலையிலேயே வாங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களின் வினியோக முறை சரியாக இல்லை. அதனால் அதை மாற்றி படிப்படியாக அரசே ஏற்று நடத்தலாம் என்று இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது. அதன்படி 1968-69ஆம் ஆண்டிலிருந்து 1976-77 வரை 112 ஊராட்சி ஒன்றியங்களின் மருந்தகங்கள் அரசின் வசம் வந்திருக்கின்றன. அவற்றில் 107 ஊராட்சி ஒன்றியங்களின் மருந்தகங்கள் அரசுடைமையாக்கப் பட்டுள்ளன.

திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி : தலைவர் அவர்களே, இரட்டணை கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களுக்கு மருந்துகள் சரிவர வந்து சேருவது இல்லை. தற்பொழுது மருந்துகள் வாங்குவதற்காக மாவட்ட மருத்துவருக்கு அப்ளிகேஷன் கொண்டு போக வேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த இரட்டணை ஊராட்சியில் தலைமை மருத்துவ அலுவலர் இல்லை, ஊராட்சி இருக்கிறது. உடனடியாக ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்திலே வழங்குவதற்கு அனுமதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். செளந்திரராஜன் : தலைவர் அவர்க்ளே, தற்போது எந்த இடத்திலும் அத்தகைய தட்டுப்பாடு இல்லை. உடனடியாக மருந்துகள் வாங்குவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டு இருக்கின்றன. குறிப்பிட்ட இடத்தில் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி : இரட்டணை கிராமத்தில் இருக்கிறது என்று ஏற்கனவே குறிப்பிட்டேன்.

திரு. அ. செல்லப்பா : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளானாலும், மருந்தகங்கள் ஆனாலும், அங்கே டாக்டர் இருந்தால் மருந்து இல்லை, மருந்து இருந்தால் டாக்டர் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. இதைப் போக்க அரசே அதனை ஏற்று நடத்த முன் வருமா ?





மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வினாவிற்கு ஏற்கனவே நான் பதில் சொல்லி இருக்கிறேன். கொள்கை அளவில் அரசு அதை ஏற்று படிப்படியாகச் செயல்படுத்தி கொண்டு வருகிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, கொடைக்கானல் போன்ற மலைப்பகுதியில் சாலை வசதியில்லாத பகுதி மிக அதிகமாக இருக்கிறது. அங்கே வாழும் மக்கள் அடிப்படை சுகாதார வசதி இல்லாமலும், பிரசவ காலங்களில் தாய்மார்கள் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டும், பாம்புகடி போன்ற நேரங்களிலும், நோயாளிகள் மரத்தில் இருந்து விழும் ஆபத்துக்களிலும் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அவர்களைக் காப்பாற்றுவதற்காக அரசு மலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ்—Western Ghat Development Scheme.—அரசு மருத்துவ மனைகளை ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திலும் ஏற்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். செளந்திரராஜன் : தலைவர் அவர்களே, இது போன்று மலைப்பகுதியில் வாழும் மக்கள் மருத்துவ வசதி பெற வேண்டும் என்பதற்காகத்தான் இந்த அரசு நடமாடும் மருத்துவ மனைகளை அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் துவங்கி இருக்கிறது. அந்த வகையில் அவைகள் செயல்பட்டு, இன்று படிப்படியாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. விரைவில் அந்தக் குறை நீக்கப்படும்.

திரு: ஆ: நடராசன் ; தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனைகள் ஒவ்வொன்றிற்கும் தேவையான மருந்துகள் எந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றன. அந்த மருந்துகள் எங்கேயிருந்து பெறப்படுகின்றன என்பதை தெரிவிக்க அமைச்சர் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : தலைவர் அவர்களே, தற்போது ஊராட்சி ஒன்றியத்தின் வரவு செலவு திட்டத்திலே இந்திய மருத்துவ முறை மருந்தகங்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ரூ 2,500-ம், நவீன மருத்துவ மனைகளுக்கு ரூ. 5,000/- என்ற அளவில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு இருக்கிறது. ஆனால் தற்போதுள்ள நிலைமையை ஒட்டி, கிராம மருந்தகங்களுக்கு இந்திய முறை மற்றும் நவீன முறைகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5,000-ம் முறைபடுத்தப்பட்ட இந்திய முறை மற்றும் நவீன முறைக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10,000-ம் ஒதுக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மருத்துவப் பட்டதாரிகள் ஆயிரக்கணக்கில் வேலை இல்லாமல் இருக்கிறபோது, நமது மாவட்ட மருந்துவ மனைகளிலும், தாலூக்கா தலைநகரங்களில் உள்ள மருத்துவ மனைகளிலும் பல டாக்டர்கள் இடம் பெறாமல் பல இடங்களில் காலியாக நீண்டநாட்களாக இருக்கின்றன. இதற்கு என்ன அவசியம்? காலியாக உள்ள இடங்களுக்கு டாக்டர்களை நியமிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்ல இயலும்.

திரு. இ. தமிழரசன் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு எத்தனை ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளை அரசு மருத்துவ மனைகளாக எடுத்துக் கொள்ள திட்டம் வகுக்கப்பட்டு இருக்கிறது. குறிப்பாக, வடாற்காடு மாவட்டத்தில் பேரணாம்பட்டில் 6 மாத காலமாக மருந்தகத்தில் மருந்துகளும் இல்லை, மருத்துவர்களும் இல்லை. இந்த நிலையை மாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, தற்போது மிகவும் வசதியற்ற நிலையில் உள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளைத்தான் - 20 ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளை அரசு ஏற்று நடத்த உத்தரவிட்டு இருக்கிறது. அதற்கு ஏற்ப ஆணை எண்/664, நாள் 18-4-78-ல் 14 ஒன்றிய மருத்துவ மனைகள் எடுக்கப் பட்டுள்ளன். மற்ற 6 ஊராட்சி மருத்துவ மனைகளை ஏற்பது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி விரைவில் செயலாக்கப்படும்.

திரு. வ. துலுக்காணம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படுகிற மருத்துவ மனைகளிலே பணிபுரியும் டாக்டர்கள் அங்கேயே தங்கி, அங்கேயுள்ள மக்களுக்கு வைத்திய வசதி செய்வது இல்லை. அவர்கள் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சென்று, அங்கேயுள்ள ஸ்டாப்களையும் அழைத்துக்கொண்டு, அங்கேயிருந்து வேன் எடுத்துக் கொண்டு சினிமா பார்க்கச்சென்று, மாலையானதும் ஆஸ்பிடலுக்கு வந்து விடுகிறார்கள். ஆகவே அவர்கள் அங்கேயே தங்கி, அந்த கிராம மக்களுக்கு மருத்துவ வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?



(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன : தலைவரவர்களே, மருத்துவ மனைகளில் மருத்துவர்கள் இருப்பதற்கு நேரம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த நேரத்தில் அவர்கள் அங்கே இருந்து செயல்பட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அந்த நேரத்தில் அவர்கள் அங்கே இல்லை என்று சுட்டிக்காட்டினால் அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, பொதுவாக இன்றைய தினம் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை சரியாக நடத்துவதற்கு ஒன்றியங்களுக்கு பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டம் போன்ற பின்தங்கிய மாவட்டங்களில் இருக்கிற ஒன்றியங்களின் பொது நிதியில் பணம் இல்லை. ஆகையால் அப்படிப்பட்ட ஒன்றியங்களிலுள்ள மருத்துவ மனைகளை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு, செயல்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுடைய இயலாமையை எண்ணித்தான் அந்த மருத்துவ மனைகளை அரசு ஏற்கவேண்டுமென்று கொள்கை அளவில் முடிவு செய்து, இன்று படிப்படியாக அந்த முடிவை அரசு செயல்படுத்தி வருகிறது.

(திரு. நா. சுந்தரராஜ் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஏற்கெனவே இதே மாதிரி இரண்டு கேள்விகள் கேட்டுவிட்டீர்கள். அதற்கு அமைச்சர் பதிலும் சொன்னார். தயவு செய்து உட்காருங்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

திரு. ப. சுந்தரம் : தலைவரவர்களே, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற மருத்துவ மனையை அரசு ஏற்ற இடத்தில் நடத்த வேண்டுமென்று கேட்டு மனு வந்திருக்கிறதா? எத்தனை மனுக்கள் வந்திருக்கின்றன ? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, தனிப்பட்ட ஒரு ஊராட்சி ஒன்றியத்தைப்பற்றிக் கேட்டிருக்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. க. இரா. சின்னராசு ; தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் எத்தனை ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளை அரசு ஏற்று நடத்தும் செயற்குறிப்பு இருக்கிறது ? நாச்சிக்குப்பம் ஊராட்சி ஒன்றிய மருந்துவ மனையை அரசு ஏற்றுக்கொள்ளுமா

. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அதற்கான தகவல் அமைச்சரிடம் இருக்காது.

## பல் மருத்துவப் பட்டதாரிகள்.

*வினா எண் : 419—திரு. து. புருஷோத்தமன் ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பல் மருத்துவப் பட்டதாரிகள் எத்தனை பேர் அரசாங்க மருத்துவ மனைகளில் வேலை கேட்டு விண்ணப்பித்துள்ளனர் ?—

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

1—2—79 வரை தற்காலிக நியமனம் கோரி 142 பேர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, அரசு அவர்களில் எத்தனை பேர்களுக்கு வேலை தர இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, நம்முடைய தேர்வாணைக் குழுவின் சிறப்புத் தேர்வின் மூலம் 71 தாலுகா மருத்துவமனைகளுக்கு, ஒவ்வொன்றுக்கும் ஒரு பல் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தி, நியமனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, 142 பல் மருத்துவ பட்டதாரிகளில் 1978—ல் 32 பல் மருத்துவ பட்டதாரிகளை முறையாக நியமனம் செய்ய தமிழ்நாடு பணியாளர் தேர்வுக் கழகம் தேர்வு செய்திருக்கிறது. அவர்களை நியமிக்கும் கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, கோவை மருத்துவ மனையில் ஏராளமான பல் நோயாளிகள் வந்து, அவர்களுக்கு போதிய சிகிச்சை கிடைக்காத நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ? அதனால் அங்கே பல் வைத்தியர்களை அதிகமாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?





மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் மருத்துவர்களுடைய தேவையை அவ்வப்போது ஆராய்ந்து அறிந்து, மருத்துவ வசதிகளை ஏற்படுத்துவதற்கு இந்த அரசு வழிவகை செய்து கொண்டிருக்கிறது.

திரு. இரா. ச. முனிரத்தினம் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படும் மருத்துவ மனைகளில் பல் வைத்தியர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் ; தலைவரவர்களே, தற்போது இப்படிப்பட்ட யோசனை அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. சௌந்திரராஜன் : தலைவரவர்களே, கடந்த ஆண்டு பல் மருத்துவப் பிரிவின் சார்பில் வெள்ளிவிழா நடைபெற்று, அதன் மூலம் நடமாடும் பல் மருத்துவ மனைகள் கிராமங்களுக்கு அனுப்பப்பட்டன. அப்படி அனுப்பப்பட்டதால் கிராமப்புற மக்களுக்கு பல் நோய்க்கு சிகிச்சை பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. அதுமட்டுமல்லாமல் பல நோயாளிகளுக்கு புற்றுநோய் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டு, அதற்கு சிகிச்சை அளிக்கவும் வசதி செய்து தந்திருக்கிறார்கள். ஆகையால் கிராம மக்களுக்கு உதவும் வகையில் தொடர்ந்து நடமாடும் பல் மருத்துவ மனைகளை கிராமங்களுக்கு அனுப்ப அரசு ஏற்பாடு செய்யுமா ? பல் நோய்க்கு சிகிச்சை பெற வசதி செய்வதோடு புற்றுநோய் இருக்கிறதா என்பதைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, கிராமப்புறமக்கள் மருத்துவ வசதிபெறவேண்டும் என்பது அரசினுடைய தலையாய கொள்கையாகும். அதன் அடிப்படையில்தான் வெள்ளி விழாவை தலைநகரிலே மட்டும் நடத்தாமல் தமிழகத்தினுடைய எல்லா பகுதிகளிலேயும் குறிப்பாக கிராமப்புறங்களிலே நடத்தல் வேண்டும் என்ற தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களின் விருப்பத்திற்கேற்ப நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அப்படி நடத்திய காரணத்தால்தான் இன்று தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலேயும் இருக்கிற பல் புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப் பட்டது. ஆகவே இப்படிப்பட்ட நடமாடும் மருத்துவ மனைகள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைக்கப்படவேண்டும் என்று பலர் விண்ணப்பித்திருக்கிறார்கள்.. ஆகவே அப்படிப்பட்ட மருத்துவ மனைகளைத் துவக்க வேண்டுமென்ற ஆசை இந்த அரசுக்கு

நிறைய உண்டு. அப்படித் துவக்கும்போது அந்த முயற்சியின் பலன் எல்லா மக்களுக்கும் போய் சேரவேண்டும் என்பதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவரவர்களே, மருத்துவ மனைகளிலே பணிபுரியும் ஸ்பெஷலைஸ்டு என்று சொல்லப்படுகின்ற டாக்டர்கள் தங்களது சொந்த வேலை காரணமாக லீவு எடுத்துக்கொண்டு தங்களுடைய ஊர்களுக்குப் போய்விடுகிறார்கள். அப்படி போய்விடுகின்ற காரணத்தால் நோயினால் அவதியுற்று வரக்கூடிய நோயாளிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இது ஒரு நாள் இரண்டு நாள் என்பதல்ல. பல மாதங்கள் லீவிலே சென்றுவிடுகின்றனர். இது சம்பந்தமாக மாவட்ட மருத்துவ அதிகாரிகளிடத்தில் தெரிவித்தாலும் அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகச் சொல்கிறார்களே தவிர நடவடிக்கை எடுப்பதில்லை. என்னுடைய சொந்த ஊரான ஆயக்குடியில் ஒரு லேடி டாக்டர் 4 மாதங்களுக்கு மேலாக லீவில் இருக்கிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படித் தொகுதி வாரியாக கேட்டால் அதற்கான தகவல் இருக்காது. ஆகவே பொதுவாகக் கேட்கவேண்டும்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, இதனை ஒரு உதாரணத்திற்காகத்தான் சொன்னேன். இன்றைக்கு மாநிலம் பூராவும் இப்படிப்பட்ட நிலை இருக்கின்றது. இதுபற்றி எடுத்துச் சொல்லப்படும்போது உடனடியாக லீவு போட்ட இடத்தில் மாற்று டாக்டர்களைப் போடுவதில்லை. ஆகவே இதற்கு என்ன யோசனை அரசாங்கம் வைத்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, இக்கேள்வி மூலக்கேள்விக்கு தொடர்புடையதாக இல்லை. மூலக்கேள்வி பல் மருத்துவத்துறையில் இருக்கின்ற மருத்துவர்களைப் பற்றியது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மருத்துவத் துறையிலே இருக்கின்ற மருத்துவர்கள் விடுப்பு எடுப்பது பற்றிக் கேட்கிறார்கள். ஆகவே தனிக் கேள்வி போட்டால் அதற்கான விடையைச் சேகரித்து தரமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் — விடைகள் முடிவுற்றன.



[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. உரிமை பிரச்சனை

### மாலை முரசு நாளேடு மீதும், திரு. இரா. நெடுஞ்செழியன் மீதும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனை.

பேரவையின் 184-வது விதியின் கீழ், திரு. க. சுப்பு அவர்கள் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மீது ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனையை அவையில் கொண்டுவர அனுமதி கேட்டுள்ளார்.

திரு. ஜேம்ஸ் அவர்களும், திரு. பொ. விஜயராகவன் அவர்களும் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மீதும் ''மாலை முரசு'' பத்திரிகை மீதும் அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனையை அவையில் கொண்டுவர அனுமதி கேட்டுள்ளார்.

திரு. அ. ரகுமான்கான் அவர்கள் மாலை முரசு பத்திரிகை மீதும், திரு. நெடுஞ்செழியன் அவர்கள் மீதும் அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்ப அனுமதி கேட்டுள்ளார்.

திரு. சுப்பு அவர்களும், திரு. ஜே. ஜேம்ஸ் மற்றும் திரு. பொ. விஜயராகவன் அவர்களும் கொடுத்தது 14-3-1979 அன்று. திரு. அ. ரகுமான்கான் அவர்கள் கொடுத்தது இன்று 5-3-1979 காலை.

இப் பிரச்சினையை அவையில் கொண்டுவர அனுமதி அளிக்கிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டப்பேரவை 184—வது விதியின் கீழ் அடியிற் கண்ட அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை அவையில் எழுப்ப அனுமதி கோருகிறேன்.

''தமிழ்நாடு சட்டப்பேரவையில் சிம்கோ மீட்டர் பிரச்சினை தொடர்பாக எதிர்க்கட்சிகள் நடந்துகொண்ட முறை பற்றியும் பேசிய பேச்சுக்களைக் குறித்தும் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் மீது நடந்த தாக்குதல் குறித்தும் பேரவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் குறித்தும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் திரு. இரா. நெடுஞ்செழியன் திருச்சியில் கருத்துத் தெரிவித்து பேசியிருக்கிறார். அவருடைய

பேச்சு 12—3—79 ''மாலை முரசு'' பத்திரிகையிலும் விரிவாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர் வெளியிட்ட கருத்துக்களில் சில அடியிற் கண்டவாறு இருக்கின்றன:

'கருத்துக்கு கருதது மோத விடுங்கள். கொள்கைக்கு கொள்கை விவாதம் செய்யுங்கள். ஆனால் அதைவிட்டு காட்டு மிராண்டிகள் போல் சட்டசபையில் நடந்துகொள்கிறார்கள்.

தமிழ்நாட்டை தலைகுனிய வைத்துவிட்டார்கள். ஒவ்வொரு பிரச்சினைக்காகவும் சட்டசபையை நடத்தவிடமாட்டோம் என்றால் தமிழ்நாடு காடாகிவிடும்.

இனிமேல் சட்டவிதிமுறைகளை மதிக்க மாட்டேன் என்று கூறுபவர்கள் ஏன் சட்டசபையில் இருக்கிறீர்கள்.

எங்காவது மீன்மார்க்கெட் காய்கறி சந்தையில் அல்லவா இருக்க வேண்டும், பதவியை உடனே ராஜினாமா செய்ய வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் மற்ற கட்சிகளான ஜனதா, இடது கம்யூனிஸ்ட், வலது கம்யூனிஸ்ட், முஸ்லீம் லீக், காமராஜர் காங்கிரஸ் ஆகிய 6 கட்சிகள் சேர்ந்து கொண்டு குழப்பமும் கலகமும் விளைவிக்கின்றன.

கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு எப்போதும் சொந்த வீடு கிடையாது. ராகு-கேது போல் யாருடனாவது சேர்ந்துகொண்டு தொல்லை கொடுப்பதுதான் அவர்கள் கொள்கை.

இவை போன்ற கருத்துக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. சட்டப் பேரவையில் மக்களுடைய பிரச்சினைகளுக்காக உள்ளத் தூய்மையோடு பாடுபட்டுவரும் எதிர்க்கட்சிகளை இழிவுபடுத்தியும் ஆற்றிவரும் பணிகளுக்கு களங்கம் கற்பித்தும் பொதுமக்களை திசை திருப்பும் நோக்கத்தோடு வேண்டுமென்றே இத்தகைய கருத்துக்கள் வெளியிடப்பட்டு இருக்கின்றன. இவை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமது கடமையை ஆற்றுவதைத் தடுக்கக்கூடிய வகையிலும் அமைந்திருக்கின்றன.

எனவே அவை உரிமையை மீறிய குற்றத்திற்காக திரு. இரா. நெடுஞ்செழியன் மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் இந்தப் பிரச்சினையை உரிமைக்குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு கோருகிறேன்'.

[முற்பகல் 10.40]

ஏற்கனவே நம்முடைய பேரவையில் டாக்டர் ஹாண்டே அவர்கள் மீது எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்னை மீது முடிவு கொடுக்கப்பட்டிருக்கிறது.





சர் எர்ஸ்கின் மே குறிப்பிட்டிருப்பது —:

'' அவையின் பெருமை, நடவடிக்கைகள் ஆகியவை குறித்து பேசப்படும் சொற்களினாலோ வெளியிடப்படும் கட்டுரைகளினாலோ சட்டமன்றத்திற்கு இழுக்கு விளைவிக்கும் செயல்கள் சட்ட மன்றத்திற்குரிய மரியாதையைக் குறைப்பதானால் அவையின் நடவடிக்கைகளை தடை செய்கின்றன என்ற கொள்கையின் அடிப்படையில் பிரபுக்கள் சபையாலும் அத்தகைய செயல்கள் தண்டனைக்குரிய குற்றங்கள் ஆகின்றன''.

(மே அவர்களின் 17-வது வெளியீடு, பக்கம் 117.)

'' சொல்லப்படும் சொற்கள் அல்லது பிரசுரிக்கப்படும் கட்டுரைகள், தவிர மேலும் சட்டமன்றத்தின் அல்லது அதன் நடவடிக்கைகளுக்கு இழுக்கு விளைவிக்கும் பிற செயல்கள் சட்ட மன்றத்தின் நடவடிக்கைகளை நேரடியாக தடை செய்யாதிருந்தும் அதன் அதிகாரத்திற்கு இழுக்கு விளைவிக்கும் வகையிலோ அவதூறு செய்யும் வகையிலோ பழித்து கேலி செய்யும் வகையிலோ, அச்சட்ட மன்றத்திற்கு மறைமுகமாக இழுக்கு விளைவிப்பதாயிருந்தால் அவை சட்டமன்றத்தை இழிவுபடுத்தியதாகவே கருதப்படலாம்''.

(மே அவர்களின் 17-வது வெளியீடு, பக்கம் 120.)

'' நாடாளுமன்றத்தில் உறுப்பினர் நடந்து கொள்ளும் முறைப் பற்றி இழிவாகப் பேசினாலும் எழுதினாலும் அது நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தாக்குவதாகவே கருதப்படும். நாடாளு மன்ற உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றத்தில் செய்யும் பணி குறித்து அல்லது அது தொடர்பாக அவருக்கு இழுக்கு விளைவிக்கும் வகையில் கட்டுரைகள் அச்சிட்டால் அல்லது வெளியிட்டால் அது அவையின் உரிமைகளைப் பாதிப்பதாகும்'' என்று 1701 பிப்ரவரி 26-ம் நாளன்று இங்கிலாந்து மக்கள் அவை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அதேபோல் சில பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட கருத்துக்களை வெளியிடுகிறவர் சாதாரண மனிதராக இருந்தால் அதைப் பறறி இந்த அவை பொருட்படுத்த வேண்டியதில்லை என்றளவில். . . . .

'' The House need not necessarily take serious notice of defamation statement made by irresponsible persons '' என்று சொல்லப்பட்டிருக்கிறது. கருத்துத் தெரிவிப்பவர் பொறுப்பற்ற மனிதராக இருந்தால் அதைப்பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. அவர் பேசியதாக அந்தப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர், ஏழு நாட்களாக முதல் அமைச்சராக இருந்திருக்கிறார் என்றால் அவர் ஏழு நாட்கள் இருந்தால் என்ன ஏழு ஆண்டுகள் இருந்தால் என்ன, எல்லாம் ஒன்றுதான் என்ற அளவில்தான்

சொல்லியிருக்கிறார்கள். இன்று அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராக பெருவாரியான வாக்குகளால் இல்லாவிட்டாலும் ஒருவரால் நியமனம் செய்யப்பட்டிருப்பவர். அப்படிப்பட்டதொரு பெரிய மனிதர் இந்தப் பேரவையை இழிவுபடுத்தும் வகையில் பேசியிருப்பது அனைவரது மனத்திலும் இந்த அவையைப் பற்றி என்ன கருத்தை ஏற்படுத்தும்? பேப்பர் வெயிட்டை எடுத்தெறிந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. அது தவறான ஒரு தகவலாகும். அப்படி இந்த அவைக் குறிப்பில் இல்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: திரு. சுப்பு அவர்கள் பத்திரிகைகளை ஒழுங்காகப் படித்து வருகிறவர்கள், அரசியல் நடவடிக்கைகளை நன்றாக உணர்ந்தவர்கள். நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராக அண்மையில் நடந்த கோவை பொதுக் குழுவில் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்ற உண்மையைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: ஏகம் என்றால் ஒன்று என்றும் பொருள் உண்டு. ஆகவே ஒருமனதாக, ஒருவர் மனதாக.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஒருமனதாக என்பதுதான் அரசாங்கத்தின் சார்பில் தரப்படுகிற பதில். அது ஒருவர் மனதாக என்றில்லை. ஒரே உள்ளத்தோடு எல்லோரும் இருக்கிறார்கள் என்று பொருள்.

திரு. க. சுப்பு: அந்த விவாதத்தில் நான் புக விரும்பவில்லை. பொதுக் குழுவும் நியமிக்கப்பட்ட குழுதான், அது எலக்டெட் கமிட்டி அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பிரச்சினைக்கு வாருங்கள்.

திரு. க. சுப்பு; அது எப்படியிருந்தாலும் பரவாயில்லை. அதைப் பற்றிக் கவலையில்லை. சில நாட்கள் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தவர்கள். எதிர் கட்சித் தலைவராக இருந்தவர்கள், கல்வி அமைச்சராக இருந்தவர்கள். முக்கியமான பொறுப்புகளில் இருந்த தலைவர். ஒரு கட்சியின் பொதுச் செயலாளர்; அங்கமுத்து சங்கத்தின் தலைவர் அல்ல. ஆளும் கட்சியின் பொதுச் செயலாளர். அப்படிப்பட்ட ஒருவர், காட்டுமிராண்டிகளைப் போல் நடந்து கொள்கிறார்கள், பேப்பர் வெயிட்டைத் தூக்கி எறிகிறார், மீன் மார்க்கெட் வைக்கப் போக



வேண்டும், காய்கறிக் கடை வைக்கப் போக வேண்டும் என்றெல்லாம் கருத்துக்களை வெளியிடுகிறார். ஸிம்கோ மீட்டர்ஸ் பற்றிய பிரச்னையில் கம்யூனிஸ்ட் கட்சியினர் அதன் மீது ஒரு முடிவு காணாமல் அவையை நடத்தவிடமாட்டோம் என்று சொன்னவர்களைப் பார்த்து ராகு, கேது போன்றவர்கள் என்றெல்லாம் பேசுவது, தோதுபோல் பேசுவது என்பது ஒரு கட்சியை இழிவுபடுத்துவதாகும். அது இந்த அவையில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்களை அவமானப்படுத்துவதாகும். மேலெழுந்தவாரியாக உடனடியாகவே ப்ரிவிலெஜ் கமிட்டிக்கு ரெபர் செய்திருக்கலாம். இன்று அப்படி செய்ய இருப்பதை வரவேற்கிறோம். ஆகவே இப்பிரச்சினையை உடனடியாக உரிமைக் குழுவிற்கு அனுப்பி அவர்கள் மீது சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு சுப்பு அவர்கள் விரிவாக எடுத்துக் கூறிவிட்ட காரணத்தினால் அவர் கூறியவற்றை மீண்டும் கூற வேண்டிய அவசியமில்லை. இருந்தாலும் இந்த அவை உரிமை மீறல் யார் மீது கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று எண்ணுகின்ற போது உண்மையிலேயே நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இந்த அளவுக்குப் பேசுவதற்கு துணிந்து விட்டார் என்று சொன்னால் நாம் அனைவரும் வருந்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர் ஏழு நாட்கள் முதலமைச்சராக இருந்திருக்கிறார் என்பது மட்டுமல்ல, நீண்ட நாட்கள் எதிர்கட்சித் தலைவராகவும் இந்த அவையின் முன்னவராகவும் நீண்ட நாள் இருந்திருக்கிறார். ஆகவே சட்ட மன்ற உறுப்பினர்களின் உரிமைகள், சட்டமன்றத்தின் கவுரவம் எந்த அளவுக்கு உண்டு என்பதை எல்லாம் நன்றாக அறிந்தவர். இங்கு இருக்கின்ற அனைத்து அங்கத்தினர்களையும் விட அவர் இதையெல்லாம் மிக நன்றாக அறிந்தவர். ஆகவே ஏதோ தெரியாமல் கூறிவிட்டார் என்று எண்ணுவதற்கில்லை. திட்டமிட்டு அனைத்து எதிர்க்கட்சிகளையும் அழித்துவிடவேண்டும் என்ற நோக்கத்தோடு அனைத்து எதிர்க் கட்சிகளையும் அவமதிக்க வேண்டும் என்ற ஏக நோக்கத்தோடு அவமரியாதையான வார்த்தைகளைக் கூறியிருக்கிறார். அவர் கூறியதோடு மட்டுமில்லாமல் அதிகமான அளவில் சர்குலேஷன் ஆகின்ற பத்திரிகைகளிலும் இவை எல்லாம் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. ஒருவேளை நாவலர் நெடுஞ்செழியன் கூறவில்லை என்று சொல்லக்கூடும் என்பதால், நெடுஞ்செழியன் மீதும், அவர் கூறியவற்றைப் பிரசுரித்திருக்கும் பத்திரிகை மீதும் உரிமை மீறல் பிரச்னைகளை நான் கொடுத்து இருக்கிறேன். இதை விட இந்த மன்றத்தில் எடுத்துக் கொள்ளக் கூடிய உரிமைப் பிரச்சினை வேறு எதுவும் இருக்க முடியாது. இதைவிட உரிமை மீறலுக்கு தகுதியுள்ள உரிமை மீறல் பிரச்சினை இந்த மன்றத்தில் எழுப்ப முடியாது. அந்த அளவுக்குச் சிறந்த உரிமை மீறல் பிரச்சினையைப் பற்றி வேறு எந்த விதமான காரணங்களையும் கூறாமல் இந்த உரிமை மீறல்

இருக்கிறது என்பதைப் பார்த்து, இங்கே செயலாற்றுகின்ற அங்கத்தினர்களுக்கு வேண்டிய உரிமைகளைப் பாதுகாக்க நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள். ஆகவே இந்த உரிமைப் பிரச்சினையை உரிமை மீறல் குழுவுக்கு அனுப்ப வேண்டியது மிகவும் தேவை. ஆகவே, இதை உரிமை குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இனிமேல் இதன் மீது பேசக்கூடியவர்கள், முன்னால் இரண்டு உறுப்பினர்களும் பேசிய கருத்துகளுக்கு மேல் ஏதாவது கருத்துக்கள் இருக்குமானால் அதைப்பற்றி மட்டும் பேசலாம்; திரு. ரகுமான்கான் அவர்கள்.

HON. THIRU. S. RAMACHANDRAN : Sir, I have to raise a point of order in this.

திரு. அ. ரகுமான்கான் ; பேரவைத் தலைவர் அவர்களே, மாலை முரசு பததிரிகை மீதும், நெடுஞ்செழியன் அவர்கள் மீதும், நான் இந்த அவையில் உரிமை மீறல் பிரச்னை கொண்டு வந்திருக்கிறேன். எனக்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்களும், திரு. சுப்பு அவர்களும் இதைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

Parliamentary Practice by "Erskine May" என்ற புத்தகத்தில் 68-வது பக்கத்தில் உரிமை மீறல் என்றால் என்ன என்பது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் பிரைமா பேஸி இருக்கிறதா என்பதைக் கூறுவதற்காகத்தான் தாங்கள் சந்தர்ப்பம் வழங்கியிருக்கிறீர்கள். மாலை முரசு பத்திரிகையில் நெடுஞ்செழியன் அவர்கள் பேசிய பேச்சை வெளியிட்டிருப்பதையும் உரிமை மீறல் இருக்கிறது, அது எந்த விதியின் கீழ் வருகிறது, என்பதை 'மோஸ் பார்லிமென்டரி ப்ராக்டீஸ்' புத்தகத்திலிருந்து ஆதாரத்தோடு காட்டி அதை எடுத்துக் கூறினால் அது உங்களுக்கு உதவியாக இருக்கும் என்பதால் அதை எடுத்துக் கூறுகிறேன்.

"When any of these rights and immunities, both of the Members, individually, and of the Assembly in its collective capacity, which are known by the general name of privileges, are disregarded or attacked by any individual or authority, the offence is called a breach of privilege, and is punishable under the law of Parliament."

இதன் அடிப்படையில்தான் இந்தப் பிரச்சினை வருகிறது என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இங்கே மாலை முரசு பிரதி என்னிடம் இருக்கிறது. இதே நாளில்வேறு பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டிருக்கின்றன.



இதுபோன்ற செய்தி அந்தப் பத்திரிகைகளில் எல்லாம் இருக்கிறதா என்று பார்த்தால் அவைகளில் எல்லாம் இப்படிப்பட்ட செய்தி இல்லை என்பதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த மாலை முரசு பத்திரிகையில் வெளி வந்திருப்பதை நாங்கள் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதில் சொல்லப்பட்டிருப்பது.

"காட்டுமிராண்டிகளைப் போல் சட்டசபையில் நடந்து கொள்கிறார்கள். எங்காவது மீன் மார்க்கெட் காய்கறி சந்தையில் அல்லவா இருக்க வேண்டும், பதவியையும் உடனே ராஜிநாமா செய்ய வேண்டும்."

இவையெல்லாம் அவைக் குறிப்பேட்டிலும் இல்லை, மற்ற பத்திரிகைகளிலும் இல்லை. எதிர்க் கட்சிகள் எப்போதும் இருக்கின்ற குறைகளை, தவறுகளை எடுத்துச் சொல்லத்தான் செய்யும். இங்கே வள்ளுவர் படம் வைத்திருக்கிறோம், வள்ளுவர் கூட

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்று சொல்லியிருக்கிறார். ஆட்சி செய்பவன் மன்னனாக இருந்தாலும் நடைபெறுகின்ற தவறுகளைச் சுட்டிக் காட்டினால் தான் மன்னனின் ஆட்சி ஒழுங்காக. ஆட்சி செய்ய முடியும்.

[முற்பகல் 10.50]

இங்கே அண்ணா அவர்கள் படமிருக்கிறது. நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கு அண்ணா அவர்கள் வழி காட்டியிருக்கிறார்கள். அண்ணா என்ன சொல்லியிருக்கிறார்? 1957 ஆம் ஆண்டு சொல்லியிருக்கிறார், எதிர்க் கட்சிகள் ஆளும் கட்சிக்கு லாலி பாட வரவில்லை என்று. லாலி பாடுவது என்பது அவர்களுடைய கொள்கையாக இருக்கலாம். ஆனால், எதிர்க் கட்சி என்று சொன்னால், ஆளும் கட்சி செய்யக்கூடிய தவறுகளைச் சுட்டிக் காட்டுவது என்பது தானே தவிர, லாலி பாடுவது என்பதல்ல. அப்படி அண்ணா வழியில் இருந்து, தொழிலாளர் பிரச்சினையானாலும், விவசாயிகள் பிரச்சினையானாலும், மாணவர்கள் பிரச்சினையானாலும், இந்தப் பிரச்சினைகளிலே, மக்களுக்காக வாதாடுகின்ற முறையிலே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த பிரிவிலெஜ் பற்றி திரு.சுப்பு சொல்லாததைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லுங்கள்;

[1979 மார்ச் 15

திரு. அ. ரகுமான்கான் : எதிர்க் கட்சிகள் என்று சொன்னால், அராஜக வாதிகள், எதிர்க் கட்சிகள் என்று சொன்னால் குழப்பம் விளைவிப்பவர்கள் என்ற........

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; தயவு செய்து பிரிவிலெஜ் மோஷன் பற்றி மட்டும் படித்துவிட்டு உட்காருங்கள். அப்படி ஏதாவது சொல்வதாக இருந்தால், சுருக்கமாகச் சொல்லுங்கள். விளக்கத்திற்குப் போகாதீர்கள்.

திரு. அ. ரகுமான்கான் ; மக்கள் மத்தியிலே ஒரு தப்பான எண்ணம் உருவாவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கு கின்றது. ஆகவே, நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இதைப் பற்றி விசாரிக்கின்ற முறையிலே, இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை மீது எங்களுடைய கட்சியின் பெயரும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனவே, அதைப் பற்றிச் சில கருத்துக்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சங்கரய்யா, மன்னிக்க வேண்டும். நீங்கள் எழுத்து மூலமாக, விதிகளைச் சுட்டிக் காட்டிச் சொல்லவேண்டும். இந்த முறையை அனுமதிப்ப தானால், அது வளர்ந்து கொண்டே போகும்.

திரு. என் சங்கரய்யா : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த ' சப்ஜெக்டை 'ப் பற்றி அதிலே எழுப்பக் கூடாது.

திரு. என். சங்கரய்யா : நீங்கள் இப்போது இந்த பிரச்சினையைப் பற்றி அபிப்ராயம் சொல்லப் போகிறீர்கள். அந்த அபிப்ராயம் சொல்வதற்கு முன்னாலே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அதைப்பற்றி உங்கள் கவனத் திற்குக் கொண்டுவர எனக்கு உரிமை இருக்கிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அப்படிச் சொல்லாதீர்கள். உரிமை இல்லை. விதியைச் சுட்டிக் காட்டுங்கள். உதவியாக இருக்கும் என்று வேண்டுமானால் சொல்லுங்கள்.



1979 மார்ச் 15]

திரு. என். சங்கரய்யா : உதவியாக இருக்கும். அந்த வகையிலே சில கருத்துக்கள் சொல்ல வேண்டியிருக்கிறது. அரசியல் பிரச்சினையாக இதைக் குறிப்பிட விரும்பவில்லை. ஒரு சட்டமன்ற நிகழ்ச்சி நடப்பதற்கு விதிகள் வரையறுக்கப் பட்டிருக்கின்றன. அப்படி வரும்போது, பல்வேறு கட்சிகள் பலப்பல கருத்துக்களை, எதிர்க் கட்சிகள் அந்த நேரத்தில் அவர்களுக்கான கருத்துக்களை அந்த வாதத்திலே அவர்கள் சொல்லி பல வடிவங்களில் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள். அதற்குப் பல வரலாறுகள் இருக்கின்றன. மாண்புமிகு சபா நாயகர் அவர்கள் எதிர்க் கட்சியிலே இருக்கும்போது, இப்படி ஒரு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது திரு. சங்கரய்யா அவர்கள் அந்தக் குறிப்பைக் கொண்டு வந்து காட்டி, எப்போது நடந்தது என்று நிரூபித்தால், இந்த அவை என்ன தண்டனை கொடுத்தாலும் அதை ஏற்றுக் கொள்கிறேன். கோப்புகளை இறங்கி வந்து மேஜைமீது இருந்து எடுத்துக் கொண்டு போக வில்லை. அங்கேயே இருந்துதான் பேசியிருப்பேன். தடித்த வார்த்தைகளைப் பேசியதும் இல்லை ; பேசுபவனும் அல்ல. அவ்வளவு தெரியாதவனும் அல்ல.

திரு. என். சங்கரய்யா : அளவிலேதான் வித்தியாசம். ' மேட்டர் ஆப் டிகிரி '.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அளவிலே வித்தியாசம் இருக்கிறது என்று சொல்லாதீர்கள். முறையிலே தான் வித்தியாசம் இருக்கிறது. இங்கே வந்து மேஜை மீதுள்ள கோப்புகளை எடுத்துக்கொண்டு போவது என்பது வேறு முறை. ஆகவே, முறையிலே தான் வித்தியாசம்.

திரு. என். சங்கரய்யா : நம்முடைய சட்ட மன்றத்தை எடுத்துக் கொண்டால். இப்படிப் பல முன் உதாரணங்களை எடுத்துக்காட்ட முடியும். பிரச்சினைகளிலே கடுமையான வாதங்கள் வரும்போது, தங்கள் அபிப்ராயங்களைச் சொல்வதற்கு பல்வேறு எதிர்க் கட்சிகள் பல்வேறு வடிவங்களை எடுத்துக் கொண்டிருக்கின்றன. இதைப் பற்றி வெளியிலே நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், ஒரு மூத்த அரசியல்வாதி, பேசும் போது இதிலே குறிப்பிட்டிருக்கின்ற வார்த்தைகள் — காட்டு மிராண்டித்தனமாக நடந்து கொண்டார்கள் என்று சொல்வதும், அவர்கள் மீன் மார்க்கெட்டுக்குப் போகவேண்டும் என்று சொல் வதும், அப்படி இல்லையென்றால் ராஜிநாமா செய்யவேண்டும் என்று சொல்வதும். அது மட்டுமல்ல, இன்றைய தினம் இங்கே அத்தனை அரசியல் கட்சிகள், அதாவது.......

[1979 மார்ச் 15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெளியிலே உள்ள ஒரு உறுப்பினரைப் பற்றிச் சொல்லுகிறீர்கள் அவர் இப்படிப் பேசியிருக்கின்றாரே, அதைப் பற்றித் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்ற முறையிலே பேசுங்கள், அறுதியிட்டு முடிவு சொல்லக் கூடாது.

திரு. என். சங்கரய்யா: பத்திரிகையிலே அச்சிட்டு வெளி வந்திருக்கிறது. அதைப் பார்க்கும் போது ஆதாரம் இருக்கிறது. ஆகவே அப்படி வந்ததன் அடிப்படையிலே சொல்கிறேன்.

ராகு, கேதுக்கள் என்று சொல்லியிருக்கிறார். ஆளும் கட்சி அகில இந்திய ரீதியில் இந்திரா காங்கிரஸ் கட்சியோடு உறவு கொண்டிருக்கிறது. அது ஒரு ராகு, கேது என்று சொல்லக்கூடாதா? யாரை அவர்கள் ராகு கேது என்று சொல்லுகிறார்களோ அப்படிப் பட்ட எங்களுடன் உறவு வைத்துக் கொள்ளவேண்டுமென்று வந்தால் அதுவும் தவறான முடிவு அல்லவா? அரசியல் உறவு களைப் பற்றியெல்லாம் மக்கள் மனதில் தவறான எண்ணங் களை ஏற்படுத்தும் அளவுக்கு அந்தப் பேச்சுக்கள் அமைந் திருப்பதாகக் கருதுகிறேன். இதன் பேரில் தாங்கள் ஆழ்ந்து பரிசீலனை செய்து தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலை வர் அவர்களே, Sir, on apoint of order

(திரு. சோ. அழகர்சாமி எழுந்து நின்றார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் தயவு செய்து உட்காருங்கள். எந்த அடிப்படையில் பேச விழைகிறீர்கள்? முதலில் தாங்கள் என் கவனத்தை ஈர்க்க வேண்டும். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் பேசுவார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இந்த அவையில் ஒரு பிரச்சினையை எழுப்ப அனுமதி அளித்திருக்கிறீர்கள். அந்த அனுமதியைப் பொறுத்தவரை நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன். குறிப்பாக நான்கு வகைகளிலே நான் எனது கருத்துக் களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்று, மாண்புமிகு நாவலர் அவர்கள் வெளியிலே பேசிய தாகவும், அப்படிப் பேசப்பட்டது மாலை முரசு என்ற பத்தி ரிகையில் வந்துள்ளதாகவும் மாலை முரசுப் பத்திரிகையை



1979 மார்ச் 15] [திரு. ச. இராமச்சந்திரன்]

ஆதாரம் காட்டி உரிமைப் பிரச்சினை கொண்டு வந்திருக்கிறார் கள். நான் சொல்ல விரும்புவது—மாலை முரசு பத்திரிகையின் மீது உரிமைப் பிரச்சினை வருவது பொருத்தமானது. மாண்பு மிகு நாவலர் அவர்கள் அடிப்படிப் பேசினாரா இல்லையா என்பதை நாம் எப்படித் தெரிந்து கொள்வது? இதைப் பற்றிக் கூறும்போது நான் உங்கள் கவனத்திற்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மூதறிஞர் ராஜாஜி அவர்களைப் பற்றி ஒருமுறை இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டது. சண்முகாரில் நடைபெற்ற கூட்டத்தில் பேசியது* * * *.

திரு. க. சுப்பு: இதையெல்லாம் சொல்ல எப்படி அனுமதிக் கிறீர்கள். This is no point of order.

HON. THIRU S. RAMACHANDRAN: Unless the proof is made available, how is it that it can come to the House?

(திரு. ரகுமான்கான். திரு. சுப்பு மற்றும் சிலர் எழுந்து நின்றனர்)

(கூச்சல்—குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அமைச்சர் அவர் களுக்கு அனுமதி அளித்துவிட்டேன். அமைச்சர் அவர்கள் தொடர்ந்து பேசுவார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர் களே, நான் சொல்ல விரும்புவது—நாளைய தினம் இன்னொரு பத்திரிகை மாலை முரசுக்குப் பதிலாக காலை முரசு என்ற ஒரு பத்திரிகை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்படிப் பேசினார்கள் அப்படிப் பேசினார்கள் என்று போட்டுவிட்டு இங்கே வந்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மீது உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வருவோமானால் இங்கே உள்ளவர்களுக்கு என்ன பாதுகாப்பு என்ற அடிப்படையில்தான் இந்தப் பிரச்சினையை எழுப்புகிறேன்.

இரண்டாவது நான் சொல்ல விரும்புவது....

திரு. அ. ரகுமான்கான்: பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சங்கரய்யா அவர்கள் எழுந்து பேசியபோது அவர் சில விளக்கங்களைச் சொல்ல அனுமதிக்கப்பட்டார். அவர் எனக்கு உதவுவதாகச் சொல்லி சில

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

விளக்கங்கள் அளித்தார். அதே போன்று திரு. அழகர்சாமி அவர்களும் எழுந்து பேச வேண்டுமென்று விரும்பி எழுந்து நின்றார். அவர்கள் எல்லாம் கருத்துக்களைச் சொல்லலாம் என்று சொல்லுகிறபோது அமைச்சர்கள் வரிசையில் இருப்பவர்கள் தங்களுடைய கருத்தைச் சொல்லுகிறபோது மட்டும் ஏன் எழுந்து நின்று தடுக்க முனைகிறீர்கள்? இந்த அவையை விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. சங்கரய்யா அவர்களை அனுமதித்தேன். எனக்கு உதவிகரமாக அவர்கள் கருத்துக்கள் தெரிவிப்பார்கள் என்ற முறையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். திரு. ரகுமான்கான் இதிலே என்ன பிரச்சினையை எழுப்புகிறார்? திரு. அழகிரிசாமி நான் சொல்லித்தான் ஆகவேண்டுமென்று வற்புறுத்துகிறார். அதேபோன்று அமைச்சர் அவர்கள் தன்னுடைய கருத்தைக் கூறுகிறார்கள். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை பின்னால் நான் கொடுக்கக்கூடிய தீர்ப்பைத்தான் பார்க்கவேண்டும். அதற்கு மாறாக ஒவ்வொருவரும் எழுந்து குறுக்கே பேசிக் கொண்டிருந்தால் விவாதம் என்னாவது?

[முற்பகல் 11-00]

அதனாலே அவர்கள் சொல்கிற கருத்தைக் கேட்டுக் கொள்கிறேன். பிறகு திரு. அழகர்சாமி சொல்வதைக் கேட்டுக் கொள்கிறேன். என்ன முடிவு என்பதைத் தீர்ப்பிலே பார்த்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நான் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். இரண்டாவதாக நான் சொல்ல விரும்புவது........

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, அமைச்சர் பேசியதிலே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.

திரு. நா. சுந்தரராஜ்: நான் சொல்ல வந்தது......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள் தயவு செய்து. வலுக்கட்டாயமாக வற்புறுத்தி என்னிடம் அனுமதி வாங்கக்கூடாது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அவர் சொல்ல வருவதை நான் புரிந்து கொள்கிறேன். எழுப்பிய பிரச்சினையில் பின்னாலே மூதறிஞர் ராஜாஜி அவர்கள் பற்றி சொன்னபோது கண்ணியக் குறைவான வார்த்தைகள் வருகின்றன. அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதே மாதிரி நிரூபிக்கப்படவில்லையென்றால் இந்தக் கண்ணியக் குறைவான வார்த்தைகள் நீக்கப்படுமா என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: ராஜாஜி பற்றிச் சொன்ன வாசகங்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுமாறு ஆணையிடுகிறேன். பத்திரிகைகளிலேயும் போது அவர்கள் குறிப்பிட்ட வெளியிட வேண்டாமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: அது தீர்ப்பிலே இருக்கிறது. அந்த பிரிவிலேஜ் புக்கிலே இருக்கிறது. அதை அவர் சொன்னார். அதைப் போய் நீக்க வேண்டும் என்று சொல்கிறீர்களே?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்குத் தெரியும், திரு. சுப்பு. ஆனால் அந்த மூதறிஞர் பற்றி மறுபடியும் தவறாக வரக்கூடாது என்ற முறையிலேதான் சொன்னேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: Does not matter. I have no objection.

மூன்றாவதாக, இதுபோன்ற பிரச்சினை வருகிறபோது மன்றத்திலே நிராகரிக்க வாய்ப்பு உண்டு. ஆனால் வெளியே இருக்கிறவர்களுக்கு நிராகரிக்க வாய்ப்பில்லை. அவர்கள் பேசாத ஒன்றைப் பேசியதாக, பேசாத ஒன்று என்று நிரூபிக்கப்படுமானால் என்ன நிலைமை? ஆகவே எந்த அளவிற்கு வெளியிலே உள்ளவர்களுடைய பேச்சுரிமையை அது பாதிக்கும் என்பதையும் தாங்கள் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம்: நீங்கள் எப்படி இப்போது சொல்ல முடியும்?......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆறுமுகம், உட்காருங்கள். உங்களுக்குப் பேச உரிமை இல்லை, இப்போது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, ஆளுங்கட்சியைச் சேர்ந்த முக்கியமான பெரியவர், பொதுச் செயலாளராக இருப்பவர் வெளியே பேசியிருக்கிறார். வெளியே நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசினால் அதைப் பற்றி உரிமைப் பிரச்சினை இங்கே கொண்டுவர முடியாது. ஆனால் சட்டசபையிலே நடந்த விவாதங்களைப் பற்றி அவர்கள் சொல்லியிருப்பதோடு

எங்கள் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியைப் பற்றி, கொள்கையில்லை என்றும், வீடு கிடையாது என்றும், ராகு, கேது மாதிரி என்றும் அவதூறாகச் சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவதூறாகப் பேசியிருப்பதாகப் பத்திரிகையிலே வந்திருக்கிறது என்று சொல்லுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி: பத்திரிகையிலே வந்திருக்கிறது. எங்கோ ஒரு மூலையிலே அல்ல. அவரும் பார்த்திருக்கலாம். அவர் குறிப்பிட்டுவிட்டு இனிமேல் இல்லையென்று மறுத்தாலும் அதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே தலைவர் அவர்கள் ரொம்ப லேசாகக் கவனிக்காமல் நம்முடைய சட்டசபை பற்றி மீன் கடை என்று எல்லாம் யாருமே சொல்லாத கேவலமான ஒரு முறையிலே சொல்லியிருப்பதால், அதுவும் சாதாரண ஆள் இல்லை, முக்கியமான ஆள், ஆளுங்கட்சியினுடைய பொதுச் செயலாளர் சொல்லியிருப்பதால் தலைவர் அவர்கள் முடிவைத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். இப்பிரச்சினையைப் பற்றி என்னுடைய தீர்ப்பு பிறகு அறிவிக்கப்படும்.

*அடுத்து, சிவாஜி கணேசனின் 200 வது......*

*திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, தாங்கள் அடுத்த பிரச்சினைக்குச் சென்று விட்டீர்கள், மன்னித்துக்கொள்ள வேண்டுகிறேன். ஏற்கனவே உடனடியாகவே நீங்கள் முடிவெடுத்து உரிமைக் குழுவிற்கு அனுப்பிய முன்மாதிரிகள் சில இந்த அவையில் இருக்கின்றன. நீங்கள் வேண்டுமானால் நாவலர் அவர்கள் மீது இங்கு எழுப்பப்பட்ட பிரச்னையில் தீர்வு காணா விட்டாலும், பத்திரிகையில் தெள்ளத் தெளிவாக இருக்கிறது. அந்தப் பத்திரிகைகளை நீங்களும் படித்திருக்கிறீர்கள். போதுமான பிரதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பிரதி போதாது என்று சொல்லி எல்லாப் பிரதிகளும் வரவழைத்துத் தரப்பட்டிருக்கின்றன. பத்திரிகையிலே இருப்பது தெளிவாக இருக்கும்பொழுது இதை உடனடியாக உரிமைக் குழுவிற்கு அனுப்புவதில் தவறில்லை. பேசினாரா என்பதை பிறகு அறிந்து அதைப்பற்றிச் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்வதைப்போல பல பத்திரிகைகளில் இன்றைக்கு வரவில்லை, மாலை முரசு பத்திரிகையைத் தவிர. அந்தப் பத்திரிகை மீது உரிமை மீறலா என்பதைப்பற்றிப் பத்தி





ரிகையை வரவழைத்து உண்மைதானா என்று அறிந்து, நாவலரையும் விசாரித்து உண்மைதானா என்று—ஏனென்றால் இரண்டையும் இணைத்துத் தந்திருக்கிறார்கள்—ரகுமான்கான், ஜேம்ஸ் அவர்கள். சுப்பு மட்டும் நாவலர் மீது தந்திருக்கிறார்கள். இரண்டையும் இணைத்துக் கொடுத்திருப்பதால் இரண்டு பேரையும் விசாரித்துத்தான் தீர்ப்புக் கொடுக்க முடியும்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, இரண்டு பேரையும் விசாரிப்பது என்றால் உரிமைக் குழு விசாரிக்க வேண்டும். நான் கேட்பது, பத்திரிகையிலே தெளிவாக இருக்கிறது. அவர் பேசினாரா இல்லையா என்பது வேறு விவகாரம். ஒரு வேளை பேசவில்லை என்றுகூட அவர் சொல்லலாம். அது வேறு விவகாரம். பத்திரிகை உங்களுக்குத் தரப்பட்டிருகிறது. பத்திரிகையில் இத்தகைய வார்த்தைகள் இருக்கின்றன. காட்டுமிராண்டித்தனம், மீன் சந்தைக்குப் போவது என்ற இப்படிப்பட்ட வார்த்தைகள் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தாங்கள் தீர்ப்புக் கொடுத்துவிட்டீர்கள். அதன் மீது மறு ஆய்வு செய்யப் போகிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(திருவாளர்கள் சி. ஆறுமுகம், துரை முருகன், க. சுப்பு ஆகியோர் எழுந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் தீர்ப்புக் கொடுத்த பிறகு அதைப் பற்றிப் பேசக்கூடாது. எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கேட்டார்கள். அவரிடம் பேசிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். எந்தப் பத்திரிகை மீதும் உரிமைப் பிரச்சினை வந்தபொழுது அவர்களை வரவழைத்துப் பேசி, தவறாக நடந்துவிட்டது என்று சொல்லியிருந்தால் அதைப் பற்றியெல்லாம் தீர்ப்பளித்திருக்கிறேன். எனவே, நான் உடனடியாகத் தீர்ப்பு அளிக்கவில்லை, அப்படி உடனடியாக அளித்திருப்பதாக இப்படிப்பட்ட எந்த உரிமைப் பிரச்சினையிலும் காட்ட முடியாது.

திரு. துரை முருகன்: என் மீது அனுப்பியிருக்கிறதே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்வது, பத்திரிகையைப் பொறுத்த வரையில்.

திரு. துரை முருகன்: தட்டு காண்பித்ததற்காக என் மீது அனுப்பப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இங்கே உள்ள உறுப்பினர் பற்றிய பிரச்னை. அது வேறு.

(திருவாளர்கள் சி. ஆறுமுகம், க. சுப்பு, துரை முருகன் ஆகியோர் எழுந்தனர்)

தயவு செய்து ஒருவர் பேசுங்கள்.

திரு. சி. ஆறுமுகம்: நான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேச முடியாது. உரிமைக் கமிட்டிக்குப் போக வேண்டுமென்று அவர்தான் சொல்ல வேண்டும்.

திரு. துரை முருகன்: என் மீது உள்ள பிரச்னை மீது அப்பொழுது அனுப்பினார்களே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த உரிமை மீறல் பிரச்னையை உரிமைக் குழுவிற்கு அனுப்பியதற்குக் காரணம், அது இங்கே நடந்த பிரச்னை. அதனால் அது உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. ஆனால் இது வெளியிலே நடந்த ஒருவரைப் பற்றிய பிரச்னை. (குறுக்கீடு) முரசொலி பத்திரிகைக்குக்கூட அப்படிச் சொல்லவில்லை, அவர்களை வரவழைத்துப் பேசி பிரச்சினைகளைக் கேட்டு பிறகுதான் தீர்ப்பளித்திருக்கிறேன்.

இந்தப் பிரச்னை மீது பின்னர் தீர்ப்பளிக்கப்படும்.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, அந்த உரிமைப் பிரச்னையில் பிரைமா ஃபேசி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து நீங்கள் உட்காருங்கள்.

திரு. துரை முருகன்: பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்னை மீது கிடையாது. தயவு செய்து அமருங்கள்.





## (3) ''ஒத்திவைப்புத் தீர்மானம்''

## காவல் துறையினர் மதுரையில் ஓர் படவிழாவின் போது நடத்திய தடியடிப் பிரயோகம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஒத்தி வைப்புத் தீர்மானம். மதுரையில் 10—3—1979, 11—3—1979 நடந்த திரு. சிவாஜி கணேசன் அவர்களின் 200-வது பட விழாவின் போது காவல் துறையினர் தடியடி செய்தும், பலர் மீது வழக்குத் தொடர்ந்து இருப்பதாலும் ஏற்பட்டுள்ள பதட்டமான நிலையைக் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு திரு. மு. அம்பிகாபதி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். திரு. மு, அம்பிகாபதி அவர்கள்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: இது சம்பந்தமாக நானும் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். என்னுடைய அனுமதியைக் கேட்காமல் எழுந்து பேசினால் என்ன அர்த்தம்?

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: அது சம்பந்தமாக நான் 12—ஆம் தேதி கொடுத்தேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் சம்பந்தமாக அவரும் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் முதலில் கொடுத்தபொழுது அவசியமில்லை என்று தள்ளிவிட்டேன். பிறகு எழுதிக் கொடுங்கள் என்று சொன்னேன். அப்படி எழுதிக் கொடுக்காததால் அவர்கள் பெயர் வராது.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: யார் சொன்னது என்னிடத்தில்?

[முற்பகல் 11-10]

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: என் பெயரையும் சேர்த்துக் கொள்ளுங்கள். நான்தான் முதலிலே கொடுத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு, திரு. மு. அம்பிகாபதி, திரு. ஒ. சோ. வேலுச்சாமி, திரு. ரெ, வீ. சவுந்திரராஜன்,

திரு. ஓ. சுப்பிரமணியம், திரு. நா. சுந்தரராஜ், திரு. துரை முத்துசாமி ஆகியோர் தீர்மானங்கள் தந்திருக்கிறார்கள். இது எப்படி அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: பாய்ண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதி இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதுரையில் நடந்திருக்கக்கூடிய இந்தச் சம்பவம் தமிழக மக்களை மிகவும் புண்படுத்தக்கூடிய ஒரு சம்பவமாகும். மதுரைத் திருநகரில் இந்த மாதம் 10, 11 தேதிகளில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் 200 படங்களில் நடித்ததைத் தொடர்ந்து விழா நடந்திருக்கிறது. பராசக்தி படம் தொடங்கி, 'ஓடினாள், ஓடினாள், என் தங்கை வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள், என் தங்கையின் ஓட்டத்தைப் போக்கியிருக்கவேண்டும், வாட்டத்தைப் போக்கி இருக்கவேண்டும் இன்றைக்கு இந்தச் சட்டத்தை நீட்டுவோர்' என்று கலைஞர் வசனத்தைப் பராசக்தியிலே பேசி, எதற்கெடுத்தாலும் சட்டத்தைச் சுட்டிக் காட்டக் கூடாது என்று பராசக்தியில் பேசத் தொடங்கி, 200 படங்களில் நடித்து, கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி-யாகவும், கட்டபொம்மனாகவும் நடித்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அம்பிகாபதி, அந்த விவரங்கள் எல்லோருக்கும் தெரியும்.... (சிரிப்பு)

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, அம்பிகாபதியாகவும் நடித்தவர் அவர் (சிரிப்பு).

திரு. மு. அம்பிகாபதி : கட்டபொம்மனாகவும், மனோகரனாகவும் (சிரிப்பு) நடித்து, தமிழக மக்களுடைய மகத்தான ஆதரவைப் பெற்றவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன்; தென்னிந்திய நடிகர் சங்கத்திலே மிக முக்கியமான ஒரு தலைவர் முதலமைச்சர். அதிலே ஒரு முக்கியமான தலைவருடைய 200-வது படவிழா மதுரைத் திருநகரில், கண்ணகியால் பெயர் பெற்ற திருநகரில், திருவிழா. அந்த விழாவில் கட்டை வண்டிகள் ஓடின. கட்டை வண்டிகள் ஓடினால், போலீஸ்காரர்களுக்கு என்ன? கட்டை வண்டிகள் ஓடாமல், கெடிலாக் கார்களா ஓடும்? அப்படி ஓடிய கட்டை வண்டிகளை நிறுத்தி, அவசியமில்லாத வம்பை சில இடங்களிலே காவல் துறை இழுக்கிறயாதிவி தெரிகிறது. இதனால், சிவாஜி கணேசன் விழா நடக்கிறது,





ஆளுங்கட்சியினர் ஏதோ பண்ணுகிறார்கள் என்று வரலாம். ஆகவேதான் சபாநாயகர் அவர்களிடம் சில விவரங்களைக் கூறினேன். உலகப் புகழ்பெற்ற நடிகரும், அறிஞர் அண்ணா அவர்களால் தென்னாட்டு மார்லன் பிராண்டோ என்று பாராட்டப்பட்டவருமான சிவாஜி கணேசனுக்குப் பாராட்டு விழா நடக்கும் போது, அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதை விட்டு விட்டு, போலீஸ் சச்சரவை ஏற்படுத்தியுள்ளது, கட்டை வண்டிகளைக் கண்ட இடத்தில் நிறுத்தியுள்ளது என்பதைப்பற்றி இந்த அவையிலே விவாதிக்க, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய மிக முக்கியமான பிரச்னையாக இது இருக்கிற காரணத்தால், அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இது குறித்து விவாதிக்க தாங்கள் அனுமதி தரவேண்டுமென்று விரும்பி, வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : பேரவைத் தலைவரவர்களே, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் எங்களது காங்கிரஸ் கட்சியிலே இருக்கக்கூடிய முக்கிய தலைவர்களிலே அவரும் ஒருவர். ஆகவே, அவரது 200-வது பட விழாவையொட்டி 10-3-1979ஆம் தேதி காலையிலே, அரசியல் மாநாடு நடத்துவதற்கு முன்பாக ஒரு பெரிய ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்தார்கள். அதிலே, நடந்த அந்தத் துரதிருஷ்டமான சம்பவத்திற்கு 3 காரணங்கள். முதலாவதாக, ஏற்கனவே, மதுரையிலே உள்ள குருவிக்காரன் சாலையிலிருந்து மாசிவீதி வழியாக, தமுக்கம் மைதானம் வந்தடைய ஊர்வலத்தினர் அனுமதி பெற்றிருந்தார்கள். ஆனால், போலீஸ்காரர்கள், குருவிக்காரன் சாலையிலிருந்து நேரடியாக, தமுக்கம் வந்து சேரவேண்டும், மாசி வீதி வழியாக வரக்கூடாது என்று தடுத்திருக்கிறார்கள். இரண்டாவதாக, ஏறக்குறைய 500 மாட்டு வண்டிகள் அந்த ஊர்வலத்திலே கலந்து கொண்டிருக்கின்றன. மாரியம்மன் தெப்பக்குளத்திலிருந்து 1 கிலோ மீட்டர் வந்த பிறகு, அந்த வண்டிகள் தொடரக் கூடாது என்று போலீசார் தடுத்திருக்கிறார்கள்.

மூன்றாவது காரணம் ஒரு கொடி தண்டிலே இருந்த காங்கிரஸ் கொடியை அங்கிருந்த போலீஸ்காரர் பலவந்தமாக அகற்ற முயற்சி செய்திருக்கிறார்கள், அதை காங்கிரஸ் தோழர்கள் தடுத்திருக்கிறார்கள். அதனால் போலீஸ்காரர்கள் அவர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்திருக்கிறார்கள். இதனால் காங்கிரஸ் தோழர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள். இந்த மூன்று காரணங்களின் அடிப்படையில்தான் இந்த துரதிருஷ்டவசமான சம்பவம் நடந்திருக்கிறது. அது மட்டும் அல்ல, காங்கிரஸ் தோழர்கள் மீது பல வழக்குகள் போட்டிருக்கிறார்கள் என்று அறிகிறோம். லாரிகளில் வந்த பல்வேறு காங்கிரஸ்

தோழர்கள் மீதும் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. ஆகவே இது பற்றி விவாதிக்க அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சட்ட மற்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எழுப்பப்பட்டிருக்கிற பிரச்னை பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தவர்கள் தங்களது கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் எவ்வளவு தலைசிறந்த உலகப் புகழ்பெற்ற நடிகர் என்பதும், நடிப்புக்கே இலக்கணம் வகுத்திருக்கிற வல்லவர் என்பதும், திரு. அம்பிகாபதி அவர்கள் சொல்லித்தான் நாடு தெரிந்துகொள்ளவேண்டும் என்பதில்லை, நான் கூறித்தான் நாடு புரிந்துகொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. அவர் பராசக்தியிலே தொடங்கி, திரிசூலம் என்ற படம் வரை 200 படங்களில் நடித்து முடித்த சாதனையை பாராட்டுவதற்காக மதுரையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் சில அசம்பாவிதங்கள் நடைபெற்றதைப்பற்றி உறுப்பினர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள்.

எனக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நான் அதற்கு பதில் அளிக்க விரும்புகிறேன். 2–3–1979 அன்று அனைத்திந்திய சிவாஜி கணேசன் இரசிகர் மன்ற செயலர் திரு. மகாமுனி, திரு. சண்முகம் ஆகியோர், 200–வது பட வெளியீட்டு விழாவையொட்டி 10–3–1979 அன்று மதுரை மாரியம்மன் தெப்பக் குளத்திலிருந்து தமுக்கம் மைதானம் வரையில் ஊர்வலம் நடத்த அனுமதி கோரினார்கள். ஊர்வலத்தில் மாட்டு வண்டிகள் வைத்து ஊர்வலம் நடத்தக்கூடாது என்ற நிபந்தனையோடு காவல் துறையினர் அனுமதியளித்தனர். அனுமதி கொடுக்கப்பட்ட தேதி 5–3–1979.

10 3–1979 அன்று காலை சுமார் 10.00 மணி அளவில், திரு. மகாமுனி, சண்முகம், ராஜசேகரன் மற்றும் பலர் தலைமையில் சுமார் பத்தாயிரம் தொண்டர்கள் மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தின் அருகில் கூடினர். 23 மாட்டு வண்டிகள், 34 லாரிகள், 14 பேருந்துகள், 19 டிராக்டர்கள், 3 கார்கள், 6 வேன்கள், 6 ஆட்டோ ரிக்ஷாக்கள், 3 குதிரைகள் ஊர்வலத்தில் தொடர்ச்சியாக வந்தன, காவல் துறையின் காவலர்கள், சட்டம், ஒழுங்கை, போக்குவரத்தை பாதுகாப்பதற்காக அங்கே இருந்தார்கள், அவர்கள் ஊர்வலத்தில் மாட்டு வண்டிகள் எடுத்துச் செல்லக் கூடாது என்று எச்சரித்தார்கள். அந்த எச்சரிக்கைக்கு செவி சாய்க்காமல் ஊர்வலத்தை நடத்துவோர் தொடர்ந்து கூடினர்.



மாட்டு வண்டிகள் வேண்டாம் என்று சொன்ன காவல் துறையினர்மீது ஒழுங்கற்ற முறையில் கற்களை வீசினர். இதனால் ஒரு ரிசர்வ் இன்ஸ்பெக்டர், மற்றும் 2 காவலர்கள் காயம் அடைந்தனர். ஒரு காவலர் ஆஸ்பத்திரியில் தங்கும் நோயாளியாக சிகிச்சை செய்யப்பட்டார். மற்ற இருவர் வெளி நோயாளிகளாக சிகிச்சை அடைந்தனர், கல் எரிந்த கூட்டத்தினரை போலீசார் துரத்தியபோது, குப்பமுத்து, அலிகான் என்னும் இரண்டு பேர்கள், பொதுமக்களில் காயம் அடைந்தனர். அவர்கள் வெளி நோயாளிகளாக சிகிச்சை பெற்றார்கள்.

இதனால் பி-2 காவல் நிலையத்தினர் இ.பி.கோ. 147, 148, 332, 333, 337, 118 பிரிவுகளின்கீழ் குற்ற எண் 183/79–ல் ஒரு வழக்கு பதிவு செய்துள்ளனர். ஊர்வலத்தில் பதட்ட நிலைமை சுமார் 1.5 வரையில் நீடித்திருந்தது, இரவில்தான் அமைதி அடைந்தது. காவல் துறையினர் கூட்டத்தை திருத்துவதற்கு பிரம்பைத்தான் அவர்கள்மீது பயன்படுத்தினார்கள். தொடர்ந்து 13–3–1979 அன்று நிகழ்ச்சியும் நடைபெற்றது. நிலைமை அமைதியாகவே இருந்தது. எனவே, இவற்றைக் குறித்து விவாதிக்க மன்றத்தின் ஏனைய பிற அலுவல்கள் ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இதைக்குறித்து விவாதிக்க மன்றத்தின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்பதால் அனுமதி மறுக்கப்படுகிறது.

[முற்பகல் 11.20]

(4) அரசினர் தீர்மானம்

[விதி 23-யைத் தளர்த்தல்]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 23–ஐ தளர்த்தி இப் பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## (5) கவன ஈர்ப்புகள்

### (அ) மதுரை, திருப்பரங்குன்ற காவல் நிலையத்தில் ஓர் வழக்கறிஞர் தாக்கப் பெற்றது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 41—வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து ஒரு கவன ஈர்ப்பு பிரச்னையை திருவாளர்கள் திரு. பி. எச். பாண்டியன், ரா. மார்க்கபந்து, திரு.பி. ராமதாஸ், திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா ஆகியோர் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, ''திருப்பரங்குன்றத்தில் வக்கீல் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து கோட்ட ஆட்சியாளர் விசாரணைக்குப் பதிலாக நீதி விசாரணை கோரி 14–3–1979 முதல் தமிழ்நாட்டிலுள்ள வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களைப் புறக்கணிக்கப்போவதாக, சென்னை வழக்கறிஞர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது குறித்து'', என்கிற அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. க. சுப்பு : பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். இந்த சப்ஜெக்டைப் பொறுத்தவரையில், மின்சார அமைச்சருக்கு சம்பந்தம் கிடையாது. இன்னாரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன் என்று சொல்கிறபோது சம்பந்தப்பட்ட அமைச்சரை குறிப்பிட்டுத்தான் சொல்லவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிக் கிடையாது. கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. எந்த அமைச்சர் வேண்டுமானாலும் அறிக்கை அளிக்கலாம்.

திரு. க. சுப்பு : பதில் சொல்லலாம். ஆனால் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன் என்று சொல்லக்கூடாது,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் ஆலோசனைக்கு நன்றி.

திரு. ரா. மார்க்கபந்து : நான் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு உறுப்பினர் படித்து இருக்கிறார். அமைச்சர் பதில் சொல்லியபிறகு நீங்கள் கேள்விகள் போடலாம்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மதுரை சட்டக் கவுன்சிலும், மற்ற சட்டக் கவுன்சிலும் கீழ்கண்டவாறு மனுக்கள் கொடுத்தனர் :—

''திரு. வி. அய்யாத்துரை என்னும் வழக்கறிஞர் 24-2-1979 அன்று, வழக்கில் இருக்கும் தனது கட்சிக்காரரின் சொத்து சம்பந்தமாகவும், போலீஸ் பாதுகாப்புக் கேட்டும், திருப்பரங்குன்றம் காவல் நிலையத்திற்கு வந்திருக்கிறார். அவர் அங்கு துன்புறுத்தப்பட்டு, கடுமையாக அடிக்கப்பட்டார் என்றும், மேலும் அவர்மீது இந்திய தண்டனைச் சட்டம் 332—வது பிரிவின்படி பொய் வழக்குப் போட்டுள்ளதாகவும், அதில் சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகள், குறிப்பாக டெப்டி இன்ஸ்பெக்டர் ராஜகோபாலை, தற்காலிக வேலை நீக்கம் செய்ய வேண்டும் என்றும் கோரி, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனுக் கொடுத்துள்ளனர்.

இதனை மதுரை தெற்கு எஸ்.பி.-க்கு அனுப்பி, மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை கேட்டதில், டெப்டி இன்ஸ்பெக்டர் ராஜகோபால் என்பவர், திருவாளர் அய்யாத்துரை என்பவரால் தாக்கப்பட்டார் என்றும், இ-1. காவல் நிலையத்தில், இந்திய தண்டனைச் சட்டம் 332—வது பிரிவின்கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், மேற்படி அய்யாத்துரை 24—2—1978 அன்று 8—30 மணிக்கு கைது செய்யப்பட்டு, 11—30 மணிக்கு ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார் என்றும் தெரிய வந்தது. மேலும், மேற்படி டெப்டி இன்ஸ்பெக்டரும், அய்யாத்துரையும் அரசு எர்ஸ்கின் மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டு, புற நோயாளிகளாக அவர்கள் சிகிச்சை பெற்றனர்.

இந்தப் பிரச்சினை பற்றி மதுரைக் கோட்டாட்சித் தலைவரை P.S.O. 145-ன்கீழ் ஒரு விசாரணையினை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் பணித்திருந்தார். ஆனால் இது பற்றிய சம்பந்தப்பட்ட எல்லா தரப்பினருக்குத் திருப்தி அளிக்கும் வகையில் விசாரணை ஒன்று நடத்த வேண்டும் என்ற பல தரப்பட்டவர்களின் வேண்டுகோளையும், சட்ட மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரின் வேண்டுகோளையும் ஏற்று, அரசு இதுபற்றி ஒரு முழுமையான விசாரணையினை ஒரு விசாரணைக் கழகத்திடம் (Board of enquiry) ஒப்படைப்பது என்று முடிவு செய்திருக்கிறது

இந்த விசாரணைக் கழகத்தின் தலைவராக நீதிபதி ஒருவரும், வழக்கறிஞர்கள் மன்றத்தின் சார்பாக ஒரு பிரதிநிதியும், காவல் துறையின் சார்பாக ஒரு பிரதிநிதியும், என மூன்று பேர்களைக் கொண்ட விசாரணைக் கழகம் ஒன்று நிறுவப்பட இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவரவர்களே, நீதிக்காக வழக்காடுகின்ற வழக்கறிஞர்களுக்கு நீதி கிடைப்பதற்கு இன்றைக்கு நீதி விசாரணை நடத்த உத்தரவிட்ட அரசுக்கு நான் முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் மேலும் இதுபோன்ற சம்பவங்கள் வராமல் நல்ல முறையில் பார்த்துக் கொள்ளவேண்டும்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை]

Bar and Judiciary are the two wings of administration of justice, They both co-exist together என்று சொல்வார்கள்:

If one of the wings is injured, justice cannot be dispensed. Bar is the guardian of Judiciary and protection of fundamental rights and custodian of democracy என்று சொல்வார்கள். ஆகவே, இந்த 'பார் கவுன்சிலைப்' பொறுத்தவரையில் வழக்கறிஞர்கள் என்பவர்கள் சமுதாயத்திற்கு புனிதமான தொண்டு செய்கின்றவர்கள். இந்த சமுதாயத்திற்கு இதைப் போன்ற சம்பவங்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று வழக்கறிஞர்கள் சார்பில் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, அரசு இரண்டு இறக்கைகளையும் பராமரிக்கும்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று மதுரையில் நடைபெற்ற இந்த சம்பவத்தைக் கண்டிக்கும் வகையில் தமிழ்நாடு பூராவும் இருக்கிற வழக்கறிஞர்கள் வழக்கு மன்றங்களுக்குப் போகாமல் நிராகரித்தார்கள். அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு வழக்கறிஞர்கள் சங்கம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, இந்த சம்பவத்தில் ஆர். டி. ஓ. அவர்கள் சாட்சியாக இருக்கக்கூடிய நிலை இருந்தது; ஆகையால் அவரை நீக்கி, நீதிபதி தலைமையில் விசாரணை நடத்த வேண்டுமென்று தீர்மானம் போட்டு, அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதை ஏற்று, இந்த அரசு நீதிபதி தலைமையிலும் மற்றவர்கள் பொறுப்பிலும் நீதிவிசாரணை நடத்த உத்தரவிட்டதற்காக, வழக்கறிஞர்கள் மன்றத்திலே நானும் திரு. பி. எச். பாண்டியன் அவர்களும் உறுப்பினர்கள் என்ற முறையில் இருவரும் இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாண்டியன் அவர்கள் சொன்ன கருத்தை நான் பரிபூரணமாக ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இதிலே இருக்கிற பிரச்னை என்னவென்றால், தமிழ்நாடு பார் கவுன்சில்



ஒரு ரெசலூஷன் போட்டிருக்கிறது. ஒரு டிஸ்டிரிக்ட் ஜட்ஜை வைத்து நீதிவிசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது போலீஸ் தரப்பிலிருந்து ஒருவர், வழக்கறிஞர் தரப்பிலிருந்து ஒருவர் இந்த நீதிவிசாரணைக் குழுவில் இடம் பெறுவார்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள், இது பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக ஒருவருக்கு ஒருவர் மோதல் ஏற்பட்டு, விவகாரம் பெரிதாகிவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆகையால் பார் கவுன்சிலை கலந்து ஆலோசித்து, ஒரு 'அக்ரீடு ப்ரொப்போசலுக்கு' வந்தால் நல்லது. இல்லை என்றால் ஒரு வேளை அரசாங்கத்தின் முடிவை பார் கவுன்சில் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், மீண்டும் அவர்கள் கோர்ட்டுக்குப் போகமாட்டார்கள்; பாண்டியன் அவர்களும் கோர்ட்டுக்குப் போக முடியாது; ஃபீஸ் வாங்க முடியாது. தமிழ்நாடு பார் கவுன்சில் என்பது இந்த மாநிலம் பூராவும் இருக்கிற ஒன்று.

நான் ஏற்கெனவே நீதிவிசாரணை நடத்த ஹைகோர்ட் நீதிபதி ஒருவரை நியமிக்க வேண்டுமென்று கேட்டேன். ஆனால் அவர்களே முன்வந்து டிஸ்டிரிக் ஜட்ஜ் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். 'போர்டு ஆஃப் என்குயரி' போடுவதாக இருந்தால் ஒரு டிஸ்டிரிக்ட் ஜட்ஜை போட வேண்டும். அப்போதுதான் நியாயம் கிடைக்கும். ஆகவே, மேலும் தொந்தரவு ஏற்படாத வகையில், பார் கவுன்சிலை தொடர்பு கொண்டு, ஒரு சுமூகமான முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI : Sir, I want to point out this to the hon. Member Thiru S.J. Sadiq Pasha. I think even the Bar Council asked for the services of only a District Judge, a judicial officer at the level of a District Judge to make an enquiry into this matter and not necessarily a High Court Judge. I think they will be quite content to have a Judicial officer of the status of a District Judge. That is practically the demand made by the Bar Council of Madras.

THIRU S. J. SADIQ PASHA ; The resolution passed by the Bar Council is to the effect that only a District Judge may be appointed for the purpose of enquiry. But the Hon. Minister in his reply has said that it will be a Board of Enquiry. So my point is that you have not accepted the resolution passed by the Bar Council. This is directly opposite to what has been stated by the Bar Council of Madras. I request the Hon. Minister to consult the Bar Council and come to an understanding.

[1979 மார்ச் 15

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவரவர்களே, சாதாரண நீதிவிசாரணை என்றால் நீதிபதியை மட்டும் போடுவதுதான் வாடிக்கை. ஆனால் இதிலே வழக்கறிஞர்களுக்கு ஒரு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலேயும், அதே நேரத்தில் காவல் துறையினரும் புறக்கணிக்கப்படக்கூடாது என்ற காரணத்தால் அவர்கள் சார்பிலும் ஒரு பிரதிநிதிக்கு இடம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலேயும் அரசு முடிவு செய்திருக்கிறது. ஒரு நீதிபதியைவிட ஒரு விசாரணைக் கழகம் மேலானது என்பதை மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் ஓரளவு கலந்து இந்த 'போர்டு ஆஃப் என்குயரி' போட்டிருப்பதால் வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பிலும் நிச்சயமாக அதை ஏற்றுக் கொண்டு, தங்களுடைய பணியைத் தொடங்குவார்கள் என்று நான் நம்புகிறேன்.

[முற்பகல் 11.30]

திரு. பி. ராமதாஸ்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சம்பவம் குறித்துச் சொல்லப்படுகின்றபோது, காவல் நிலையத்திலே காவல் துறையைச் சேர்ந்தவர்கள் வழக்கறிஞர்களைத் தாக்கியதற்கான ப்ரைமா பேசி கேஸ் இருக்கிறது. ஆகவே ஒருவர் மட்டும் அன்றையதினம் அந்த வழக்கறிஞரைத் தாக்கவில்லை. அதிலே சம்பந்தப்பட்டவர்கள் ஒருவர் மட்டுமல்ல அங்கே இருக்கின்ற ஹெட் கான்ஸ்டபிள், ரைட்டர் ஆகியோரும் இன்னும் பலரும் சம்பந்தப்பட்டிருப்பதால் அவர்கள் அனைவரையும் முதலிலே வேலை நீக்கம் செய்ய வேண்டும். அவ்வாறு வேலை நீக்கம் செய்த பிறகு அந்த ஜுடிஷியல் என்கொயரியில் அவர்களுக்கும் அனுமதி தரவேண்டும். ஏனென்றால் இப்படிப்பட்ட சம்பவங்கள் தமிழ்நாட்டிலே ஒரு முன் மாதிரியாக இருந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் இதனை நான் அமைச்சரவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத்தலைவரவர்களே, நாம் முன் கூட்டியே ஒரு சாராரை வேலை நீக்கம் செய்வது என்பது நாமே ஒரு முடிவுக்கு வந்தது போலாகும். அந்த ஜுடிஷியல் என்கொயரி விசாரிப்பதற்கு முழு உரிமை பெற்று இருக்கின்ற காரணத்தால் நாம் மீண்டும் இதில் தலையிடுவதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1979 மார்ச் 15]

திரு. ப. சந்திரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, வழக்கறிஞர்கள் காவல் துறைக்கு நீதி மன்றங்களில் நிறைவேற்றப்படுகின்ற ஆணை சம்பந்தமாகச் செல்வது உண்டு. ஆகவே தமிழ்நாடெங்கும் இந்த மாதிரி நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறாமல் தடுக்கின்ற வகையிலே வழக்கறிஞர்கள் வழக்குகள் சம்பந்தமாக காவல் துறைக்கு வருகின்றபோது அவர்களிடம் மரியாதையாக காவல் துறையினர் நடந்துகொள்ளவேண்டும் என்ற ஒரு ஆணையைப் பிறப்பிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவரவர்களே, இதைப்பற்றி ஏற்கனவே வந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திலே பேசுகிறபோது குறிப்பிட்டிருக்கிறேன். பொதுவாக காவல் துறையும் அதேபோல் வழக்கறிஞர்களும் ஒருவருக்கொருவர் சுமுகமாக இருக்க வேண்டியவர்கள். மேலும் இந்த விசாரணைக் குழுவின் மூலம் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு ஏற்பட்டு மீண்டும் நல்ல ஒரு சூழ்நிலை உருவாகும் என்று நிச்சயமாக நாம் எதிர்பார்க்கலாம்.

(திரு. ரா. மார்க்கபந்து எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது சம்பந்தமாக இனிமேல் பேசக்கூடாது. உட்காருங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, நான் 42-வது விதியின் கீழ் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: அது அஜெண்டாவில் சேர்க்கப்படவில்லை. மேலும் நீங்கள் 41-வது விதியில் கொடுக்கவில்லை. ஆகவே நீங்கள் பேச முடியாது. வேண்டுமானால் அறையிலே வந்து விவரம்கேளுங்கள். உட்காருங்கள்.

## (ஆ) துறையூர் கந்தசாரி சர்க்கரை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் குறித்து

திரு. க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, திருச்சி மாவட்டம் துறையூர் கந்தசாரி சர்க்கரை உற்பத்தியாளர் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கத்தின் சொத்துக்கள் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனைக்கு வருவதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளதால், அந்த ஆலைக்கு 1974-ஏப்ரலில் கரும்பு கொடுத்த விவசாயிகளுக்கு முழுமையாகக் கணக்குத் தீர்க்கப்

பெறாததினால் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து மாண்புமிகு கிராமத்தொழில் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவரவர்களே, துறையூர் கரும்பு, வெல்லம் மற்றும் கந்தசாரி சர்க்கரை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் 432 உறுப்பினர்களுடன் ரூ. 7,600 பங்கு தொகையாக செலுத்தப்பட்டு 21-8-1965-ல் பதிவு செய்யப்பட்டு 24-8-1965-ல் இயங்கத் தொடங்கியது, அடியிற் கண்ட நிதி உதவிகள் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் வழங்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| 1, | மூலதனக் கடன் | | ரூ.2,10,000 |
| 2. | கட்டிடக் கடன் | .. | ரூ.2,48,000 |
| | மொத்தம் | .. | ரூ.4,58,000 |

இச்சங்கம், பம்பாயிலிருந்து நாளொன்றுக்கு 10 டன் திறனுள்ள ஒரு கரும்பு பிழியும் இயந்திரம் (Deolux Crusher) வாங்கியது. அவ்வியந்திரம் 1969 ஆம் ஆண்டு சனவரி திங்களில் தான் இயக்கி விடப்பட்டது.

14-2-1969-ல் தொடங்கிய கரும்புப் பருவ காலத்தில் அதாவது 14-2-1969-முதல் 30-5-69 முடிய குறைந்த அளவிலான 352.6 டன் கரும்பு மட்டுமே பிழிய முடிந்தது. அடிக்கடி மேற்கூறிய இயந்திரத்தில் பழுது ஏற்பட்டால் அதைச் சரி பார்க்க அதிகமான தொகை செலவிட வேண்டி வந்தது. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு இந்த இயந்திரத்தை பார்வையிட்டு தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கரும்பில் நார்ப்பகுதி அதிக அளவில் உள்ளதால் இந்த இயந்திரம் கரும்புச்சாறு பிழிய உதவாது என்ற கருத்தினைத் தெரிவித்தது. எனவே சங்கம் 1969 ஆம் ஆண்டிலிருந்து 1973 வரை இயங்காமலிருந்தது.

அதன் பிறகு வேறு ஒரு வகை இயந்திரம் (Hydraulic Crusher) வாங்கப்பட்டு சங்கத்தில் இயக்கப்பட்டது. இதன் பயனாக இரண்டாம் முறையாக 16-3-1974 முதல் 10-5-74 வரை சங்கத்தின் உற்பத்திப் பணி நடைபெற்றது. இம் முறை 1196.939 டன் கரும்பிலிருந்து சாறு எடுக்கப்பட்டது. இதற்கிடையில் சங்க நிர்வாகக் குழு இயக்குநர்களிடம் சங்கத்தை பராமரித்து நடத்தும் ஆர்வம் குறைந்து விட்டது. எனவே சங்க நிர்வாகக் குழுவை கலைத்து விட்டு 12-1-1975-ல் திருச்சி உதவி இயக்குநர், சங்கத்தின் தனி அலுவலராக நியமிக்கப்பட்டார்.



தனி அலுவலர் பொறுப்பேற்ற சமயம் இயந்திரத்தில் பழுது ஏற்பட்டிருந்தது. கரும்பு சாகுபடியாளர்களுக்கு கொடுக்க வேண்டிய பாக்கி, விற்பனை வரி மற்றும் மின்துறைக்கு செலுத்த வேண்டிய பாக்கி ஆக மொத்தம் ரூ. 94,435.30 வரை சங்கத்திற்கு பொறுப்பு இருந்தது. எனவே வாரியம், சங்கம் இயங்குவதற்கு ரூ.1 இலட்சம் கூடுதல் மூலதனக் கடன் வழங்கியது. இயந்திரப் பழுதைச் சரி பார்த்து, சங்கம் மூன்றாவது முறையாக 16-3-1975-ல் உற்பத்தியைத் தொடங்கியது. இம்முறை 339.11 டன் கரும்பு மட்டுமே பிழியப்பட்டது. மீண்டும் இயந்திரக் கோளாறுகளினாலும் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டதாலும் 20-5-75 முதல் உற்பத்தி நிறுத்தப்பட்டது. இயந்திரத்திலுள்ள குறைகளை நீக்கி மீண்டும் நான்காவது முறையாக 24-4-76-ல் உற்பத்தி தொடங்கப்பட்டது. இச்சமயம் சங்கத்திற்குத் தேவையான கரும்பு 'அருணா சுகர்ஸ் லிட்' மூலம் பெறப்பட்டது. சங்கம் தொடர்ந்து இலாபத்தில் இயங்க வழி உண்டா என்பது பற்றி அறிய அருணா சுகர்ஸ் லிமிடெட் அனுப்பிய ஒரு தொழில் நுட்ப அலுவலர் ஆலையைப் பார்வையிட்டு கரும்பிலிருந்து கிடைக்கும் சாறு குறைவாக இருப்பதால் மேற்கொண்டு ஆலையில் நடக்கும் உற்பத்தியை நிறுத்திவிடும்படி ஆலோசனை வழங்கினார். அதன் பேரில் உற்பத்தி 30-4-76-ல் நிறுத்தப்பட்டது.

மூன்றாவது முறை நடந்த சர்க்கரை உற்பத்திச் செலவு ஒரு குவிண்டாலுக்கு ரூ. 450 ஆகவும் நான்காவது முறை ரூ. 1273 ஆகவும் இருந்தன. இத்தொகை வெளிச்சந்தையில் உள்ள விலையைக் காட்டிலும் அதிகமாக இருந்ததால், சர்க்கரை உற்பத்தி விலை மிகவும் கட்டுக்கடங்காதது எனத் தென்பட்டது.

இது மட்டுமின்றி கரும்பு கொள்முதல் செய்வதிலும் அதிக இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. தமிழ்நாடு அரசு 32 கிராமங்களைக் குறிப்பிட்டு அந்த கிராமங்களின் எல்லைக்குள் கிடைக்கும் கரும்பை இச்சங்கம் கொள்முதல் செய்து கொள்ளலாமென ஆணை வழங்கியது. ஆனால் இந்த கிராமங்களில் 1975-76 ஆம் ஆண்டு 4 கரும்பு விவசாயி உறுப்பினர்கள் மட்டுமே 4.30 ஏக்கர் நிலத்தில் கரும்பு பயிர் செய்திருந்தார்கள். அவர்கள் பயிரிட்ட கரும்பு மட்டுமே சங்கத்திற்கு கிடைப்பதாக இருந்தது. இது தவிர இக்கிராமங்களில் 1975-76 ஆம் ஆண்டில் மொத்த கரும்பு பயிரிட்ட நிலம் 32.30 ஏக்கரேயாகும். சங்க உறுப்பினர் அல்லாதவரிடம் கரும்பு கொள்முதல் செய்வதில் தடையிருந்தது. எனவே சங்கம் கட்டுபடியாகாத உற்பத்தியைத் தவிர தேவையான கரும்பு கொள்முதல் செய்வதிலுள்ள இடர்ப்பாடுகளையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இதன் பின் மாநில சர்க்கரை இயக்குனர் அலுவலகத்தைச் சார்ந்த ஒரு தொழில் வல்லுநர் சங்கத்தைப் பார்வையிட்டு கந்தசாரி சர்க்கரையில் உற்பத்தி நட்டம் அதிகமென்றும் இந்த ஆலையில் மேலும் பணம் செலவு செய்து எவ்விதத்திலேனும் அதை இயங்கச் செய்ய வேண்டும் என்று முயற்சிப்பது நல்லதல்ல என்றும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

சங்கம் ஏற்கனவே (31 3-1976-ல்) ரூ. 3,31,373.37 நட்டத்தில் இயங்கியது. தொடர்ந்து நடத்தினால் மேலும் நட்டம் வரும் நிலை ஏற்பட்டது. எனவே வாரியம், தமிழ்நாடு அரசை அணுகி சங்கத்தை கலைத்து விடுவதற்கு ஒப்புதல் கோரியது. 1976 டிசம்பர் திங்களில் அரசும் இச்சங்கத்தைக் கலைப்பதற்கு ஒப்புதல் வழங்கியது.

மார்ச் 1978 திங்களில் துறையூர் கந்தசாரிக் கூட்டுறவுச் சங்கத்தைக் கலைத்து உதவி இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த கூட்டுறவு உப பதிவாளரை கலைப்பு அலுவலராக நியமித்து வாரியம் ஆணை வழங்கியது. கலைப்பு அலுவலர் 19-4-1978-ல் பொறுப்பேற்றுக் கொண்டார்.

சங்கத்திலுள்ள சொத்தின் மதிப்பு ரூ. 4,88,503.87 ஆகும். சங்கத்தின் கடன் ரூ. 5,51,748.77 ஆகும். எனினும் சங்கத்தின் சொத்துக்கள் விற்கப்பட்ட பின்னரே இறுதிநிலை தெரிய ஏதுவாகும்.

1961-ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் பிரிவு 87-ன்படி சங்கத்தின் கலைப்பு அலுவலருக்கு சங்கத்தின் சொத்துக்களை விற்பதற்கும் சங்கக் கடன்களை தீர்ப்பதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, சங்கத்தில் பொறுப்பேற்ற கலைப்பு அலுவலர் நவம்பர் '78-ல் சங்கத்தின் நிலம், இயந்திரம் மற்றும் இதர சாதனங்களை விற்பதற்கான முத்திரையிட்ட 'டெண்டர்களை' கோரினார். ஆனால் எவரும் 'டெண்டர்' கொடுக்கவில்லை. எனவே சங்கத்தின் சொத்துக்களை 10 விதமாகப் பிரித்து தனித்தனியே விற்பதற்கான 'டெண்டர்களை' சங்கத்தின் கலைப்பு அலுவலர் தினசரிப் பத்திரிகைகள் மூலம் கோரியிருந்தார். இந்த 'டெண்டர்கள்' வருவதற்கு 20-12-1978 அன்று 3 மணிவரை தான் கடைசி நாளாகக் குறிப்பிட்டிருந்தது. டெண்டர்கள் வரப்பெற்றது குறித்த விபரங்கள் சங்கத்தின் கலைப்பு அலுவலரிடமிருந்து வரவேண்டியுள்ளது.

சங்கத்திற்கு கரும்பு கொடுத்த விவசாயிகளில் இன்னும் கணக்குத் தீர்க்கப்பட வேண்டிய 27 கரும்பு விவசாயிகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய தொகை ரூ. 45.931.30 மட்டுமே.





இத்தொகை, சங்கத்தின் சொத்துக்கள் விற்கப்பட்டவுடன் கொடுக்கப்பட வேண்டிய கடன்களில் முன்னுரிமை வரிசைப்படி வழங்கப்பட ஏற்பாடுகள் செய்யப்படும்.

[முற்பகல் 11-40]

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில் தனியார் சர்க்கரை ஆலைகள் அருணா சர்க்கரை ஆலை போன்றவை அரசு ஆலைகளை விரும்புவதில்லை. அதன் அடிப்படையில் அனுப்பப்பட்ட தனி அதிகாரிகள் இப்படிப்பட்ட கூட்டுறவு ஆலைகள் இயங்குவதற்கில்லை என்று கருத்து தெரிவித்திருப்பதாக தெரிகிறது. போதுமான அளவு கரும்பு பிழிவதற்கு இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. போதிய அளவுக்கு கரும்பை பெற அரசாங்கமே முயற்சி செய்ய வேண்டும். அதைக் கூட செய்யா விட்டால் எப்படி கூட்டுறவு ஆலைகள் நடைபெறும்? தனி அதிகாரிகளின் மனப்போக்கிலே விட்டுவிட்டால் இப்படித்தான் முடிவு வரும். முக்கியமாக இதில் விவசாயிகளுக்கு 45 ஆயிரம் பாக்கி கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை முழுமையுமாவது கொடுப்பதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா? அதை கொடுத்துவிட்டாலே போதும். அதைச் செய்வார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே இந்த மாதிரியான கண்டசாரி சர்க்கரை ஆலைகள் தமிழ்நாட்டில் ஆறு இடங்களில் இருக்கின்றன. இந்தக் குறிப்பிட்ட சர்க்கரை ஆலையில் 6 சதவிகிதத்திற்கு மேல் கரும்புச்சாறு கிடைக்கவில்லை. இதனால் உற்பத்தி நஷ்டம்தான் ஏற்பட்டுக்கொண்டிருந்தது. முக்கியமாக இங்கு கிடைக்கின்ற கரும்புச்சாறு போதுமானதாக இல்லை. தனிப்பட்ட கரும்பு ஆலைகள் இதில் தலையிடுகின்றன என்பது சரியல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டிய பணத்திற்கு அரசு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. இந்தச் சங்கத்தின் சொத்து 4 லட்சத்திற்கு மேல் சொத்து இருக்கிறது. அதை விற்பனை செய்து விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுப்பதற்கு அரசு அக்கரை செலுத்தும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நேற்றைய தினம் பாராளுமன்ற பணிக் கழகத்தின் சார்பில் இங்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்ட மன்ற கட்சியின் கொறடாவாக இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்களுக்கு 'மேதை ஆர்.வி. கிருஷ்ணய்யர்' மெடல் தந்திருக்கிறார்கள். 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம்

ஆண்டு வரை 5235 கேள்விகள் போட்டிருக்கிறார்கள். முன்னாள் முதலமைச்சர் பெரியவர் திரு. பக்தவத்சலம் அவர்கள் இந்த மெடலை வழங்கியிருக்கிறார்கள். இந்திய நாட்டிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இந்த அளவுக்கு அதிகமான கேள்விகள் கேட்டதாக தெரியவில்லை. நாடாளு மன்றத்திலும் இவ்வாறு யாரும் கேட்டதாக தெரியவில்லை. இந்தஅளவுக்கு பாராட்டப்பட்ட உறுப்பினர் கிட்டப்பா அவர்களுக்கு நாமும் பாராட்டு வழங்குவதற்கு பேரவைத் தலைவர் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> சட்டமன்றத் தலைவர் அவர்கள் அவர்களை 'கேள்வி மன்னன் கிட்டப்பா' என்று முன்பே சொல்லியிருக்கிறார்கள். நானும் அவர்களோடு சேர்ந்து என் பாராட்டை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மன்றமும் தனது பாராட்டை தெரிவித்துக் கொள்கிறது.

## (6) அரசினர் சட்ட முன் வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1978.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ;</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1978-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டமுன் வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 34/1978) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்'' என்று முன் மொழிகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவை முன் வைக்கப் பெறுகிறது.

<u>திரு. மு. செல்வராஜ் :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் திருத்த சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பொதுவாக, இந்த சட்டத்தின் நோக்கங்கள் உறுப்பினர்களைப் புதிதாகச் சேர்ப்பதை, அவர்கள் விண்ணப்பம் கொடுத்தவுடனே உறுப்பினர் ஆகின்றார்கள் என்ற ஒரு முறையையும், அதற்கடுத்து மத்திய மாநில கூட்டுறவு வங்கிகளுக்கு அரசாங்கம் உத்திரவாதம் கொடுப்பதை, இந்த விதியின் மூலமாக அரசாங்கமே சட்டசபைக்குக் கொண்டு வராமல் எடுத்துக் கொள்வது என்ற இரண்டு மைய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இந்த சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

* 1978-ம் ஆண்டு செப்டம்பர் 8 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





உறுப்பினர்கள் சேர்ப்பதிலே காலதாமதம் ஆகிறது என்று அவர்கள் கொடுத்திருப்பது, அவர்கள் கருத்தின் அடிப்படையிலே சொல்லியிருக்கிறார்கள். நான்கைந்து ஆண்டுகளாக நான் மத்திய வங்கியின் தலைவனாக இருந்திருக்கிறேன். எனக்குத் தெரிந்தவரையில், அப்படிப்பட்ட புகார்கள் வந்தது கிடையாது. வந்தாலும், அவர்கள் துணைப் பதிவாளருக்கு அப்பீல் செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம். அது மட்டுமல்லாமல் இந்த அரசாங்கம் பொறுப்பேற்று இரண்டாவது முறையாக இதே மன்றத்தில் கூட்டுறவு மானியத்தின் மீது விவாதிக்கும்போது, ஏற்கனவே கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பெரும்பாலும் அதாவது 100க்கு 90 சதவிகித உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, உறுப்பினர்கள் சேர்க்கப்படுவதில் எந்தவிதமான சங்கடமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

அது மாத்திரமல்ல. இந்த அரசாங்கமும் சரி, ஏற்கனவே இருந்த கவர்னர் அவர்கள் ஆட்சிக் காலத்திலும் சரி, கூட்டுறவு சங்கங்களை எல்லாம் திருத்தி, புதிதாக மாற்றியமைக்கப் போகிறோம் என்று கடந்த 3 ஆண்டுகளாக சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அதிலேதான் சந்தேகமெல்லாம் ஏற்படுகிறது. மூன்று ஆண்டு காலமாக இப்படி மாற்றியமைக்கப் போகிறோம் என்று சொல்வதிலே, என்ன சங்கடம் இருக்கிறது? தேவைகளை எல்லாம் உள்ளடக்கி கொண்டு வரப் போவதாகச் சொல்கிறார்கள். இப்படி அடிக்கடி சட்டம் கொண்டு வருவதன் நோக்கம் என்ன? புதிய சட்டத்தை எப்போது கொண்டுவரப் போகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலிலே உறுதியாகச் சொல்ல வேண்டும். காரணம், இன்றையதினம் கிராமக் கூட்டுறவு நாணய சங்கங்களின் உறுப்பினர்கள், நான்—அபிஷியல்ஸ் அதாவது அதிகார பற்றற்றவர்கள் அங்கம் வகிப்பதிலேகூட, மத்திய மாநில வங்கிகளிலும், மற்ற அமைப்புகளிலும், வட்ட நில வங்கிகளிலே எல்லாம் இன்றையதினம் நிர்வாகப் பொறுப்பை ஒரு தனி அதிகாரி வகித்து வருகின்றார். அவர்கள் எத்தகைய குற்றங்களையெல்லாம் செய்கிறார்கள் என்ற புகார்களைச் சொன்னார்கள். அதை விட இன்றைய தினம் 2, 3 மடங்கிற்கு குற்றச்சாட்டுகள் புரிந்து கொண்டு வருகிறார்கள். இன்றைய தினம் அந்தந்த அமைப்புகளிலே நடைபெற்றிருக்கின்ற குற்றங்களைக் கண்டுபிடிக்கின்ற வகையிலே, ஒரு சிலரின் மீது விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்றும் சொல்லப்பட்டது. அந்த வகையிலே இந்த ஸ்பெஷல் ஆபீசர்கள் செய்கின்ற அக்கிரமங்கள், இங்கே இருக்கின்ற ஒவ்வொரு அங்கத்தினர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். எனவே, அவசர அவசரமாக இப்படி சட்டம் கொண்டு வர வேண்டிய அவசியம் கிடையாது.

[திரு. மு. செல்வராஜ்] [1979 மார்ச் 15

அடுத்து சொல்ல விரும்புவது, மாநில, மத்திய வங்கிகளுக்கு வறட்சிக் காலங்களில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நிவாரணம் அளிப்பதற்கு அணாவாரி சர்டிபிகேட் கொடுத்து, மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திடம் சட்டசபையில் ஒரு தீர்மானம் கொண்டுவந்து, உத்திரவாதம் சொல்லுகின்ற முறையிலே அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். பொதுவாக, இந்த சட்டமன்றத்திலே என்ன மாதிரியான அதிகாரம் கொடுக்கப் போகிறோம் என்பதற்கு வருஷத்திற்கு ஒரு முறையாவது இப்படிக் கொண்டு வந்தால்தான் உறுப்பினர்கள் அதன்மீது பேசி, கருத்துக்கள் பெற முடியுமே தவிர, இப்படி உத்திரவாதம் கொடுக்கின்ற சட்ட திருத்தத்தை கொண்டு வரக் கூடாது. சட்ட திருத்தத்தை இங்கே கொண்டு வரவேண்டுமென்று சொல்வதற்குக் காரணம், வங்கிகளுக்கு எவ்வளவு ரூபாய் தேவைப்படுகின்றது, வெள்ளத்தால் எவ்வளவு பாதிப்பு ஏற்பட்டது என்று உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை மன்றத்திலே எடுத்துச் சொல்வதற்கும், குறைகளைக் களைவதற்கும் முறையாக இருக்கும் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான விளக்கம் சொல்லவில்லை. ஏதோ இன்றையதினம் ஆளும் கட்சியிலே கிராமங்களிலே இருக்கின்றவர்களை, உறுப்பினர்களாகச் சேர்த்து, அதற்கு பிறகு தேர்தல் கொண்டு வரயிருப்பதாகக் கருதுகிறேன். இன்றையதினம் ஆளும் கட்சியிலே உள்ளவர்களில் பெரும்பாலோர் கிராம நாணய சங்கத்திலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இதிலே உள்ள பீல்ட் ஆபீசர்களுக்கும், பாங்கு இன்ஸ்பெக்டர்களுக்கும் ஒரு குறி அளவு வைத்திருக்கிறார்கள்.

[முற்பகல் 11-50]

இன்றையதினம் மாநிலப் பதிவாளராக இருப்பவருக்கு நன்றாகத் தெரியும். இவ்வளவு உறுப்பினர்கள் சேர்ந்தாக வேண்டுமென்று சொல்கிறோம். உறுப்பினர்கள் சேர்க்கும் வாரத்தைக் கொண்டாடுகிறோம். எங்கே எந்த உறுப்பினர்கள் சேர்க்கப்படாமல் விடப்பட்டு விட்டார்கள். எந்த உள் நோக்கத்தோடு இது கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். காம்பரெஹென்சிவ் பில் எப்போது கொண்டுவரப்படும் என்று அமைச்சர் அவர்களிடத்தில் இருந்து அறிந்து கொள்ள விரும்புகிறேன். நகரசபை, பஞ்சாயத்து யூனியன்கள், கார்ப்பரேஷன்கள் போன்றவற்றுக்கு விரைவில் தேர்தல் வரப்போகிறது என்று அறிவித்திருக்கிறார்கள். கூட்டுறவுத் துறைக்குத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும். அப்போதுதான் தனி அதிகாரிகளுடைய அக்கிரமத்தைத் தடுக்க முடியும். அமைச்சர் அவர்கள் உயர்மட்ட அதிகாரிகள் மட்டத்தில் கேட்டால் இதைப் பற்றி அறிந்து கொள்ள முடியும். அதிகாரப் பற்றற்றவர்கள்



1979 மார்ச் 15] [திரு.மு. செல்வராஜ்]

இருந்த நேரத்திலே இருந்த மத்திய வங்கிகள் இன்றையதினம் 'பி' கிளாஸ், 'சி' கிளாஸ் என்ற நிலைமைக்கு வந்திருக்கின்றன. பல சங்கங்கள் செயல்படாமல் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள், கடன் கொடுத்து திரும்ப வராததன் காரணமாகச் செயல்படவில்லை என்று காரணம் கூறக்கூடும். ஏற்கனவே பெரிய பெரிய வறட்சி, புயல் வெள்ளத்தின் போது எல்லாம் இருந்த நிலைமைகளை நாம் அறிவோம். தனி அதிகாரிகளுடைய கவனக் குறைவு காரணமாக, அவர்கள் செய்கிற அக்கிரமத்தின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லி இவைகளை எல்லாம் களைய ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஐயா, இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவை வரவேற்கிறேன், பல சங்கங்களிலே அங்கத்தினர்களாகச் சேருவதற்கு பலர் முன்வந்தும் கூட சேர்க்க முடியாத அளவுக்குப் பல சிக்கல்கள் இருக்கிற காரணத்தால் அவர்களை எல்லாம் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு இது கொண்டு வரப்பட்டு உள்ளது. இது வரவேற்கத்தக்க விஷயந்தான்.

அதே நேரத்தில் இப்போது எங்கு பார்த்தாலும் அதிகாரிகளைப் போட்டு அந்த அதிகாரிகள் மூலமாகவே இன்றைக்கு நிர்வாகம் நடைபெறக்கூடிய அளவுக்கு நடந்து கொண்டிருக்கிறது. அந்த சங்கங்களுக்கெல்லாம் எப்போது தேர்தலை நடத்தி போர்டு அமைக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் மூலம் எப்போது நிர்வாகத்தை நடத்தப் போகிறார்கள் என்று தெரியவில்லை. அதிகாரிகள் இருப்பதால் ஊழல், போர்டு வந்துவிட்டால் ஊழல் இருக்காது என்று நான் சொல்ல வரவில்லை. கூட்டுறவு என்று சொன்னாலே பல தவறான கருத்துக்கள் இருக்கின்றன என்பதைப் பற்றி நான் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். போர்டு வருவதால் அதிகாரிகள் செய்கிற தவறை விடக் கொஞ்சம் குறைவாக இருக்கும். இரண்டு பேரும் சேர்ந்துவிட்டால் அது வேறு கதை. இரண்டு பேரும் சேரவில்லை என்றால் ஊழல் செய்ய முடியாத அளவுக்கு தடுக்க உதவியாக இருக்கும். உடனடியாக தேர்தல் நடத்தியாக வேண்டும்.

இன்றைக்கு போர்டு இருக்கிறது என்றால் அந்த போர்டுக்கு ஜனநாயக அடிப்படையில் பரிபூரண அதிகாரம் இருக்கிறது. அப்படி அதிகாரம் இருந்தும் கூட அந்த அதிகாரத்தைக் கூட துர்விநியோகம் செய்யக்கூடிய அளவுக்கு கீழ்மட்டத்தில் உள்ள அதிகாரிகள் எந்த அளவுக்கு அதில் தலையிடுகிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்பு

[திரு. வி. கே. கோதண்டராமன்] [1979 மார்ச் 15

கிறேன், உதாரணத்திற்கு ஒன்று. வால்பாறை ஆனைமலை எஸ்டேட் ஒர்க்கர்ஸ் அர்பன் பாங்கில் போர்டு இருக்கிறது. அவர்களாகப் பார்த்து ஒரு செகரடரியை அப்பாயிண்ட் பண்ணியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அவருக்கு என்னவோ அனுபவம் இல்லையென்று சொல்லி அரசு அதிகாரிகள் அனுபவம் உடைய ஒருவரைப் போட்டார்கள். அவருக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம். போர்டு அப்பாயின்ட் பண்ணியவருக்கு 500 ரூபாய் தான் சம்பளம். அவரும் நன்றாகப் படித்தவர்தான், திறமையாளர்தான். இப்படி பல தவறுகள் நடைபெற்று வருகின்றன. இப்படி பல இடத்தில் இருக்குமானால் மேல் மட்ட அதிகாரிகள் நல்ல முறையில் கவனிக்கக்கூடிய தன்மையில் பரிபூரண அதிகாரம் அளிக்கப்பட வேண்டும்.

ஆனால் அமைச்சர் அவர்கள் குறுக்கிட மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். மேல் மட்டத்திலே உள்ள அதிகாரிகள் இது போன்ற ஊழல் விஷயத்தில் தாராளமாக, தைரியமாக, . தீவிரமாக நடவடிக்கைகள் எடுக்கக்கூடிய அளவிற்கு அவர்களுக்குப் பரிபூரண அதிகாரம் வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், அதிலே குறுக்கிடக் கூடாது என்று அமைச்சர் அவர்களுக்குச் சொல்கிறேன்,

இதுபோன்ற பல பிரச்சினைகள், பல தவறுகள், பல சிக்கல்கள், இன்றைக்கு இருந்து வருகின்றன. அது மாத்திரமல்ல, ஏற்கனவே சந்தானம் கமிட்டி என்று அமைக்கப்பட்டது, அந்த கமிட்டி அகில இந்திய ரீதியிலே சுற்றுப் பயணம் செய்து பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து நல்ல அருமையான ஒரு ரிப்போர்ட்டை வைத்தார்கள் என்று நமக்குத் தெரியும். அந்த ரிப்போர்ட்டை ஒழுங்காக அமல்படுத்தக்கூடிய தன்மை வரவில்லை. அந்த ரிப்போர்டின் அடிப்படையிலே சொஸைடிகள் ஒழுங்காக ஜனநாயக ரீதியிலே நடைபெறக்கூடிய அளவிற்கு அமல்படுத்துவதிலே அமைச்சர் கொஞ்சம் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே இந்தத் திருத்த மசோதாவிலே அந்த அங்கத்தினர்களை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிற அதே நேரத்திலே, கைத்தறி நெசவுத் தொழிலாளர்களே 100க்கு 75 பேர்களை சொசைடிகளை அமைத்து அதிலே சேர்த்துவிடப் போகிறோம் என்று கூறப்பட்டது. ஆனால் இன்றைக்கு அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எதற்காக போராடுகிறார்கள்என்பது நான்சொல்லாமலேயே அமைச்சர் அவர்களுக்கு தெரிந்த விஷயம். சொஸைடிகளில் அவர்களைச் சேர்த்து அவர்களுடைய வாழ்க்கைத் தரம் நல்ல முறையிலே அமைவதற்கு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1979 மார்ச் 15] [திரு. வி. கே. கோதண்டராமன்]

அடுத்து. கூட்டுறவு மில்களாக இருக்கின்றனவே, கூட்டுறவு நூற்பாலையாக இருந்தாலும் சரி, சர்க்கரை ஆலையாக இருந்தாலும் சரி, அவைகளிலே கூட எல்லாம் அதிகாரிகளை வைத்தே நடக்கின்றன. அவைகளுக்கும் உடனடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற போர்டுகளை அமைக்க வேண்டும். கூட்டுறவு நூற்பாலையை ஆரம்பிக்கிறபோது இதே சபையிலே 1957–58 இல் திரு. வெங்கட்டராமன் சொன்னார், ஏன் இந்த நூற்பாலையை ஆரம்பிக்கிறோம் தெரியுமா, கைத்தறி தொழிலாளர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்காகத்தான். ஆனால் என்ன நிலைமை? மில் கேட் விலை, அந்த அடக்கவிலைக்கு நூல் அவர்களுக்குக் கொடுக்கப்படும் என்று அன்று பெருமையாகச் சொன்னார், இன்றைக்குள்ள நிலைமை என்ன? மில்லுக்கு என்ன விலைக்குக் கொடுக்கப்படுகிறதோ அதே விலைக்கு கூட்டுறவு சொஸைடிக்கும் நெசவுத் தொழிலாளர்களுக்கும் கொடுக்கிறது, அதன் விளைவாக அந்தத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். காம்போஸிட் மில்லில் உற்பத்தி செய்யக்கூடிய ஜவுளிக்கு 33 சதவீதம் வரி இல்லாத அளவிற்கு அனுமதிக்கப்படுகிறது, ஆனால் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு அந்த நூல் 33 சதவீத வரியோடு கொடுக்கப்படுவதால் மில் ஜவுளிக்குப் போட்டியாக கைத்தறி ஜவுளி இருக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அந்த அடக்கவிலைக்கு அவர்களுக்குக் கொடுப்பதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அடுத்து சூப்பர் மார்க்கட் என்று வேறு இருக்கிறது. நியாய விலைக் கடை இருக்கிறது. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் சொன்னாரே அதைப்போல நியாயவிலைக் கடைக்கு முன்னாலே 'அ' சேர்த்துவிட்டால் அநியாயவிலைக் கடை என்றாகிவிடும் என்று, அதேதான் கதை இன்றைக்கு. வெளியே தனியார் கடையிலே என்ன விலைக்கு விற்கிறதோ அதைவிட 5 பைசா 10 பைசா அதிமாகத்தான் இந்தக் கடைகளிலே விற்கப்படுகிறது. அது மட்டுமல்ல, வெளியே கடைகளிலே நல்ல தரமான பொருள்கள் கிடைக்கின்றன, ஆனால் சூப்பர் மார்க்கெட்டிலே, இந்த நியாய விலைக்கடைகளிலே அப்படிக் கிடைப்பதில்லை. சூப்பர் மார்க்கெட் என்றும் நியாயவிலைக் கடை என்றும் பெயரை வைத்துக் கொண்டு அநியாயவிலைக்கு எதற்காக விற்கவேண்டும், தரம் குறைந்த பொருள்களை எதற்காக விற்கவேண்டும் என்று ஜனங்கள் தாறுமாறாகப் பேசுகிறார்கள், நீங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக எதற்காக இருக்கிறீர்கள், மந்திரிகளுக்குச் சொல்ல வேண்டாமா என்று கேட்கிறார்கள். அதைத்தான் கேட்கிறோம். ஆகவே அங்கேயெல்லாம் உடனடியாக நியாயமான விலையில் நல்ல பொருட்களைக் கிடைக்கச் செய்யவேண்டும்.

[திரு. வி. கே. கோதண்டராமன்] [1979 மார்ச் 15

[நண்பகல் 12-00]

மார்க்கெட் விலையை விடப் பாதி விலைக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை, முக்கால் விலைக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால் அதைவிட பத்து காசு, இருபது காசு, நாலணா குறைவாகக் கூடக் கொடுக்கலாம். மொத்தமாக பல கோடிக்கணக்கான ரூபாயைச் செலவழித்து, அந்தந்த சீசனிலே வாங்கி சேகரித்து வைத்துக்கொண்டு குறைந்த விலைக்கு விற்கக் கூடிய அளவிற்கு இருக்கும்பொழுது ஏன் கூடுதல் விலைக்கு விற்கிறார்கள் என்று புரியவில்லை. ஆகவே, உடனடியாக இவைகளைப் பற்றி சூப்பர் மார்க்கெட்டுகளைப் பொறுத்த வரையில் தயவு செய்து கவனிக்க வேண்டும். அந்த அடிப்படையில் இந்த அமெண்ட்மென்டை, இந்த மசோதாவை ஆதரித்து வார்த்தைகளை முடிக்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : துணைத் தலைவரவர்களே, இன்றைய தினம் ''தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவின்'' மீது என்னுடைய கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவுத் துறை என்பது ஒரு இன்டிபென்டன்ட் ஸ்தாபனமாக, அமைப்பாகச் செயல்பட வேண்டுமென்பது எங்கள் கருத்து, அதில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது என்பதில் அழுத்தந் திருத்தமான நம்பிக்கை எங்களுக்கு உண்டு. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், காங்கிரஸ் ஆட்சி இருந்த 1967-ஆம் ஆண்டு வரையிலும் அதிலே அரசியல் தலையீடு என்பது இல்லாமல இருந்திருக்கிறது. அதற்குப் பின்னாலே ஒரு சில ஆண்டுகளுக்குப் பின்னால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பெரியவர் ஒருவர் அதிலே பொறுப்பேற்ற பிறகு அந்தக் கூட்டுறவுத் துறையை எவ்வளவு நாசம் செய்ய முடியுமோ, எவ்வளவு அசிங்கம் செய்ய முடியுமோ, எவ்வளவு கேவலமாகச் செய்ய முடியுமோ அவ்வளவும் அதிலே நடைபெற்றிருக்கிறது என்பதைச் சொல்வதற்கு வெட்கப்பட்டாலும் கூட அதுதான் உண்மை. (குறுக்கீடு) அன்றையதினம் ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தார், இப்பொழுது எந்தக் கட்சியிலே இருக்கிறார் என்பது எனக்குத் தெரியாது. இருந்தாலும் இந்தக் கூட்டுறவுத் துறையை அவ்வளவு கேவலமான நிலைக்குக் கொண்டு வந்திருப் பதற்கு அவர்தான் பொறுப்பு ஏற்க வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், அன்றையதினம் கூட்டுறவு துறையிலே தன்னுடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இருக்க வேண்டும் என்று அத்தனை சென்ட்ரல் வங்கிகளும் கலைக்கப் பட்டு; தன்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்பதற்காகச் செய்யப்பட்ட அட்டூழியங்கள் அதிகம்.



1979 மார்ச் 15] [திரு. நா. சுந்தரராஜ்]

அதனால் இந்தச் சட்டத்திருத்தந்திலே எனக்கு ஏற்படுகின்ற ஐயமெல்லாம், வருத்தமெல்லாம், பயமெல்லாம், நினைத்த நேரத்தில் யாரை வேண்டுமானாலும் சேர்க்கலாம், விண்ணப் பத்தை எப்பொழுது கொடுக்கிறார்களோ அந்த நேரத்திலேயே உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்றால் நூற்றுக்கணக்கான பேர்கள் விண்ணப்பங்களைக் கொடுத்த வுடனேயே உறுப்பினர்களாக ஆக முடியும். இப்படி நூற்றுக் கணக்கான பேர்கள் உறுப்பினர்களாக ஆகி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரைத் தூக்கியெறிந்து விட முடியும். இது தவறான முறையில் பயன்படுத்துவதற்கு வாய்ப்பாக முடியும் என்று நான் அஞ்சுகிறேன்.

ஒருவரை நீக்க வேண்டுமென்றால் இன்றைக்கிருக்கும் சட்டத் தின்படி, போர்டின் ஒட்டுமொத்தக் கருத்து இருந்தால்தான் நீக்க முடியும். ஆனால் திருத்தச் சட்டத்தின் மூலம், ஒருவரை நீக்க வேண்டுமென்றால் போர்டே தேவையில்லை, யாரும் தேவையில்லை, அங்கே இருக்கக்கூடிய டெபுடி ரிஜிஸ்திரார் துணைப் பதிவாளர் - யாரை வேண்டுமானாலும் நீக்கிவிடலாம் என்ற ரீதியிலே சட்டத் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஸ்பெஷல் ஆபீசர் என்ற மேனியா இப்பொழுது இருந்து கொண்டிருக்கிறது. நான் சொல்வதைத் தவறாக எண்ணக் கூடாது. எங்கள் காலத்தில், அதாவது எமர்ஜென்சி காலத்தில் பல கூட்டுறவுச் சங்கங்கள் தவறாக நடைபெறுகின்றன என்பதற்காக ஸ்பெஷல் ஆபீசர்களை நியமித்தோம். ஆனால் அதற்குப்பிறகு ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்கார் வந்ததற்குப் பிறகு ஜனநாயக ரீதியில் தேர்தலை நடத்தியிருந்தால் அது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாக இருந்திருக்கும். ஆனால் தொடர்ந்து, இரண்டு இரண்டரை ஆண்டுக்காலமாக உங்களுடைய ஆட்சிக் காலத்தில் பாதிக் காலம் ஆகிவிட்டது — இன்னும் ஸ்பெஷல் ஆபீசர்கள் தொடர்ந்து நீடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் அதிகாரிகளின் ஆட்சியாகத்தான் இந்தக் கூட்டுறவுத் துறை இருக்குமே தவிர மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டதாக இருக்க முடியாது. இதனால் மக்களுக்கு இடைஞ்சலாகப் போய்விடும் என்று நான் கருதுகிறேன். பலயிடங்களில் சொசைட்டிகள் சரிவர வேலை செய்யவில்லை. கடன் வாங்கித்தரும் அதிகாரி யிடம் சென்றால், உங்களுடைய தலைவர் மீது நம்பிக்கை கொண்டு வரத் தகுதியிருக்கிறதா அல்லது உங்கள் தலைவரிட மிருந்து கட்டாயப்படுத்தி இராஜீனமா வாங்கி வாருங்கள், நாங்கள் கடன் வழங்குகிறோம் என்று சொல்கிறார்களே தவிர, அதைச் சீர்திருத்தம் செய்யவோ அல்லது மேலும் அதை விரிவு படுத்தவோ அல்லது முறைபடுத்தவோ அங்கிருக்கும் அதிகாரிகளில் சிலர் சரியாக வேலைசெய்யவில்லை என்ற குற்றச்சாட்டைச் சுமத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில் இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். தொடர்ந்து இன்றையதினம் ஆளுங்கட்சியைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக்கழகப் பாணியிலேயே நடவடிக்கை அமைந்தால் தொடர்ந்து ஆட்சியிலே இருக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தால் தயவு செய்து அந்த எண்ணத்தை அவர்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். எமெர்ஜென்சி இருந்த எங்கள் காலத்தில் பலயிடங்களில் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்களை — ஒருவேளை திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பங்கில்லாமல் இருக்கலாம் போட்டோம். அல்லது இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிக்கு அங்கே பங்கில்லாமல் இருக்கலாம். ஆனால், மற்ற கட்சிகளுக்கு அங்கே பங்கு கொடுக்கப்பட்டு உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் அப்பொழுது பொதுவான, நியாயமான ரீதியிலேதான் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள், இன்றையதினம் எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எடுத்துக் கொண்டால், இரண்டு ஆண்டுகளாகப் போராடிப் பெற்ற மார்க்கெட்டிங் சொஸைட்டி ஒன்று இருக்கிறது. அந்த மார்க்கெட்டிங் சொஸைட்டியிலே உற்பத்தியாளர்கள் சார்பிலே இருக்கும் 9 பேர்களிலே 7 பேர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். இரண்டு பேர் 70 வயதைத் தாண்டியவர்கள் சேம்பர்ஸ் ஆஃப் காமர்ஸைச் சேர்ந்தவர்கள். யாரைச் சேர்க்கிறார்கள் என்பதில் நமக்கு அக்கறை இல்லை. ஆனால் அமைப்பு—அந்த அமைப்பு சிறந்த முறையில் இருக்கவேண்டும், ஒழுங்காக நடைபெற வேண்டும், அந்த அமைப்பு மூலமாக ஆட்சி உறுதியாக இருக்கவேண்டுமென்று விரும்புவார்களேயானால், அனைவருக்கும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும். எதிர்க்கட்சியிருந்தால்தான் ஆளுங்கட்சியிலே உள்ள குறைகளை விரிவாகவும் விளக்கமாகவும் சொல்ல முடியும். ஒரே கட்சி அங்கே இருக்குமானால், அதிலே இரண்டு கட்சி ஏற்படும். ஒரே கட்சியில் இரண்டு கட்சிகள் இருக்கக்கூடிய நிலைமைதான் இப்பொழுது அங்கே இருக்கிறது. அதனால், அந்த அமைப்பே சரிவர செயல்படமுடியாத அளவுக்குக் கொண்டு சென்று விடும், தவறான வழிக்கு கொண்டு சென்று விடும் என்று நான் அஞ்சுகிறேன். அன்றையதினம் முதலமைச்சரவர்கள் உறுதி கூறியிருக்கிறார்கள். இது போன்ற தவறுகள் திருத்தப்படும் என்று உறுதி கூறியிருக்கிறார்கள். அதை விரைவாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தத் திருத்தத்தை வரவேற்றாலும் பயன்படுத்துகிற முறை சரியாக இருக்கவேண்டுமென்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். கத்தி எல்லோரிடமும் இருக்கலாம். கசாப்புக் கடைக்காரனிடம் இருக்கிற கத்தியின் பயன் வேறு. டாக்டரிடம் இருக்கிற கத்தியின் பயன் வேறு. ஆகவே, ஒரே அமைப்பைப் பயன்படுத்துகிற விதத்தில் பயன்படுத்தினால்தான் சரியானதாக அமையும். ஆகவே, இந்தச் சட்டத்தைத் திருத்திவிட்டுச் சென்று விடுகிறோம் என்று சொல்வீர்களானால், பயன்படுத்துகிற முறைகள் தவறாக அமையும். கடந்த காலத்திலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்





காலத்திலே ஒரு அமைச்சர் இருந்தார் என்று சொன்னேனே, அந்த முறைகளை நீங்கள் பயன்படுத்த வேண்டாம், பயன்படுத்தும் முறை சரியானதாக இருக்க வேண்டுமென்று கூறி, அப்பொழுது தான் இச்சட்டம் பயனுள்ளதாக இருக்குமென்று தெரிவித்து அமர்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே இருந்த ஒரு அமைச்சர் என்று சொன்னபிறகு, அமைச்சருடைய பெயரையே கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பது நலமாக இருக்கும்.

திரு. க, சுப்பு : இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், ஒன்றிரண்டு நிமிஷத்தில் என்னுடைய கருத்துக்களை முடித்துக் கொள்கிறேன். எவ்வளவுதான் குற்றங்குறைகள் இருந்தாலும் கூட்டுறவுத் துறையைப் பொறுத்த வரையில், இந்தியாவிலேயே முதன்முதலாக கூட்டுறவுத் துறை இயங்கத் துவங்கியது தமிழகத்தில்தான். இந்தியாவிலேயே முதல் நிலைக் கூட்டுறவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது, கும்பகோணம் கூட்டுறவு சங்கம்தான்—தமிழ்நாட்டில் இருப்பது. அதேபோல், பின்தங்கிய மாவட்டங்களில் சிறந்த கூட்டுறவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது, இந்தியாவிலேயே இராமநாதபுரம் மத்திய வங்கிதான் என்பதையும், இவை இரண்டும் திராவிட முன்னேற்ற ஆட்சிக் காலத்தில்தான் தேர்ந்தெடுக்கப்பட்டன என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறைகள் இருக்கலாம். குறைகள் இல்லாவிட்டால் மனிதனாக இருக்க முடியாது. அருமை நண்பர் சுந்தரராஜ் அவர்கள் முன்னாலே குறைகள் இருந்தால் அதை நீக்க வேண்டுமென்று விரும்புகிறார். இப்பொழுதுள்ள அரசு ஒரு வழியைப் பின்பற்றுகிற காரணத்தால், அந்தக் குறையை முறையாகச் செய்வது என்று இதனைக் கொண்டு வந்திருக்கிறது. ஏனென்றால், 'ஆட்டமேட்டிக் அட்மிஷன்' என்பது என்ன? ரெயில்வே கேட்டா? ஆட்டமேட்டிக்காகமூடி, ஆட்டமேட்டிக்காக திறப்பதைப் போல், ஆட்டமேட்டிக் மெம்பர்ஷிப், ஆட்டமேட்டிக் அட்மிஷன் என்று வைத்துள்ளார்கள். நீங்கள் சொல்வதைப் போல், every pe son is eligible automatically i.e., automatic admission என்று சொன்னால், எப்படி ஆட்டமேட்டிக்காக நியமிக்கமுடியும்? ஆட்டமேட்டிக் என்றால், சர்க்கார் நியமிக்கிற அளவுக்கு இருக்கிறது. இதிலேதான் நீங்கள் வருகிறீர்கள், நீங்கள் மட்டுமே எலிஜிபிலாக இருக்கிறீர்கள். ஆகவே, ஆதித்தனார் பாணி அல்ல *வருகிறது. ஆட்டமேட்டிக் அங்கத்தினர்களிலே சிலபேர் நிராகரிக்கப்படுகிறார்கள் என்று சொல்கிறீர்கள். சில பேருக்கு உறுதுணை

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

யாகச் செய்யும்போது, வேண்டுமென்றே சிலரை நிராகரித்திருக்கிறார்கள், அதுவும் யதார்த்தம். அதை மாற்ற ஒரு நல்ல மெஷினரி வேண்டும். விசாரணை கமிஷன், கமிட்டி மாதிரி இல்லாமல், நீங்கள் நல்ல மெஷினரி ஏற்படுத்தவேண்டும். இது உருப்படியாக இருக்க வேண்டுமென்று கருதினால்—கருதப்போவதில்லை, கருதினால், இதற்கென்று சிறப்பான ஒரு மெஷினரி இருக்கவேண்டும். ஆட்டமேட்டிக் அட்மிஷன் என்பது சரியல்ல என்று வரும், ஒருவேளை அம்மாதிரி மெஷினரி இருந்தால் அதற்காகத்கான் இக்கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தது, கலைப்பு. சரியாக இயங்காததைக் கலைப்பது சரிதான். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே சரியாக இயங்காததைக் கலைத்திருக்கலாம். ஆனால், எமர்ஜென்ஸி காலத்திலே, கலைப்புப் புகழ் ஆட்சி என்றே பெயர், எதையும் கலைப்பதுதான் வழக்கமாக இருந்தது, ஏனென்றால் யாரும் கேட்கமுடியாது, பஞ்சாயத்தைக் கலைத்தார்கள், யூனியனைக் கலைத்தார்கள், கூட்டுறவுத் துறையில் கலைத்தார்கள், அறநிலையத் துறையில் கலைத்தார்கள், எல்லாவற்றையும் கலைத்தார்கள். தவறிருந்தால் கலைக்கவேண்டும் வேறு வழியில்லை. கலைத்துவிட்டு, ரீகன்சிடர் செய்ய முடியாத அளவுக்கு இந்தச் சர்க்கார் செய்யுமானால், எமர்ஜென்ஸியிலே அவர்கள் ஏதோ செய்தார்கள், நாமும் அதையே செய்கிறோம் என்று ஆகும். உண்மையான, கூட்டுறவு என்ற அந்த ஸ்பிரிட் இருக்க வேண்டும் என்பதற்காக—அமைச்சருக்கு இருக்குமென்று நான் கருதுகிறேன் இதைச் சொல்கிறேன், இந்தியாவிலே கூட்டுறவுத் துறையில் தமிழகம்தான் முதன்மையாக இருக்கவேண்டுமென்ற நிலையை நீங்கள் செய்யவேண்டுமென்று கேட்டு இதோடு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12–10]

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேசும்போது சொன்ன 'ஆதித்தனார் பாணி' என்பது இருக்கலாம், ஆனால் *என்பதை குறிப்பேட்டிலிருந்து நீக்கி விடும்படி உத்தரவிடுகிறேன். இந்த நீக்கம் பத்திரிகையிலும் இடம் பெறவேண்டும்.

<u>திரு. சி. ஆறுமுகம் ;</u> துணைத் தலைவர் அவர்களே, 'ஆதித்தனார் பாணி' என்பதாவது இருக்கலாம் அல்லவா?

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ;</u> அதைத்தான் நானே சொல்லிவிட்டேனே. 'ஆதித்தனார் பாணி' என்பது இருக்கட்டும், *என்பதை மட்டும் நீக்கி விடவேண்டும்,

---

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



<u>திரு. செ. சிவசாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத்திலே உறுப்பினர்களை கலைக்க வேண்டும் என்று இல்லாமல் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லப்படுகிறது. வரவேற்க வேண்டிய அம்சம்தான், என்றாலும், அதே நேரத்தில் என்ன காரணத்திற்காக இது கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. அதிகமான பேர்களை மனுப்போட்ட உடனே சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்கிற போது, இதைக் குறித்து சந்தேகம் ஏற்படுகிறது. திடீரென்று எலெக்ஷன் வருகிற நேரத்திலே 100 பேர்களை கொண்டு வந்து சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி அதை போர்டு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னால் சந்தேகம் வரத்தானே செய்யும்? ஆனால் ஏற்கனவே போர்டு பரிசீலனை செய்து யார் யாரை சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று யோசனை தெரிவிக்கிறதோ அவர்களை சேர்த்துக்கொள்ளவேண்டும் என்ற நிலைமை மாறி, யார் யார் அப்ளிகேஷன் போடுகிறார்களோ அவர்களை எல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. அதிகமான பேர்கள் கூட்டுறவுத் துறையில் வேண்டும், கூட்டுறவு நிறுவனங்கள் வளர வேண்டும் என்ற நிலை நல்லதுதான் என்றாலும் கூட இப்படி ஒரு சட்டம் யாரை வேண்டுமானாலும் சேர்த்துக்கொள்ளலாம் என்று வருவது அபாயமானது என்று தோன்றுகிறது. சேர்த்துக்கொண்ட உடனேயே அவர்கள் மெம்பர்களாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற பிரிவுகளையெல்லாம் மாற்றினால் நல்லது.

இதைவிட இன்னொரு இடத்தில் அப்படி மனுப்போட்டவர்கள் சேர்க்கப்படக் கூடாது என்று அலுவலர்கள் சொன்னால் அவர்கள் நீக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. இது அதைவிட அபாயமானது. அலுவலர்கள் சொல்லிவிட்டாலே உறுப்பினர்களை நீக்கிவிட வேண்டும் என்று திருத்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> உறுப்பினர் அவர்கள் சுருக்கமாக முடித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. செ. சிவசாமி :</u> முடித்துக்கொள்கிறேன். துணைத் தலைவர் அவர்களே, இந்த அதிகாரிகளுக்கு யாரையாவது பிடிக்கவில்லை என்றால், வேண்டாம் என்று நினைத்தால் அவர்களை நீக்கி விடலாமே. கூட்டுறவுத் துறையின் அதிகாரம் அதிகாரிகளின் கைகளில் போய்விட்டது என்று தெரிகிறது. எனக்கென்ன சந்தேகம் என்றால் ஏற்கனவே கடந்த காலத்திலே தாங்கள் அந்த இடங்களுக்கு, கூட்டுறவு துறை சங்கங்களுக்கு வரவேண்டும் என்று நினைத்தார்கள். அதனால் எதை எதை செய்து,

எந்தெந்த வழியெல்லாம் கடைப்பிடித்து அதைப்பிடிக்கவேண்டும் என்று நினைத்தார்களோ அப்படி பிடிப்பதற்காகத்தான் இதையெல்லாம் கூட செய்கிறார்களோ என்று தோன்றுகிறது. இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதே அதற்காகத்தானோ என்று தோன்றுகிறது. இந்த ஆட்சியிலே பரமக்குடியிலே நெம்மில் வட்டாரத்திலே இருக்கிற கூட்டுறவு சங்கத்திலே கிட்டத்தட்ட ஒரு 13 நாட்களுக்கு கேஷ் லேட்டாக கட்டிவிட்டார்கள் என்ற காரணத்திற்காக உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த நடவடிக்கை எடுத்த பிறகு இன்றைக்கு நிலைமை நன்றாக இருப்பதாக டிபார்ட்மெண்ட் அளவிலே நினைக்கிறார்கள். இந்த இடத்திற்கு மட்டும் அரசியல் காரணமாக உடனடியாக தேர்தலுக்கு உத்தரவு இடப்பட்டிருக்கிறது. தேர்தல் நடைபெறுகிறது. அங்கே பார்த்தால் முக்கியமாக இது ஒரு பெரிய பிரச்னையாக இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த வாரத்தில் ஒரு இன்ஸ்டென்சை சொன்னார்கள்--கிட்டத்தட்ட ரூ. 90 லட்சம் அங்கே கையாடல் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அங்கே இருப்பது 13 நாள் தாமதமாக பணம் கட்டப்பட்ட சின்ன விஷயம். அந்த விஷயத்தை ஒட்டி ஒரு ஸ்டே கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. அதன் காரணமாக, அந்த நாட்டு மக்கள் அது தவறா அல்லது சரியானதுதானா என்பதை அங்கே இருக்கக் கூடியவர்கள் பரிசீலனை செய்து அவர்களைக் கொண்டு வந்து விட்டார்கள். தேர்தல் நேரடியாக நடந்தது. யார் எந்தத் தவறைச் செய்தார்கள் என்று அவர்கள் கலைக்கப்பட்டார்களோ, அரசாங்கம் எண்ணியதோ அவரே மீண்டும் தேர்த்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார், நாட்டுமக்களின் செல்வாக்கை உடையவர்களே குறுக்கு வழி முயற்சியில் ஈடுபடுகிறார்கள் என்பதை நான் உதாரணமாக சொல்லிக்கொள்கிறேன்.

பல இடங்களில் தவறு நடந்திருக்கிறது. திருப்பத்தூரில் எல். டி. பேங்க் ஒன்று இருக்கிறது, அதில் ரூ. 96,000 தவறுதலாக உபயோகப்படுத்தப்பட்டு இருக்கிறது. கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக ஏற்கனவே நான் டி.டி.சி. கூட்டத்தில் கூறி, எழுதியும் கொடுத்திருக்கிறேன். இன்று வரையில் டிபார்ட்மெண்ட் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. 3 பேர் அந்த ரூபாயை எடுத்துச் செலவழித்திருக்கிறார்கள். அதற்கு அங்கே இருக்கும் உத்யோகஸ்தர்களும், ஆபீசர்களும் உடந்தையாக இருக்கிறார்கள் என்பது அங்கேயுள்ள மக்களுக்கும் தெரியும். அப்படியிருந்தும் அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதே நேரத்தில் சாதாரண விஷயத்தை கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதனால் கூட்டுறவுத் தத்துவத்தின் மதிப்பே சில சந்தர்ப்பங்களில் மாறிவிடுகிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.





காலாகாலத்தில் தேர்தல் நடத்தவேண்டும். தேர்தல் நடத்த இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டே வருகிறீர்கள். கிட்டத்தட்ட 2 ஆண்டுகளாகச் சொல்லிவருகிறீர்கள். இன்னும் நிலைமை உங்களுக்குச் சாதகமாக மாறிக்கொண்டு வரவில்லை என்றால், இனிமேலும் மாறும் என்று எப்படி எதிர்பார்க்கிறீர்கள். தாமதம் ஆவதால் பாதகம் ஏற்படுமே தவிர சாதகம் ஏற்படாது என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

ஏன் இப்படி சட்டத் திருத்தங்கள் கொண்டுவர காலதாமதம் செய்கிறீர்கள். இப்படி தேர்தல் நடத்துவதை ஒத்தி போட்டுக்கொண்டு பேரவதாலும், ஸ்பெஷல் ஆபீசர் போட்டு வருவதாலும், பல தவறுகள் நடக்க சந்தர்ப்பம் இருக்கிறது. கூட்டுறவு சம்பந்தப்பட்டவரை வேகமாக தேர்தல் நடத்தப் பெறவேண்டும்.

கைத்தறி சம்பந்தமாக ஒரு சில விவரங்களைக் கூறவிரும்புகிறேன். விசேஷ காலங்களில் ரிபேட் கொடுக்கிறோம். அதன் மூலமாக ஸ்டாக் உடனடியாக காலி செய்ய முடிகிறது. தற்போது கைத்தறி துணி தேக்கம் அதிகம் இருப்பதால், அப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்து அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, கூட்டுறவு சம்பந்தமாக சாதாரண விவசாய மக்களிடையே பாரபட்சம் காட்டப்படுகிறது என்று குற்றம் சாட்டுகிறேன். வசூல் செய்யும் நேரத்தில் மதிப்பிற்குரிய அமைச்சர் சொன்னார்கள், 5 ஏக்கருக்கு மேல் வைத்து இருப்பவர்களிடத்தில்தான் ஜப்திசெய்கிறோம், வசூல் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். 5 ஏக்கர் என்பது இடத்திற்கு இடம் வித்தியாசப்படுகிறது. ஒரே ஏரியாவில் ஒரே கிராமத்தில் 5 வகையாக தரம் பிரிக்கப்பட்டு இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், தஞ்சாவூர் மாவட்டத்திற்கும் ஒரே மதிப்பு 5 ஏக்கருக்கு என்பது எப்படி பொருந்தும். அந்த வகையில் கணக்கெடுக்கப்பட்டு ஜப்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. இதைப்பற்றி பலதடவை சொல்லியிருக்கிறோம். இருந்தாலும் அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப் படவில்லை. ஆகவே, நான் கேட்டுக்கொள்வது, இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டு, பெரிய விவசாயி சின்ன விவசாயி என்ற பாகுபாடு இல்லாமல், பஞ்சம் என்று வருகிற போது எல்லோருக்கும் ஒரே நீதி வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. செ. சிவசாமி] [1979 மார்ச் 15

[பிற்பகல் 12.20]

கண்மாயில் தண்ணீர் இல்லை என்றால் எல்லோருக்கும் ஒன்றாகத்தான் இருக்கும். இப்படிப்பட்ட நேரங்களிலே இருக்கின்ற சூழ்நிலைகளையும், நடைமுறைகளையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு, எல்லா விவசாயிகளுக்கும் நல்ல முறையில் காரியங்கள் செய்யக்கூடிய வகையிலே திட்டமிட்டு, எதிர் காலத்திலே இந்த கூட்டுறவுச் சங்கங்கள் நல்லமுறையில் செயல்படுகின்ற வகையிலே சீக்கிரம் தேர்தலைக் கொண்டுவந்து, பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுக்கு நிவாரணப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஜப்தி நடவடிக்கையை நிறுத்தி வைத்திருப்பதாகச் சொன்னார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில் அதற்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் காணப்பட வேண்டும். அதற்கு கடன்களை ரத்து செய்தல், வட்டியை தள்ளுபடி செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு நிரந்தரமான பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த திருத்தச்சட்டத்தில் சில குறைபாடுகள் இருந்தாலும் இதை வரவேற்று அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதுவரையில் பல கண்ணியமிக்க உறுப்பினர்கள் கூட்டுறவுச்சட்ட திருத்த முன்வடிவு பற்றி தங்களது மேலான நல்ல கருத்துக்களை எல்லாம் மிகத் தெளிவாக இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள், அவர்கள் பேசுகின்ற நேரத்திலே பல நல்ல ஆக்கப்பூர்வமான யோசனைகளை எல்லாம் இந்த மன்றத்திலே வைத்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் நிச்சயமாக மனதிலே கொண்டு தமிழக அரசு செயல் படும் என்று நான் முதற்கண் உறுதி சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

குறிப்பாக இரண்டு விழுமிய நோக்கத்திற்காக, மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜ் அவர்கள் தன் பேச்சின் ஊடே சொன்னதைப்போல, இந்த திருத்தச் சட்டத்தை இன்றைக்கு உங்களுடைய மேலான ஒப்புதலுக்காக வைத்திருக்கிறோம். ஒன்று, இன்றைய கூட்டுறவுச் சட்டத்தினுடைய விதிகளின் படியே ஒரு கூட்டுறவுச் சங்கத்திலே எல்லோரும் உறுப்பின ராகலாம்; ஆக முடியும். ஆனால் நடைமுறையில் அப்படி நடக்கிறதா என்றால் உங்களுக்கும் தெரியும், கூட்டுறவுத் துறையிலே பல ஆண்டு இருந்த நண்பர்கள் எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கிறார்கள், அவர்களுக்கும் தெரியும்; விரும்புகின்றவர்கள் உறுப்பினர்களாக ஆக முடியாத சூழல்கள் பல நேரங்களில் இன்றைக்குக்கூட இருக்கிறது. சட்டம் அனுமதிக்கிறது என்பது ஒரு நிலை. ஆனால் அந்த சட்டம் செயல்படுகிறதா என்று அனுபவ ரீதியாகப் பர்க்கிறபோது



1979 மார்ச் 15] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

சில கசப்பான சம்பவங்களை எல்லாம் நாம் கடந்த காலத்திலே சந்தித்திருக்கிறோம். அந்த கசப்பான சம்பவங்கள் எல்லாம் எதிர் காலத்திலே நிகழக்கூடாது என்ற நல்ல நோக்கத்தோடு தான் இன்றைக்கு ஒரு நல்ல சூழலை, ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதற்காக கூட்டுறவுச் சங்கத்திலே யார், யார சேர வேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்களை எல்லாம் சேர்த்து, உறுப்பினர்களாக்குவதற்காக இந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம்,

மதிப்பிற்குரிய நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி அவர்கள் பேசுகின்ற நேரத்திலும், மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் பேசுகின்ற நேரத்திலும் 'ஆட்டமேட்டிக்' என்ற வார்த்தையைப்பற்றிச் சொன்னார்கள். இன்றைக்குச் சேரலாம். ஆனால் இன்றைக்கு சேருவதற்கும் இன்றைக்கு உங்கள் முன்னால் இருக்கிற இந்த மசோதா நிறைவேறிய பிறகு ஏற்படுகிற சூழலுக்கும் வேறுபாடு இருக்கிறது. இன்றைக்கு ஒரு சங்கத்திலே சேர விண்ணப்பித்து விட்டால், அங்கே இருக்கிற நிர்வாகத்தினர் விரும்பினால் அவர்களை உறுப்பினர்களாக ஆக்கலாம்; சட்டத்தின்படி அதை தாமதப்படுத்தவும் செய்யலாம். ஆனால் புதிய திருத்தச் சட்டம் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில்தான் அவர்களை தடுத்து நிறுத்த முடியும். அதன் பிறகு—சரியான விளக்கங்கள் இந்த சட்ட முன்வடிவில் இருப்பது, உங்கள் மேலான பார்வைக்கு வந்திருக்கும்—அவர்களை தடுத்து நிறுத்த முடியாது. அப்படி தடுத்தாலும் அவர்கள் பதிவாளருக்கு மேல் முறையீடு செய்வதற்கு ஒரு வாய்ப்பை இந்தத் திருத்தச் சட்டத்திலே கொடுத்திருக்கிறோம்.

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே. இப்போது இருக்கின்ற விதிமுறைகளின்படி. அந்த கூட்டுறவுச் சங்கத்தினுடைய தலைவருக்கு மனுச் செய்தால் அந்த மனுவை ஏற்றுக்கொண்டு அனுமதிப்பதும் அல்லது பிடிக்காதவர்கள் என்றால் அனுமதிக்க மறுப்பதும் ஆகிய சூழ்நிலைகள் இருப்பதை நானும் அறிவேன். ஆனால் இப்போது கொண்டுவரப்படுகின்ற முறைக்குப் பிறகும்கூட ஒரு சூழ்நிலை ஏற்பட வாய்ப்பிருக்கின்றது. அதாவது உறுப்பினராக இல்லாத ஒருவர் தன்னை உறுப்பின ராகச் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று விண்ணப்பித்து, எந்த வித தகவலும் கிடைக்காத நிலையில் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரிடம் நான் அனுப்பிய மனு என்ன ஆயிற்று என்று கேட்டால் உங்களுடைய மனுவே வரவில்லை என்று சொல்கின்ற நிலை ஏற்படும். அப்படிக் கூறுகின்றபோது இந்த அரசு என்ன யோசனை வைத்திருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத்தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சந்தேகம் நியாயமான சந்தேகம். அதற்குத்தக்க பாதுகாப்புகள் இருக்கிற வகையிலே அதாவது உறுப்பினர்களாகின்ற வகையிலே இந்த அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : இப்போதுள்ள முறைப்படி கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினராக ஆவதற்கு மனுச் செய்யவேண்டும். அவர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொண்டால் பிரச்சினை இல்லை. அவ்வாறு சேர்த்துக்கொள்ளாமல் கொஞ்ச நாட்கள் கழித்து நீங்கள் மனுவே அனுப்பவில்லை என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது? மாண்புமிகு அமைச்சரவர்கள் கிராமத்திலே இருந்து பழக்கப்பட்டவர்கள் ஆதலால் அவர்களுக்கும் தெரியும். ஒரு முறை மனு கொடுத்துவிட்ட பிறகு மீண்டும் தரப்படுகின்ற மனுவை பெற்றுக்கொள்வது வழக்கமல்ல. இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் சிலர் இருக்கிறார்கள். வேண்டுமானால் அவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்: ஆகவே அப்படி கொடுக்கப்பட்ட மனுவை 10, 15 நாட்கள் கழித்து வரவே இல்லை என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது. இதிலே காலத் தாழ்வு ஏற்படுவதுடன் இப்படிப்பட்ட பிரச்சினைக்கு அரசு என்ன யோசனை வைத்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபடி அதிலே ஏதாவது இடைஞ்சல் வருமேயானால் நிச்சயமாக அதனை பரிசீலனை செய்ய நாங்கள் திறந்த மனதோடு இருக்கிறோம்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மதுராந்தகம் ஆறுமுகம் அவர்கள் சொல்வது ஒரு விதத்தில் சரி என்றாலும் அதிலே மற்றொரு விதத்திலே பாதகமும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது அவர்களுக்கும் தெரியும். ஒரு தலைவர் ஒருவரை உறுப்பினராகச் சேர்க்க மறுக்கிறார் என்று சொல்கிறபோது அவரை எப்படியாவது சேர்க்கவேண்டும் என்பதுதான் கொண்டுவரப்படுகின்ற சட்டத்தினுடைய நோக்கம். அதாவது தலைவருடைய அதிகாரத்தைக் குறைக்கவேண்டும் என்றுதான் இப்போது நான் வலியுறுத்துகிறேன. அதற்காகத்தான் இந்த சட்டமே கொண்டுவரப்படுகிறது என்பதை அவர்கள் அறிந்துகொள்ளவேண்டும்.





திரு. சி. ஆறுமுகம் : எனக்கு இதிலே ஒரு கருத்து மாறுபாடு இல்லை. ஆனால் இதிலேயும் சிக்கல் ஏற்படுவதற்கு வழி உண்டு என்பதைத்தான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அடுத்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் பேசுகிற நேரத்தில் இப்போது அதிகாரிகளின் ஆட்சி இந்த மாதிரி இடங்களில் நிலவுகிறது என்றும், ஆகவே விரைவில் இப்படிப் பட்ட நிலைமையை மாற்றி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நிர்வகிக்கின்ற ஒரு சூழலை உருவாக்கவேண்டும் என்றும் மிகுந்த பெருந்தன்மையோடு எடுத்துச் சொன்னார்கள். மற்ற உறுப்பினர்கள் பேசுகின்றபோதும் இதே கருத்து அவர்களுடைய உணர்வுகளிலே ஒலித்தது. அதே உணர்வுதான் இன்றைக்கு தமிழக அரசிற்கும் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே எவ்வளவு விரைவிலே அப்படிப்பட்ட தேர்தலைக் கொண்டுவரமுடியுமோ அதற்கான ஆயத்தங்களை செய்துகொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இங்கே பேசிய நண்பர்கள் அதிலும் குறிப்பாக நம்முடைய அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் திரு. சந்தானம் குழுவைப் பற்றிச் சொல்கிறபோது அதிலே இருக்கின்ற நல்ல விவரங்களை எல்லாம் நீங்கள் அமுல்படுத்தவேண்டும் என்ற நல்ல ஆலோசனையை எடுத்துச் சொன்னார்கள்.

[பிற்பகல் 12.30.]

அப்படி சந்தானம் குழுவினால் சொல்லப்பட்ட ஆலோசனை களில் ஒன்றுதான், நலிந்தவர்கள். சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிற ஒடுக்கப்பட்ட மக்கள், இந்தச் சங்கங்களில் யார் யாருக்கு வாய்ப்பளிக்கவேண்டும் என்று அவர்கள் பரிந்துரை செய்ததன் அடிப்படையில், அதனை ஒரு கருத்தாக வைத்துத் தான் இன்று இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறோம் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதேபோல் இந்தத் திருத்த மசோதாவின்மீது பேசுகிறபோது நியாயவிலைக் கடைகள் பற்றியும், தனி அதிகாரிகள் பற்றியும், வேறு சில கூட்டுறவு சம்பந்தமான நல்ல விமர்சனங்களை எல்லாம் தமிழக அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். வருகிற 24ம் தேதி நடைபெற இருக்கிற கூட்டுறவுத் துறை மானியத்தின்போது நிச்சயமாக அதற்கான நல்ல விளக்கங்களை எல்லாம் இந்த மாமன்றத்தின் முன்பாக வைக்க இருக்கிறேன் என்பதைச் சொல்லிக்கொண்டு இந்த இரண்டு திருத்தங்களையும் கொண்டு வந்திருப்பது ஏதோ கட்சியின் நலன்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவோ அல்லது கட்சிக்காரர்களை அதில்

புகுத்தவேண்டுமென்பதற்காகவோ, நிச்சயமாக அப்படிப்பட்ட நோக்கம் தமிழக அரசுக்கு இல்லை என்பதை குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வராசன் அவர்களுக்கு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்கள் பேசுகிறபோது தெளிவாகச் சொன்னார்கள். இன்றைக்கு 90 சதவிகிதம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். மீதி 10 விழுக்காடுதான் இன்னும் உறுப்பினர்களாக ஆகாமல் இருக்கிறார்கள். அதற்காக ஒரு சட்டமா என்று சொன்னார்கள், அந்த 10 சதவிகிதம் பேர்களும் இதில் சேரவேண்டும் என்ற நல்ல நோக்கோடுதான் இந்தத் திருத்த மசோதாவை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. அதேபோல் தேர்தல்கள்பற்றியும் அவர்கள் சொன்னார்கள். கடந்த பத்து மாதங்களாக, கூட்டுறவுத்துறை பொறுப்பை நான் ஏற்ற பிறகு அதில் மிக்க கவனம் செலுத்தி, கடந்த முப்பதாண்டுகளாக நடைபெற்று வந்த—நான் ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சொல்லவில்லை — முப்பதாண்டுக் காலத்தில் இருந்துவந்த குறைபாடுகளையெல்லாம் போக்கி ஒரு நிறைவான, நல்லதொரு படைக்கலனாக ஒரு கூட்டுறவுச் சட்டத்தை உருவாக்கவேண்டுமென்பதற்காகத்தான் கடந்த பத்து மாதங்களாக நாங்கள் காலத்தை எடுத்துக்கொண்டோமே தவிர வேறு வகையான நோக்கங்கள் அதில் இல்லை. இன்று பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் மிகுந்த உணர்வோடும் உறுதியோடும் சொன்னதை, அந்த உணர்ச்சிகளையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு விரைந்து அந்த நல்ல காரியம் நடைபெறுவதற்கு இந்தத் தமிழக அரசு நல்ல முயற்சியினை மேற்கொள்ளும் என்று இந்த நேரத்தில் உறுதிகூறி இத்திருத்த மசோதாவை நிறைவேற்றித்தரவேண்டுமென்று பணிவன்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கம். இந்தக் கூட்டுறவில் யாரும் சேருவதற்குத் தடையில்லாமல் அவர்கள் விண்ணப்பித்தால் அந்த விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர்கள் விண்ணப்பித்தாலே அவர்கள் உறுப்பினர்கள் என்ற நிலையை உருவாக்குவதற்கு இது உதவிசெய்கிறது என்ற முறையில் குறிப்பிட்டார்கள். அது சரிதானா ? அப்படி விண்ணப்பிக்கிறவர்களின் விண்ணப்பங்களையெல்லாம் பெற்றுக்கொள்வதை பட்டியலாக அமைத்து விண்ணப்பங்கள் வாங்கினதற்கு ஒரு அத்தாட்சி கொடுக்கப்பட்டு அதற்குப் பின்னால் முன்பின் வந்ததுகூட மாற்றப்படாமல் தடுப்பதற்கு வேண்டிய பாதுகாப்புகளை அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் திரு. மதுராந்தகம் ஆறுமுகம் அவர்கள் எடுத்துச் சொன்ன அதே ஐயத்தைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களும் நினைவுபடுத்தியிருக்கிறார்கள்.



விண்ணப்பதாரர்கள் இன்றைக்கு உறுப்பினர்களாக ஆக வேண்டுமானால் — நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் பேசாவிட்டாலும் கூட அவர்கள் சொன்ன அந்த உணர்ச்சி என் காதில் விழுந்தது— அவர்கள் பதிவுத் தபால் மூலமாக அனுப்பலாம். அப்படிப் பதிவுத் தபால் மூலமாக அனுப்பினால் பதிவுச் சான்றிருக்கும். ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள், 15 நாட்கள் அந்த வடிவத்தில் வைத்திருக்கிறோம். குறிப்பிட்ட காலத்திற்குள் பதில் வரவில்லையென்றால் நிச்சயமாக . . . . .

திரு. சி. ஆறுமுகம் : அதில்கூட தவறுகள் நடைபெறுகின்றன. உங்களுக்காகத்தான் சொல்லுகின்றேன் . . . எதையும் நம்ப முடியவில்லை . . .

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மனிதனை நம்பித்தான் வாழவேண்டும். அப்படி ஏதாவது இதில் தவறுகள் நடந்தால் அப்போது திருத்திக்கொள்ளலாம்.

திரு சி. ஆறுமுகம் : பதிவுத் தபாலில் அனுப்பினாலும் சில சிக்கல்கள் வருகின்றன. உங்களுக்கு ஆலோசனையாகதான் இதை சொல்லுகிறேன். பதிவுத் தபால் என்று சொல்லிவிட்டு, கவரில் வெறும் வெள்ளைத்தாளை வைத்து பதிவுத் தபாலில் அனுப்பிவிடுகிறார்கள். அப்படி ஏற்படும்போது, அதை வாங்கினவனுடைய நிலைமை என்ன என்பதை நாம் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இவைகள் எல்லாம் நடைமுறை கிக்கல்கள். நல்லது தான் நடக்கும் என்று எப்போதும் எடுத்துக்கொள்வோம். ஏதாவது தவறுகள் நடந்தால் அப்போது பார்த்துக்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மதிப்பிற்குரிய ஆறுமுகம் அவர்கள் இந்த யோசனையை சொல்லிக் கொடுக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : இந்த ஆறுமுகத்திற்கு நல்லதைத் தவிர கெட்டது எதுவும் இதுவரை தெரியாது என்பதை சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : ''தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/78) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது,

பிரிவுகள் 2, 3, 4 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு—1

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவை முன்னுள்ள கேள்வி : ''பிரிவு— 1 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன் :

"In clause 1 for the figures '1978', substitute the figures 1979".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெறறது. நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

<u>முகப்புரை</u>

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவை முன்னுள்ள கேள்வி : ''முகப்புரை இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெறவேண்டும்.''

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ;</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

'In the enacting formula, for the expression "Twenty-ninth Year", substitute the expression "Thirtieth Year".

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்ற, நிறைவேற்றப்பெற்றது.



<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'' தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/78), திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1978).

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'' தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு* எண் 25/1978) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்'' என்று முன்மொழிகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ;</u> அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவை முன் வைக்கப்பெறுகிறது.

<u>திரு. பெ. சு. திருவேங்கடம் ;</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தின் மீது எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தில் 30 ஏக்கர்கள் என்பதை இப்போது 12 ஏக்கர்களாக ஆக்கி திருத்தம் செய்திருக்கிறார்கள் . . . . .

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போதும் 30 ஏக்கர்தான் இருக்கிறது. 30 ஏக்கர் என்பதை 12 ஹெக்டேர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான்.

[பிற்பகல் 12·40.]

<u>திரு. பெ. சு. திருவேங்கடம் ;</u> துணைத் தலைவர் அவர்களே, இதிலே சொல்லப்பட்டிருக்கின்ற பல்வேறு கருத்துக்களைப் பார்த்த போது, சாதாரணமாக தனியார் காடுகளில் மரம் காய்ந்து போனாலோ அல்லது வேறு காரணங்களினாலே வீழ்ந்துவிட்டாலோ,

* 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

இருக்கும் மரங்களையும் அரசாங்கத்துக்குச் சொந்தமான காடுகளில் இருக்கும் மரங்களையும் தெரியாமல் வெட்டி எடுத்துக் கொண்டுபோகின்ற நிலைமையைத் தடுத்துவிட முடியும்.

அரசாங்கம் ஏராளமான பணத்தைச் செலவு செய்து காடுகளில் மரங்களை வளர்க்கிறார்கள், பல்வேறு இடங்களில் நீலகிரி யூகலிப்ட்ஸ் மரத்தை வளர்க்கிறார்கள். பல்லாண்டுகள் ஆகியும் அது சரிவர வளருவது இல்லை. தரைக் காடுகளில் புளிய மரங்களை ஏராளமாக வளர்க்கலாம். இன்றைய தினம் புளி விலை எப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது உயர்ந்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். வனத் துறையில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அவற்றில் புளிய மரங்களை வளர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சந்தன மரங்களை வெட்டுகின்ற காரியங்களைத் தடுக்கவும் மற்றும் வனத்துறையில் வருவாய் தரும் வகையில் உள்ள மரங்களை நடவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். தனிப்பட்டவர்களிடம் இருக்கின்ற காடுகளையும் அரசாகம் எடுத்துக்கொள்ள தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*<u>திரு. தே. ஞானசிகாமணி :</u> துணைத் தலைவர் அவர்களே, இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவு தனியார் காடுகளைப் பாதுகாக்கும் திருத்தச் சட்டமாகத்தான் இருக்கிறது. தனியார் காடுகளை அரசே பாதுகாப்பதை விட அரசு அதைச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். அதுதான் பல்வேறு சிக்கல்களைத் தீர்க்கும். இல்லையென்றால் பல்வேறு சிக்கல்கள் வந்து கொண்டு தான் இருக்கும்.

உதாரணமாக ஒரு சம்பவத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். சில மாதங்களுக்கு முன்னால் மாஞ்சோலைத் தோட்டத்தில் தனியாருக்கு சொந்தம் என்று சொல்லி சில மரங்களை முறித்துக் கொண்டிருந்தார்கள். அது அரசாங்கத்திற்குச் சொந்தம் என்று சொல்லி நிறுத்தி வைக்கப்பட்டது. மீண்டும் அந்த மரங்களை அந்தத் தனியார் கொண்டு செல்ல அரசு அனுமதி கொடுத்திருக்கிறது, அதில் பல்வேறு விதமான ஊழல்கள், சிக்கல்கள் உள்ளதாகப் பேசப்படுகிறது, அது தெளிவாகத் தெரியாத காரணத்தால் தெளிவாகச் சொல்லவில்லை.

எங்கள் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் திருவிதாங்கூர் சமஸ்தானத்தோடு இருக்கும் போது காட்டுப் பகுதிகளில் பல இடங்களில் மேய்ச்சல் நிலங்கள் என்றும் ரெவின்யூ புறம்போக்கு



என்றும் ஏராளமாக இருந்தன. அந்த இடங்களில் நீண்ட காலமாக பல விவசாயிகள் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். பல குடிசை வாழ் மக்கள் குடிசை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அந்தப் பகுதிகள் பூராவும் காட்டுப் பகுதிகள் என்று சொல்லி விவசாயிகளை வெளியேற்றவும், மனைகளில் குடியிருப்பவர்களை வெளியேற்றவும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நீண்டகாலமாக விவசாயம் செய்து கொண்டும், குடியிருந்து கொண்டும் இருக்கக் கூடியவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு முக்கியமான சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன், மேற்கு மலைத் தொடர்ச்சித் திட்டம் என்று மத்திய அரசு திட்டம் இருக்கிறது. அதன் மூலம் 75 சதவிகிதம் காடுகளை அழித்தார்கள். ஒரு பக்கம் காடுகளை வளர்க்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கும் போது காடுகளை அழிப்பதற்கான திட்டத்தை அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-50]

எங்களுடைய குமரி மாவட்டத்திலே அருமையான அடர்த்தியான காடுகள் இருந்தன அந்த காடுகள் எல்லாம் அழிக்கப்பட்டு, ரப்பர் பயிரிடப் படுகிறது. ஆனால் குன்றுப் பிரதேசங்களையும், சரிவுப் பிரதேசங்களையும் விட்டுவிட்டு பள்ளத்தாக்குப் பிரதேசங்களிலே ரப்பர் பயிர் செய்தால் காடுகள் வளருவதற்கு வாய்ப்பு இருக்கும். குன்றுப் பிரதேசம், சரிவுப் பிரதேசம் ஆகியவற்றில் காடுகளை ஒரேயடியாக அழித்துவிடுகிறார்கள். அப்படியில்லாமல் பள்ளத்தாக்குப் பிரதேசங்களில் ரப்பர் பயிரிடச் செய்தால் காடுகளை வளர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன், அடுத்து, ரப்பர் பயிரிடுகிறபோது இடையிடையே சிறிய காடுகளும் பாறைகளும் இருக்கின்றன. அந்த இடங்களை அப்படியே விட்டுவிடுகிறார்கள். அதற்கு ஒரு சரியான திட்டம் இல்லை. அங்கேயும் காடுகளை வளர்க்கச் செய்வதற்கு ஆவன செய்யவேண்டும்.

1967-ஆம் ஆண்டிலே கலைஞர் அவர்கள் பி. டபிள்யு. டி. அமைச்சராக இருந்தபோது அங்கே சிற்றாறு அணையிலே தண்ணீர் ஏற்றப்பட்டது. அப்போது அங்கே சுமார் 75 குடிசைகள் இருந்தன. அங்கே இருந்தவர்கள் எல்லாம் அரை ஏக்கர் ஒரு ஏக்கர் புறம்போக்கு நிலத்திலே விவசாயம் செய்து வந்தவர்கள். அவர்களை அப்போது வேறு இடத்திற்கு மாற்ற வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. அப்போது கலைஞர் அவர்கள் மாற்று இடம் கொடுக்கப்படுமென்றும், ஒரு குடும்பத்திற்கு ஒரு ஏக்கர் கொடுக்க வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்தார். ஆனால் அந்த உத்தரவு இதுவரையில் அமலாக்கப்படவில்லை, இதனால் சுமார்

70, 80 குடும்பங்கள் இன்றைக்கு அநாதைகளாக அலையக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்த முன்னாள் மேய்ச்சல் நிலமாகிய சுடலிக்காடு என்ற இடத்தில் அந்த 75 குடும்பங்களுக்கும் மாற்று இடங்கள் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை).

அடுத்து, காட்டுப் பகுதிகளிலே ரப்பர் பிளான்டேஷன் ஆரம்பித்தற்குப் பின்னால் ஏராளமான மண் அங்கே, மலையிலிருந்து கொண்டு வரப்பட்டு கீழே இருக்கக்கூடிய அணையில் மண் நிறைந்து கொண்டிருக்கிறது. ஆகவே காட்டுப் பகுதிகளிலே உள்ள ரப்பர் பிளான்டேஷன் இருக்கும் இடங்களில் மண் அரிப்பைத் தடுத்து நிறுத்த தடுப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்,

<u>திரு. ஆர். சி. சுப்பிரமணியம்</u>: பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். இராமநாதபுரம் மாவட்டத்திலே மாரியூர், செல்வனூர் பாரஸ்ட் என்று வைத்திருக்கிறார்கள். ஆனால் அது உண்மையிலேயே பாரஸ்ட் ஆக இல்லாது, வெறும் மணல் காடாகவே இருந்து கொண்டிருக்கிறது. கடந்த பத்து ஆண்டுகளாக அதிலே இருந்த உடை மரங்களையெல்லாம் வெட்டி மணற் தரையாக்கி விட்டார்கள். அதற்குப் பின்னால் இன்றைய தினம் அதே உடை மரங்கள் வளர்க்கப்பட 4 ஆண்டுகளாக அவைகளை நடுவதற்கு முயற்சிகள் செய்து நட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவைகளிலே எந்தக் கன்றாவது உயிரோடு இருக்கிறதா என்று பார்த்தால் நம்முடைய அரசாங்கத்திற்கு ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு ஏற்பட்டுக் கொண்டி:ருக்கிறதே தவிர, ஒரு கன்றாவது அந்தப் பகுதியிலே உயிரோடு இல்லை. ஆகவே, அந்தத் திட்டத்தை தயவு செய்து கைவிட்டு விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் சமஸ்தானத்தைச் சேர்ந்த அந்த நிலங்கள் மேய்ச்சல் நிலங்களாகப் பயன்பட்டனவே தவிர, பாரஸ்ட் ஆக இல்லை. பாரஸ்ட் ஆக இல்லாத நிலைமையிலும் இன்றைக்கு அங்கே பல அதிகாரிகள் இருக்கிறார்கள். அது தேவையற்றது என்பதை என்னுடைய பகுதி அது என்பதால் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





வெள்ளாடுகளை அந்த மேய்ச்சல் நிலங்களிலே மேய்க்கக்கூடாது என்று சொல்லப்படுவதால் அங்கே இருக்கிற விவசாயிகள் பாதிக் கப்படுகிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் அந்த ஆடுமாடுகளை வைத்துத்தான் விவசாயம் செய்து ஜீவித்துக் கொண்டிருக்கிறார்கள், வேறு வருமானம் இல்லை. அந்தப் பகுதியிலே வெள்ளாடுகளை மேயவிடுவதால் எந்தவிதமான பாதகமும் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் வெள்ளாடு மேய்வதால் உடன் கன்றுகளைப் புதிதாக நடுவதைக் காட்டிலும், ஏராளமான கன்றுகள் வளரும். ஏனென்றால் வெள்ளாட்டுப் புழுக்கையினால் அதிகமாக அது வளருகின்றது என்று சொல்லப்படுகிறது, எனவே, வெள்ளாடுகளை மேயவிடுவதால் உடன் கன்றுகள் கெட்டு விடாது, கன்று வளரத் தடையாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ரிசர்வ்ட் ஃபாரஸ்ட் என்பதைப் பொறுத்தவரையில் இது மேய்ச்சல் நிலமாக இருப்பதால் அதை மேய்ச்சல் நிலமாக மாற்றிக் கொடுக்க வேண்டும். அவ்வாறு மேய்ச்சல் நிலமாக மாற்றிக் கொடுத்து, விவசாயிகள் ஆடு மாடுகளை மேய்க்கக்கூடிய நிலமாக மாற்றினால் அரசாங்கத்திற்கு இலட்சக்கணக்கான ரூபாய் மிச்சப்படும் என்பதையும், விவசாயிகளுக்கும் பயன்படும் என்று சொல்லி, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக தலைவரவர் களுக்கு நன்றி சொல்லி, அமர்கிறேன்.

<u>டாக்டர் கே. சமரசம்</u> : பேரவைத் தலைவரவர்களே, இன்றைய தினம் இங்கே மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கக் கூடிய இந்தத் தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் இந்த மசோதவை வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல நான் முன் வருகிறேன்.

காடு வளர்ந்தால்தான் நாட்டின் நலம் செழிக்கும் என்பதனை நாம் அனைவரும் அறிவோம். இல்லாதார் இல்லாமல் ஆக்க வேண்டுமென்கின்ற கருத்தினை மனத்திலே கொள்ளுகின்ற அதே நேரத்திலே, இருப்பவர்களிடமிருந்து எடுக்க வேண்டுமென்ற தத்துவத்தையும் நாம் கொண்டிருக்கிறோம். காடு என்று சொல்லும் நேரத்தில் எந்த அளவிற்குக் காடு இன்றைய தினம் நாடாக மாறிக் கொண்டிருக்கிறது என்பது நமக்குத் தெரியும். காடு என்ற நிலை இல்லாமல் அவைகளெல்லாம் பாசன வசதி பெற்று பயிர்த் தொழில் செய்யக் கூடிய நிலையில் பலப்பலப் பகுதிகளில் பரவியிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

காட்டை வளர்க்க வேண்டுமென்பதிலே நமக்குக் கருத்து மாறுபாடு இல்லாவிட்டாலும் கூட, காட்டை வளர்க்கின்ற அதே நேரத்தில் காட்டு நிலத்தை யார் யார் உழுகின்றார்களோ அப்படி

உழக்கூடியவர்களுக்கு நிலத்தைக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. காட்டை வளர்த்து அங்கே மூலிகைகளையும் இன்ன பிற அற்புதங்களும் விளையக்கூடிய மரங்களையும் பயிர் செய்யக் கூடிய நிலையிலேயும் நாம் இருக்கின்றோம் என்பதையும் மறந்து விடுவதற்கில்லை.

பொதுவாக தர்மபுரி மாவட்டத்தில் காடு வளர்ப்பு என்று சொல்லுகின்ற நேரத்தில், காட்டு நிலங்களில் பல மக்கள் இன்றைய தினம் கைக்கொண்டிருக்கும் நிலையில் அவர்கள் பயிர் செய்து கொண்டு வருகிறார்கள் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தர்மபுரி மாவட்டத்திலே மார்வாடி, மதகேரி, சோக்காடி, குண்டாங்காடு, கொந்தளம், சொக்கம்பட்டி, மல்லுப்பட்டி, பிக்கனஹள்ளி, முரக்கல்நத்தம், மோர மொருகு, கரந்தமாரம் பட்டி, ஜிட்டாண்டஹள்ளி, தெப்பை, குளிக்காடு, காடுசெட்டிபட்டி போர்டர்காடு, கண்டகம் பெயில், கத்தேரி, சந்தைப்பேட்டை, துடும்பள்ளி, சாபர்த்தி மோரணஹள்ளி, பனக்கமுட்லு, துருவம், தொட்டியம்மாள் கடசு, செம்பார்கட்டு, திருடன்பெயில் போன்று என் தொகுதியிலேயே, காவேரிப்பட்டிணம் தொகுதியிலேயே— இத்தனை கிராமங்களிலும் இருக்கின்ற விவசாயிகள் இந்தக் காட்டு நிலங்களைப் பயிர் செய்து கொண்டு வருகிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் சொந்த நிலத்தையும் ஏராளமாக வைத்துக் கொண்டு, காட்டு நிலத்தையும் ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்களை அகற்றி, சொந்த நிலமே இல்லாமல் காட்டு நிலங்களை மட்டுமே நம்பி வாழக் கூடியவர்களுக்கு ஓரளவிற்கு நாம் சலுகைகள் தரும் வகையிலே, இல்லாதார் இல்லாமல் ஆக்க வேண்டுமென்ற முறையிலே அவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காடு என்ற நிலையில் இருப்பதை மட்டும் பாதுகாத்து, காடாக்க முடியாமல் இருக்கும் பகுதிகளைப் பட்டா செய்து கொடுக்க இந்த அரசு முன் வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கனவே, இப்படிப்பட்ட காட்டு நிலத்தைச் செய்து கொண்டிருப்பவர்களுக்கு வனச் சட்டம் 1882, பிரிவு 10-ன்படி ஒரு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி விரைவிலே அந்த இடங்களை விட்டு அப்புறப்படுத்த வேண்டு மென்றும், அவர்கள் மேல் முறையீடு செய்து கொள்ள அவர்கள் வேண்டு மென்றால் 30 நாட்களுக்குள் கோர்ட்டிலே மேல் முறையீடு செய்து





கொள்ள வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப் பட்ட நிலையிலே அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையிலேயும் அவர்களைக் காக்கின்ற முறையிலேயும் நல்லதொரு முடிவை அரசு எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லக் கடமை பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, காடு என்பதிலேதான் மிகப்பெரிய அற்புதங்கள் விளைந்து கொண்டிருக்கின்றன. சிறிய முதலீட்டைப் போட்டு அதிக இலாபத்தை அதிக வருவாயை அரசு பெறுகிறது என்றால் அது வனத்திட்டத்தின் மூலமாகத்தான் இருக்குமே தவிர, காடு வளர்ப்பு மூலமாகத்தான் இருக்க முடியுமே தவிர வேறு முறையில் அல்ல என்பதை நிச்சயமாகச் சொல்லலாம்.

(பிற்பகல் 1-00)

அதுமட்டுமல்லாமல், இந்தியாவிலேயிருந்து, குறிப்பாக தமிழகத் திலேயிருந்து 365-க்கு மேற்பட்ட மூலிகைகள் மேனாடுகளுக்கு மருந்துகள் தயாரிப்பதற்காக அனுப்பி வைக்கிறார்கள். அப் படிப்பட்ட மூலிகைப் பண்ணைகளையெல்லாம் இது போன்ற காடுகளிலே வளர்ப்பதற்கு அரசு முன்வரவேண்டும்.

அது மட்டுமல்லாமல், சின்கோனா வாரியம் ஒன்று அமைக்க வேண்டுமென்றும் இந்த அரசுக்கு ஆலோசனையாகச் சொல்ல முன் வருகிறேன், அப்படி அமைக்கின்ற பொழுது மேனாடுகளுக்கு எந்த, எந்த மூலிகைப் பொருள்களை அனுப்பி வைக்கிறோமோ, அப்படிப்பட்ட மூலிகைச் செடிகளை, இது போன்ற காட்டுப் பகுதிகளிலே வளர்த்து, அந்த மூலிகைகளை மேனாடுகளுக்கு அனுப்பி, பசுமைப் புரட்சியையும் அன்னியச் செலாவணியையும் பெற இந்த அரசு முயற்சி மேற்கொள்ளவேண்டும்.

இன்றையதினம் காட்டு நிலங்களில் விவசாயம் செய்யக்கூடிய ஏழைகள் அப்புறப்படுத்தப்படுகிறார்களென்றால், எந்தெந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்களோ, அந்தந்தப் பகுதியிலே இருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்களைக் கலந்து முடிவு எடுக்க, அரசு தகுந்த தாக்கீதுகளைக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

இப்பொழுது இருக்கக்கூடிய சட்டங்கள், 'இரட்டைக்குப் புட்டதெல்லாம் செரட்டை' என்று சொல்வார்கள். எந்தச் சட்டம் என்றாலும், அதிலே, இது சட்டப்படி செல்லாது, அது சட்டப்படி செல்லாது என்று வருகிற காரணத்தால், யார் எதை வேண்டுமானாலும் வைத்து கோர்ட்டுக்குப் போகலாம் என்ற

நிலை இருக்கிற காரணத்தால், ஒரு புதிய அமென்ட்மென்ட்டைக் கொண்டு வந்து, ஏழைகள் வாழக் கூடிய அளவில், அதே நேரத்தில், பணக்காரர்கள் தேவைக்கு அதிகமாக வைத்திருப்பார்களானால், அவர்களிடம் இருந்து எடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே பேசுகிற பொழுது அருமை நண்பர் ஆறுமுகம் அவர்கள் கூட்டுறவுத் துறையிலே அவருடைய அனுபவத்தைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். நான் கூட்டுறவுத் துறையிலே 20 ஆண்டுகளுக்கு மேலாக இருந்தவன். அந்த அனுபவத்திலே சொல்கிறேன், (மணியடிக்கப்பெற்றது) ஒரு கூட்டுறவு சங்கத் தலைவருக்கு அனுப்புகிற நேரத்தில், அரசு அலுவலருக்கு அனுப்பி வைத்தால், அது . . . . . . .

<u>திரு. துரை முருகன் :</u> ஒரு ஒழுங்குப் பிரச்னை. மதுராந்தகம் ஆறுமுகம் கூட்டுறவுத் துறை பற்றிய 'பில்' லில் பேசியதற்குப் பதில் சொல்லிப் பேசுகிறார் டாக்டர் சமரசம். ஏற்கனவே, அந்த 'பில்' 'பாஸ்' ஆகிவிட்டது. மூலிகையைப் பற்றி சொன்னார், சரி சேர்த்துக் கொள்ளலாம். கோரைப் புல் வெட்டுவது பற்றிய 'பில்' இது. இதில், மூலிகையைப் பற்றி சொன்னார். பரவாயில்லை. ஆனால், இவர் கூட்டுறவு துறை பற்றி, 'பாஸ்' ஆன 'பில்' பற்றிப் பேசுகிறார். இதற்கு சபாநாயகர்தான் தீர்ப்பு சொல்லவேண்டும்.

<u>டாக்டர் கே. சமரசம்:</u> பேரவைத் தலைவரவர்களே, ஒரு பிரச்னையைப் பற்றி பேசுகிறபொழுது, வேறு பிரச்னைகளைப் பற்றி பேசுவது இங்கே வழக்கமாக இருக்கிறது. இதுவரையில் அது மாதிரி தான் நடந்து வருகிறது. துரைமுருகன் அவர்கள் கூட அது மாதிரி பேசியிருக்கிறார்.

<u>திரு. துரை முருகன் :</u> அது பொது விவாதத்தில், இது 'பில்'.

<u>டாக்டர் கே. சமரசம் :</u> பேசக் கூடியதில் தவறு இருந்தால் சுட்டிக் காட்டுங்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மசோதாவை ஒட்டிப் பேசுங்கள். நேரம் ஆகிவிட்டது, சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

<u>டாக்டர் கே. சமரசம் :</u> காடுகளெல்லாம் ஏற்கனவே அழிந்து விடக்கூடிய பயம் நாட்டிலே இருந்தது. அப்படிப்பட்ட நிலையை நீக்கி, காட்டை வளர்க்கக்கூடிய முறையில், பயத்திற்கு முன்னால் 'அ' போட்டால், அபயம் என்று வரும். அந்த வகையில், இந்த



அரசு காட்டை வளர்க்க, அபயத்தைக் கொண்டு வந்திருப்பது, இந்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பது வரவேற்கத்தக்கது என்று சொல்லி, இதனை வரவேற்று விடைபெறுகிறேன்.

* <u>திரு. சொ. ந. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நமது மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்ட முன் வடிவை இந்த மன்றத்திலே எடுத்து வைத்துள்ளார்கள். அதன்மீது எனது கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன். காடுகள் தான் இந்த நாட்டினுடைய செல்வத்திற்கு முதுகெலும்பாக இருக்கின்றன. மழை வளம் சிறக்க வேண்டுமானால், காடுகள் மிகவும் நல்ல முறையிலே இருக்க வேண்டும். தனியாரிடம் இருக்கிற சந்தன மரங்கள், ரப்பர் மரங்கள், தேக்கு மரங்கள், இவற்றினுடைய வளர்ச்சிக்கு காடுகள் தான் மிகவும் முக்கியமாக இருக்கின்றன. அதனை அரசு எடுக்கின்ற பொழுது தனியார் காடுகள் என்ற பெயரில் நல்ல விளை நிலங்களை எல்லாம் அரசு எடுக்க முற்படுவது சரியானதல்ல என்பதை இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். என்னுடைய தொகுதிக்குப் பக்கத்திலே நீலகிரி மாவட்டம் இருக்கிறது. அந்த மாவட்டத்தினுடைய அடிவாரத்திலே மலைவாழ்மக்கள், இருளர், தோடர். முருகர், என்ற ஜாதியார் வசிக்கிறார்கள். அவர்கள் பக்கத்திலிருக்கிற அரசு காடுகளையெல்லாம் நன்கு பராமரித்து வருகிறார்கள். அந்த மலைவாழ் மக்களுடைய விளைநிலங்களையெல்லாம் கூட அங்கே இருக்கக் கூடிய வனத்துறை அதிகாரிகள் அபகரித்து வருகிறார்கள் என்ற புகார் என்னிடம் வந்து கொண்டிருக்கிறது. அரசு அவர்களுக்கு இருந்த நிலங்களை அவர்களுக்கு கிடைக்கவும், அவைகளைப் பயிர் செய்யவும் என்ன விதமான உதவி செய்ய முடியுமோ—கூட்டுறவு முறையில் அவர்களுக்கு உதவி செய்தால் இன்னும் நலம்—அந்த உதவிகளைச் செய்தால் அம்மக்களுக்கு பெரிய நன்மையாக இருக்கும். அந்த மலைவாழ் மக்களுடைய நிலங்களை அவர்களுக்கு திரும்பவும் கிடைக்கவும், அங்குள்ள காட்டிலாகா அதிகாரிகள் அவர்களை பயமுறுத்தாமல், அந்த மலைவாழ் மக்களுக்கு அவர்களின் வாழ்க்கையில் புத்துணர்வும், புதுப் பொலிவும் ஏற்பட என்னென்ன உதவிகளை எல்லாம் செய்ய முடியுமோ அவைகளை அரசு அவர்களுக்கு நிச்சயமாக செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய காடு வளர்ச்சிப் பற்றி தனியாக ஒரு தீர்மானத்தை இங்கே அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார். அந்தத் தீர்மானத்தின் மீது உறுப்பினர்கள் இங்கே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தனியார் காடுகள் பாதுகாப்பு என்று ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உத்திராபதி அவர்கள் உரையை சுருக்கமாக முடித்துக் கொள்ளுங்கள்.

*திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, காடுகள் என்பது ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் வளத்திற்கும் பிரதானமான காரணம் ஆகும். காடுகள் என்பதை திட்டமிட்டு வளர்க்க வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டுதான் நம்முடைய பழங்காலத்து மன்னர்கள் எல்லாம் சாலை ஓரங்களில் மரங்களை வைத்து வளர்த்து இந்த நாட்டைப் பெரிய வனாந்தரமாக மாற்றினார்கள். சோவியத் நாட்டில் சைபீரியாவிலிருந்து வீசும் புயலையும், பனியையும் தடுப்பதற்காகக் காடுகளை வளர்த்தார்கள். அந்தக் காடுகள் புயலிலிருந்தும், பனியிலிருந்தும், சோவியத் யூனியனைப் பாதுகாத்தன. நமது மாநிலத்தில் கூட பாளைக்காட்டு கணவாய் வழியாக வீசுகின்ற காற்றைத் தடுக்கும் வகையில் அரசு ஒரு காடு வளர்க்க வேண்டுகிறேன். தனியார்கள் வேறு பெரும் காடுகளை வைத்து பராமரித்து வருகிறார்கள். அவைகளை எதிர் காலத்தில் பாதுகாக்க, பராமரிக்க அரசு வேறு முறையான நடவடிக்கைகளை எடுத்து கவனிக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

இன்றைக்கு கேரளாவில் கூட பண்ணை வைத்திருப்பவர்கள் இருக்கிறார்கள். நமது மாநிலத்திலும் கூட பிர்லா அவர்கள் பண்ணை காடுகளாக வைத்து நடத்தி வருகிறார்கள். அந்தப் பண்ணையை அரசாங்கமே சொந்தத்தில் எடுத்து அதைப் பெரிய காடாக வளர்ப்பதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மரம் என்று சொல்கின்றபோது இன்றைக்கு சாலை ஓரங்களில் உள்ள மரங்களெல்லாம் சமீபத்தில் பெய்த மழையாலும், வீசிய புயலாலும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் கரைகளில் உள்ள மரங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன, இன்றைக்கு அரசுக்குத் தேவையான தேக்கு மரங்களைத் தனியாரிடத்தில் அதிக விலைகொடுத்து வாங்க நேரிடும், இந்த நிலை இருப்பதற்குக் காரணம்; தேக்கு மரங்கள் புயலில் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பதுதான். அரசாங்கத்திற்குத் தேவையான இந்த தேக்கு மரங்களை, அவைகள் எங்கெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறதோ, அங்கேயெல்லாம் தேக்கு மரக் கன்றுகளை மீண்டும் நட்டு, உற்பத்தி செய்வதற்கு அரசு முன்வர வேண்டும். அதன் மூலமாக வேலையில்லாமல் இருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கும்



வேலை கிடைக்கும். அரசாங்கத்திற்கும் பலவிதமான மரங்கள் கிடைப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். இதை அரசு எதிர் காலத்தில். தனியார் பாதுகாப்பு என்று மட்டும் அல்லாமல் அரசாங்கத்திற்குத் தேவையான பெருவாரியான மரங்களை உற்பத்தி செய்வதற்கும், தேக்கு மரங்கள் மட்டுமல்லாமல், பலவித மரங்களையும் வளர்க்க அரசு முன்னுக்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

(பிற்பகல் 1·10)

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, ஒரு சின்ன ஒழுங்குப் பிரச்னை. மசோதா விவாதத்தில் இருப்பதால், அமைச்சர் அவர்களும் இங்கே இருப்பதால், திருத்திக் கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதால் சொல்கிறேன். திருத்தம் என்று போடப்பட்டுள்ள இடத்தில் திருத்தத்தைக் காணோம். தனியார் காடுகளைப் பாதுகாப்பது என்ற தலைப்பில் உள்ள பத்திக்கு திருத்தம் சொல்கிற போது ''எந்தக் காட்டின்'' என்று ஆரம்பிக்கும் பாராவுக்கு எதிராக எந்தத் திருத்தமும் இல்லை, ஒரே ஒரு திருத்தம் இருக்கிறது. இதிலே 'கோரைப் புற்களை' என்று இருக்கிறது. திருத்தம் செய்ய வேண்டிய பகுதியில் 'கோரைப் பற்களை' என்று இருக்கிறது. இது திருத்தம் இல்லை என்று கருதுகிறேன். பல்லை கில்லை வெட்டி விடப் போகிறார்களோ என்ற அச்சத்தின் காரணமாகச் சொல்கிறேன். (சிரிப்பு)

*திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, தனியார் காடுகளைப் பாதுகாப்பது பற்றி இங்கே ஒரு மசோதா கொண்டு வரப்பட்டு இருக்கிறது, குறிப்பாக அதிலே செக்ஷன் 4-ல் Amendment of Section 3, Tamil Nadu Act என்று கொண்டுவரப்பட்டு இருக்கிறது. தனியார் எந்தெந்த மரங்களைத்தான் பாரஸ்ட்ரிஸ் என்ற முறையில் ஒரு இடத்தில் வைத்துக் கொள்ளலாம் என்பதற்கு டிக்ளரேஷன் இருக்க வேண்டும். அது இல்லையென்றால் தனியார் வைத்துக் கொண்டு இருக்கிற காடுகளில் உள்ள மரங்களை அப்புறப்படுத்த வேண்டுமென்று சொல்கிறபோது அதற்கு டிஸ்டிரிக்ட் கலெக்டர் உத்தரவு பெறவேண்டும் என்று ஷரத்து இருக்கிறது. ஆனால் அந்த மரங்களை, குறிப்பாக புளிய மரங்களை எல்லாம் தனியார் காடுகளில் இருக்கும் தனிப்பட்டவர்கள் வளர்த்து இருப்பதைக் கூட எடுத்துச் செல்கிற போது அந்த Forest officials harassment செய்யும் சூழ் நிலை இருப்பதால். எந்தெந்த மரங்களை Forest trees என்று declare செய்வது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

[திரு. ரா. மார்க்கபந்து] [1979 மார்ச் 15

மற்றும், இங்கே பிளான்டேஷன் கார்ப்பரேஷன் என்று ஒன்று தமிழகத்தில் நிறுவப்பட்டு இருக்கிறது. தனியார் காடுகளை வளர்க்க வேண்டும் என்று சொல்கின்ற போது, அவர்களுக்கு பிரத்யேகமான பிரிவிலேஜ் தருகிற முறையில் அந்த பிளான்டேஷன் கார்ப்பரேஷனில் சில சலுகைகளைத் தரும் வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சந்தன மரம் வடாற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலையில் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் அந்த மரங்களை கான்டிராக்ட் விடும் போது அந்தக் கான்டிராக்ட்டர்கள் மற்ற மரங்களை எடுத்துச் செல்கிற போது சந்தன மரங்களையும் சேர்த்து எடுத்துக் கொண்டு போகிறார்கள், இதைத் தடுக்க சிறப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே நேரத்தில் அந்தக் காடு களுக்குப் பக்கத்திலே வைத்து இருக்கும் மரங்களை—திரு. திருவேங்கடம் அவர்கள் குறிப்பிட்டது போல்—சாதாரண மரங்களை வைத்து இருப்பவர்கள் கூட காடுகளில் இருந்து திருடுகிறார்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். அவர்கள் சந்தன மரங்களை வைத்து இருந்தாலும் சரி, வேறு எந்த மரங்களை வைத்து இருந்தாலும் சரி, அந்த நிலத்தின் சொந்தக்காரர்களைப் பயமுறுத்தி, அவர்களைப் பிடித்துக் கொண்டு போய் வழக்குப் போட்டு விடுகிறார்கள். பொதுவான இடத்தில் போடப்பட்டு இருக்கும் மரங்களுக்கு When it is accessible to the public, அந்த நிலத்தின் சொந்தக்காரர்கள் எப்படி conscious possession நிரூபிக்க முடியும். ஆகவே, உண்மையான சொந்தக்காரர்கள் கூட அந்தக் குற்றத்திற்கு ஆளாக்கப்படுவது சரியான முறையில் பாதுகாக்கப் பெறவேண்டும், தவறு செய்தவர்கள் கடும் தண்டனைக்கு ஆளாக்கப்படும் நிலை இருக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு திருத்தங்களை கொண்டு வருவது சரியாக இருக்கும் என்று சொல்லி முடித்துக்கொள் கிறேன்.

திரு. சி. ஆறுமுகம்; தலைவர் அவர்களே. இன்றைக்கு தனியார் காடுகளைப் பாதுகாக்கும் இந்த மசோதா மீது அரசுக்கு சில யோசனைகளை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக் கிறேன். இன்று தனியார் காடுகள் தமிழகத்தில் இருக்கின்றன. இன்றைக்கு புஞ்சை நிலங்களில் கடந்த 10 ஆண்டு காலமாக பட்டாக்கள் வழங்கப்பட்டு இன்று பெருவாரியாக மரங்கள் வளர்க்கப்பட்டு, எல்லாப் பகுதிகளிலும் இன்று ஆடுமாடுகள் போக முடியாத நிலை இருக்கிறது. குறிப்பாக ஏரி ஏதுவாயில் இன்று பாரஸ்ட் இலாகாவினர் மரங்களை நட்டு விடுகிறார்கள். ஏரிக்கு உள்புறமும், அந்த ஏரிக்கு நடுவிலும், பாரஸ்ட் இலாகா மரங்களை நடுகிறார்கள் இப்படி ஒவ்வொரு கிராமத்திலும் பாரஸ்ட் இலாகா மரம் நட்டுவிட்டால், அங்கேயுள்ள ஆடு மாடுகள், ஆயிரம் இரண்டாயிரம் கால்நடைகள் எங்கே போய்



1979 மார்ச் 15] [திரு. சி. ஆறுமுகம்]

தண்ணீர் குடிக்கும். பொதுப்பணித் துறையினரும் ஏரிக்குள் போகக் கூடாது என்று சொல்லி விடுகிறார்கள். இப்படி ஏரியில் ஏதுவாயில்களில் மரம் நட்டு விடுவதால் தண்ணீர் குடிப்பதற்கு கால்நடைகளைக் கொண்டு செல்வது கடினமாக இருக்கிறது. ஆகவே அந்த யோசனையையும் இந்த அமைச்சரவை யோசிக்க வேண்டும். இந்த முறைகளை நாம் கடுமையாகப் பின் பற்றினால் தமிழ் நாட்டில் இருக்கிற கால்நடைகளுக்கு நம்மால் வசதிகள் செய்து கொடுக்க முடியாது. ஆகவே, ஏரிக்கு ஏதுவாயை பாரஸ்ட் இலாகாவினர் கையாள்வதைப் பற்றி அமைச்சரவர்கள் இந்த பில் பாசாகும் போது தகுந்த விளக்கம் அளிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

இன்னொரு திருத்தம். ஏரிக்கு உள்வாய் பகுதிகளில் பல்வேறு இடங்களில் நல்ல புஞ்சை நிலம் இருக்கிறது. அது செம்மண் கட்டு நிலமாக, வேளாண்மைத் துறைக்குத் தேவைப் பட்ட பகுதியாக இருக்கிறது. அங்கே போய் நீலகிரி தைல மரத்தை நடுகிறார்கள். கேட்டால் இது பஞ்சாயத்துக்குத் தேவை; பஞ்சாயத்துக்கு வருமானம் இல்லை; ஆகவே இந்த மரத்தை நடுகிறோம் என்று சொல்கிறார்கள். அப்படி இல்லாமல் அதை கால்நடைகள் மேய்வதற்கு அனுமதித்தால் அது கால்நடை வளர்ச்சிக்கு ஏதுவாக இருக்கும். அதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதற்கு தகுந்த விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்; தலைவரவர்களே, தனியார் காடுகளைப் பாதுகாக்கின்ற வகையில் சில திருத்தங்களை இந்தச் சட்ட முன் வடிவின் மூலம் அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். நான் இதிலே என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன்.

தனியார் காடுகளைப் பாதுகாப்பதற்கு இந்த சர்க்கார் இவ்வளவு முயற்சி எடுக்கின்றபோது அரசுக்குச் சொந்தமான காடுகள் எந்த அளவுக்கு அழித்து, பாழாக்கப்படுகிறது என்பதை இந்த அரசு நன்றாக அறிந்து கொள்ள வேண்டும். சாதாரண மாக வன இலாகாவை வைத்திருப்பது இந்தக் காடுகளைப் பாது காக்க; பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்கு. ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமைகளைப் பார்த்தால், இந்தக் காடுகள் அழிவதற்கே காரணம் வன இலாகாவில் பணி புரிகின்ற அதிகாரிகள்தான் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சாதாரணமாக அன்றாடம் வனத்தில் இருக்கிற மரங்கள் வெட்டிச் செல்லப்படுகின்றன. அதைக் கண்டுபிடிப்பதற்காக திடீரென்று விஜிலென்ஸ் டிபார்ட்மென்டைச் சேர்ந்த யாராவது

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 மார்ச் 15

அங்கே போகிறார்கள் என்றால் அன்றையதினம் திருட்டு நடப்பதில்லை. அதன் காரணம் என்ன என்பதை அரசாங்கம் உணர வேண்டும்; உணரும். மேல்மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரையில் உள்ள அதிகாரிகள் அதற்கு உடந்தையாக இருப்பதுதான் அதற்குக் காரணம். அதனால்தான் திடீர் சோதனைக்காக அதிகாரிகள் சென்றால் திருட்டைக் கண்டுபிடிக்க முடியவில்லை. வன இலாகாவில் இருக்கிற அதிகாரிகள் காட்டைப் பாதுகாப்பார்கள் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்குமானால் நிச்சயமாக அந்த எண்ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். இல்லை என்றால் அரசாங்கத்திற்குச் சொந்தமான காடுகளைப் பாதுகாக்க வேண்டுமென்றால் அதற்குத் தனியாக வேறு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சாதாரணமாக ஊழல் அதிகமாக இருப்பது இந்த வன இலாகாவில் தான், காரணம் அங்கே இருக்கிற கான்ட்ராக்ட் முறை. கூப்பு கான்ட்ராக்ட் விடுகிறார்கள். கான்ட்ராக்டர்கள் எல்லாம் ஒன்றாக சேர்ந்து, அவர்களுக்குள்ளே சில ஏற்பாடுகளைச் செய்து கொண்டு, ஒரு ஏலத்தை 8,000 ரூபாய்க்கு எடுக்கிறார்கள் என்றால் அடுத்த நிமிடமே அதை சப் கான்ட்ராக்டில் 22,000 ரூபாய், 25,000 ரூபாய்க்கு விடுகிறார்கள். இந்த முறை நம்முடைய மாநிலத்தில் இருக்கிறது என்பதை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அதற்கு கான்ட்ராக்ட் விடுகிற அதிகாரிகளும் உடந்தையாக இருக்கிறார்கள். அதனால் தான் இப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம் நடக்கின்றன. மேற்கொண்டு பல விவரங்களை பாரஸ்ட் டிமான்ட் வரும்போது விரிவாகப் பேசிக்கொள்ளலாம் என்று நினைத்து இந்தப் பிரச்சனையை இதோடு நிறுத்திக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வன இலாகாவினர் செக்போஸ்ட் வைத்திருக்கிறார்கள். வனத்தைப் பாதுகாப்பதற்காக செக்போஸ்ட் வைத்திருக்கிறார்கள். வனத்திற்கும் செக்போஸ்ட் வைத்திருக்கிற இடத்திற்கும் இடையே தனியாருக்குச் சொந்தமான பட்டா நிலங்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் இருக்கிறது. அங்கிருந்து தழை உரங்களையும் தழைகளையும் அவர்கள் விவசாயத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்றால் அங்கே அமைக்கப்பட்டிருக்கிற செக் போஸ்ட் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்காமல் கொண்டுசெல்ல முடியாது. இந்த முறை இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் சாதாரணமாக இருக்கிறது.

இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற மசோதாவில் விசேஷமாக ஒன்றும் இல்லை என்றாலும் இருக்கின்ற சட்டத்தைத் திருத்தி, நிர்வாக அதிகாரத்தைச் சட்ட ரீதியாக மாற்றுவதற்கு மட்டும்தான் சொல்லியிருக்கிறார்கள். இதை வரவேற்று, அமைச்சரவர்களுடைய விளக்கத்தை எதிர்பார்த்து அமர்கிறேன்.



1979 மார்ச் 15]

[பிற்பகல் 1–20]

*திரு. மா, மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, தனியார் காடுகள் பாதுகாப்பு சம்பந்தமாக இந்த அரசு கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யத்தில் பெரிய காடு ஒன்று அரசுக்குச் சொந்தமாக இருக்கின்றது. அதை ஒட்டி பஞ்சாயத்துக்குச் சொந்தமான காடுகளும், கோவிலுக்குச் சொந்தமான காடுகளும் இருக்கின்றன. அந்தக் காட்டிலே ஆதிவாசிகள் என்ற ஒரு இனம் அந்தக் காடுகளின் மையப் பகுதியிலே குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் அந்தக் காட்டிலே கிடைக்கின்ற சில பொருட்களை விற்று பிழைக்கின்ற ஒரு நிலைமை இருக்கின்றது. இப்போது காடுகளைக் காப்பாற்றுகின்ற வகையிலே சில சட்ட திருத்தங்களை அரசு கொண்டு வந்தாலும், அங்குள்ள அந்த மக்கள் பிழைப்பதற்கு வேறு வழியில்லாத காரணத்தால் அதனையும் யோசித்து ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அங்கே பஞ்சாயத்துக்குச் சொந்தமான காட்டை ஒட்டி இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. அதாவது கோடியக்காடு, கோடியக்கரை என்ற இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. அங்கே இருக்கின்ற மக்கள் அன்றாடம் தங்களுக்குத் தேவையான விறகுகளை வெட்டி பயன்படுத்தி வருகிறார்கள். அப்படி இருக்கின்றபோது இந்த அரசு என்ன செய்ய இருக்கிறது என்பதையும் அமைச்சரவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தக் காட்டையும் எடுத்துக்கொண்டுவிட்டால் அந்த மக்களுக்கு பிழைப்பதற்க்கு வேறு வழியினை இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அது மட்டுமல்ல. வேதாரண்யம் காட்டிற்கு இடையிலே இருக்கின்ற கோடியக்காடு, கோடியக்கரை போன்ற கிராமங்களிலுள்ள மக்கள் மான் போன்ற மிருகங்களை அதிகமாகச் சுட்டு வீணாக்குகின்ற ஒரு நிலைமை மிகநீண்டகாலமாக இருந்து வருகிறது. அதிலே பல வழக்குகள் அதிகாரிகளால் தொடுக்கப்பட்டும், அவை இன்னும் சென்னையிலே இருக்கிற ஃபாரஸட் அதிகாரிகளால் நடைமுறைக்குக் கொண்டுவரப்படாமல் காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. அது அரசுக்கும் தெரியும். அது குறித்து பல மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வழக்குகளை உடனடியாக எடுத்து சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அதிலும் சில வழக்குகள் பற்றி அரசுக்குத் தெரியப்படுத்தினாலும் மேலே இருக்கிற அதிகாரிகள் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்கின்றவர்களுக்கு உடந்தையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டையும் நான் இங்கே வைக்க விரும்புகிறேன். இதற்கெல்லாம்

வேண்டுமானால் சில விவரங்களைச் சொல்ல முடியும். ஆகவே
இவை எல்லாவற்றிற்கும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம், வீரப்பன்: மாண்புமிகு பேர
வைத் தலைவரவர்களே, இந்த தனியார் காடுகள் பாதுகாப்பு
திருத்த மசோதாவை மாண்புமிகு உறுப்பினர்கள் அநேகமாக
எல்லோருமே ஏற்றுக்கொண்டு ஆதரவளிப்பதற்கு நான் நன்றி
யைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பல்வேறு கருத்துக்
களை எடுத்து வைத்திருக்கிறார்கள். விரைவில் இந்த மாமன்
றத்தில் நம்முடைய நிதி நிலை அறிக்கையைத் தொடர்ந்து
மானிய விவாதங்கள் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன.
அப்போது வனத்துறையைப் பற்றிய விவாதம் வருகிறபோது
அவைகளுக்கான விரிவான பதிலையும், விளக்கங்களையும் நான்
தருவதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன் என்றும் தருவேன் என்
பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசிய
பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களும் தனியார் காடுகள் பற்றி
மாத்திரமன்றி பல்வேறு பிரச்சினைகளையும் இங்கே எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் பற்றி எல்லாம் கவனத்தோ
டும், கண்டிப்போடும் சமீப காலங்களில் அரசாலே நடவடிக்கை
கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். வனத்துறையைப் பற்றியும் வனத்துறை அதி
காரிகளைப் பற்றியும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சில
கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கள்
எல்லாம் இந்தத் துறைக்குப் பயன்படும் என்று கருதுகிறேன்.
அந்தத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகளும் இதைக் கூர்ந்து
கவனித்து நடவடிக்கைகள் மேற்கொள்வார்கள் என்பதையும்
நான் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் ஒரு கருத்தை
மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் தெரிவித்
திருக்கிறார்கள் இதன் தொடர்பாக.

தனியார் காடுகள் என்று ஏன் விடவேண்டும், அதற்குப்
பிறகு அதற்குப் பாதுகாப்பு தேட வேண்டும் என்று கேட்டார்கள்.
அந்தக் கருத்து அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது
என்பதை இந்த மாமன்றத்திற்கு உங்கள் மூலம் தெரிவித்துக்
கொள்கிறேன், காடுகள் என்பதே இயற்கை தருகிற ஒரு நாட்டி
னுடைய பொதுச் சொத்து. அது யாராலும் உருவாக்கப்படுகிற
ஒன்றல்ல. அப்படிப்பட்ட ஒரு இயற்கையான செல்வம் தனி
யாருக்குச் சொந்தம் என்றிருப்பது அது அடிப்படை நியாயத்
திற்கே முரணானதாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு வனச்
செல்வத்தை, இயற்கை தருகிற செல்வத்தை நாட்டினுடைய
பொதுச் சொத்தாக வைத்து அவற்றை வளர்க்கவேண்டிய ஒரு
கடமை அரசுக்கு உண்டு. இந்த தனியார் காடுகள் ஆங்காங்கே
சில தீவுகளைப் போல், திட்டுகளைப் போல் நம் அரசாங்கக்





காடுகளின் மத்தியில் இருக்கிற காரணத்தால்தான் பல குற்றங்
கள், பல முறைகேடுகள், பல மீறல்கள் நடைபெறுவதற்கு அவை
கள் காரணமாக இருந்து கொண்டிருக்கின்றன என்பதையும்
அரசாங்கம் கவனித்துக் கொண்டு வருகிறது. ஆகவே தனியார்
காடுகள் என்ற ஒரு பிரிவு நம்முடைய மாநிலத்தில் இருக்க
வேண்டுமா என்பதைப் பற்றி நம் அரசாங்கம் மிகுந்த கவனத்
தோடு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். அதேபோல் சந்தன மரங்கள் பற்றியும் ஒரு
கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இதே கருத்துத்தான் சந்தன
மரங்களுக்கும். சந்தன மரங்களும் யாரும் கஷ்டப்பட்டு
விதைத்து வளர்க்கிற ஒன்றல்ல. சந்தன மரங்கள் என்பது
இயற்கையாகவே வளர்கிற மரங்கள். அதன் விதையைக்கூட
மனிதன் கொண்டு போய்விடுவதில்லை. பறவைகள்தான் அந்த
விதைகளை ஆங்காங்கு கொண்டு போடுகின்றன. இப்படி
இயற்கையாக வளர்கிற சந்தன மரங்களைச் சில பேர்கள் அவை
தங்கள் பட்டா நிலங்களில் வளர்ந்திருக்கிறது என்று சொல்லி
அதுவும் பல கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சந்தன
மரங்களை அவர்கள் விற்பதும் அதன் மூலம் நம் அரசாங்கக்
காடுகளில் இருக்கிற மரங்களையும் சேர்த்து எடுத்துக் கொண்டு
போவதும், கேட்டால் இது தனியாருக்குச் சொந்தமானது என்று
சொல்வதும், இந்தத் திருட்டுக் காரியங்கள் நடைபெறுவதற்கு
இவை உதவியாக இருக்கின்றன என்பதையும் அரசாங்கம்
கவனத்தோடு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. அதனால் சமீபத்
தில் ஒரு ஆணை பிறப்பித்து நிறுத்தி வைத்திருக்கிறோம். பட்டா
நிலங்களிலிருந்து எடுக்கப்படுகிற சந்தன மரங்கள் என்று யார்
சொன்னாலும் அவைகளை உடனடியாக அனுமதிக்கக்கூடாது
என்ற தடை பிறப்பித்து அதற்குப் பிறகு அவர்களால் முறையாக
நிரூபிக்கப்பட்டால் ஒன்று அதை அரசாங்கமே விலைக்கு எடுத்துக்
கொள்வது அல்லது வேறு ஒரு முடிவு எடுப்பதுவரை அவற்றை
விற்பதற்கு அனுமதிக்கக்கூடாது என்ற ஆணையைக் கூட சமீ
பத்தில் பிறப்பித்திருக்கிறோம். ஆகவே, இந்த இரண்டு
காரியங்களும் இதன் தொடர்பான காரியங்கள் என்று கருது
வதால் என் விளக்கத்தைத் தர முன் வந்தேன். மாண்புமிகு
உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.
மார்க்ஸிஸ்ட் கட்சி உறுப்பினர் எழுப்பிய மாஞ்சோலை எஸ்டேட்
விவகாரம் பற்றி மட்டும் ஒரு சிறிது விளக்கம். அது தனியார்
காடாக இப்போது இல்லை. அது சிங்கம்பட்டி ஜமீனுக்குச்
சொந்தமாக இருந்து அவர்கள் ஒரு எஸ்டேட் கம்பனிக்கு,
தேயிலைத் தொழிற்சாலை நடத்துகிற ஒரு எஸ்டேட்டுக்கு
அவர்கள் குத்தகைக்கு விட்டார்கள். அந்த குத்தகையின் அடிப்
படையில் அவர்கள் உரிமை கொண்டாடி அந்த மலை உயரத்தில்
இருக்கிற மரங்களை அழித்துக் கொண்டிருந்தார்கள், பின்னால்
அது நிறுத்தப்பட்டது. என்ன காரணத்தினாலோ 1972-ல் அவர்
களுக்கு மீண்டும் லைசென்ஸ் தரப்பட்டு வெட்டி அழித்தார்கள்.
அதை இந்த அரசு வந்ததற்குப்பிறகு தடுத்து நிறுத்தினோம்.
அப்படி நிறுத்தியது தவறு என்று அவர்கள் உயர்நீதி மன்றத்

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1979 மார்ச் 15

திற்குப் போனார்கள். உயர்நீதிமன்றத்திற்குப் போன பிறகும் அரசாங்க வழக்கறிஞர் அவர்கள் வெட்டினால்கூட நம் அனுமதி பெற்று வெட்ட வேண்டும், அப்படி மரங்களை வெட்டினாலும் நாம் தெரிவிக்கிற அந்த மரங்களைத்தான் வெட்ட வேண்டும். அதிலும் அரசாங்கத்திற்குக் கட்டணம் கட்டிவிட்டுத்தான் வெட்ட வேண்டும் என்ற அந்த அனுமதியைக் கேட்டோம். அதையும் மறுத்தார்கள். இருந்தாலும் அதில் வெற்றி பெற்றிருக்கிறோம். அந்த முறையில் 1972-ல் அனுமதி பெற்று அழித்து விட்ட மரங்களை நாம் தடுத்து நிறுத்தினோம். இப்போது எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் நடைபெற்றிருக்கிறதே தவிர இப்போது அவை தனியார் காடாக இல்லை. முறைகேடுகள், சட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு நடத்தப்படுகிற முறைகேடுகள் இப்போது நடைபெற்று வருகின்றன என்பது தெரியும். அதற்கு ஒருவேளை அவர்கள் சொன்னதுபோல் வனத்துறையைச் சார்ந்த அதிகாரிகள் உடந்தையாக இருக்கிறார்களா, இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் தெளிவாக மாண்புமிகு உறுப்பினர்கள் தகவல் தந்தால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க இந்த அரசு தயங்காது என்பதை இந்நேரத்தில் தெரிவித்துக் கொண்டு பல்வேறு கருத்துக்களுக்கும் வருகிற மானியக் கோரிக்கை விவாதத்தின்போது நான் பதிலளிக்கிறேன், விளக்கம் அளிக்கிறேன். ஆகவே கருணை கூர்ந்து ஏற்கனவே அவ்வளவு பேர்களும் இதை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள், காடுகளைப் பாதுகாக்கவேண்டுமென்கிறீர்கள், காடுகளை வளர்க்க வேண்டுமென்கிறீர்கள் ஆகவே அதற்கு இடையூறில்லாமல்—நேரமில்லை, அந்த மசோதாவினையும் நிறை வேற்றலாம் என்று எண்ணினேன் — இருந்தாலும் இதையாவது நிறைவேற்றித்தர வேண்டுமென்று அருள்கூர்ந்து கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு பேரவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

[பிற்பகல் 1—30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1978) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

**பிரிவுகள் 2 முதல் 9 வரை, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.**



**1979 மார்ச் 15]**

பிரிவு—1

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு—1. இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்"

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"In Sub-clause (I) of clause 1 for the figures '1978' substitute the figures '1979'".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு—1, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"முகப்புரை இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.

"In the Enacting formula, for the expression'

'Twenty-Ninth Year', substitute the expression 'Thirtieth Year.'

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

[1979 மார்ச் 15

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண்: 25/1978) திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி, சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

## (7) அறிவிப்பு

## பேரவையின் அலுவல்கள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (15—3—1979) கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவின்படி பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்:

| | |
|---|---|
| 16—3—1979 (வெள்ளிக்கிழமை)<br>17—3—1979 (சனிக்கிழமை) | ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி. |
| 18—3—1979 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை. |
| 19—3—1979 (திங்கட்கிழமை) | ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி |
| 20—3—1979 (செவ்வாய்க்கிழமை) | 1. 1979-80-ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அளித்தல், வாக்கெடுத்தல்.<br>2. ஷை நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல்.<br>3. 1978-79-ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் அளித்தல்.<br>4. 1971-72-ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானிய கோரிக்கைகள் அளித்தல். |





| | |
|---|---|
| | 5. 1979-80-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கைமீது பொது விவாதம் (தொடர்ச்சி) .... |
| 21—3—1979 (புதன்கிழமை) | 1. 1979-80-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம் மற்றும் பதிலுரை.<br>2. 1979-80 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீதான நிதி ஒதுக்கசட்ட முன்வடிவு ஆய்வு செய்தலும், நிறைவேற்றலும். |
| 22—3—1979 (வியாழக்கிழமை) | 1. 1978-79 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.<br>2. ஷை சட்ட முன் வடிவு அறிமுகம் செய்தல்.<br>3. 1971-72 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.<br>4. ஷை சட்ட முன் வடிவு அறிமுகம் செய்தல். |
| 23—3—1979 (வெள்ளிக்கிழமை) | 1. 1978-79 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் மீதான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு — ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்,<br>2. 1971-72 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு — ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்,<br>3. 1979-80-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும்:—<br>28 — சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.<br>34 — நகர்ப் பகுதி மேம்பாடு. |

| | |
|---|---|
| 24—3—1979<br>(சனிக்கிழமை) | 6 — பத்திரப் பதிவு<br>23 — கூட்டுறவு<br>57 — பல்வகை மூலதனச் செலவு. |
| 25—3—1979<br>(ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை. |
| 26—3—1979<br>(திங்கட்கிழமை)<br>27—3—1979<br>செவ்வாய்க்கிழமை) | 17 — கல்வி. |
| 28—3—1979<br>(புதன்கிழமை) | தெலுங்கு ஆண்டுப் பிறப்பு:<br>— விடுமுறை. — |
| 29—3—1979<br>(வியாழக்கிழமை)<br>&<br>30—3—1979<br>(வெள்ளிக்கிழமை) | 20 — வேளாண்மை;<br>36 பாசனம்.<br>50 — வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.<br>52 — பாசனம் குறித்த மூலதனச் செலவு. |
| 31—3—1979<br>(சனிக்கிழமை) | 31 — பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்.<br>(தேவை இருப்பின், பேரவை மாலையிலும் கூடும்) |
| 1—4—1979<br>(ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை. |
| 2—4—1979<br>(திங்கட்கிழமை) | 24 — தொழில்கள்.<br>51 — தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. |
| 3—4—1979<br>(செவ்வாய்க்கிழமை) | 26 — கைத்தறியும் நெசவுத் தொழிலும்.<br>27 — கதர்.<br>10 — பால்வழங்கு திட்டங்கள். |
| 4—4—1979<br>(புதன்கிழமை) | 9 — மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.<br>11 — மாவட்ட நிர்வாகம்; |
| 5—4—1979<br>(வியாழக்கிழமை) | 18 — மருத்துவம்.<br>19 — பொதுச் சுகாதாரம். |
| 6—4—1979<br>வெள்ளிக்கிழமை) | 22 — கால்நடை வளர்ப்பு;<br>30 — சமூக நலன்,<br>18 — நீதி நிர்வாகம்.<br>14 — சிறைச்சாலைகள். |



| | |
|---|---|
| 7—4—1979<br>(சனிக்கிழமை) | 15 — காவல் துறை.<br>16 — தீயணைப்புப் பணிகள். |
| 8—4—1979<br>(ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை. |
| 9—4—1979<br>(திங்கட்கிழமை) | 15 — காவல்துறை.<br>16 — தீயணைப்புப் பணிகள். |
| 10—4—1979<br>(செவ்வாய்க்கிழமை) | மகாவீரர் பிறந்தநாள் விடுமுறை. |
| 11—4—1979<br>(புதன்கிழமை) | 35 — நுகர் பொருள் வழங்கல்.<br>21 மீனளம். |
| 12—4—1979<br>(வியாழக்கிழமை)<br>13—4—1979<br>(வெள்ளிக்கிழமை)<br>14—4—1979<br>(சனிக்கிழமை)<br>15—4—1979<br>(ஞாயிற்றுகிழமை) | தூய வெள்ளிக்கிழமை விடுமுறை.<br>தமிழ் ஆண்டுப்பிறப்பு விடுமுறை<br>பேரவைக் கூட்டம். இல்லை. |
| 16—4—1979<br>(திங்கட்கிழமை) | 32 — பின்தங்கிய வகுப்பினர் நலன்.<br>25 —சின்கோனா.<br>45 — காட்டுவளத் துறை.<br>47 — தகவல், சுற்றுலா, திரைப் படத் தொழில், நுட்பவியல்.<br>56 — காட்டுவள மூலதனச் செலவு. |
| 17—4—1979<br>(செவ்வாய்க்கிழமை) | 29 — தொழிலாளர் நலன்களும் தொழிற்சாலைகளும்.<br>33 — வீட்டுவசதி,<br>49 — பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு.<br>பேரவை மாலையிலும் கூடும். |
| 18—4—1979<br>(புதன்கிழமை) | 3 — மோட்டார் வண்டிகள் — சட்டங்கள், நிர்வாகம்.<br>39 — சாலைகளும் பாலங்களும், |

24—4—1979 (புதன்கிழமை) —தொடர்ச்சி.

40 — சாலை போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்கு வரத்து,

54 — சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச்செலவு.

55 — சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்கு வரத்து குறித்த மூலதனச் செலவு.

19—4—1979 (வியாழக்கிழமை)

1 — நிலவரித் துறை

2 — மாநில ஆயத் தீர்வை.

4 — பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும், தீர்வை களும் நிர்வாகம்.

5 — முத்திரைத் தாள்கள் நிர்வாகம்.

41 — இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

46 — இழப்பீடுகளும் ஒதுக்கீடு களும்.

20—4—1979 (வெள்ளிக்கிழமை)

48 — ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.

12 — 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.

21—4—1979 (சனிக்கிழமை)

7 — மாநிலச் சட்டமன்றம்.

37 — பொதுப்பணிகள்கட்டிடங்கள்

38 — பொதுப்பணிகள் — பணி யாளரும் கருவிகளும், இயந்திர சாதனங்களும்.

42 — ஓய்வூதியங்களும் ஏனைய கால நன்மைகளும்,

43 — பல்வகை.

53 — பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு.

58 — மாநில அரசு வழங்கும் கடன் களும் முன்பணங்களும்.

8 — தேர்தல்.



21—4—1979 (சனிக்கிழமை) —தொடர்ச்சி.

44 — எழுது பொருள் அச்சுத் துறை.

நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல்.

22—4—1979 (ஞாயிற்றுக்கிழமை)

விடுமுறை.

23—4—1979 (திங்கட்கிழமை)

நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு — ஆய்வு செய்தலும் நிறை வேற்றலும்.

24—4—1979 (செவ்வாய்க்கிழமை)

1979—80 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீது விவாதம்.

25—4—1979 (புதன்கிழமை)
26—4—1979 (வியாழக்கிழமை)
27—4—1979 (வெள்ளிக்கிழமை)

ஏனைய பிற அலுவல்கள்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மானியக் கோரிக்கைகள் தவிர, மற்ற மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்கள் 21—3—1979, புதன்கிழமை, பிற்பகல் 3 மணிக்குள் கொடுக்கப் படவேண்டும். பேரவை வழக்கம்போல் காலை 9 மணிமுதல் கூடும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிகின்றன. பேரவை மீண்டும் நாளை காலை 9.00 மணியளவில் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.40 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## (8) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

118. வருவாய்த்துறையின் 5—11—1960 ஆம் தேதியிடப் பெற்ற அறிவிப்பு, எஸ். ஆர். ஓ. எண் ஏ—580—584/1960—ல் வெளியான, உபரி நிதிகளைப் பயன்படுத்துதல் விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்த, வணிகவரிகள் — அறக்கட்டளைகள் துறையின் 5—2—1979 ஆம் தேதியிடப்பெற்ற, 104 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959— ஆம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

—எதுவுமில்லை.—

## இணைப்பு I.

[133-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 403—க்கான விடையைக் காண்க.]

### விடை.

(அ) மொத்த சேதத்தின் மதிப்பு ரூ. 1, 41, 02, 917; இறந்தோர் எண்ணிக்கை—8.

(ஆ) இறந்தோரின் நான்கு குடும்பங்களுக்கும், குடும்பம் ஒன்றுக்கு ரூ. 1,000 வீதம், மொத்தம் ரூபாய் 4,000 முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடி நிவாரணப் பணமாக வழங்கப்பட்டது, இந்த வெள்ளத்தில், 98 கிராமங்களிலுள்ள மொத்தம் 6,508 குடிசைகள் பாதிக்கப் பட்டன. பாதிக்கப்பட்டவர்களுக்கு மொத்தம் ரூபாய் 5,32,325 கருணை மானியத் தொகை குடிசைப் புனரமைப்புக்கு வழங்கப் பட்டுள்ளது. தவிர பாதிப்புக்குள்ளானவர்களை, ஊராட்சி, நகராட்சிகளைச் சார்ந்த பள்ளிகள், மற்றும் பாதுகாப்பான நிவாரண முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டு, அவர்களுக்கு உணவும் வழங்கப்பட்டது.

இம்மாவட்டத்தில், சுமார் 825 ஏக்கர் நிலப்பரப்பில் யயிர்கள் சேதமடைந்தன. தவிர ஈரோடு, கோபி, பவானி வட்டங்களிலுள்ள சுமார் 806 ஏக்கர் நிலங்களில் மணல் மேடிட்டது. புளி, கரும்பு ஆகியவை பயிரிடப்பட்ட நிலங்களும் பாதிப்புக்குள்ளாயின. பாதிப்புக்குள்ளான நிலங்களில், பயிரிடும், சிறு விவசாயிகளுக்கும் குடியானவர்களுக்கும் இலவசமாக விதைகள் வழங்குவதற்கும், தாளடி பயிருக்கான உரங்களுக்கு 25 சதவீத உதவித்தொகையும், பாதிக்கப்பட்ட சம்பா பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 25 சதவீத உதவித்தொகை வழங்கிடவும், வேளாண்மைத் துறை கிடங்குகளிலிருந்து இலவசமாக தென்னங் கன்றுகள் வழங்கிடவும், சேதமடைந்த வாழை, கரும்பு ஆகியவைகளை மீண்டும் பயிரிட ஏக்கருக்கு ரூபாய் 100 வீதம் உதவிப்பணம் வழங்கிடவும், பாதிப்புக்குள்ளான பயிர்களை மீண்டும் பயிரிட ஊக்கமளிக்கும் வகையில், சிறு விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 500 உதவிப்பணம் வழங்கிடவும், மேலும் உருளை போன்ற காய்கறிகளை பயிரிட 25 சதவீதம் உதவியளிக்கவும், மணல் மேடிட்ட நிலங்களையும் கிணறு களையும், சீர்படுத்த உதவித்தொகை அளிக்கவும், அரசு உத்தரவுகள் பிறப்பித்திருக்கிறது.

சுமார் 539 கைத்தறி நெசவாளர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டனர். 543 கைத்தறிகள் சேதமடைந்தன. பாதிக்கப்பட்ட கைத்தறி நெசவாளர்கள் சேதமடைந்த தங்கள் வீடுகளை மாற்றியமைப்பதற்கு உதவியாக ரூ. 1,40,500-ம் தறிகளை புதுப்பிப்பதற்காக ரூபாய் 67, 875 உதவித் தொகையும், ஆக இப்பணிகளுக்காக மொத்தம் ரூபாய் 2, 08, 375 வழங்கிட அரசு உத்தரவிட்டுள்ளது.



சேதமடைந்த பல ஏரிகளையும், குளங்களையும், நீர்ப் பாசனங்களையும் சீர்படுத்துவதற்கான பணிகளுக்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்து, சீர்படுத்தும் பணிகளை விரைவாக மேற் கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## இணைப்பு II

[138-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 404—க்கான விடையைக் காண்க.]

### விவர அறிக்கை.

25—9—1977 அன்று திருச்சியில் நடைபெற்ற தமிழ்நாடு அறநிலையக் கட்டிட வாடகைதாரர் சங்க மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்களும் அவற்றின் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும்.

தீர்மானங்கள் (1) :

இது சங்க அமைப்பைப் பற்றியது. அரசு மட்டத்தில், இதன் மேல் நடவடிக்கை தேவையில்லை.

(2) சமீப காலத்தில் இந்து அறநிலையத் துறையினரால் நியாய வாடகை என்ற பெயரால் ஒருதலைப்பட்சமாகவும் அநியாயமாகவும் செலுத்தமுடியாத அளவு உள்ளதாகவும் உயர்த்தப்பட்ட வீடு, கடை வாடகைகள் சம்பந்தமாக பாதிக்கப் பட்ட சங்க உறுப்பினர்கள் கோரிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் பரிந்து ஆவன செய்யும்படி இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

(3) நடைமுறையில் உள்ள வாடகை நிவாரணச் சட்டத்தை அறநிலையக் கட்டிடங்களுக்கு ரத்து செய்ததை மாற்றி மறு படியும் அனைத்து வாடகைதாரர்கள் போல் எங்களையும் கருதும் வண்ணம் சட்ட மன்ற உறுப்பினர்களையும், சகல அமைச்சர் களையும் இந்த மாநாடு கேட்டுக்கொள்கிறது.

(4) இந்து அறநிலைய ஆட்சித்துறையினர் கூட்டப்பட்டுள்ள அதிக வாடகையை, இந்த கோரிக்கைகள் சட்ட சபையில் பரிசீலனை செய்து முடிவு செய்யும் வரை ஆணையர் அவர்கள் சகல நிர்வாக அதிகாரிகளுக்கும், பழைய வாடகையையே வாங்கும்படி உத்திரவு பிறப்பிக்கும்படி இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது.

1979 மார்ச் 15]

(5) பாதிக்கப்பட்ட வாடகைதாரர்கள் இந்து மதத்தினர் அல்லாத கிருஸ்தவ, முகமதிய டிரஸ்ட் போர்டுகளுக்கு இந்த தீர்மான காப்பியை அனுப்பி, அவர்களையும் மாநில அரசு முடிவு எடுக்கும் வரை பழைய வாடகையையே வாங்கவேண்டும் என்றும் ஏற்கனவே நீதி மன்றங்களில் வழக்கு கொடுத்து இருந் தால் அவைகளையும் வாபஸ் பெறவேண்டும் என்றும் இந்த மாநாடு கேட்டுக்கொள்கிறது.

(6) சில நிர்வாக அதிகாரிகள் வாடகைதாரர்கள் பெயரில் வழக்குகள் தொடர்ந்திருப்பதால் அவைகளை உடனடியாக வாபஸ் பெறும்படி எல்லா நிர்வாக அதிகாரிகளுக்கும், ஆணையர் அவர்கள் உத்திரவு பிறப்பிக்க இம்மகாநாடு கேட்டுக்கொள் கிறது.

<u>இத்தீர்மானங்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தீர்மானங்கள் (2) முதல் (6) வரை:—</u>

வாடகைக் கட்டுப்பாடு சட்டத்திலிருந்து அரசாணை எண் 1998, உள்துறை, நாள் : 12. 8. 74 ல் அறநிலையங் களின் கட்டிடங்களுக்கு விதி விலக்கு அளித்த பின் அநேக ஆலயங்களின் நிர்வாகிகள் அவரவர்களின் விருப்பம்போல் வாடகை உயர்வு செய்து வந்ததாகப் புகார்கள் வந்ததின் பேரில் தமிழ்நாடு முழுவதும் சீரான முறையில் நியாயமான வாடகை நிர்ணயிப்பதற்காக அந்தந்த வட்டாரங்களிலுள்ள துணை ஆணையாளரைத் தலைவராகவும், இந்து சமய அறநிலையத் துறையின் செயற் பொறியாளரைத் தொழில் நுட்ப அங்கத் தினராகவும், அந்தந்த ஆலையச் செயல் அலுவலர்களைச் செயலாளர்களாகவும்கொண்ட நியாயவாடகை நிர்ணயக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. இக்குழுக்கள் ஒவ்வொரு கட்டிடத்தையும் மனையையும் பார்வையிட்டு, அளவெடுத்து, பொதுப்பணித்துறை யினர் பின்பற்றும் விதிமுறைகளின்படி வாடகை நிர்ணயம் செய்து வருகின்றன: பொதுப்பணித் துறையினர் கடைபிடிக்கும் முறைப்படி வாடகை நிர்ணயம் செய்யப்படுவதால் விதிவிலக்கு கொடுத்ததை ரத்து செய்யவேண்டிய அவசியம் இல்லை. ஒரு தலைப்பட்சமாக வாடகை நிர்ணயம் செய்யப்படுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது உண்மைக்குப் புறம்பானது. தற்போது நிர்ணயிக்கப்பட்டு வரும் புதிய வாடகையை அமுல்படுத்த உத்திரவிட்டுள்ளபடியால் பழைய வாடகையை வாங்கும் பிரச்சினை எழவில்லை.

வாடகை பாக்கிக்காக பல ஆண்டுகளாக நிலுவையில் நின்ற சில இனங்களில் மட்டும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள தால் வழக்குகளை வாபஸ் வாங்கும் பிரச்சினையும் எழவில்லை.

## <u>தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.</u>

வெள்ளிக்கிழமை, 1979 மார்ச் 16.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

<u>(1). வினாக்கள்—விடைகள்.</u>

<u>உடுக்குறியிட்ட வினாக்கள்.</u>

<u>விழுப்புரம் மின் திட்டம்.</u>

*குறுகிய கால வினா எண் 15—<u>திரு. துரை முத்துசாமி :</u> மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள விழுப்புரம் மின்சார வாரியத் திட்டத்தை இரண்டாக பிரிக்கும் உத்தேசம் உண்டா ? ஆம் என்றால் விபரம் என்ன ?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u>

தற்போது இல்லை.

<u>திரு. துரை முத்துசாமி :</u> தலைவர் அவர்களே, எப்போது என்று அறிவிப்பார்களா ? இந்த மின்சார வாரியத் திட்டத்தை இரண்டாகப் பிரிப்பதால் புதிதாக என்ஜினியர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்களா ? அல்லது அதிகப் பட்சமாக செலவாகும் என் பதால் இல்லை என்று கூறுகிறார்களா ?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> மின்சார வாரியத் தைப் பொறுத்தவரையில் விநியோகம் சம்பந்தமான பிரிவைச் சீர்திருத்துவதாக இருக்கிறோம். அத்தகைய சீர்திருத்தம் வருகிறபோது இத்தகைய திட்டங்களுக்கு வாய்ப்பு உண்டு.

<u>திரு. சி. கோவிந்தராசன் :</u> தென் ஆற்காடு மாவட்டத்தில், சவுத் ஆற்காடு ஸிஸ்டம் விழுப்புரத்தில் மையமாக இருப்ப தாலும், பல்வேறு பகுதிகள் அதன் கீழ் இருப்பதாலும் அதை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற ஆலோசனை ஏற்கனவே டெவலப்மெண்ட் கவுன்சிலில் கூட வந்திருக்கிறது. அப்படிச் செய்தால், திறமை அதிகரித்து, காலாகாலத்தில் காரியங்களைச் செய்ய உதவியாக இருக்கும். ஆகவே, அது குறித்து புனர் பரிசீலனை செய்து இரண்டாகப் பிரிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

[1979 மார்ச் 16

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : திறமையை அதிகப் படுத்த வேண்டும் என்ற அடிப்படையில்தான் விநியோகத் திட் டங்களைப் பற்றி மறு ஆய்வு செய்து வருகிறோம். அந்த சீர்திருத்தத்தை மேற்கொள்கிறபோது இதற்கான வாய்ப் புண்டு.

திரு. துரை முத்துசாமி : சீர்திருத்தக் கமிஷன் வரும்போது செய்வதாகச் சொன்னார்கள். அது எப்போது வரும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சீர்திருத்தக் கமிஷன் அல்ல. நாமே செய்வதுதான்.

ஆசியன் பேரிங்குகள் நிறுவனம்.

*வினா எண் 420—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆசியன் பேரிங்குகள் லிமிடெட் என்றக் கூட்டுத் துறை நிறுவனம் ஜப்பானியத் தொழில்நுட்ப உதவியுடன் ஹோசூரில் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், பலதரப்பட்ட பேரிங்குகள் தயாரிப்பதற்காக ஆசியன் பேரிங்குகள் லிமிடெட் என்ற நிறுவனத்தை திரு.பழனியப்ப செட்டியார் அவர்களுடன் கூட்டுத்துறையில் சுமார் 12 கோடி திட்ட மதிப்பில் தர்மபுரி மாவட்டம் ஓசூருக்கு அருகில் பாகலூர் கிராமத்தில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

திரு. என். வரதராஜன் : இந்த 12 கோடி ரூபாயில் அரசுத் துறை எவ்வளவு போடுகிறது ? தனியார் எவ்வளவு போடு கிறார்கள் ? பொதுவாக 50 கோடி ரூபாய் திட்டம் என்று சொன்னால் ரூ. 48 கோடி அரசு செலுத்தி இரண்டு கோடி ரூபாய் தனியார் செலுத்தி அவர்கள் இவ்வாறு கூட்டுத் துறையில் தலைமை தாங்குவதால்தான் சில சீர்குலைவுகள் ஏற்படுகின்றன. ஆகவே, தனியார் துறை, கூட்டுத்துறை என்றில்லாது பொதுத் துறையில் இந்தத் தொழிலை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தத் திட்டத்திற்கு 1974-லேயே ஒப்புதல் அளிக்கப்பட்டு விட்டது. கூட்டுத் துறை என்றால், அரசாங்கம் 26 சதவிகிதம், தனியார் 25 சதவிகிதம், ஆக 51 சதவிகிதம் போடுகிறார்கள். பப்ளிக் ஷேர்ஸ் 49 சத விகிதம்.



1979 மார்ச் 16]

திரு. மு. அம்பிகாபதி : இந்த ஆசியன் பேரிங்க்ஸ் என்ற நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் ஜப்பான் நாட்டுடன் இணைந்து இந்த நிறுவனத்தைத் துவங்க இருப்பதாகத் தெரிகிறது. பல நாட்டு மூலதனக் கம்பெனிகள், மல்டி நாஷனல் கார்ப்பரேஷன்ஸ் ஊடுருவலாக இது இருக்குமா ? முழுமையாக அரசாங்கத் துறை இதை நடத்துவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஜப்பான் நாட்டுடன் முதலில் பேசினார்கள். அதற்குப் பிறகு ப்ரான்ஸ் நாட்டுடன் ஒப்பந்தம் பற்றிப் பேசப்பட்டது. கடைசியாக இப்போது ஜி.டி.ஆர். பற்றியும் பேசப்படுகிறது. ஆக ஜெர்மன் ஜனநாயக குடியரசு என்றால் ஏற்றுக் கொள்வார்கள் என்று எனக்குத் தெரியும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : அரசுத் துறை 26 சத விகிதம், தனியார் துறை 25 சதவிகிதம், ஆக 51 சதவிகிதம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது வேறு விஷயம். நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்துகிறவர்கள் தனி நபர்கள். அந்தத் தனி நபர்கள் யார் ? தனி நபர்களிடத்தில்தான் ஒப் படைக்கிறீர்களா அல்லது அரசாங்கமே ஏற்று நடத்தப் போகிறீர் களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனி நபர்களிடம் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டு இந்தத் திட்டம் இப்போது ஆரம்ப நிலையில் உள்ளது. அதைத் தான் சொன்னேன், 1974-ம் ஆண்டி லேயே அது முடிவு செய்யப்பட்டுவிட்டது.

டெல்லியிலுள்ள தமிழ்நாடு இல்லம்.

*வினா எண் 421—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்பு மிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) டெல்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் தங்குபவர் களுக்கு அங்கேயே உணவு அளிக்க கேன்டீன் நடத்தப்படுகிறதா?

(ஆ) அதனால் லாபம் ஏற்படுகிறதா ?

(இ) அங்கே வேலை செய்பவர்களுக்கு அங்கேயே தங்கு வதற்கு வீடு கட்டும் ஏற்பாடு எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

[1979 மார்ச் 16

(இ) தமிழக இல்லத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு விடுதிகள் கட்டுவதற்கு தமிழக இல்ல காம்பவுண்டிற்குள் காலியிடம் இல்லை. எனவே பணியாளர் விடுதிகள் கட்டுவதற்கு நிலம் ஒதுக்கும்படி மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால் தற்போது இடம் ஒதுக்கிட இயலாதென மத்திய அரசு பதிலளித்துள்ளது. இதுபற்றி மேலும் பரிசீலனை செய்யப்படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த தமிழக இல்லத்திலே, மதராஸி ஹோட்டல் என்று வைத்துக்கொண்டு எவ்வளவோ பேர்கள் மோசமான சாப்பாட்டைப் போடுகிறார்கள். ஆனால், அங்கே குறைந்த ரேட்டிலே அருமையான சாப்பாடு போடப்படுகிறது. ஆனால் அந்த இல்லத்திலே பணியாற்றக் கூடிய ஊழியர்களுக்கு பாதிப் பேர்களுக்குத்தான் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன, அதுகூட வீடு இல்லை, ரூம் தான். அந்தக் குளிர்ப் பிரதேசத்திலே அவர்களுக்கு உடனடியாக வீடுகளைக் கட்டிக் கொடுக்க முயற்சி செய்ய வேண்டாமா? அங்கே 1977லிருந்து இதுவரைக்கும் பல பேர்கள் அங்கே சாப்பிட்டுவிட்டு பணம் கொடுக்காமல் போய் இருக்கிறார்கள்.***
6 ஆயிரம் ரூபாய்க்கு மேலே கொடுக்க வேண்டிய நிலைமை இருப்பதாக எனக்குத் தகவல் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்திலே யாரையும் குற்றம் சாட்டக்கூடாது என்பது மரபு. திரு.கோதண்டராமன் அவர்கள் அடிக்கடி டெல்லிக்குப் போய்ச் சாப்பிடுகிறாரா என்பது ஒன்று. இன்னொரு கட்சியைக் குற்றஞ்சாட்டுவது, கேள்வி நேரத்திலே அனுமதிக்கக்கூடாது. நிறையபேர்கள் சாப்பிட்டுவிட்டுப் பணம் கொடுக்காமல் வந்துவிட்டார்கள் என்று சொல்லிவிட்டு *** என்று சொன்னார். ஆகவே, * * * என்று சொன்ன அந்தப் பகுதிகளை அவைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, பாக்கி ஏதாவது இருக்கிறதா என்று கேட்கலாம் அல்லவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் தங்கும் விடுதியிலே பல உறுப்பினர்கள் பாக்கியை இன்னும் கொடுக்காமல் இருக்கிறார்கள், அதை முதலில் செய்யச் சொல்லுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, புதியவர்களா அல்லது பழையவர்களா ?

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1979 மார்ச் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அநேகமாகப் பழையவர்களாக இருக்கலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், 1977 முதல் சாப்பிட்டுவிட்டுவந்து பாக்கி யார் யார் கொடுக்க வேண்டும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, டெல்லியிலே உள்ள தமிழ்நாடு இல்லத்திற்கு நான் சென்றிருக்கிறேன். இந்தி வெறியர்களுக்குப் பயந்து அறிஞர் அண்ணா அவர்கள் சிலையை அங்கே பூட்டுப் போட்டு பூட்டி வைத்திருக்கிறார்கள். ஆதலால், அறிஞர் அண்ணா அவர்கள் சிலையை அந்த இல்லத்திற்கு எதிராக பிரம்மாண்டமாக அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தற்போது என்னிடம் விவரம் இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்தத் தமிழ்நாடு இல்லத்திலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்குத் தங்குவதற்கு வீடுகள் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று கேட்கப்பட்டது, அதைப்பற்றிச் சொல்லவில்லை. அவர்களுக்குக் குறைந்த பட்ச சம்பளத்தை நிர்ணயித்து வழங்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதைப் பற்றி நாம் மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறோம், அண்மையிலேகூட நம்முடைய முதல்வர் அவர்கள் அங்கு கடிதம் எழுதி அவர்களுக்கு வீடுகள் கட்டித்தர வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறோம். ஆனால் மத்திய அரசு, போதுமான இடம் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்நிலையில் நாம் என்ன செய்வது என்று தீவிரமாகப் பரிசீலித்து வருகிறோம்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, டெல்லியிலே உள்ள தமிழக இல்லத்திலே நம்முடைய தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று தங்குகிறபோது அவர்களுக்கு கட்டணம் வசூலிக்கப்படுகிறதா ? அது உண்மையானால் அவர்களுக்கு இலவசமாகத் தங்குவதற்கு வகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கட்டணங்கள் சலுகை அடிப்படையிலே வசூலிக்கப்படுகின்றன. இலவசமாகக் கொடுக்கிற உத்தேசம் இல்லை.

திரு. போ. கோபாலன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு இல்லத்திலே பணியாற்றக்கூடிய ஊழியர்கள் நேரடியாக நியமனம் செய்யப்படுகிறார்களா, அல்லது வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தகவல் கேட்டு அந்த அடிப்படையிலே நியமனம் செய்யப்படுகிறார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதற்கு என்னிடம் விவரம் இல்லை. ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். 400 ரூபாய்க்குக் குறைந்த சம்பளத்தில் 59 பேர்களும், 400—லிருந்து 699 ரூபாய் சம்பளத்தில் 10 பேர்களும் 700—லிருந்து 999 ரூபாய் சம்பளத்தில் ஒருவரும் இருக்கிறார்கள்.

திரு. சொ. ந. பழனிசாமி : தலைவர் அவர்களே, டெல்லி தமிழ்நாடு இல்லம் எந்த ஆண்டு கட்டப்பட்டது ? அதற்கு செலவு செய்யப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு ? வெளி நாட்டு உல்லாசப் பயணிகள் தங்குவதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

[முற்பகல் 9—10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தமிழ்நாடு அரசின் சார்பில் டெல்லிக்குச் செல்பவர்களுக்கும், தமிழ்நாட்டைச் சேர்ந்த சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வசதியேற்படும் வகையில் அந்தக் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. அது வணிக ரீதியில் கட்டப்பட்ட கட்டிடம் அல்ல. எனவே, வெளிநாட்டிலேயிருந்து வருபவர்கள் தங்க வாய்ப்பு இல்லை. எந்த ஆண்டு கட்டப்பட்டது, எவ்வளவு ரூபாயில் கட்டப்பட்டது என்பதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், டெல்லி மிகவும் விலைவாசி அதிகப்படியாக உள்ள பிரதேசம் என்பது கனம் அமைச்சரவர்களுக்குத் தெரிந்த விஷயம். அப்படியிருக்கும்போது அங்கேயுள்ள அந்தச் சிப்பந்திகளில் பாதிப்பேர்களுக்கு ஸ்டேட் கவர்ன்மென்ட் ஸ்கேல் அடிப்படையிலும்,, பாதிப்பேர்களுக்கு சென்ட்ரல் கவர்ன்மென்ட் ஸ்கேல் அடிப்படையிலும் சம்பளம் கொடுக்கப்படுகிறதா ? அப்படியிருந்தால் இது பாகுபாடான நிலை அல்லவா ? ஆகவே, டெல்லியிலிருக்கும் அவர்கள் எல்லோருக்குமே சென்ட்ரல் ஸ்கேல் அடிப்படையில் சம்பளம் உயர்த்தப்படுமா ? அதே நேரத்தில். . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்குப் பதில் என்ன என்று மட்டும் கேளுங்கள். இப்படி மூன்று நான்கு கேள்விகளைக் கேட்டுக்கொண்டு போனால் என்னசெய்வது? அதனால்தான் கிருஷ்ணன் அவர்கள்கூட இரண்டாவது முறையாகக் கேட்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஒரே கேள்வியோடு நிறுத்தியிருந்



தால் ஊதியம் பற்றிச் சொல்லியிருப்பார்கள். வேறு பிரச்சனையையும் கேட்பதால், மறுபடியும் கிருஷ்ணன் எழுந்து கேட்பது போன்ற நிலைதான் ஏற்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறதா என்று திட்டவட்டமாக விவரமாகக் கேட்டால் சொல்வார்கள் என்றுதான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் ஊதியம் நிர்ணயிக்கப்படுகிறது.

திரு. மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான கார்கள் எத்தனை இருக்கின்றன ? தமிழகத்திலேயிருந்து டெல்லிக்குச் செல்லும் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் கார்களைக் குறைந்த வாடகையில் பயன்படுத்துவதற்கு அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே,

Permission for the use of staff cars attached to the Tamil Nadu House shall be obtained along with the orders for reservation.

அந்தக் கார்களைப் பயன்படுத்த ரிசர்வேஷன் எப்பொழுது நாம் கேட்கிறோமோ அந்த ரிசர்வேஷனை ஒப்புக்கொண்டு கார்கள் கேட்டால் கார்களைத் தர முடியுமா முடியாதா என்பதைத் தெரிவிக்க முடியும். எத்தனை கார்கள் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

பழனி தேவஸ்தான ஊழியர்கள்.

*வினா எண் 422—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தேவஸ்தானத்தில் இலாகாவாரியாக எத்தனை பேர் வேலை செய்கிறார்கள் ?

(ஆ) அதில் எந்தெந்த இலாகாவில் அரிசனங்களுக்கு 18 சதவீதம் வேலை கொடுக்கப்பட்டுள்ளது ?

[1979 மார்ச் 16

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி தேவஸ்தானம் துணை ஆணையர் அந்தஸ்த்தில் உள்ள செயல் அலுவலரால் நிர்வகிக்கப்படுகிறது. இலாகா வாரியாக இந்த தேவஸ்தானத்தில் வேலை செய்பவர்களின் விபரமாவது :—

| | | நபர்கள். |
|---|---|---|
| (1) | திருக்கோயில் மற்றும் இதர இடங்களில் வேலை பார்ப்பவர்கள் .. .. .. .. | 444 |
| (2) | மராமத்து பிரிவில் வேலை பார்ப்பவர்கள் . | 10 |
| (3) | மின்சார பிரிவு மற்றும் மின் இழுவை ரயில் பிரிவில் வேலை பார்ப்பவர்கள் .. .. | 36 |
| | மொத்தம் . | 490 |

(ஆ) திருக்கோயில் உட்துறை ஊழியர்கள் அரசு ஊழியர்கள் அல்ல. திருக்கோயில்களில் அரிசனங்களுக்கு 18 சதவீதம் வேலை அளிக்க வேண்டுமென விதிகளில் வரையறுக்கப்படவுமில்லை. ஆயினும், இத்திருக்கோயிலில் வேலை பார்க்கும் மேற்குறிப்பிட்ட 490 நபர்களில் 77 நபர்கள் (16 சதவீதம்) அரிசனங்கள் ஆவர்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவரவர்களே, பழனி தேவஸ்தானத்தில் 490 பேர்கள் பல்வேறு இலாக்காக்களில் வேலை செய்வதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அதில் அரிசனங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள 18 சதவீதம் என்ற முறைப்படி, சரியான கவுரவம் மிக்க வேலைகள் அங்கே கொடுக்கப்படவில்லை. ஸ்வீப்பர்கள். தோட்டிகள் போன்ற கீழ்த்தரமான வேலைகள்தான் கொடுக்கப்படுகிறது. ஆகவே, பழைய சட்டத்தைக் காட்டி அதைக் காலங்கடத்தாமல், இந்த அரசாவது அவர்களுக்கு விகிதாச்சார முறைப்படி வேலைகள் கிடைக்க உரிய நடவடிக்கையை எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியாளர்களுக்காக பொது விதி 22-இல் அரிசனங்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கப்பட வேண்டுமென விதியிருக்கிறது. ஆனால், அறநிலையத் துறையைப் பொறுத்த வரையில் உள்துறை ஊழியர்கள் அப்படி அல்ல. இருந்தாலும், 16 சதவீதம் என்று இன்றைக்கு வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய யோசனை வருகிற காலங்களில் பணியாளர்கள் நியமிக்கப்படும்பொழுது கவனத்திலே எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1979 மார்ச் 16]

திரு. க. நாச்சிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பழனியில் அரிசன அர்ச்சகர்கள் எத்தனை பேர்கள் வேலை செய்கிறார்கள். அப்படி அரிசனங்கள் வேலை செய்யாவிட்டால், அர்ச்சக ஊழியர்களாக, அவர்களை பழனி கோயிலில் நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அதற்கான விவரம் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதுபற்றி விவரத்தைச் சேகரித்து தர இயலும்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, எதிர்காலத்தில் என்னுடைய கோரிக்கையை கவனிப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆகவே, இன்றிலிருந்து அங்கே நியமிக்கக் கூடிய ஒவ்வொரு வேலைக்கும் எந்த உயர்ந்த வேலையாக இருந்தாலும், எந்த வேலையாக இருந்தாலும் அந்த வேலைகள் அரிசனங்களுக்குத் தான் தரப்படும் என்ற ஒரு உத்தரவை அரசு போடுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, சட்ட ரீதியான ஒரு உத்தரவு அரசினிடத்திலே இல்லாத காரணத்தாலே, சட்டம் இல்லாத காரணத்தாலே, அப்படிப்பட்ட ஒரு உறுதிமொழியைத் தருவது என்பது சிக்கலை உண்டாக்கலாம். மற்றவர்கள் வேறு பிரச்சினைகளை எழுப்பக் கூடும். என்றாலும், அரிசனங்களுக்கு, அப்படிப்பட்ட நேரங்கள் வருகிறபொழுது, அவர்களுக்கு இந்த விகிதாசாரத்தை மனதிலே எண்ணி வேலைகள் தரப்படும் என்ற அளவிலேதான் இப்பொழுது சொல்லமுடியும்.

திரு. சு. மருதாசலம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற பொழுது அங்கே பலர் அரசு ஊழியர்களாக ஆக்கப்படாமல் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். பழனியில் மட்டுமல்ல, தமிழகமெங்கும் பல்வேறு கோயில்களில் உள்ள ஊழியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, தமிழக ஆலயங்களிலே பணி புரிகிற உட்துறை கட்டளை ஊழியர்கள் என்று அழைக்கப்படுகிற அவர்களை, அரசு ஊழியர்களாக ஆக்குவதிலே வார்த்தை அளவிலே ஒன்றும் சங்கடம் இல்லை. அரசு ஊழியர்களாக அறிவித்தால் பல கோடிக் கணக்கான ரூபாய்களைச் சம்பளமாகத் தரவேண்டிய நிலை இருக்கும். அதைச் சமாளிக்க அறநிலையத் துறையிடத்திலே நிதி இல்லை. அதுதான் இன்றைக்கு இருக்கிற பிரச்சினை.

[1979 மார்ச் 16

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, மொத்தம் 490 பேர்களில், 77 பேர்கள்தான் தாழ்த்தப்பட்டவர்கள் பணி யாற்றுகிறார்கள் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆனால், அவர்களிலே அதிகமான பேர்கள், கிட்டத்தட்ட எல்லோருமே 'மீனியல் ஒர்க்கர்ஸ்' என்ற வகையில் தான் இருப்பது மாதிரி தெரிகிறது. பொறுப்பான பதவிகளிலே இருப்பதாகத் தெரியவில்லை. அறநிலையத் துறையில், அரிசனங்கள் 18 சதவிகிதம் என்பதிலிருந்து விதிவிலக்கு அல்லது அதனை அமுல் படுத்த முடியாத நிலையிருக்கிறதென்றால், அறநிலையம் என் பதோ, கோயில்கள் என்பதோ புனிதமானது என்று அரசு கருதுகிறதா ? அந்த இடங்களை நிரப்புவதற்கு அரசு ஏன் தயங்குகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இடங்களை நிரப்புவதற்கு அரசு தயங்குகிறது என்ற பொருளிலே பதில் அளிக்கப்படவில்லை. எதிர்காலத்திலே நியமிக்கப்படுகிற அத்தனை ஊழியர்களும் அரிசனங்கள் என்று உத்தரவாதம் தரு வீர்களா என்ற கேள்விக்குப் பதில் அளிக்கப்பட்டது. அப்படிப் பட்ட உத்தரவாதத்தைச் சட்ட சம்மதம் இல்லாமல் தரமுடி யாது என்றுதான் பதில் அளித்தேன். ஆகவே, அரிசனங்கள் தாழ்ந்த வேலைக்குத்தான் நியமிக்கப்பட வேண்டுமென்ற அந்த அடிப்படையில் எங்கேயும் வேலைகளில் நியமிக்கப்பட வில்லை. பல ஆலயங்களில், நிர்வாகத் துறை அதிகாரிகள் அரிசனங்களாக இருக்கிறபொழுது, அங்கே கீழ் வேலைக்குத் தான் அரிசனங்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்ற கட்டாயத்தில் நியமிக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் தெரிந்து கொள்ள முடியும்.

## கலையழகுடன் அச்சடிக்கப்படும் புத்தகங்களுக்கு பரிசு வழங்குதல்.

*வினா எண் 423—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு செய்தி, அற நிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நேர்த்தியான கலையழகுடன் அச்சடிக்கப்படும் புத்தகங் களுக்கு பரிசு கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

இல்லை.

திரு. போ. கோபாலன் : மாண்புமிகு தலைவரவர்களே, புத்தகங்கள் என்று சொல்லப்படுபவை, கையிலே எடுத்துப் பார்க்க அழகாக இருந்தால்தான் மனதிற்குப் படிக்கவும் கூட சாந்தி கிடைக்கும் என்ற கருத்து நிலவுகிறது. வெளிநாடுகளி லும், இந்தியாவிலே மற்ற இடங்களிலும் அழகான முறையிலே



1979 மார்ச் 16]

அச்சடிக்கப்பட்ட புத்தகங்களுக்கு வரவேற்பு கொடுக்கப்படு கிறது. பரிசுகள் கொடுக்கப்படுகின்றன. தமிழகத்திலே, அப் படிப்பட்ட புத்தகப் புரட்சி நடப்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானால், அத்தகைய இளைஞர்களை ஊக்குவிக்க, இனிமேலாகிலும் வெளிநாடுகளுக்கு ஈடாக, இரண்டு வகை புத்தகங்களையும் ஒரே இடத்திலே வைக்கக் கூடிய அளவு தகுதி படைத்த புத்தகங்களை அச்சிடுவோருக்கு பரிசு கொடுத்து அரசு ஊக்குவிக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

* மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, அழகான தோற்றத்தைத் தருகின்ற புத்தகங்களை அச்சடித்துத் தருகின்ற, அந்த அழகுக்குப் பரிசு தருகின்ற திட்டத் தைப் பரிசீலிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு திட்டம், மத்திய அரசினாலே நடைமுறைப்படுத்தப்பட்டு வ…: மாநில அரசிலே இப்பொழுது அது நடைமுறைப்படுத்தப்பட வில்லை. இருந்தாலும், அது அச்சுக் கலையை ஊக்குவிக்கிற முறையில் எடுத்துக் கொள்ளப்படுகிற முயற்சியே தவிர, வெறும் அழகுக்காக புத்தகங்களை வாங்குகின்ற அந்த உணர்வுகளுக்கு ஊக்கம் தருகிற முறையில் அது எடுத்துக் கொள்ளப்படுகிற முயற்சி இல்லை. என்றாலும், புத்தகங்களுடைய கருத்தை, அதிலே இருக்கிற விஷயங்களை மக்கள் உணர்ந்து வரவேற்கின்ற முயற்சியை, உணர்ச்சியைத்தான் நாம் வளர்க்க வேண்டுமே தவிர, வெறும் அழகுக்காக வரவேற்கின்ற முயற்சியை நாம் வளர்க்கக் கூடாது. அழகு என்ற பெயராலே எதை எதையோ, அழகு என்று எடுத்துக் காட்ட ஆரம்பித்துவிட்டார்கள். அழகு என்றாலே பெண்களைப் போடுவதுதான் அழகு என்ற அந்தக் கருத்துக் கூடப் பரவ ஆரம்பித்து விட்டது. எனவே, அழகு நல்ல கருத்துக்களிலே வளர நாம் முயற்சி எடுத்துக் கொள்வோம். அதற்குப் பிறகு கால அளவிலே வளர்ந்து வரும் அச்சுக் கலைக்கு பரிசு தர இந்த அரசு முயற்சிக்கும்.

[முற்பகல் 9-20]

திரு. போ. கோபாலன் : தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள், இந்தச் செய்தி மற்றும் அற நிலையத் துறைக்குப் பொறுப்பேற்ற பின்னால், வெளியிடப்பட்டிருக்கிற பிரசுரங்கள் எல்லாம் கலையழகோடு இருப்பதைப் பார்க் கிறோம். அந்த அளவுக்கு அவருக்கு கலையழகைப் பற்றி தெரிந் திருக்கிறது. அதனால் அவரே எது கலையழகு என்பதை முடிவு செய்து புத்தகங்களை அச்சடித்து பரிசு கொடுப்பாரா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே எது கலையழகு என்பதை நிர்ணயிப்பதிலேதான் சிக்கலே இருக் கிறது. அவரவர்களுடைய கருத்தை, மனத்தை, உணர்வுகளைப்

பொறுத்து அழகுகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அப்படி முயற்சிகளை மேற் கொள்ளும்போது, உறுப்பினர் அவர்களின் யோசனை பரிசீலிக்கப்படும். தவிர, உறுப்பினர் அவர்கள் நான் பதவியேற்ற பிறகு கலையம்சத்தோடு பிரசுரங்கள் வெளியிடப்படுகின்றன என்று பாராட்டினார்கள், அந்தப் பாராட்டுதலுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடியாக ஊதியம் வழங்கல்.

*வினா எண் 424— திரு. தீ. சு. நல்லதம்பி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கிராமப்புற தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு சேவை பணிவிடை மூலமும், நகர்ப்புறங்களில் பணி செய்பவர்களுக்கு வங்கிகள் மூலமும் ஊதியம் நல்குமாறு ஆசிரியர் சங்கத்திடமிருந்து அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்ததா ?

(ஆ) அவ்வாறே நேரடி ஊதியம் நல்க ஏதேனும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) இல்லை (ஆ) இல்லை.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்த கிராமப்புற தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரிடையாக சம்பளம் கொடுப்பதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று கேட்டதற்கு இல்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள். கல்லூரி ஆசிரியர்களுக்கு நேரிடையாக ஊதியம் இப்பொழுது வழங்கப்படுகிறது. கிராமப் புறங்களிலே உள்ள பள்ளி ஆசிரியர்களுக்குத் தான் சம்பளம் சம்பந்தமாக ஊழல்கள் தனியார் துறைகளில் அதிகமாக இருக்கின்றன என்று அமைச்சருக்குத் தெரியும். பல மாதங்களாக சம்பளமே கொடுக்காமல் இருப்பது, பாதி சம்பளத்தைக் கொடுத்து விட்டு, முழு ஊதியத்தைப் பெற்றுக் கொண்டது போல ரசீது வாங்கிக் கொள்வது என்றெல்லாம் அங்கே நடைபெறுகின்றன. இவைகளுக்குக் குரல் கொடுக்கக்கூட முடியாத நிலையில் அந்த கிராமப்புற ஆசிரியர்களுக்குக் கஷ்டங்கள் இருக்கின்றன. கல்லூரி ஆசிரியர்களுக்கு நேரிடையாக ஊதியம் கொடுக்கப்படும் திட்டம் இருக்கும் போது அதை கிராமப்புற பள்ளி ஆசிரியர்களுக்கும் இந்தத் திட்டத்தை பரப்பினால் நன்றாக இருக்கும் என்று நம்புகிறேன். இதன் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்றும் கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து பரிசீலிக்கப்படும் என்று தெவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற ஆசிரியர்களுக்கு நேரடியாக சம்பளம் வழங்கும் திட்டம் உடனடியாக முடியவில்லை என்றாலும், ஆங்காங்கே கல்வித் துறை ஆணையாளர்கள் .ஒவ்வொரு பகுதியிலும் இருக்கிறார்கள், அவர்கள் மூலமாகவாவது சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்தால், மேனேஜ்மெண்டார் பணத்தை எடுத்துக் கொள்கிற நிலையை மாற்ற முடியும். ஆகவே, அரசினுடைய நேரடி பிரதிநிதியாக இருக்கிற கல்வித்துறை ஆணையாளர்கள் மூலம் அவர்களுக்குச் சம்பளம் வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகத்தினர் தவறு செய்கிறார்கள் என்று அறியப்படும்போது இப்போழுதுகூட நாங்கள் ஊதியத்தை நேரிடையாக வழங்கி வருகிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கக்கூடிய நேரத்திலே மானேஜ்மெண்டார் பல தவறுகளை செய்துக் கொண்டிருக்கிறார்கள். நமது மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய நேரத்திலே, ஆசிரியர்களுக்கு நேரிடையாக சம்பளம் கொடுப்பதற்கு, அல்லது கல்வித் துறை அதிகாரிகள் மூலம் அனுப்புவதற்கு வேண்டிய ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், இதே நேரத்தில் கல்லூரி ஆசிரியர்களுக்கு நேரிடையாகக் கொடுப்பதற்கு அரசு ஒத்துக் கொண்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது, கிராமப்புற ஆசிரியர்களுக்கும் அப்படி நேரிடையாக முதல் தேதியன்றே சம்பளம் கொடுப்பதற்கு ஏற்பாட்டை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே. இப்பொழுது அப்படி கொடுக்கப்படவில்லை என்று சொல்வது தவறு. தனியார் பள்ளிகளுக்கு பள்ளிக் கல்வி ஆய்வாளருக்கு காசோலை அனுப்பப்பட்டு, முதல் தேதியன்றே அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்று ஆணையிடப் பட்டிருக்கிறது. ஊதியம் சரியாக வழங்கப்படவில்லை என்று புகார்கள் வரும்போது, அசாதரணமான சூழ்நிலையில் நேரிடையாக பணம் முதல் தேதியன்றே, முறையாக ஆசிரியர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு ஏற்கனவே செய்யப்பட்டிருக்கிறது.

[1979 மார்ச் 16

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகள் நடத்துவது வருமான வரிக்கு பயப்படாத ஒரு தொழில் மாதிரி நடந்துகொண்டு இருக்கிறது. ஆசிரியர் கள் கொத்தடிமை மாதிரி நடத்தப்படுகிறார்கள். இராஜ பாளையம் நகரில் ஒரு பள்ளியில் ஆசிரியர்களுக்கு களை எடுக்கப்போனால் 2–3 ரூ. கூலி கொடுப்பதுபோல் கொடுக் கிறார்கள். மற்றும் பல தவறுகள் நடந்துகொண்டு வருகின்றன. சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளில் அவர்கள் மதகுரு விழாக்களைக் கொண்டாடுகிற விதத்தில் பணம் வசூலிக்கிறார் கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரச்சினைக்குறித்து கேள்வி போடுங்கள். குறிப்பிட்ட இடத்தில் நடக்கிற நிகழ்ச்சி குறித்து கேள்வி போடுதல் கூடாது.

திரு. இரா. தாமரைக்கனி: ஆகவே, இம்மாதிரி குறைகளைப்போக்க ஆசிரியர்களுக்கு நேரடியாக ஊதியம் தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையில் காட்டுகிற ஆர்வத்தை பத்திரிகை வாயிலாக தனியார் நிர்வாகம் அறிந்து, அத்த கைய தவறுகள் நிகழாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். தவறுகள் நடக்கும் இடங்களில், குறிப்பிட்ட பள்ளிகளில், நேரடியாக சம்பளம் வழங்கும் முறை இப்போதும் வைத்து இருக்கிறோம். அதை ஆசிரியர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, ஆசிரியர் களுக்கு நேரடியாக சம்பளம் வழங்கும் சம்பந்தமாக ஆசிரியர் கள் சங்கத்தில் இருந்து கோரிக்கை வந்துள்ளதா என்பது கேள்வி. அப்படி கோரிக்கை வந்ததா, அரசு பரிசீலித்ததா ? தற்போது நேரடியாகச் சம்பளம் வழங்கப்படாததால், அவர்கள் தனியார்களிடத்தில் கொத்தடிமைகளாக ஆக்கப்பட்டு இருக்கிறார்கள். அது அனைவருக்கும் தெரியும். ஆகவே, இந்த ஆண்டிலிருந்தாவது அதை ஒழித்துக்கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நான் இங்கே கூறிய பதிலில் இருந்து நேரடி ஊதியம் வழங்கும் முறை பள்ளி ஆசிரியர்களுக்கு இல்லை என்று நினைத்துக்கொண்டு பேசத் தேவையில்லை. இப்போ தும் இருக்கிறது. அது எல்லாப் பள்ளிகளுக்கும் முறையாக அமல்படுத்தப்பட வில்லையே தவிர, மாண்புமிகு உறுப்பினர்கள்



1979 மார்ச் 16]

குறுப்பிடுவதுபோல் தவறு நடக்கும் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு தற்போதும் நேரடியாக தலைமை ஆசிரியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது. இந்த முறை கல்லூரி ஆசிரியர்களுக்குக் கிடையாது. ஆகவே, கல்லூரி ஆசிரியர்களுக்கு அந்தத் திட்டத்தைக்கொண்டு வரு கிறோம். அப்படிக்கொண்டு வருகிறபோது எல்லாக் கல்லூரி களுக்கும் கொண்டு வருகிறோம். அது வந்தபிறகு எல்லாப் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்குக் கொடுப்பது பரிசீலிக்கப்படும் என்று கூறினேன். கல்லூரி ஆசிரியர் களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அந்த நிலைமை பள்ளி ஆசிரியர்களுக்கு இல்லை. ஆனால், பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கும் திட்டம் தற்போதும் இருப்பதால் தான் பொதுவான புகார்கள் வரவில்லை.

திரு. தீ. சு. நல்லதம்பி: தலைவர் அவர்களே, பொதுவான புகார் வரவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆசிரியர்கள் சங்கத்தில் இருந்து வந்ததா என்று கேள்வி. முறையாக எல்லா இடங்களிலும், எல்லா நிர்வாக அமைப்புகளிலும் உள்ள பள்ளிகளிலும் இத்தகைய சிரமைப்பு கொண்டு வந்து, எல்லாப் பள்ளி களிலும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதில் என்ன சிரமம் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப் பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர் களே, நேரடி ஊதியம் இல்லாத காரணத்தால் ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பது தான் நமக்கு வரும் புகார். அப்படிப்பட்ட குறைபாடுகள் சுட்டிக் காட்டப்படுகிறபோது நேரடி சம்பளம் கொடுக்கும் திட்டம் அமல்படுத்தப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் முதலில் தெரிந்து கொள்ளவேண்டும் என்பது என்னுடைய ஆசை. அதற்குப் பிறகு எல்லா பள்ளிகளிலும் கொண்டு வரும் திட்டத்தை அரசு பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கோவை நகரத்தில் மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகம் வழங்கல்.

* வினா எண் 425—திரு. கு. ரமணி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரத்தில் மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் கிடைக்காத கஷ்டமும் விலையேற்றமும் ஏற்பட் டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

[1979 மார்ச் 16

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) (1) மலிவுவிலை காகிதத்தில் செய்யப்பட்ட நோட்டுப் புத்தகங்கள் கிடைப்பதில் கஷ்டம் உள்ளதாக அரசின் கவனத் திற்குக் கொண்டுவரப்பட்டது. இது மலிவுவிலை காகிதம் தமிழ்நாட்டுக்கு குறைவாக ஒதுக்கீடு செய்த காரணத்தாலும் ஒதுக்கிய காகிதம் கிடைக்கப் பெறுவதில் தாமதம் ஏற்பட்ட தாலும் ஆகும்.

(2) மலிவு விலைக் காகிதத்தை தமிழ்நாட்டுக்கு அதிக அளவில் ஒதுக்கீடு செய்யும்படியும், ஆலைகளைத் தாம தமின்றி காகிதத்தை வழங்கச் செய்யுமாறு வற்புறுத்தும்படி யும் மைய அரசை இவ்வரசு வற்புறுத்தியுள்ளது.

(3) விலையேற்றம் என்பது மலிவு விலைக் காகிதத்தால் செய்த நோட்டு புத்தக விநியோகத்தில் இல்லை. வெளி மார்க்கெட் காகிதத்தில் செய்த நோட்டுப்புத்தகங்களின் விலை, மலிவு விலைக் காகிதத்தில் செய்த நோட்டுபுத்தகங்களின் விலையைவிட அதிகம் என்பதே ஆகும்.

(4) கோவையிலுள்ள அரசு அதிகாரிகள் மற்றும் அங் குள்ள நோட்டுப்புத்தக விற்பனையாளர்கள் சங்கங்களின் ஒத்துழைப்பால் நிலைமை சீர்படுத்தப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, ஒவ்வொரு வருஷம் பள்ளிக்கூடங்களில் தேர்வு முடிவுற்று, புதிதாக வகுப்புகள் ஆரம்பிக்கும்போது, உடனே கடைகளில் நோட்டுப் புத்தகங்களின் விலை ஏறிவிடுகிறது. போன தடவை நான் அமைச்சர் அவர்களுக்கு ரிப்போர்ட் கொடுத்தேன். அவர்கள் அதைப் பற்றி விளக்கம் கொடுத்து இருக்கிறார். அந்த நிலைமை ஏற்பட்டபிறகு தவிர்ப்பதை விட, தனியார் கடைகளில் அந்த விலையேற்றம் ஏற்பட்ட பிறகு தடுப்பதை விட, அந்த நிலைமை ஏற்படாமல் இருக்க, அரசே புத்தகங் களை எப்படி அச்சிட்டுக் கொடுக்கிறதோ அதைப்போல, நோட்டுப்புத்தகங்களையும் அச்சிட்டுக்கொடுக்க முன்வருமா? ஏற்கனவே காகிதப் பஞ்சம் இருக்கிறது, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்த போதிலும் போதவில்லை. அப்படியிருக் கையில் அதிகப்படியான காகிதத்தைக் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்திப் பெற்று, அரசே நோட்டுப் புத்தகங்களை தயார் செய்து கொடுக்கவும், ஒவ்வொரு பள்ளிக்கும், கல்லூரிக்கும் இவ்வளவு கோட்டா என்று நிர்ணயித்து அவர்களுக்கு வினியோகிக்கவும் அரசு முன் வருமா?

[முற்பகல் 9—30]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டு ஜனவரி ஜூன் அரை ஆண்டு காலத்திற்கு கோவை மாவட்டத்திற்கு 332 டன் காகிதம் மலிவு விலை நோட்டுப்



1979 மார்ச் 16]

புத்தகத்திற்காக ஒதுக்கப்பட்டது. அதில் 137 டன் காகிதம் தான் தயாரிப்பாளர்களிடமிருந்து வந்தது. ஆகையால், இதுவே பிரச்சினைக்கு அடிப்படையாக அமைந்துவிட்டது. அதனால் மத்திய அரசை வற்புறுத்தி தேவையான காகிதத்தைப் பெற நாம் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

மலிவு விலை காகிதத்திலே தயார் செய்யப்படுகின்ற நோட்டுப் புத்தகங்களைத்தான் நாம் கட்டுப்படுத்துகிறோம் என்பது இரண் டாவது பிரச்சனை. வெளி மார்க்கெட்டில் அதிக விலை கொடுத்து காகிதம் வாங்கி, நோட்டுப்புத்தகம் தயாரித்து இருந் தால் அதற்கு இது பொருந்தாது. ஆனால் மலிவு விலையில் கிடைக்கின்ற காகிதத்தில் நோட்டுப்புத்தகம் தயாரிக்காமல் காகிதமாகவே கேரளா போன்ற மாநிலங்களுக்கு கடத்தப்படுவ தாக சென்ற ஆண்டு புகார் வந்தது. அதை ஒரு பிரச்சனையாக எடுத்துக்கொண்டு, அதைத் தடுக்க பல திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கிறோம். வருகின்ற ஆண்டிலிருந்து ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் பாடப்புத்தகங்களை விற்க வேண்டுமென்று பொது வான ஒரு கொள்கையை நாம் வகுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த சங்கங்கள் அமைக்கப்படுமானால் பாடப் புத்தகங்கள் விற்கப் படுவதைப்போலவே நோட்டுப் புத்தகங்களையும் விற்க ஏற்பாடு செய்ய முடியும். அதன்பிறகு நோட்டுப் புத்தகங்கள் தயாரிப் பதை சிறுதொழில் புரிகின்றவர்களுக்கு தந்து, காகிதத்தை வாங்கி, அதை அவர்களுக்கு விநியோகித்து, அவர்களிடமிருந்து நோட்டுப் புத்தகங்களைப் பெற்றுத் தருகின்ற பணியை தமிழ் நாடு பாடநூல் நிறுவனம் எடுத்து நடத்தும்போது இத்தகைய புகார் பெருமளவுக்கு குறைந்துவிடும் என்று நம்புகிறோம். அந்த அடிப்படையில் செயல்படும் ஒரு குறிக்கோள் அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, அரசு சார்பில் தனியாருக்கு மலிவு விலையில் தருகின்ற காகிதத்தை கேரளா போன்ற இடங்களுக்கு கடத்திச் சென்றுவிடுவதால்தான் இப்படிப் பட்ட பஞ்சம் ஏற்படுகிறது. ஆகவே, அரசாங்கமே நோட்டுப் புத்தகங்களை வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, வாங்கிய மலிவு விலை காகிதத்தை நோட்டுப்புத்தகங்கள் தயா ரிக்காமலேயே அந்த காகிதத்தை வெளி மாநிலங்களுக்கு கொண்டு சென்றுவிடுவதாக புகார் வந்தது. ஆகவே, காகிதத்தைக் கொடுப்பதிலும், அதை தயார் செய்து நோட்டுப் புத்தகங்களை வழங்குவதிலும் ஒரு கணக்கு வைத்துக்கொள்வது என்ற அந்த கருத்தை தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் மூலம் செயல் படுத்தலாமா என்ற யோசனை அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

[1979 மார்ச் 16

திரு. ஆ. நடராசன் : தலைவரவர்களே, தயாரிப்பு வசதி எதுவுமற்ற தனியார்களுக்கு மலிவு விலை காகிதம் வழங்கப்படு கிறதா ? சிந்தாமணியில் இந்த நோட்டுப் புத்தகங்களை வாங்க வேண்டுமென்றால் ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர் கையொப்பம் வேண்டுமென்று கேட்கிறார்கள். இது மாணவர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்துகிறது. இதைத் தவிர்க்க அரசு ஏற்பாடு செய்யுமா ? அதோடு, இந்த வெளி மார்க்கெட்டில் விற்கப் படுகிற நோட்டுப் புத்தகங்களுக்கும், மலிவு விலையில் அரசாங்கம் விற்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிற நோட்டுப் புத்தகங்களுக்கும் என்னென்ன வேறுபாடுகளை வைத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற மலிவு விலை காகிதத்தில் தயார் செய்கின்ற நோட்டுப் புத்தகங்களை அரசாங்கம் நிர்ணயம் செய்கின்ற மலிவு விலைக்கே விற்பனை செய்ய வேண்டும். சிந்தாமணியில் மலிவு விலை நோட்டுப் புத்தகங்களை வாங்க ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியர் கையொப்பம் வேண்டு மென்று கேட்டால் அது தவறான நடைமுறைகளைத் தவிர்க்க அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையாக நாம் கருத வேண்டும்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் விளக்கமான பதிலைக் கொடுத்திருக்கிறார்கள். நல்லது. அடுத்து இப்போது ஒரு பரீட்சை முடியப்போகிறது. அடுத்த ஆண்டு தொடங்கப்போகிறது. ஆகவே மீண்டும் இந்தப் பிரச்சினை வரக்கூடும். அதற்குள்ளாகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னது மாதிரியே ஒவ்வொரு பள்ளிக் கூடத்திற்கும் நோட்டுப் புத்தகங்களை மொத்தமாகக் கொடுத்து அவை சுலபமாகக் கிடைப்பதற்குரிய நடவடிக்கையை இப்போதே அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். அப்போதுதான் வருகின்ற வருடத்தின் கஷ்டத்தைத் தீர்க்க முடியும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியிலும் கூட்டுறவு விற்பனைக் கடை களை ஆரம்பிக்க வேண்டும் என்று இந்த அரசு முடிவு எடுத்து விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். லட்சுமிநாராயணன் : பேரவைத் தலைவரவர் களே. இப்போது மலிவு விலையில் நோட்டுப் புத்தகங்கள் பகிர்ந் தளிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் 1972–73-ல் எவ்வளவு நோட்டுப் புத்தகங்கள் கொள்முதல் செய்தார்களோ அந்த அடிப்படையிலேயே நோட்டுப் புத்தகங்கள் வழங்குவது நிர்ணயிக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால் இந்த



1979 மார்ச் 16]

முறையில் தவறான கணக்குகளைக் கொடுத்து அதிகமான அளவில் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே மதுரை, நகரத்தில். . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதுரை நகரத்தில் என்று சொல்லி பிறகு கோவை நகர் என்று சொல்லவேண்டி வரும். இப்படியே ஒவ்வொரு நகராகச் சொல்லிக்கொண்டு போகக் கூடாது. கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. என். லட்சுமிநாராயணன் : ஆகவே நோட்டுப் புத்தகங் களையும், தாள்களையும் விநியோகம் செய்வதில் ஒரு நல்ல ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மாணவர்களுக்கு நாம் எந்த விலையில் நோட்டுப் புத்தகங்கள் கிடைக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ அதே விலையில் மாணவர்களுக்குக் கிடைப்பதற்கான வழிவகைகளை அரசு நிச்சய மாக ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*House Numbers in Madras City.*

*Q. No. 426—THIRU N. KITTAPPA; Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Madras Corporation has taken up the re-numbering of houses in Madras City; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) 2,26,575 வீடுகளுக்கு கதவிலக்கங்கள் எழுதப்பட்டன. இதற்கான மொத்தச் செலவு ரூபாய் 1,65,240·09 ஆகும்.

*Q. No. 427—THIRU N. KITTAPPA; Will the Hon. the Minister for Local Administration be pleased to state;

(a) whether protests have been received by the Madras Corporation Revenue Officers for the manner of renumbering of houses from Advocates about the 20th April, 1978; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இது சம்பந்தமாக வக்கீல்களிடமிருந்து எவ்வித எதிர்ப்பும் வரவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1979 மார்ச் 16

திரு. சென்னை மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவரவர்களே, இவ்வாறு புதிய எண்கள் வீடுகளுக்கு மாற்றவேண்டும் என்பது மாநகராட்சியின் யோசனையா அல்லது தமிழக அரசினுடைய யோசனையின் பேரில்தான் இவ்வாறு எண்கள் மாற்றப்பட்டதா ? இந்தப் புதிய எண்கள் மாற்றுவதற்கான அவசியம் என்ன ? அதற்கான காரணங்களை அமைச்சரவர்கள் விளக்குவார்களா ? இவ்வாறு புதிய எண்கள் மாற்றப்பட்டுள்ளதால் பொதுமக்களுக்கு பல சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அரசு அறியுமா ? என்னுடைய வீட்டு புதிய எண்ணை மாற்றுவதற்குக் கூட நான் மன்ற செயலாளர் அவர்களுக்கும் மற்றும் இது சம்பந்தப்பட்ட உரியவர்களுக்கும் எழுதிக் கொடுத்த பிறகும், இன்னும் பழைய எண்களுக்கே கடிதங்கள் முதலியன வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே இதுபோன்ற சிரமங்கள் எல்லாம் அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, சென்னை மாநகரில் கடைசியாக 1961 ஆம் ஆண்டில் கதவிலக்கம் இடும் பணி நடைபெற்றது. அதன் பிறகு தனியார்களாலும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், குடிசைப்பகுதி மாற்று வாரியம் போன்ற நிறுவனங்களாலும் வீடுகள் கட்டுதல் அதிக அளவில் நடைபெற்று வருகின்றன. இந்நிறுவனங்களின் பணிகளினால் சென்னை மாநகரில் கட்டிடப் பகுதிகள், குறிப்பாக, அண்ணா நகர் இந்திரா நகர், சாஸ்திரி நகர், அசோக் நகர் முதலிய சுற்றுப்புற பகுதிகளில் குடியிருப்புகள் அதிகரித்துவிட்டன. ஆகவே இவைகள் எல்லாம் முறையாக இலக்கம் இடப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேதான் அதாவது 1961-லே இடப்பட்ட கதவிலக்கங்கள் தேர்தல் நடைமுறை விதி நூலில் கூறப்பட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப பின்பற்றப்படவில்லை என்ற காரணத்தால் இவ்வாறு வீட்டின் இலக்கங்களை மாற்றவேண்டிய அவசியம் நேரிட்டது. அரசினுடைய முன் அனுமதியைப் பெற்றுத்தான் மாநகராட்சி இந்தப் பணியைச் செய்தது.

திரு. தீ. சு. நல்லதம்பி : பேரவைத் தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியம் மற்றும், வீட்டுவசதி வாரியம் போன்ற துறைகளால் வீடுகள் அதிகமாகக் கட்டப்பட்ட காரணத்தால் இந்தமாதிரி சூழ்நிலை ஏற்பட்டது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அப்படி இலக்கம் போடுவதென்றால் இலக்கம் ஒன்றிலிருந்து போடப்படாமல், ஆரம்பத்தை விட்டு விட்டு ஏதோ க்ளாக்வைஸ், ஆண்டி க்ளாக்வைஸ் என்ற முறைகளில் சென்னை மாநகரில் போடப்படுகிறதே. இது அரசுக்குத் தெரியுமா ? அதனால் பல தவறுகளும் நிர்வாகக் கோளாறுகளும் நடந்து வருகின்றனவே. ஆகவே இதைப்பற்றி அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.



1979 மார்ச் 16]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது அரசுக்குத் தெரியும். அதாவது தேர்தல் நடைமுறை நூலில் கூறப்பட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப அந்த அடிப்படையிலே தான் இவ்வாறு ஆண்டிக்ளாக்வைஸ் முறைப்படி இலக்கங்கள் இடப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதில் தவறு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலில் புதியதாக நிறைய வீடுகள், குடிசைமாற்று வாரியத்தின் மூலமாகவும், வீட்டுவசதி வாரியத்தின் மூலமாகவும் கட்டப்பட்ட காரணத்தால்தான் அவற்றின் இலக்கங்கள் மாற்றப்பட்டன என்று சொன்னார்கள். நான் அதை வரவேற்கிறேன். ஆனால் இப்போது புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளைத்தவிர மற்றைய நகரப்பகுதிகளில் இருந்த எண்களில் எந்தவிதமான முறைகேடும் இல்லாத நிலையில்ஏன் இவ்வாறு எண்கள் மாற்றப்பட்டன? அதனால் பல குழப்பங்கள் ஏற்படுகின்றன. இது அடுத்த மாநகராட்சி தேர்தலிலே கூட மக்களுக்கு குழப்பங்களை உருவாக்கும் என்பதை அரசு அறிந்து இதனை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஏற்கெனவே 1961-லே கொடுக்கப்பட்ட கதவு இலக்கங்கள் தேர்தல் விதிமுறை நூலிலே குறிப்பிட்ட விதிமுறைகளைப்பின்பற்றிச் செய்யப்படவில்லை என்கிற காரணத்தால்தான் இவ்வாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆகவே குழப்பம் ஏற்பட்டுத்தான் தெளிவு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீரசோழன் ஆற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண். 428— திரு. இரா. இராசமாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குத்தாலம் ஒன்றியத்தில் பழைய கூடலூர் சாலையில் வீரசோழன் ஆற்றின் குறுக்கே ஒன்றியப் பொது நிதியிலிருந்து பாலம் கட்டவும், வேலையை போக்குவரத்துத்துறை மூலம் செய்யவும் அரசு அனுமதி கோரி விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) & (ஆ) திட்டம் பரிசீலனையில் உள்ளது.

[1979 மார்ச் 16

## *Rapid Transit System for Madras*

* *Q. No.* 429—THIRU K. ABDUL LATHEEF : Will the Hon. the Minister for Labour be pleased to state :—

(a) whether the Tamil Nadu Government has impressed on the Central team of Officers on the 4th May 1978 about the need to take up the Rapid Transit System of Madras for execution, and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) & (ஆ): மத்திய வீட்டு வசதித் துறையின் செயலாளரின் தலைமையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் செயற்படுத்தப் படும் பல்வேறு திட்டங்களின் முன்னேற்றம் பற்றி, 1978 ஆம் ஆண்டு மே திங்கள் 4-ந் தேதி தமிழ்நாடு தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தின்போது, சென்னை விரைவுப் போக்குவரத்துத் திட்டம் இன்னும் மத்திய திட்டக் குழுவினால் அனுமதிக்கப்படவில்லை என்று சுட்டிக் காட்டப் பட்டது. இந்த விஷயம் திட்டக் குழுவின் உயர்மட்ட அதிகாரிகளால் ஆராயப்படுகிறதென்றும், இந்தத் திட்டம் பற்றி மத்திய திட்டக் குழுவிடம் தானே நேரடியாக தொடர்பு கொள்வதாகவும் கூட்டத் தலைவர் கூறினார்.

[முற்பகல் 9-40]

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, மத்திய அலுவலர் குழுவிடம் சிபார்சு செய்த அம்சங்களில் எவை எவை ஏற்றுக் கொள்ளப்பட்டன? எந்தெந்த அம்சங்கள் நிராகரிக்கப்பட்டன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஒரே திட்டம் அது . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதாக இருந்தால் சொல்லலாம்.

(பதில் இல்லை).

## தூத்துக்குடி கடற்கரை சாலையில் கட்டிடங்கள்.

* வினா எண். 430—திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தூத்துக்குடி புதிய துறைமுகம் செல்லும் கடற்கரைச் சாலையில் கட்டிடங்கள் கட்ட அனுமதி கோரி தனியார்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளனவா ?



1979 மார்ச் 16]

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) அய்ந்து நபர்களிடமிருந்து கட்டிடம் கட்ட தூத்துக்குடி நகரசபை ஆணையருக்கு அனுமதி கோரி விண்ணப்பங்கள் வந்தன. அவை யாவற்றுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. ந. தனசேகரன் : அது நீண்ட கடற்கரைச் சாலையாதலால் அரசுக்குச் சொந்தமான இருபுறங்களில் உள்ள நிலங்களில் அரசு அலுவலகங்களைக் கட்ட முன்வருமா ! அவற்றில் தனியார்களுக்கு கட்டடங்கள் கட்ட அனுமதிப்பதால் கடற்கரைச் சாலையின் அழகே கெட்டுவிடும் சூழ்நிலை உருவாகும் என்பதால் தனி நபர்களுக்குக் கொடுக்கப்பட்ட அனுமதிகள் ரத்து செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கொடுத்த அனுமதியை ரத்து செய்வதற்கு ஆலோசனை இல்லை. அரசாங்க அலுவலகங்கள் கட்டுவதாக இருந்தால் அதை ஆலோசனை செய்யலாம்.

திரு. ந. தனசேகரன் : துறைமுகப் பகுதியாக இருப்பதால் பம்பாயில் இருப்பதுபோல் பெரிய பெரிய கட்டடங்களைக் கட்ட அந்த இடம் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. மத்திய அரசுக்குச் சொந்தமான நிலமாக இருக்கிற காரணத்தால் அவர்களுக்குக் கூட இதைக் கட்டுவதற்கு அனுமதி தருவதாகத் தெரியவில்லை. நாம் சிறிய கட்டடங்களைக் கட்ட அனுமதி கொடுப்பதால் அங்குள்ள அழகு கெட்டுவிடக்கூடாது என்பதால் மீண்டும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்த அனுமதிகளை தாற்காலிகமாக ரத்து செய்ய மறு பரிசீலனை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இவைகளையெல்லாம் ஆராய்ந்துதான் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது ரத்து செய்வதற்கு உத்தேசமில்லை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் புதிய துறைமுகம் அமைக்கப்பட இருக்கிறது. வெளிநாட்டுப் பயணிகள் எல்லாம் வரப் போகிறார்கள். பல அற்புதங்கள் நிகழப் போகின்றன. அப்படிப்பட்ட இடத்தில் தனியார்களுக்கு இடமளித்து வீடுகள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டால் அந்தச் சாலை, அங்குள்ள அற்புதங்கள் கெட்டுவிடாதா என்பது பற்றி அரசு மறு பரிசீலனை செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வீடு கட்ட அனுமதி கொடுத்திருப்பது துறைமுகத்தில் அல்ல, துறை முகச் சாலையிலே.

திரு. வி. கே. கோதண்டராமன் : அனுமதி கோரி எந்த ஆண்டு விண்ணப்பித்தார்கள்? எப்போது அனுமதி கொடுக்கப் பட்டது? எந்த அடிப்படையில் உடனே கொடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அது ஒரு நீண்ட பட்டியல். அதைப் படித்தால் 15 நிமிடங்களாகும். விண்ணப் பித்த நாள் : 10—10—1977. அனுமதி கொடுத்த நாள் : 3—11—1977. 7—11—1977, 6—12—1977, 21—9—1977, 3—11—1977, 7—4—1978, 20—4—1978, முதலில் சொன்னவை கேட்ட நாட்கள், அடுத்தபடியாகச் சொன்னவை கொடுத்த நாட்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 431 432 ஆகியவை மாண்புமிகு அமைச்சரவர்களின் வேண்டுகோளுக் கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

## கல்லணை விரிவாக்கக் கால்வாய்.

*வினா எண். 433— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கல்லணை விரிவாக்க கால்வாய் பகுதியை சீரமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : சோற்றாலும் மடை அடைக்கும் சோழ வள நாடு—அந்த நாட்டினுடைய விஷயம் இது. கல்லணை வாய்க்கால் சீரமைப்பு பற்றியும் மன்னார்குடி வாய்க்கால் பற்றி யும் விரிவாக்கம் பற்றியும் அரசின் பரிசீலனையில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதை விரிவாக்கம் செய்யாவிட்டால், தஞ்சை மாவட்டத்தில் நெல் பயிரிட முடி யாது. ஆகவே இதை மீண்டும் மறுபரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அன்போடு வினவி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சோழவளநாடு சோறுடைத்து என்ற முதுமொழி இந்த அரசுக்கும் தெரியும். கல்லணை வாய்க்கால் விரிவாக்கத் திட்டம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட் டார்கள். காவேரி மேட்டூர் விரிவாக்கத் திட்டத்தின் மூலம்





பயன்படுகின்ற நிலத்தின் அளவு 2 இலட்சத்து 56 ஆயிரத்து 133 ஏக்கர், 18 சென்ட். இந்தக் கல்லணை வாய்க்கால் பாசனத் திட்டத்தின் மூலமாக பாசனம் பெறுவது 29 ஆயிரத்து 335 ஏக்கர், 59 சென்ட். இந்த நிலையில் மேலும் கால்வாய் சீரமைப்புத் திட்டம் எதுவும் இந்த அரசின் பரிசீலனையில் இல்லை என்று தெரிவித்தேன். என்றாலும் மாண்புமிகு உறுப் பினர் அவர்களின் மேலான யோசனை கவனிக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி தாலூகா, பட்டுக்கோட்டை தாலூகா இந்த இரண்டு தாலூகாக்களிலுமுள்ள மிக அற்புதமான நிலங்களில் விளைச்சல் பாதிக்கப்படக்கூடிய அளவுக்கு சரியாக தண்ணீர் பாசனம் கிடைப்பதில்லை. ஆகவே, அரசாங்கம் இதில் தீவிர மாக கவனம் செலுத்தி தொடர்ந்து பாசன வசதிகள் ஏற்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க துரித கவனம் செலுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாயவரம், பட்டுக் கோட்டை தாலூகாக்களில் பாசன வசதியை அதிகரிப்பதற்கு இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக் கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, வடவாறு எக்ஸ்டன்ஷன் பாசன வசதி பிரச்னை பெரிய தலைவலியாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த வாய்க்காலில் இன்னும் 100 க்யூசெக்ஸ் அதிகமாக தண்ணீர் விட்டால் போதும். இப்போ துள்ள நிலைமையில் அந்த வாய்க்காலின் அகலத்தை மேலும் அகலப்படுத்த—எம்பேங்க்மென்ட் ஆக இருப்பதால் செய்ய முடியாது. ஆகவே இந்த வாய்க்காலை உயரப்படுத்திக் கொடுக்க முடியும் என்றால் இந்த தண்ணீர் விட முடியும் என்று சொல்லுகிறார்கள். இதற்கு பத்து அல்லது பதினைந்து லட்சம் ரூபாய் தான் செலவு ஏற்படும். ஆகவே இதிலுள்ள ஆயக் கட்டுகள் பலன்பெறக் கூடிய அளவில் இன்னும் 100 க்யூசெக்ஸ் தண்ணீர் அதிகமாக விடுவதற்கான வகையில் வாய்க்காலை செப்பனிடும் முயற்சியை அரசாங்கம் எடுக்குமா என்பதை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்த வாய்க்காலின் கொள்ளளவு குறைவாக இருக்கிறது. மேலும் இதில் அடிக்கடி தண்ணீர் போய்க்கொண்டிருப்பதால் மண் மேடிட்டு கொள்ளளவு குறைந்திருப்பதால் விவசாயிகளுக்கு போதுமான தண்ணீர் கிடைப்பதில்லை. மேலும் அந்த வாய்க்காலை அகலப் படுத்துவது என்பதும் இயலாத நிலையில் இருக்கிறது. ஆகவே

இதை உயர்த்துவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. எந்தெந்த தாலுக்காக்களில் எல்லாம் இது போன்ற நிலைமைகள் உருவாகியிருக்கிறதோ அந்தந்த தாலுக்காக்களில் வாய்க்கால்களை விரிவாக்குவதற்கு இந்த அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. துரை கோவிந்தராசன் :</u> தலைவர் அவர்களே, இந்த கல்லணை வாய்க்காலை விரிவாக்க வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் இதிலிருந்து செல்லுகின்ற பிராஞ்சு வாய்க்கால்களில்—அதுவும் குறிப்பாக டெயில்எண்ட்-களில் தண்ணீர் சரியாக போவதில்லை. ஆகவே இப்படிப்பட்ட சிறிய வாய்க்கால்களில் லைனிங் கட்டிக் கொடுத்தால் அவர்களுக்கும் தண்ணீர் கிடைக்கும், இதை செய்து கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நதி நீர்த் திட்டத்தில் 'லைனிங்' செய்ய வேண்டும் என்றால், இந்த சீரமைப்புத் திட்டத்திற்காக சுமார் 300 கோடி ரூபாய் செலவாகும். மேலும் இந்த காவேரி நீர் பிரச்சினை இன்னும் தீராதப் பிரச்சினையாக—இன்னும் முடிவு காணாத பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. இதையும் கருத்தில் கொண்டு காவேரி நீர் பிரச்சினையில் சீரமைப்பு ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பையும் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. பொதுவாக இப்படிப்பட்ட கால் வாய்களில் மேல் அளவுக்கு (பிம் அளவுக்கு) தண்ணீர் விட்டாலும் கடைமடையில் இருப்பவர்களுக்குத் தண்ணீர் கிடைப்பதில்லை என்கின்ற குறைபாடு எல்லா பகுதிகளிலும் இருந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் சீர்படுத்துவதற்கு விரிவான முறையில் இந்த அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

[முற்பகல் 9-50]

<u>திரு. அ. செல்லப்பா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கல்லணையைப் பொறுத்த ஆறுகளில் சரியாக தூர் எடுக்காத காரணத்தால், அந்த ஆறுகளும், கரைகளும் ஒரே அளவுக்கு மேடிட்டு இருக்கிறது. ஆகவே, தண்ணீர் விடுகின்ற நேரத்திலே அதிகமாக உடைப்பு ஏற்படுகின்ற காரணத்தால், இதைப் போக்குவதற்கு இந்த அரசு விரிவான, சரியான ஒரு திட்டத்தைக் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே என்னுடைய பதிலில் விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். கல்லணையை அகலப்படுத்த முடியுமா





என்பதுதான் மூலக் கேள்வி. ஆனால் இன்றைக்கு கல்லணையை அகலப்படுத்த முடியாத சூழ்நிலைக்கு இந்த அரசு தள்ளப் பட்டிருக்கிறது. ஆகவே, அதை உயரப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

<u>புண்ணாக்கு பருத்திக்கொட்டைக்கான விலைகள்.</u>

* வினா எண். 434—<u>திரு. கா. சுப்ரவேலு :</u> மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புண்ணாக்கு, பருத்திக்கொட்டை இவைகளின் விலைகளை அரசு நிர்ணயம் செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> இல்லை.

<u>திரு. அ. செல்லப்பா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புண்ணாக்கு, பருத்திக் கொட்டையின் விலை உயர்ந்து விட்டது. புண்ணாக்கு, பருத்திக் கொட்டையைத் தீவனமாக நம்பியிருக்கின்ற கால்நடைகளுக்கு, ஏழைகள் இவைகளை வாங்க முடியாத அளவுக்கு விலை ஏறிவிட்டதால், இதன் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> பேரவைத் தலைவர் அவர்களை, மூலக் கேள்வி புண்ணாக்கு, பருத்திக் கொட்டை விலைகளை அரசு நிர்ணயம் செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா என்பது. இதை மாண்புமிகு உறுப்பினர் சுப்ரவேலு கேட்டிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்த அளவிலே, இந்த விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு உண்டான எந்தவிதமான விதிமுறைகளும் இப்போது இல்லை. உணவுத் துறையைக் கேட்டோம் ; கால்நடை பராமரிப்புத் துறையை இது சம்பந்தமாக ஏதாவது குறிப்பு இருக்கின்றதா என்று கேட்டோம். அவர்களும் இல்லை என்று சொன்னார்கள். ஆனாலும், இன்று மைய அரசிலே 'அக்ரிகல்சுரல் பிரைசஸ் கமிஷன் ஆப் தி கன்ட்ரோல் ஆப் இந்தியா' என்ற நிறுவனத்தின் மூலமாகத் தான் பருத்திக் கொட்டை, பஞ்சு போன்ற விலைகளையெல்லாம் நிர்ணயித்து வருகின்றார்கள். என்னிடத்திலே இருக்கின்ற குறிப்புகள் எல்லாம், இன்று புள்ளிவிவரத் துறை ஆணையாளர் அவர்கள் வெளி மார்க்கட்டிலே புண்ணாக்கு என்ன விலை, பருத்திக் கொட்டை என்ன விலை என்ற பட்டியல் இருக்கின்றதே தவிர, இந்த அரசு புண்ணாக்கு, பருத்திக்கொட்டை போன்றவைகளுக்கு விலை நிர்ணயம் செய்யக் கூடிய நிலைமையிலே இல்லை.

[1979 மார்ச் 16

திரு. வி. கொ. சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால் நடைக்குப் பயன்படுத்தப்படும் பருத்திக் கொட்டை, புண்ணாக்கின் விலை ஒரு வருடத்திலே ஒரு கால் நடையின் விலைக்கும் அதிகமாகிறது. கணக்குப் பார்த்தால், அதனால் விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகள் கால்நடைகளை விட்டுவிடலாமா என்று பயப்படுகின்ற நிலையிலே உள்ளார்கள். ஆகவே, தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கால் நடைகளை வைத்து விவசாயம் செய்யக்கூடிய கால்நடைகளுக்கு பருத்திக் கொட்டை, புண்ணாக்கு விலையில் ஒரு சப்சிடி ரேட்டில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, அது பற்றிய குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, புண்ணாக்கு, பருத்திக் கொட்டை ஆகியவைகளின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்கின்ற இந்த நேரத்தில், நிலக்கடலைக்கு இந்த அரசு விலை நிர்ணயித்துள்ளதா? இல்லையென்றால் இடைத் தரகர்கள் குறைவான விலைக்கு நிலக்கடலையை வாங்குகிறார்கள். எனவே, இதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி புண்ணாக்கு, பருத்திக் கொட்டையை பற்றியது. ஆகவே, மணிலாக்கொட்டையைப்பற்றி தனிக் கேள்வி போட்டால், விவரம் சொல்லப்படும்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, புண்ணாக்கு, பருத்திக்கொட்டை போன்றவைகள் உணவுப் பொருள்களின் வரிசையிலே வரவில்லை என்றும், எனவே, இதன் விலைகளைக் கட்டுபடுத்த முடியவில்லை என்றும் சொன்னார்கள். முன்பிருந்த அரசு பருத்திக் கொட்டை, புண்ணாக்கு போன்றவைகள் உடம்புக்கு நல்லது, உணவுப் பொருள்களாக ஏற்றுக் கொள்ளலாம் என்று கூறியதாக நினைவிருக்கிறது. அது மட்டுமல்லாமல், கலப்படம் செய்யமுடியாத இரண்டு பொருள்கள் பருத்திக்கொட்டையும், புண்ணாக்கும்தான் இப்போது இருக்கின்ற நிலையில், இந்த பருத்திக்கொட்டை, புண்ணாக்கு போன்றவைகளிலும் கலப்படம் செய்யப்படுகின்றது. இந்த அரசு அதன்மீது நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிக்குமா என்பதை மூலக் கேள்விக்கு ஒட்டியதாகக் கேட்பதால், அமைச்சர் அவர்கள் இதற்கு அவசியம் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1979 மார்ச் 16]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, முன்பிருந்த அரசு பருத்திக் கொட்டை, புண்ணாக்கை உணவுப் பொருள்களாகச் சாப்பிட்டால், நல்லது என்று சொன்னதாக, அத்தகைய தகவல் என்னிடம் இல்லை. அவைகள் எவ்வளவு தூரம் சுகாதார அடிப்படையிலே நல்லது என்றும் தெரியவில்லை. ஆனால், இந்த புண்ணாக்கு, பருத்திக் கொட்டை ஆகியவைகளில் கலப்படம் செய்யப்படுவதைப் பற்றி கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. து. இராமசாமி: தலைவரவர்களே, புண்ணாக்கு, பருத்திக் கொட்டை விலையைக் கட்டுப்படுத்த அரசிடம் குறிப்பு எதுவும் இல்லை என்று தெரிவித்தார்கள். இது கால்நடைகளுக்கு முக்கியமான தீவனம் என்பதால் அதைக் கருத்திற் கொண்டு விலையை கட்டுப்படுத்த இந்த அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே. அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ரா. கு. பெருமாள் : தலைவரவர்களே, பருத்திக் கொட்டையும், புண்ணாக்கும் கிராமப்புறங்களில் இருக்கின்ற எருதுகளுக்கு மட்டுமல்ல ; நகரப்புறங்களில் உள்ள கறவை மாடுகளுக்கும் முக்கியமான தீவனமாக இருக்கிறது. இந்தத் தீவனத்தின் விலை ஏறிக்கொண்டே இருக்கிறது. ஆனால் விவசாயிகளின் விளைபொருளுக்கு விலை இல்லாத இந்த நேரத்தில் தீவனத்தின் விலையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் நமக்கு இல்லை என்று சொன்னார்கள். இருப்பினும் காளைக்கும் பசுவுக்கும் இது முக்கியமான தீவனமாக இருப்பதால் இந்த அரசு பருத்திக் கொட்டைக்கும் புண்ணாக்குக்கும் விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். அது எப்போது அமுலுக்குக் கொண்டுவரப்படும்?

மாண்புமிகு பேரவைத் த்லைவர் : உறுப்பினர்கள் கேட்ட கேள்வியையே கேட்டுக்கொண்டிருக்க கூடாது; புதிதாக தகவல் பெறக்கூடிய விதத்தில் கேட்க வேண்டும்.

திரு. ப. சந்திரன் : தலைவரவர்களே, பருத்திக் கொட்டையும் பிண்ணாக்கும் கால்நடைகளுக்கு மிக முக்கியமான தீவனம். அதைப் போன்று வடாற்காடு மாவட்டத்தில் அரிசியிலிருந்து எடுக்கப்படுகிற தவிடு கால்நடைகளுக்கு முக்கியமான தீவனமாக இருக்கிறது. இப்போது நாட்டின் பல பகுதிகளில் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுப்பதால் தவிடு கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அது பற்றி கால்நடை பராமரிப்புத்துறை நடவடிக்கை எடுக்கும்.

[1979 மார்ச் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பருத்திக் கொட்டை, பிண்ணாக்கைப் பற்றியது கேள்வி. அதை விட்டு விட்டு, தவிட்டைப் பற்றிக் கேட்டால் அமைச்சரிடம் எப்படி பதில் கிடைக்கும்?

திரு. வ. துலுக்காணம் : தலைவரவர்களே, விவசாயத் துறையிலே வீரிய பயிரிடுவதற்கான பருத்தி விதையின் விலையை நிர்ணயம் செய்கிறார்கள். அப்படியானால், பால் கொடுக்கின்ற பசு மாடுகளுக்குத் தீவனமாகப் பயன்படுகின்ற பருத்திக் கொட்டை, பிண்ணாக்கின் விலையை ஏன் நிர்ணயம் செய்யக் கூடாது என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, பருத்திக் கொட்டையைப் பொறுத்த மட்டில்; விதை பருத்திக் கொட்டையாக இருந்தால் அதற்கு விலை நிர்ணயம் செய்கின்ற அதிகாரம் நம்மிடம் இருக்கிறது. கால்நடைத் தீவனமான பருத்திக் கொட்டையின் சராசரி விலைக்குமேல் 30 சதவீதம் மிகை ஊதியம்-பிரிமியம் என்ற முறையில் சேர்த்து விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. அதுதான் தமிழ்நாட்டில் இன்றைக்கு இருக்கின்ற நிலைமை. ஆகவே, பாக்கி இருக்கிற பருத்திக் கொட்டை, பிண்ணாக்கின் விலையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் நம்மிடம் இல்லை.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே. பருத்திக் கொட்டை, பிண்ணாக்கு என்கிறபோது கடலை விவசாயிகளுக்கும் நியாயமான விலை கிடைக்கவில்லை ; பருத்திக் கொட்டை விவசாயிகளுக்கும் நியாயவிலை இல்லை. ஆனால் பருத்திக் கொட்டை, பிண்ணாக்கு விலை ஏற்றத்தால், பால் விலை உயருகிறது ; அதனால் மாட்டின் விலை உயருகிறது. ஆகவே, பருத்திக் கொட்டை, பிண்ணாக்கு சௌகிரியமான விலைக்கு கிடைக்க அரசாங்கம் நியாயவிலைக் கடைகள் மூலம் குறைந்த விலைக்கு கொடுக்க நடவடிக்கை எடுக்குமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஏற்கெனவே விளக்கமாக பதில் சொன்னேன். விலையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் நம்மிடல் இல்லை. கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்களை ஆங்காங்கே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பருத்திக் கொட்டை, பிண்ணாக்கு போன்றவைகளை அரசு வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர்களுக்காகப் பரிசீலனை செய்து, என்னென்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அவைகளை காலாகாலத்தில் எடுக்கும்.



1979 மார்ச் 16]

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, உறுப்பினர்களுக்காக வேண்டுமென்றால் பரிசீலனை செய்கிறேன் என்று சொல்கிறார்கள். நாங்கள் எங்களுக்கு வேண்டுமென்று கேட்கவில்லை . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பருத்திக் கொட்டையும், பிண்ணாக்கும் உறுப்பினர்களுக்கு என்று சொல்லவில்லை ; கால்நடைகளுக்கு என்ற முறையில்தான் அமைச்சரவர்கள் சொன்னார்கள். கால்நடைகளுக்கு என்றுதான் அர்த்தம். தயவு செய்து உட்காருங்கள்.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமும், பால் பெருக்குத் திட்டத்தின் மூலமும் கிராமம்புற மக்களில் பெரும்பாலோரும் கறவை மாடுகளை வைத்திருக்கிற காரணத்தால், பருத்திக் கொட்டையையும், பிண்ணாக்கையும் நயாய விலைக் கடைகள் மூலம் குறைந்த விலைக்கு கொடுக்க வழிவகைச் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இன்று பால் வள நிறுவனத்தின் மூலம் கால்நடைகளுக்கு தீவனம் கொடுக்கப்பட்டு வருகிறது. அதைப் போல சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், மார்ஜினல் பார்மர்ஸ் அதாவது குறுநில விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் போன்றவைகளின் மூலம் அவர்களுக்கு கறவை மாடுகளை வாங்கிக் கொடுக்கின்ற திட்டம் அமுலில் இருந்து வருகிறது.

[முற்பகல் 10—00]

அதன் மூலமாக அவர்களுக்கு நல்ல முறையிலே தமிழக அரசு மாடுகளைப் பெற்றுத் தருகிறது. ஆனால், கால்நடைத் தீவனங்கள் எந்தவிதத் தட்டுப்பாடுமின்றி அவர்களுக்குக் கிடைதது வருகிறது என்று நான் நினைக்கிறேன். தட்டுப்பாடு எங்காவது இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் அரசுக்கு எடுத்துச் சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. ந. தனசேகரன் : தலைவர் அவர்களே, இந்த பருத்தி, பிண்ணாக்கு இவைகளின் விலை அதிகமாக இருப்பதால் வெளி நாடுகளிலிருந்து அவைகளை இறக்குமதி செய்யும் திட்டம் இருக்கிறதா ? அப்படியானால் அதற்காக தனியார் அனுமதி கோரினால் அரசு அனுமதி அளிக்குமா ?

[1979 மார்ச் 16

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் மீண்டும் மீண்டும் ஒரே பதிலைத்தான் சொல்ல வேண்டிய சூழ்நிலை எனக்கு இருக்கிற காரணத்தால் சொல்கிறேன். கால் நடைத் தீவனங்களைப் பொறுத்தவரையில் பிண்ணாக்கு, பருத்தி போன்றவைகளைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் இந்தத் துறை யிலே இல்லை என்பதை ஏற்கெனவே தெளிவாக்கியிருக்கிறேன். வெளியிலிருந்து அவைகளைக் கொண்டுவந்தாலும் அதைக் கட்டுப் படுத்துவதற்கும் அதிகாரம் இல்லை. வெளியிலே என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்ற புள்ளிவிவரத்தை வேண்டுமானால் தரு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோதண்டராமன் புதிய கருத்து கேட்க கேள்வி அனுமதிக்கப்படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், கால்நடை அபிவிருத்தி என்ற நல்ல நோக்கத்தோடு கால்நடைக் கண்காட்சி நடத் தப்படுகிறது. அந்தக் கால்நடைகளுக்கு சத்துணவு பிண்ணாக் கும், பருத்திக்கொட்டையும்தான். அவைகளின் விலை அதிக மாவதற்கு பல காரணங்களைச் சொல்லுகிறார்கள், ஒரு கார ணம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பது, அதைத் தடுத்து நிறுத்த திட்டமுண்டா ? இரண்டு வருடங்களாக எவ்வளவு ஏற்றுமதி செய்யப்பட்டது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கால்நடைகளுக்கு பிண்ணாக்கு, பருத்துக்கொட்டை போன்ற சத்துணவு தேவை என்பதை ஒப்புக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஒரு விவசாயி என்ற காரணத்தை முன்னிட்டு— விவசாயி இல்லை என்று சொல்கிறார்— ஆனாலும் அவருடைய தொகுதியிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் சொ கிறேன்; கால்நடைத் தீவனங்கள் ஏற்றுமதி செய்யப்படுகிற செயற்குறிப்பும் இல்லை; எவ்வளவு தொகைக்கு ஏற்றுமதி செய் யப்பட்டிருக்கிறது என்ற குறிப்புகளும் இல்லை என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத் தொழிற்பேட்டைகளில் தொழிற் பிரிவுகள்.

*வினா எண். 435—திரு. செ. சதாசிவம் ; மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக இயங்கிவரும் தொழிற்பேட்டைகளில் எத்தனை தொழிற் பிரிவுகள் இயங்கி வருகின்றன ?

(ஆ) எத்தனை தொழிற் பிரிவுகள் மூடியுள்ளன ?

(இ) மூடியிருப்பதற்குக் காரணமென்ன ?



1979 மார்ச் 16]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) திருச்சி மாவட்டத்தில் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக இயங்கி வரும் தொழிற்பேட்டைகளில் 72 தொழில் பிரிவுகள் இயங்கி வருகின்றன,

(ஆ) மூன்று தொழிற் பிரிவுகள் மூடப்பட்டுள்ளன.

(இ) அவை நட்டத்தில் இயங்கியதாலும், பணம் பற்றாக்குறை காரணமாகவும் பங்குதாரர்களுக்குள் ஏற்பட்ட பூசல் காரணமாகவும் மூடப்பட்டுள்ளன.

திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பங்குதாரர்களுக்குள் உள்ள சண்டையைத் தீர்க்க அரசு முன்வருமா ? அந்தத் தொழிற்சாலையை நடத்த என்ன ஏற்பாடு செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலை நடத்தப்படுகிறபோது தொழிற்சா லையை நடத்துகின்ற முதலாளிகளுக்கும் அதிலே பணியாற்று கின்ற தொழிலாளர்களுக்கும் ஏதாவது தகராறு ஏற்பட்டால் அதைச் சுமுகமாகத் தீர்த்து வைத்து தொழிற்சாலையை நடத்த அரசு இப்போது செயல்படுகிறது. ஆனால், பங்குதாரர்கள் ஏன் சண்டைபோடுகிறார்கள் என்று நமக்குத் தெரியவில்லை. ஒன்று அந்தச் சண்டையை அவர்கள் விரைவாக தீர்த்துக் கொள்ள வேண்டும், இல்லாவிட்டால் நாமே அந்தத் தொழிற்சாலையை நடத்துவதுதான் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

திரு. கே. சௌந்திரராசன் : தலைவர் அவர்களே, மூடப்பட்ட அந்தத் தொழிற்சாலைகள் எவை எவை ? அவைகளை நடத்து வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது? மூதலீடு முடக்கத்தால் மூடப்பட்டிருந்தால் அதைத் தொடங்குவதற்கு அரசு எந்த வகையில் உதவி செய்ய முன்வரும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, அரியமங்கலம் தொழிற்பேட்டையில் உள்ள கோவாப்பரேடிவ் மெட்டல் ரோலிங் மில் அது ஏற்படுத்தப்பட்ட நோக்கத்திற்கு மாறாக உற்பத்தியிலும் சந்தையிலும் எந்தவிதமான முன்னேற்ற மும் இல்லாத காரணத்தினாலே செயல்படாமல் நிறுத்தப்பட்டு இருக்கிறது. லைட் மெட்டல் இன்டஸ்ட்ரீஸ் நிதி நெருக்கடி காரணமாகச் செயல்படாமல் இருக்கிறது. அந்த நிதி நெருக் கடியை எப்படிப் போக்குவது என்று இந்த அரசு ஒரு புதிய திட்டத்தை நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருக்கிறது. சிட்கோ நிறுவனத்தின் மூலமாக மூலதன கடன் பெறுவதற்கு இப்பொழுது ஏற்பாடுகள் சிலவற்றைச் செய்திருக்கிறோம். 20

சதவீதம் வரையில் அந்தத் தொழிற்சாலைகளுக்கு வட்டியில்லாத கடனை சிட்கோ நிறுவனம் வழங்கும். அதை வைத்துக்கொண்டு வங்கிகள் மூலம் மேலும் பணம் பெற்று அந்தத் தொழிற்சாலைகளை நடத்துவதற்கு தொழிலதிபர்கள் முன்வரலாம்.

திருவெறும்பூரில் " சுவாமி கட்டுமானத் தொழில் " பங்குதாரர்கள் தகராறினால் நின்றிருக்கிறது.

மொத்தமுள்ள 75 தொழிற்சாலைகளில் மூன்று தொழிற்சாலைகள்தான் இந்தப் பிரச்சனைகளால் நின்றிருக்கின்றன. அதில் இரண்டு தொழிற்சாலைகள் செயல்படுவதற்கு சாத்தியம் இருப்பதாக அரசு நம்புகிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தொழிற்சாலைகள் மூடப்படுவதற்கு முக்கியமான காரணம், " ஒர்க்கிங் கேபிடல் " இல்லாததுதான். அமைச்சரவர்கள் சொன்னார்கள், நேஷனலைஸ்ட் பேங்குகள் மூலமாகவும், சிட்கோ மூலமாகவும் உதவி செய்யப்படும் என்று. ஆனால் ஒர்க்கிங் கேபிடல் கேட்கும் பொழுது சிட்கோவோ, டி.ஐ.சி.யோ, நேஷனலைஸ்ட் பேங்குகளோ கொடுக்க முன்வருவதில்லை. எனவே, அரசாங்கம் விசேஷ திட்டம் ஒன்றை வகுத்து ஒர்க்கிங் கேபிடல் கொடுப்பதற்கான நடவடிக்கையை, கடனாகக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சாதிக் அவர்களுக்கு, அரசு நிறுவனங்கள் மூலதனக் கடன்கள் கொடுப்பதில்லை என்பது நன்கு தெரியும் என்று நினைக்கிறேன். அந்த நிறுவனங்களெல்லாம் " டெர்ம் லோன் " என்று சொல்லும் அளவிற்கு கட்டுமான பணிகளுக்கு நிதி உதவி செய்து வருகின்றன. மூலதனக் கடன்—ஒர்க்கிங் கேபிடல் லோன்—வேண்டுமென்றால் தேசீயமயமாக்கப்பட்ட வங்கிகளிலும், மற்ற வங்கிகளிலும் பெறுவதற்கான வாய்ப்பிருக்கிறது. ஆனால், தேசீயமயமாக்கப்பட்ட வங்கிகள் இப்பொழுது இந்த மூலதனக் கடன்களைத் தர மறுக்கின்றன அல்லது அஞ்சுகின்றன என்பதை உணர்ந்து, இந்த நிதிநிலை அறிக்கையில் சிட்கோ மூலம் " மார்ஜின் மணி அசிஸ்டன்ஸ் " என்ற திட்டத்தை அறிவித்திருக்கிறோம். அதன்படி 20 சதவீதம் வரை வட்டியில்லாக் கடனை அந்த நிறுவனங்களின் சார்பில் வங்கியில் முன்பணம் செலுத்துகிறோம். 80 சதவீதம் மூலதனக் கடனை அவைகள் வழங்கும். வங்கிக்கு முதலிலே கடனைச் செலுத்திவிட்டு 'பிறகு சிட்கோவிற்குச் செலுத்தினால் போதும் என்ற ஏற்பாட்டின்படி சிறு தொழில்களுக்கு இந்த வகையில் நிதி உதவியைப் பெற்று வளர்ச்சியடைய வழிகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. ப. சந்திரன் : தலைவரவர்களே, மூன்று பிரிவுகளில் இப்பொழுது நிறுத்தப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள அறிவித்தார்கள். அந்த மூன்று பிரிவுகளில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு இப்பொழுது மாற்று வேலைத் திட்டத்தை அரசு வழங்கியுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, அப்படிப்பட்ட மூடப்பட்டிருக்கின்ற அந்தத் தொழிற்சாலைகளை உடனடியாகத் திரும்பவும் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகளை விரைவுபடுத்துவதன் மூலமாக ஏற்கெனவே பணியாற்றி வருகின்ற அந்தத் தொழிற்சாலைகளிலே அந்தத் தொழிலாளர்கள் பணியாற்றினால்தான் பலவிதமான நன்மைகள் இருக்கின்றன என்று அரசு உணர்கிறது. எனவேதான் அந்தத் தொழிற்சாலைகளை விரைவிலே நடத்த ஏற்பாடுகள் செய்து வருகிறது.

மாவட்டத் தொழில் மையங்கள்.

* வினா எண் 436—திரு. கு. ரமணி : திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தொழில் மையத்தை அமைக்கும் திட்டத்தைப்பற்றி மத்திய அரசு மாநில அரசுக்கு யோசனை கூறியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், தமிழ் நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் அமைக்கப்படும் ?

(இ) அதற்கு மத்திய அரசின் உதவி என்ன கிடைக்கும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் செங்கல்பட்டு, சேலம், தர்மபுரி, இராமநாதபுரம், திருநெல்வேலி, தென்னாற்காடு, புதுக்கோட்டை, கன்னியாகுமரி ஆகிய எட்டு மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மற்ற மாவட்டங்களில் இவ்வாண்டு இறுதிக்குள் தொழில் மையங்கள் அமைக்கப்படும்.

(இ) ஒவ்வொரு மாவட்டத் தொழில் மையத்திற்கும் அலுவலகக் கட்டிடம் கட்ட, ஊர்திகள், மேசை நாற்காலிகள் போன்ற அலுவலகப் பொருட்கள் வாங்க தொடராச் செலவினமாக ரூபாய் 5 இலட்சமும், பணியாளர்களுக்கு ஆகும் தொடரும் செலவினத்தில் 75 சதவிகிதத் தொகையை ஆண்டிற்கு ரூபாய் 3.75 இலட்சம் வரம்பிற்குட்பட்டு ஏற்றுக்கொள்ள மத்திய அரசு இசைந்துள்ளது.

[1979 மார்ச் 16

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இப்படி அமைக்கப்படக்கூடிய மாவட்ட மையங்களில் அந்த அமைப்புகளுக்குள்ளே எந்தெந்த ஸ்தாபனங்கள் சார்பாக பிரதிநிதிகள் இருக்கிறார்கள்? அரசுப் பிரதிநிதிகள் மட்டும்தான் இருக்கிறார்களா ? அல்லது தொழில் பிரதிநிதிகள் இருக்கிறார்களா ? பொது ஜனப் பிரதிநிதிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட அப்படிப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட குழுக்களாக அவைகள் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, அந்தந்த மாவட்டத்திலேயே தொழில்கள் நடத்த முன்வருபவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கவும், மாவட்டத்திலேயே இருக்கின்ற முன்னோடி வங்கியிலிருந்து நிதியுதவி பெற்றுத் தரவும் மாவட்டத் தொழில் மையங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, முழுக்க அரசு அலுவலர்கள்தான் இந்த மையங்களில் பணியாற்றுகின்றார்கள். ஆனால், வங்கியிலிருந்து நிதி உதவி பெறுவதில் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக, அந்தந்த மாவட்டத்திலேயிருக்கின்ற முன்னோடி வங்கியில் பணியாற்றும் ஒரு மேலாளர் இங்கே வந்து பணியாற்றுகிறார். அவரை '' மேனேஜர் ஃபார் கிரெடிட் '' என்று சொல்லுகிறோம். மற்றபடி இந்த மாவட்டத் தொழில் மையங்களில் இருப்பவர்கள் அனைவரும் அலுவலர்கள்தான். ஆனால், அந்தந்த மாவட்டத் தொழில் வளர்ச்சிக்கான ஆலோசனைக் குழு இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 10–10.]

மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராகவும், ஒருங்கிணைப்பு கமிட்டியினுடைய பொறுப்பையும், செயலாளர் பொறுப்பையும் ஏற்று மாவட்டத் தொழில் மையத்தினுடைய பொது மேலாளரும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரும், சிறு தொழில் கழகத்திலே பணிபுரியக் கூடியவர்கள், சிறுதொழில் வளர்ச்சிக் குழு பிரதிநிதிகள் ஆகியோர் இதிலே இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது ஆலோசனைக் குழு.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத் தொழில் மையத்தை மதுரையிலேயிருந்து மாற்றி எங்களுடைய மாவட்டத்திற்குள் ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா ? இப்பொழுது 'மோட்டிவேஷன் கமிட்டி' கூட்டங்கள் வட்ட வாரியாக போட்டார்கள். பிரச்சாரத்தோடு நின்று விடுகிறது. அவர்களுக்கு ஒரு டார்கெட் பிக்ஸ் பண்ணி, ஒவ்வொரு தாலூகாவிலும் இத்தனை தொழில்களையாவது தொடங்க வேண்டுமென்று அவர்களுக்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.



1979 மார்ச் 16]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முனைப்பு வளர்ச்சிப் பணியிலே இந்த மோட்டிவேஷன் காம்ப் நடந்து கொண்டிருக்கிறது. அதிலே இப்பொழுது ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டு வருவதை அரசு உணருகிறது. அரசு அலுவலர்களுடைய பணியே, தொழில் நடத்த வருகிறவர்களுக்கு வழிகாட்டவும், நிதி உதவி, மூலப் பொருள் போன்றவைகளை எப்படிப் பெறலாம் என்பதற்கும் ஆலோசனை சொல்லவும் நாம் இந்த மையங்களை ஏற்படுத்தி இருக்கிறோம். எனவே, இதிலே இத்தனை தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்று உத்தரவிடுவது தொழில் வளர்ச்சியிலே உதவிகரமான பணியை மேற்கொண்டதாக அரசு கருதத் தயாராக இல்லை. அதை விட தொழில் நடத்தக்கூடியவர்களுக்கு இருக்கக்கூடிய சிரமங்களை களைந்து விரைவாக அவர்கள் தொழில் தொடங்க வாய்ப்புகளை ஏற்படுத்துவதுதான் அரசினுடைய முக்கியமான நோக்கம். அந்த அடிப்படையில் மாவட்டத் தொழில் மையம் ஏற்பட்ட பிறகு இராமநாதபுரம் மாவட்டத்தில் கிட்டத்தட்ட ரூ. 53,46,000 அங்கே உள்ள வங்கிகளின் மூலமாகக் கடன் வழங்கப்பட்டு இருக்கிறது. நான் சொல்வது சிறுதொழில் சம்பந்தப்பட்டவைகள், ரூ. 10 இலட்சத்திற்கு மிகைப்படாதது. ஆன்சிலரி யூனிட்ஸுக்கு ரூ. 15 இலட்சம். அது தவிர, பெரிய நடுத்தர தொழில்களுக்கு, அரசு தனியாக திட்டமிட்டு வருகிறது. சிறு தொழில்களைப் பொறுத்த வரை, ரூ. 47 இலட்சம் இந்த ஆண்டு வங்கிகளின் மூலமாக இராமநாதபுரத்திலே கொடுத்திருக்கிறார்கள் என்று நான் குறிப்பிடும்போது நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பது தெரிய வருகிறது.

அவர் முதலாவது கேட்ட கேள்வி, மாவட்டத் தொழில் மையம் முகவை மாவட்டத்திலே இருக்க வேண்டுமென்பது. ஏற்கெனவே அரசு அறிவித்து இருக்கிறது, முகவை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும் என்று. மாவட்டம் பிரிக்கப்பட்டு தலைநகர் தேர்வு செய்யப்பட்ட உடனே மதுரையிலே இருக்கிற மையம் புதிய மாவட்டத்திற்கு மாற்றப்படும், புதுக் கட்டிடங்கள் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது, இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறு தொழில்கள் நடத்த ரூ. 47 இலட்சம் கடனை வங்கிகள் கொடுத்திருக்கின்றன என்றார்கள். ஆகவே, ஒவ்வொரு மாவட்டம் பற்றிய விவரங்கள் அமைச்சரிடம் இருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே, கன்னியாகுமரியிலே எத்தனை தொழில்களுக்கு வங்கிகளிடமிருந்து எவ்வளவு பணம் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறுவார்களா?

அதோடு, சாதாரணமாக, மாவட்ட மைய அதிகாரிகள் சிறு தொழில்களுக்குப் பணம் வழங்க வேண்டுமென்று வங்கிகளுக்குச் சிபாரிசு செய்தாலும், வங்கிகள் கொடுப்பதாக இல்லை. ஆகவே, தொழில்கள் வளர வாய்ப்பில்லாமல் இருக்கிறது. அந்தச் சிக்கலை மாற்ற மைய அரசோடு தொடர்பு கொண்டு மையங்களிலேயிருந்து சிபாரிசு செய்தால், அவர்களுக்குக் கடன் வழங்க வேண்டுமென்ற வகையில் நடவடிக்கை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத் தொழில் மையம் மூலமாக வந்த **மனுக்களை பரிசீலனை** செய்து ரூ. **3,84,000 நிதி** உதவி கொடுக்க வேண்டுமென்று நாம் சிபாரிசு செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதைப் போல், சில வங்கிகள் மாவட்டத் தொழில் மையம் சிபாரிசு செய்தும் கூட உரிய காலத்திலே நிதி உதவி தராமல் இருக்கலாம். அதற்கான வாய்ப்புகள் இருக்கக்கூடும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆனால், குறிப்பிட்ட மாவட்டத் தொழில் மையத்தில் இருக்கக்கூடிய மேலாளர்—மானேஜர் பார் க்ரெடிட்—மாவட்டத்தில் இருக்கக் கூடிய முக்கியமான வங்கியின் சார்பாகப் பணியாற்றுகிறார். அவரே சிபாரிசு செய்து சொல்லியும் கூட, அந்தக் குறிப்பிட்ட மனுக்களின் மீது வங்கிகள் கடன் தரவில்லை என்ற நிலைமை அரசுக்குத் தெரிய வருமானால், நிச்சயமாக அதன்மீது நடவடிக்கை எடுக்க வாய்ப்பிருக்கிறது. காரணம், மைய அரசின் தொழில் அமைச்சர் ஜார்ஜ் பெர்னான்டஸ் அவர்களோடு டெல்லியிலே பேசும்போது அந்த உடன்பாட்டிற்கு ரிசர்வ் வங்கி ஒத்துக் கொண்டிருக்கிறது. பொது மேலாளர், அவருக்கு மேலே பணியாற்றக் கூடிய, மேலாளர் (கடன்), இந்தத் தொழிலை ஏற்படுத்தலாம், அதற்கு இன்ன வசதிகள் அங்கு கிடைக்குமா, அந்தத் தொழிலை ஏற்படுத்தினால் நல்லமுறையில் நடக்குமா என்பதைப் பார்த்து சிபாரிசு செய்கிறார். அவர் சிபாரிசு செய்த பிறகும் வங்கிகள் தரவில்லையென்றால், தேசீய நோக்கம் இல்லாமல், அந்தத் திட்டத்தின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் தவறாகச் செயல்படுகின்றன என்று கருத இடம் இருக்கிறது. அப்படிப்பட்ட புகார்கள் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், பொது நன்மையைக் கருதி, நடவடிக்கை எடுக்க வாய்ப்பிருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **அமைச்சர் அவர்கள்** கேள்விக்கான பதிலைச் சுருக்கமாகச் சொல்ல **வேண்டும். ஒவ்வொரு துணைக் கேள்விக்கும் அதற்கான பதிலை நீளமாகச் சொல்லிக் கொண்டே** போனால், புதிய **துணைக் கேள்விகள் அதில் பிறக்கின்றன.**





திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவா அவர்களே, இந்த மாவட்ட தொழில் மையங்களில் தொழில்கள் ஆரம்பிக்கப்படும் என்ற முறையில் தனியார் துறைக்கு 10 லட்சம், 15 லட்சம் உதவி செய்து இந்தத் தொழிலை தனியார் துறை மூலம் ஆரம்பிப்பதைக் காட்டிலும், அரசு துறை மூலமே ஆரம்பிக்கப்படுமா ? பொதுப் பணித்துறையின் வேலைகளைக் கூட இன்றைக்கு அரசே எடுத்து காண்டிராக்ட் வேலைகளை அரசே செய்யக்கூடிய நிலை இருக்கிறது. ஆக இந்த சிறு தொழில்கள் என்பது—ரூ. 10 லட்சம், 15 லட்சம் என்பதும் சிறு தொகையல்ல, அப்படி அரசு துறை மூலமே இவைகள் ஆரம்பிக்கப்படுமா, அப்படி ஆரம்பிக்கப்படக் கூடிய தொழில்களை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பழனிவேல் அவர்கள் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகக் கூடாது. ஒரு துணைக் கேள்விதான் இனிமேல் நான் அனுமதிக்கப் போகிறேன். தயவு செய்து உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பொறுப்பேற்று நடத்துகின்ற பல்வேறு நிறுவனங்களில் இருக்கக்கூடிய குறைபாடுகளைக் களைந்து அதனை மாற்றியமைக்கும் வேலைகளில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே, தனிப்பட்ட முறையில் தொழில் செய்ய வருகிறவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தோடுதான் அரசு செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் **437, 438, 439** மூன்றும் அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## (2). தகவல் கோரல்.

### மதுரை, திருப்பரங்குன்றம் காவல் நிலையத்தில் ஓர் வழக்கறிஞர் தாக்கப்பெற்றது பற்றிய விசாரணை குறித்து.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் சம்பவம் சம்பந்தமாக நேற்று மின்சாரத்துறை அமைச்சர் ஒரு மூவர் கமிட்டி அமைக்கப்படும் என்று அறிவித்தார். அந்த கவர்ன்மெண்ட் டெஸிஷனை எதிர்க்கும் வகையில் நேற்று கோர்ட்டுகள் கூட நடைபெறவில்லை. அட்வகேட்டுகள் சேர்ந்து கோட்டையை நோக்கி இதற்கு எதிர்ப்புத்

[திரு. ரா. உமாநாத்] [1979 மார்ச் 16

தெரிவிக்க வந்து கொண்டிருக்கிறார்கள். இது அவ்வளவு சீரியஸாக இருப்பதனால்தான், 42-வது விதியின் கீழ் இன்றைக்கும் எடுக்க வேண்டும் என்று கோரினேன்.

"The Government is seized of the matter."

ஆகையினால் அதை இப்பொழுதே எடுத்துக் கொண்டால் நல்லதாக இருக்கும்.

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திருப்பரங்குன்றம் விவகாரங்களை தீர்ப்பது குறித்து தமிழ்நாடு பார கவுன்சில், தமிழ்நாடு அரசு ஒரு நீதிபதியைப் போட வேண்டும் என்று என்னையும், நண்பர் மார்க்கபந்து அவர்களையும் தமிழ்நாடு வழக்கறிஞர் சங்கத்தின் உறுப்பினர் என்ற முறையில், எங்களை அரசிடம் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். நாங்கள் தெரியப்படுத்தியதன் பேரில் அரசும் இந்தக் கமிட்டியை அமைப்பதாக அறிவித்தது. இதை தமிழ்நாடு பார் கவுன்சிலிலும் ஒத்துக் கொண்டார்கள். பார் அசோசியேஷனும் இதை வரவேற்று இருக்கிறார்கள். இன்றைக்கு அட்வகேட் அசோசியேஷன் என்றும், அதில் ஒன்றிரண்டு பேர் இங்கே ஊர்வலமாக வருவதாக நாங்கள் அறிகிறோம். அங்கே நேற்றைய தினமே, மதுரையிலேயே சம்பவம் நடைபெற்றபோது பார் கவுன்சிலின் தலைவர் அங்கே இருந்திருக்கிறார். அவரும் ஏற்றுக் கொண்டார். பார் கவுன்சிலும் ஏற்றுக் கொண்டது, பார் அசோசியேஷனும் ஏற்றுக் கொண்டார்கள். ஆகவே இந்தப் பிரச்னையில் எந்தவிதமான தீர்மானமும் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்த டிஸ்ப்யூட்டைப் பொறுத்தவரையில், he is going into the details and canvassing favour and **I can** canvass against it.

Mr. Speacker : He is not canvassing. அவர் எதையும் கான்வாஸ் செய்யவில்லை. அவர் உரிமை, அதனால் பேசினார். இதுபோல் பல பிரச்னைகளைப் பற்றி நாம் ஏற்கெனவே பேசியிருக்கிறோம்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, அவர் உரிமையை நான் மறுக்கவில்லை. அந்த உரிமை எனக்கும் வேண்டும் என்றுதான் கேட்கிறேன். ஓரிரண்டு வக்கீல்கள்தான் வருகிறார்கள் என்று சொல்வது தவறு. That is the **worst provocation.**



1979 மார்ச் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி நீங்கள் சொல்வதை சொல்லிவிட்டீர்கள், அவர் சொல்வதை சொல்லிவிட்டார். எது உண்மை என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறட்டும்.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, நானும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி பேசவில்லை. அவர் பாயின்ட் ஆப் ஆர்டர் தான் ரெயிஸ் பண்ணுகிறார். அதனால் இதற்கு அமைச்சர் பதிலளித்த பிறகு, அதை எடுத்துக் கொள்ளலாம்.

[முற்பகல் 10—20.]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தப் பிரச்னை சம்பந்தமாக இந்த அவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கும் அரசின் சார்பில் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு நேற்றைய தினம் இந்த மன்றத்தில் அது சம்பந்தமாக கவன ஈர்ப்புத் தீர்மானமாகவும் கொண்டுவரப்பட்டு, அரசும் 3 நபர் கொண்ட குழு ஒன்றை நியமிக்க முடிவு எடுத்து அறிவித்து இருக்கிறது. இந்த மன்றத்தில் அது திரும்பத் திரும்ப வந்து இருக்கிற பிரச்னை என்பதாலும், இது மீண்டும் ஒத்திவைப்புத் தீர்மானமாக வர வேண்டுமா என்பதைப் பற்றி நீங்கள் முடிவு எடுக்க வேண்டும். நான் சொல்லவிரும்புவது, வழக்கறிஞர்களையும் கலந்து கொண்டு, அரசு அவர்களது உடன்பாட்டிற்குப் பிறகு முடிவு எடுத்து அந்த போர்ட் ஆப் என்கொயரி அமைத்து, அந்தப் பிரச்னையை முடித்து வைத்து இருக்கிறோம். மாண்புமிகு உமாநாத் அவர்களும், மற்றவர்களும் இந்த அரசு எந்த அளவிற்கு அந்தப் பிரச்னையில் வந்து இருக்கிறது என்பதை உணர்ந்து, அவர்களும் அந்தப் பிரச்னை மீண்டும் எழாமல் இருப்பதற்கு முழு ஒத்துழைப்பைத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில் ஓரளவிற்கு முடிவு ஏற்பட்டு சுமூகமான சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதை தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, நேற்று அமைச்சர் விளக்கம் கொடுத்தார்கள். இன்று பத்திரிக்கையில் வந்த செய்தியிலிருந்து தெரிகிறது, அந்த பார் கவுன்சில் அந்த போர்ட் ஆப் என்கொயரியை ஒப்புக் கொள்ளவில்லை என்று. நேற்று கூட அமைச்சர் சொன்னார், 'இன் கன்சல்டேஷன் வித் தெம்' என்று. ஆகவே, அவர்களைத் திருப்திப் படுத்துவதற்காக அந்த பார் கவுன்சில், பார் அஸோ

சியேஷன், அட்வகேட் அஸ்ஸோசியேஷன் நிர்வாகிகளைக் கூப்பிட்டுப் பேசினால் ஒரு சுமுகமான முடிவிற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்தக் காரியத்தை அமைச்சர் செய்வார்களா ?

திரு. ரா. கிருஷ்ணன் : அட்வகேட் அஸ்ஸோசியேஷன் என்ன சொல்கிறார்கள் என்றால் போலீஸ் தரப்பில் அந்தக் கமிட்டியில் இருக்கிறார்கள், ஆகவே, அவர்கள் அதை விரும்பவில்லை. அதை மாற்றி அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, இங்கே நண்பர் சாதிக் பாட்சா அவர்கள் சொல்லும்போது, தமிழ் நாட்டு பார் கவுன்சில், பார் அஸ்ஸோசியேஷன் ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொன்னார்கள். தமிழ் நாடு பார் கவுன்சில் ஒப்புக் கொண்டார்கள். அரசு சொன்னதை ஏற்றுக் கொண்டார்கள். மெட்ராஸ் அஸ்ஸோசியேஷன் நேற்றைய தினம் அரசு நியமித்த அந்தக் குழுவை ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் அந்த பாய்க்காட்டில் கலந்து கொள்ளவில்லை. மெட்ராஸ் பார் அஸ்ஸோசியேஷனை சேர்ந்தவர்கள்தான் ஓரிருவர் அந்தப் போராட்டத்தை நடத்துகிறார்கள். . . .

திரு. ரா. உமாநாத் : உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்கள் அந்த அட்வகேட் அஸ்ஸோசியேஷனைச் சேர்ந்தவர்கள் ஓரிருவர் தான் இதைச் செய்கிறார்கள் என்று சொல்வதை நான் மறுக்கிறேன். அது மட்டும் அல்ல. இங்கே அமைச்சர் அவர்கள் ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்கிறபோது ஓரிருவர் தான் அதில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்று சொன்னால் it will actually provoke hundreds to come back. இன்று கோர்ட் எதுவும் நடக்காது என்று நிலைமை இருக்கிறபோது ஓரிருவர் இருந்தால் எப்படி கோர்ட் க்ளோஸ் செய்து இருப்பார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதிலே ஓரிருவர் இருந்தால் கூட அவர்கள் சம்மதத்தையும் பெற்று சுமுகமாக முடிக்க வேண்டும் என்பது நம்முடைய நோக்கமாக இருக்கிறதே தவிர அவர்களை அலட்சியப் படுத்துவதாக நிச்சயமாகக் கருதக்கூடாது. அதைப் பிரச்னையாக எடுத்துக் கொள்ளவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே பிரச்னை கிளப்பப்பட்டு அறிக்கை கொடுக்கப்பட்ட பிறகு அந்த அடிப்படையில் ஒரு நல்ல சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. அந்த போர்ட் ஆப் என்கொயரியில் நாம் போட்டு இருப்பது ஒரு நீதிபதி, ஒரு வழக்கறிஞர் சங்கத்தைச் சேர்ந்தவர், ஒரு காவல் துறை





யைச் சேர்ந்தவர் இருக்கிறார்கள். எல்லோரும் சேர்ந்தே என்ன நடந்தது என்பதைப் பற்றி ஆராய்ந்து தெரிவிக்கிற கருத்தின் அடிப்படையில் அரசாங்கம் பாரபட்சம் எதுவும் இல்லாமல் அந்த அறிக்கையின் பேரில் நடவடிக்கை எடுக்கும் என்பதை உறுதியாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. ஜே. ஜேம்ஸ் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜேம்ஸ், இந்தப் பிரச்னை மீது வேண்டாம். இது விஷயம் என் ஆய்வில் இருக்கிறது. எல்லோரும் இதன் மீது கருத்து சொன்னால் பிரச்னை முடிவு அற்ற நிலைக்குப் போய்விடும். இதையொட்டி ஒழுங்குப் பிரச்னை என்று எழுப்பி, அதைப்பற்றி பேசினால், நம்முடைய மரபும் கெட்டு விடும். தயவு செய்து உட்காருங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அவர்கள் சொல்லாத கருத்துக்களைச் சொல்கிறேன். பார் கவுன்சில் ஏற்றுக் கொண்டது. அட்வகேட்ஸ் சங்கம் ஒப்புக் கொண்டார்கள் என்று திரு. பாண்டியன் அவர்கள் சொன்னார்கள். இன்று இருக்கும் நிலை என்னவென்றால் உயர் நீதி மன்றத்தில் வழக்கறிஞர்கள் கோர்ட்டை பாய்காட் செய்கிறார்கள். தமிழ் நாடு முழுவதும் வழக்கறிஞர்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜேம்ஸ் இன்றைக்கு பாய்காட் செய்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். நாம் 10—20 மணிக்கு அதுகுறித்து பேசிக்கொண்டு இருக்கிறோம்.

நாமே அதற்குக் காரணமாக இருந்து விடக் கூடாது. பிறகு நிலைமையைப் பார்த்துக் கொண்டு நாளைக்கு வேண்டுமானால் பரிசீலிக்கலாம்.

## (3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

### வெள்ளக்கோவில், வேலகவுண்டன்பாளையம் அரிசனக் காலனி தாக்கப் பெற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோவை மாவட்டம், வெள்ளக்கோவில் அருகே வேலகவுண்டன்பாளையத்தில் 12—3—79 அன்று அரிசனக் காலனியை சிலர் கோஷ்டியாகச் சென்று மிகவும் மூர்க்கத்தனமாகத் தாக்கிய காரணத்தினாலும் வீடுகள் இடிக்கப்பட்டு, கூரைகள் பிரித்து எறியப்பட்டு அரிசன பொது மக்களுக்கு அடி உதை ஏற்பட்டு பொருள்கள் சேதம் அடைந்த காரணத்தாலும் அப்பகுதியில் ஏற்பட்ட பதட்ட நிலையைக் குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டு திருவாளர்கள் எஸ். என்.

பழனிச்சாமி, ஆ.நடராசன், நன்னிலம் மணிமாறன் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. சொ.ந. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே கோவை மாவட்டம், வெள்ளக்கோவில் அருகே வேலகவுண்டன் பாளையத்தில் அரிசனக் காலனியை சிலர் தாக்கியிருக்கிறார்கள். அதைப் பற்றி நான் இந்த மன்றத்தில் ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுத்திருக்கிறேன். இதுபோன்ற சம்பவங்கள் தமிழகத்தில் பரவலாக ஏற்பட்டு வருகின்றன. இந்தச் சம்பவங்கள் எல்லாம் ஏன் ஏற்படுகின்றன என்பதுதான் இங்குள்ள பிரச்சினை. இதுபோன்ற சம்பவங்கள் இனிமேல் ஏற்பட விடக்கூடாது என்று நான் அரசை மிகவும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அதற்காக இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

திரு, மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் வெள்ளக்கோவில் அருகே வேலகவுண்டன் பாளையத்தில் நடந்த இந்தச் சம்பவம் தமிழ்நாட்டினுடைய துர்பாக்கியமான நிலை என்று சொல்லிவிட முடியாது. இந்த மாதிரிச் சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. தொடர்ந்து தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த மாதிரி பாதிக்கப்பட்டு வருகிறார்கள். ஆனால், யார் பாதிக்கப்பட்டவர்களோ அவர்கள் மீதே அரசு குற்றம் சுமத்தி வருகிறது. நான் விழுப்புரம் சம்பவத்தை இப்போது சுட்டிக்காட்டவில்லை; சென்னை மாநகரத்தில் தாழ்த்தப்பட்டவர்களின் பிணத்தை வெளியே இழுத்துப் போட்டதை நாம் அறிவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வெள்ளக்கோயிலுக்குப் போங்கள், விழுப்புரத்திற்கும் மற்ற இடங்களுக்கும் போகாதீர்கள்.

திரு. மா. மணிமாறன் : இந்த ஆட்சியில் நடந்த வேதனையின் சின்னமான நிகழ்ச்சிகளைப் பற்றி எடுத்துக் கூறினேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள் இது ஒத்திவைப்புத் தீர்மானம் என்பதை அறிந்து பேசவேண்டும். வெள்ளக்கோவில் சம்பவத்தைப் பற்றி மட்டும் பேசுங்கள்.



திரு. மா. மணிமாறன் : வெள்ளக் கோவிலில் வேதனை
யான சம்பவம் நடந்திருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு
குடியிருப்பு மனைகள் அவர்கள் இருக்கக்கூடிய பகுதியிலேயே
கொடுக்காததன் காரணமாக அவர்கள் எடுத்த முயற்சியைத்
தடுக்கின்ற நேரத்தில் அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.
தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்று பாதுகாப்பு இல்லை. தாக்கப்
பட்டவர்கள் புகார் கொடுக்கச் செல்லுகின்றநேரத்தில் அவர்களே
கைது செய்யப்படுகின்ற நிலைமைகள் ஏற்பட்டு வருகின்றன.
பாராளுமன்ற உறுப்பினர் திரு. முருகையன் கொலை செய்யப்
பட்டதற்கு அவருடைய உறவினரே கைது செய்யப்பட்டிருக்கி
றார்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர்
அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாழ்த்தப்பட்
டோர் நல மானியத்தில் நிறையப் பேசுவதற்கு அவருடைய
கட்சியிலிருந்து நேரம் ஒதுக்கித்தந்தால் நிறையப் பேசலாம்..
வெள்ளக்கோவிலில் நடந்த சம்பவத்தைப் பொறுத்து அரசாங்கத்
திடம் சில தகவல்கள் இருக்கின்றன. உறுப்பினர் அவர்களுக்கு
ஏதாவது தகவல்கள் தெரிந்திருக்குமானால் அதைப் பற்றிக் கூறு
வார்களானால் அது மன்றத்திற்கு ஏற்றதாக இருக்கும்.

திரு. மா. மணிமாறன் : வெள்ளக்கோவிலில் தாழ்த்தப்
பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு குடியிருப்பு மனைப்
பட்டா கொடுக்க வேண்டும். சாதி இந்துக்கள் அவர்களை
தாக்குவதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இப்படிப்பட்ட
நிலை அதிகமாக ஏற்பட்டு வரும் காரணத்தால் இதுபற்றி
விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தப் பிரச்சினையிலே ஒத்திவைப்புத் தீர்மானம்
கொண்டு வந்தவர்கள் இதிலே எந்தவிதமான பொதுமுக்கியத்து
வம் இருக்கிறது என்பதை நிரூபிக்கவில்லை என்பதை அவர்கள்
பேசியதிலிருந்தே உணரமுடிகிறது. மாண்புமிகு மணிமாறன்
அவர்கள் பேசுகிறபோது இந்த அரசு பற்றி பொதுவாகக் குறை
சொல்ல வேண்டுமென்றவிதத்தில் பேசினார்கள்.

[முற்பகல் 10-30]

நான் அவர்களுக்கும், அவர்கள் மூலம் இந்த அவைக்கும்
ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது ஒரு அரசு வந்து
இன்னொரு அரசு போனதால் ஏற்பட்ட பிரச்சினை அல்ல. இந்
தப் பிரச்சினை சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற மக்க

ளின் ஒரு பிரச்சினை என்பதையும், அத்தனை அரசியல் கட்சிகளையும் சார்ந்தவர்கள் சேர்ந்துதான் இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்பதையும் இதை ஒரு தேசியப் பிரச்சினையாக அதாவது நேஷனல் ப்ராப்ளம் என்று சொல்வார்களே அதுபோன்று அணுகவேண்டி உள்ளது என்பதையும் நான் முதலிலே தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கோவை மாவட்டத்தில் வெள்ளக்கோயிலுக்கு அருகில் வேலக் கவுண்டன் பாளையம் என்ற ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊரிலே பழனி என்ற அரிசன் ஒருவர் வசித்து வருகிறார். அவர் தனது வீட்டிலே உள்ள கழிவுப் பொருட்களை எல்லாம் போட்டு ஒரு உரக்குப்பை சேர்த்து வைத்திருந்தார். அதை அவர் வெள்ளக் கோவிலில் உள்ளவர்களுக்கு விற்றுவிட்டார். அந்த உரத்தை நீ ஏன் வெள்ளக்கோயிலிலே உள்ளவருக்கு விற்றாய் என்று அந்தக் காலனியின் உள்ளடங்கிய கிராமத்தைச் சேர்ந்தவர்கள் குறிப்பாக சடையப்ப கவுண்டரும் இன்னும் சிலரும் அவரைத் திட்டியிருக்கிறார்கள். உரத்தை நீ எப்படி வெளியூரிலே உள்ளவர்களுக்கு விற்கலாம் எங்களுக்கு விற்காமல் என்று கேட்டு திட்டியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் வெள்ளக் கோவிலைச் சேர்ந்த அரிசன காலனியைச சேர்ந்தவர்கள் வெள்ளக்கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளனர். அந்தப் புகார் கொடுத்ததற்குப் பிறகு மீண்டும் இந்தக் வேலக் கவுண்டன்—பாளையத்தைச் சேர்ந்தவர்கள் 8 பேர் அதாவது நல்லசாமி கவுண்டர், பழனிசாமிக் கவுண்டர், துரைசாமிக் கவுண்டர், அப்பாச்சி கவுண்டர், சதாசிவக் கவுண்டர், ராமசாமி, கோவிந்தசாமி, கருப்பண்ணக் கவுண்டர் ஆகிய 8 பேர்களும் இன்னும் சிலரும் சேர்ந்து அந்த அரிசனக் காலனிக்குச் சென்று ஆங்கே இருந்த ரேவதி என்ற ஒரு பெண்ணையும் மற்றும் மூன்று பேர்களையும் தாக்கி இருக்கிறார்கள். குடிசைகள் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, தாக்கப்பட்டவர்கள் மீண்டும் வெள்ளக் கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அந்த வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

அதற்குப் பிறகு இந்த உரத்தை விற்ற பழனி என்பவரை துரைசாமி கவுண்டர் என்பவர் வெள்ளக் கோவிலில் உள்ள ஒரு தியேட்டர் சமீபத்தில் அவருடைய ஜாதிப் பெயரைச் சொல்லி எங்களது ஆட்களை வைத்து உங்களை ஒழித்துக் கட்டுவேன் என்று கூறியதாக அந்தப் பழனி என்பவர் 13—3—1979 அன்று வெள்ளக்கோவில் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்துள்ளார். ஆக மொத்தம் 3 புகார்கள் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மூன்றிலும் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. வழக்கு ஆய்வில் இருந்து வருகிறது. இதிலே அடிப்படைப் பிரச்சினை என்னவென்றால் ஒரு தாழ்த்தப்பட்ட குடிமகன் தான் சேர்த்து வைத்திருக்கின்ற உரத்தைக்கூட வேறு யாருக்கும் விற்பதோ அல்லது விற்காமல் இருப்பதோ விவாதத்



இருக்கிறது என்று சொல்லுகிறபோது
திற்குரிய பிரச்சினையாக
உண்மையிலேயே இந்தப் பிரச்சினையிலே எவ்வளவு கவனம்
செலுத்த வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம் என்பதையும்
அந்த அளவிற்கு இந்தத் தீர்மானம் இந்த அவைக்கு பயன்
பட்டது என்பதையும் கூறி இந்தப் பிரச்சினை குறித்து அவையை
ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டியது இல்லை என்று கூறிக்
கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு மின்சாரத்
துறை அமைச்சரவாகளின் விளக்கத்திற்குப் பிறகு அவையின்
இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை
என்பதால் அனுமதி மறுக்கப்படுகிறது.

## (4) கவன ஈர்ப்புகள்.

### (அ) அரியலூர் கலைக் கல்லூரியினரும் மாணவர்களும் சமூக விரோதிகளால் தாக்கப்பெற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; சட்டமன்றப் பேரவை
உறுப்பினர்கள் திருவாளர்கள் ஆர். ஜெபமணி, பொ. விஜய
ராகவன், டி. ஆறுமுகம் ஆகியோர்கள் அவசரப் பொதுமுக்கியத்
துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வியமைச்சர்
அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. பொ.
விஜயராகவன் அவர்கள் இதனை முன் மொழிவார்கள்.

திரு. பொ. விஜயராகவன் : பேரவைத் தலைவரவர்களே,
"சமூக விரோதிகளால் அரியலூர் கலைக் கல்லூரி மாணவர்
பேரவைத் தலைவரும், மாணவர்களும் தாக்கப்பட்டும், கல்லூரி
முதல்வர் மிரட்டப்பட்டும் உள்ளதால், கல்லூரி செயல்பட
முடியாமல் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த',
அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை
மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத தலைவ
வரவர்களே,
இது குறித்துக் கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்து ஒரு
அறிக்கை பெறப்பட்டது. அந்த அறிக்கையிலிருந்து அறியப்
படுவதாவது :—கடந்த 2—3—1979 அன்று பிற்பகல் 3 மணி
அளவில் மாணவர்கள் இருவராலும் வெளியார் ஒருவராலும்

[திரு. செ. அரங்கநாயகம்] [1979 மார்ச் 16

இக்கல்லூரி மாணவப் பேரவைத் தலைவர் தாக்கப்பட்டார். இச்சம்பவம் குறித்து ஆய்ந்தறிய ஆசிரியர் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக்குழுவின் புலனாய்வின் முடிவில், தாக்கிய இரு மாணவர்களும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டுள்ளனர். கல்லூரி மாணவத் தலைவர் இம்முடிவிற்கு இணங்கியுள்ளார்.

. இச்சம்பவத்தில் ஈடுபட்ட வெளிநபர் குறித்துத் தக்க நடவடிக்கை எடுக்கக் கல்லூரியால் இயலாததால் காவல்துறைக்குப் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. இப்புகார் குறித்துக் காவல் துறை அலுவலர்கள் ஆய்ந்து வருகின்றனர்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. பொ. விஜயராகவன் : இந்தக் கல்லூரி மாணவர் தலைவரை வெளியார் தாக்கியிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள்மீது காவல் துறையினரிடம் புகார் கொடுத்திருப்பதாகவும் சொன்னார்கள். அப்படிக் கொடுத்த புகார் மீது காவல் துறையினர் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதற்கு ஏதாவது தகவல் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதை ஆய்ந்து வருவதாக தகவல் கிடைத்திருக்கிறது.

திரு. ந. ஆறுமுகம் : அரியலூர் அரசினர் கலைக் கல்லூரி மாணவர் தலைவர் ராஜேந்திரனைத் தாக்கியவர்கள் வெளியார் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த வெளியார் ஆளும் கட்சியைச் சார்ந்தவர். ஆகவே அங்குள்ள காவல் துறை அதிகாரிகள் அவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே அரசாங்கம் அவரை உடனடியாக கைது செய்து அவருக்கு தண்டனை கொடுக்க முன்வருமா என்பதைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர் எந்தக் கட்சியாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும். காவல் துறைக்கு புகார் தரப்பட்டு அந்தப் புகார்மீது காவல்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது என்றுதான் பதில் கூறினேன்.

(ஆ) கிழக்கு இராமநாதபுரம், உள்ளாட்சித் துறை பணியாளர்களுக்கு 'அடடா' வழங்காமல் இருப்பது குறித்து.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, ''புயலால் பாதிக்கப்பட்ட கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு 'அடடா' வழங்கியும், உள்ளாட்சித் துறைப் பணியாளர்களுக்கு வழங்காமலும் இருப்பதால், அவர்கள் சென்னை தலைமைச் செயலகம் முன்பு உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.



1979 மார்ச் 16] [திரு. செ. சிவசாமி]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கட்டாய சேமிப்பு நிதியை திருப்பி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவு கிழக்கு முகவை மாவட்டத்தில் பணி புரியும் அலுவலர்களுக்கு மட்டும் பயனளிப்பதால், புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவிக்கப்பட்ட மாவட்ட முழுமைக்கும் இவ்வுத்தரவினைச் செயல்படுத்த தகுந்த ஆணை பிறபிக்குமாறு மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார். மாவட்ட ஆட்சியரின் கருத்துரு நிதித்துறைக்கு இத்துறையின் பரிந்துரையுடன் வருவாய்த் துறை மூலமாக தக்க மேல்நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது. மேலும் சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் ஆசிரியர் மேற்கொண்ட உண்ணாவிரதம் அரசின் மறு உத்தரவை எதிர்நோக்கி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

திரு. செ. சிவசாமி : இந்தப் பணம் அவர்களின் சொந்தப் பணம். அவர்களின் சொந்தப் பணத்தை ஏற்கனவே இருந்த அரசாங்கம் வலுக்கட்டாயமாகப் பிடுங்கி, வலுக்கட்டாயமாக அவர்கள் கையிலிருந்து பிடுங்கிக் கொண்ட அந்தப் பணத்தைத் திருப்பிக் கேட்கிறார்கள் அவர்கள். அந்தப் பணத்தைக் கொடுப்பதற்குக்கூட அரசு இந்த அளவிற்கு தாமதப்படுத்திக் கொண்டு வருகிறது. ஏற்கனவே தேர்தல் காலத்தில் மத்திய அரசும் சரி, மாநில அரசும் சரி மக்களிடம் சொல்லும்போது நிச்சயமாக உபாத்தியாயர்களுக்கு ஏற்படக்கூடிய இந்த நிலையைப் போக்கி, அவர்களுக்கு நிச்சயமாக இந்த ரூபாயை வாங்கிக் கொடுப்போம் என்று உறுதி சொன்னார்கள். அப்படி உறுதியளித்ததற்குப் பிறகும்கூட அவர்களிடமிருந்து வாங்கிய ரூபாயைத் திருப்பிக் கொடுக்க காலதாமதம் ஏற்படுகிறது. மத்திய அரசு உத்தரவிட்டாலும் மாநில அரசு சரியானபடி செயல்படாத காரணத்தால் இன்றைக்கு ஒரு பகுதியினர் வாங்கியும் ஒரு பகுதியினர் வாங்காமலும் இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. உதாரணமாக ஒரு உபாத்தியாயர் இந்தப் பணத்தைத் திருப்பி வாங்குவதில் உள்ள கஷ்டத்தைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். 23—3—1978-ல் அப்ளிகேஷன் போட்டு இன்னும் பணம்கிடைக்கவில்லை. 7—3—1979-ல் அவர் சென்னைக்கு வருகிறார். வந்து அலுவலகத்திற்குச் சென்று கேட்கிறார் அதைப் பற்றி. என் பணம் என்னவாயிற்று என்று கேட்கிறார். கிட்டத்தட்ட ரூ.450-க்கு ரிக்கார்ட் இல்லை என்று சொல்கிறார்கள். அதைக்

கட்டியிருப்பதாக உபாத்தியாயர் சொல்கிறார். ரிக்கார்ட்ஸ் இல்லை என்று சொன்னால் நான் என்ன செய்வது என்று கேட்கிறார். நீங்கள் நேரடியாக மாநில கூட்டுறவு வங்கிக்குப் போனால் அங்கு ரிக்கார்ட் இருக்கிறது. அதை எடுத்துக் கொண்டு ஸ்டேட் பாங்க்கு போங்கள். அங்கு ரிக்கார்ட் இருக்கிறது. அதை எடுத்துக் கொண்டு வவுச்சருடன் வாருங்கள், அதை வைத்து பணம் இருந்தால் பணம் தருகிறேன் என்று சொல்லக் கூடிய அளவிற்கு நிலைமை மோசமாயிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ட்ரெயினிலிருந்து புறப்பட்டது முதற்கொண்டு வரிசையாகச் சொல்கிறீர்கள். சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. செ. சிவசாமி : அவர்களுக்குள்ள கஷ்டத்தைப் பற்றிச் சொல்கிறேன்.

[முற்பகல் 10-40].

அந்த உபாத்தியார்களுக்கு உதவி செய்யும் முறையில் அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும், அதற்கான நடவடிக்கைகளை வேகமாக எடுக்க அரசு ஏற்பாடு செய்ய முடியுமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இந்த ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

## (5) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ் நாடு, 1978 ஆம் ஆண்டு நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1978-ஆம் ஆண்டு நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு*(சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 26/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

*திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டுவந்திருக்கின்ற இந்த மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல விழைகிறேன். பொது இடங்களில் எல்லாம் ஆபாச

** 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு 31ஆம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



நடனங்கள் நடைபெறுகிறது என்ற செய்தி அரசுக்கு வந்திருக்கிறது. அதை தடுப்பதற்கு ஒரு திட்டம் தேவை. அந்தத் திட்டத்திற்கு ஒரு சட்டம் தேவை, அந்தச் சட்டத்திற்கு ஒரு திருத்தம் தேவை. அந்த முறையில் இந்தத் திருத்தத்தை அமைச்சரவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். இதனுடைய நோக்கத்தை வரவேற்கிறேன். எனக்கு இதில் மாறுபட்ட கருத்துக்கள் கிடையாது. நாட்டில் ஆபாசம் கூடாது. ஆபாசக் காட்சி தென்படக்கூடாது. பண்பாடு இருக்கவேண்டும். ஒழுக்கம் இருக்க வேண்டும். சீலம் இருக்க வேண்டும். இவைகள் எல்லாம் மேலோங்கி இருப்பதற்கு தேவையான கட்டுப்பாடுகளை கொண்டு வருகின்ற இந்த அரசுக்கு வாழ்த்துக்கள் சொல்வதில் எனக்கு தயக்கமா ஏற்படப் போகிறது? We are going to appreciate you, I say. ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஆபாசத்தை நீக்கப் போகிறீர்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். பொது இடத்தில் நடனங்கள் என்ற பெயரில் நடப்பது ஆபாசம் என்று சொல்லுகிறீர்கள். ஆபாசம் என்று சொல்லுபவர்களும் இருக்கின்றார்கள். ஆபாசம் எங்கெல்லாம் இருக்கிறதோ அதையெல்லாம் தடுக்க வேண்டும் என்று சொல்லக் கூடும். ஆனால் இதில் எது ஆபாசம் எது ஆபாசமில்லை என்பதை கூர்ந்து பார்த்து ஒரு முடிவுக்கு வரவேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம். நான் இதைப்பற்றி சொல்லுவதால், சில பத்திரிகைகள் வேண்டுமென்றால், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் ஆபாசத்திற்கு ஆதரவாக இருக்கும் காப்ரே டான்ஸ், ரிக்கார்ட் டான்ஸ் இவைகள் எல்லாம் இருக்கவேண்டும் என்று பேசினான் என்று எட்டு காலத்தில் பத்திரிகைகளில் போடலாம். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆபாசம் என்று சொல்லும்போது, ஒருவர் கண்ணுக்கு ஆபாசம் என்று தோன்றலாம், மற்றொருவர் கண்ணுக்கு அதுவே கலையாகப் படலாம்......

திரு. எஸ். ஜே. இராமசாமி : நண்பர் துரைமுருகன் அவர்கள் பேசும் போது ரிக்கார்ட் டான்ஸ், காப்ரே டான்ஸ் இவைகளைப்பற்றி எல்லாம் சொன்னார்கள். அவர்கள் இதையெல்லாம் பார்த்திருக்கிறார்களா ?

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, திரு. எஸ். ஜே. இராமசாமி அவர்கள் காப்ரே நடனத்தைப் பார்த்தார்கள் என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பத்திரிகைகளில் வெளிவரும் என்று சொன்னீர்கள், பத்திரிகைகாரர்கள் எல்லாம் நல்லவர்கள்தான், நீங்கள் பேசியது தான் வரும்.

திரு. துரை முருகன் : இப்போது நான் பார்க்கவில்லை, ஆனால் . . .

திரு. எஸ். ஜே. இராமசாமி : இந்த வயதில் பார்க்காமல் எப்போது பார்க்கப்போகிறார், அதனால்தான் கேட்கிறேன்.

திரு. துரை முருகன் : நான் ஜப்பான் போன்ற நாடுகளுக்குப் போயருக்கிறேன். அங்கே * * போன்ற எல்லா டான்ஸ்களையும் பார்த்திருக்கிறேன் ஆனால் அங்கெல்லாம் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஜப்பான் போன்ற நாடுகளில் பார்த்திருக்கிறேன் என்றிருக்கட்டும், * * * டான்ஸ் எல்லாம் பார்த்திருக்கிறேன் என்று சொல்லியிருப்பது அவைக்குறிப்பில் இருக்க வேண்டாம். ஆகவே அந்த வார்த்தைகளை அவைகுறிப்பிலிருந்து நீக்கி விடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. துரை முருகன்: இப்படி எல்லாம் நீக்கிவிட்டால் எதுதான் இருக்கப்போகிறது என்று தெரியவில்லை. இருக்கட்டும் பல சிற்பங்களைப் பார்க்கிறோம். நமக்கு ஆபாசமாக தெரிகின்ற சிற்பங்கள், வெளி நாடுகளிலிருந்து வந்து பார்க்கின்றவர்களுக்கு கலை நிறைந்த வரலாற்றுச் சின்னங்களாக தெரிகின்றன. அஜெந்தா, எல்லோரா போன்ற இடங்களில் காணப்படும் சிற்பங்களில் இதைப் பார்க்கின்ற சிலர் ஆபாசமாக இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். ஆனால் மற்றவர்கள் இது கலை என்று சொல்லுகிறார்கள். தமிழ்நாட்டில் கூட ஆபாசம் என்று சொல்லப்படுகின்ற பல சிற்பங்களை சிலர் கலைஉணர்வோடுபார்க்கிறபோது அதில் எவ்வித ஆபாசமும் இருப்பதாகத் தெரிவதில்லை. அவர்களுக்கு அது கலையாக பரிமளிக்கின்றது. ஆகவே இதில் எதை ஆபாசம் என்று சொல்லப் போகிறீர்கள்? கொஞ்ச நாட்களுக்கு முன்னால் முத்தக் காட்சி ஆபாசம் என்று சொல்லப்பட்டது. பின்னால் மத்திய சர்க்கார் முத்தக் காட்சி இருக்கலாம் என்று சொன்னது, முத்தம் கொடுப்பது நமக்கு ஆபாசம், ஆனால் மத்திய சர்க்காரில் இருக்கும் மொரார்ஜிக்கு ஆபாசம் இல்லை, முத்தக் காட்சி இருந்தால் அதை நம்முடைய முதல்வர் கூட நானே அதை எதிர்த்து போராட்டம் நடத்துவேன் என்றார். ஆகவே இது தமிழ்நாட்டுக்கு ஆபாசமாக தெரிந்தது. டெல்லிக்கு இது கலை. ஆகவே காலத்தால் மாறுபடுகின்றது என்பதற்காகச் சொல்கிறேன். ஆனால் நான் கேட்கிறேன். 'வாட் இஸ் தி கிரைடீரியா?' அப்படிச் சொல்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





வதற்கு என்ன கிரைடீரியா வைத்திருக்கிறீர்கள்? யாரை வைத்து அளக்கப் போகிறீர்கள்? என்ன அளவுகோல் இருக்கிறது உங்களிடத்தில்? என்ன 'யார்ட்ஸ்டிக்' இருக்கிறது யாரை விட்டு அளக்க வேண்டும்? ஆகவே, ஒரு கிரைடீரியா வைத்துக் கொள்ள வேண்டாமா இது ஆபாசம் இது ஆபாசமில்லை என்பதை நீங்கள் எப்படி நிர்ணயிக்கப்போகிறீர்கள்? ஒன்றை நான் தெரிவித்துக் கொள்வேன், கேபரே நடனம் ஆடுவதை ஆபாசம் என்று சொல்கிறீர்கள். நடனம் என்பது பாட்டுக்கு ஏற்றவாறு ஆடுவது. அவன் பாடுகிறான், அதற்கு ஏற்றாற்போல் இவள் ஆடுகிறாள். இதுதான் ஆபாசம் என்கிறீர்கள். ஆனால், கேபரே டான்சில் அவன் டிரம் அடிக்கிறான்; அதற்குத் தகுந்தாற் போல் அவள் ஆடுகிறாள். இதில் எது ஆபாசம்? ஆனால் தெருக் கூத்திலே கூட அந்தத் தாளத்திற்கு ஏற்றாற்போல் ஆடுகிறார்கள். அது ஆபாசமா? தாளத்திற்கு ஏற்றாற்போலத்தானே ஆடுவாள்? தாளத்திற்கு ஏற்றாற்போல் பத்மா சுப்பிரமணியமோ கூட நடனம் ஆடவில்லை என்றால், அந்த நடனம் சோபிக்காது. தாளத்திற்கு தக்கபடி பாவனையோடு நடனம் ஆட வேண்டும். அந்த வகையிலே ஆடுவது எப்படி குற்றமாகும்? ஒரு காலத்தில் ஆபாசமாகக் கருதப்பட்ட ரவிவர்மா ஓவியம், காலப்போக்கிலே கலையாக மாறிவிட்டது. இன்றைக்கு கிறுக்குவதும் மாடர்ன் ஆர்ட்டாகிவிட்டது. ஆகவே பரதநாட்டியம் என்பது ஒரு கலை. கேபரே டான்ஸ் என்பது ஒரு கலை என்று அதை எடுத்துக் சொள்ள வேண்டியது தானே? அதிலே ஆபாசம் இருக்கிறது என்று எப்படி சொல்லுகிறீர்கள்? ஆபாசம் என்பது திடீர் என்று வந்துவிடவில்லை. ஆடை நெகிழ்கிறது? விடுகிறது அதிலே ஆபாசம் இருக்கிறது என்று சொன்னால், ஆடை முழுவதும் இருக்கிற காரணத்தினாலே ஆபாசம் இல்லை என்றாகி விடுமா? ஆடை நெகிழ்வதைத்தான் ஆபாசம் என்று கருதுகிறீர்களா? நல்ல உடை உடுத்தி ஒருத்தி மார்பை முன் உந்தி போட்டு பத்து ஆண்கள் முன்னால் நின்று 'இப்படி' என்றால் அது ஆபாசம் இல்லையா? ஆகவே, அதை ஆபாசம் என்று எடுத்துக்கொள்ளமுடியாது என்று சொல்லுவீர்களா?

காபரே டான்ஸ் ஆனாலும் சரி, தெருக்கூத்தானாலும் சரி, ரெக்கார்டு டான்ஸ் ஆனாலும் சரி, ஆக எதுவாக இருந்தாலும் அதிலே கலை நுணுக்கம் உண்டு என்று ஒப்புக் கொண்டால், ஆபாசம் என்று சொல்ல முடியாது. ஆனால் தெருக்களிலே இந்த நடனம் ஆடலாமா, வேண்டாமா என்பது வேறு. பாட்டுக்குத் தகுந்தமாதிரிதான் நடனம் ஆடவேண்டும். ஆனால் ஒட்டுமொத்தமாக இவைகளையெல்லாம் தள்ளப் போகிறீர்களா? யாரைக் கொண்டு தள்ளப்பார்க்கிறீர்கள்.?

ஆபாசம் என்பது இந்த நடனத்திலே மட்டும்தான் இருக்கிறதா? காலப் போக்கில் இந்த நடனம், பரதமாடுவது, குச்சிபுடி ஆடுவது, மணிபுரி, ஒடிசி என்று வந்து விட்டது. இவைகள்

எல்லாம் ஆபாசம் என்று சொல்லப் போகிறீர்களா? ஆனால், ஆபாசம் ரிக்கார்டு டான்ஸ் நடனத்தில் மட்டுமா இருக்கிறது? பாட்டில் இல்லையா? பாட்டிலே ஆபாசம் இருக்கிறது. ஆனால் அமைச்சர் அதற்குச் சட்டம் கொண்டுவரவில்லை. ஒருத்தி பாடுகிறாள் தலைவி தூங்குகிறாள் அவளை தலைவன் எழுப்புகிறான், பின்னர் ''நித்திரையை நீ கலைக்க, நீலவிழி நான் திறக்க முத்திரையை நீ பொறிக்க, முன்னூறு நாள் நான் சுமக்க என்ற இந்த பாட்டிலே ஆபாசம் தெரியவில்லையா? அந்த இதுக்கு எவிலுசனே சொல்கிறான் அதேபோல், ''பறிக்கவா, தொடுக்கவா என்றும் உன் இடையில் ஆடும் மாங்கனி என் கையில் ஆடாதோ'' என்ற பாட்டில் ஆபாசம் இல்லையா? மொத்தமாக இவைகள் எல்லாம் பாடலிலே இருக்கின்றது. இவைகள் எல்லாம் ஆபாசம் இல்லையா ? அமைச்சர் இதற்கு சட்டம் கொண்டு வந்தாரா?

இதுமட்டுமா, வாரப் பத்திரிகைகளிலே கதைகள் வருகின்றன. சகோதரியோடும், தாயோடும் சேர்ந்து படிக்க முடியாத அளவுக்கு ஆபாசமான கதைகள் வருகின்றன. இதை எப்படி தடுக்கப் போகிறீர்கள்? இன்னும் இதைப் போல் பல கதைகள் இருக்கின்றன. பரிசு பெற்ற ஒரு கதை இருக்கிறது. தன்னுடைய கணவன் எப்படி கொடுமைப் படுத்தினான் என்றும், அதைப் பொறுக்க முடியாமல் தன் தாலியைப் கழற்றி எறிந்துவிட்டு தான் கொண்ட காதலனோடு ஓடிவிட்டாள். இந்தக் கதை பரிசு பெற்றிருக்கிறதே, இது தமிழ்ப் பண்பாட்டில், தாலியைக் கழற்றி எறிந்து விட்டு, தான் கொண்ட கள்ள காதலனோடு ஓடிவிடுவது என்பதுதான் தமிழ்ப்பண்பா ? இதற்கு என்ன சட்டம். . ....

<u>மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:</u> தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு பேசிக்கொண்டிருக்கும்போது நான் குறுக்கிட விரும்பவில்லை. நெஞ்சில் ஒரு முள் என்ற நூலை டாக்டர் மு. வ. அவர்கள் எழுதியது அவருக்குத் தெரியுமா?

<u>திரு. துரை முருகன் :</u> அதைப்பற்றி நான் சொல்லவில்லை, நான் சொன்ன கதை வேறு. யார் அவ்வாறு எழுதியிருந்தாலும், நானே அப்படி எழுதியிருந்தாலும், தப்பு தப்புதான். அது ஆபாசம். இன்றைக்கு அப்படி கதைகள் வரக்கூடிய வாரப் பத்திரிகைகள் இருக்கின்றன. தடுக்க முடியவில்லை தன் கள்ளக் காதலனுக்கு பிறந்த குழந்தையை தன் கணவனுக்கே பிறந்தது போல் ஊருக்கும் உலகிற்கும் காட்டி வளர்க்கிறாள் அதுதான் ''நெஞ்சில் ஒரு முள்''.

காபரே டான்ஸ் என்று சொனனால், பெரிய பெரிய ஓட்டல்களிலே நடக்கின்றது. 25 ரூபாய் கொடுத்து, இந்த டிரம் அடிக்கு டான்சை ஓட்டல் சவேரா, தாஜ் கோரமண்டல் போன்ற



ஓட்டல்களிலே பார்க்கலாம். இந்த ஓட்டல்களுக்கு பாமர மக்கள் போகமுடியாது. ஆனால், அவர்கள் திருவிழாக்களிலும், மாரியம்மன் கோவில் விழாக்களிலும் 10 பைசா கொடுத்து பார்க்கின்றார்கள்.

[முற்பகல் 10—50]

25 ரூபாய் கொடுத்தால் ஆடை நழுவலாம், 10 பைசா கொடுத்தால் நழுவக்கூடாதா? அதை அலவ் பண்ணுகீறீர்கள், இதை அலவ் பண்ணக்கூடாதா?

பணக்காரன் பெரிய ஓட்டல்களில் ஆடை கழற்றுகின்ற நடனத்தைப் பார்த்தால் அது கலை. இதை உங்கள் சட்டம் தடுக்காது, ஆனால் ஒரு ஏழை எங்கேயோ ஒரு திருவிழா மூலையில் அதைப் பார்த்தால் உங்கள் சட்டம் தடுக்கும். நல்ல விசித்திர சட்டம், ஆபாசத்திலும் ஏழை ஆபாசம், பணக்கார ஆபாசமா? இந்தச்சட்டம் 1954-ல் வந்தது. கலை என்ன விலை என்று கேட்ட காலத்தில் வந்தது. இந்தச் சட்டத்தை முழுக்க மாற்ற வேண்டும். நேற்று நான் முழுவதும் படித்துப் பார்த்தேன், எல்லாப் பிரிவுகளையும் மாற்றி அமைக்க வேண்டிய நிலைமையில் சட்டம் இருக்கிறது.

ஆபாசம் எது என்று நிர்ணயிக்கும் உரிமை கலெக்டரிடமும், கமிஷனரிடமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. கமிஷனர் பார்த்து அவருக்கு ஆபாசம் என்று பட்டால் ஆபாசம். ஆபாசம் இல்லை என்று அவருக்கு மனதில் தோன்றினால் அது கலை. இன்னொரு விசித்திரமான பிரிவும் இந்தச் சட்டத்திலே இருக்கிறது. ஆபாசம் என்று சொல்லி கலெக்டர் தடுத்து நிறுத்தியவுடன் அப்பீல் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் கலெக்டருக்குத் தான் மீண்டும் அப்பீல் செய்ய வேண்டும். நேற்று ஒரு மாதிரி யாகத் தெரிந்தது. இப்போது பார்த்தால் சரியாக இருக்கிறது என்று அவரே ஆர்டர் போடலாம். அப்படி ஒரு விதி இருக்கிறது. உடனேயும் நிறுத்த முடியாது, ஏழுநாள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகு கோர்ட்டுக்குப் போகலாம். இரண்டு மாதம் எக்ஸ்டெண்ட் பண்ணலாம்.

நாடகத்தின் ஸ்கிரிப்டில் ஆபாசம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்ப்பதற்கு அதை கலெட்டரிடத்திலும், கமிஷனரிடத்திலும் கொடுக்க வேண்டும். ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். அதிகாரிகள் தமிழ் தெரிந்தவர்களாக கண்டிப்பாக இருக்க வேண்டுமென்ற நிலை இல்லை. நான் வந்திருக்கான் என்று சொல்லக் கூடியவர்கள் முத்தமிழ் மொழியில். உள்ள வசனங்களை எப்படிப் படித்துப் பார்ப்பார்கள்? யாரிடம் கொடுத்து டிரான்ஸ்லேட் செய்வார்கள்? ''டிஸ்க்ரீஷனரி பவர் ஷுட் நாட் பீ டெலிகேடெட் டு அதர்ஸ்.'' இவரே படித்துப் பார்க்க வேண்டுமென்றால் எப்படி படிக்க முடியும்?

[திரு. துரை முருகன்] [1979 மார்ச் 16

"கொற்றவா! மணி மண்டபத்தில் உன்னை நான் கேட்கவா?" கொற்றவா மணிமண்டபம் கிட்டவா—அஞ்சுகமே, ஆருயிரே, கட்டாணி முத்தே, மட்டிலா மாணிக்கமே, மரகதமே, தேனே, தினையே, கனியே, என்றெல்லாம் அடுக்கியிருந்தால் அவர் என்ன பண்ணுவார்?

என் தொகுதியில் நபிகள் நாயகம் விழா நடந்தது. அது ஒரு சின்ன கிராமம். 'நபிகள் நாயகத் திருமேனி' என்று நான் சொன்னவுடன் உருது முஸ்லிம்கள் 'கியா போல்தா நபிகள் நாயகம் திருமேனி ஹை" என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு திருமேனி என்றால் ஒன்றும் புரியவில்லை. நபியைப் பற்றி தப்பாகச் சொல்வதாக அவர்கள் நினைத்துக் கொண்டார்கள். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கு தமிழ் என்ன தெரியும். ஆகையால் டிரான்ஸ்லேட் செய்ய வேண்டும். ஆனால் இதிலே டிஸ்க்ரிஷனரி பவரை டெலிகேட் பண்ணக்கூடாது. இந்தச் சட்டத்தில் மாறுதல்களைச் செய்ததைவிட புதிதாகவே கொண்டு வந்து விடலாம். தொல்லையில்லாத உத்தியோகம். ஆகவே, சட்டத்தையே முழுமையாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று இந்த ஸ்கிரிப்டை எழுதி கலெக்டரிடத்திலே கொடுத்து வாங்கும் போதே ஊழல் ஆரம்பமாகி விடுகிறது. முதல் நாள் ஆபாசம் என்று சொல்லி தடுத்துவிடுகிறார். இரண்டாவது நாள் வக்கீல் வைத்து அப்பீல் செய்தவுடன் 'something' என்றவுடன் மறுநாள் பர்மிஷன் கொடுத்து விடுகிறார்கள்.

ஆபாசம் என்று சொல்வது ஆடுகிற நடனத்தில் மட்டுமல்ல, பாடுகிற பாட்டிலும் ஆபாசம் இருக்கிறது. எழுதுகிற ஏட்டிலும் ஆபாசம் இருக்கிறது, பத்திரிகையில் இருக்கிறது, சிறுகதையில் இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் இப்படி பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டு முறுவலித்தால் கூட ஆபாசம்தான். பக்கத்தில் இருக்கிறவனுக்குத் தெரியாமல் ஆபாசம் நடக்கலாம். எப்படி இதையெல்லாம் நிறுத்தப் போகிறீர்கள்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : திரு. துரை முருகன் மிகவும் ஆபாசமாகப் பேசிக்கொண்டிருக்கிறார். இதை என்ன செய்யப் போகிறீர்கள்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அவர் ஆபாசத்தைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறார். அவரே ஆபாசமாகப் பேசவில்லை.

திரு. துரை முருகன் : மவுண்ட் ரோட்டிலே போகமுடியவில்லை



1979 மார்ச் 16]

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, நண்பர் துரை முருகன் அவர்கள் ஆபாசமாக ஜாடை காட்டினார். அது இப்போது குற்றம் என்பது அவருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

திரு. துரை முருகன் : அதற்கு ஒரு அமெண்ட்மெண்ட் கொண்டு வர வேண்டும். மவுண்ட் ரோட்டில் போங்கள்—படங்கள் எப்படி எப்படியோ இருக்கின்றன. எங்கேயோ காலை வைக்கிறான். எங்கேயோ தலையை வைக்கிறான். ஒன்றுமே தெரியவில்லை. சினிமாவை தாயோடு, தங்கையோடு உட்கார்ந்து பார்க்க முடியாது.

திரு. ஆர். மணிமாறன் : ஆபாசத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் சொன்னார்கள். விதம் விதமாக எப்படி எப்படி என்பதை எல்லாம் விவரித்துக் காட்டினார். ஒருவேளை அனுபவம் பேசுகிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. துரை முருகன் : நான் முதலிலேயே சொன்னேன். நானாக இருந்தாலும், நீங்களாக இருந்தாலும் மெட்ராஸிலே காலேஜிலே படித்து இருந்தால் அவனுக்கு எல்லா விவரங்களும் தெரியும். அப்படித் தெரியவில்லை என்றால் அவரைப்பற்றி வேறு மாதிரியாக அர்த்தம். ஆபாசம் என்பது அவரவர்கள் மனதிற்கேற்ற வகையிலே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது என்றால், தொப்புளுக்கு கீழே புடவையைக் கட்டுவது எனக்கு என் மனதுக்கு ஆபாசம். நான் ஒரு கலெக்டராகவோ அல்லது கமிஷனராகவோ இருந்தால் தொப்புள் தெரிய புடவை கட்டுவதை ஆபாசம் என்று நிச்சயமாகச் சொல்வேன்.

சினிமாவிலே போய்ப் பாருங்கள், வருகிற காட்சிகளைப் பாருங்கள், பேசக்கூடாத வார்த்தைகள் எல்லாம் வருகின்றன, காட்டக்கூடாத காட்சிகள் எல்லாம் காட்டப்படுகின்றன, காட்டியாகிவிட்டது. இன்றைக்கு ஜெயமாலினி டான்ஸ் இல்லாவிட்டால் டிஸ்ரிபியூட்டர்கள் வாங்க மாட்டேன் என்கிறார்கள். 'அது' இருக்கிறதா என்பதைத் தான் முதலிலேயே பார்க்கிறார்கள். அப்படிப்பட்ட எண்ணங்கள் இன்றைக்கு நாட்டிலே வளர்ந்து கொண்டு வருகின்றன, ஆகவே ரொம்ப கன்சர்வேடிவ் ஆக இருக்கக் கூடாது. வளர்ந்து வருகிற நாடுகளை இன்றைக்குப் பாருங்கள், உலகத்திலே ஏற்படுகிற வளர்ச்சியைப் பாருங்கள். ஆபாசம் என்று சொல்கிற போது எல்லோரும் ஆர்தடாக்ஸாக இருந்துவிட முடியாது. அப்படி ஆர்தடாக்ஸாக இருந்து விட்டால் அதற்கு அப்புறம் அவர்கள் நடத்துகிற காரியம் எல்லாம் நமக்குத் தெரியும்.

[திரு. துரை முருகன்] [1979 மார்ச் 16

காலப்போக்கிலே பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டே தீரும். ஆடைகளிலே மாற்றங்கள் ஏற்படுகின்றன, மனதிலே மாற்றங்கள் ஏற்படுகின்றன, எல்லாவற்றிலுமே மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே தான் இருக்கின்றன. முன்னாலே குடுமியை வைத்துக் கொண்டு இருந்தார்கள், பிறகு அதை கட்பண்ணிவிட்டு கிராப்பை வைத்தார்கள், இப்போது கிராப்பை மாற்றி பாகவதர் கிராப் என்ற அளவிற்கு வந்துவிட்டார்கள். போடுகிற சட்டையைப் பாருங்கள், அரையாக இருந்தது, முழுசாயிற்று, இப்போது மீண்டும் அரையாகிவிட்டது, இப்படி மாறிக்கொண்டே தான் இருக்கும். பேன்ட்டாக இருந்தது, டைட் பேன்டாயிற்று, இப்போது அது மாறி பெல் பாட்டம் பேன்ட் ஆகிவிட்டது. காலத்திற்கு ஏற்றாற்போல் உடைகள் மாறுகின்றன, ஆகவே இந்த மசோதாவிலிருந்து இந்த சர்க்காருடைய திட்டத்திலிருந்து என்ன தெரிகிறது என்றால், பொது இடங்களில் ஆடுவது, நடனமாடுவது ஆபாசமாக இருக்கிறது என்றால் எல்லா ஓட்டல்களிலேயும் இருக்கிற காபரே டான்ஸை நிறுத்த முடியுமா ? அதற்கு ஒரு பெர்மிஷன் கொடுத்து வைத்திருக்கிறீர்கள். எந்த அளவிற்கு ஆடை நெகிழ்ந்தால் ஆபாசம் என்று சொல்லவேண்டும்.

நாம் சொல்கிறோம், பண்பாடு வளர வேண்டும், நனி சிறக்க வேண்டும், தீயவை ஒழியவேண்டும் என்று அறநெறிச்சாரம் எல்லாம் படிக்கச் சொல்லுங்கள். கலையிலே விளையாடுகிறபோது, இங்கே அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் நீண்ட நெடிய அனுபவம் உள்ளவர்கள், எந்த சீனை எங்கே வைத்தால் மக்கள் ரசித்துப் பார்ப்பார்கள் என்று நன்றாகத் தெரியும். இந்த சீனை வெட்டு, இதை கட்பண்ணி இங்கே சேரு என்று டக் டக் டக் என்று, மக்கள் மனதை அறிந்து செய்கிறவர்கள். மக்கள் மனதை அறிந்து படத்தைத் தயாரிக்கிறவர் தான் சிறந்த தயாரிப்பாளர், மக்கள் எதை விரும்புகிறார்களோ அதை நடிக்கிறவன் தான் நடிகன், மக்கள் விரும்புவதைப் போல படத்தை இயக்குகிறவர் தான் இயக்குநர். அதனாலே அந்தப் பக்கம் அப்படிச் செய்வது இந்தப் பக்கம் ரொம்ப ஆபாசம் என்று சொல்லுவதா ?

எங்கள் ஊர் பக்கத்திலே இரண்டு படம் ஓட்டுகிறான், ஒரு தியேட்டரில் மகா சிவராத்திரி வைகுண்ட ஏகாதசி அன்றைக்கு படங்களை விட்டான், அப்போது புளு பிலீம் இடையே வருகிறது இடையிலே விட்டுவிட்டான், தூங்கிக்கொண்டிருந்தவன் எல்லாம் அடிச்சுப் பிடிச்சு எழுந்து உட்கார்ந்து பார்க்க ஆரம்பித்து விட்டான். உடனே எனக்குப் போன் பண்ணினார்கள் நான் கேட்டேன், அதற்குள் எல்லாம் முடிந்து அதெல்லாம் போய்விட்டது என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே ஆபாசம் என்று சட்டத்திலே மொட்டையாக, மொட்டைத் தாதன் குட்டையிலே விழுந்தான் என்பதைப்போன்று கொண்டு வருகிற



1979 மார்ச் 16] [திரு. துரை முருகன்]

சட்டம் ஆகாத சட்டம், அதுபோலவே எது ஆபாசம் என்று தீர்மானிக்கிற வேலையை, ஆபாசமா இல்லையா என்று பார்க்கிற வேலையை அதிகாரிகளிடம் கொடுத்தது ஆகாத வேலை. அவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ அதுவும் தெரியாது. வட நாட்டுக் கலெக்டராக இருந்தால் தெரியாது. தமிழ்நாடு கலெட்டராக இருந்தால் அந்த ஆபாசம் தெரியும். ஆகவே ஒட்டுமொத்தமாகக் கேட்கிறபொழுது இந்தச் சட்டத்தையே மறுபரிசிலனை செய்து புதிய சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். நான் நினைக்கிறேன், தமிழ்நாட்டிலே காபரே ரிகார்டு டான்ஸ் நடத்துகிறார்கள் என்று புகார்கள் வருகின்றன. உங்களுக்கு, அதை நீங்கள்தானே நடத்தமுடியும், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் தான் நடத்தமுடியும், அப்போது அமைச்சர் சொல்லமுடியும், இதற்காக ஒரு சட்டத்தை முன்னாலேயே நாங்கள், ஆபாசத்தை ஒழிக்கக்கூடிய சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம் என்று சொல்வதற்காக இருக்கலாம். ஆபாசம் என்பது அங்கிங்கெனாதபடி எங்கும் நிலைநின்று கலந்து கொண்டிருக்கிறது, காலத்திற்கேற்றப்படி மாறிக்கொண்டே இருக்கும் என்பதைச் சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

[முற்பகல் 11-00]

**திரு. எஸ். ஆர். இராதா :** பாயிண்ட் ஆப் ஆர்டர், பேரவைத் துணைத் தலைவரவர்களே, நண்பர் துரைமுருகன் அவர்கள் பேசும்பொழுது பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் இங்கே பேசப்படுகிற கருத்துக்கள் மட்டும்தான் பதிவு செய்யப்படுகிறதா அல்லது அவர் செய்திருக்கின்ற செய்கைகளெல்லாம் பதிவு செய்யப்படுமா என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அவர்கள் பலவிதமான செய்கைகளைச் செய்து காட்டியிருக்கிறார்கள். அது பதிவு செய்யப்படுமா ? மேலும் அவர் யாரோ ஒரு நடிகையின் பெயரைச் சொல்லி, மார்க்கெட் இல்லை என்று சொல்லியிருக்கிறார்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர் உயர்வாகத்தான் சொன்னார், நீங்கள் ஏன் குறையாகச் சொல்லுகிறீர்கள். அடுத்து, நடிகமணி அம்பிகாபதி அவர்கள் பேசுவார்கள்.

**திரு. சேலம் மு. ஆறுமுகம் :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைச்சர்கள் வரிசையில் ஒருவர் புதிதாக அமர்ந்திருக்கிறார். அவர் எப்பொழுது அமைச்சராக நியமிக்கப்பட்டார் ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அங்கே உட்காரலாம், ஏதாவது பேசுவது என்றால் பேசலாம்.

[1979 மார்ச் 16

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொதுவாக இந்தச் சட்டத் திருத்தத்தை நான் வரவேற்கிறேன், நோக்கத்தையும் நான் வரவேற்கிறேன். இதில் சில வார்த்தைகளை மாற்றி இருக்கலாமா என்றுகூட நான் கருதுகிறேன். யாதொரு தரங்குறைந்த நடனம் அல்லது ஆபாச நடனம்—நடனம் என்றாலே ஒரு வரைமுறைக்கு உட்பட்டது என்றுதான் நான் கருதுகிறேன். எனவே, இதற்கு வேறு வார்த்தைகளைப் போடுவதற்கு முடிந்தால் போட்டிருக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

குறிப்பாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததன் நோக்கமே, மதிப்பிற்குரிய நடிகவேள் எம். ஆர். இராதா அவர்களுடைய நாடகங்கள் பல்வேறு இடங்களில் நடந்தன. அதிலே கீமாயாணம் என்று பிரதானமாக நடந்தது. இப்படிப் பல்வேறு நாடகங்கள் நடக்கின்றபொழுது அவைகளைக் கட்டுப்படுத்துகின்ற முறையிலே சென்சார் பண்ணுகின்ற முறையிலே, நாடகம் எழுதியதையே சென்சார் பண்ணுகின்ற முறையிலே இந்தச் சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்டது.

குறிப்பாக இந்தச் சட்டத்தினால் நல்ல கருத்துக்களை வெளியிடுவதற்கான முறையைத் தடுக்கக்கூட முடியும். உதாரணமாக ஒருவர் கதை வசனம் எழுதுகிறார் என்றால் அந்த நாடகத்தையே நடத்தக் கூடாது என்று சர்க்கார் ஆளுபவர்கள்—விரும்பினால் அந்த நாடகத்தை சென்சார் செய்து கொடுக்கின்ற கலெக்டர் கொடுக்காமலே தடுக்க முடியும். அப்படிப்பட்ட ஒரு ஷரத்து இதிலே இருக்கிறது. பல அனுபவம் எனக்கே இதில் உண்டு, நாடகத்தைப் பொறுத்த வரையில் இந்த அனுபவம் எனக்கு உண்டு.

எது ஆபாசம், எது ஆபாசமற்றது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசும்பொழுது சில விவரங்களைக் குறிப்பிட்டார்கள். நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்றால், மகாபாரதம் இருக்கிறது, மகாபாரதத்திலே ஒரு முக்கியமான காட்சி. துரியோதனன் அவையில் துச்சாதனன் துகிலுரியும் கட்டம். இது ஆபாசமாக இருக்கிறது என்று தடுக்க முடியுமா ? காட்சியோடு ஒன்றியது. மாகாபாரதத்தில் துரியோதனன் அவையில் துச்சாதனன் திரௌபதியைத் துகிலுரியும் கட்டம். கிருஷ்ண பரமாத்மா உடைகள் கொடுக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது இலட்சக்கணக்கான பேர்களுக்கு உடைகள் இல்லாமலிருக்கிறது. இப்பொழுது கிருஷ்ணபரமாத்மாவைக் காணவில்லை, லீவில் இருக்கிறார்போல் இருக்கிறது. கிருஷ்ண பரமாத்மா அப்பொழுது உடை கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் காட்சியை ஆபாசம் என்று சொல்ல முடியுமா ?



1979 மார்ச் 16] [திரு. மு. அம்பிகாபதி]

எனவே, சில காட்சிகளோடு, சபையோடு ஒன்றிய காட்சிகள் சில இருக்கின்றன. ஒரு வால்போஸ்டர் சென்னை நகரம் முழுவதும் ஒட்டப்பட்டிருக்கிறது. அவள் கண்ட லோகம் என்ற மலையாளத் திரைப் படத்தின் போஸ்டர். நடிகை சீமா என்று கருதுகிறேன். ஒரு வால் போஸ்டர் சென்னை முழுவதும் ஏழெட்டுக் கலர்களில், வாலவில் கலரில் அடித்து ஒட்டப்பட்டிருக்கிறது.

கவர்னர் கண்டித்துப் பேசுகிறார், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் கண்டித்துப் பேசுகிறார். ஆனால் ஒட்டப்பட்ட போஸ்டர் ஒட்டப்பட்டப்படியே தான் இருக்கிறது. அப்பொழுது, நாடகங்களிலே ஆடினால் மட்டும்தான் ஆபாசமா ? அப்படிப்பட்ட போஸ்டர்கள் ஒட்டப்படுவது ஆபாசமில்லையா ? இதைப்பற்றியும் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, நாடகங்கள், நடனங்கள் ஆகிய இவற்றிலிருக்கின்ற ஆபாசங்கள் என்று கூறி, எல்லாவற்றையும் தடுத்து விடும் நிலைமை இருக்கக்கூடாது. நான் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத்திற்கு சில விஷயங்களை நீங்கள் சட்டம் போட்டு மட்டும் தடுத்து விடமுடியும் என்று கருத வேண்டாம். குடிக்கக்கூடாது என்று மதுவிலக்கு அவசரச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறீர்கள் உங்களுடைய பலத்தை வைத்து, இன்னும் கொஞ்ச நாள் கழித்து உங்களுக்கே தெரியும். அது போல் எந்தச் சட்டத்திலும், இந்தச் சட்டத்திலும் சேர்த்துச் சொல்கிறேன், ஒரு உண்மையைச் சொல்கிறேன், ஆபாசம் என்று போலீஸ்காரர்கள் இந்தச் சட்டத்தை நிறைவேற்றப் போகிறார்கள் என்றால், டாஜ் கோரமண்டலுக்கும்' ஒட்டல் சோழாவுக்கும் போக பாட்டார்கள். அந்த அளவு சட்டம் போகாது, அவ்வளவு உயரம. ஆகவே, இந்தச் சட்டம் ரெக் போகாது, அவ்வளவு உயரம். ஆகவே, இந்தச் சட்டம் ரெக்கார்ட் டான்ஸ் ஆடுகிற இடத்திற்குத்தான் போகும். ரெக்கார்ட் டான்ஸ் ஆடும் நூற்றுக்கணக்கான பெண்கள் ஏன் அந்த நிலையிலே இருக்கிறார்கள் ? அவர்களது அந்த நிலையைப் போக்க நாம் எடுக்கும் நடவடிக்கை என்ன ? இந்தச் சட்டம் நேராக எங்கே போகும் ? சாதாரண, ஏழை எளிய பெண்கள், வறுமையிலே உழல்கிறவர்கள், வாழ முடியாதவர்கள், ஏழ்மையோடு இருக்கிறவர்கள், ஏதாவது, நடனத்தை ஆடி, சினிமா ரெக்கார்டை போட்டு, டான்ஸ் ஆடி, பிழைப்பை நடத்துகிறவர்களை நாடித்தான் இந்தச் சட்டம் போகுமே தவிர, வேறு இடங்களுக்குப் போகாது. அப்படி ஏழ்மையில் இருப்பவர்கள் ஆடுவதை வரைமுறைப்படுத்த வேண்டும்,

இதற்கு முன்பு நான் பார்த்திருக்கிறேன், நடிகவேள் இராதா இராமர் வேஷம் போட்டு, நடிக்க வரும்போது, தற்போதுள்ள சட்டத்தைக் கொண்டே, இப்பொழுது விவாதத்திற்கு வந்திருக்கிற சட்டத்தை வைத்தல்ல, ஏற்கனவே உள்ளதைக் கொண்டே, இராமனாகவே, வில்லோடு கைது செய்திருக்கிறார்கள். இப்பொழுது நடனம் ஆடக்கூடிய பெண்களை போலீசார் விரும்பினால், நடனம் ஆடும் இடத்திலேயிருந்து இழுத்துக் கொண்டு போகலாம், காவல் நிலையத்திற்கு. எனவே, மனிதாபிமான உணர்வோடு, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தச் சட்டங்களை நிறைவேற்றும்போது, இந்தச் சட்டத்தால் பாதிக்கக்கூடிய மக்கள் எப்படிப்பட்டவர்கள் ? இந்தச் சட்டத்தினாலே என்ன விளைவுகள் ஏற்படும் ? அந்த விளைவுகளைப் போக்குவதற்கு நாம் என்ன செய்யவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் யோசிக்க வேண்டும், சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, நாடகங்கள் என்று சொல்கிறபொழுது நாடகங்களுக்கு இருக்கக்கூடிய சென்சார் முறை, தணிக்கை முறையை ரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். நாடகத்தை எழுதிக் கொடுத்து, சென்சார் செய்யப்பட்டு, அதற்கு அனுமதி வழங்கும் வரை பல்வேறு சிரமங்கள் இருப்பதால், இடையிலே கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டத்தை, நாடகங்களைப் பற்றி இருப்பதை மறு பரிசீலனை செய்து, அதைத் திரும்பப் பெறுகிற முறையில், நாடகக் கலை வளர்கிற முறையில் அதையும் அரசாங்கம் மறு பரிசீலனை செய்ய முன் வரவேண்டும்.

ஆபாச நடனங்கள் என்று கூறும்போதே, அப்படிப்பட்டவை எத்தகைய தன்மை வாய்ந்தவை என்பதைப் பற்றிய வரைமுறைகளை, அரசாங்கமே துல்லியமான அறிவுரைகளை, அமுல் படுத்துகிற, அதிகாரிகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அத்தகைய நடனம் ஆடி பிழைக்கக்கூடிய, சாதாரண, ஏழை எளிய பெண்கள் ஏன் இந்த நடனத்தை ஆடுகிறார்கள், அதற்குக் காரணம் என்ன என்பதையும் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு, பொதுவாக இந்த நோக்கத்தை நாங்கள் வரவேற்கிறோம், அதே நேரத்தில் இந்தச் சட்டத்தினை அமுல் படுத்துவதால் ஏற்படக்கூடிய விளைவுகளை அரசாங்கம் எச்சரிக்கையாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-10]

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, இந்த நாடக திருத்த மசோதாவை வரவேற்று சில கருத்துக்களை சொல்ல ஆசைப்படுகிறேன். இது நல்ல நோக்கத்தோடு தான் கொண்டு வரப்பட்டுள்ளது என்பது உண்மையே. அரசாங்கத்தினுடைய அல்லது அரசாங்கத்தில் ள்ளவர்களுடைய கொள்





கையை பரப்பவும், கருத்தைச் சொல்லவும் செய்யலாம். இந்த நாடகத்தின் மூலமாக விளம்பரமும் செய்யலாம், யாரை வேண்டுமானாலும் கண்டிக்கலாம், கண்டித்துப் பேசலாம் அந்த அடிப்படையில் தான் இது இருக்கிறது. இது இப்பொழுது மட்டும் அல்ல, ஏற்கெனவே இருக்கிறது. அதன் அடிப்படையில்தான் இதுவும் கொண்டுவரப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் இந்த திருத்தத்தின் கீழ், ஒரு பக்கத்திலே 'பெரிதும் குறைந்த' அல்லது 'கீழ்த்தரமான' என்று சொற்கள் போடப்பட்டுள்ளது. ஆபாசம் என்று சொல்லக்கூடிய நேரத்திலே 'பெரிதும்' என்ற வார்த்தையே இங்கு வரக்கூடாது என்று நான் சொல்ல விரும்புகிறேன். பெரிதும் என்றால் என்ன நிர்வாணம் என்பது தானே ? அதுதானே அதற்குப் பொருள் ? அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நேரத்திலே, கோர்ட்டிலே போய் வாதாட அது-அந்த வார்த்தை-பெரிதும் உதவி செய்கிறது. 'பெரிதும்' என்ற சொல்லை அதிலே போட்டிருப்பதால் அந்தச் சட்டத்தில் என்ன சொல்ல நினைக்கிறார்கள் ? என்னவென்று தெரியவில்லை ?

ஏற்கெனவே மக்கள் சீரழிந்து போய்விடும் நிலையில் ஆபாசம் வளர்ந்து இருக்கிறது. ஏற்கெனவே பல ஓட்டல்களில், பொது இடங்களில் அங்கே எல்லாம் நான் போய் வழக்கம் இல்லை, நமது மதிப்பிற்குரிய பல நண்பர்கள் பார்த்திருக்கலாம், அது நமக்குத் தெரியாது, என்றாலும் அங்கேயெல்லாம் வயது வந்த பின்னால் தான் போக முடியும். ஆனால் வால்போஸ்டர் மூலமாக எங்கு பார்த்தாலும், நமது சிறுவர்களும், வாலிபர்களும் கெட்டு குட்டிச்சுவராக போகக் கூடிய அளவிலே இன்று இந்த ஆபாசம் இருந்து வருகிறது. இதைத் தடுக்க வேண்டும். இதைத் தடுப்பதற்காக என்ன முயற்சிகளையெல்லாம் மேற்கொள்ள வேண்டும் என்று நமது அமைச்சர் அவர்கள் இன்றைக்குச் சொல்ல வேண்டும். இப்படி முயற்சிகளையெல்லாம் எப்படி செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் காஞ்சிபுரத்தில் காமாட்சி அம்மன் கோவிலிலே அந்த குங்குமம் எடுக்க வேண்டி வரும் இடமே ஆபாசமாக இருக்கிற இடம் என்று சுட்டிக் காட்டப்பட வேண்டும். அது அந்தக் காலத்திலே ஆண் பெண் உறவையே தெரியாத நிலையில் பலர் இருக்க நேரிட்டிருக்கலாம். அதற்காக அவைகளையெல்லாம் நமது கோவிலில் சிற்பங்களாக ஆக்கி வைத்திருக்கலாம். ஆனால் இந்தச் சட்டத்தில் இந்த 'பெரிதும்' என்ற வார்த்தை எதற்காக வேண்டும் ?

கோவில்களை எல்லாம் இடித்து விட வேண்டும் என்று நான் சொல்வதாக இருந்தாலும் அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். அப்படி இடிக்கச் சொல்லவில்லை. சொன்னாலும் அவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். பொது மக்கள் ஒப்புக் கொள்வார்களா என்பது வேறு விஷயம்,

பொது மக்கள் ஒப்புக் கொண்டாலும், அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அது கலாசாரம். அது பழங் கால நிலைமையில் சூழ்நிலையில், சோழர்கள் காலத்தில், பாண்டியர்கள் காலத்தில், சேரர்கள் காலத்தில் உருவாக்கப் பட்டது. அப்படியெல்லாம் இருப்பதாலேயே இன்றைக்கும் அது அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஆபாச நடனங்களை எடுக்கத்தான் வேண்டும். அதில் யாருக்கும் அபிப்பிரா பேதம் இருக்க முடியாது. அந்த நடனம் எந்த வகை நடனமாக இருந்தாலும் சரி, காபரே நடனமாக இருந்தாலும் சரி, ரிகாரடு நடனமாக இருந்தாலும் சரி வேறு எந்த ஆபாச நடனமாக இருந்தாலும் சரி எந்த ஓட்டலிலும் பொது இடங்களிலும் காண்பிக்கப்படுவதாக இருக்கக்கூடாது. குறிப்பாக அப்படிக் காண்பிக்கப்படும் தியேட்டர்களிலும், ஓட்டல்களில், அல்லது பொது இடம் எதுவாக இருந்தாலும் சரி அங்கேயெல்லாம் கூட இத்தகைய நடனங்கள் நடத்த அனுமதிக்கக் கூடாது. எனக்கு முன் பேசிய நண்பர் கூட குறிப்பிட்டார் அந்த நடனம் நடந்து கொண்டிருக்கிற நேரத்திலே, ஆடையில்லாமல் அவர்கள் ஆடிக் கொண்டிருக்கிற நேரத்தில் இழுத்துக் கொண்டு ஓடி விட்டால் என்ன பண்ணுவார்கள் என்று. என்ன பண்ணுவார்கள்? என்ன பண்ண முடியும்? காவல் துறை இருக்கிறது என்கிறீர்களா? இன்றைக்கு காவல் நிலையம் என்று சொல்லக் கூடிய இடங்களிலே எல்லாம் காதலி இடமாக மாறக்கூடிய அளவுக்கு நடந்து கொண்டு வருகிறது. இந்த 'பெரிதும்' என்ற வார்த்தையை சட்டத்திலிருந்து நீக்கிவிட வேண்டும். பெரிதும் என்றால் என்ன அர்த்தம்? ஒரு பக்கத்தை மட்டும் காட்டுவது என்றா, அல்லது இரண்டு பக்கத்தையுமே அல்லது நிர்வாணம் என்று சொல்ல வருகிறதா? இது எதைக் குறிக்கிறது என்று புரியவில்லை. ஆக இந்தச் சட்டம் கொண்டு வந்து நிச்சயமாக இந்த ஆபாசங் களைத் தடுக்க வேண்டியது மிகவும் அவசியம்தான்.

அது மட்டும் அல்ல, புளூ பிரிண்ட் பிக்சர் என்று ஒன்று இருக் கிறது. அதற்கு அனுமதியே கிடையாது. அப்படி அனுமதிக்கக் கூடாத அளவுக்கு அது ஆபாசமானது. ஆனால் திடீரென்று காவல் துறையினரின் பாதுகாப்போடு இத்தகைய படங்கள் ½ மணி நேரமோ, 1 மணி நேரமோ, இந்த முழு நிர்வாணப் படம், முழுக்க முழுக்க திகம்பர சாமியார்களாக இருக்கக்கூடிய ஆண் பெண் உறவுகளைப் பற்றிய ஒரு படம் இன்றைக்குக் காவல் துறையினரின் அனுமதியோடு காட்டப்படுகிறது. இதை முதலில் தடுக்க வேண்டும். இதைத் தடுப்பதற்காக கடுமையான அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தாய்மை உள்ளத்தையே, நமது தாய்க் குலத்தையே கேவலப்படுத்துவதாக நடைபெற்று வருகிறது. இவற்றையெல்லாம் தடுக்க நடவடிக்கை கள் அரசு எடுக்க வேண்டும் என்பதைக் கேட்டுக் கொள்கிறேன்.





நாடகக்குழுக்கள் இதற்கு முன்னாலே பெரிய அளவில் இருந்தன. இப்போது சிறியசிறிய அளவில் தான் இருக்கின் றன. நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் எம்.ஜி. ஆர். அவர் கள் நடித்த நாடகத்தைக் கூட நான் சிறு வயதிலிருந்தே பார்த்த வன். எனக்கு வயது தற்போது 67. அவர் எப்படி நாடகக் கம்பெனியில் இருந்தார், எப்படி வாழ்ந்தார், இப்போது எப் படி வாழ்க்கை நடத்துகிறார் என்பது எனக்குத் தெரியும். அதே போல் சிவாஜி கணேசன் பற்றியும் எனக்குத் தெரியும். அதற் காக அவர்களைக் குறை கூறுகிறேன் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. இன்றைக்கு அந்தப் பெரிய கம்பெனிகளாக இருந் தவைகள் இடம் தெரியாமல் போய்விட்டது. இன்று சின்னச் சின்ன கம்பெனிகள் தான் இருக்கின்றன. அவைகள் பாதிக் காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர் களுக்குப் பாதகம் விளைவிக்கும் வகையில் இது போய்விடக் கூடாது என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

முதலில் என்ன சொல்கிறார்கள். கதையை எழுதிக்கொண்டு வா. அதிலே வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்ற அடிப் படையில் நிர்வாகம் நடந்து கொள்ளும் நிலை ஏற்படலாம். ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்றால், கூட்டங்களுக் குச் சுருக்கெழுத்தாளர் அனுப்பி எப்படி அவர்கள் பேசுகிறார் கள் என்பதைக் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதைப்போல, இந்த நாடகங்களுக்கும் அவர்களை அனுப்பி, அந்தக் கதையை எழுதி வரச்செய்து தவறு இருந்தால் நடவடிக்கை எடுக்கலாம். ஆகவே, கதையை எழுதிக் கொண்டு வந்து கொடுத்து அதற் குப் பிறகு அனுமதிக்கும் முறை இருக்கக்கூடாது. இதனால் கண் டிஷன் போட்டு அனுமதி கொடுப்பதற்கு வாய்ப்பு உண்டு.

முற்போக்கு கருத்துக்கள் என்று சொல்கிறபோது, இன்றைய அரசியலை மட்டும் விமர்சிப்பது போல் இருந்தால் போதாது. இன்றைக்கு சமுதாய சீர்திருத்தம் சம்பந்தமாகவும், ஏற்றத்தாழ்வுகளைப் போக்கும்படியான பொருளாதார அமைப்பு முறைகள் சம்பந்தமாகவும், ஆஸ்திகம், நாஸ்திகம் சம்பந்தமாக வும் வரும் கருத்துக்களைக் கொண்ட நாடகங்கள் இருக்க வேண் டும். சினிமாப் படங்கள் இருக்க வேண்டும். அப்போது தான் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர முடியும். ஈ.வெ.ரா. பெரியாரின் நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்த நேரத் தில் உண்மையிலேயே அவர்கள் சொன்ன கருத்துக்களை எடுத்து மக்களிடத்தில் சொல்கிற வாய்ப்பாக நாடகங்கள், சினிமா இருக்க வேண்டும். பொது இடங்களில் நடக்கும் காபரா நடனங்கள் அல்லது ரிகார்ட் டான்ஸ்களை மட்டும் குறை கூறினால் போதாது. அதேபோன்று ரேடியோக்களில் அந்தக் கருத்துக்கள், சமுதாய சீர்திருத்தக் கருத்துக்கள், நாத்திகக் கருத்தை, ஆத்திகக் கருத்தைப் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்க வேண்டும். இன்று பொழுது விடிந்து போனால், கடவுள் உண்டு என்று பேசுகிறவர்கள் தான் ரேடியோவில் இருக்கிறார்கள். அவர்களுக்கு 10 மணிநேரம் ஒதுக்கி

யிருந்தால், ஒரு 2 மணி நேரம் நாத்திகக் கருத்துக்களைச் சொல்லவும் நேரம் ஒதுக்க வேண்டும். அதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன. அப்போது தான் இந்த மாதிரியான பல முற்போக்குக் கருத்துக்களை நடைமுறைக்குக் கொண்டு வரமுடியும். அந்த அடிப்படையில் கவனம் செலுத்த வேண்டும் என்று சொல்லி, இந்தத் திருத்தம் வரவேற்கக்கூடிய திருத்தம், பாராட்டப்பட வேண்டிய திருத்தம் என்று சொல்லி, வால்போஸ்டரில் ஆபாசம் அதிகம் இருக்கிறது. அதைத் தடுக்க வேண்டும். உங்களால் சட்டத்தால் தடுக்க முடியாது என்று சொன்னால், போலீஸ் தலையிடாமல் இருந்தால், பொது மக்களே அப்படிப்பட்ட வால்போஸ்டர்கள் வராமல் பார்த்துக் கொள்வார்கள் என்று சொல்லி, திருத்தத்தை ஆதரித்து வரவேற்று பாராட்டி, என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, இன்றைக்கு நமது செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிற திருத்தச் சட்டத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் எல்லாம் என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் ஒரு கருத்தைச் சொல்லி, பெரியவராக இருக்கக்கூடிய திரு. கோதண்டராமன் அவர்கள் இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். இன்றைக்கு தமிழக கலை வளர்ச்சித் துறையிலே இயல், இசை, நாடகம் என்று 3 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. இயல் என்பதை எடுத்துக்

[முற்பகல் 11-20]

கொண்டால் நிலையை எடுத்துச் சொல்லி, பின்னால் அவர்களுடைய அபிநயத்திலே எண்ணத்தைப் பிரதிபலிக்கும் வகையில், பிறர் புரிந்து கொள்ளும் வகையில் செய்து காட்டுவது. இசை என்பது பாட்டுக்கள். இசைக்கு அனைவருமே மயங்கிவிடுகிறார்கள். இசை மயக்கம் என்றால் தம்பி துரை முருகன் போன்றவர்களுக்கு அந்த மயக்கம் வருமோ என்னவோ தெரியாது. வண்டி ஓட்டிச் செல்கிறவன் கூட பாடிக்கொண்டே ஓட்டுகிறான். அந்த இசையைக் கேட்டு மாடு நீண்ட தூரம் போகும். களைப்பு தெரியாமல் எவ்வளவு சுமை இருந்தாலும் அதைச் சுமந்துக்கொண்டு போகிறது. இது நாம் அனுபவ ரீதியாகப் பார்க்கப்படுகிற ஒன்று.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு புதிய தகவலைக் கொடுக்கிறார்கள். மாடுகளுக்கு இசையை ரசிக்கத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : கட்டாயம் தெரியும் சந்தேகமில்லை.



திரு. துரை முருகன் : பயிர் வகைகள் கூட இசையினால் நல்ல வளர்ச்சி பெறுகின்றன என்பது அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் மேற்கொண்ட ஆராய்ச்சியின் முடிவு. அப்படி இருக்கும்போது மாடுகளுக்கு ஏன் இசையை ரசிக்கத் தெரியாது ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கண்ணன் குழலால் வைது மாடுகளை அமைதிப்பெற செய்ததாக புராணங்கள் கூறுகின்றன.

திரு. எஸ். ஜே. இராமசாமி : நல்ல பாம்பு கூட பாம்பாட்டியின் மகுடி இசையில் மயங்கி, அவனுடைய மகுடிக்கு ஏற்றவாறு அங்குமிங்கும் திரும்பி, திரும்பி ஆடுவதை நாம் பார்க்கிறோம். ஆகையால் இசைக்கு மயங்காதவர் யாருமில்லை என்பது கண்கூடு.

அடுத்தப்படியாக இருப்பது நாடகம். பெரும்பாலும் சொந்தக் கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்கு ஏற்றதொரு சாதனம் நாடகம்தான். நம்முடைய இயக்கத்திற்கு நாடகம் பெரிதும் உதவியாக இருந்திருக்கிறது. சொல்லப்போனால் கலைவாணர் என். எஸ். கே., நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி போன்றவர்கள் தங்களுடைய கருத்துக்களை நாடகங்கள் மூலமாகவே வெளியிட்டு வந்தார்கள். அதைப்போல எம். ஆர். இராதா அவர்கள் எல்லாம் நாடகக் கலையை வளர்த்தவர்கள். அறிஞர் அண்ணா கூட 'சந்திரமோகன்' என்ற நாடகத்தைச் சிறப்பாக நடத்தியிருக்கிறார்கள். அப்போதெல்லாம் இந்த ஆபாசத்திற்கு இடமே இல்லை. ஆபாசம் எப்படி வந்தது என்றால் சினிமா வந்தபிறகுதான்.

மவுண்ட் ரோட்டில் போகும்போது ரோட்டின் இரு பக்கங்களிலும் பார்க்கிறோம். ஆபாசமான போஸ்டர்களைப் பார்க்கிறோம். நிர்வாணமான போஸ்ட்டர்களைக் கூட அங்கே பார்க்கலாம். ஆபாசமான முறையில் வண்ண, வண்ண போஸ்டர்களை வைத்திருக்கிறார்கள். அதைப்பார்த்து இளைஞர்கள் கெட்டுப் போகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. கார் ஓட்டிக்கொண்டு போகிறவர்கள் அந்த ஆபாச போஸ்டர்களைப் பார்த்துக் கொண்டே ஓட்டுவதால் சில நேரங்களில் விபத்து ஏற்படுகிறது. கார் ஆக்சிடன்ட் உண்டாகிறது.

தம்பி துரை முருகன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அது வேறு பிரச்சனை. எப்படி இருந்தாலும் பொது இடங்களில் ஆபாசமான வண்ண, வண்ண படங்களை வைப்பதைத் தடுக்க வேண்டும். தள்ளாத வயதினர்கூட அதைப்பார்த்து கெட்டு விடலாம். அதைத் தடுப்பதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டம் வரவேற்கத்தக்க ஒன்று.

திரு. பி. முசிறிபுத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராமசாமி அவர்கள் 'வால் போஸடர்' களைப்பார்த்து கெட்டுப்போவதாகச் சொன்னார்கள். தம்பி தாமரைக்கனி அவர்கள் பெரியவர் இராமசாமி அவர்களை 'அவளின் ராவுகள்' சினிமாவுக்கு அழைத்துப்போனதாகச் சொல்கிறார். அவர்கள்தான் அன்றைய 'அரிதாஸ்' படத்தை 50 தடவைக்குமேல் பார்த்திருப்பதாகவும் சொல்கிறார்கள்.

திரு. துரைமுருகன்: பெரியவர் எஸ். ஜே. ஆர். அவர்கள் இந்த தள்ளாத வயதில் இந்தப் பொல்லாத வேலைக்கு போவதில்லை என்ற முறையிலே சொன்னார்கள். தள்ளாத வயது என்று சொல்லும்போது 'எதையுமே தள்ளாத வயது' என்று சொல்கிறார்களா ?

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, தம்பி துரைமுருகன் எங்கோ போகிறார், அவரை இங்கே திருப்பிக்கொண்டு வர வேண்டுமென்று நினைக்கிறேன். ஆபாசமான வண்ண வண்ண போஸ்ட்டர்களை பொது இடங்களில வைக்க கூடாது; அதை தடுக்க வேண்டும். நாடகத்தின் வாயிலாக கருத்துக்களை வெளியிடுவது நம்முடைய இயக்கத்திற்கு நல்லதொரு பாங்கான கொள்கை. அந்த முறையில்தான் நம்முடைய கருத்துக்களைச் சொல்லி இயக்கத்தை வளர்த்தோம். 'இரணியன் இணையற்ற வீரன்' என்ற நாடகத்தை அப்போது தடை செய்து விட்டார்கள். அதில ஆபாசம் ஒன்றும் கிடையாது. எனக்கு முன்னால் பேசிய பெரியவர் கோதண்டராமன் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள்.

ஆஸ்திகத்தைப் பரப்புவதற்கு எவ்வளவு நேரம் கொடுக்கப்படுகிறதோ அவ்வளவு நேரம் நாஸ்திகத்தைப் பரப்புவதற்கும் கொடுக்கப்பட வேண்டும், என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் காலத்திலே இரணியன் நாடகம் எல்லாம் நடந்தது. அது எல்லாம் மிகச் சிறந்த கருத்துக்களை எடுத்துச் சொன்னது. அது போன்ற நாடகங்களை எல்லாம் இப்போது உள்ளவர்கள் பார்த்திருப்பார்களோ என்னவோ தெரியாது. அவை எல்லாம் மிகவும் சீர்திருத்தக் கருத்துக்கள் உள்ள நாடகம். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போன்றவர்கள் எல்லாம் பாராட்டிய நாடகம் அது. இப்போதும் அது போன்ற சில நாடகங்கள் இருக்கின்றன. நீதி தேவன் போன்ற நாடகங்கள் எல்லாம் மிகச் சிறந்தவை. அவற்றிலே ஆபாசமே கிடையாது. ஆனால் இப்போது வரக்கூடிய மற்ற நாடகங்களும், சினிமாப் படங்களையும் எடுத்துக் கொண்டு பார்க்கும்போது அதிக அளவில் ஆபாசங்கள் இருக்கின்றன என்பதைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. குறிப்பாக மலையாளக் கதைகள் அத்தனையும் ' ஏ ' சர்ட்டிபிகேட் கொடுக்கப்பட்டுத்தான் வருகின்றன;





முன்பு அம்பாசமுத்திரம் தொகுதியைச் சேர்ந்த திரு. கோமதி சங்கர தீட்சிதர் அவர்கள் இங்கே உறுப்பினராக இருந்தார்கள். அப்போது அவர்கள் இந்த மாதிரித் தவறுகளை, எல்லாம் ஒழிக்க வேண்டும் என்று ஒரு கேள்வியைக் கேட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் அப்போது இருந்தார்கள். அப்போது அண்ணா அவர்களும் கூட, பெரியவர் ஏன் இதிலே ஈடுபடுகிறார் என்று இன்றைக்கு திரு. துரைமுருகன் அவர்கள் கேட்பது போலக் கேட்டார்கள். அப்போது திரு. கோமதி சங்கர தீட்சிதர் இதனை நான் எனக்காகச் சொல்லவில்லை, இந்த நாட்டுக்காகச் சொல்கிறேன், இளைஞர்கள் நல்லவர்களாக வரவேண்டும். அவர்களுடைய இளம் உள்ளம் கெட்டு விடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன் என்று குறிப்பிட்டார்கள். அப்போது திண்டிவனம் ராமமூர்த்தி அவர்கள் இந்த மன்றத்திலே உறுப்பினராக இருந்தார்கள். காபரே டான்ஸ் பற்றி எல்லாம் கூடக் கூறப்பட்டது. இதை எல்லாம் பார்க்கிறபோது நம்முடைய பண்பு என்ன ஆகும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழகத்தினுடைய பண்பு வேறு. மற்றவர்களின் பண்பு வேறு. வேறு கலெக்டர் வந்தால் என்ன செய்வது என்று சொல்கிறார்கள். அப்படி வேறு கலெக்டர்கள் இங்கே வருகின்றபோது அவர்கள் தங்களது பழக்கத்தை இங்குள்ளது போல் மாற்றிக் கொண்டுதான் ஆக வேண்டும். அவர்களுக்காகத்தான் இதெல்லாம் என்று சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. நம்முடைய பண்பு வேறு. அவர்களுடைய பண்பு வேறு.

இப்போது உதாரணதிற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது இப்போது வெளி நாட்டிலே உள்ள பிரதம மந்திரியோ அல்லது ஜனாதிபதியோ இங்கே வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். அப்போது இங்கே இருக்கின்ற, தலைவர்கள் அவரை வரவேற்க தன்னுடைய மனைவியையும் அழைத்துச் செல்கிற போது அறிமுகம் செய்து வைக்கிறபோது தலைவர்கள் தான் கை குலுக்குவார்கள். மனைவியாக வருபவர் உடனே கை எடுத்து வணங்குவாரே அல்லாமல் கை குலுக்குவது வழக்கமல்ல. ஆனால் வெளிநாடுகளில் தலைவர்களின் மனைவியர்களும் கூட மற்றவர்களை வரவேற்கின்ற போது கை குலுக்குகின்ற தன்மை இருக்கின்றது. அது அவர்களுடைய பண்பாடு. ஆனால் நம்முடைய பண்பாடு அப்படி அல்ல.

ஆகவே நம்முடைய கலாச்சாரத்தைக் காக்கவேண்டும். ஆகவே வெளி நாடுகளில் உள்ள பழக்க வழக்கங்களை நாமும் பின்பற்ற வேண்டும் என்பது சரியல்ல. இன்றைக்கு தெருவிலே போய்க் கொண்டிருக்கிறபோது சிலர் ஒருவரை ஒருவர் கை கோர்த்துக் கொண்டு போகிறார்கள். மனைவியாக இருக்குமோ அல்லது வேறு யாராகவாவது இருக்குமோ என்று சந்தேகப்படக் கூடிய அளவுக்கு அது இருக்கிறது. உதாரணத்திற்கு நானும் என்னுடைய மனைவியும் கை கோர்த்துக் கொண்டு போவோம் என்று சொன்னால் என்னுடைய மனைவியே கூட கோபப்படுவாள்.

இதை ஏன் சொல்கிறேன் என்றால் நம்முடைய பண்பாடு பற்றிக் குறிப்பிடுவதற்காகத்தான். ஆகவே இப்படிப்பட்ட விளக்கத்தைத்தான் நான் சொல்ல வந்தேனே தவிர வேறொன்றும் அல்ல. ஆகவே இதை விட்டுவிட்டு வேறெங்கோ போவது சரிதானா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும் என்று அவர்களுக்கு நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு பெண் கிணற்றிலே விழுந்து விடுகிறாள் என்று வைத்துக் கொண்டால் அவளை ஒரு இளைஞன் தொட்டுத் தூக்கி காப்பாற்றினால் அதை யாரும் தவறாகச சொல்ல மாட்டார்கள். ஆனால் ஒரு பெண்ணுடன் தெருவிலே தோள் மீது கை போட்டுக் கொண்டு போனால் அதைத்தான் தவறாகச் சொல்வார்கள். இது தான் நம்முடைய பண்பாடு. அந்த நேரத்தில் அப்படிச் செய்வதில் தவறில்லை, ஆனால் தெருவிலே தோளில் கை வைத்துக் கொண்டு செல்வது தவறு. ஆகவே நம்முடைய கலாச்சாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொல்லி இந்தச் சட்டத்தை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பிரச்சினை குறித்து 60 வயதைத் தாண்டியவர்கள் பேசினால்தான் நல்லது. அவர்கள்தான் மிகுந்த அனுபவசாலிகள். அவர்கள்தான் நல்ல அறிவுரைகளைக் கூற முடியும். இளைஞர்கள் தங்களுக்குள்ளாகவே பேசிக்கொள்வார்கள்.

<u>திரு. அ. சுவாமிதாஸ் :</u> தலைவரவர்களே,

(ஆரவாரம்).

<u>*திரு. அ. சுவாமிதாஸ் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த சட்டத் திருத்தத்தை நான் வரவேற்று ஒரு சில கருத்துக்களைப் பேச விரும்புகிறேன். இந்த விவாதம் ஒன்றையே வைத்து நண்பர் திரு. துரைமுருகன் அவர்கள், அவர்கள் கொண்ட கருத்துக்கு ஏற்றவாறு மிக நன்றாக விவாதித்தார்கள். அவர்கள் அந்த பருவத்திலே நின்று கொண்டு விவாதித்தார்களா அல்லது நாட்டிலே இருக்கின்ற ஒட்டு மொத்தமான சமுதாடக் கருத்தைப் பிரதிபலித்தார்களா என்பது தெரியவில்லை.

[முற்பகல் 11—30]

அனுபவரீதியாகப் பார்க்கும்போது சமுதாயத்தில் நாடகங்களானாலும் சரி அல்லது திரைப்படங்களானாலும் சரி அவை எப்படி எப்படி இருப்பது நல்லது என்று அறிஞர்களும், முதியோர்களும், விரும்பி கூறி வைத்ததை நாம் ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். நாம் தனியாக இருந்தால் நம் கருத்துக்கள் ஒரு மாதிரியாக இருக்கலாம். ஆனால் சமுதாயத்தில் ஒட்டு மொத்தமாக வரும்போது சில வரையறைகள், சில கட்டுப்பாடுகள் சமுதாயத்தில் இருந்தாக வேண்டும் என்பதைப்





பெரியோர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். மேல் நாடுகளில் உள்ள படங்களைப் பார்க்கும்போது சில காட்சிகள் நமக்கு ஆபாசமாகத் தென்படலாம். அந்தப் படங்களைப் பார்த்து அனுபவித்துக் கொண்டிருக்கிற மேலை நாட்டினர் கூட சமுதாய அமைப்பில் காட்சிகள் இப்படி இப்படி இருக்க வேண்டும் என்று வரையறுத்திருக்கிறார்கள். குடும்பம் என்றால் அது இப்படி இப்படித்தான் இருக்க வேண்டும் என்றும் வரையறுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே, ஆபாசக் காட்சிகள் என்று சொல்லும்போது மேனாட்டார் கூட சிலவற்றை ஆபாசம் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மேலை நாடுகளில் சிலவிடங்களில் மனிதர்கள் நிர்வாணமாகப் போய் வாழக்கூடிய ஒதுக்குப் புறமான சில இடங்கள் உள்ளன. அந்த இடங்களில்தான் அவர்கள் நிர்வாணமாக இருக்கலாமே தவிர மக்கள் வாழும் எல்லா இடங்களிலும் நிர்வாணமாக நடமாட முடியாது. மக்கள் நிர்வாணமாக நடு ரோட்டில் நடமாடுவதை அங்குள்ள மக்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அப்படிச் செய்கிறவர்களைப் பிடித்து வழக்குப் போடுகிறார்கள். ஆகவே சமுதாயம் என்று வரும்போது இன்னின்ன முறைகளில் நடந்து கொள்ள வேண்டும், இப்படி இப்படி ஆடைகள் அணிந்து கொள்ள வேண்டும், நாடகங்கள், திரைப் படங்கள் இப்படி இப்படி இருக்க வேண்டும், எழுத்துக்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று வரையறுத்திருக்கிறார்கள்.

தமிழகத்தில் நாம் நீண்டதொரு பாரம்பரியத்தை உருவாக்கியிருக்கிறோம். நாம் பண்பாடுகள் சிலவற்றை அமைத்துக் கொண்டிருக்கிறோம். குளியலறையில் ஒருவன் நிர்வாணமாக இருக்கிறான் என்றால் அது வேறு. ஆனால் அதே நேரத்தில் குளியல் அறையில் இருப்பதைப் போன்று வெளியே ஒருவன் நிர்வாணமாக வந்து நிற்க முடியாது. அதை சமுதாயம் ஏற்றுக் கொள்ளவில்லை. அவனைத் தண்டித்தாக வேண்டும். அவன் நிர்வாணமாக நிற்காமல் ஆடைகளைக் கொடுத்து அனுப்பும் ஒரு நிலையைத்தான் சமுதாயம் அனுமதித்திருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். திரு. அண்ணாதுரை அவர்கள் எழுதிய ரோமாபுரி ராணிகள், கம்பரசம் போன்ற புத்தகங்களை நான் படித்திருக்கிறேன். அப்படி நான் படிக்கும் போது அவற்றையெல்லாம் நான் படிக்கக் கூடாது என்று ஆசிரியர்கள் தடுத்திருக்கிறார்கள். அந்தப் புத்தகங்களில் ஒன்றும் புதிதாகக் கருத்துக்கள் சேர்க்கவில்லை. கம்ப இராமாயணத்தில் இருக்கிற சில பகுதிகளைச் சில காட்சிகளை உரை நடையாக, வசன நடையாகக் காட்டினார்களே தவிர, வேறு

ஒன்றுமில்லை. இருந்தாலும் இளைஞர்கள் அவற்றைப் படிக்கக்கூடாது, படித்தால் கெட்டுவிடுவார்கள் என்ற எண்ணத்தோடு அவற்றைப் படிக்கக் கூடாது என்று ஆசிரியர்கள் தடுத்தார்கள். நாடகங்களில், சினிமாத் துறையில் ஆபாசமான காட்சிகளை, ஆபாசமான எழுத்துக்களை தடை செய்ய முன் வந்ததற்குப் பாராட்டுகிறேன்.

திரு. துரைமுருகனுக்கு இவை ஆபாசமாகத் தெரியாது. கொஞ்சம் பக்குவப் பட்டுவிட்டார்கள். முன்னால் சொன்னார்கள். அவர்கள் தாய் தந்தை நிச்சயமாகச் சொல்லியிருப்பார்கள் இதை இதைச் செய்யக் கூடாது, இதை இதைப் படிக்கக் கூடாது என்றெல்லாம். இன்னின்ன படங்களைப் பார்க்கக் கூடாது, இன்னின்ன காட்சிகளைப் பார்க்கக் கூடாது, இன்னின்ன தியேட்டர்களுக்குப்போகக் கூடாது என்று சொல்லியிருப்பார்கள். அவர்கள் அப்போது அதை ஒத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். ஆனால் இன்னும் பத்தாண்டுகளுக்குப் பிறகு திரு. துரைமுருகன் தனது பிள்ளைகளுக்கு இதே மாதிரியான புத்திமதிகளைச் சொல்வார்கள், இப்படி இப்படிச் செய், இப்படி இப்படிச் செய்யக் கூடாது, நடக்கக் கூடாது என்று.

திரு. துரை முருகன் : நான் ஆபாசம் இருக்கவேண்டும் என்று பொருள்பட பேசியதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிதாஸ் அவர்கள் நினைக்கிறார்கள். அதல்ல. நான் எது ஆபாசம் என்று ஒரு 'லீடிங் க்வஸ்டின்' போடுகிறேன். ஆகவே, ஆபாசம் இருக்கவேண்டும் என்பதற்கு அட்வக்கேட்டாக வரவில்லை. ஆபாசம் என்பது நடனத்தில் மட்டுமல்ல, அது எல்லாவற்றிலும் இருக்கிறது என்று எடுத்துக்காட்டினேனே தவிர ஆபாசத்திற்கு நான் வக்காலத்து வாங்குவதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிதாஸ் அவர்கள் ஒரு தவறான எண்ணத்தை இம்மன்றத்திற்குத் தரக்கூடாது.

திரு. அ. சுவாமிதாஸ் : ஆபாசம் என்று பெரியோர்கள் எது எதையெல்லாம் சொல்லியிருக்கிறார்களோ அவை வெளிப்படையாக வரக்கூடாது என்பதுதான் சட்டத்தின் நோக்கம். பிறர் உணர்ந்து கொள்கிற முறையில், அறிந்து கொள்கிற முறையில், புரிந்துகொள்கிற முறையில் காட்சிகள் ஆபாசமாக இருக்கக்கூடாது, ஆபாசமான முறையில் எழுத்துக்கள் பேச்சுக்கள் இருக்கக்கூடாது. பெரியவர்கள் எல்லாம் ஆபாசம் கூடாது என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இப்போது பல இடங்களிலும் காப்ரே டான்ஸ் போன்றவற்றில் ஆபாசம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இதையெல்லாம் தடுக்க வேண்டியது அவசியம்.





திரு. துரை முருகன் : பெரியவர்கள் எல்லோரும் ஆபாசம் என்று சொன்னது எல்லாம் பிற்காலத்தில் மாறி விடுகிறது. பாரதப் பிரதமர் கூட முத்தம் கொடுப்பது ஆபாசம் என்று சொல்லப்பட்டதில், அதில் ஆபாசம் இல்லை என்று சொல்லிவிட்டார். ஆனால் பெரியவர்கள் எல்லாம் முத்தக்காட்சிகள் இடம் பெறக் கூடாது என்றுதான் சொல்லி வந்தார்கள். ஆனால் இப்போது மத்திய அரசே முத்தம் இருக்கலாம், என்று சொல்லிவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி இரண்டு பேரும் பேசிக்கொண்டு மற்றவர்களின் நேரத்தை எடுத்துக் கொள்ளாதீர்கள்.

திரு. அ. சுவாமிதாஸ் : ஆபாசம் என்றிருப்பதை எந்தக் காலமும் மாற்றிவிடாது. ஆபாசம் ஆபாசம்தான். 10-ம் நூற்றாண்டில் சொல்லப்பட்ட ஆபாசம் 20-ம் நூற்றாண்டு வந்தாலும் அப்போதும் அது ஆபாசம் தான். காலம் மாறினாலும் ஆபாசம் என்பது மாறாது. ஆடைகள் மாறிக்கொண்டிருக்கிறது என்றால் அது காலத்தின் போக்கினால் ரொட்டேஷனாக நடந்து கொண்டிருக்கிறது. சில காலத்தில் முன்னால் இருந்த ஆடைகள் போன்றே தற்போது வந்து கொண்டிருக்கிறது. முக்கியமாக ஆபாசம் என்றிருந்தால் அதனால் சமூகத்தில் உருவாகும் தவறான போக்குகள், தீய எண்ணங்கள், தீய செயல்கள், மேலும் இளைஞர்களிடத்தில் இருக்கவேண்டிய கட்டுப்பாடு குறைந்து போவது, தீய எண்ணங்கள் பரவுவது போன்றவை ஏற்படும். முக்கியமாக ஆபாச சுவரொட்டிகள் இருப்பதை அகற்றியாக வேண்டும். கார் ஓட்டுபவர்கள், ஏன் நடந்து செல்லுபவர்கள் இவர்கள் ஆபாசமான சுவரொட்டிகளைப் பார்க்கின்ற நேரத்தில் கவனம் வேறுபட்டு விபத்துக்கள் ஏற்படுகின்றன, இவற்றையெல்லாம் நாம் அகற்ற வேண்டும். சட்டத்தினால் இதையெல்லாம் தடுக்க முடிமா என்று பார்க்கக்கூடாது.

மதுவிலக்குச் சட்டம் கொண்டு வருகிறோம், மதுவினால் ஏற்படுகின்ற தீய விளைவுகளைத் தடுப்பதற்காக இப்படிப் பட்டச் சட்டம் தேவை. தீய எண்ணங்கள் சமுதாயத்தில் உருவாகிறபோது அதை நாம் தடுத்தாக வேண்டும். அந்த முறையில்தான் பல சட்டங்களை அமல் நடத்துகிறோம். ஆகவே, இப்படிப்பட்ட ஆபாசக் காட்சிகளை நாடகங்களில் மட்டுமல்ல, சினிமாக்களிலிருந்தும் அகற்றவேண்டும், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும், முக்கியமாக உடனடியாகச் செய்யவேண்டியது, ஆபாசமான விளம்பர சுவரொட்டிகளை அகற்றியாக வேண்டும். இப்படிப்பட்ட சுவரொட்டிகள் ரோட்டில் அருகில் இருக்கக்கூடாது. இதனால்

எவ்வளவோ ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. பஸ் ஓட்டுகின்றவர்கள், இப்படிப்பட்ட விளம்பரச் சுவரொட்டிகளைப் பார்க்கும்போது, ஆக்ஸிடன்ட் ஏற்படுகிறது. நடந்து போகின்றவர்கள் கூட இதைப் பார்த்துக்கொண்டு போவதால், பல ஆக்ஸிடன்ட்கள் நடக்கின்றன. ஆகவே, இந்த ஆபாச சுவரொட்டிகளை எல்லாம் உடனடியாக அகற்றியாக வேண்டும். மேல்நாடுகளில் எல்லாம் இருக்கிறது என்று சொன்னால். . . .. அது வேறு விஷயம்.

<u>திரு. இரா. தாமரைக்கனி</u> : ஆபாச சுவரொட்டிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். நல்ல வசூல் கிடைப்பதற்காகத்தான் இப்படிப்பட்ட சுவரொட்டிகளை ஒட்டுகிறார்கள். ஆனால் விளம்பரத்தில் உள்ள ஆபாசங்கள் ஒன்றும் திரைப்படத்தில் இருப்பதாகத் தெரியவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வயோதிகர்களுக்கும் வாலிபர்களுக்கும் இடையில் நடைபெறுகிற வாதமாக இருக்கிறது. ஆகவே வயோதிகர்கள் பேசும்போது, வாலிபர்கள் பேசாமல் இருப்பது நல்லது.

<u>திரு. துரை முருகன்</u> : தலைவர் அவர்களே, தாங்கள் இதில் எந்தக் கட்சியில் சேர்ந்திருக்கிறீர்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நான் வயோதிகர் கட்சியில்தான்.. .. . .

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : தலைவர் அவர்களே, தாங்கள் எந்தக் கட்சியிலும் சேரக்கூடாது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நான் சொல்வது, எந்த வயதைச் சேர்ந்தவன் என்பது தான், அதற்குத் தான் சொன்னேன்.

<u>திரு. அ. சுவாமிதாஸ்</u> : ஆகவே வெளியில் இருக்கின்ற ஆபாச விளம்பர சுவரொட்டிகளை எல்லாம் அகற்றியாக வேண்டும்.

<u>திரு. எஸ். ஜே. இராமசாமி</u> : தலைவர் அவர்களே அப்படி ஒன்றும் தங்களுக்கு வயதாகிவிடவில்லையே. . .

<u>திரு. துரை முருகன்</u> : தலைவர் அவர்களே, தங்களுக்கு இன்னும் வயதாகவில்லை என்று சொல்லி தங்களை இன்ப்ளுயன்ஸ் பண்ணக் கூடாது.





<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நான் இளமையாகத்தான் இருக்கிறேன் என்று சொல்லுகிறார், இன்ப்ளுயன்ஸ் செய்யவில்லை. . .

<u>திரு. துரை முருகன்</u> : இளமையாக இருக்கிறீர்கள் என்று ஒருவரைப் பார்த்துச் சொன்னால், அது அவருக்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்கும்.

<u>திரு. அ. சுவாமிதாஸ்</u> : அடுத்து நாட்டியத்தைப் பொறுத்த அளவில், ஆபாசமான நடனங்களுக்கு அனுமதி தரக்கூடாது, காப்ரே நடனம் நடப்பதாகச் சொல்கிறார்கள், அது எங்கே நடக்கிறது, எந்த ஓட்டலில் நடக்கிறது என்று தெரியவில்லை. அதைப்பற்றி எனக்கு கவலையில்லை . . . . இன்னின்ன ஓட்டல்களில் எல்லாம் நடத்துகிறார்கள் என்று இங்கு சொல்லப்பட்டது. அதையெல்லாம். . . . . .

<u>திரு. துரை முருகன்</u> : எந்தெந்த ஓட்டல்களில் நடைபெறுகிறது என்று எனக்கு தெரியாமல்தான் இருந்தது. இங்கு ஒரு கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, இன்னின்ன ஓட்டல்களில் எல்லாம் காப்ரே நடனம் நடக்கிறது என்று இங்கு படித்துச் சொன்னார்கள். அதைக் கேட்டபோது, எந்தெந்த ஓட்டல்களில் நடைபெறுகிறது என்பது தெரியவந்தது. . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : சுவாமிதாஸ் அவர்கள் சீக்கிரமாக முடித்துக்கொண்டால் நல்லது.

<u>திரு. அ. சுவாமிதாஸ்</u> : இப்படிப்பட்ட நடனக் காட்சிகளை அரசு அனுமதிக்கக்கூடாது. இதையெல்லாம் அரசு தடை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11—40]

*<u>திரு. துரை முத்துசாமி</u> : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நடனம், நாடகத்திலே ஆபாசங்களைத் தடுக்கின்ற இந்தச் சட்டத்தை நான் வரவேற்கின்ற அதே நேரத்தில் இந்தச் சட்டம் கொண்டுவந்த நோக்கத்தை, எண்ணத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்க் கலாசாரம், பண்பாடு, இளைய தலைமுறையினரின் ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றைக் காப்பாற்ற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டத்தை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில், நாட்டிலே

இருக்கின்ற, குறிப்பாக, நாடகத்திலும், வசனங்களிலும் சரி இதைப்போன்ற ஆபாசங்களைக் காண்கிறோம். அதையும் தடுப்பதற்கு வழிவகைகள் செய்ய வேண்டும்.

அதைப்போலவே, இங்கே பேசுகின்றவர்கள் குறிப்பிட்டதைப் போல் சினிமாவிலும், வால்-போஸ்டர்களிலும் ஆபாசங்களைக் காண்கிறோம். குறிப்பாக, 'பாப்பாத்தி என்ற சினிமாவில் வால்-போஸ்டரிலேகூட ரதிதேவி என்ற நடிகை ஆட்டினுடைய பாலைக் குடிப்பதுபோன்ற ஒரு வால்-போஸ்டரை ஒட்டியிருக்கின்றார்கள். இதைப்போன்ற பலவிதமான வால்-போஸ்டர்கள் எங்கும் சென்னை நகர வீதிகளில் காண்கின்றபோது, பார்க்கின்ற ஒவ்வொரு மனிதனுடைய மன நிலை, உணர்ச்சிகள் வேறுபடுகின்றன. எண்ணங்கள் வேறுவிதமாகச் செயல்படுகின்றன. இதன் விளைவாகப் பல விபரீதங்கள் ஏற்படுகின்றன. அப்படிப்பட்டவைகளை மாற்றியமைக்கின்ற வகையிலே, சினிமா வால்-போஸ்டர்களைத் தடுத்து நிறுத்துகின்ற வகையிலே இந்த அரசு சட்டம் கொண்டு வரவேண்டும்.

அடுத்தாற்போல், சினிமாப் பாடல்களிலேயும் கூட சிலேடையில் இரண்டு அர்த்தம் கொடுக்ககூடிய வகையில் பாடுகிறார்கள். அப்படிப் பாடும்போது, அதைக் கேட்கின்றபோது தன்னை அறியாமலேயே உணர்ச்சி வசப்படுகிறான். சில இடங்களிலே சில சம்பவங்கள் நடந்திருக்கிறது. அவைகள் சொல்ல வேண்டுமானால், அசிங்கமாகவும், கேவலமாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட பாடல்களைத் தடுத்து நிறுத்துகின்ற வகையிலே சட்டத்தின் மூலம் தடை செய்யவேண்டும். சிலேடை மொழியில், இரண்டு அர்த்தம் கொடுக்கக்கூடிய, ஆபாசமான வார்த்தைகளை உபயோகப்படுத்தப்பட்ட பாடல்களை ஏராளமாகச் சினிமாவிலே காண்கிறோம்.

அடுத்தாற்போல், தமிழகத்தைப் பொறுத்த வரையில் சிவப்பு விளக்குப் பகுதிகள் எடுத்தாகி விட்டது - தடை செய்யப்பட்டு விட்டது. ஆனால், சினிமாப் படங்களில் இந்த சிவப்பு விளக்குப் பகுதிகள் காட்டப்படுகின்றது. இப்படிக் காட்டப்படுவதால், இதைப் பார்க்கின்ற இளைய தலைமுறையினர், இளைஞர்கள் ஒழுக்கம், கட்டுப்பாடு அழிந்து, அதன் மூலமாக தங்கள் எதிர்காலமும், தமிழகத்தின் எதிர்காலமும் பாழாகின்ற வகையிலே நிலைமை இருக்கின்றது. அப்பேர்பட்டவைகள் எல்லாம், இந்தச் சினிமாவிலே வராமல் தடுக்க வேண்டும்.

அடுத்தாற்போல், 'இதயம் பேசுகிறது' என்ற பத்திரிகையைப் படித்துப் பார்க்கும் போது, அவைகளில் வருகின்ற படங்களைப் பார்க்கின்றபோது இளைய தலைமுறையினர் ஒழுக்கம், கட்டுப்பாடு கெடுகின்ற வகையிலே அமைகிறது.





இதையெல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்து, இது போன்றவைகளைத் தடை செய்வதற்குச் சட்டம் இயற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகின்றேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தை ஆதரிக்கின்ற வகையிலே ஒருசில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள வாய்ப்பளித்ததற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திருத்தத்தை இந்த மன்றத்திலே ஆதரித்துப் பேசிய உறுப்பினர்கள் அத்தனைபேரும், இந்தத் திருத்தத்தை ஆதரித்து இங்கே பேசியிருக்கிறார்கள். இதிலே குறிப்பாக, பேரவைத் தலைவர் அவர்களைப் பாராட்டியாக வேண்டும். காரணம், இந்த ஆபாசம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளுகின்ற வகையில், 3 உறுப்பினர்களை வயதானவர்களாகப் பார்த்து அவர்களைப் பேச அனுமதித்ததும், 4 உறுப்பினர்கள் அந்த வயதுக்குப் போகக்கூடியவர்களாகத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு இப்படி ஆபாசம் என்பதைப் பிரித்துக் காண்கின்ற அளவிற்கும் மிகத் திறமையாக இதிலே பேசுகின்றதற்கு அனுமதித்ததை நான் பாராட்டியாக வேண்டும்.

மாண்புமிகு துரை முருகன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்டார்கள். ஆபாசம் என்பதற்கு என்ன அளவுகோல் என்ற அடிப்படையில், எல்லாவிதமான செய்கைகளையும் இந்த மன்றத்தில் செய்துகாட்டி, அவருக்கு இருக்கின்ற மிகப் பெரிய திறமையைக் காட்டினார்கள். ஆபாசத்தைப் பொறுத்தவரையில், அவரவர்கள் தங்களுடைய நிலைமைக்கு ஏற்ப, சூழ்நிலைக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளுகிறார்கள் என்ற கருத்தைத்தான் திரு. துரை முருகன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதை உள்ளபடியே யாரும் மறுக்க முடியாது. மனிதன் கெடுகின்ற நேரத்தில், சூழ்நிலைக்கேற்ப தன்னை மோசமான நிலைக்கு ஆளாக்கிக் கொள்கிற நிலைக்கு ஆபாசத்தைத் தேடி அலைகின்ற நிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அவன் நேர்மையானவனாக, நாணயமானவனாக, ஒழுக்கம் உள்ளவனாக இருக்கும் நேரத்தில் எதைத் தேடவேண்டுமோ அதைத் தேடிக்கொண்டிருக்கிறான். ஒழுக்கம் கெடுகின்ற நேரத்தில் ஆபாசத்தைத் தேடி அலைகின்ற நிலைமைகள் இன்று இருக்கிறது. ஆனால் வயதைப் பொறுத்தவரை பார்க்கிற நேரத்தில் சில உண்மைகளை நாம் பேசியாகவேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையில் நான் பேசுகிறேன். கொஞ்சம் வயதான நிலையில் இருப்பவர்கள் ஆபாசங்களைக் கடந்துவிட்ட நிலையிலும் அதைக் கொஞ்சம் விரும்புகின்ற நிலைமையைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இளைஞர்கள் கெட்டுவிடக்கூடாது என்பதில் ஆர்வத்தோடு பெரியவர்கள் ஆபாசத்தைத் தடுப்பது பற்றி நடவடிக்கை எடுத்திருக்

கிறார்கள். இளைஞர்களுக்கு இருக்கும் குறை எல்லாம் இவர்கள் எல்லாவற்றையும் அனுபவித்துப் பார்த்துவிட்டு இன்றைக்கு நம்மை அனுபவிக்க விடமாட்டேன் என்கிறார்களே என்று கருதுகிறது.

தமிழ் கலாசாரத்தை, தமிழ்ப் பண்பாட்டைப் பேணிக் காப்பதில் இந்த மன்றத்தில் இருக்கிற அத்தனை உறுப்பினர்களுக்கும் நிச்சயமாக அதிகமான ஆர்வம் இருக்கிறது. எந்த வகையில் நம்முடைய கலாசாரத்திற்கு, நம்முடைய பண்பாட்டுக்கு ஏற்றவகையில் நாம் ஆபாசங்களைத் தடை செய்ய வேண்டுமென்ற வகையில் இந்தத் திருத்தத்தின் மூலம் சில தடைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தடையின் மூலமாக தமிழ்நாட்டிலே நடைபெறுகிற நாடகமானாலும், நடனமானாலும் ஆபாசங்களைத் தடைசெய்ய வேண்டுமென்ற தூய நோக்கத்தோடு இத்தத் திருத்தத்தை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். இதிலே எதிர்கட்சியில் இருப்பவர்கள் பேசிய பேச்சைக் கேட்கிற நேரத்தில் உள்ளபடியே மகிச்சியாக இருந்தது. இந்த ஆட்சியின்மீது எந்தவிதமான ஐயப்பாடும் இல்லாமல், தூய்மையான நோக்கத்தோடு ஆபாசத்தைத் தடுக்க வேண்டுமென்ற வகையில் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை ஆதரிக்கிற நேரத்தில் மகிழ்ச்சியாக இருக்கிறது.

ஒன்றை இந்த மன்றத்தில் நினைவுபடுத்தியாக வேண்டும். நாங்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்த நேரத்தில் தமிழ்நாட்டில் மிக அதிகமான அளவுக்கு எல்லா இடங்களிலும் ரெக்கார்ட் டான்ஸ் நடக்க ஆரம்பித்தது. கிராமத்திற்குக் கிராமம் எங்கே பார்த்தாலும் கொட்டகைகள் போட்டு சூதாட்டமாக நடக்கிற அளவுக்கு ஆபாசமான ரெக்கார்டு டான்ஸ்கள் நடக்க ஆரம்பித்தன. அன்றைக்கே என்னைப் போன்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பல உறுப்பினர்கள் தீவிரமாகக் கருத்துக்களை எடுத்துச் சொன்னதின் பேரில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அதைத் தடை செய்து நிறுத்துகிற நிலைமையை நான் இன்றைக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அன்றைக்கு அந்த ஆபாசத்தைத் தடுத்து நிறுத்தினோம். அந்த நிலைமைக்குப் பிறகு மீண்டும் அந்த ஆபாசம் வந்துவிடக்கூடாது என்பதற்காகதான்ஒன்றை இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

சென்னையில் இன்றைக்கு நிறைய நாடகங்கள் நடக்கின்றன. பார்க்கின்ற நேரத்தில் எந்தவிதமான காரணமும் இல்லாமல் ஆபாசமான, மோசமான, வாசகங்களை வைத்துக் கொண்டு சில கேவலமான உணர்வுகளைத் தூண்டிவிடுகிற அளவு சில நாடகங்கள் இன்றைக்கு நடைபெறுகின்றன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதே நேரத்தில் சில நல்ல நாடகங்களும் நடக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாயத்தில் இருக்கிற மாற்ற முடியாத கருத்துக்களைத் துணிந்து எதிர்க்கும் நாடகங்களையும் பார்க்கிறோம். அந்த வகையில் சில நாட்களுக்கு முன்னால் ஒரு நாடகம் பார்த்தேன் — ஒரு வெள்ளாடு வேங்கையாகிறது என்ற நாடகம். மதுவிலக்கை ஆதரிக்கும் வகையில் — ஒரு கணவன் குடிகாரனாக இருக்கிறான் என்று தெரிந்த பின்னர் குடிகாரக் கணவனை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று சொல்லி கணவன் கட்டிய தாலியைக் கழட்டிக் கொடுத்துவிட்டுச் செல்கிற தீவிரத் தன்மையுள்ள நாடகங்களும் இருக்கின்றன. அதே நேரத்தில் பல ஆபாசமான நாடகங்களும் இன்றைக்கு சென்னையில் நடை பெறுகிறது. அந்த ஆபாசமான நாடகங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தடை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். சட்டங்களின் மூலமாக தடை செய்ய வழி தற்போது இல்லை.





ஒன்றை எல்லா உறுப்பினர்களும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆபாசத்தை நாடகத்திலும், நடனத்திலும் மட்டும் நிறுத்த முடியும். நாடகத்திலும், நடனத்திலும் மக்களுடைய ஆதரவு எவ்வளவு இருக்கிறது என்பது தெரியும். இன்றைக்கு நாடகம், நடனம் என்பது இரண்டாந்தர, மூன்றாந்தர பொழுது போக்காக மாறிக் கொண்டிருக்கிறது. மிகப் பெரிய பொழுது போக்காக சினிமா அமைந்திருக்கிறது. சினிமாவின் நிலை என்ன ? தமிழ் சினிமா இன்று வேகமாக மலையாளப் படமாக, ஆங்கிலப் படமாக மாறுகிற நிலைமை வந்து கொண்டிருக்கிறது. அதைக் கவனிக்க வேண்டுமென்று எல்லாக் கட்சி உறுப்பினர்களும் சொன்னார்கள். ஒன்றை இந்த அரசு மூலமாக மத்திய அரசுக்கு வற்புறுத்திச் சொல்ல வேண்டும். நண்பர் துரை முருகன் அவர்கள் சொன்னார்கள் — ஆங்கிலம் மட்டுமே தெரிந்த ஐ.ஏ.எஸ். ஆபிசர்கள் நல்ல தமிழ் வசனங்கள் அடங்கிய நாடகத்தை பரிசீலிக்கும்போது அந்த தமிழ் வார்த்தைகளின் அர்த்தமே தெரியாதவர்களாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். சினிமாத் துறையைப் பொறுத்தவரை மத்திய சர்க்கார் கையில் சென்சார்ஷிப்பை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எதை சென்சார் செய்வது என்று தெரியவில்லை. ஆங்கிலப் படத்திற்கு ஒரு முறை இருக்கிறது. இந்திப் படத்திற்கு ஒரு முறை இருக்கிறது. மலையாளப் படத்திற்கு வேறு ஒரு முறை இருக்கிறது. தமிழ் படங்களில் ஆபாசம் என்ற பெயரில் பல்வேறு தடைகள் வருகின்றன. பல ஆபாசங்களை ஒதுக்குகிறார்கள்.

[முற்பகல் 11-50]

அந்தத் தீமைகளை நாம் தடுத்தாக வேண்டும். சென்ஸார் என்ற முறையிலே மத்திய அரசிடத்திலே, தமிழ்நாட்டிலே வெளியிடப்படுகிற படத்திற்கு, சென்ஸார் இருக்கிறது. தமிழ்நாட்டிலே வெளியிடப்படுகிற படத்திற்கு, சென்ஸார் தமிழ்நாட்டிலேயே வருகிற அளவிற்கு நிலைமையைக் கொண்டு

வருவதற்கு வழி செய்ய வேண்டும். நாடகத்தைப் பொறுத்தவரையில் சினிமாவைப் பொறுத்தவரையில், நடனத்தைப் பொறுத்தவரையில் நாம் ஆபாசங்களை தடைசெய்கிற நேரத்திலே, திரு. சுவாமிதாஸ் அவர்கள் இங்கே ஆபாசம் பற்றிச் சொல்ல வேண்டுமென்ற நினைப்போடு, பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய ரோமாபுரி ராணிகள் பற்றிச் சுட்டிக் காட்டி, அந்தக் காலத்திலேயே ஆபாசம் என்று எல்லாம் சுட்டிக்காட்டினார். ஆனால் ஒன்று சொன்னார், அதை நான் படித்து விட்டேன் என்று சொன்னார், நான் அதற்காக அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆபாசம் என்பதை, ரோமாபுரி ராணிகளுடைய லீலைகளை எல்லாம் அவரே தெரிந்து வைத்திருக்கிறார், ஆபாசம் என்பதை கண்டிப்பதற்காக அந்த நாடுகளிலே எப்படி இருந்தது என்பதை உணர்த்துகின்ற முறையிலே அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்னார்கள் அந்த நூலிலே. ஆபாசத்தை வளர்க்க வேண்டுமென்றோ ஆதரிக்க வேண்டு மென்றோ அந்த எண்ணத்திலே அல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலிருந்து இன்றையவரையிலும் சமுதாயத்திலே ஒரு ஒழுக்கம் வேண்டும், நேர்மை வேண்டும், நாடகங்களிலே நடனங்களிலே பண்பாடு வேண்டும், நல்லொழுக்கம் வேண்டுமென்ற முறையிலே அதற்கு உதவியாக இங்கே இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் திருத்தத்தை நான் ஆதரித்து முடிக்கிறேன்.

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு நாடக நிகழ்ச்சிகள் திருத்தச் சட்ட முன் வடிவின் மீது பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் இங்கே கருத்துக்களை எடுத்து வைத்து எல்லோருமே இந்தத் திருத்தத்தை வரவேற்றுப் பேசியதற்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மசோதா மீது இவ்வளவு நீண்ட நேரம் விவாதம் நடைபெறும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. என்றாலும் எப்போதுமே மிகுந்த சூடோடும் பல்வேறு விவாத உணர்ச்சிகளோடும் நடைபெற்றுக் கொண்டு வந்து, இந்தச் சட்டமன்றமே இன்றைக்கு திருத்த மசோதாவில் பங்கெடுத்துக் கொண்டதன் மூலம்' மிகுந்த மன மகிழ்ச்சியோடு பல்வேறு சுவைமிக்க உணர்வுகளைப் பறிமாறிக் கொள்வதற்கு இந்த திருத்த மசோதா வாய்ப்பு அளித்திருக்கிறது என்பதிலே என் மகிழ்ச்சியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விவாதத்திற்கு முதலிலே கால்கோள் விழா நடத்திய அருமை மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்களுக்கு நான் இந்த மன்றத்தின் சார்பிலே பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் இந்தத் திருத்த மசோதாவை வரவேற்கிறேன் என்று சொல்லிவிட்டு வரவேற்கிறேன். ஆதரிக்கிறேன் என்றதற்குப் பிறகு அதிலே பேச





வதற்கு ஒன்றும் இல்லையே என்ற எண்ணத்திலோ என்னவோ பெரிய குறிப்புகளைச் சேகரித்து வைத்துக் கொண்டு, பல்வேறு உணர்வுகளை ஆபாசம் என்றால் என்ன என்ற தலைப்பின் கீழே டாக்டர் பட்டம் பெறுவதற்குரிய அருமையான ஆராய்ச்சியுரையை, உரையென்றால் உரையாக மட்டுமல்ல, பாடலாகவும் நடிப்பாகவும் தான் ஒரு சிறந்த நாடகக் கலைஞர் என்பதை இன்றைக்கு இந்த மன்றத்தின் மூலமாக அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். நீண்ட நாட்களாக துரை முருகன் பற்றி ஒரு செய்தி வந்து கொண்டிருந்தது. அவர் எங்களுடைய அருமை நண்பர், எங்களுக்குப் பழக்கமானவர். அவர் கல்லூரியை விட்ட காலத்திலே நல்ல தோற்றப் பொலிவையும் உருவ அமைப்பையும் பெற்ற அவர் ஒரு சிறந்த கலைஞர், நடிகராக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று மற்றவர்கள் சொன்னது மாத்திரமல்ல, அந்த ஆசை அவருக்கும் இருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் சந்தர்ப்பம் வராததாலோ அல்லது அவர்களே மறுத்துவிட்டதாலோ அந்தத் தொழிலுக்குப் போகாமல் அந்த வாய்ப்பை இழந்து விட்ட காரணத்தாலோ திருத்த மசோதாவின் மீது பேசுகிற வாய்ப்பைப் பயன்படுத்தி இந்த மன்றத்திற்கு அவருடைய ஆற்றலை இங்கே தெரிவித்தார்கள் என்று நான் கருதுகிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, நமது அருமை நண்பர் துரைமுருகன் அவர்களுக்கு இருக்கின்ற—இயற்கையாகவும் இயல்பாகவும் இருக்கின்ற அந்த ஆர்வத்தையும், நடிப்புத் திறமையையும் பயன்படுத்த அரசு முன்வந்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அவரை மட்டும் பயன்படுத்துவதா? அல்லது அருமைப் பெரியவர் திரு. எஸ். ஜே. இராமசாமி போன்றவர்கள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி போன்றவர்கள், இவர்கள் எல்லோரையும் பயன்படுத்தி அரசு திரைப்படம் எடுப்பதா என்பதைப் பற்றி நான் பரிசீலிப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்றாலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் இங்கே உணர்வுகளையெல்லாம் வேடிக்கையாகவும், அதே நேரத்தில் சில அடிப்படை உணர்வுகளையும் உள்ளடக்கி இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்தார்கள். ஆபாசம் என்றால் என்ன என்ற ஒரு கேள்வியைப் போட்டு விட்டு அவர்கள் இன்றைக்கு நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வெளிநாடுகளுக்குச் சென்று வந்த பொழுது அதிக அளவிற்கு ஆபாசங்களைப் பார்த்தார்கள் என்பதாலோ என்னவோ இங்கே பார்ப்பதெல்லாம் ஆபாசமா இல்லையா என்று அவர்கள் தெரிந்து கொள்ள முடியாத அளவிற்கு உணர்வுகள் ஏற்பட்டிருக்கின்றன என்ற அந்த விவரங்களையும் இங்கே எடுத்துத் தெரிவித்தார்கள்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1979 மார்ச் 16

ஆனால் அதற்குமாறாக, உடனே நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் எது ஆபாசம் என்பதற்கு வரையறுத்துச் சொன்னார்கள். துரை முருகன் அவர்கள் எழுப்பினார்கள், எதை நீங்கள் ஆபாசம் என்று தீர்மானிக்கப் போகிறீர்கள். அதுவும் கமிஷனரா அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரா? அவருக்கு எந்த உணர்வின் அடிப்படையிலே, எந்த மொழியின் அடிப்படையிலே உணர்வுகள் ஏற்பட்டு முதள்நாள் ஆபாசமாக தெரிந்தது, ஏழு நாட்கள் கழித்து அல்லது அடுத்த நாளே கூட ஆபாசமாகத் தெரியாமல் போனால் என்ன செய்வது என்று கேட்டு, அவர் இந்தச் சட்டத்திருத்தத்திலே கடுமையான தடையைக் கொண்டு வருவது கூடாது என்பது போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள். ஆனால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கோதண்டராமன் அவர்கள், இது கூடக்கூடாது, அங்கே ஒரு வார்த்தை, மிகப்பெரிய அளவில் பெரிதும் என்று இருக்கிறது. அதற்குள்ளே நுழைந்துக் கொண்டு தப்பித்துக் கொள்வார்கள், அதுவும் இருக்கக்கூடாது, ஒருபக்கம் தெரிந்தால், என்ன, இரண்டு பக்கம் தெரிந்தால் என்ன, எல்லாமே ஆபாசம் என்று சொன்னார்கள்.

இந்த மன்றம் இன்றைக்குச் சுவையான தலைப்பின் கீழ் அருமையான விவாதத்தை இந்தச் சட்டத் திருத்த மசோதாவின் மூலம் இந்த நாட்டு மக்கள் பெறுவதற்கு வாய்ப்பளித்திருக்கிறது.

ஆனால் மாண்புமிகு துரை முருகன் அவர்கள்கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர்கள், ஏதோ இந்தச் சட்டத்தை இந்த ஆட்சி கொண்டு வந்திருக்கிறது. அதற்கு ஒரு உள் நோக்கம் இருக்கிறதா, அது எப்படி அமல்படுத்தப்படும் என்று அஞ்சுகிறேன் என்றெல்லாம் சொன்னார்கள். அவர்களுக்கு ஒரு உண்மையை சொன்னால் உதவியாக இருக்கும் என்று சொல்கிறேன்.

<u>திரு. துரை முருகன்</u> : தலைவரவர்களே, 54-லே வந்தது. 54-லே அப்பொழுது கலை என்ன விலை என்ற நிலையில் அந்தக் காலத்தில் நடந்தது என்று சொன்னேன். இராதா அவர்கள் கூடச் சொன்னார்கள். எங்கள் ஆட்சியிலே ரிக்கார்ட் டான்சை தடுத்ததைப் பற்றி சொன்னார்கள். இந்த அமென்ட்மெண்டை அப்பொழுதிருந்தே கொண்டு வந்திருக்கலாம். ஆகவே கலைஞர் காலத்தில் வந்த அமென்ட்மெண்ட், காலப் போக்கிலே போன சட்டசபையிலே வந்திருக்கலாம், தள்ளிப்போய் இப்பொழுது வந்திருக்கிறது. இதை நான் எதிர்க்கவில்லை.

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u> : தலைவரவர்களே, முன்னாலேயே இந்த உண்மையை அவரிடத்தில் சொல்லிவிட்டேன். 74-ம் ஆண்டு அன்றைக்கிருந்த முதலமைச்சரவர்கள் எடுத்த முடிவு. அவர்கள் உருவாக்கிய சட்ட திருத்த முன் வடிவு, 76-ம் ஆண்டு ஜனவரியிலே அனுமதியைப்பெற்று



1979 மார்ச் 16] [திரு. ஆர். எம். வீரப்பன்]

சட்ட மன்றத்திலே வர இருந்தது. அதற்குப் பிறகு சட்டமன்றம் இல்லை. இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதை மாண்புமிகு துரை முருகன் அவர்களிடத்திலே முன்னாலேயே சொல்லிவிட்டேன். ஆகவே, அவர்கள் முந்திக் கொண்டு அதையும் சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே, முன்னாலேயிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த நல்ல காரியத்தைச் செய்தாலும் இந்த அரசு விட்டு விடுகிறது என்று குற்றச்சாட்டைச் சொல்லிகொண்டிருக்கின்ற மாண்புமிகு துரைமுருகன் போன்றவர்கள், நல்ல காரியங்களைச் செய்தால் இந்த அரசு விட்டு விடாது. முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்தது என்ற காரணத்தைக் காட்டி, அதை நிறுத்திவிடாது என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக் காட்டு, இதையெல்லாம் 74-ம் ஆண்டு முதலமைச்சரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, 76-ம் ஆண்டு சனவரியிலே இந்த டிராப்ட், வரைவுகள் எல்லாம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதற்குப் பிறகு சட்டமன்றம் இல்லாத காரணத்தினால் சென்ற ஆண்டிலே சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு இந்த ஆண்டு விவாதத்திற்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இதைச் சொன்னதற்குப் பிறகு இதற்கு உள்நோக்கம் இருக்க முடியாது என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். நல்லவேளையாக இப்பொழுது இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவரவர்கள் இல்லை. இருந்திருந்தால் துரை முருகன் அவர்கள் இந்த அளவிற்கு உணர்வு கொள்ள வேண்டாமென்று சொல்லியிருக்கக்கூடும். இருந்தாலும் அவர்கள் வைத்திருக்கும் வாதங்களில் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்றார்கள்.

[நண்பகல் 12-00]

நல்ல விவாதம் நடைபெற்றிருக்கிறது. அந்த விவாதத்திற்குள்ளே குறுக்கிட விரும்பவில்லை.

அது மாத்திரமல்ல, இங்கே ஆபாச சுவரொட்டிகளைப் பற்றி, மாண்புமிகு உறுப்பினர் கோதண்டராமன் அவர்கள் சொன்னார்கள் ; நம்முடைய ஜனதா கட்சி உறுப்பினர்களும் சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆபாச சுவரொட்டிகள் ஒட்டுவதைத் தடுப்பதற்கு ஒரு கடுமையான சட்டம் கொண்டு வரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தெரிவித்ததையொட்டி, உள்துறை சட்டத் துறையிடம் ஆலோசனை கேட்டு, அப்படிப்பட்ட ஒரு சட்டம் தயாராகிக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைச் சொல்கிற பொழுதே, இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் எஸ். ஜே. இராமசாமி அவர்கள் எப்படிப்பட்ட கலை உணர்வுகள் இருக்க வேண்டு

மென்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அவர் எந்தப் படத்திற்குப் போனார், எங்கு படம் பார்த்தார், எந்த சுவரொட்டியைப் பார்த்தார் என்று சொல்லும்போது, அருமை நண்பர் தாமரைக் கனி அவர்களை துணைக்கு அழைத்துக் கொண்டார். அது உண்மைதான் என்பதை தாமரைக் கனி அவர்கள் உடனே, எழுந்து, இங்கே ஆபாச சுவரொட்டிகள் தடுக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கும்போது, 'ஐயோ சுவரொட்டியிலே தானிருக்கிறது, படத்திலே இல்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். படத்திலே இருப்பதைக் கூட ஒரு வேளை அனுமதிக்கலாம். சூழ்நிலைகள், காட்சி அமைப்புகள், இவைகளைக் கொண்டு, 10 அடியிலோ, 20 அடியிலோ, 50 அடியிலோ அல்லது 10 விநாடியிலோ காட்டும் போது, அது கண்மூடிக் கண் திறக்கிற நேரத்திலே போய்விடும். அங்கே பார்க்கிறபொழுது, மற்ற சூழ்நிலைக்கேற்ப தொடர்பு கொண்டிருக்கிற காரணத்தால், மக்கள் அதை மறந்து விடுவார்கள். ஆனால், சுவரொட்டியிலே வருகிறபொழுது அது அபாயம், ஏனென்றால், திரும்பத் திரும்பப் பார்க்கும் போது, சுவரொட்டிகள் ஆபாசமாகக் காட்சியளித்துக் கொண்டிருப்பதை இந்த அரசு மிகக் கடுமையான விஷயமாகக் கருதுகிறது என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் இங்கே சொல்கிறபொழுது எது ஆபாசம், எது ஆபாசம் அல்ல என்கிற விவாதத்திலே 4 பேர் நடுத்தர வயதில் உள்ளவர்களும், 3 பேர் கொஞ்சம் எல்லையைக் கடந்தவர்களும்—நடுத்தர வயது என்று சொல்வதற்கு நண்பர் துரை முருகன் அவர்கள் பொறுத்துக் கொள்வார்கள்.

[மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. பி.எச். பாண்டியன்) தலைமை]

ஏனென்றால், இப்படிப் பட்ட ஆற்றல்மிக்க, நடிப்புத் திறமை மிக்க நடிகர் நடுத்தர வயது உள்ளவர் என்றால், யார் தன்னை அழைப்பார்கள் என்று அவர் கருதக்கூடும். அவர் இளைஞர் என்று வைத்துக் கொள்ளட்டும்—கலந்து கொண்டிருக்கிறார்கள். எப்படிப்பட்ட உணர்வுகளின் அடிப்படையிலே இந்தப் பிரச்னைகள் அணுகப் படுகின்றன என்பதைச் சொல்கிறபொழுது, யாரையும் பழி வாங்க இந்தச் சட்டமோ, சட்டத் திருத்தமோ அரசாலே பயன்படுத்தப்பட மாட்டாது என்பதை நான் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். நாட்டிலே ஏழை மக்கள், கிராமப் பகுதியிலே மிக அதிகமான அளவிற்கு, அவர்களுடைய உள்ளங்களைக் கெடுக்கிற அளவுக்கு இப்படிப்பட்ட முறைகளில் நடந்து கொண்டிருக்கின்றன என்ற காரணத்தாலேதான் இது நீண்ட நாளாக மக்களிடத்திலே உள்ள கோரிக்கையைப் பரிசீலித்து, 4, 5 ஆண்டுகளாக ஏற்பட்ட உணர்வுகளின் அடிப்படையிலே இந்தச் சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இங்கே மூலச் சட்டத்தைப் பற்றி பல்வேறு உணர்வுகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அவைகளைப் பற்றியெல்லாம் தக்க சமயம் வரும்போது அரசு பரிசீலிக்கும் என்று நான் எடுத்துச்



சொல்லி, இப்படிப்பட்ட ஒரு நல்ல அருமையான விவாதத்தை உருவாக்கித் தந்து, எல்லோருடைய ஏகோபித்த ஆதரவையும் பெற்றிருக்கிற இந்தச் சட்டத் திருத்தத்தை சபை ஏற்றுக்கொண்டதற்காக நன்றி தெரிவித்து, முறையாக ஏற்று அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

திரு. க. சுப்பு : மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசும் பொழுது, சினிமாவிலே இல்லாததைப் பற்றி 'வால் போஸ்டர்' போடப்படுகிறது என்ற உண்மையைச் சொன்னார்கள். 'வால் போஸ்டரிலே' உள்ளது சினிமாவிலே இல்லை, சென்சாரில், கத்தரிக்கோல் போட்டிருப்பார்கள். ஆனாலும் 'வால் போஸ்டர்' போடுகிறார்கள் என்று சொன்னால், அதுவும் 'சீட்டிங்' தான், 'அஃபென்ஸ்' தான். ஆனால், சர்க்கார் அப்படி ஏமாற்றியவர்கள் மீது இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்படி நடவடிக்கை எடுக்காததற்கு என்ன காரணம்? தியேட்டர்காரர்கள் மேல் உள்ள இளகிய எண்ணமா? அல்லது, போனால் போகட்டும் என்ற எண்ணமா ? உங்கள் கண்களுக்குப் பட்டது கூட போலீஸ் கண்களுக்குப் படவில்லையே, அவர்கள்மேல் இது வரை நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சுவரொட்டி ஒட்டுகிற தியேட்டர்காரர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை, அதற்குக் காரணம் என்ன என்று கேட்டிருக்கிறார்கள். இதற்கு முன்பிருந்த ஆட்சியாளர்கள் எல்லாம் என்ன காரணத்திற்காக நடவடிக்கை எடுக்கவில்லையோ அதே காரணங்களுக்காகத்தான் இந்த அரசும் இது வரை நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஆனால், அதைத் தடை செய்யவேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் இதற்கான சட்டம் கொண்டு வரப்பட இருக்கிறது. இதை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோருகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) பேரவை முன்னுள்ள கேள்வி : ''தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 26/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு—2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

[1979 மார்ச் 16

பிரிவு–1

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) பேரவை முன்னுள்ள கேள்வி : 'பிரிவு–1 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்'.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன் :

In sub-clause (1) of clause 1, *for* the figures "1978" *substitute* the figures "1979".

திருத்தம், பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு–1, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எச். பண்டியன்) : பேரவை முன்னுள்ள கேள்வி : 'முகப்புரை இச் சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.'

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, முகப்புரையின் மீது என்னுடைய திருத்தத்தை முன்மொழிகிறேன்.

In the enacting formula, for the expression "Twenty ninth year' substitute the expression "Thirtieth Year".

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1978ஆம் ஆண்டு நாடக நிகழ்ச்சிகள் (திருத்த)சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1978) திருத்தப் பெற்றபடி நிறை வேற்றப்பெற வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று சட்ட, முன் வடிவு திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.**



1979 மார்ச் 16]

(ஆ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு,

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட. முன்வடிவு எண். 40/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புகு மாற்றுத் தலைவா திரு. பி. எச் பாண்டியன் : அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகிறது.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையில் கொண்டு வந்திருக்கிற இந்த சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களை கூற விரும்பு கிறேன். இந்த சட்ட முன் வடிவை நான் வரவேற்கிறேன். இந்த மசோதாவின் நல்ல பல அம்சங்களை மந்திரி அவர்கள் சேர்த்திருக்கிறார் என்பதற்காக வரவேற்கவில்லை. இந்த மசோதாவை கொண்டு வந்ததினால் சமுதாயத்தில் கடை மட்டத்தில் இருக்கிற அந்த ஓட்டல் தொழிலாளர்களை பற்றி பேச வாய்ப்புக் கொடுத்ததற்காக இதை வரவேற்கிறேன். இந்த சட்டத்தினால் அவர்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டுவிடப் போகிறது என்று தெரியவில்லை. ஓட்டல் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் எந்த நேரத்திலும் வேலையி லிருந்து டிஸ்மிஸ் செய்யப்படலாம். மிஸ் காண்டக்ட் என்று சொல்லி டிஸ்மிஸ் செய்வார்கள். என்ன மிஸ் காண்டக்ட்— தண்ணீர் டம்ளரை தொப்பென்று வைத்தான் என்று சொல்லி வேலையை விட்டு நீக்குவார்கள். ஒரு மாத நோட் டீஸ் கொடுத்து வேலையை விட்டு நீக்குவார்கள். ஒரு மாத சம்பளம் கொடுத்து வேலையை விட்டு நீக்குவார்கள். சம்ப ளமோ, நோட்டீஸோ எதுவுமே கொடுக்காமல் கூட அவர்களை வேலையை விட்டு நீக்குவார்கள். மிஸ் காண்டக்ட் என்று முடிவு எடுப்பவர் யார், அந்த எம்ளாயர் தானே. அந்த நிலையை மாற்ற இப்போது இந்தச் சட்டத்தில் என்ன வந்திருக்கிறது. அப்பீல் போடலாம். சம்மன் கொடுத்து, அனுப்பி சாட்சிகளை விசாரிக்கச் செய்யலாம். அதற்கான ஆவணங்களை கொண்டு வந்து காட்டுமாறு கட்டாயப்படுத்த லாம். இதிலெல்லாம் அந்த தொழிலாளிக்கு என்ன நன்மை வந்துவிடப்போகிறது ? நீதி மன்ற அதிகாரங்களை அந்த அப்பேலட் அதிகாரிகளுக்கு மாற்றியிருப்பதாக சொல்கிறார்கள். அப்படி என்றால், இது கூட இல்லாமல், அப்பீல் கூட இல்லாமல் இவ்வளவு காலம் அந்த இலாகா நடந்து வந்திருக்கிறது.

அப்படி அப்பீல் போட்டு என்ன செய்ய முடியும் ? திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்று கேட்கலாம். அப்படி முடியாது என்று சொல்லிவிட்டால், காம்பன்சேஷன் கொடு என்று கேட்கலாம். ஆனால், இப்படி வேலையைவிட்டு

[திரு. க சுப்பு] [1979 மார்ச் 16

நீக்கியதற்காக அவர்கள் குடும்பத்தை பட்டினி போட்டதற்காக ஓட்டல் முதலாளிக்கு தண்டனையா கொடுக்கிறீர்கள்? மந்திரி சொல்கிறாரே என்று முதல் நாள் சேர்த்துக்கொள்வான். மறுநாள் மறுபடியும் வேலையை விட்டு நீக்குவான். திரும்பத் திரும்ப அப்பீலுக்கு போய்க்கொண்டிருக்க முடியுமா அந்த தொழிலாளியால்.

[பிற்பகல் 12-10]

அமைச்சர் அவர்கள் சிலம்பாட்டத்தில் வல்லவர்கள். வேகமாக வாதாடுகிறார்கள் இங்கே, கடைசியில் போய், ஓட்டல் ஓனரிடம் சலாம் போட்டு வ்ழும் நிலை இருக்கிறது. இன்றைக்கு சட்டத்திலே ஏற்கனவே பல எக்சம்ஷன்கள் கொடுத்து இருக்கிறீர்கள். கேட்டரிங் எஸ்டாபிளிஷ்மென்ட் கல்வி நிலையங்களில் இருந்தால் இது அப்ளை ஆகாது என்று சொல்லியிருக்கிறீர்கள். இன்று கூட அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆஸ்டலில் வேலை செய்யும் தொளிலாளிகளுக்கு பணிமுறைப் படுத்தப் பட்டு இருக்கிறதா என்றால் இல்லை. அது மட்டுமல்ல, சர்க்கார் நினைத்தால் யாருக்கு வேண்டுமானாலும் விதிவிலக்கு அளிக்கலாம். சர்க்கார என்ன 'ஆம்னிபொடன்ட்டா'. எந்த எஸ்டாபிளிஷ்மெண்ட்டிற்கும் நினைத்தால் எக்சம்ஷன் கொடுக்க. இந்த ஆஸ்டலில் வேலை செய்யும் தொழிலாளிக்கு என்ன நிவாரணம் கொடுக்கப்போகிறீர்கள். அவன் தவறு செய்தால் நீக்கப்படுகிறான். அல்லது கம்ப்ளைன்ட் கொடுத்தால் நீக்கப் படுகிறான். அவன் உரிமை கேட்க முடியவில்லை. அவன் [எப்படி கேட்க முடியும் அவன் படுப்பது, சாப்பிடுவது, உறங்குவது எல்லாமே அந்த ஓட்டலில்தான். அவன்] அங்கே வேலை இல்லை என்றால் எங்கே போவான். மனைவியை விட அன்பாக அவன் வருகிறவர்களிடத்தில் நடந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு அவனுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. எக்சம்ப்ட் செய்யும் பவர் யார் கையில் கொடுக்கப் படுகிறது. அவர்கள் ஓட்டலில் போய் சாப்பிடுகிறார்கள். போலீஸ் ஆபீசர்கள், லேபர் ஆபீசர்கள் அவர்களுக்கு ஓசி, அல்லது கணக்கு எழுதி வைத்து விட்டுச் சாப்பிடுகிறார்கள். அதனால் முதலாளி வேண்டியவன் ஆகிறான். தொழிலாளி காசு வாங்கித் தான் காப்பி தரமுடியும். அவன் எப்படி அதிகாரிகளுக்கு வேண்டியவனாக ஆகமுடியுமா, வசந்த விஹார், தொழிலாளி, வேண்டியவனாக முடியுமா? ஆகவே, தொழிலாளியைப் பற்றி நீங்கள் கவலைப்படுவது இல்லை. அமைச்சர் அவர்கள் காம்பிரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டு வர வேண்டும் என்று சொல்கிறார்கள். இப்படி நீங்கள் பீஸ்மீல் லெஜிஸ் ஸலேஷன் கொண்டு வருவதால் என்ன பிரயோசனம். அவர்கள் கூடச் சொன்னார்கள், என்னைப் பாராட்டி விட்டு பிறகு குறைகளைச் சொல்லுங்கள் என்று. பாராட்டிப் பேச வேண்டியது தான். பெரிய மனிதர்களை பாராட்டாமல் இருக்க முடியாது. பாராட்டினால் தானே விடுகிறீர்கள்.



1979 மார்ச் 16] [திரு. க. சுப்பு]

இன்றைக்கு டிஸ்போசல் ஆப் கேரண்டீட் அட்மினிஸ்டிரேஷன் முறை தான் இருக்கிறது. சிம்கோ மீட்டர் விவகாரம் எப்படி இருக்கிறது. தொழிலாளி பிரச்னையைத் தீர்த்து வைக்க நம்முடைய அமைச்சர் அவர்கள் முயல வேண்டும். ஒரு உதாரணத்தைச் சுட்டிக் காட்டுகிறேன். தற்போது லேபர் ஆபீசர்களுக்கு சிவில் ப்ரோசீசரில் சொல்லப்பட்டிருக்கிற பவர்ஸ் விசாரணை செய்வதற்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. அவர் யாரை வேண்டுமானாலும் டாகுமென்ட் ப்ரொடியூஸ் செய்யச் சொல்லலாம், அது எல்லாம் இருக்கிறது. இப்படி அவர்கள் ஆர்ம்ட்வித் பவர்ஸ் என்று வருகிற போது இன்னொரு டேஞ்சர் இருக்கிறது. ஒரு முதலாளியைப் பிடிக்கவில்லை என்றால் அவரைச் சம்மன் செய்வார்கள். இன்னொருவர் வேண்டியவர் என்றால் அழைக்கமாட்டார்கள். இந்த அதிகாரம் தவறுதலாகப் பயன்படுத்தப் பட்டு விடக்கூடாது. ஆகவே, அப்படிப்பட்ட அதிகாரம் கொடுக்கிறபோது நியாயமான முறையில் செயல்படுங்கள், அரசு தலையிடாமல் இருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். மருத்துவ மனைகளுக்கு எக்சம்ஷன் கொடுத்து இருக்கிறோம். சி.எம்.சி.க்கு கொடுத்து இருக்கிறோம். அதனால் அங்கே உள்ள தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இல்லை. அதேபோல் யூனிவர்சிடி ஆஸ்டலில் வேலை பார்க்கும் தொழிலாளிக்கும் வாய்ப்பு இல்லை. அவர்களுடைய வாழ்க்கையைப்பற்றி கவலைப்படவேண்டாமா? நினைத்தவுடனே அவர்களை வீட்டுக்குப் போகச்சொல்லலாமா? அவர்களுடைய மண்டையிலே அடிக்கலாமா? ஆகையால் எக்சம்ஷன் இருக்கக்கூடாது. (குறுக்கீடு) எல்லா எஜிகேஷனல் இன்ஸ்டிடியூஷனுக்கும் எக்சம்ஷன் கொடுத் திருக்கிறார்கள். அதைக் கூட இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த புத்தகத்திலிருந்து தான் தெளிவாகத் தெரிந்து கொண்டேன். அவரே கொடுத்து படித்துப் பார்க்கச் சொன்னார். படித்துப் பார்த்தேன். நன்றி.

'வேஜஸ்-' எப்படி இருக்கிறது என்று பார்த்தால் ஓட்டலில் தங்கி இருக்கிறவர்களுக்கு ஒரு மாதிரி இருக்கிறது; ஓட்டலிலே சாப்பிட்டால் மற்றவர்களுக்கு என்ன ரேட்டோ அதே ரேட்தான் தொழிலாளிக்கும். அதையெல்லாம் இன்க்ளூடு பண்ணியிருக் கிறார்கள். இதையெல்லாம் கொஞ்சம் பார்த்துச் செய்யக்கூடாதா என்று முதலாளிக்கு யாராவது போன் செய்தால் உடனே தொழி லாளியை டிஸ்மிஸ் செய்து விடுவார். அதிலும் குறிப்பாக, கிதா குரூப் ஓட்டலில் இது சர்வ சாதாரணம். அதைத் தொழிலாளர் கள் கேட்க முடியாது. கேட்டால் அதிலே அரசியல் விளையாட்டு. ஒரு யூனியன் தொழிலாளருக்கு வேண்டி வாதாடினால் உடனே அதை உடைக்க புதிய யூனியன் ஒன்று உருவாகும். அதுதான் இன் றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. இப்படி போட்டிச் சங்கத்தை உருவாக்குவது சரியல்ல. போட்டிச்சங்கம் உருவானால் அந்த வர்க் கமே தலை தூக்க முடியாது. அவர்கள் யாராக இருந்தாலும் சரி, கவலை இல்லை. திராவிட முன்னேற்றக் கழகமா என் அல்லது அண்ணா திராவிட முன்னேற்ற கழகமா பதல்ல பிரச்சனை. அவர்கள் யாராக வேண்டுமானாலும்

இருக்கட்டும். அவர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அவர்களுடைய ஒற்றுமையைக் குலைக்கக் கூடாது. ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமைகளைப் பார்த்தால் எந்த துறையாக இருந்தாலும் சரி, ட்ரான்ஸ்போர்ட்டாக இருந்தாலும் சரி, என்.ஜி.ஓ. யூனியனாக இருந்தாலும் சரி எதுவாக இருந்தாலும் அந்த யூனியனை இரண்டாக உடைக்க வேண்டும் என்பதில் தான் இன்றைக்கு இருக்கிற அமைச்சர் குறியாக இருக்கிறார். அமைச்சர் இராகவானந்தம் அதில் மிகவும் திறமைசாலி. சந்தேகம் இல்லை. ஒரு யூனியனை இரண்டாக உடைத்தால்தான் அவருக்குத் தூக்கமே வரும்: இல்லாவிட்டால் தூக்கம் வராது. இப்போது தூங்கி சில நாட்கள் ஆகி விட்டதாகத் தெரிகிறது. அவர்களுடைய திறமையைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. ஆளும் கட்சிக் காரர்களை புகுத்துவதற்கு அப்படித்தான் செய்வார்கள், அப்படிச் செய்தால் தான் அவர் திறமைசாலி என்று அந்தக் கட்சிக்காரர்கள் மதிப்பார்கள். என்னுடைய குறை என்னவென்றால், அவர் யூனியனை உடைக்கட்டும். அப்படி உடைப்பது தொழிலாளர் வர்க்கத்திற்கு பயன்பட வேண்டும். முதலாளிகளுக்கு அல்லது மானேஜ்மென்ட்டுக்கு சாதகமாக இருக்கக் கூடாது. ஆனால் இன்றைக்கு செய்கிற காரியங்கள் அத்தனையும் மானேஜ்மென்டுக்கு சாதகமாகத்தான் இருக்கிறது; நிர்வாகத்தினருக்குத்தான் சாதகமாகச் செயல்படுகிறார்கள்.

அன்றைக்கு முதலமைச்சர் கூட சொன்னார். சிம்கோ மீட்டர்ஸ் முதலாளி விஸ்வநாதன் நெருங்கிய நண்பர் என்று சொன்னார். அவர் நெருங்கிய நண்பராகத்தான் இருப்பார். அவர்தான் நெருங்க முடியும். அது இல்லாமல் தொழிலாளியா நெருங்க முடியும்? எந்தப் பிரச்சனையிலும் முதலாளிதான் நெருங்குவார்; முதலாளியைத்தான் நீங்களும் நெருங்கச் செய்வீர்கள். தொழிலாளி வெளியே நிற்க வேண்டியவன்தானே உங்கள் கண்ணோட்டத்தில். அதனால் அவனை எப்படி நெருங்கவிடுவீர்கள்?

கே. என். சுந்தரம் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். ஒரு யூனியனை ரெஜிஸ்டர் செய்ய வேண்டுமென்று சொல்லி 3 மாதம் ஆகியும் முடியவில்லை; இன்னும் நம்பர் வரவில்லை. ஆனால் சிம்கோ மீட்டர்ஸ் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த நேரத்தில் 48 மணி நேரத்தில் போட்டிச் சங்கத்திற்கு ரெஜிஸ்டர் செய்து, நம்பரும் வந்துவிட்டது. 48 மணி நேரத்தில் பிரச்சனையைத் தீர்க்க முடியவில்லை ஆனால் 48 மணி நேரத்தில் இன்னொரு பிரச்சனையை உருவாக்கி விட்டார்கள். அதிலே நம்முடைய அமைச்சர் இராகவானந்தம் ரொம்ப திறமைசாலி; அவருடைய திறமையை பாராட்ட வேண்டியதுதான். இப்படிப் பட்ட காரியங்களில் அவருக்கு அனுபவம் ரொம்ப அதிகம். எந்தக் காரியம் என்று கேட்கிறீர்களா? இருக்கிற சங்கத்தை உடைப்பது, போட்டிச் சங்கத்தை உருவாக்குவது, பிரச்சனையைத் தீர்ப்பதற்குப் பதிலாக இன்னொரு பிரச்சனையை உருவாக்குவது போன்றவைகளில் அவருக்கு அனுபவம் அதிகம்.



இந்தச் சட்டத்திலே இன்னொன்றைச் சொல்லியிருக்கிறார்கள். 16 வயதிலிருந்து 18 வயது வரையில் இருக்கிறவர்கள் இளைஞர்கள். 5 மணி நேரம்தான் அவர்களிடம் வேலை வாங்கலாம். ஆனால் எந்த ஓட்டலில் அப்படி இருக்கிறது? 18 வயதுக்கு மேற்பட்டவர்களிடம் 9 மணி நேரம் வேலை வாங்கலாம். அதற்குமேல் வேலை வாங்கக் கூடாது. சட்டத்தில் இருக்கிறது. ஆனால் லேபர் டிபார்ட்மென்ட்டில் என்ன செய்கிறார்கள்? சட்டத்தை அமுலாக்குகிறார்களா? இல்லை. சட்டத்தில் இருக்கிற ஓட்டை உடைசலைப் பயன்படுத்துகிறார்கள். அது போதாது என்று மற்றவர்களுடைய தொந்தரவு ஒரு பக்கம். பிரச்சனை வருகிறது என்றால் ஓட்டல் தொழிலாளர்களை உட்கார வைத்து எங்கே பேசுகிறார்கள்? அது அவர்களுக்கு கேவலமாக இருக்கிறது. முதலாளிக்கு சாதகமாக என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்கிறார்கள். ஏனென்றால் முதலாளிதான் ஓசி டிபன் கொடுப்பான்; தொழிலாளியால் எப்படி கொடுக்க முடியும்? காசு வாங்கி விட்டுத்தான் கொடுக்க முடியும். காசு வாங்காமல் கொடுத்தாலும் அவனை முதலாளி வீட்டுக்கு அனுப்பிவிடுவான்.

ஓட்டல் தொழிலாளர்கள் — முதலாளியால் பாதிக்கப்பட்டவர்கள் போலீஸ் ஸ்டேஷனில் ஏதாவது கம்பிளைண்ட் கொடுத்தாலும் போலீசார் அதைப்பற்றி விசாரிப்பதில்லை. மாறாக அவனை அடிப்பார்கள். ஓட்டல் தொழிலாளி பக்கம் பேசுவது அவர்களுக்கு கேவலமாகத் தெரிகிறது. அதனால் தொழிலாளியை லத்தியால் அடிக்கிறார்கள். அதனால் முதலாளியை அடிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. நியாயத்தைக் கேட்டால் போதும். தொழிலாளியை லத்தியால் அடித்தால்தான் அவர்களுக்கு மரியாதை. தவறு செய்திருந்தாலும் கீதா குரூப் முதலாளியை அடிப்பார்களா? ஜெயராமனை அடிக்கத் தைரியம் வருமா? அடிப்பார்கள். எப்படி அடிப்பார்கள்? 'சல்யூட்' அடிப்பார்கள். (பலத்த சிரிப்பு). தொழிலாளிக்கு லத்தி அடி; முதலாளிக்கு சல்யூட் அடி.

யாராக இருந்தாலும், நிர்வாக இயந்திரமாக இருந்தாலும், அமைச்சராக இருந்தாலும் நீங்கள் நியாயம் கிடைக்க வழி செய்யுங்கள். அநியாயத்திற்குத் துணை போகாதீர்கள். ஓட்டல்காரர்கள் ஒவ்வொருவரையும் புரிந்து வைத்திருக்கிறார்கள். யார், யாரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இங்கே ஒரு காண்டீன் இருக்கிறது. அங்கே போய் காப்பி சாப்பிட்டேன்; சகிக்கவில்லை. அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் அதே கான்டீனுக்கு ஆள் அனுப்பி டிபன் வாங்கிவரச் செய்தார்கள். எனக்கும் கொடுத்தார்கள். சாப்பிட்டுப் பார்த்தேன். நல்ல சுவையாக இருந்தது. நான் காண்டீனிலே போய் சாப்பிட்டதற்கும், அமைச்சர் கொடுத்ததற்கும் பெருத்த வேறுபாடு இருந்தது.

[1979 மார்ச் 16

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: நான் ஓட்டலிலே டிபன் சாப்பிடுவதில்லை. நான் தந்தது என்னுடைய இல்லத்திலிருந்து வந்தது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்களுக்கு கொடுத்தேன். சான்ட்விச்சஸ் உடன்.

[பிற்பகல் 12–20]

திரு. க. சுப்பு: இன்றைக்கு நான் சாப்பிட்டதைச் சொல்லவில்லை. அன்றைக்கு ஒரு நாள் சாப்பிட்டேன், அதைப் பற்றிச் சொன்னேன். எப்படியோ ஓட்டலிலே இருந்து வாங்கிச் சாப்பிடுவது நன்றாக இல்லை என்று ஒத்துக் கொள்கிறார்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்த மசோதா இங்கே வருவதாகத் தெரிந்துதான், மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னை திரு.சுப்பு அதிகமாகத் தாக்கி விடக்கூடாது என்பதற்காக காலையிலே டிபன் கொடுத்தார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சாதாரண ஆள் கிடையாது. அவரை ஒருவரும் அசைக்க முடியாது. அடுத்து நான் சொல்ல வருவது இந்த லேபர் ஆலோசனைக் குழுவைப் பற்றி. இந்த மாதிரிக் குழுக்களிலே அனுபவம் வாய்ந்தவர்களைப் போட வேண்டும். ஆனால் இவர்கள் வளர்மதி என்ற ஒரு பெண்ணைப் போட்டிருக்கிறார்கள். ***

திருவள்ளுவர் கூடச் சொல்லி இருக்கிறார்.

''மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்
மற்றவர் சொற்கேட்டல் செவிக்கின்பம்''.

என்று குறளே இருக்கிறது. ஆகவே . . . . .

திரு. ப. சந்திரன் : தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது லேபர் ஆலோசனைக் குழுவிலே ஒரு பெண்ணைப் போட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்போது தவறான ஒரு கருத்து படும்படி அந்தப் பெண்ணைப் பற்றிச் சொல்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதியை......

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): அந்தப் பெண்ணைக் குறித்துப் பேசியதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, தாய்க்குலத்திற்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்பதில் புரட்சித் தலைவர் அவர்கள் மிக அக்கறை உள்ளவர்கள் என்பதை சமீபத்

*** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





தில் ஒரு இதழில் கூட நான் படித்தேன். அவருக்கு ஆதரவாக 55 சதவீதம் பெண்கள் இருக்கிறார்கள், அவர்கள் இருக்கிற வரையில் புரட்சித் தலைவரை அசைக்க முடியாது என்று நான் படித்தேன்.

equality of status.

என்பது போன்று ஆண்களும், பெண்களும் ஒரே வேலை செய்தால் ஒரே ஊதியம் கொடுக்க வேண்டும் என்று சட்டமே வந்திருக்கிறது. எனவே, பெண்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு பெண் உறுப்பினர்களுக்கும் அமைச்சர் பதவி கொடுத்திருக்கிறார்கள் என்பதை பெருமையோடு நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : இங்கே கொடுத்திருக்கிறீர்கள். மிக்க சந்தோஷம். ஆனால், மதுரை கார்ப்பரேஷன் எலக்ஷன் சமயத்திலே உங்களுக்குப் பெண்களே கிடைக்கவில்லை போலிருக்கிறது.

லேபர் ஆலோசனைக் குழுவில் அனுபவம் உள்ளவர்களைப் போட வேண்டும். கொஞ்சம் வயதானவர்களையாவது போட வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு அனுபவம் இருக்கும். ஆலோசனை சொல்ல முடியும். ஆனால், நீங்கள் குழந்தையே இல்லாத ஆட்களைப் போட்டிருக்கிறீர்கள் . . . . . .

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, அந்தப் பெண் ஒரு குழந்தை பெற்றவர் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு.க. சுப்பு: தலைவரவர்களே, அந்த மைன்யூட் டிடெய்ல்ஸ் எல்லாம் எனக்குத் தெரியாது. ஒரு வேலை மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் தாய்க்குலத்திற்கே ஒரு புதிய அத்தியாயத்தை, அதாவது குழந்தை பெற்றவர்கள்தான் தாய்க்குலம் என்று ஏற்படுத்துகிறார்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, தாய் என்றால் பிள்ளை பெற்றவர் என்றுதான் அர்த்தம். மற்றவர்கள் எல்லாம் கன்னியர்கள். கன்னி கழிந்தவர்கள் மீண்டும் கன்னியர்களாக மாறுவது என்பது வேறு. நான் தாய்க்குலத்தைப் பற்றிச் சொல்கிறேன். தாய்க்குலத்தைப் போடுங்கள் நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், கொஞ்சம் வயதானவர்களாக அனுபவம் வாய்ந்தவர்களாகப் பார்த்துப் போடுங்கள். அவர்களுக்குப்

போதிய எகஸ்பீரியன்ஸ் இல்லை. லேபர் வெல்பேர் அட்வைசரி போர்டு என்றால் அதிலே அனுபவம் மிக்கவர்களைப் போட வேண்டும். அட்வைஸ் பண்ணுவது என்றால் யார் பண்ணுவது? அனுபவம் மிக்கவர்கள் தான் பண்ண வேண்டும். அப்படி இருக்கும் போது அனுபவம் இல்லாதவர்களைப் போட்டால் என்ன அர்த்தம்? அர்த்தமே இல்லை என்பதுதான் என்னுடைய அர்த்தம்.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கன்னியைப் பற்றிச் சொன்னார்கள். வழக்கத்திலே இருக்கின்ற சொல்படி பார்த்தால் கன்னி என்றால் கன்னி கழியாதவர் என்றுதான் அர்த்தம். ஆகவே, அவர் என்ன பொருளிலே சொல்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, கன்னி கழிந்தவர்களே மறுபடியும் கன்னியாக ரீ பெர்த் பெற்று வந்துவிடுவார்கள். அது வேறு விஷயம். மிஸ் என்பதை மிஸ் பண்ணி மிஸஸ் ஆகி விடுவார்கள். பிறகு மீண்டும் மிஸ் ஆகிவிடுவார்கள். ஆகவே, அதைப்பற்றி நான் சொல்ல விரும்பவில்லை. ஆகவே, தாய் குலத்தைப் போடுவதாக இருந்தால் அனுபவம் வாய்ந்தவர்களாக பார்த்துப் போடுங்கள். வேறு ஒன்றும் நான் சொல்லவில்லை. வேறு எந்த கன்னித்தாயைப் பற்றியும் சொல்லவில்லை. ஆகவே இப்படிப்பட்ட ஆலோசனைக் குழுக்களிலே நல்ல அனுபவம் மிக்கவர்களைப் போட வேண்டும். அப்போதுதான் அவர்களால் ஆலோசனை சொல்ல முடியும். இந்தக் குழு அமைப்பது ஆலோசனை சொல்வதற்காக. என்டர்டெய்ன்மென்டுக்காக அல்ல. ஆகவே, அப்படி இருக்கும்போது அனுபவமற்றவர்களைப் போடாமல் அனுபவம் மிக்கவர்களைப் போடுவதுதான் சாலச் சிறந்தது என்பதைச் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் கிடையாது.

அடுத்து ஓட்டலிலே குழந்தைகளை வேலைக்கு அமர்த்தக் கூடாது என்று சொல்கிறார்கள். 16 வயது முடிந்திருக்க வேண்டும். 16 வயதுக்குக் கீழே உள்ளவர்களை ஹோட்டல்களில் வேலைக்கு வைக்க முடியாது. ஆனால், நடப்பது என்ன? இப்படிச் சொல்வதால் இப்போது வேலையில் இருப்பவர்களைப் போகச்சொல்லி விடாதீர்கள். அதிகாரிகள் சட்டத்தை சரிவர அமல்படுத்துவதில்லை, அது முடியாது. முதலாளிகளிடம் அமல் படுத்த முடியாது. அதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே, இந்தச் சட்டத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும். நான் அமைச்சர் அவர்களை மறுபடியும் பாராட்டுகிறேன். காரணம், இந்தப் பிரச்சனைப் பற்றிப்பேச சான்ஸ் இருக்கிறது. இன்று தொழிலாளர்களைப் பற்றி யோசிக்கிறோம், அவர்களைப் பற்றிக் கவலைப்படுகிறோம். ஆனால், ஹோட்டல் தொழிலாளர்கள் பற்றி பேச ஆள் கிடையாது. அவர்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. ஒரு பாக்டரியாக இருந்தால் கவலைப்படுவார்கள். இவர்கள் துண்டு துண்டாக இருப்பதால் திடீரென்று அவர்களை வீட்டிற்கு அனுப்பி



விடுகிறார்கள். ஏதாவது அவர்கள் சொன்னால் போலீஸ்காரர்கள் பிடித்துக் கொண்டுபோய் விடுகிறார்கள். ஹோட்டல் தொழிலாளர்களைப் பற்றிப் பேசினால் அது எடுபடுவதில்லை. ஹோட்டல் தொழிலாளிகள் பற்றிப் பேசினால் நம்மைக் கேவலமாக நினைக்கிறார்கள். முதலாளிகளுக்காகப் பேசினால் மரியாதை கொடுக்கிறார்கள். ஏர் கண்டிஷன் ரூமில் சென்று கேட்கிறார்கள். ஆக, தொழிலாளர்களை தெருவில் விட்டுவிடாதீர்கள். இவற்றை அமல் படுத்தக்கூடிய ஏஜன்ஸி வீக்காக இருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்து விட்டதால் எல்லாம் முடிந்து விட்டன என்று நினைக்க வேண்டாம். ஆனால் இந்தச் சட்டத் திருத்தம் வேண்டும். ஓரளவிற்கு அதிகாரிகளுக்கு அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், அவர்களின் நடவடிக்கைகளில் தலையிடக்கூடாது. அமைச்சர் அவர்கள் நன்றாக டீரில் வாங்குகிறார்கள். அமைச்சர் அவர்கள் ''பார்டிஸான் ஆட்டிட்யூட்''—டோடு நடக்கக்கூடாது. ஹோட்டல் தொழிலாளிகளுக்கு பாதுகாப்பு கொடுக்கக்கூடிய அளவிற்கு, அவர்களின் சர்வீஸை முறைப்படுத்தும் அளவிற்கு இந்த அரசாங்கம் முழுமையான ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். சில சட்டங்கள், தாமதப்படுத்தப்படுவதன் காரணமாக சில தவறுகள் ஏற்படுகின்றன. இரண்டாண்டு காலம் ஒரு தொழிற்சாலையில் தொடர்ந்து வேலை செய்தால் அவர்களை நிரந்தரமாக்கும் சட்டம் வரும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. இன்னும் அந்தச் சட்டம் வரவில்லை. ஆகவே, இரண்டு ஆண்டுகள் முடியுமுன்னே வீட்டுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள் தொழிலாளிகளை. சிம்ஸன் போன்ற நிறுவனங்களில் கூட வீட்டுக்கு அனுப்புகிறார்கள். அதைப் பாராட்டும் முறையில் சர்க்கார் உதவி செய்கிறார்கள், பட்ஜெட்டில் உதவி செய்கிறார்கள். ஆகவே, முன்கூட்டியே சொல்லாது திடீரென்று ஒரு அவசரச் சட்டதைக் கொண்டுவரவேண்டும். அப்படிக் கொண்டுவருவதாக முன்கூட்டியே சொன்னால் பல பேர்கள் பாதிக்கப்படுகிற நிலை ஏற்படுகிறது. ஆகவே, ஒரு மசோதாவை ரிட்ராஸ்பெக்டீவ் எபெக்ட் கொடுத்து கொண்டு வரவேண்டும், முழுமையான ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டு, இந்தளவிற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. சி. கோவிந்தராசன் : தாற்காலிகத் தலைவர் அவர்களே, காட்டரிங் எஸ்டாப்ளிஷ்மென்ட்ஸ் ஆக்ட் செக்ஷன் 19 (2) க்கு இப்போது திருத்தம் கொண்டுவந்திருப்பதை மார்க்ஸிஸ்ட் கட்சியின் சார்பாக நான் வரவேற்கிறேன். அமைச்சர் அவர்களுடைய இந்த செயலுக்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். நான் அவர்களை பாராட்டுவதே கிடையாது என்ற குறைபாட்டை, அவர்கள் நீண்ட காலமாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரில்கூடச் சொன்னார்கள். நான் நல்லது பல செய்தாலும் என்னைப் பாராட்டுவது கிடையாது என்று. நிச்சயமாக இந்தத் திருத்தத்திற்காக நான் அவர்

[திரு. சி. கோவிந்தராசன்] [1979 மார்ச் 16

களைப் பாராட்டுகிறேன். இதுவரை அப்பலெட் அத்தாரிட்டிக்கு
இருந்த அதிகாரங்களை அதிகப்படுத்தி சாட்சிகளை சம்மன் செய்து
வர வழைப்பதற்கும், டாகுமென்ட்ஸை ப்ரொட்யூஸ் செய்ய சம்
மன் செய்யவும், வேறு இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட நபர்களை
வர வழைக்கவும் வேண்டிய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருப்பது
சரிதான். இந்த அதிகாரங்களை மட்டும் கொடுத்துவிட்டால்
போதாது. எந்தெந்த டாகுமென்ட்ஸை வரவழைப்பது, எந்தெந்த
விட்னஸை வரவழைப்பது என்பதுதான் பிரச்னை. சிக்கல்கள் எப்
படி எப்படி வருகின்றன என்று பார்க்க வேண்டும். ஒரு ஹோட்டல்
தொழிலாளி மூன்று மாதம் வேலை செய்திருக்கிறான், அவனை
திடீரென்று நீக்கிவிடுகிறார்கள். ஒருவர் இரண்டு மாதம் வேலை
செய்திருக்கிறார், அவரை நீக்கிவிடுகிறார்கள். ஹோட்டல்
முதலாளிகள் நடத்தக்கூடிய திருவிளையாடல்களைப் பற்றி, அங்
குள்ள நிலைமைகள் பற்றி எனக்கு முன் பேசிய மாண்புமிகு
உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் குறிப்பிட்டார்கள். எதற்காக
திடீரென்று நீக்குகிறார்கள் என்றால் அவர்களுக்கு தொடர்ச்சியாக
சர்வீஸ் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான். இதனால், பல
சச்சரவுகள் ஏற்படுகின்றன. சட்டப்படி சர்வீஸ் ரிக்கார்ட்ஸ், லீவ்
ரிக்கார்ட்ஸ் இவையெல்லாம் முதலாளிக்ள் வைத்து இருக்க வேண்
டும். அவை இல்லாமல் செய்ய ஏற்பாடுகள் நடக்கின்றன. 15,
20 ஆண்டுகள் சர்வீஸ் தொடர்ச்சியாக இருப்பவர்களைக் கூட
வேலையை விட்டு நிறுத்தி அவர்கள் சர்வீஸை கட் செய்ய முயற்சி
கள் எடுக்கப்படுகின்றன முதலாளிகளால்.

[பிற்பகல் 12-30]

அது எப்படி? திடீரென்று எனக்கு நஷ்டம் வருகிறது என்று
சொல்லி ஓட்டலை மூடிவிடுவது, இது தான் அம்பீஸ் கபேயில்
நடந்தது. சின்ன வயதிலிருந்தே நான் அந்த ஓட்டலைப்
பார்த்திருக்கிறேன். இத்தனை ஆண்டுகளாக நடந்து வந்திருக்
கிறது. 20, 30 ஆண்டுகளாக வேலை செய்த தொழிலாளர்கள்
எல்லாம் அங்கே யிருந்தார்கள். என்ன காரணத்தைச்
சொல்லி மூடினார்கள்? மூடுவதற்கு அவர்கள் ஏதாவது காரணம்
சொல்ல வேண்டும். சர்வீஸை வெட்ட வேண்டும் என்பதற்
காகவும் தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை புறக்கணிப்
பதற்காகவும், இதில் எங்களுக்கு நஷ்டம் வருகிறது என்று
சொல்லி மூடிவிட்டார்கள். ஒரு நாளைக்கு 2 லட்சம், 7 லட்சம்
ரூபாய் வருமானம் வந்தாலும்கூட தங்களுக்கு நஷ்டம்
ஏற்படுகிறது என்று சொல்லி ஓட்டலை மூடுகிறார்கள். இதை
திறந்து வைப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க முடிந்தது.
இதிலுள்ள அப்பலட் அத்தாரிட்டி என்ன செய்ய முடிந்தது?
நஷ்டம் என்று சொல்லி மூடிவிடலாம். இப்போதுஇந்தத் திருத்தப்
படி அதைப்பற்றி விசாரிப்பதற்கு டாக்மென்ட்ஸ்களை அதிகாரி
கள் வரவழைக்கலாம். எப்படிப்பட்ட டாக்மென்ட்ஸ்களை வர
அழைத்து அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது
தான் பிரச்சனை, நான் கூற விரும்புவது இந்த அப்பலேட்
அத்தாரிட்டிதான் இந்தசட்டத்தை என்போர்ஸின் செய்யும் அத்தா



1978 மார்ச் 16] [திரு. சி. கோவிந்தராசன்]

ரிட்டியும் கூட. முதலாளிகள் சட்டப்படி லீவ் கார்டுகள் சர்வீஸ்
ரிகார்டு வைத்திருக்க வேண்டும், என்று சொல்லப்பட்டிருக்கிறதே
தவிர அவைகளை அமல்படுத்துவதற்கு என்போர்ஸ் பண்ணு
வதற்கு இதில்எந்த ப்ரவிஷனும் இல்லை. இப்படிப்பட்ட ப்ரவிஷன்
இல்லாமல் என்ன செய்யமுடியும் என்று தெரியவில்லை. அதுமட்டு
மல்ல, ஓட்டல்களில் இருக்கின்ற இன்னொரு விஷயம். அப்படியே
கண்டுபிடித்து குற்றத்தை நிரூபித்தாலும் கூட, திரு. சுப்பு
அவர்கள் சொன்னது போல், தண்டனை கொடுப்பதற்கு
என்ன அதிகாரங்கள் இந்த அதிகாரிகளுக்கு இருக்கிறது?
தண்டனை அளித்தாலும்கூட 50 ரூபாய் பைன் போடலாம்
என்று இருக்கிறது. ஒரு நாளைக்கு 7 லட்சம் 10 லட்சம்
வருமானம் வருகின்ற ஓட்டல்களில் இந்த குறைந்த பைனை
கட்டிவிட்டு பெரும்பான்மையாக இருக்கின்ற தொழிலாளிகளை
எல்லாம் வீட்டுக்கு அனுப்ப வேண்டிய சூழ்நிலை இருந்து
கொண்டிருக்கிறது. இந்த நிலையில் ஒரு தவறை கண்டுபிடித்து
தண்டனை கொடுக்கப்படுகிறது என்றிருந்தாலும், அதிகபட்ச
தண்டனையாக 50 ரூபாய் 500 ரூபாய் என்று பைன் போடு
கிறார்கள். இப்படி விதிக்கப்படுகின்ற 50 ரூபாய் அல்லது
500 ரூபாய் பைனை கட்டிவிட்டு, அதே நேரத்தில் நூற்றுக்
கணக்கான தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பக்கூடிய
நிலைமைதான் ஏற்படுகிறது. இச்சட்டத்தில் என்போர்ஸ்
மென்ட் அத்தாரிட்டிக்கு பனிஷ்மென்ட் கொடுக்கவும் ப்ரவிஷன்
இல்லை. சில விதிகளை என்பொர்ஸ்மென்ட் செய்யவும்
ப்ரவிஷன் இல்லை. இது நிச்சயமாக இருந்தாக வேண்டும்.
இதுபோன்ற முதலாளிக்குத் தண்டனை ஒரு சிறு தொகை
அபராதம் தான். ஆனால் தொழிலாளிக்கோ தன் வேலையையே
இழக்கும் படுபயங்கர நிலை. இன்னொன்று இந்த ஆக்டில்
சாப்டர் 5ல், செக்ஷன் 23 (6)-ல்—" If the employer or his
representative fails to appear on a specified date, the Appellate
Authority can proceed to hear the appeal and decide ex-parte."
என்று சொல்லப்பட்டிருக்கிறது. முதலாளியோ அல்லது அவர்
பிரதிநிதியோ குறிப்பிட்ட நாளில் விசாரணைக்கு ஆஜராக
வில்லை என்றால், எக்ஸ்பார்டியாக தீர்ப்பு வழங்கப்படலாம்
என்று இருக்கிறது. ஆனால் அதிலே 23 (7)-ல் சொல்லப்
பட்டிருப்பது என்னவென்றால்....' If the applicant fails to
appear on a specified date, the Appellate Authority may dismiss
the appeal என்று இருக்கிறது. வழக்கு போட்டிருக்கக்கூடிய
தொழிலாளி, அவன் குறிப்பிட்ட நாளில் அந்த கேஸ்க்கு
போகவில்லை என்றால் அந்த அப்பீலை டிஸ்மிஸ் செய்யலாம்
என்றிருக்கிறது. எம்ளாயர் அல்லது அவரது ரெப்ரஸன்
சேட்டிவ் என்று சொல்லப்பட்டிருப்பது போல் அப்ளிகன்ட்
அல்லது அவரது ரெப்ரஸன்டேட்டிவ் என்று சொல்லப்பட
வில்லை. தொழிலாளி வரவில்லை என்றால் அந்த வழக்கை
டிஸ்மிஸ் செய்யலாம் என்றிருக்கிறது. அதாவது இந்தச்
சட்டத்தின்படி பார்த்தால் அப்பலட் அத்தாரிட்டி முன்னால்

ஒரு பிரச்னையை கொண்டு போகும்போது, முதலாளிகள் விரும்பினால் வக்கீல்களை வைத்துக்கொள்ள முடியும். ஆனால் தொழிலாளியோ தொழிற்சங்கத்தைச் சேர்ந்த ஒரு பிரதிநிதியையோ அல்லது ஒரு வக்கீலையோ வைத்துக்கொள்வதற்கு இந்த சட்டத்தில் இடமில்லை. இதன் காரணமாக தொழிலாளியினுடைய வழக்கு டிஸ்மிஸ் ஆகின்ற சூழ்நிலை இருக்கிறது.

இப்போது ஒரு கேசே இருக்கிறது. சமீபத்திலே சென்னை நகரத்திலே 'இராமச்சந்திர பவன்' என்ற ஓட்டலிலே, தொழிலாளி 'ஆதரைஸ்' செய்தும் அவனுடைய பிரதிநிதி 'அப்பியர்' ஆக முடியவில்லை. இன்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்ட்டில் இந்த வசதி தொழிலாளிக்கு உண்டு. இதிலே அப்படி இல்லாத காரணத்தால், அதை எதிர்த்து தொழிலாளி சம்பந்தப்பட்டவரை ஒரு பிரதிநிதியை ஆதரைஸ் பண்ணினாலும் தொழிற்சங்கத்தின் நிர்வாகிகளோ அல்லது ஒரு வழக்கறிஞரோ அப்பியர் ஆவதற்கு அதிகாரம் கிடையாது என்று சொல்லி, இந்த இராமச்சந்திர பவன் அதிபர்கள் ஹை-கோர்டிற்குச் சென்று ஸ்டே உத்தரவு வாங்கியிருக்கிறார்கள். அந்த ஸ்டே உத்தரவை வெகேட் பண்ணுவதற்கும் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இதைப் பார்த்தால், 'எம்ப்ளாயர்' அல்லது அந்த 'எம்ப்ளாயரி'ன் ரெப்ரசென்டேட்டிவ் என்றிருக்கிறதே தவிர, 'அப்ளிகன்ட்' அல்லது அவர் ஆதரைஸ் செய்யக்கூடிய ரெப்ரசென்டேடிவ் என்று செக்ஷன் 23ல் இல்லாத காரணத்தால் இந்த நிலைமை வந்திருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை.[

அடுத்தாற்போல் நான் சொல்ல விரும்புவது, மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் கூறியது போல் கல்வித் துறையிலே இருக்கக்கூடிய, எஜுகேஷனல் இன்ஸ்டிடியூஷனிலே, காடரிங் எஸ்டாபிளிஷ்மென்டில் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளுக்குப் பாதுகாப்பு இல்லை. சட்டத்திலிருந்து அவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதோடு கூட, இந்தச் சட்டம் தொழிற்சாலைகளிலே இருக்கக்கூடிய கான்டீன் தொழிலாளிகளுக்கு அமுல் ஆகாது. அமைச்சர் அவர்கள் பதவிக்கு வந்தவுடன் குறிப்பிட்டார்கள்; என்னிடமே சொன்னார்கள் என்றும் நினைக்கிறேன். தொழிற்சாலைகளிலே இப்படிப்பட்ட கான்டீன் இருந்தால், அதை கூட்டுறவுத் துறையிலே அமைத்து நடத்துவதாகச் சொல்லி, குறைந்த பட்சமாக ரூ. 40, ரூ. 50, ரூ. 100 என்று அந்தத் தொழிற்சாலைகளிலே உள்ள தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படுகின்ற இந்த அடிப்படையை மாற்றி, அந்தந்த தொழிற்சாலைகளிலுள்ள இதர தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்படும் சம்பளத்தை இவர்களுக்கும் சம்பளமாக கொடுக்கக்கூடிய முறையிலே விரைவிலே ஒரு சட்டம் கொண்டுவரப் போவதாகச் சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு வரையிலும் அது வரவில்லை. பெரிய கம்பெனியான





ஈ.ஐ.டி. பாரியிலே கூட கான்டீனிலே இருக்கக்கூடியவர்களுக்கு ஒரு சம்பளமும், தொழிற்சாலையிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு ஒரு சம்பளமும் கொடுக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. இந்த கான்டீன் தொழிலாளர்களுக்கு குறைந்த சம்பளம் கொடுக்கப்படுகிறது. இன்னும், சில இடங்களில் கூட்டுறவு என்று சொல்லிக் கொண்டு ஏமாற்றி ரூ. 50, ரூ. 60 சம்பளம் கொடுக்கிறார்கள். எனவே, அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்ததுபோல், தொழிற்சாலைகளிலுள்ள கான்டீன் தொழிலாளர்களுக்கு ஊதியத்தை வளர்த்தக் கூடிய வகையில் விரைவிலே கொண்டு வரவேண்டுமென்று நான் பிரியப்படுகிறேன்.

அதற்கு அடுத்தாற்போல், சுப்பு அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். ஓட்டல் தொழிலாளிகள் இப்படிப்பட்ட மோசமான சட்டத்தின் கீழ் இருக்கக்கூடிய நிலைமையில், அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து, அவர்களையெல்லாம் ஒன்றுபடுத்திக் கொண்டு, பலமாக இருந்தால்தான் தங்கள் வாழ்க்கையை பாதுகாத்துக் கொள்ள முடியும். ஆளும் கட்சியின் செய்கை அவர்களின் ஒற்றுமையை உடைக்கின்ற முறையில் இருக்கின்றது. ஓட்டல் தொழிலாளர்களுக்கு போட்டிச் சங்கம் ஏற்படுத்துவதில், ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் பல்வேறு நிறுவனங்களுக்குச் சென்று, எங்கள் சங்கத்திலே சேருங்கள் என்றும், இல்லாவிட்டால் அடிப்பதுமான நடவடிக்கையில் கடந்த 3, 4 மாதங்களாக சென்னை நகரத்தில் நடக்கும் காட்சியாக இருக்கிறது. ஓட்டல் தொழிலாளர்களுக்காக இப்படிப்பட்ட நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரக்கூடிய இந்த அரசு, ஓட்டல் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்த ஒரு சங்கத்தை, இயக்கத்தை வளர்ப்பதற்கு உதவி செய்வதற்கு பதிலாக தங்கள் அதிகாரத்தைக் காட்டி, ரௌடித் தனத்தைச் செய்து, எங்கள் சங்கத்தில் சேருங்கள், இல்லாவிட்டால் சங்கடம் கொடுப்பது என்ற முறையில் அவர்களை வற்புறுத்துவது, அதிலும் சென்னையிலுள்ள மாவீரனே இவ்வாறு விரட்டுவது என்பது சரியில்லை. இந்த மாதிரியான ஒரு நிலைமை சென்னை நகரிலே, 4, 5 மாதங்களாக தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது.

[பிற்பகல் 12-40]

ஆளும் கட்சியினர் அங்கே போய் போட்டிச் சங்கங்கள் வைக்கிறார்கள். தென்னாற்காடு மாவட்டம் மூங்கில் தரப்பட்டில் ஏற்கனவே ஒரு சங்கம் இருக்கிறது. அங்கு நான்கு நாட்களில் ஒரு சங்கத்தை ஆரம்பித்தார்கள். ஒரு மாதமானாலும் மூன்று மாதமானாலும் வேறு யாரும் அவ்வாறு சங்கத்தை ஆரம்பித்தால் ரிஜிஸ்டர் செய்ய முடியாது. ஆனால் ஆளும் கட்சியினராக இருந்தால் போட்டிச் சங்கங்களை அமைத்து ஒரே நாளில் பதிவு செய்யக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் 10 பேர் இருந்

தாலும் சங்கத்தை ஆரம்பிக்கிறார்கள். இப்படி தொழிலாளர்கள் மத்தியில் போட்டி சங்கத்தை ஆரம்பிப்பதற்காக ஒரு நபரை தயார் செய்து அவர் எது வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்று சொல்லக்கூடிய நிலைமை இருப்பது சரியல்ல. இந்த நிலைமையைப் போக்க தொழிலாளர் நல இலாகா முன்வரவேண்டும்.

இந்த திருத்தத்தை வரவேற்கிறேன். இந்தத் திருத்தத்தினால் மட்டும் பிரச்சினை தீராது. போதுமான தஸ்தாவேஜுகளையோ, நபர்களையோ சம்மன் பண்ணும் அதிகாரம் இல்லை. ஆகவே, நல்ல முறையில் திருத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டல் தொழிலாளர்கள் சம்பந்தமாக மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மசோதாவை வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஓட்டல் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் சமூகத்தில் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கும் ஒரு பகுதியினர் என்பதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் நன்கு உணர்வார்கள். கிராமங்களில் வறட்சிப் பிரதேசங்களில் எந்த விதமான தொழில் வாய்ப்பும் இல்லாமல் சாப்பாட்டுக்குக் கூட வழி இல்லாத ஜனங்கள் நகரத்தை நோக்கி வருகிறார்கள். நகரங்களில் ஏதாவது வேலை கிடைக்குமா என்று பார்க்கிறார்கள். எந்த வேலையும் கிடைக்காமல் கடைசியில் ஓட்டலில் வேலைக்குச் சேருகிறார்கள். ஏதோ ஊதியத்தைப் பெற்றுக் கொண்டு சாப்பாடு கிடைக்கிறதே என்ற எண்ணத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஓட்டல் தொழிலாளர்கள் நிலைமையை எண்ணிப்பார்க்கும்போது '' எக்ஸ்ப்ளாயிட்டிங் தி பாவர்டி ஸ்ட்ரிக்கன் பீப்பள் '' என்றுதான் சொல்லவேண்டும். இந்த நிலையைப் பயன்படுத்தி ஓட்டல் முதலாளிகள் எந்த அளவுக்கு லாபம் சம்பாதிக்க வேண்டுமோ அந்த அளவுக்கு லாபம் சம்பாதிக்கிறார்களே தவிர, தொழிலாளர்களுக்கு எந்தவிதமான நன்மையும் செய்வதில்லை என்பதை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் நன்கு உணர்வார்கள். இப்போது இருக்கிற சட்டங்களைப் பார்க்கிறபோது ஓட்டல் தொழிலாளர்களுக்கு பல்வேறு ஆர்கனைஸ்டு லேபரில் இருக்கின்றவர்களுக்குக் கிடைக்கிற உரிமைகள் கிடைக்க வாய்ப்பு இல்லை என்பதை நன்கு அமைச்சர் அவர்கள் உணர்வார்கள்.

இன்று பெரிய ஓட்டல்கள் மூடிக் கிடப்பதைப் பார்க்கிறோம். அங்கே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள் என்ற காரணத்தால் மூடிவிட்டதாகக் கூறுகிறார்கள். எதற்காக



வேலை நிறுத்தம் செய்தார்கள்; எதற்காக ஓட்டலை மூட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்பதை அரசும் அந்த இலாகாவும் பரிசீலித்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க கடமைபட்டிருக்கிறார்கள்.

அந்தத் தொழிலாளர்கள் ஊதியம் கேட்கிறார்கள். பணி பாதுகாப்பு கேட்கிறார்கள். அப்படிக் கேட்டவுடன் அவர்களை வேலையிலிருந்து நீக்குகின்ற காரணத்தால் ஓட்டலை மூடிவிடுகிறார்கள். இந்தத் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்க வேண்டுமென்று சொன்னால் அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிடுவது என்பது வரவேற்கத்தக்கது அல்ல. தனியார்தான் இப்படிச் செய்கிறார்கள் என்று சொன்னால் அரசு நிறுவனங்களில் கூட இந்த நிலை இருக்கிறது என்பதை தொழிலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். 14 நாட்கள் வேலை கொடுத்து விட்டு இரண்டு நாள் பிரேக் கொடுத்து மறுபடியும் வேலை கொடுக்கிறார்கள். தொடர்ச்சியாக வேலை கொடுத்துவிட்டால் நிரந்தர உரிமை வந்துவிடும் என்று அந்த உரிமை அவர்களுக்குக் கொடுத்துவிடக் கூடாது என்பதற்காக அரசு நிறுவனங்களில் 'அன்ஃபேர் லேபர் பிராக்டிசைக், கையாள்கிறார்கள். அரசு நிறுவனங்களில் இந்த நிலைமை ஏற்படக் கூடாது. இந்த மாதிரி தாழ்ந்த நிலையில் உள்ள ஓட்டல் தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை கிடைக்கக்கூடிய வகையில் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். ஒரு வேளை இது தற்காலிக நிவாரணமாக இருக்கலாம். அந்த முறையிலே இந்த நிவாரணம் அவர்களுக்குக் கிடைத்தாலும் உண்மையிலேயே அது போதுமானதாக இல்லை என்பதைச் சொல்லி, அமைச்சர் அவர்கள், ஓட்டல் தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை, குறைந்த பட்ச ஊதியம், வேலைப் பாதுகாப்பு ஆகியவற்றைக் கொண்ட ஒரு காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டுவர வேண்டுமென்று கேட்டு இந்தத் திருத்தத்தை ஆதரித்து அமர்கிறேன்.

***திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். இருக்கிற சட்டத்திலே என்ன சிரமங்கள் இருந்தன என்பது எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் லேபர் ஆபிஸர் அப்பலட் அதாரிடியாக இருப்பார் என்று முன்பே இருக்கிறது. அப்பீலை விசாரணை செய்கிறபோது சம்மன் பண்ணமுடியாது, ஆனால், இன்பார்ம் பண்ணலாம். இன்பார்ம் பண்ணி இம்மாதிரி அப்பீல் வந்திருக்கின்றது, என்ன சொல்கிறீர்கள் என்று விசாரிக்கலாம். ஆனால், அவர் வந்து சொல்லவில்லையென்றால் அது அவர் தவறு. ஆனால் அதன் பேரிலே ஒரு ஜட்ஜ்மெண்டை கொடுக்கலாம் என்று இருக்கிறது. அந்த ஜட்ஜ்மெண்ட் இறுதியானது, அதை எதிர்த்து கோர்ட்டிற்குப் போகமுடியாது என்று ஆக்டிலேயே இருக்கிறது. ஆகவே முன்னாலே என்ன சிரமங்கள் இருந்தன, இது வந்ததற்குப் பிறகு ஸ்பெஷலாக என்ன புதிய பலன்கள் கிடைக்கின்றன

என்று தெரியவில்லை. அது இருப்பதாலே ஒன்றும் கெடுதல் இல்லை, இருக்கட்டும். அது இல்லாததாலே என்ன சிரமங்கள் ஏற்பட்டன என்பதை அவர்கள் சொல்ல வேண்டும்.

முதலாளிக்கு இன்பார்ம் பண்ணி அவர் வரவில்லையென்றால், அவர் வரவேண்டுமென்று கட்டாயம் கிடையாது, அவர் வந்து கட்டாயம் சாட்சியம் சொல்லவேண்டுமென்ற கட்டாயம் கிடையாது. அவர் வந்து சொல்லாததாலே தீர்ப்பு எழுத முடியாது என்பதில்லை. ஜட்ஜ்மெண்ட் எழுதலாம், அதற்குப் பிறகு அவர் கோர்ட்டிற்குப் போகமுடியாது என்று ஏற்கெனவே சட்டத்திலே இருக்கிறது. ஆகவே இந்தத் திருத்தத்தில் என்ன புதிய பலன்கள் என்று விளக்கம் சொல்லப்படவில்லை.

தீர்ப்பு எழுதிவிடலாம், தீர்ப்பை எப்படி அமலாக்குவது? லேபர் கோர்ட், லேபர் டிரிப்யூனல் இன்றைக்கு அவார்ட் கொடுக்கிறது என்றால் அதை அமலாக்குவதற்கு ஒன்றும் இல்லை, அதை அமலாக்குவதற்கு அதிகாரங்களை அந்த அதிகாரிகளுக்குக் கொடுக்க வேண்டும். அப்படி அந்த ஜட்ஜ்மெண்டை அவர்கள் அமலாக்கவில்லையென்றால், அவர்களுக்குக் கடுமையான பெனால்டி, தண்டனை கொடுக்க அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும். அப்படியில்லையென்றால் எத்தனை தீர்ப்புகள் கொடுத்தாலும் பயனில்லை. ஆகவே, இம்மாதிரித் திருத்தங்களைக் கொண்டுவருகின்ற முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இந்த மசோதாவை எல்லோரும் வரவேற்றுப் பாராட்டியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-50]

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அருமை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இந்தத் தொழிலாளர்களுக்குச் சட்டம் இருக்கிறதா என்று கேட்டார்கள். இருக்கிறது என்று சொன்னேன். இருக்கிறது என்று சொல்லிவிட்டு 19-ஏ வோடு ஏஏ என்ற பிரிவைக் கொண்டு வருகிறோம் என்று சொன்னதற்குப் பிறகு புத்தகத்தைத் தாருங்கள் என்று படித்துப் பார்த்துவிட்டு, பத்து நிமிஷங்களுக்குள்ளாக இவ்வளவு விஷயங்களை அவர்கள் பேசியது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள். எனக்குத் தூக்கம் வருவதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இங்கே பெருமான் ஜவஹர்லால் நேரு அவர்கள் சொன்னதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 6 hours is a must 7 hours is a luxury 8 hours is a criminal waste of time. ஒரு மனிதன் கட்டாயம் ஆறு மணி நேரம் தூங்க வேண்டும், ஏழு மணி நேரம் தூங்கினால் அது சுகவாசம், எட்டு மணி நேரம் தூங்கினால் He is wasting time காலத்தை வீணாக்குகிறான் என்று சொன்னார்கள். அதைத்தான் நான்



சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு) தூக்கமே வருவதில்லை என்று சொன்னார்கள். அப்படியிருந்தாலும் நான் பெருமைப்படுகிறேன். தூக்கம் வராத வியாதிக்கு Insomnia என்று பெயர். அந்த ஒரு வியாதி மாவீரன் லெனின் அவர்களுக்கு இருந்தது. அது எனக்கு இருக்கிறது என்றால் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். லெனின் சரித்திரத்தைப் படித்தவர்களுக்கு இது நன்றாகத் தெரியும்.

அடுத்தாற்போல மற்றபடி சில கருத்துக்களை அவர்கள் வழங்கினார்கள். அவர்களுக்கு நான் சொல்ல விரும்புவதெல்லாம் நான் நான்கு பேர்கள் சொன்னதற்கும் சேர்த்தே பதில் சொல்லி விடுகிறேன். இப்பொழுது "இன்டஸ்ட்ரி" என்பதற்குப் புது விளக்கம் வந்திருக்கிறது. அதை மனத்திலே கொண்டு, எஜுகேஷனல் இன்ஸ்டிடியூஷன்கள் நடத்துகின்ற Restaurants and Canteens இவைகளுக்கு விதிவிலக்கு கொடுத்துள்ள விதியை நீக்கலாமா என்று இதற்காக அமைக்கப்பட்ட குழு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அது பரிசீலனை செய்யவில்லை என்றாலும், அது அடிபட்டுப் போய்விடும் என்பது என் கருத்து. ஏனென்றால், இன்டஸ்ட்ரி என்பதற்குப் புது விளக்கம் வந்திருக்கிறது. ஆகவே, இந்தத் திருத்தத்தை வரவேற்றவர்கள் திருத்தம் போதாது என்று சொன்னார்கள். இந்த அரசின் கொள்கை, ஒரு சோஷலிச நாட்டில் தொழிலாளர்கள் தங்கள் ஊதியத்திற்காகவோ, தங்கள் fringe benefits மற்றவைகளுக்காகவோ போராடுவதில்லை. ஏனென்றால் built in provisions அவர்களுக்குத் தேவையான சலுகைகள், ஊதியம் போன்றவைகள் சட்ட பூர்வமாகவே நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றன. சோஷலிச சித்தாந்தத்தை பேரறிஞர் அண்ணா அவர்களின் பாதையில், அண்ணாயிசம் என வகுத்துக் கொண்டு செயல்படுத்த இருக்கின்ற புரட்சித் தலைவர் அவர்கள் தொழிலாளர்களுக்காக இருக்கின்ற சலுகைகள் சோஷலிச நாடுகளில் இருப்பதைப்போல் இருந்துவிட வேண்டும், எங்களுக்கு இது தேவை என்று போராட வேண்டிய தேவையில்லை, இருபது நாள் வேலை செய்தால் ஒரு நாள் earned leave, குறைந்த பட்சம் 8-1/3 per cent Bonus என்பது போன்று இன்று சட்டம் உள்ளது. அதைப்போல எல்லாமே இருக்க வேண்டுமென்று அவர்கள் கருதினார்கள். இதற்காகவே ஒரு குழுவை அமைத்து எல்லாத் தொழிலாளர் நலச் சட்டத்திற்கும் திருத்தங்களை நீங்கள் பரிந்துரை செய்யுங்கள், அதை அரசு பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கும், மசோதா கொண்டு வரும் என்று சொல்லி குழு அமைத்திருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அருமைச் சகோதரர், பல்லாண்டுக்காலம் என்னுடன் பணியாற்றிய காட்டூர் கோபால் அவர்கள் மறைந்தது மிகவும் வேதனைக்குரியது. அவர்க்குப் பதிலாக வேறொருவர் வேண்டுமென்று கேட்டோம், வேறொருவர் பெயரும் வந்திருக்கிறது. எனவே, திராவிட முன்னேற்றக் கழகமும் அங்கே இருக்கின்றது, அவர்கள் பரிந்துரை வழங்குவார்கள் என்று நான் நம்புகிறேன்.

[திருஎஸ். இராகவானந்தம்] [1979 மார்ச் 16

அதற்குமுன்னால் பேசிய திரு. கோவிந்தராசன் அவர்கள் சொன்னார்கள், பேக்டரி ஆக்ட்டைப்பற்றிச் சொன்னார்கள், கான்டீனை பற்றிச் சொன்னார்கள். பேக்டரி ஆக்ட் சட்டத்திலே, என்னுடைய நினைவு சரியாக இருக்குமேயானால், If memory [illegible] 46ஆவது பிரிவில் 250 பேர்களுக்கு மேல் இருக்கின்ற தொழிற்சாலைகளில் கான்டீன் இருக்க வேண்டுமென்று இருக்கிறது அப்படி கான்டீன் இருந்தால் It is [illegible] statutory provisions சட்டத்திற்கேற்ப அவர்கள் நடந்து கொள்கிறார்கள் என்றுதான் சொல்வேன். அப்படியிருந்தால் பேக்டரி தொழிலாளர்களாகி விடுவார்கள் என்பதுதான் என் கருத்து. எனவேதான் நான் சொல்கிறேன், ஒரு பேக்டரியிலே கான்டீன் இருந்தால் அவர்களையும் பேக்டரி தொழிலாளர்கள் போல் பாவிக்காமல் தனியாகக் கான்ட்ராக்ட் என்ற வகையில் வைத்து, குறைவான ஊதியம் கொடுக்கப்பட்டால், அது தவறு என்பது என் கருத்து. You b[illegible] an industrial dispute.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நான் குறுக்கிடுவதற்காக வருந்துகிறேன். அமைச்சரவர்கள் சொன்னது, தனியார் துறையிலே கான்டீன் வைப்பதை, கான்ட்ராக்ட் முறையிலே வைக்கிறோம். ஆனால், சர்க்கார் நிறுவனத்திலே, தமிழ்நாடு சிமெண்ட் தொழிற்சாலை, ஆலங்குளத்திலே இருக்கிறது. அங்கேயும் கான்டீனில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களை பாக்டரி தொழிலாளர்களாகக் கருதாமல் இருக்கிறார்கள். அது அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்குமே......

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நான் சொல்லிக் கொண்டு வந்ததை முழுமையாக— உங்கள் பேச்சைப் பொறுமையாக நான் கேட்டதைப் போல்— நீங்கள் கேட்பீர்களென்று நம்புகிறேன். அப்படி இருக்குமானால், தொழில் தகராறு எழுப்ப வேண்டும், உடனே அரசு தலையிட முடியாது. அதுபற்றிய 'கேஸ் லா' இருக்கிறது. ஆகவே, அரசு 'கேஸ் லா' விற்கு ஏற்ப தொழிற் தகராறு ரெய்ஸ் ஆனவுடன், தீர்ப்பை வாங்க முயற்சி எடுக்கலாம். ஏனென்றால், மீண்டும் சொல்கிறேன், எனது நினைவு சரியாக இருக்குமானால், 'கான்டீன்' தொழிலாளர்களை பாக்டரி தொழிலாளர்களாக பாவிக்க வேண்டுமென்று நீதிமன்றத் தீர்ப்பு இருக்கிறது.

திரு. க. சுப்பு: நீங்கள் சொல்வது, தனிப்பட்டவர்களிடம் 'கேஸ் லா' எழுப்பலாம். ஆனால், அரசாங்க நிறுவனத்திற்கு எதிராக யார் பேரில் எழுப்புவது ? உங்களை, டிஸ்பியூட்டில் சேர்க்கமுடியுமா ? சேர்க்க முடியாது. ஆகவே, நீங்களே பார்த்து நீக்குங்கள். வட்டம் சுற்றி வெளியேபோகவேண்டிய தேவையில்லை, ஆகவே, நீங்களே அக்குறையை நீக்கிவிடுங்கள்.



1979 மார்ச் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழர் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான திருவாளர் அமிர்தலிங்கம் அவர்கள் நம்முடைய நடவடிக்கைகளை பார்க்க பார்வையாளர் இருக்கையில் அமர்ந்திருக்கிறார்கள். நம்முடைய பேரவையின் சார்பில் அவர்களை வருக, வருக என்று வரவேற்கிறோம். (ஆரவாரம்)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:— நான் மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம் அது ஒரு இன்டஸ்ட்ரி என்று வந்தால் He is an industrial worker. When he becomes an industrial worker, the Industrial Disputes Act applies. ஆகையினாலே, அரசு நடத்தினாலும் அது ஒரு தொழில் என்று சொன்னால், அவருக்குத் தொழில் தகராறு சட்டத்துடைய பலனைப் பெறுவதற்கு வாய்ப்பும் வசதியும் இருக்கிற காரணத்தால்— நான் ஏற்கெனவே சொன்னேன், ரூல் ப்ப என்று— அவ்வகையில் தொழில் தகராறு எழுப்பினால், இந்த அரசு தொழில் நீதிமன்றத்திற்கு அனுப்பும். ஏனென்றால், கேஸ் லா இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொண்டு அந்தப் பிரச்சினையை இப்போது எழுப்ப வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே, திரு. ஜேம்ஸ் அவர்கள் கூட, அரசு நிறுவனங்களைப் பற்றிததான் சொன்னார்கள். அங்கே இருக்கக்கூடிய கேன்டீன் தொழிலாளர்கள், .மற்றவர்கள் தொழிற்சாலை தொழிலாளர்களாகப் பாவிக்கப்படவில்லையென்றால், நீங்கள் தொழில் தகராறு .எழுப்புங்கள், இந்த அரசு தொழில் நீதிமன்றத்திற்கு அனுப்புவதைப்பற்றி பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய சௌகரியம் என்ன என்று மாண்புமிகு உறுப்பினர் திருவாளர் மாரிமுத்து அவர்கள்கேட்டார்கள். இப்பொழுது கொண்டு வந்திருக்கிற சட்டத்தின்படி 1908ஆம் ஆண்டு சிவில் நடைமுறைச் சட்டக் கோவையின்கீழ் (மத்தியச் சட்டம் 5/1908) வழக்கு ஒன்றை விசாரணை செய்யும்போது சிவில் நீதிமன்றம் ஒன்றிடம் நிலைபெற்றுள்ள அதே அதிகாரங்களை அது கொண்டிருக்கும். அவையாவன : (1) ஒரு நபருக்கு அழைப்பாணை விடுத்து வரவழைத்து உறுதி மொழியின் பேரில் அவரை விசாரித்தல்; (2) ஆவணங்களைத் கொண்டு வந்து காட்டுமாறு கட்டாயப் படுத்துதல்.; (3) சாட்சிகளை விசாரிப்பதற்காக அழைப்பாணைகளை அனுப்புதல். இந்த 'எக்ஸ்டிரா பவர்,—அதிக அதிகாரங்களை லேபர் ஆபீசருக்கு (அவருக்கு) கொடுத்திருக்கிற காரணத்தால் அது தொழிலாளர்களுக்குச் சாதகமாக முடியும். நீங்கள் சொன்னீர்கள், It is not justifiable 'ரிட்' மனுவில், அப்பீலில் ஹைக்கோர்ட்டுக்குப் போகலாம் அக்ரீவ்ட் பார்ட்டி என்று சொல்லி, அதற்கு இங்கே வழியிருக்கிறது. This is only a beginning அதாவது ஓட்டலிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு இந்த அரசு செய்து கொண்டு வருகிற நன்மைகளிலே இது

[திரு. எஸ். இராகவானந்தம்] [1979 மார்ச் 16

ஆரம்பம் என்றுதான் சொல்கிறேன். ஏற்கெனவே, நிலையாணையியில்—ஸ்டாண்டிங் ஆர்டர் 100-ம் அதற்கு மேலும் உள்ள தொழிலாளர்களைக் கொண்ட தொழில் நிறுவனங்களுக்குத் தான் பொருந்தும் என்பதை 50-ம் அதற்கு மேலும் உள்ள தொழிலாளர்களைக் கொண்ட தொழில் நிறுவனங்களுக்குப் பொருந்தும் என்று சட்டம் கொண்டு வந்திருக்கிறது இந்த அரசு. போனஸ் சட்டம், 20-ம் அதற்கு மேல் உள்ள தொழிலாளர்களை வைத்துள்ள தொழில் நிறுவனங்களுக்குத் தான் பொருந்தும் என்பதை, 10-ம் அதற்கு மேலும் உள்ள தொழிலாளர்களுக்குப் பொருந்தும் என்று கொண்டு வந்திருக்கிறது இந்த அரசு ; புரட்சித் தலைவர் நிரம்பச் செய்வதில் இது ஆரம்பம், இன்னும் இந்த அரசு நிறையச் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, நீங்கள் எல்லாம் வரவேற்றதற்காக நன்றி தெரிவித்து, இந்தத் திருத்த மசோதாவை நிறைவேற்றித் தரும்படி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி.—''தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையில் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றன.

பிரிவு 1.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 1—இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, பிரிவு 1-ல் நான் கீழ்க்கண்ட திருத்ததை முன் மொழிகிறேன் :

In sub-clause (1) of clause, for the figures 1978, substitute the figures 1979.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.

பிரிவு—1. திருத்தப்பெற்றப்படி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.



1979 மார்ச் 16]

முகப்புரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:—''முகப்புரை, இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, முகப்புரையில் கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன் :

In the enacting formula, *for* the expression "Twenty, ninth year," *subsiitute* the expression "Thittieth year."

திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே ''தமிழ்நாடு 1978-ம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 40/78), திருத்தப்பெற்றப்படி, நிறைவேற்றப்பெற வேண்டும்'' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு, திருத்தப் பெற்றபடி, சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

(6) அரசினர் தனித் தீர்மானம்.

மத்திய கூட்டுறவு வங்கியில் கடன் வசதிக்கான உத்தரவாத வரையறையை உயர்த்துவது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அரசினர் தனித் தீர்மானத்தை முன் மொழிகிறேன்:—

''தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 73—D பிரிவின் கீழ் சொல்லியுள்ளவாறு, மாநில சட்டமன்றத்தின் ஒப்புதலுடன் மத்திய கூட்டுறவு வங்கிகள், மற்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி பெறும் குறுகிய கால கடன், நடுத்தர கால கடன், நடுத்தரக்கால மாற்று வசதிக் கடன்களுக்கு அரசின் உத்தரவாத

உயரளவு வரையறையை முறையே ரூ. 250 இலட்சம், ரூ. 1,490 லட்சம், ரூ. 7,400 இலட்ச அளவிற்குக் கூட்டுறவுத் துறையின் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் ஒன்பதாம் நாளிட்ட 82 ஆம் எண் அரசாணையில் தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளதாலும்;

மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்த மட்டில் நடுத்தரக் கால மாற்றுவசதிக் கடனுக்கான உயரளவு உத்தரவாத வரையறையை ரூ. 10,900 இலட்சத்திற்கு உயர்த்துவது அவசியம் ஏற்பட்டுள்ளதாலும்;

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 73—D பிரிவின் கீழ் சொல்லியுள்ளவாறு, மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்த மட்டில் நடுத்தரக் கால மாற்றுவசதிக் கடனுக்கான உத்தரவாத வரையறையை ரூ. 10,900 இலட்சத்திற்கும், மொத்த வரையறையை ரூ. 12,640 இலட்சத்திற்கும் உயர்த்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தீர்மானித்துள்ளது.''

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கொண்டு வந்திருக்கிற இந்த தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். கூட்டுறவுத் துறையிலே விவசாயிகளுக்காக குறுகிய கால கடன்கள், நடுத்தரக் கால கடன்கள், பல்வேறு காரணங்களாலே, இயற்கையின் உற்பாதங்களாலே விளைச்சல் இல்லாமல் கடனை அடைக்கமுடியாமல் நிறுத்தி வைக்கப்பட்ட கடன்கள் இருப்பதால் அரசு உத்தரவாத வரம்பை உயர்த்த அரசாங்கம் இந்தத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறது. அது ஆதரிக்கக்கூடிய ஒன்று. அதுவும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் உள்ளவர்கள் தான் இந்த பலன்களை பெறுகிறார்கள். தஞ்சாவூர் கூட்டுறவு வங்கி, கும்பகோணம் கூட்டுறவு வங்கி போன்றவைகளை குறிப்பிட்டு போடப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு பலன் அளிக்கக்கூடியது இந்தத் தீர்மானம் என்பதை கூறிக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத சூழ்நிலையில் தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலேயும் இயற்கையினால் பாதிக்கப்பட்டு, வறட்சியினால், புயலால், வெள்ளத்தால், மற்ற இயற்கை உற்பாதங்களால் பாதிக்கப்பட்டு வருவாயே இல்லை என்ற காரணத்தினால், கடன்களை திருப்பிக் கொடுக்க முடியாமல்போய், எங்கள் கடன்களை ரத்து செய்ய வேண்டும் என்று கோரினார்கள். அதைப் பொறுத்த வரையில் அரசு எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை. அதை இந்தச் சபையில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் எடுத்துக் கூறினார்கள், எதிர்க் கட்சியைச் சேர்ந்த





வர்களும் எடுத்துக் கூறினார்கள். இருந்தாலும் கூட அரசு அதைப்பற்றி என்ன யோசனை செய்துக் கொண்டிருக்கிறது என்று நமக்கு தெரியவில்லை. இன்னும் உயர்மட்டக் குழுவினுடைய அறிக்கை வந்து சேரவில்லை, அது வந்தபிறகுதான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறினார்கள். அந்த உயர் மட்டக் குழு எப்பொழுது அறிக்கை கொடுக்கப் போகிறது? அந்த அறிக்கை மீது எப்பொழுது அரசு முடிவு எடுக்கும். கொடுத்த கடனை திரும்ப வசூல் செய்த பிறகுதான் அந்தக் கடன் வந்தபின்னால்தான் புதிதாக விவசாயத்திற்கு கடன் கொடுக்க முடியும் என்று சொல்வார்கள், ரிசர்வ் பாங்குகாரர்கள். ரிசர்வ் பாங்கை வற்புறுத்த அரசு கடமைப்பட்டிருக்கிறது. இதற்கு மத்திய அரசுடன் மாநில அரசு எடுத்துச் சொல்லி நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைப்பற்றி நீங்கள் என்ன செய்ய யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று புரியவில்லை? ஒரு தடவை இரண்டு தடவை என்றால் பரவாயில்லை, மூன்று தடவைகள் நான்கு தடவைகள் இப்படி இயற்கையின் சீற்றத்தினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒட்டு மொத்தமாக தரவேண்டிய கடன்கள் அத்தனையும் திருப்பிக் கொடுக்க முடியுமா?

இப்படி எத்தனை காலத்திற்கு மாற்றிக்கொண்டே போவது? ஒரு காலத்தில் ரத்து செய்யவேண்டியது தானே? நிவாரணம் அளித்துத்தானே ஆகவேண்டும். அதைக் காலத்தோடு செய்யுங்கள். இல்லாவிட்டால் பல்வேறு சங்கடங்கள் ஏற்படும். ஆகவே, சமுதாயத்தில் சங்கடம் ஏற்படாவண்ணம் இருக்கவேண்டுமானால், அரசு காலத்தோடு விரைவில் அதுவும் இந்த சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிவதற்குள் அறிவித்து விட்டால் அது விவசாயிகளுக்கு நிம்மதியைத் தரும். விவசாயிகள் நிம்மதியாக இருந்தால் தான் அரசும் நிம்மதியாக இருக்க முடியும். ஆகவே, அரசு விரைவில் ஒரு முடிவு எடுத்து அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்தத் திருத்தத்தை ஆதரித்து அமைகிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தின் மீது, ஆதரவு தெரிவித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்கு ஒரு மிகுந்த வரப்பிரசாதமாக அமைந்து இருக்கிறது. இந்த கூட்டுறவு வங்கிகள், குறுகிய கால கடன்கள், மத்தியக் காலக் கடன்கள், நீண்ட காலக் கடன்கள் கொடுக்கின்றன. குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாகவும், மத்தியக் காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாகவும், மாற்றுவதற்கு ஒரு காரண்டியாக இந்தத் தீர்மானத்தை இங்கு கொண்டு வந்து இருக்கிறீர்கள். இது வரவேற்கக் கூடிய ஒன்று தான்.

ஆனாலும், நம்முடைய மாநிலத்தில் கூட்டுறவு வங்கிகள் இனி மேல் சரிவர வேலை செய்ய முடியுமா என்று பார்த்தால் ஒருக்காலும் முடியாது என்ற நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. கூட்டுறவு மத்திய வங்கி எல்லாம் எப்படி இருக்கிறது என்றால் கையிலே ஒரு விதமான பணமும் இல்லாமல் கையேந்தும் நிலையில் இருக்கின்றன. இன்று இருக்கும் கிராம கூட்டுறவு விவசாய வங்கியிலிருந்து, ஐக்கிய நாணய சொசைடிகள் வரையில் செயல்பட முடியாத சூழ்நிலையில் இருக்கின்றன. இதனால் புதிதாக கடன் கொடுப்பதற்கு போதுமான வசதி இல்லாமல் போய் விடுகிறது. கமர்சியல் பாங்குகளில் கடன் கிடைக்கவில்லை. ஆகவே, விவசாயிகளைப் பொறுத்த வரையில், கூட்டுறவு வங்கி ஒரு கற்பக விருட்சம், காமதேனு போல் இருக்கின்றது. இன்றைக்கு கூட்டுறவு வங்கிகளின் கடனை மாற்றிக் கொண்டே போனால் அவர்களுடைய கதி என்ன ஆகும். அங்கே இருக்கும் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கக்கூட முடியாத நிலை இருக்கிறது. ரிசர்வ் பாங்க் ஒத்துழைத்தால் தான் அவர்கள் இயங்க முடியும்.

அங்கே இருக்கிற அரசியல், நான்-அரசியல் கமிட்டிகள் செயல்படாமல் இருக்கின்றன. அங்கே என்ன நடக்கிறது என்ன செய்கிறார்கள் என்பது தெரியாமல் இருக்கிறது. அரசாங்கம் இப்படி அலட்சியப் போக்கில் நடக்க விடக்கூடாது. அங்கே இருக்கிற அதிகாரிகள் அவர்கள் நினைத்ததைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். அதற்காக, இன்றைக்கு பஞ்சாயத்து ஒன்றியங்களில் குழுக்கள் போட்டு இருப்பது போல், குழுக்கள் போட வேண்டும். அங்கே என்ன நடைபெறுகிறது என்று அறிந்து கொள்ள ஒவ்வொரு மத்திய வங்கியிலும் குழுக்கள் போட வேண்டும்.

[பிற்பகல் 1-10]

அதே மாதிரி ஸ்டேட் கோவாபரேட்டிவ் பாங்கிலும் போட வேண்டும். இன்றைக்கு விவசாயிகள் ஒரு பக்கம் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் எப்படியாவது கடனை ரத்து செய்ய வேண்டுமென்று. அரசாங்கம் ஒரு பக்கம் நிற்கிறது. ஒரு குழு போட்டால் அவர்களே போராட்டம் நடத்துகின்றவர்களுக்கு பதில் சொல்லிவிடுவார்கள். அரசாங்கம் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. அந்தக் குழுவிலே எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களையும் இடம் பெறச் செய்யலாம். (மணியடிக்கப் பட்டது) எனக்கு இன்னும் சிறிது நேரம் கொடுத்திருக்கலாம். மணியடித்து விட்டபடியால் நான் இதற்கு மேல் பேசவில்லை.

திரு. பெ.சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த தீர்மானத்தின் மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



இந்தத் தீர்மானத்தில் வங்கிகளுடைய வரம்பை உயர்த்தியிருக்கிறார்கள். அதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் இன்றைய தினம் தமிழ்நாட்டில் இருக்கிற மத்திய கூட்டுறவு வங்கிகள், கிராமங்களில் இருக்கிற விவசாயக் கூட்டுறவு கடன் சங்கங்கள் எல்லாம் விவசாயிகளுக்கு உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக கடன் தர முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்குச் சொல்லப் படுகின்ற காரணம், தவணை கடந்து விட்டது, மத்திய வங்கி கடன் தவணை கடந்து விட்டது என்று சொல்கிறார்கள்.

நானும் நண்பர் துரைமுருகனும் வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிற மத்திய வங்கி தவணை கடந்து விட்டது என்று சொல்லுகிறபோது அமைச்சரவர்கள் அப்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். என்னைப் போன்ற உறுப்பினர்கள் விவசாயிகளை உற்சாகப் படுத்தி அவர்கள் எல்லாம் கடனைத் திருப்பிக் கட்டினால்தான் வங்கிகள் விவசாயிகளுக்குக் கடன் தரமுடியும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைய தினம் நாங்கள் உற்சாகப்படுத்தினாலும் விவசாயிகள் கடனை அறவே தள்ளிவிட வேண்டுமென்று சொல்லுகின்ற அந்தக் கருத்தை நாங்கள் முழுவதுமாக ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொன்னாலும் விவசாயச் சங்கம் அந்தக் கோரிக்கையை எழுப்பியிருக்கிற போது நம்முடைய அரசாங்கம் அதைக் கருத்திற் கொண்டு சிந்திக்க வேண்டும்.

இந்த நேரத்தில் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். விவசாயிகள் வாங்கியக் கடனைத் திருப்பித் தருகின்ற நிலையில் தான் இருந்தார்கள். ஆனால் இன்றைய தினம் கிராமங்களில் இருக்கிற விவசாயக் கடன் சங்கம் அல்லது நிலவள வங்கிகள் எல்லாம் கிணறு வெட்டுவதற்கு, மற்ற விவசாய உற்பத்திக் காரியங்களுக்கு ஏராளமான கடனைத் தந்தார்கள். அவர்களும் விவசாயத்திற்குப் பயன்படுத்தினார்கள். அப்படிப் பயன்படுத்தியதால் தான் தமிழ்நாட்டில் உணவுஉற்பத்தி தன்னிறைவு அடைந்தது என்பதை மறுக்க முடியாது. அரசாங்கம் இன்று நிம்மதியாக இருக்கிறது என்றால் தமிழ்நாட்டில் உணவு உற்பத்தி தன்னிறைவு அடைந்து இருப்பது தான் காரணம். ஆளுநர் உரையிலே ஒவ்வொரு தடவையும் அதைத்தான் சொல்கிறார்கள்: அதை நான் வரவேற்கிறேன். ஆனால் விவசாயிகள் இன்றைக்கு திருப்பிக் கட்டுகின்ற நிலையை இழந்து விட்டார்கள் என்பதை நாம் உணர வேண்டும். கடன் கொடுக்கும் போது, வங்கியில் சில விதிகளை வைத்திருக்கிறார்கள். இந்த விவசாயி இவ்வளவு கடன் கோருகிறார் ; நிலச் சீர்திருத்தம் செய்ய, மோட்டார் வாங்க, பம்பு செட் வைக்க, கிணறு வெட்ட ; அவருக்குத் திருப்பிக் கட்டும் சக்தி இருக்கிறதா என்று கேட்கிற போது, 7 ஆண்டுக் காலத்தில் திருப்பிக் கட்ட வேண்டும் ; அசல் இவ்வளவு,

வட்டி இவ்வளவு, ஒரு ஆண்டுக்கு இவ்வளவு மூட்டை நெல் விளையும் ; அது இந்த விலைக்குப் போகும் ; ஆகையால் இந்த விவசாயி குடும்பச் செலவு போக இந்தக் கடனைத் திருப்பிக் கட்ட சக்தி இருக்கிறது என்று அதிகாரிகள் சொன்னார்கள். நாங்கள் எல்லாம், நான் வங்கியில் இருந்த போது, கொடுத்தோம். விவசாயிகள் வாங்கினார்கள். விவசாய காரியங்களுக்கு பயன்படுத்தினார்கள். அதில் தவறு இல்லை. ஆனால் இன்றைய தினம் விவசாயிகள் கூட்டுறவுத் துறையில் பெற்ற கடனைத் திருப்பித் தரமுடியாது நிலையில் இருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் ? உற்பத்திச் செய்கின்ற உணவு தானியங்களுக்கு உரிய விலை கிடைக்கவில்லை. அதனால் கணக்குப் போட்ட அளவுக்கு வருவாய் இல்லை. வருவாய் இல்லாததால் திருப்பிக் கட்டுகின்ற சக்தியை அறவே இழந்து விட்டார்கள். சக்தியை இழந்து விட்ட காரணத்தால் அரசாங்கத்தைப் பார்த்து கேட்கிறார்கள். அரசாங்கமே எங்களால் திருப்பிக் கட்ட முடியவில்லை; கடனைத் தள்ளுபடி செய்யுங்கள் என்று கேட்கிற கோரிக்கைக்கு வந்திருக்கிறார்களே தவிர, திருப்பிக் கட்டுகின்ற நிலையை இழக்கவில்லை என்றால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது என்பதை இந்த அரசுக்கு மெத்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இதனை நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சரானாலும், அல்லது மின்சாரத் துறை அமைச்சராக இருந்தாலும் கவனித்து ஆவன செய்ய வேண்டும். இங்கே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகள் மத்தியிலே ஒரு கதை சொல்வது உண்டு. அதாவது ஒருவன் ஒரு வாத்து வளர்த்தான், அந்த வாத்து பொன் முட்டையிட்டுக் கொண்டு வந்தது. ஆனால் அந்த வாத்தை வளர்த்தவனுக்கு ஒரே நாளில் அத்தனை முட்டைகளையும் அடைய வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. நிறைய பொன் முட்டைகளைப் பெறலாம் என்ற எண்ணத்தில் அந்த வாத்தைக் கொன்று விட்டான். அது போன்று அரசாங்கம் விவசாயிகள் பாதிக்கின்ற அளவில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது. விவசாயிகளுக்கு கடனைத் திருப்பிக் கட்டும் சக்தியை ஏற்படுத்துவதில் இந்த அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் ஆராய்ந்து ஆவன செய்ய வேண்டும். அதன்படி அவர்களுக்குத் திருப்பிக் கட்டுகின்ற சக்தியை நீங்கள் வளர்ப்பீர்களேயானால் அதுவே சிறந்ததாக இருக்கும். அவர்களை உங்களுடைய நண்பர்களாகக் கருதி, நாட்டுக்குத் தேவையானவர்களாகக் கருதி இதிலே அக்கரை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டு அமருகிறேன். நன்றி. வணக்கம்.

<u>திரு. துரை கோவிந்தராசன் :</u> தலைவரவர்களே, இங்கே கூட்டுறவு அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்வது என்னுடைய கடமையென கருதுகிறேன்.





கடந்த ஆண்டு புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒரு வகையில் முழுமையான நிவாரணம் ஏற்படுத்த முடியவில்லை என்று சொன்னாலும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இன்னல்களையும் தொல்லைகளையும் மனத்திலே கொண்டு இந்த அரசு விவசாயிகளுக்கு அவர்கள் வாங்கி இருந்த அந்த குறுகியக் காலக் கடன்களை நீண்டகாலக் கடன்களாக ஆக்கித்தந்த அந்த நல்ல முயற்சிக்கு உள்ளபடியே விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் வள்ளுவன் சொன்ன ஒரு குறளை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

" உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர் ".

என்ற வள்ளுவன் குறளுக்கேற்றாற்போல் இன்றைக்கு மூலை முடுக்குகளிலே எல்லாம் இருக்கின்ற ஏழை உழவர்களின் ஊதியம் பெருகுவதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும் உற்பத்தியைப் பெருக்கித்தருகிற, முழுமையான உழைப்பிலே ஈடுபட்டிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற, புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களிலே இருக்கின்ற அந்த மக்களுக்குக் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளத்தால் பெரிதும் பாதிப்பு ஏற்பட்டது. அதன் காரணமாக தாங்கள் பெற்ற கடன்களைத் திரும்பத் தர முடியாத நிலையிலே இருக்கிறார்கள் என்ற நிலையில் அவர்களுக்கு ஓரளவு சலுகையினை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது, செய்ய இருக்கிறது என்று பாராட்டுகிற அதே நேரத்தில் நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வீவசாயிகள் பெற்றிருக்கின்ற கடன்களை நீண்டகாலக் கடன்களாக, குறிப்பாக ஏழு ஆண்டுக் காலத்திற்கு நீட்டித்துத் தரவேண்டும் என்றும், அவர்களுக்குப் போடப்பட்டிருக்கின்ற தண்டத் தீர்வையைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்ற ஒரு தீர்ப்பினை வழங்குவதற்கும் இந்த அரசு முயற்சி எடுக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல்லினுடைய விலையினை அதாவது விவசாயிகள் உற்பத்தி செய்த பொருள்களின் விலையை உயர்த்துவதற்கு மத்திய அரசு இடையே ஒரு குறுக்கீடாக இருக்கிறது. அப்படி இருந்தாலும் அந்த விவசாயிகளுக்கு மானியமாக சில சலுகைகளைத் தந்து அதன் மூலம் அவர்கள் உற்பத்தி செய்த பொருளுக்கு உரிய விலை பெற்று கடனிலே இருந்து மீள்கிற அளவுக்கு நல்ல திட்டங்களை நீங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று நான் உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. துரை கோவிந்தராசன்] [1979 மார்ச் 16

அடுத்து இன்றைக்கு வெளியிலே நடக்கின்ற நிகழ்ச்சிகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அதாவது இந்த அரசாக இருந்தாலும், எந்த அரசாக இருந்தாலும், அமைந்திருக்கின்ற அரசாங்கத்தால் செய்ய முடியாத காரியங்களைச் செய்யவேண்டும் என்று விவசாயிகள் சுலோகங்கள் ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அளவிலே அவர்கள் பேசி வருகிற இந்த நேரத்தில் விவசாயிகளுக்காகப் படிப்படியாக பல்வேறு முயற்சிகளை இந்த அரசு எடுத்துக்கொண்டு வந்தாலும் அதனைப் பாராட்டுகிற நேரத்தில் முழுமையான நிவாரணம் அவர்களுக்கு கிடைக்கத்தக்க அளவில் அவர்களது கடன்களை அதாவது ஒரு மூன்றாண்டுக் காலம் என்று இருப்பதை, ஒரு பத்தாண்டு என்று சொல்லத்தக்க வகையில் நீண்ட காலக் கடன்களாக மாற்றி அதோடு தண்ட வட்டி என்று சொல்வதையும் அறவே நீக்குகிற அளவுக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களைக் கடன் பிடியிலே இருந்து மீட்டு அவர்கள் வாழ வழிவகைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-20]

திரு. இரா. தாமரைக்கனி : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்யவேண்டுமென்று சொன்னார்கள். ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பெரிய விவசாயி, ஆதலால் அப்படிச் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் தொழிலாளர்களாக இருக்கிற, சிறு விவசாயிகளாக வேலை பார்க்கிறவர்கள் வாங்கிய கடன்களைத் தள்ளுபடி செய்ய ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : விவசாயக் கடன்களை அறவே தள்ளுபடி செய்யவேண்டும் என்று தெரிவிக்கவில்லை. விவசாயிகள் வாங்கியிருக்கிற கடன்கள், இடையில் ஏற்பட்ட மூன்றாண்டுக் காலத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்ட நேரத்தில் அந்தக் கடன்களைச் செலுத்துகிற போது ஒரே தடவையில் செலுத்த முடியவில்லை, அதை ஒரு நீண்ட காலக் கடனாக மாற்றி ஏழு ஆண்டுக் காலத்தில் திருப்பிச் செலுத்துகிற சக்தியை விவசாயிகளுக்கு அளிக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான் தெரிவித்தேன். இதையெல்லாம் அரசு கவனிக்கவேண்டும் என்று கேட்டு இந்தத் திருத்தத்தை ஆதரித்து அமைகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இதில் கூட நான் பேச வேண்டிய அவசியமில்லை. இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். இதில் நான் பேச விரும்புவதற்குக் காரணம் இனிமேல் யாரும் இப்படிப் பேசமுடியாது. ஏனென்றால் இந்த உரிமையைக் கூட எடுத்துவிட்டார்கள். நேற்று 19 (டி)யை, ஓமிட்' செய்து



1979 மார்ச் 16] [திரு. க.சுப்பு]

விட்டார்கள். ஆகவே சட்டமன்றத்தை கன்ஸல்ட் செய்ய வேண்டிய அவசியமில்லையென்று ஆக்கப்பட்டு விட்டது. ராட்டி-பிக்கேஷன் மாதிரி வாங்கியிருக்கிறார்கள். நம் உரிமையை நாம் விட்டுக்கொடுத்துவிட்டோம், விட்டுக்கொடுத்துவிட்டு சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம் பரவாயில்லை. அரசுத் தரப்பில் சொல்லப்படுகிற வாதம் என்னவென்றால், நாங்கள் காரன்ட்டி கொடுக்கிறோம் என்பது. கூட்டுறவுக் கடன்களுக்கு உத்தர வாதம் கொடுத்திருக்கிறீர்கள். விவசாயிகளைக் கசக்கிப் பிழிந்து வசூல் செய்ய ஆரம்பித்து விட்டார்கள், திருப்பி பணம் கட்ட வில்லை என்றால் எப்படி பாங்கை நடத்துவது என்று வசூலில் இறங்கியிருக்கிறீர்கள். நீங்கள் வங்கிகளுக்கு மட்டும் உத்தர வாதம் கொடுக்கவில்லை. இந்த நாட்டு மக்களுக்கும் உத்திரவாதம் கொடுத்திருக்கிறீர்கள். இந்த நாட்டு மக்களுக்கு உத்தர வாதம் கொடுத்து அவர்கள் உத்தரவைப் பெற்றுதான் அமைச்சர்களாக வந்திருக்கிறீர்கள். ஆகவே பர்ஸ்ட் சார்ஜ் அவர்களுக்குத்தான். பாங்குகளுக்கு காரன்ட்டி கொடுத்திருக்கிறோம். ஆகவே சட்டம் போடுகிறோம் என்று சொல்கிறீர்கள. ஒன்று சொல்வது, ஒரு பிரச்னை என்று வந்தால் இல்லை என்று சொல்வது இப்போது விவசாயிகளிடம் எல்லாவிதமான கெடுபிடி வசூலும் நடந்துவருகின்ற டபிள் டீலிங்க்ஸ். வெளியே ஒன்று சொல்வது நடப்பது வேறு றன.வகையில். இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியாததல்ல. தெரியாவிட்டால் அமைச்சராக இருக்கமுடியாது. பாங்குகளுக்கு காரன்ட்டி கொடுத்துவிட்டோம், உத்தரவாதம் கொடுத்துவிட்டோம். என்று அதை நிறைவேற்றுவதில் மட்டும் அக்கறையோடு இருக்கிறது அரசு. ஆனால் மக்களுக்கு கொடுத்துள்ள உத்தர வாதத்தை நிறைவேற்றுவதில் அக்கறை செலுத்துவதில்லை. மக்கள் கடன்சுமையால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மக்கள் கடனைத் திருப்பச் செலுத்தமுடியாத நிலையில் இருக்கிறார்கள், கடனைத் திருப்பிச் செலுத்தக்கூடாது என்று அவர்கள் இருக்கவில்லை. வேறு எந்த மாநிலத்திலும் இந்த மாநிலத்தில் உள்ளதைப்போன்று இந்தளவில் விவசாயிகள் சிறையில் வைக்கவில்லை. தமிழகத்தில் மட்டும் வைத்தோம். அவர்களால் வாங்கிய கடன்களை திருப்பிக் கொடுக்க இயலவில்லை. க்வின்டாலுக்கு ரூ. 130 வேண்டுமென்று அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் கூட பொதுக்கூட்டத்தில் பேசுகிறார்கள். அங்கே பேசுவதை விட மத்திய அரசோடு வாதாடவேண்டும், சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். மக்களுக்கு கொடுத்த உத்தரவாதத்தை நிறைவேற்றுவதில் நீங்கள் அக்கறை காட்டவில்லை. மக்களுக்கு கொடுத்த உத்தரவாதத்தை எங்களால் நிறைவேற்ற முடியவில்லை ஆகவே, 'குட் பை' என்று சொல்லிவிட்டு வேளியேறுகிறோம் என்று சொல்லி வெளியேறினால் அது வரவேற்கத்தக்கது. மகாராஷ்ட்ரா, கர்நாடகாவை எடுத்துக்கொண்டால் ,கர்நாடகாவில் வட்டி இல்லை, மகாராஷ்ட்ராவில் கடன்களை ரத்து செய்யப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே ஆயிரத்திற்கு ஆயிரத்து நூறு என்று

வட்டி குட்டிபோடுகிறது. விவசாயத்தை ஒரு இண்டஸ்ட்ரியாக கருதவேண்டும் என்று சொல்கிறார்கள் முதல் அமைச்சர்கள். நம் முதல் அமைச்சர் அவர்களும் அங்கே அதற்காகப் போயிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன், இரண்டு மூன்று நாட்களாக அசெம்பளிக்கு வருவதில்லை. மக்களுக்கு கொடுத்த உத்தரவாதத்தை நிறைவேற்ற முடியவில்லை என்று திரு. மொரார்ஜியிடம் சொல்லவேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் பேசுவதை கூர்ந்து கவனிக்கவேண்டுமென்பதற்காக அவர்கள் தனது அறையிலிருந்து கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. க. சுப்பு : ஏன் இங்கே வரக்கூடாது? எங்கள் பேரில் அவ்வளவு என்ன கோபம், ஏதோ இதைக் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்றால் மகிழ்ச்சி. இதைக் கவனிப்பதை விட மத்திய சர்க்காரை அவர் கவனிக்கவேண்டும். மக்களுக்குக் கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்ற பாடுபடவேண்டும். இப்போதுள்ள நிலையில் நீங்கள் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறியிருக்கிறீர்கள் என்பதைக் கூறி என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைச்சர் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவை வரவேற்று என் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு விவசாயிகளுடைய நிலைமை பற்றி இங்கே அனைத்து உறுப்பினர்களும் சொன்னார்கள். குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தில் இருக்கிற நில வள வங்கிகள் மூலமாகக் கடன்கள் வழங்குவதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். மத்திய வங்கி கடன் தரவில்லை என்ற காரணத்தினால் விவசாயிகளுக்கு கடன் வழங்கப்பட முடியவில்லை. மேலும் ஏற்கெனவே கொடுக்கப்பட்ட கடன்கள் விவசாயிகளிடமிருந்து வசூல் ஆகவில்லை என்ற காரணத்தால் மேலும் விவசாயிகள் கடன் பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். நாடு முழுவதிலும் பல வங்கிகளிலும் இருந்து வருகின்ற நிலுவைகளை காரணமாக கூறி கடன் தர இயலாத நிலை இருந்து வந்ததால், விவசாயிகளுக்கு ஏற்பட்ட இந்த குறைகளை நீக்குவதற்காக விவசாயிகளுக்கு வாங்குகிற கடனுக்கு உத்திரவாதத்தை கொடுத்து, கடனைப் பெற்று, விவசாயிகளுக்கு வழங்க இருக்கிறது. அதே நேரத்தில் இப்போது விவசாயிகள் மீது போடப்படும் அபராத வட்டியை நீக்கி விவசாயிகளிடம் வழங்கப்பட்ட கடனை திருப்பி வாங்க முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் இந்த கடனை திருப்பி கொடுக்கவேண்டாம் என்று பல இடங்களில் சிலர் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். வாங்கிய கடனை திருப்பி செலுத்த வேண்டாம் என்றும், அப்படி வசூல்



செய்தால் போராட்டத்தில் இறங்க வேண்டும் என்றும் மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசு கொடுத்த கடன்களை வசூலிப்பதற்கு நல்ல பல சட்டங்களை போட்டு அவர்களிடமிருந்து கடன்களை வசூலித்து, வசதியற்ற ஏழை விவசாய மக்களுக்கு சலுகை தருவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் திருத்த தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தீர்மானம் மாமூலான தீர்மானம் தான். ஆண்டாண்டு தோறும் வரக்கூடிய தீர்மானம். மத்திய வங்கி, மாநில வங்கி வாங்கும் கடன்களுக்கு வரம்பு கட்டுவதை அதிகப்படுத்துவதற்காக கொண்டுவரக்கூடிய தீர்மானம். ஆனால் மத்திய வங்கிகளின் கீழ் இருக்கும் மாநில வங்கி— அதன் கீழ் இருக்கின்ற கிராம வங்கிகள் எல்லாம் இப்போது சரியான நிலைமையில் இல்லை. இதற்கான சட்ட திட்டங்களை எல்லாம் மாற்ற வேண்டும். கூட்டுறவுத் துறை தமிழ் நாட்டில் எவ்வாறு செயல்பட்டு வருகிறது என்பதைப் பற்றி ஆராய ஒரு ஆய்வுக் குழு போட வேண்டும். அதை மாற்றி அமைக்க வேண்டும். இந்தத் துறையில் முக்கியமாக மாநில அமைப்பு இருக்கிறது, மத்திய வங்கி இருக்கிறது, இதன் கீழ் இயங்குகின்ற கிராம சங்கங்கள் இருக்கின்றன. கிராம சங்கங்களில் போடப்படும் வட்டி விகிதத்தைப் பார்த்தால், கூட்டுறவு வங்கிகளில் வட்டிக்கு மேல் வட்டி போடப்பட்டு வருவதால், அவற்றை மத்திய வங்கிக்கு கொடுக்க முடியாமல் இருந்து கொண்டிருக்கிறோம். போடப்படுகிற வட்டியைப் பார்த்தால், வாங்குகின்ற கடன் தொகைக்கு மேல் வட்டித் தொகை ஆகிவிடுகிறது. இதன் காரணமாக வட்டியையும் கொடுக்க முடியாத நிலை உருவாகியிருக்கிறது. மேலும் சிலர் மட்டும் அசலையும் வட்டியையும் கொடுத்து இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் நாம் தெரியாமல் கொடுத்துவிட்டோமே, மற்றவர்கள் இன்னும் கொடுக்கவில்லையே, தாங்கள் கொடுத்ததை திரும்ப வாங்க முடியுமா என்று கேட்கிறார்கள். அந்த அளவுக்கு செயல்முறை இருந்து கொண்டிருக்கிறது. ஒன்று, கட்டாயமாக, தீவிரமாக எப்படியாவது வசூல் செய்வதற்கு முயற்சி எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் கடனை ரத்து செய்து விட வேண்டும். அப்படியில்லாமல் இரண்டும் கெட்டான் நிலையில் இருக்கக்கூடாது. இப்படி கூட்டுறவுத் துறையினர் இருப்பதால் எங்களால் சங்கங்களை நடத்த முடியவில்லை. வேண்டுமென்றால் வட்டியை அடியோடு நீக்கிவிட்டு, வசூல் செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளுங்கள். இப்படி ஏதாவது ஒரு முடிவுக்கு வராவிட்டால் சங்கங்களை வைத்துக்கொண்டு ஒன்றும் செய்ய முடியாது. இந்நிலை நீடித்துக் கடைசியில் ஒரு நாள் ஜப்திக்குப் போவோம். அப்போது அவர்களிடமிருந்து வீடு, மாடு இவைகளை எல்லாம் ஜப்தி செய்கின்ற

நிலைமைக்கு ஆளாக்கப்படுவோம். ஆகவே திட்ட வட்டமாக அறிவிப்பு கொடுக்க வேண்டும். இதுகாறும் உள்ள வட்டி கொடுக்க வேண்டாம் என்று சொல்லி வசூலை நடத்த வேண்டும். இல்லாவிட்டால் அசலும் கொடுக்க வேண்டாம். வட்டியும் கொடுக்க வேண்டாம் என்று ஒரு சட்டத்தைப் போட்டு விவசாயி களைப் பாதுகாக்க வேண்டும். இரண்டும் கெட்ட நிலையில் இருக்கக்கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யோடு அவையின் நடவடிக்கைகளை இன்னும் சிறிது நேரம் நீட்டிக்கிறேன்.

[பிற்பகல் 1—30]

திரு. அ. சுவாமிதாஸ் மாநில வங்கி, ரிசர்வ் வங்கியிடமிருந்து வாங்கி, மத்திய வங்கிகளுக்கு கடன் கொடுக்கிறது. அது வேண் டாம். மாநில வங்கியே இருக்கட்டும். மத்திய வங்கிகள் எல்லாம் மாநில வங்கியின்கீழ் அதனுடைய கிளைகளாக மாற்றுங்கள்; வங்கி களின் பொறுப்பு, அதிகமாக்கப்படுவதால், நிர்வாகச் செலவுதான் அதிகமாகிறது. மாநில வங்கிக்குப் பிறகு, மத்திய வங்கிகளை அத கிளை ஆக்கிவிட்டால்வட்டி விகிதம் குறையும். கிராமத்திலே உள்ள களாக வர்கள் குறைந்த வட்டியிலே கடன் வாங்க முடியும். ஆகவே, அந்த முறையிலே இந்தச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். அதிலே இந்த அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர் களே, ஆளும் கட்சியைச் சேர்ந்த திரு. துரை கோவிந்தராசன் அவர்கள் பேசுகின்றபோது, ஏதோ மத்திய அரசு மாநில அரசுக்கு சரியான விலை கொடுக்காத காரணத்தால், இங்கே விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று கூறினார்கள். மத்திய அரசு ரூ. 85 விலை நிர்ணயித்தும், அந்த அளவுக்குக்கூட இங்கே விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்குகின்ற அளவுக்கு இல்லாத காரணத்தால், இன்றைய தினம் இந்த மாநிலத்திலே விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. இதற்கு முன்ன தாக இருந்த அரசு, போனசாக ரூ. 15 கொடுத்து வந்தது. அதை யும் இந்த அரசு கொடுக்க வில்லை. ஏதோ மத்திய அரசு, மாநில அரசுக்குத் தடையாக இருப்பதுபோல் சொன்னார்கள். அது தவறு.

இப்போது கரும்புக்கு ரூ. 100 என்று மத்திய அரசு விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். ஆனால், இந்த அரசு ரூ. 85 கொடுத்துதான் வாங்குகிறார்கள். இது நியாயமல்ல. உண்மையி லேயே, விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று சொன் னால், இந்த அரசு தான் அதற்கு பொறுப்பு. இந்த மாநிலத்தில் தான் தனி நபர் வருமானம் மிகவும் குறைவாக இருக்கிறது. இந்தியாவிலுள்ள . . . . . . . . . . . . .



மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிவிட்டு, பேசிக் கொண்டே போகிறீர்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : சீக்கிரம் முடித்துக் கொள்கிறேன். தனி நபர் வருமானம் தமிழ் நாட்டிலே, அனைத்து இந்தியாவிலே உள்ள மாநிலங்களை விட குறைவாக இருக்கின்றது என்று புள்ளி விவரங் கள் நமக்கு தருகின்றன. ஆக, இந்த அரசுதான் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். விவசாயிகள் பாதிக்கப் படுகிறார்கள், அவர்கள் கடனைத் திருப்பித் கொடுக்க முடிய வில்லை என்று சொன்னால், அதற்கும் இந்த அரசுதான் காரணம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புக்கு 85 ரூபாய் கொடுப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஸ்டாசுடரி மினிமம் பிரைஸ் கொடுக்க வில்லை என்றும், ரெகவரி பேசிசிலே தான் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். 85 ரூபாய்தான் இப்போது கொடுக்கப்படுவதாக ஜேம்ஸ் அவர்கள் சொல்லுகிறார்கள். எந்த ஆலையில் 85 ரூபாய் கொடுக்கிறோம் என்பதை இங்கே எங்களுக்கு கோடிட்டு, குறிப்பிட்டுக் காட்டி னால், உடனடியாக அந்த ஸ்டாசுடரி மினிமம் பிரைசைக் கொடுப் பதற்கு வழிவகை செய்யலாம். மேலும், இந்த அரசு நெல்லுக்கு குவின்டாலுக்கு ரூ. 85 தான் கொடுக்கிறார்கள் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால், அதே நேரத்தில் வட மாநிலங்களிலே விளைகின்ற கோதுமைக்கு ரூ, 115 அதன் காஸ்ட் ஆப் புரொடக் ஷன் பேசிசிலே கொடுக்கின்றார்கள், உற்பத்திச் செலவைக் கணக்கிட்டு ரூ. 115 குவிண்டால் ஒன்றுக்கு கொடுக்கிறார்கள். ஆனால், இங்கே நெல்லுக்கு அதே காஸ்ட் ஆப் புரொடக்ஷன் பேசிசிலே கொடுக்க வேண்டும். இதிலே கவனம் செலுத்தவில்லை அப்படி அவர்கள் கொடுக்கவில்லை என்ற குற்றச் சாட்டைத்தான் மத்திய அரசைப் பார்த்து நாங்கள் சொல்கிறோம்.

(திரு. ஜே. ஜேம்ஸ் பேச முற்படல்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி நீங்கள் டிபேட் டிற்குப் போகவேண்டாம். நீங்கள் எழுப்பிய இந்தப் பிரச்னையை அனுமதித்துக் கொண்டிருந்தால், இப்படியே தான் போய்க் கொண்டிருக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கரும்புக்கு ரூ. 100 என்று ஒப்புக் கொண்டார்கள். ரிகவரி பேசிசிலே கொடுக்கப்படுகின்றது என்றும் சொன்னார்கள். வடமாநிலங் களிலே எல்லாம் இப்போது, ரூ. 130 வரையிலும் கரும்புக்கு விலை

கொடுக்கப்படுகிறது. ஆனால், நம் மாநிலத்திலே அப்படி கொடுக்கப்படவில்லை. இது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். நெல்லுக்கு மட்டும் காஸ்ட் ஆப் புரொடக்ஷனிலே கொடுக்க வில்லை என்று சொல்கிறார்கள். இதுவல்ல. பிரச்னை. மாநிலத் திலே விவசாயிகளிடத்திலே இருக்கின்ற நெல்லை மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலையில் வாங்குவதற்கு ஆள் இல்லை. ஆகவே, தான், மாநில அரசே முன்வந்து விவசாயிகளிடத்திலே இருக்கின்ற நெல்லை வாங்கினால், அவர்கள் பிரச்னை தீரும் என்பதை அமைச் சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

(திரு. துரை கோவிந்தராசன் பேச முற்படல்).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியாகி விட்டது. நீங்கள் உட்காருங்கள். திரு. பழனிவேலு.

<u>திரு. என். பழனிவேல்</u> : தலைவர் அவர்களே, மத்திய கூட்டுறவு வங்கி விவசாயிகளுக்காக பெற்றிருக்கக்கூடிய கடனின் காலத்தை நீட்டிக்கின்ற, இந்த மசோதாவின் தீர்மானத்தின் மீது நான், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் வங்கிகளிலும், கிராமங்களில் இருக்கக்கூடிய விவசாயக்கூட்டுறவுச் சங்கங்களிலும் கடன் பெற்றிருக்கக்கூடிய விவசாயிகளின் நிலை தொடர்ச்சியாக கடந்த நான்கு ஆண்டு காலமாக வறட்சி, புயல் காரணமாகப் பாதிக்கப்பட்டு கடனைச் செலுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். பாதிக்கப்பட்டு இருக்கக்கூடிய சிறிய விவசாயிகளுக்கு அரசு உண்மையிலேயே உதவி செய்ய எண்ணியிருந்தால் இந்தச் சிறு விவசாயிகள் வாங்கி இருக்கக்கூடிய கடன் ஆயிரம், இரண்டாயிரம், மூவாயிரம் என்று வாங்கி இருக்கக்கூடிய கடன்கள் பூராவையும் ரத்து செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் இன்றைய தினம் பெரும் நிலப்பிரபுக் கள்தான் ரூபாய் பத்தாயிரம், இருபதாயிரம், ஒரு இலட்சம் என்ற அளவிற்கு கூட்டுறவுக் கடன்களை வாங்கிக் கொண்டு அரசாங்கத்திற்குச் சவால் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அர சாங்கம் இந்தக் கடனை வசூல் செய்வதில் ஊசலாட்டமான கொள்கையை அனுஷ்டிப்பதன் காரணமாக விவசாயச் சங்கம் என்று வைத்துக் கொண்டு விவசாயிகள் பிரச்சினை என்று சொல்லி பெரிய அமளியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கூட்டு றவுக் கடன்கள் யாருக்கு பயன்பட்டுக் கொண்டிருக்கிறது என் பதைத் தெரிந்து கொண்டுதான் இருக்கிறோம். ஒரு கிரா மத்தில் பத்தாயிரம் பேர் இருக்கிறார்கள் என்றால் 200 அல்லது 300 பேர்தான் இதனால் பயன் அடைகிறார்கள். அவர்கள் அரசாங்கம் கொடுக்கக்கூடிய கடனையும் வாங்கிக் கொண்டு



அரசாங்கத்திற்கு நெருக்கடியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார் கள். நான் கேட்டுக் கொள்வது, பத்து ஏக்கருக்குக் கீழ் வைத்திருக்கக்கூடிய சிறு விவசாயிகள் வாங்கியிருக்கும் கடன் களை ரத்து செய்ய வேண்டும்.

விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடன் பயிர்க் கடன் கொடுக் கிறார்கள். நான்கு மாதம் கழித்து அந்தக் கடனைக் கட்ட வில்லை என்றால் ''ஓவர் டியூ'' என்று சொல்லி டபுள் வட்டி போடுகிறார்கள். கந்துவட்டிக்காரனே தேவலை என்ற நிலை இருக்கிறது. குறிப்பாக ஒரு வருஷம் அல்லது 20 மாத காலத் திற்காவது நியாயமான வட்டி என்ற முறையில் அரசு வசூலிக்க வேண்டும். நூற்றுக்கு இரண்டு ரூபாய் வட்டி ஆகிறது. இது சரிதானா? இதை மறு பரிசீலனை செய்து உதவ முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரண விவசாயிகளை கூட்டுறவுச் சங்கங்களில் மெம்பர் களாகச் சேர்த்துக் கொள்வதில் சிக்கல்கள் இருக்கின்றன. ஆயிரந்தான் பேசினாலும் சாதாரண மக்கள் கூட்டுறவுச் சங்கங் களில் உறுப்பினர்களாக சேர முடிவதில்லை. கூட்டுறவுச் சங்கத் தலைவர் பெரிய கவர்னர் போன்று நினைத்துக் கொண்டு ஏழை எளியவர்களைச் சேர்க்க மறுக்கிறார்கள். கறாராக உத்தரவு போட வேண்டும். விவசாயிகளுடைய கடன்கள் நிலுவையில் இருக்கும் காரணத்தால் அரசாங்கம் செய்யக்கூடிய உதவிகளைப் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதையும் இந்த அரசு பரிசீலித்து அதற்கு ஒரு முடிவு காணவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

<u>திரு. செ. சிவசாமி</u> : பேரவைத் தலைவர் அவர்களே, சென்ட்ரல் பாங்க் சம்பந்தப்பட்ட இந்தத் திருத்தத்தை வரவேற்கும் அதே நேரத்தில் ஒரு சில ஆலோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த பட்ஜெட் நேரத்தில் மதிப்பிற்குரிய தலைவர் அவர்கள் பேசக் கூடிய நேரத்தில் தமிழ்நாட்டில் சாதாரண விவசாயிகள் கீழ் நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள், பொருளாதாரம் வளரவில்லை ''பிலோ தி பாவர்டி லைன்'' 56 சதவீதம் மக்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். கடந்த இரண்டாண்டு களாக பிலோ தி பாவர்டி லைனில் இருக்கக்கூடிய சாதாரண மக்கள் நிலையை உயர்த்த என்ன நடவடிக்கையை அரசு எடுத்து இருக்கிறது. எந்த அளவுக்கு அவர்கள் நிலை உயர்ந்திருக்கிறது, அவர்கள் கடன்கள் எந்த அளவுக்கு தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறது என்று பார்த்தால், புள்ளிவிவரங்களைப் பார்த்தால் ''பிலோ தி பாவர்டி லைனுக்கு'' கீழ் உள்ளவர்கள் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் மேலேதான் வந்து கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் சென்ட்ரல் பாங்கில் ஓவர் டியூ அதிகமாகி வருகிறது.

[திரு. செ. சிவசாமி] [1979 மார்ச் 16

ஒவ்வொரு யூனிட்டாகப் பார்க்கும்போது பரமக்குடியை
எடுத்துக் கொண்டால் 42 சொசைட்டிகளில் 37 சொசைட்டிகளில்
ஓவர் டியூ ஆகிக் கொண்டிருக்கிறது. இந்த சொசைட்டிகள்
கீழேதான் போய்க் கொண்டிருக்கிறது. மேலே வரக்கூடிய
நிலைமை இல்லாமல் இருக்கிறது. ஒட்டு மொத்தமாக இதற்குக்
காரணம் என்ன என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். மொத்த
மாக விவசாயிகளின் வாங்கும் சக்தி குறைந்திருக்கிறது. இயற்கை
யின் சீற்றங்கள் தொடர்ச்சியாக வந்ததன் காரணமாக விவசாயி
களின் வாங்கும் சக்தி குறைந்திருக்கிறது. கொடுக்கும் சக்தி
குறைந்திருக்கிறது.

[பிற்பகல் 1-40].

சன்னஞ்சன்னமாக இந்த இரண்டு காரணங்களினால் மட்டு
மல்லாமல் இன்னும் விலைவாசி ஏற்றத்தின் கொடுமையான,
கடுமையான தீமையின் காரணமாகவும் அவர்கள் தாக்கப்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள். விலைவாசி ஏற்றத்தின் காரணமாக
இந்த நாட்டிலே விவசாயிகள் மிகக் கீழான நிலைமைக்குப்
போய்க்கொண்டிருக்கிறார்கள். மேலும் சொசைட்டிகளிலே
சங்கடங்கள் ஏற்படுகின்றன, விவசாயிகள் எல்லாம் வாங்கிய
ரூபாயைக் கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள்.
இதற்கு வைத்தியம் பார்க்காமல் வட்டியைக் கட்ட வேண்டும்,
வட்டிக்கு வட்டி போடுவது, அபராதம் போடுவது என்று சொல்
லிக்கொண்டு இருக்கிற நிலைமை உருவாகி இருக்கிறது. அதனால்
அவர்கள் கடனிலே பிறந்து கடனிலே வளர்ந்து கடனிலேயே
சாகக்கூடிய நிலைமையை மீண்டும் மீண்டும் நாம் உற்பத்தி
செய்து கொண்டிருக்கிறோம். இதற்கு நிவாரணம் அளிக்க
வேண்டுமென்றால் ஒட்டுமொத்தமாக அவர்களுடைய பிரச்சி
னையைப் பார்த்து வட்டிகளைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.
கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும், கொடுக்கக்கூடியவர்
களிடத்திலே வசூலிக்க வேண்டும், இப்படி ஒட்டுமொத்தமாக
சுத்தம் செய்வதற்கு திட்டங்களைப் போடுவதற்கு தைரியமாகப்
போடுவதற்கு இந்த சர்க்கார் முன்வர வேண்டும். அப்படி
இல்லை என்றால் கூட்டுறவே இந்த நாட்டிலே வளர்ச்சி அடைய
முடியாது. நாட்டிலே இன்றைக்கு வரிகொடா இயக்கத்தின்
தன்மையினுடைய அடிப்படையே இதை வைத்துத்தான் இருக்
கிறது. இராமநாதபுரத்திலே ஒரு மாதிரியான குரல், அதே
நேரத்திலே தஞ்சையிலே வேறு மாதிரியான குரல், இப்படி
இடத்திற்கு இடம், வயலுக்கு வயல், மாவட்டத்திற்கு
மாவட்டம் வெவ்வேறு குரல்களாக இருக்கின்றன. ஆகவே
அந்த உயர்மட்டக் கமிட்டியினுடைய அறிக்கை வந்த பிறகு
கூடிப் பேசி நல்ல முடிவை எடுத்தால் ஒழிய மக்கள் நலமாக
இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொண்டு கடன்
களை எல்லாம் ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு
முடித்துக் கொள்கிறேன்.



1979 மார்ச் 16]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர்
அவர்களே . . . . .

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, ஒரு
விளக்கம். திரு. சிவசாமி பேசும்போது கடன்களை எல்லாம
தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள், வாங்கிய
கடன்களை . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் புதிய பிரச்சி
னையைக் கிளப்ப வேண்டாம். தயவு செய்து அமருங்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத்
தலைவர் அவர்களே, அரசுத் தீர்மானத்தின்மீது 9 அனைத்துக்
கட்சி உறுப்பினர்கள் தங்களுடைய மேலான நல்ல எண்ணங்களை
எல்லாம் நம்முடைய பரிசீலனைக்கு வைத்து இருக்கிறார்கள்.
கடந்த சில ஆண்டுகளாக தமிழகத்தைப் பொறுத்த வரையில்
பல மாவட்டங்களில் எதிர்பாராத அளவிற்கு வறட்சி நிலை
இருந்த காரணத்தால் 1977 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில்
ஏற்பட்ட புயல், வெள்ளம் போன்ற இயற்கையினுடைய
உற்பாதங்களினால் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதம் மூலம் பாதிக்கப்
பட்ட விவசாயிகளுக்கு மாற்று வசதி அளித்தல் தவிர்க்க முடியாத
கடமையாகிவிட்டது. குறிப்பாகவும், சிறப்பாகவும் தஞ்சா
வூர், கும்பகோணம், திருச்சி, புதுக்கோட்டை போன்ற மத்திய
கூட்டுறவு வங்கி மேற்கொண்டு ஆண்டிலே நிர்ணயிக்கப்பட்ட
உத்திரவாத வரையறையை மீறி கடன் வசதி செய்து கொடுத்து
இருக்கிறது. நடப்பு ஆண்டில் பாதிக்கப்பட்ட விவசாயப்
பெருங்குடி மக்களுக்கு மாற்று வசதி, கடன் சலுகைகள் அளிக்க
வேண்டிய தார்மீகக் கடமை புரட்சித் தலைவரின் விழுமிய
தலைமையில் உள்ள இந்த அரசுக்கு இருக்கிறது. அப்படி
அந்த முயற்சியைச் செய்கிற நேரத்திலே மத்திய கூட்டுறவு
வங்கிகளும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளும் நிர்ணயிக்கப்பட்ட
உத்திரவாத வரையறையை கடக்குமாறு நேரிடக் கூடும்.

எனவே நடுத்தரக்கால மாற்று வசதிக் கடன்களில் மொத்த
உத்தரவாத வரையறையும் , மத்திய கூட்டுறவு வங்கிகளில் தனி
உத்திரவாதம் வரையறை யையும், ரூபாய் 7,400 லட்சத்திலிருந்து
ரூபாய் 10,900 இலட்சத்திற்கும், எல்லாக் கடனகளுக்கும் மொத்த
வரையறையை ரூபாய் 9,140 இலட்சத்திலிருந்து ரூபாய் 12,640
இலட்சத்திற்கும் உயர்த்த வேண்டிய கோரிக்கைக்காக அரசு
இந்தத் தீர்மானத்தை இந்த மாமன்றத்தின் முன்னாலே வைத்
திருக்கிறது.

இதனையொட்டி நான் ஏற்கெனவே என்னுடைய பேச்சி
னுடைய தொடக்கத்திலே நினைவுகூர்ந்ததைப்போல ஒன்பது
மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச்

சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, அனைத்து உறுப்பினர்
களுமே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு
செய்திருக்கின்ற இந்த வசதிகளை மனதாரப் பாராட்டி வர
வேற்றதோடு, மேலும் இருக்கின்ற சில சிக்கல்களுக்கும், சில
சிரமங்களுக்கும், நல்ல ஆலோசனைகளை அவர்கள் வழங்கி
யிருக்கின்றார்கள். நிச்சயமாக அந்தச் சிக்கல்களை, சிரமங்
களை , இடர்பாடுகளை, துன்பங்களை விவசாய சமூகத்திலிருந்து
நீக்குவதற்காகப் போர்க்காலப் பதைபதைப்போடு நிச்சய
மாக இந்த அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்குமென்று நான்
இந்த நேரத்திலே உறுதியாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

ஆனால் ஒன்றே ஒன்றைச் சொல்ல விருபுகிறேன். என்னுடைய
மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு உறுப்பினர்
திரு. சுப்பு அவர்கள் பேசுகின்ற நேரத்தில், வங்கிகளுக்கு
உத்தரவாதம் அளித்தது மட்டுமல்ல, நீங்கள் மக்களுக்கும்
உத்தரவாதம் கொடுத்து இந்த மாமன்றத்திற்கு வந்திருக்
கிறீர்கள், அதை .எந்த அளவிற்கு எந்த விழுக்காடு அளவிற்கு
நீங்கள் நிறைவேற்றி இருக்கிறீர்கள் என்று அவர்கள் ஓர் நியாய
மான ஐய வினாவினைக் கிளப்பினார்கள். அதோடு அவர்கள்
நிற்காமல், மேலும் ஓர் உணர்வினை அவர்கள் சிரித்துக்கொண்டே
சொன்னார்கள். ஜப்தி இல்லை இல்லை என்று சொல்லு
கிறார்கள். ஆனால் எங்கும் ஜப்தி இருக்கிறது என்று அவர்கள்
நகைமுகத்தோடு, சிரித்த உணர்வோடு அந்த உணர்வையும்
இணைத்து இந்த மாமன்றத்திலே வைத்திருக்கிறார்கள். அது
முழு உண்மையான கருத்து அல்ல என்று நான் மறுக்கக் கடமைப்
பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும்
கடந்த 16—1—1978-ஆம் நாளிலிருந்து மாண்புமிகு புரட்சித்
தலைவருடைய தமிழக அரசு எந்த ஜப்தியையும் இதுவரையிலே
மேற்கொள்ளவில்லை என்றும், குறிப்பாக விவசாய உயர்மட்டக்
குழு தன்னிடைய பரிந்துரையை இந்த அரசுக்கு அளித்து,
பிறகு அந்த அரசு அந்தப் பரிந்துரையின் மீது ஆய்ந்து ஒரு
முடிவெடுக்கின்ற வரையில் எந்த விவசாயியின்மீதும் ஜப்தி நட
வடிக்கை எடுப்பதில்லை என்று மிக உறுதியாக, மிகத் தெளி
வாக, திட்டவட்டமாக அறிவித்திருக்கிறது. அதைத்தான்.
இந்த அரசு இன்றைக்கு உறுதியாகக் கடைப்பிடித்து வருகிறது
ஆனால் இன்றைக்கு இப்படிப்பட்ட ஓர் அரசியல் உள்
நோக்கத்தோடு ஜப்தி செய்கிறார்கள், கெடுபிடியைச் செய்கி
றார்கள் என்று . . . .

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு
அமைச்சரவர்கள் 12-ஆவது மாதத்திற்குப் பிறகு ஜப்தி இல்லை
என்று சொல்கிறார்கள். ஆனால், இளையாங்குடி தொகுதியில்
கண்டமங்கலம் என்ற கிராமத்தில் 13 பேர்களை ஜப்தி செய்
திருக்கிறார்கள். அதற்கான லிஸ்ட் வைத்திருக்கிறேன்.
அதைக் கொடுக்கக்கூட நான் தயாராக இருக்கிறேன் என்பதைச்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
அதனை என்னிடத்தில் அருள்கூர்ந்து அளிக்குமாறு கேட்டுக்
கொள்கிறேன். இதுவரையில் அவர்கள் மாமன்றத்திலே
அதைப்பற்றிச் சொல்லாமல் இப்பொழுது சொல்லியிருக்கிறார்கள்.
அப்படி நடந்தவுடன் உள்ளபடியே அது தவிர்க்கப்பட வேண்டு
மென்று கருதியிருந்தால் கொடுத்திருக்கலாம். இனியும் கால
தாமதப் படுத்தத் தேவையில்லை. அருள்கூர்ந்து இப்பொழுதே
கூட இந்த மன்றம் முடிவதற்குள்ளாக அவர்கள் கொடுத்தால் கூட,
அப்படித் தவறுகள் எங்கேயாவது நடந்திருந்தால் .உரிய முறை
யில் பரிசீலனை செய்து தக்க பரிகாரம் காண மாண்புமிகு
புரட்சித் தலைவரின் விழுமிய தலைமையில் இருக்கின்ற அரசு
என்றைக்கும் உறுதியாக இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பின
ரவர்களுக்கு உறுதி கூறுகிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய அருமைச்
சகோதரர் சுப்பு அவர்கள் சொல்லுகின்ற நேரத்தில், இந்த
அரசு என்ன செய்தது என்று கேட்டார்கள். இந்த அரசு
விவசாயிகளுக்கு என்ன செய்தது என்பதைப் பற்றி இன்றைக்கு
இந்த மாமன்றத்திலே மிகத் தெளிவாகப் பலமுறை சொல்லப்
பட்டிருக்கிறது.

[பிற்பகல் 1—50.]

அவர்களும் உணர்வார்கள். இன்றைக்கு இந்தக் காரியத்
தினை, இந்தக் கடன் சலுகையைச் செய்ய வேண்டிய தீர்
மானத்தைத் கொண்டுவந்திருப்பது கூட, இந்தச் சலுகைகள் கூட,
பல சலுகைகளில்ஒன்று, பல நல்ல காரியங்களில் ஒரு நல்ல காரியம்
என்று தெரிவிப்பதோடு, குடந்தையிலே இருக்கிற
விவசாயி, அதே போல், புதுக்கோட்டையிலே இருக்கிற விவசாயி,
அதனைப் போல் தஞ்சாவூரிலே இருக்கிற விவசாயி, இப்படிப்
பட்ட நல்ல காரியங்களை எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்
கிறார்கள். அப்படி நல்ல பல காரியங்களை இந்த அரசு
புரட்சித் தலைவருடைய அரசு செய்து வருகிறது. மேலும்
நல்ல பல யோசனைகளை, இங்கே பேசிய அனைத்துக் கட்சித்
தலைவர்களும் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, கடன்
வாய்ப்புகளைப் பற்றி, அபராத வட்டிகளைப் பற்றி, சட்ட
திருத்தத்தைப் பற்றி, இவைகளைப் பற்றியெல்லாம் நல்ல
ஆலோசனைகளையெல்லாம் கொடுத்திருக்கிழார்கள். குறிப்
பாக, சில உறுப்பினர்கள் கடனை தள்ளி வைக்க வேண்டுமென்று
சொல்லியிருக்கிறார்கள். சில உறுப்பினர்கள் கடனையே
வசூலிக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட
நல்ல ஆலோசனைகளை யெல்லாம் இந்த மாமன்றத்திலே அரசு
தீர்மானத்திலே வைத்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம்
அனுதாபத்தோடு பரிசீலனை செய்து, உரிய காலத்திலே நல்ல
முடிவை தமிழக அரசு எடுக்கும் என்று நான் மிகப் பணிவோடு
தெரிவித்து, இந்த அரசுத் தீர்மானத்தை நிறைவேற்றித் தர
வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்க சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 73-D பிரிவின் கீழ் சொல்லியுள்ளவாறு, மாநில சட்டமன்றத்தின் ஒப்புதலுடன், மத்திய கூட்டுறவு வங்கிகள், மற்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி பெறும் குறுகிய கால கடன், நடுத்தர காலக் கடன், நடுத்தரக் கால மாற்றுவசதிக் கடன்களுக்கு அரசின் உத்தரவாத உயரளவு வரையறையை முறையே ரூ. 250 இலட்சம், ரூ. 1,490 இலட்சம், ரூ. 7,400 இலட்ச அளவிற்குக் கூட்டுறவுத் துறையின் 1978-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் ஒன்பதாம் நாளிட்ட 82-ஆம் எண் அரசாணையில் தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளதாலும்,

மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தமட்டில் நடுத்தரக் கால மாற்றுவசதிக் கடனுக்கான உயரளவு உத்தரவாத வரையறையை ரூ. 10,900 இலட்சத்திற்கு உயர்த்துவது அவசியம் ஏற்பட்டுள்ளதாலும் ;

தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 73—D பிரிவின் கீழ் சொல்லியுள்ளவாறு, மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தமட்டில் நடுத்தரக்கால மாற்றுவசதிக் கடனுக்கான உத்தரவாத வரையறையை ரூ. 10,900 இலட்சத்திற்கும், மொத்த வரையறையை ரூ. 12,640 இலட்சத்திற்கும் உயர்த்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தீர்மானித்துள்ளது''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9—00 மணிக்கு , பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-52-மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## (7) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

119. தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு கிராமப்புறக் கைவினைஞர் (குடியிருப்புகளுக்கு உடைமையுரிமை வழங்கல்) விதிகள் செய்வது குறித்த வருவாய்த் துறையின் 17—11—1977-ஆம் தேதியிடப்பெற்ற 2224-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு தமிழ்நாடு 1976-ஆம் ஆண்டு கிராமப்புறக் கைவினைஞர் (குடியிருப்புகளுக்கு உடைமையுரிமை வழங்கல்) சட்டத்தின் (குடியரசுத் தலைவர் சட்டம் 38/1976) 30(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை —



# தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.

---

## சனிக்கிழமை, 1979 மார்ச்சு, 17.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## (1) வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

தொழிலாளர்களுக்கு ஊதியக்கொடை அளித்தல்.

*குறுகியகால வினா எண். 16— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போனஸ் சட்டத்தின் கீழ் தொழிற்சாலைகளில் எத்தனை தொழிலாளர்கள் வேலை பார்த்தால் போனஸ் கொடுக்கப்பட வேண்டும்?

(ஆ) இந்த அரசு பொறுப்பேற்றவுடன் மாற்றம் செய்து இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ்வரும் அனைத்து தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்கும், இருபதும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் 1965 ஆம் ஆண்டு போனஸ் வழங்கல் சட்டத்தின் கீழ் போனஸ் கொடுக்கப்படவேண்டும்.

(ஆ) இருபது தொழிலாளர்களுக்கு குறைவாகவுள்ள ஆனால் பத்து தொழிலாளர்களுக்கு குறையாமலுள்ள கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு 1965 ஆம் ஆண்டு போனஸ் வழங்கல் சட்டம் பொருந்துமாறு 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் இந்த அரசு ஒரு அறிவிக்கை வெளியிட்டது:—

(1) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் வரும் தொழிற்சாலைகள்.

(2) 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள்.

(3) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ் வரும் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள்;

(4) தேயிலை, காபி, இரப்பர், கொய்னா மற்றும் ஏலக்காய் பயிரிடும் மலைத்தோட்ட நிறுவனங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, தொழிலாளர்களுடைய நன்மையைக் கருதி இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை கொண்டு வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு; 10 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் வேறு நிறுவனங்களுக்கும் பொருந்துமாறு சட்டங்களை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, 10 தொழிலாளர்களுக்குக் குறையாமல் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கும் போனஸ் சட்டம் பொருந்துமாறு செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

1. 1966-ம் ஆண்டு பீடி சுருட்டு தொழிலாளர் சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள்.

2. 1958-ம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள்.

3. இது மோஸ்ட் இம்பார்ட்டென்ட். 1955-ம் ஆண்டு உழைக்கும் பத்திரிக்கையாளர் சட்டத்தின் கீழ் வரும் பத்திரிகை நிறுவனங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து ஒலி பெருக்கிக்கு தூர நின்று பேசினால் நல்லது. காது பிய்த்துக் கொண்டு போகிறது.

திரு. தீ.சு. நல்லதம்பி : தலைவர் அவர்களே, நமது தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 10 தொழிலாளர்களுக்கு மேல் இருந்தாலும் அவர்களுக்கு போனஸ் வழங்கும் சட்டத்தைப் பற்றி அறிவித்து இருக்கிறார்கள். இன்றைய தினம் ஜெனரல் வொர்க்ஷாப் கார்ப்பரேஷனில் ஏறக்குறைய 500 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த போனஸ் சட்டம் பொருந்துமாறு செய்யவேண்டும் என்று ஓராண்டு காலமாக நான் வலியுறுத்தி வருகிறேன். இது வரையில்



அந்த நிர்வாகத்தினர் அதற்குத் தலைசாய்க்கவில்லை. நேற்றைக்கு முன் தினம் கூட பேசியிருக்கிறேன். ஆகவே, தயவு செய்து அவர்களுக்கு இதை நடைமுறைப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பதில் சொல்லவில்லையா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, கேட்டுக்கொள்கிறேன் என்று சொன்னாரே தவிர கேள்வியாகச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அதைக் கேள்வியாக மாற்றி பதில் சொல்லிவிடுங்கள்.

திரு. தீ.சு. நல்லதம்பி: அமைச்சர் அவர்களுக்கு அறிவுரை வழங்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, போனஸ் வழங்கவேண்டும் என்று இருந்து, அது கொடுக்கப்படவில்லை என்றால், இரண்டு வகைகளில் அதனைப் பெறமுடியும்.

1. தொழில் தகராறு எழுப்புதல்.

2. 33 (சி) (2) பெட்டிஷன் நேரடியாக லேபர் கோர்ட்டில் தாக்கல் செய்தால், அங்கே சாதகமான தீர்ப்பு வழங்கப்படும் என்று சொன்னால், போனஸ் கிடைக்கும். கிடைக்கவில்லை என்றால் அரசுக்கு எழுதினால், கலெக்டருக்கு அதை அனுப்பி, ''அரியர்ஸ் ஆப் லேண்ட் ரெவின்யூ'' என்ற முறையில் வசூல் செய்து கொடுக்க சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ளது.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, இந்த போனஸ் சட்டம் மத்திய அரசால் 1965ல் இயற்றப்பட்ட சட்டம். அமைச்சர் அவர்கள் பதிலில் குறிப்பிட்டார்கள். 10 தொழிலாளர்களுக்குக் குறைவாக இருக்கக்கூடிய நிறுவனக்களுக்கும் இது பொருந்தும் என்ற பட்டியலைக் கொடுத்து, அங்கே பணிபுரியும் தொழிலாளர்கள் பூராவிற்கும் இந்த அரசு போனஸ் கொடுக்கவேண்டும் என்று அறிவித்து இருப்பதாகச் சொன்னார்கள். அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு எல்லாம் இந்த அரசு அறிவித்து இருக்கும் அடிப்படையில் போனஸ் கொடுக்கப்பட்டு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அறிவித்து இருக்கிற பட்டியலில் உள்ள எந்தெந்த தொழிற்சாலைகளில் கொடுக்கப்பட்டது, எவ்வளவு கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் 1965-ம் ஆண்டு மத்திய அரசால் கொண்டு வரப்பட்டது.

But there is a proviso to Section 1 (3) (b) where in the appropriate Government has got powers to extend it to other establishments.

இதை உபயோகப்படுத்திக்கொண்டு நாங்கள் மற்ற நிறுவனங்களுக்கும் விரிவு படுத்தியிருக்கிறோம். மற்ற விவரங்களுக்கு தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு து. இராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளக்கோயிலில் தீவன தொழிற்சாலைகள் மிக அதிகமாக இருக்கின்றன. 5 ஆயிரம் தொழிலாளர்கள் அங்கே வேலை பார்த்து வருகிறார்கள். இந்தத் திட்டத்தை அந்த தொழிற்சாலைகளுக்கும் விரிவு படுத்த அரசு முன் வருமா? அத்துடன், போனஸ் கொடுக்கின்ற அதே நேரத்தில், நிரந்தர சம்பளம், வொர்க்லோடு என்ன என்பதையும் முடிவு எடுக்க இந்த திட்டத்தை அரசு விரிவு படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பிரகாரம் 20-ம் அதற்கு மேலுள்ள தொழிலாளர்களும் பணியாற்றக்கூடிய எல்லா நிறுவனங்களுக்கும் பொருந்தும்—ஐ மீன் எஸ்டாப்ளிஷ்மெண்ட். அதை விவரித்து 10-க்கும் அதற்கு மேல் உள்ளவைகளுக்கும், எங்கெங்கு பொருந்தும் என்றும் எங்கெங்கு செயல்படுத்தவேண்டும் என்றும் அறிவித்தது. மற்ற துணைக்கேள்விகள் மூலக்கேள்விக்கு பொருந்தியது அல்ல.

திரு என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கக்கூடிய இந்தச் சட்டத்தின் 20-க்கு மேற்பட்டவர்களுக்கு கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சினிமா தியேட்டர்கள், ஹோட்டல்கள் போன்ற நிறுவனங்களில் 10, 15 பேர்கள் தான் நிரந்தர தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கும் போனஸ் சட்டத்தை அமுல் ஆக்குவது குறித்து அரசு முயற்சி எடுக்குமா? அத்தோடு போனஸ் கொடுக்கும் திட்டம் விவசாய தொழிலாளர்களுக்கும் அமுல் நடத்தப்படும் என்று இந்தக் கட்சிக்காரர்கள் முன்பு பேசியிருக்கிறார்கள். அப்படி அவர்களுக்கும் போனஸ் கொடுப்பது சம்பந்தமாக என்ன முயற்சி எடுக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்ட கேள்வி போனஸ் சட்டத்தின் கீழ் தொழிற்சாலைகளில் எத்தனை தொழிலாளர்கள் வேலை பார்த்தால் போனஸ் கொடுக்கப்பட வேண்டும்? என்பதாகும். மூலக்கேள்விக்கும் உறுப்பினர் . அவர்கள் கேட்டிருக்கிற உபகேள்விகளுக்கும் சம்பந்தம் இல்லை என்று பணிவோடு கூறிக்கொள்கிறேன்.

திரு தே. ஞானசிகாமணி: தலைவர் அவர்களே, அரசுக்குச் சொந்தமான கிராம்பு தோட்டங்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்துமா? அவர்களுக்கும் போனஸ் வழங்கப்படுமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, போனஸ் சட்டப்பிரகாரம்

If an establishment is run by a Government Department, the workers employed there are not entitled for bonus.

அரசு தொழிலாளர்களுக்கு போனஸ் கிடையாது. பல்லவன் போக்குவரத்துக் கழகம், ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டாக இருந்த போது போனஸ் கிடையாது. பி. அண்ட் டி. வொர்க்கர்ஸுக்கு போனஸ் கிடையாது. ரயில்வே தொழிலாளர்களுக்கும் போனஸ் கிடையாது. இதை திருத்துவதற்கு மத்திய அரசு ஆலோசனை செய்து கொண்டு வருகிறது என்று பத்திரிகை செய்தி வந்துள்ளதென தெரிவித்துக் கொள்கிறேன்.

## பேராவூரணித் தொகுதியில் நெற்பயிர்களுக்கு சேதம்.

*குறுகிய கால வினா எண்: 17— திரு. மு. ரெ.கோவேந்தன் மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் பேராவூரணித் தொகுதியில் சமீபத்தில் ஏற்பட்ட புயல், கடும் மழையால் ஆனைக்கொம்பன் மற்றும் புகையான் பூச்சிகள் தாக்குதலால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் உள்ள நெற்பயிர்கள் நாசமடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ )ஆம், எனில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.

(ஆ) ஆனைக்கொம்பன் பூச்சியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. இருப்பினும், மத்திய அரசு திட்டத்தின்கீழ் புகையான் பூச்சியினால் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள விவசாயிகளுக்கு பூச்சி மருந்துகள் மூன்றில் ஒரு பாகம் விலையில் வழங்கப்படுகின்றன. இத்துடன் தெளிப்பதற்காக ஆகும் செலவுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 7.50 வீதம் உதவி வழங்கப்படுகிறது.

திரு. மு. ரெ. கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கூட்டுறவு கடன்களை ஒத்தி வைத்து தண்ணீர் தீர்வை, வரிவஜா சலுகைகள் அளிக்க அரசு முன் வருமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மூல கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. அதனால் தனிக் கேள்விப் போடவும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று அமைச்சர் சொல்லக்கூடாது. பூச்சியினால் பாதிக்கப்பட்டதனால், விளைச்சல் இல்லாமல் போய் விட்டதனால், பூச்சி மருந்து கொடுப்பீர்களா, விதை கொடுப்பீர்களா? கடன்களை ஒத்தி வைத்தால் தானே பயன்படும். அதைத்தான் உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள் என்று கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட்டுறவு கடன்கள் தள்ளுபடி செய்யப்படுமா என்று கேட்டார்கள். பூச்சிகளால் பயிர்கள் தாக்கப்பட்டு விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பதைப்பற்றித்தான் மூலக் கேள்வி. அதற்கு என்ன பாதுகாப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று கேள்வி இருந்தால் பதில் சொல்லியிருப்பேன். நமது அருமை நண்பர் மாரிமுத்து அவர்கள் உண்மையில் தவறாகப் புரிந்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9.10.]

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, தொழிற்சாலைகளில் சேதம் ஏற்பட்டாலோ அல்லது லாரி போன்ற சாதனங்கள் சேதம் அடைந்தாலோ இன்ஷூரன்ஸ் மற்றும் உதவிகள் எல்லாம் இருக்கின்றன. தொழிற்சாலைகளுக்கு அரசாங்க மானியம் எல்லாம் கிடைக்கின்றன. அதைப்போல விவசாயத் துறையில்,





இப்படி புயல், வெள்ளம், பூச்சி போன்றவற்றால் சேதம் ஏற்பட்டால் என்ன செய்யலாம் என்று ஆலோசித்து, விவசாயிகளுக்கு உதவி செய்ய ஏதாவது ஒரு திட்டத்தைக் கொண்டு வர அமைச்சரவர்கள் முயற்சி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, பயிர் பாதுகாப்பு செய்ய வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் 'கிராப் இன்ஷூரனஸ்'—பயிர் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று மைய அரசுக்கு எழுதியிருக்கிறோம். மைய அரசு மூலம் அதுபற்றிய அறிக்கை ஒன்று வந்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மைய அரசின உதவியுடன் தான் கிராப் இன்ஷூரன்ஸ் திட்டங்களை நடத்த முடியும் என்று நாம் தெளிவாக்கி இருக்கிறோம். மேலும் இது 'சீசனல் பெஸ்ட்' —அதாவது அறுவடைக் காலங்களில் அல்லது நடவுக் காலங்களில் திடீரென்று பூச்சித் தொல்லைகள் ஏற்படுகின்றன. அதற்கு தற்போது மைய அரசினால் புகையான் பூச்சி மருந்து மூன்றில் ஒரு பாகம் விலையில் வழங்கப்படுகிறது. மருந்து தெளிப்பதற்கு ஆகும் செலவில் ஏக்கருக்கு 3 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவரவர்களே, ஆனைக் கொம்பன் நோய் இந்த ஆண்டுதான் கடுமையாக தஞ்சை மாவட்டத்தில் தாக்கியிருக்கிறது. குறிப்பாக இராஜராஜன் நெல்லுக்கு அதிகமாக இந்த நோய் பரவியிருக்கிறது. இராஜராஜன் என்று பெயர் வைத்தது இராஜராஜ சோழன் நினைவாகத்தான். இந்த நெல்லுக்கு நோய் ஏற்பட்டு, பாதிப்பு ஏற்பட்டதால் இராஜராஜன் மோசமாகிவிட்டது, இராஜராஜன் மோசமாகி விட்டது என்று இராஜராஜ சோழனை மோசமாக எண்ணுகிறார்கள். நெல்லின் பெயர் நன்றாக இருக்கிறதே தவிர அது வீரியம் குன்றியதாக இருக்கிறது. கோவை மாவட்டத்தில் இருக்கிற விவசாயப் பல்கலைக் கழகததில் கண்டு பிடிக்கப்பட்டது இந்த நெல் என்பதால் விவசாய அதிகாரிகளும் அதில் அதிக அக்கரை காட்டாமல் இருக்கிறார்கள். அந்தக் குறையைப் போக்க, அதை நல்ல வீரியமுள்ள நெல்லாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஆனைக் கொம்பன் நோய் இந்த ஆண்டுதான் புதிதாக பயிர்களுக்கு அதிகமாகத் தொல்லைகள் கொடுத்திருக்கிறது. அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இராஜராஜன் என்ற நெல் ரகம் 1975 ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த நேரத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. இந்த இராஜராஜன் என்ற பெயரை வைத்த அவர்களைக் கேட்டிருந்தால்

[1979 மார்ச் 17

நல்ல பதில் கொடுத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இருந்தாலும் தற்போது அதைவிட நல்ல வீரியம் நெல் ரகம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அந்த வீரிய நெல் ரகங்களுக்கு அதைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகளின் பெயரை வைத்திருக்கிறோம். அந்த ரகங்களைப் பயன்படுத்தினால் விளைச்சல் நன்றாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இராஜராஜன் என்ற நெல்லை புதிய முறையில் வீரியம் உள்ளதாக மாற்றுவதற்குப் பதிலாக ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற நல்ல வீரியம் உள்ள நெல் ரகங்களை பயிர் செய்தால் இன்னும் நல்ல விளைச்சல் தரும், நல்ல சாகுபடி தரும் என்பதால் தஞ்சை மாவட்ட விவசாயிகள் இப்போது இருக்கிற இப்படிப்பட்ட வீரிய நெல் ரகங்களைப் பயிரிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. து. இராமசாமி : தலைவரவர்களே, பயிர் பாதுகாப்புத் திட்டத்திற்காக பூச்சிக்கொல்லி மருந்துகளைக் கண்டு பிடித்திருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், சமீப காலத்திலே பூச்சிகளைவிட எலிகள்தான் அதிகமாகத் தொல்லைகள் கொடுக்கின்றன. எல்லாப் பயிர்களையும் எலி நாசம் செய்வது அரசுக்குத் தெரியாதா ? எலிகளைக் கொல்ல தகுந்த மருந்துகளைக் கண்டு பிடித்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே' எலித் தொல்லைபற்றி பெரிய வினா ஒன்று கேட்கப்பட்டு, அதற்கு நீண்டநேரம் பதிலும் சொல்லியிருக்கிறேன். அது அதிகமான விளம்பரத்தையும் பெற்றுக் கொடுத்திருக்கிறது. துத்தநாக பாஸ்பேட் போன்ற மருந்துகள் எலிகளைக் கொல்ல பயன்படும். ஏறத்தாழ 5 சதவீத அளவுக்கு உணவு தானியங்களை எலிகள் சாப்பிட்டு விடுகின்ற நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, இந்த சப்ஜெக்ட்பற்றி கேள்வி கேட்க விரும்பவில்லை. பெயரைப் பார்க்கக் கூடாது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஐயப்பன் கோவிலுக்குப் போகவில்லையா ? அதனால் பெயர் எப்படி இருக்கிறது, யார் பெயர் வைத்தது என்பதைப் பார்க்காமல் பிரச்சினையைத் தீர்க்க முயற்சி செய்ய வேண்டும். பெயருக்கும் அதற்கும் சம்பந்தம் இருக்காது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கேள்வி நேரத்திலே இந்த மாதிரி பிரச்சினைகளை எழுப்பலாமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.



1979 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்களுக்கே நன்கு தெரியும். நேரம் அதிகம் இல்லை என்று . . .

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, இந்நேரம் வேறு கேள்விக்குப் போய் இருக்கலாம். அமைச்சரவர்கள்தான் குறுக்கிட்டார்கள்.

## சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர்கள்

* வினா எண் 431— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர்களுக்கு எந்தவித சட்டப் பாதுகாப்பும் இல்லாமலிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கான சட்டம் கொண்டு வர அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) " ஓட்டுபவருக்கே சைக்கிள் ரிக்ஷா சொந்தம் " என்ற அடிப்படையில் சட்டம் கொண்டுவரும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையிலுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த சைக்கிள் ரிக்ஷா ஒவ்வொரு நகரத்திற்கும் எந்தெந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றன ? ஜனத்தொகை விகிதாச்சார அடிப்படையில் வழங்கப்படுகிறதா ? மேலும் மாயூரம் போன்ற நகராட்சிகளில் தேவைக்கு அதிகமாக சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு உரிமங்கள் கொடுக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. அதனால் ஒற்றை மாட்டு வண்டி, குதிரை வண்டி போன்ற வாகனங்களை வைத்து வாழ்க்கை நடத்தி வந்தவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்களே, அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவை தலைவரவர்களே, தமிழகத்திலே ஒட்டு மொத்தமாக இருக்கின்ற சைக்கிள் ரிக்ஷாக்களைப் பார்க்கின்றபோது சென்னை நகரில் மட்டும் 5,983 சைக்கிள் ரிக்ஷாக்கள் இருக்கின்றன. ஆகவே, இன்னும் சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு உரிமம் வழங்கட்படலாமா

வேண்டாமா என்று ஆய்வு செய்யப்பட்டது. வழங்கப்பட வேண்டாம் என்கிற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. காரணம், மெதுவாகச் செல்கின்ற வாகனமாகிய சைக்கிள் ரிக்ஷாக்களின் எண்ணிக்கை பெருகுவதால் விபத்துகளும் பெருகி வருகின்றன. ஆகவே இருக்கின்ற சைக்கிள் ரிக்ஷாக்களின் உரிமங்களைப் புதுப்பிக்க வருகின்றபோது ஓட்டுநருக்கே சைக்கிள் ரிக்ஷா உரிமையாக்கப்பட வேண்டும் என்ற ஒரு முடிவை அரசு எடுத்து இருக்கிறது. அதற்காக சட்டம் கூட இயற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆகவே, இந்த அடிப்படையில் சைக்கிள் ரிக்ஷா உரிமம் ஓட்டுநருக்கே வழங்கப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, ஓட்டுநருக்கே சைக்கிள் ரிக்ஷாக்கள் சொந்தமாக்கப்படுகிற ஒரு திட்டத்தை சர்க்கார் கொண்டு வருவதை வரவேற்கிறேன். நான் தெரிந்து கொள்ள விரும்புவது என்னவென்றால் சைக்கிள் ரிக்ஷாக்கள் இனாமாக வழங்கப்படுமா என்பதுதான். அதாவது கடன் வாங்கிக் கொடுத்துவிட்டால் மட்டும் போதாது. அதாவது சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர்களுக்கு சர்க்காரின் பொறுப்பிலேயே சைக்கிள் ரிக்ஷா வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, அவர்கள் முன் பணம் கட்டாமல் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் அல்லது டி.அய்.சி.சி. மூலம் அந்த உதவியினைப் பெறுவதற்கு அரசு யோசித்து வருகிறது. அதாவது, அவர்கள் ஒட்டுமொத்தமாக கட்னுக்கு வாங்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் மார்வாடி போன்றவர்களிடம் கடன் வாங்கி அதன் மூலம் பினாமிகள் எல்லாம் ஏற்பட்டு கடைசியில் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ரிக்ஷாக்கள் கிடைக்காமலே போய்விடுகிறது என்பது தெரியும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வின் அடிப்படையிலேதான் அரசு பரிசீலித்துக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இ. தமிழரசன் : தலைவரவர்களே, மனிதனை மனிதன் வைத்து இழுத்துக் கொண்டு போகின்ற இந்த பரிதாபகரமான தொழிலில் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அம்மாதிரி நேரங்களில் சைக்கிள் ரிக்ஷாக்கள் சேதம் அடைந்து நஷ்டம் ஏற்படலாம். அல்லது அவர்களின் உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம். ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் உதவித் தொகை அளிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலே நியாயம் இருக்கிறது. அதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, உறுப்பினா திரு. சுப்பு அவர்கள் கேட்ட கேள்விக்கு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாக கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். அந்த மாதிரி டாக்ஸி டிரைவர்களுடைய சங்கத்தின் கோரிக்கைக்கும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாக கடன் கொடுக்கப்படுகிறது. அவர்கள் ஒரு மாதம், 2 மாதம் அல்லது ஒரு வருஷம் என்று கட்டி முடிப்பதற்குள், அவ்வாறு முடியாத சூழ்நிலையில் டாக்ஸிகள் எல்லாம் ஜப்தி செய்யப்பட்டுவிடுகிறது. ஆகவே, அந்தக் கடன் அப்படி கொடுப்பதற்கு பதிலாக அரசாங்கமே ஏதாவது ஒரு உதவி செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, அரசே நேரடியாக உதவி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் தான் டி.அய்.சி.சி. மூலமாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்களும், திரு. அழகர்சாமி அவர்களும் சொல்கின்ற யோசனையை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. கே. கபாலி : தலைவரவர்களே, புதிதாக லைசன்சு வழங்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறதே; அப்படி இருந்தால் புதிதாக லைசன்சு வழங்கப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, ஏற்கனவே உரிமங்கள் பெற்றிருக்கிறவர்கள் அவைகளைப் புதுப்பிக்க வருகின்றபோது ஓட்டுநருக்கே ரிக்ஷா சொந்தமாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்ற உத்தரவை அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. ஏற்கனவே ஏராளமாக, அதாவது 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்கள் இருக்கின்ற காரணத்தால், சாலை விபத்துக்கள் அதிகமாக ஏற்படும் என்று கருதப்படுவதால், மேற்கொண்டும் சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு உரிமங்கள் வழங்கப்படுவது நல்லதல்ல என்று அரசு கருதுகிறது.

[1979 மார்ச் 17

[முற்பகல் 9—20]

திரு. மா. மணிமாறன் : ஓட்டுபவருக்கே சைக்கிள் ரிக்ஷா சொந்தம் என்ற அடிப்படையில் சட்டம் கொண்டு வர செயற் குறிப்பு இருப்பதாகச் சொன்னார்கள். மெத்த மகிழ்ச்சி. அதற் கான சட்டம் வரும் என்று சொல்லிவிட்டார்கள். அந்நிலையில், இப்போது தனிப்பட்டவர்கள் பலர் சைக்கிள் ரிக்ஷாக்கள் வாங்கி ஓட்டி வருகிறார்கள். அவர்கள் இப்போது சைக்கிள் ரிக்ஷாக்கள் ஓட்டுபவர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டால் அவர்கள் பிழைப்பு போய்விடும் நிலை ஏற்படும். ஆகவே, இந்தச் சிக்கலி லிருந்து உடனடியாக அவர்களை விடுவிப்பதற்காக இந்தச் சட்டத்தை உடனடியாக கொண்டுவந்து நாளை முதல் அமலாக்கப் படுமா அல்லது இன்றிலிருந்தே அதை அமல் செய்ய ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் எண்ணுகிறபடி இன்றோ அல்லது நாளையோ ஒரு நாளில் சட்டத்தைக் கொண்டுவந்து அமல்படுத்த முடியாது. காரணம், இதற்கு மைய அரசின் ஹாக்னி காரியேஜஸ் ஆக்டில் ஒரு மாற்றத்தைச் செய்ய வேண்டியிருக்கிறது. மைய அரசின் ஒப்புதலுக்கு எழுதி, அதை மைய அரசு ஏற்றிருக் கிறார்கள். மற்ற குறைபாடுகள் இல்லாதபடி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு இருக்கிறது. சட்டத்தை விரைவில் கொண்டு வரலாம்.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உறுப்பினர்களும், அமைச்சர் அவர்களும் சுட்டிக்காட்டியதுபோல் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவருக்கு அது உரிமையாக்கப்படவேண்டும் என்று சொல் வதில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எத்தகைய ஆட்சே பணையும் இல்லை. வரவேற்கிறோம். நான் அமைச்சர் அவர் களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது, மக்கள் தொகை அடிப்படையில் மாயூரம் போன்ற நகராட்சிப் பகுதிகளில் ஜனத் தொகை அடிப்படையில்தான்—இவ்வளவு சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கவேண்டும் என்ற விதி இருக்கிறது—அந்த விதிக்கு மாறாக, அந்த விதி மீறப்பட்டு அதிகமான அளவிற்கு தரப் பட்டிருப்பதாகக் கூறப்படுவது அரசுக்குத் தெரியுமா ? இதன் காரணமாக ஏற்கெனவே மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகள் வைத்துக்கொண்டு ஓட்டிக்கொண்டிருந்தவர்கள் பிழைப்பு இழந்து தவிக்கக்கூடிய ஒரு நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே, அந்நிலையைத் தவிர்ப்பதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மக்கள் தொகை அடிப்படையில் சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கவேண்டும் என்ற விதி இல்லை. மாயூரம் பகுதியில் அதிகப்படியான அளவில் சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கி உள்ளதாக அவர்கள் கூறுகிறார்கள்.



1979 மார்ச் 17]

மாட்டு வண்டிக் காலத்தை விட்டுவிட்டு சைக்கிள் ரிக்ஷாக்களை விட்டு விட்டு சைக்கிள் ரிக்ஷாக்களை மெக்கனைஸ் செய்ய வேண்டும் என்ற நிலையில், ஆட்டோ போன்றவற்றைக் கொண்டு வரவேண்டும் என்று சொல்கிற நிலையில், மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகள் ஓட்டுபவர்கள் ஆட்டோ அல்லது மெக்க னைஸ்ட் சைக்கிள் ரிக்ஷாஸ் விடுவதற்கு முன்வருவார்களே யானால் அவர்களுக்கு டி.இ.ஸி.ஸி. மூலம் உதவித் தொகை அளிக்க அரசாங்கம் முன் வரும்.

அரசுக்குச் சொந்தமான வாகனங்களை இன்ஸூர் செய்தல்.

*வினா எண். 432—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ் நாடு அரசுக்கு சொந்தமான பல்வேறு இலாக் காக்களைச் சேர்ந்த ஜீப் வண்டிகள், வேன்கள் இவைகளுக்கு இன் ஸூரன்ஸ் செய்யப்படுவதுண்டா ?

(ஆ) இவ்வண்டிகள் விபத்துக்குள்ளானால் உயிரிழப்பவர் களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை தரப்படுகிறதா ?

(இ) இவ்வண்டிகளால் ஏற்படும் விபத்துக்களில் உயிர் துறக்கும் நபர்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை தர அரசு திட்டமிட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மத்திய அல்லது மாநில அரசு இலாக்காக்களை சேர்ந்த ஜீப் வேன் போன்ற வண்டிகளுக்கு இன்ஸூரன்ஸ் செய்வதிலிருந்து 1939 ம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டம் 94 (2) ஆவது பிரிவின் கீழ் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மற்றும் (இ) ஆம். அரசினால் தரப்படுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : ஜீப்கள், வான்கள் இவற்றுக்கு இன்ஷூர் செய்வதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஜீப்கள், வான்கள் இவற்றில் செல்கிறபோது அதிகாரிகள் சில நேரங்களில் விபத்தில் சிக்குகிறார்கள். அல்லது இந்த ஜீப்கள், வான்கள் இவற்றில் சில நேரங்களில் பொது மக்கள் விபத்தில் சிக்குகிறார்கள், சிக்கி இறந்துவிடுகிறார்கள். தனியார் வண்டிகளில் சிக்கி விபத்தில் இறந்துவிட்டால் அவற்றை இன்ஷூர் செய்திருப்பதால் அந்தக் குடும்பத்திற்கு கணிசமான தொரு தொகை கிடைக்கிறது. ஆனால் அரசு வண்டிகளில்

சிக்கி விபத்தில் இறப்பவர்களின் குடும்பங்களுக்கு அந்தத் தொகை கிடைப்பதில்லை. ஆகவே இதற்கு அரசு ஒரு மாற்று ஏற்பாடு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : 1976-ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட விதியின் அடிப்படையில் இன்ஷூரன்ஸ் அவர்கள் செய்யாமலிருந்தபோதிலும் அந்தச் சலுகைகள் அவர்களுக்குக் கிட்டும். எம்.ஏ.ஸி.டி மூலம் வழக்கு பதிவுசெய்கிறபோது ஈட்டுத் தொகை அவர்களுக்கு அங்கு தரப்படுகிறது.

திரு. ஆர். சண்முகம் : இது ஜீப் இன்ஷூரன்ஸ் சம்பந்தமாகயிருந்தாலும், ஜீப்களைப் பழுதுபார்க்க அரசாங்கம் பழுதுபார்க்கும் நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் ஜீப்களைப் பழுதுபார்க்க அவற்றை அங்கு அனுப்புவார்களானால் சரிவர அங்கேயிருப்பவர்கள் ஜீப்களைப் பழுது பார்க்காமல் 20, 25 நாட்கள் வைத்துக்கொண்டு எந்த நிலையில் அவை அனுப்பப்பட்டதோ அதே நிலையில் திருப்பி அனுப்பிவிடுகிறார்கள். ஆகவே, அந்தப் பணியை ஏற்றிருக்கிற அதிகாரிகளுக்கு கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஒரு குறிப்பிட்ட துறையினரைச் சேர்ந்தவர்கள், உதாரணத்திற்காக கல்வித் துறை அல்லது பொதுப் பணித்துறை அவர்களுக்குரிய ஜீப்களை பழுது பார்க்க அனுப்பி 25 நாட்கள் அல்லது 30 நாட்கள் விட்டுவிடுவார்களானால் கண்டிப்பாக அவர்கள் அவர்களது பணிகளைச் செய்ய இயலாமல் போய்விடும். ஆகவே அந்தச் சிக்கல் இருக்காது என்று கருதுகிறேன். ஒருவேளை உறுப்பினர் அவர்கள், செம்மையாக ஜீப்கள் பழுதுபார்க்கப்படவில்லை என்று கருதுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. அரசாங்கம் தற்போது ஒரு திட்டத்தைக் கொண்டு வர இருக்கிறது. எம். வி. ஒ. ல் போனஸ் திட்டத்தைக் கொண்டு வந்து அதன் மூலம் அங்கு செம்மையான முறையில் வாகனங்களைப் பழுதுபார்க்கவேண்டும் என்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்களின் தெளிவான பதில் கிடைக்க வில்லை. தனியார் வண்டிகளில் விபத்துக்கள் ஏற்படும் போது கொடுக்கப்படுகின்ற நஷ்ட ஈட்டுத் தொகையைப் போல் அரசாங்க வண்டிகளில் விபத்து ஏற்படும் போது கொடுக்கப்படுகிற நஷ்ட ஈட்டுத் தொகையும் சமமாக கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி கொடுக்கப்படவில்லை என்றால் ஒரே மாதிரியாக கொடுப்பதற்கு தகுந்தவாறு உத்தரவு மாற்ற அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மோட்டார் ஆக்ஸிடெண்ட்க்ளைம் டிரிபியூனலைப் பொறுத்தவரையில் தனியார் வாகனங்களில் விபத்து ஏற்பட்டால் ஒரு தொகையும், அரசாங்க வாகனங்களாக இருந்தால் ஒரு தொகையும் கொடுக்கவேண்டும் என்ற பாகுபாடு கிடையாது. எல்லா வாகனங்களுக்கும் ஒரே அளவில் தான் நஷ்ட ஈட்டுத் தொகை அளிக்கப்படுகிறது.

திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனை.

* வினா எண். 437—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சியில் அமைந்துள்ள அரசினர் மருத்துவ மனையை விரிவு படுத்துகிற திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : இல்லை.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, நெடுங்காலமாக திருக்காட்டுப்பள்ளி மருத்துவ மனையில் போதிய அளவுக்கு விஸ்தரிப்பு இல்லாதிருப்பதின் காரணமாக அங்குள்ள ஏழை எளிய மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இந்த மருத்துவமனையை விரிவாக்கம் செய்யும் திட்டத்தை உருவாக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : தலைவர் அவர்களே, தற்போது அந்த மருத்துவ மனையில் 26 படுக்கைகள் உள்ளன. அதில் எட்டு ஆண் நோயாளிகளுக்கான படுக்கைகளும், 18 பெண் நோயாளிகளுக்கான படுக்கைகளும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. எக்ஸ்ரே போன்ற ஆய்வு கூடங்கள் அங்கு இல்லை. 1974—75—76 ஆம் ஆண்டுகளில் உள்ள நிலைமைப்படி, அங்கே உள் நோயாளிகளாக சிகிச்சை பெற்றவர்கள் முறையே 28, 26, 29 என்றும், புற நோயாளிகளாக சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை முறையே 255, 300, 345 என்றும் இருக்கின்றன. ஆகவே இப்போதிருக்கின்ற படுக்கைகள் போதுமானவையாக இருக்கின்றன என்று அங்குள்ள மாவட்ட மருத்துவ அதிகாரியின் கணிப்பாகும். அதோடு மட்டுமல்லாமல், அங்கிருந்து அருகிலுள்ள தஞ்சையில் ராஜா மிராசுதார் மருத்துவ மனையிலும் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலும் பல்வேறு நவீன தீவிர மருத்துவ வசதிகள் இருக்கின்றன. ஆகவே தற்போது திருக்காட்டுப்பள்ளியில் உள்ள மருத்துவ மனையை விஸ்தரிக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருப்பத்தூர் அரசினர் மருத்துவமனை.

* வினா எண் 438—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் அரசினர் மருத்துவ மனையில் மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும், காலி இடங்களில் மருத்துவர்களை நியமனம் செய்யவும் எடுக்கப் பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திராஜன் : திருப்பத் தூர் அரசினர் மருத்துவமனையில் தற்சமயம் நியமனம் செய்யப் பட்ட மருத்துவர்கள் 6. இந்த எண்ணிக்கையை உயர்த்து வதற்கான நடவடிக்கை ஏதும் இல்லை. தற்போது இரண்டு பணியிடங்கள் காலியாக உள்ளன. மருத்துவ மற்றும் குடும்பநல இயக்குநர் இவ்விடங்களுக்கு மருத்துவர்களை நியமித்து ஆணைப் பிறப்பித்துள்ளார். அவர்கள் பணியில் சேர்ந்தமைக் கான அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ப. சுந்தரம் : இந்த மருத்துவமனை நமது மாவட்ட திலேயே இரண்டாவது ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது. 120 படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவமனையில் இன்றையதினம் வந்து போகின்றவர்கள் எண்ணிக்கை ஏறக்குறைய 1,500 பேர்களாகும். ஆனால் அங்கிருக்கின்ற மருத்துவர்கள் ஆறு பேர்களாகும். இதனால் அங்கு வருகின்ற மக்களுக்கு சரியானபடி சிகிச்சை அளிக்க முடியவில்லை என்று அங்குள்ள மக்கள் குறைப்பட்டுக்கொள்கிறார்கள். ஆகவே இந்த குறையை நீக்குகின்ற வகையில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற மருத்துவர்களின் தொகை, விதிகளை ஒப்பிட்டு, 120 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைக்கு 6 மருத்துவர்கள் இருக்க வேண்டும் என்றிருக்கிறது. அந்த முறையில் இங்கு ஆறு மருத்துவர்கள் பணியாற்றி வரு கிறார்கள். ஆகவே இப்போது மருத்துவர்களின் எண்ணிக்கையை விஸ்தரிக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, திருப்பத்தூர் அரசு மருத்துவமனை தாலூகா தலைநகர் இருக்கின்ற இடத்தில் இப்போது அமைந்திருக்கிறது. மற்ற மருத்துவ மனைகளில் எல்லாம் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைகளில் எட்டு முதல் 10 டாக்டர்கள் வரை பணியாற்றுகிறார்கள். ஆகவே





120 படுக்கைகள் கொண்ட இந்த திருப்பத்தூர் ம த்துவ மனைக்கு இன்னும் அதிகமான மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புப் பிரிவுகள் தொடங்கு கின்ற நேரத்தில் மருத்துவர்களின் தேவைக்கு ஏற்றபடி மருத்து வர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

சீர்காழி அரசு மருத்துவமனை.

* வினா எண். 439—திரு. கே. சுப்பிரவேலு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சீர்காழியில் உள்ள அரசு மருத்துவமனையினை விரிவு படுத்துவதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம், எனில் எத்தனை ஏக்கர் நிலம்.

(இ) அதற்கான தொகை எவ்வளவு

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : (அ) ஆம்.

(ஆ) சீர்காழி மருத்துவமனையை விஸ்தரிப்பதற்காக 4.39 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) ரூ. 33,689.40.

[முற்பகல் 9-30].

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சீர்காழியிலே விஸ்தரிக்கப்பட இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பணி எப்போது முதல் துவங்கப்பட இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : தலைவர் அவர்களே, 1972 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ஆம் தேதி யிட்ட அரசு ஆணைப்படி 4.39 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் பட்டுள்ளது. ஈட்டுத் தொகையாக ரூ. 33,689.40 வழங்கப் பட்டிருக்கிறது. 1975 ஆம் ஆண்டு 20 படுக்கைகள் கொண்ட வார்டு ரூ. 1.15 லட்சம் செலவில் கட்டப் பட்டு, மருத்துவ மனையை எதிர் காலத்தில் விஸ்தரிக்க காலி நிலம் இருக்கிறது. அந்த நிலத்தில் இப்போது விஸ்தரிக்கும் எண்ணம் இல்லை.

## புதிய சர்க்கரை ஆலைகள்.

* வினா எண். 440 — திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் பகுதியில் சர்க்கரை ஆலை அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் பகுதியில் முன்னர் ஒரு திட்டத்தை, சர்க்கரை ஆலை நிறுவப்பட இருப்பதாக பொது மக்கள் நம்பக்கூடிய அளவிற்கு அரசு தரப்பில் பல செய்தித் தாள்களில் வெளி வந்திருந்தது.

(திரு. சி. ஆறுமுகம் இருக்கையில் உட்கார்ந்து பேசுதல்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இருக்கையில் உட்கார்ந்துகொண்டே பேசுங்கள். நீங்கள் அதற்கு பதிலளிக்க முற்பட வேண்டாம். அது அவருடைய வியாதி. என்ன மருந்து கொடுத்தாலும், குணப்படுத்தமுடியாது. (திரு. சி. ஆறுமுகம் பேச முற்படல்) உடனே விளக்கமா? தேவையில்லை, உட்காருங்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தங்களுடைய மேலான அனுமதியோடு முதலில் இருந்தே துணைக் கேள்வியாகக் கேட்க விரும்புகிறேன். மாயூரம் பகுதியில் சர்க்கரை ஆலை ஒன்று நிறுவப்பட இருப்பதாக, பொது மக்கள் நம்பக்கூடிய அளவிற்கு அரசு தரப்பில் செய்திகள் செய்தித் தாள்களில் வெளியாகி இருந்தது. அதையொட்டி, அதற்கு ஏற்ற இடங்களை அதிகாரிகள்கூட நேரிடையாகப் பார்வையிடச் சென்றார்கள். அது குறித்து தொடர் நடவடிக்கையாக சர்க்கரை ஆலை ஒன்றை நிறுவ அரசு முன்வருமா? மேலும், இதற்கு முன்னர் இருந்த அரசு அங்கே ஒரு சிமெண்ட் தொழிற்சாலை அமைப்பதாக எடுத்துச் சொன்னார்கள். ஏதாவது ஒரு தொழிற்சாலையை. தஞ்சை மாவட்டத்தில், குறிப்பாக மாயூரம் பகுதியில் ஏற்படுத்துவதற்கு அரசு ஆவண செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, குறிப்பிட்ட இலக்கை சர்க்கரை ஆலைகள் ஏற்கனவே எட்டி விட்டதாலும், தேவைக்கு அதிகமான அளவு





உற்பத்தி இருப்பதாலும், தொழிலில் மந்த நிலை இருப்பதாலும். புதிய ஆலைகளை நிறுவுவதற்கு மத்திய அரசு அனுமதிக்கவில்லை. இந்த வகையில் மாயூரம், மற்றும் திருத்தணி ஆகிய இரண்டு இடங்களிலும் சர்க்கரை ஆலைகள் நிறுவுவதற்கான உரிமம் கோரப்பட்டது. ஆனால், மைய அரசு சர்க்கரை ஆலைகளை அமைக்க உரிமம் வழங்கும் செயற் குறிப்பை ஒத்திபோட்டு விட்டது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, சர்க்கரை தொழிலில் மந்தம் ஏற்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மந்தம் ஏற்பட்டிருப்பதால், கரும்பு உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் சிரமத்திற்கு ஆளாக்கப் பட்டிருக்கிறார்கள். அந்த ஆலைகளும் நெருக்கடிக்கும் உள்ளாகி இருக்கின்றன. இந்த விவசாயிகளையும், ஆலைகளையும் காப்பதற்கு அரசு ஏதாவது உதவி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதா? அப்படி நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் உள்ளதா? உத்திரப்பிரதேசத்தில் சர்க்கரை ஆலைகளின் மூலம், மேலும் விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு 15 ரூபாய் உதவியளித்து இருக்கிறார்கள். நம் தமிழ்நாடு அரசும் இதுசம்பந்தமாக, இந்த நெருக்கடியைத் தீர்க்க சர்க்கரை ஆலைகளுக்கும், கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும் நிவாரணம் அளிக்க என்ன உதவி செய்ய உத்தேசித்துள்ளது என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த சர்க்கரை ஆலையில் சுமார் குவிண்டால் ஒன்றுக்கு 60 ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. உத்திரப் பிரதேசத்தில் என்ன செய்கிறார்கள் என்ற தகவல் இல்லை. ஆனால், சர்க்கரை ஆலைகள் பெரும் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிக்கின்றன என்பது உண்மை. 1977–78 ஆம் ஆண்டு மட்டும் 16·85 கோடி ரூபாய் தமிழக சர்க்கரை ஆலைகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நஷ்டத்திலிருந்து இந்தத் தொழிலை மீட்பதற்கு மாநில அரசு மத்திய அரசுக்கு நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆனால், உத்திரப் பிரதேசத்திற்கு மத்திய சர்க்கார் 20 கோடி ரூபாய் கொடுத்து உதவியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திற்கும் 10 கோடி கேட்டோம். 10 நாளில் பதில் வந்தது, ஆனால் இல்லை என்று.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : உத்திரப்பிரதேசத்திற்கு 20 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள், நமக்கு இல்லை என்றால் எங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று அரசு வற்புறுத்துமா?

[1979 மார்ச் 17

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இப்போது துணைப் பிரதமராக பொறுப்பேற்றிருக்கும் சரண்சிங் அவர்கள் வந்தபிறகு மீண்டும் இதை வற்புறுத்திக் கடிதம் எழுதியிருக்கிறோம்.

திரு. என். கிட்டப்பா : இது மாயூரம் பற்றிய கேள்வி. மாயூரம் தொகுதி நீண்டகாலமாக தொழில் வளர்ச்சி இல்லாத பகுதியாக இருக்கும் காரணத்தால் மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டு இருக்கும் காரணத்தால் ஓராண்டில் பாதி நாட்களுக்குமேல் வேலை இல்லாத நிலையில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் அடிப்படையில் சர்க்கரை ஆலை அமைக்கா விட்டாலும் அண்மையில் நம்முடைய அரசு அறிவித்திருக்கிற மினி சிமெண்ட் ஆலையாவது அமைக்க மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் புலியூரார் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அவர் என்ன சொல்லி என்னை அழைத்தாலும் அவர் பெயர் சரிதான்—தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துச் சொல்ல முடியும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சர்க்கரை ஆலைகளில் நஷ்டம் என்றும் மந்தமாக இருக்கிறது என்றும் உத்திரப் பிரதேசத்திற்குக் கொடுத்திருக்கிற ரூபாய் 20 கோடி அல்ல, 22·30 கோடி ரூபாய் கொடுத்துள்ளதாக பாராளு மன்றத்தில் கேள்விக்குப் பதிலளிக்கும்போது தாவல் தந்திருக்கிறார்கள். எழுதினோம் பதில் இல்லை. கேட்டோம் கொடுக்கவில்லை என்று மட்டும் சொல்லிவிட்டால் அமைச்சராக இருந்து பயன் இல்லை. ஆகவே, உறுதியாக நின்று போராடி வாங்குவதற்கு இந்தச் சபையில் இருக்கும் எல்லாக் கட்சியினரும் ஆதரவாக இருப்பார்கள். உடனடியாக அதற்கு முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் டில்லி சென்றிருந்தபோது மத்திய நிதியமைச்சரிடத்தில் இதைப் பற்றி வற்புறுத்தி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் நிச்சயமாக ஒரு சம நீதி என்ற அடிப்படையிலாவது மாநில அரசு கேட்ட உதவியைத் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அவர்கள் தரமாட்டார்கள் என்ற நிலைமைக்குத் திடீரென்று சென்றுவிட வேண்டியதில்லை. வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம், நேரில் பேசி இருக்கிறோம், நல்ல நிலைமை உருவாகும் என்று எதிர்பார்க்கிறோம்.



1979 மார்ச் 17]

திரு. சி. ஆறுமுகம் : தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் எந்தெந்த ஆலைகளுக்கு நிதிப் பற்றாக் குறை ஏற்பட்டிருக்கிறது? அதைச் சரி செய்ய அவர்கள் அரசிடத்தில் மானியம் கேட்டிருக்கிறார்களா? எந்தெந்த ஆலைகளுக்கு மானியம் வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 11 ஆலைகள் வருகின்றன. கூட்டுறவு ஆலைகளும், பொதுத் துறை ஆலைகளும் இருக்கின்றன. அந்த ஆலைகளில் ஏற்பட்ட நஷ்டம் வருமாறு— ஆம்பூர் 38.88 லட்சம் ரூபாய்; மதுராந்தகம் 103.97 லட்சம் ரூபாய்; அமராவதி 105·08 லட்சம் ரூபாய்; சேலம் 84.33 லட்சம் ரூபாய்; கள்ளக்குறிச்சி 81·79 லட்சம் ரூபாய்; நேஷனல் 140.75 லட்சம் ரூபாய்; தர்மபுரி 74.06 லட்சம் ரூபாய்; வேலூர் 142·31 லட்சம் ரூபாய்; திருப்பூர் 125.01 லட்சம் ரூபாய்; அறிஞர் அண்ணா 32.06 லட்சம் ரூபாய்; ஜவகர்லால் நேரு 73.23 லட்சம் ரூபாய். உடனடியாக உதவி செய்யலாமா என்று மாநில அரசு யோசித்து 2 கோடி ரூபாய் கடனாக உதவலாமா என்று பரிசீலித்து வருகிறது.

திரு. சி. ஆறுமுகம் : யோசித்துக் கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எந்த ஆலைக்கு எவ்வளவு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இன்னும் எந்த ஆலைக்கும் வழங்கப்படவில்லை. வழங்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. வழங்குவது என்றால் 2 கோடி ரூபாய் கடனாகத்தான் வழங்கப்படும் .

* வினா எண் 441— திரு. செ. சிவசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம், மானாமதுரை பகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று ஆரம்பிப்பதாக அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும். ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1979 மார்ச் 17

(முற்பகல் 9-40)

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்கு முகவை மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். கடந்த ஆண்டு இதே கேள்விக்கு நிச்சயமாக மானாமதுரையிலே அதற்குப் பக்கத்திலே கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆரம்பிக்கப்படுமென்று உறுதி சொல்லப்பட்டது. உண்மையிலேயே அந்தப் பகுதி பிற்பட்ட பகுதி. அங்கே சர்க்கரை ஆலை ஏற்படுத்தப்பட்டால் அதற்குப் பக்கத்திலே இருக்கிற சிலைமான், திருப்பாச்சேத்தி போன்ற பகுதிகள் கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய பகுதிகளாக இருக்கின்ற காரணத்தால் அங்கே சர்க்கரை ஆலையைக் கொண்டு வருவதற்கு மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சிவகங்கையிலே அமைக்கப்பட இருக்கும் சர்க்கரை ஆலை தோன்றினால் அந்த விவகார எல்லைக்குள் மானாமதுரையும் சேரும். ஆனால் சிவகங்கையிலே சர்க்கரை ஆலைக்கு வழங்கியிருந்த உரிமத்தை மத்திய அரசு ரத்து செய்துவிட்டது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இந்த சர்க்கரை ஆலைகள் பற்றி இங்கே கேட்கப்படுகிற துணைக் கேள்விகளையும் அவைகளுக்கு அமைச்சர்கள் அளிக்கிற பதில்களையும் தமிழ்நாட்டு விவசாயிகள் கேட்டால் கரும்பு பயிரிடுகிற எண்ணத்தையே கைவிட்டுவிடுவார்கள் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்த அச்சத்தைப் போக்கக்கூடிய வகையிலே ஏதாவது ஒரு உறுதிமொழியை அவர்களுக்கு இந்த அரசு அளிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இத்தகைய பொருளாதாரப் பிரச்சினைகளில் மத்திய அரசு முடிவு எடுக்கிறது. டீகண்ட்ரோல் செய்வது என்ற முடிவை மத்திய அரசு எடுத்தபோது மாநில அரசுகளைக் கலக்கவில்லை. டீகண்ட்ரோல் செய்ததால் சர்க்கரையின் விலை வீழ்ந்துவிட்டது. உற்பத்திச் செலவைவிட ஒரு குவிண்டாலுக்கு 60 ரூபாய் நட்டம் ஏற்படுகிறது. அதனால் உற்பத்தியாளர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆலைகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய முடிவுகளை மத்திய சர்க்கார் மாநிலங்களையும் கலந்துகொண்டு முடிவு எடுத்தால் இத்தகைய நிலைமைகள் ஏற்படாமல் இருக்கும். பொருளாதாரக் கொள்கையிலே அத்தகைய முறையை கையாண்டால் நாட்டுக்கும் நல்லது. தொழிலுக்கும் நல்லது.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, நாட்டிலே சர்க்கரை உற்பத்தி அதிகமானதால் சிவகங்கையிலே ஆலை ஆரம்பிக்கக் கொடுக்கப்பட்ட லைசென்ஸை கேன்சல் செய்து



1979 மார்ச் 17]

இருக்கிறார்கள். பாலுக்குச் சர்க்கரை என்ற நிலைமை வேண்டுமானால் பூர்த்தியாகியிருக்கலாம். ஆனால் கூழுக்கு உப்பில்லை என்ற நிலைமை பூர்த்தியாகவில்லை. ஆகவே மீண்டும் பரிசீலனை செய்து சிவகங்கையிலே ஆரம்பிக்க ஏற்பாடுகளை அரசு செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருப்பித் திருப்பி அதே கேள்வியா ? ஒரு கருத்தை இரண்டு கேள்விகளிலேயும் கேட்பதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இருக்கிற ஆலைகளை நடத்துவதே பெரும் கஷ்டமாக இருக்கிறது. நிலைமையிலே கொஞ்சம் முன்னேற்றம் ஏற்படுமானால் நிச்சயமாக மீண்டும் நம்முடைய அரசு மத்திய அரசுக்கு மனுப் போடும். இப்போது உப்பைப்பற்றிக் கவலையில்லை. சர்க்கரையைப் பற்றித்தான் கவலை.

## பத்திரிகைகளுக்கு அரசு விளம்பரங்கள்

*வினா எண் 442—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1976–77ம் ஆண்டில், அரசு விளம்பரங்கள் எந்தெந்த தினசரிப் பத்திரிகைகளுக்கு, எவ்வளவு மதிப்புள்ள விளம்பரங்கள் தரப்பட்டன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அரசுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விவர அறிக்கை * ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த விளம்பரங்கள் தரப்பட்ட காலம் நெருக்கடி நிலை காலம். இதிலே ஆங்கிலப் பத்திரிகை என்று 'இந்து' பத்திரிகையிலே ஆரம்பித்து 'அஸ்ஸாம் டிரிபியூன்' வரையிலும் கொடுத்துவிட்டு தமிழ்ப் பத்திரிகை என்று போட்டு 'தினத் தந்தி' யிலே ஆரம்பித்து சுதேசமித்திரன் வரையிலும் தரப்பட்டிருக்கிறதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த புதிய அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பின்னால் முரசொலி, தீக்கதிர், தினகரன் போன்ற பத்திரிகைகளுக்கும் விளம்பரங்கள் தரக்கூடிய அளவிற்கு கொள்கையை அரசு வகுத்துள்ளதா ? ஆமெனில் அதை அறிவிக்க இயலுமா ?

* 521-252ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> தலைவர் அவர்களே, 1976–77ஆம் ஆண்டிலே அன்றைக்குப் பொறுப்பேற்றுக்கொண்டிருந்த அரசு சில தமிழ்ப் பத்திரிகைகளை, விளம்பரம் கொடுக்கின்ற பட்டியலிலே இருந்து நீக்கியிருந்தது. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு முரசொலி போன்ற பத்திரிகைகள் அரசு விளம்பரங்கள் கொடுக்கின்ற பட்டியலிலே சேர்க்கப்பட்டு விளம்பரங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே 1976–77ஆம் ஆண்டிலே கொடுக்கப்பட்ட விளம்பரங்களிலே தினத்தந்திப் பத்திரிகைக்கு மாத்திரம் ரூ. 2 லட்சத்து 83 ஆயிரத்து 999 அளவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது கொடுக்கக்கூடிய தொகைகள் தெரியவில்லை. ஆனாலும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட பத்திரிகைகளுக்கு இந்த விளம்பரங்கள் எந்த அடிப்படையிலே கொடுக்கப்படுகின்றன, பத்திரிகை விற்பனை எண்ணிக்கையின் அடிப்படையிலா அல்லது வேறு அடிப்படையிலா ? நம்முடைய தமிழ்நாட்டில் எந்தெந்தத் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு முன்பு கொடுக்கப்பட்டு வந்தது ? இப்பொழுது எத்தனைத் தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்படுகிறது ? எந்த அடிப்படையிலே கொடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> பேரவைத் தலைவரவர்களே, பத்திரிகைகளுக்கு விளம்பரம் தருகின்ற அடிப்படையை நிர்ணயிக்கின்றபொழுது, பத்திரிகையின் விற்பனையை முதலில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. அதற்குப் பிறகு, அதன் தரம், பத்திரிகைத் தர்மத்தைக் கடைப்பிடிக்கின்ற முறை, அதிலே வெளியிடுவதால் அரசுக்குக் கிடைக்கின்ற பலன், மக்களுக்குக் கிடைக்கின்ற பலன் ஆகிய இவைகளையெல்லாம் மனத்தில் எண்ணித்தான் பத்திரிகைப் பட்டியலில் இணைக்கப்படுகின்றன. இப்பொழுது எவ்வளவு பத்திரிகைகள் பட்டியலில் இணைக்கப்படுகின்றன என்ற விவரம் இதிலே இல்லை. அதற்குத் தனிக் கேள்வி போட்டால் அந்த விவரத்தைச் சேகரித்துத் தர முடியும்

<u>திரு. என். கிட்டப்பா :</u> தலைவரவர்களே, 1976–77இல் நெருக்கடி நிலை இருந்த காரணத்தினால் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். சில பத்திரிகைகள், விளம்பரம் தரக்கூடிய அந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன என்று சொன்னார்கள். அத்தகைய பத்திரிகைகள் எவையெவை என்று அறிந்துகொள்ள இயலுமா ? அதைப்போலவே, அவர்கள் காலத்திலே நீக்கினாலும், இப்பொழுது நமது அரசில், இன்றைய அரசில் குறிப்பிட்ட பத்திரிகை எதற்கேனும் அரசு விளம்பரம் தருவதற்கு ஆட்சேபிக்கப்பட்டிருக்கிறதா ? (குறுக்கீடு) அதாவது, இப்பொழுது நமது அரசில், இன்றைய அரசில் குறிப்பிட்ட



பத்திரிகை எதற்கேனும், அவர்கள் பட்டியலிலிருந்து நீக்கியதைப்போல, இப்பொழுது எத்தனை பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் தரப்படுவது நீக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டியலிலிருந்து என்பதை அறிந்து கொள்ள இயலுமா ?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> பேரவைத் தலைவரவர்களே, அவசர நிலை அமலில் இருந்தபொழுது—இந்த மாநிலம் குடியரசுத் தலைவர் ஆட்சியில் இருந்தபொழுது—சில தமிழ்ப் பத்திரிகைகள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றன. முரசொலி, விடுதலை, அறமுரசு, தமிழ்முரசு, நாத்திகம், தினமணி, நீட்டோலை, தினச்சுடர், இவற்றில் முரசொலி, விடுதலை, அறமுரசு, தினச்சுடர் ஆகிய தமிழ் நாளிதழ்கள் 1977-ல் மீண்டும்,—இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு—பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

<u>திரு. எச். ஜி. ஆறுமுகம் :</u> தலைவரவர்களே, அமைச்சரவர்கள் உண்மைக்குப் புறம்பாக நடக்கின்ற பத்திரிகைகளின் விவரங்களைச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கும் உண்மைக்குப் புறம்பாக நடக்கும் பத்திரிகைகளுக்கு அரசு விளம்பரங்கள் கொடுக்கப்படுவது நிறுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> பேரவைத் தலைவரவர்களே, உண்மைக்கு உறுதுணையாக அல்லது புறம்பாக என்ற அடிப்படையில் அரசு இதற்கு அளவுகோலாகக் காண்பதில்லை. நான் முன்பு சொன்னதைப்போன்று சில விதிகளை அடிப்படையாக வைத்து இறுதியாக அரசுக்குள்ள உரிமையையும் மனத்தில் வைத்துச் சில முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> தலைவரவர்களே, இப்பொழுது முரசொலி பத்திரிகைக்கு மீண்டும் விளம்பரம் கொடுப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அதைப்போல மிகவும் முக்கியமாக இருக்கின்ற தினகரன் பத்திரிகையும் சேர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> பேரவைத் தலைவரவர்களே, தினகரன் பத்திரிகை இந்தப் பட்டியல் தயாரிக்கும் பொழுது இல்லாத காரணத்தால் இல்லை. பின்னாலே துவங்கி வருகிற பத்திரிகை. அந்தப் பத்திரிகையும் பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கிறது.

## திருவில்லிப்புத்தூரை சுற்றுலா மையமாக்கல்.

*வினா எண் : 443— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

இராமநாதபுரம் மாவட்டம், திருவில்லிப்புத்தூரை சுற்றுலா மையமாக அறிவிக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசின் முத்திரைச் சின்னமே ஸ்ரீவில்லிபுத்தூர் கோயிலை மாடலாகக் கொண்டு விளங்குகிறது. அங்கே ஆண்டாள் கோயில் இருக்கிறது. திருவாரூர் தேரைப்போன்ற பெரிய தேர் இருக்கிறது. தரகுமலை மாதா கோவில் இருக்கிறது. சதுரகிரி மாகலிங்கம் கோயில் இருக்கிறது. குற்றால நீர் வீழ்ச்சியைப் போல ஒரு நீர் வீழ்ச்சி சரக்கம்பாறையில் இருக்கிறது. அழகர் கோயிலில் இருந்து வரும் தீர்த்தத் தண்ணீர் எங்கிருந்து வருகிறது என்று தெரியாமல் இருக்கிறது. இதைப் பார்ப்பதற்கு பக்தர்கள் அதிக அளவில் வருகிறார்கள். மேலும் அங்கே யானைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் ஒரு சரணாலயம் அமைக்கவும் ஆய்வு வேலைகள் நடந்து வருகின்றன. இவ்வாறு அது ஒரு சுற்றுலாப் பயணத்திற்கு உகந்த வகையில் இருக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியைச் சுற்றுலா இடமாக ஆக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் எடுத்துச் சொன்ன அத்தனை கருத்துக்களுக்கும், விவரங்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே இவ்வளவு நல்ல காட்சிக்குரிய இடங்கள் இருக்கின்றன என்பது உண்மை. ஆனால் எந்தக் காரணத்தாலோ அந்தப் பகுதி இதுவரையில் கவனிக்கப்படாமல் இருந்து வந்திருக்கிறது. ஆனால் அறநிலையத் துறை, வனத் துறை, சுற்றுலாத் துறை பொதுப் பணித்துறை ஆகிய இத்தனை துறைகளும் சேர்ந்து அந்தப் பகுதிகளில் எந்த அளவிற்கு எந்தெந்த வகைகளில் அதை வசதிகள் உடையதாக ஆக்கி தம்முடைய அந்தப் பகுதி மாவட்ட மக்களாவது வந்து பார்க்கின்ற அளவிற்கு அதை ஒரு எக்ஸ்கர்ஷன் சென்டர் என்ற அளவிற்கு உருவாக்குவதற்குப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





## Seminars for Headmasters of Higher Secondary Schools.

* Q. No. 444 Thiru C. MANICKAM :—Will the Hon. the Minister for Education be pleased to state.

(a) whether seminars for the benefit of Headmasters and Headmistresses of the Higher Secondary Schools in this State by the Chief Educational Officers were conducted in May-June 1978: and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) & (இ) ஆம்.

மேல்நிலைப் பள்ளிகளை நிறுவும்போதும் நடத்தும்போதும் ஏற்படும் பல்வேறு சிக்கல்கள் பிரச்சினைகள் முதலியவற்றை ஆராய்ந்து தீர்வு காணும் பொருட்டு, மே திங்கள் 19, 20, 21 நாட்களில் கோயம்புத்தூர், நீலகிரி மாவட்ட மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்/ஆசிரியைகளுக்கும், கல்வித்துறை ஆய்வு அலுவலர்களுக்கும் மூன்று நாட்கள் மேல்நிலைப் பள்ளிக் கல்விப் பண்ணை (Workshop) நடத்தப்பட்டது.

மற்ற மாவட்டத்தைச் சேர்ந்த தலைமை ஆசிரியர்/ஆசிரியைகளுக்கு நடத்தப்பட்ட கருத்தரங்கு விவரம் பின்வருமாறு :—

| மாவட்டம். (1) | கருத்தரங்கு நடைபெற்ற இடம். (2) | கருத்தரங்கு நடைபெற்ற நாள். (3) |
|---|---|---|
| சென்னை .. | சிமாட்டி வெலிங்டன் பயிற்சிக் கல்லூரி. | 3—6—1978 |
| செங்கல்பட்டு, தென்னாற்காடு. | விழுப்புரம் .. .. | 15—6—1978 |
| வடாற்காடு, தர்மபுரி சேலம். | சேலம் .. .. | 20—6—1978 |
| தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை. | திருச்சி .. .. | 21—6—1978 |
| மதுரை, இராமநாதபுரம். | மதுரை ... .. | 22—6—1978 |
| திருநெல்வேலி, கன்னியாகுமரி | திருநெல்வேலி .. | 23—6—1978 |

[முற்பகல் 9·50)

திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கருத்தரங்கு எதைப் பற்றியது. அந்தக் கருத்தரங்கு மாணவர்களுக்கு எந்த வகையில் பயன் அளிக்கக்கூடியது. அந்தக் கருத்தரங்கு நடத்தியதால் அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கருத்தரங்கு மேல் நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியைகள் ஆகியோர்க்கு நடத்தப்பட்டதாகும், புதிதாக துவக்கப்பட்டப் பள்ளிகளில் இருக்கக்கூடிய அல்லது எதிர் பார்க்கும் பிரச்னைகள், சிரமங்கள் இவைகளையெல்லாம் ஆராய்ந்து, முன்கூட்டியே அவைகளைக் குறித்து விளக்க அந்தக் கருத்தரங்குகள் நடத்தி வருகிறோம். கோவையில் நடைபெற்ற கருத்தரங்கை அவர்கள் அதை ஒரு பணிப்பண்லணயாக நடத்தி, அதிலே பல்வேறு பிரச்னைகளை ஆராய்ந்து, பரிந்துரை செய்து, அதைப் புத்தகமாக வெளியிட்டு எல்லாத் தலைமை ஆசிரியர் களுக்கும் அனுப்பப்பட்டது. அந்த அடிப்படையில் தான் இன்று பல்வேறு நடவடிக்கைகளை நடத்திக் கொண்டு வருகிறார்கள். அதனால் மாணவர்களுக்கு நேரடியாக பயன் இல்லை என்றாலும், பள்ளி நல்லமுறையில் நடத்தப்படுவதால் மாணவர்கள் பயன் பெறுவார்கள்.

திரு. அ. செல்லப்பா : தலைவர் அவர்களே, மாநிலத்தில் உள்ள அரசினர் மேல்நிலைப்பள்ளிகளில் வரலாற்றிற்கு ஒதுக்கப் பட்ட இடங்கள் எத்தனை? அதிலே எம்.ஏ.பி.டி. படித்த தாழ்த் தப்பட்ட ஆசிரியர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு ஆண்டு தோறும் இது போன்ற கருத்தரங்குகள் நடத்தி புதிய சிந்தனை களை அவர்களுக்கு ஏற்படுத்துவதற்கு அரசு வழி வகுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர் களே, இந்தக் கருத்தரங்குகள் எந்த விதத்தில் அவர்கள் பள்ளியை நிர்வகிப்பது என்பதை பற்றிய ஒரு கருத்தரங்கு. அது எல்லா மாவட்டங்களிலும் நடத்தும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவைகள் அந்த வகையில் செயல்பட்டு வருகின்றன. இது போன்ற கருத்தரங்குகளும், பயிற்சிகளும் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பது அரசின் எண்ணம்.





## பட்ட மேற்படிப்புகளில் தமிழ் போதனா மொழி.

* வினா எண் : 445— திரு. எஸ்.கணேசன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்பொழுது எந்தெந்த பட்ட மேற்படிப்புகளில் தமிழ் போதனா மொழியாக அமுல்படுத்தப்படுகிறது?

(ஆ) மேற்கொண்டு எந்தெந்த பட்ட மேற்படிப்புகளில் தமிழை போதனா மொழியாகக் கொண்டு வர அரசு உத்தேசித் துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மதுரை, தியாலாஜிகல் செமினரியில் தத்துவம் மற்றும் மதம் போன்ற பாடங்களிலும், சென்னைப் பல்கலைக் கழக இந்திய வரலாற்றுத் துறையில் வரலாற்றுப் பிரிவிலும் தமிழ் போதனா மொழியாக அமுல்படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) 1979–80-ம் ஆண்டிலிருந்து கல்லூரிகளில் வரலாறு பட்ட மேற்படிப்பு வகுப்பில் தமிழை போதனா மொழியாக கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ப. சந்திரன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக்கல்வி தமிழிலே இருப்பதற்கு அரசு வகை செய்திருக்கிறது. ஆனால் தமிழில் படிப்பதற்கு நல்லபோதிய புத்தகங்கள் கிடைக்க வில்லை. தமிழ்ப் புத்தகங்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது இந்தக் குறையைப் போக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதற்கான நட வடிக்கையை அரசு எடுக்கும்.

## டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலை.

* வினா எண் : 446—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்பு மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 18—7—1978 தேதி T. I. சைக்கிள் பாக்டரியை திறக்கும்படி கோரி சென்னை-செங்கை மாவட்டங்களில் ஒருதினம் எல்லா தொழிலாளர்களும் பொது வேலை நிறுத்தம் செய் ததை அரசு அறியுமா?

[1979 மார்ச் 17

(ஆ) ஆம் எனில் இத்தொழிற்சாலை திறக்கப்பட என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) அம்பத்தூரிலுள்ள டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலையை திறக்க வேண்டுமென்ற கோரிக்கையை வற்புறுத்த எல்லா தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் சேர்ந்து 14–7–1978 அன்று நடவடிக்கைகுழு அமைத்து, '' 17–7–1978 அன்று நடு இரவு முதல் சென்னை நகரம் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்யப்படும் '' என்று தீர்மானம் செய்துள்ளதாக அரசுக்கு தெரிய வந்தது. 18–7–78-ந் தேதியைப் பொதுவிடுமுறையாக அறிவித்து அரசு உத்திரவு பிறப்பித்தது அன்று எல்லா தொழிற் சாலைகளும் பெரும்பாலான கடைகளும் மூடப்பட்டதால் எவ் வகுப்புத் தொழிலாளராலும் வேலை நிறுத்தம் செய்யப்படவில்லை.

(ஆ) சென்னை தொழிலாளர் நல அலுவலர், ஆணையர் அவர்கள் நிர்வாகம் மற்றும் தொழிற் சங்கத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் 3–8–78 அன்று நிர்வாகத்துடனும் தொழிற் சங்கத் தலைவர்களுடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தினார்கள். பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றன. தொழிலாளர் களின் பிரதிநிதிகள் அடங்கிய ஐவர் குழுவுடன் பேசி, நிர்வாகம் சமரச ஒப்பந்தம் ஏற்பட்டதன் பயனாக, 11–1–78-ந் தேதியிலிருந்து இயங்காமல் நிறுத்தி வைத்திருந்த இந்த தொழிற்சாலை 16–10–78-ந் தேதியிலிருந்து மீண்டும் துவங்கி இயங்கி வருகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், தொழிலாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கம சி.ஐ.டி.யூ. அங்கே இருக்கும் போது அதைப் புறக்கணித்து அவர்களை வைத்து பேச்சு வார்த்தை நடத்தாமல், ஐவர் குழு என்று வைத்து ஏதோ செய்யப்பட்டுள்ளது. தொழிற்சங்கத்தை புறக்கணிப்பது நல்லதா? ஆகவே அமைச்சர் அவர்கள் தொழிற்சங்கத் தலைவர் ஆக இருந்தபோது எப்படி நடந்து கொண்டார்களோ அது போன்று நல்ல முறையிலே நடந்து தொழிலாளர்களுக்கு ஜனநாயக தொழிற் சங்க அடிப்படையில் நீதி கிடைக்கும் படி நடந்து கொள்ள வேண்டும். எவ்வகுப்பு தொழிலாளரும் வேலை நிறுத் தம் செய்யவில்லை. அன்றைக்கு பொது விடுமுறை விடப்பட்டது என்று சொல்லப்பட்டது. எல்லா தொழிலாளர்களுக் கும், அந்த விடுமுறைக்கான சம்பளம் அளிக்கப்பட்டதா, அளிக்கப் படவில்லை என்றால் அதை அளிப்பதற்கு என்ன ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது?



1979 மார்ச் 17]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் ஒரு விஷயத்தை உறுப்பினர் அவர்களுக்கு சொல்லிக்கொள்கிறேன். அது சி.ஐ.டி.யூ. சங்கம் இல்லை. திரு கோபால் அவர்களும், திரு. தங்கமணி அவர்களும் ஏ.ஐ.டி.சி. சங்கம் என்று தான் எனக்கு தகவல். அவர்கள் இரண்டு பேரும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள். ஐந்து பேர் கையெழுத்திட்டு ஒப்பந்தம் செய்தபிறகு அந்தத் தொழிற் சாலை 16–10–1978-லிருந்து நடந்து கொண்டிருக்கிறது. அந்தச் சட்டப்படி, அ. 25(2பி) ''by 5 representatives of workmen duly authorised in this behalf at a meeting of the workmen-(and not the Union)-held for the purpose and attended by a majority of the workmen concerned'' ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக தொழிலாளர்கள் கூட்டம் ஏற்பாடு செய்து அதில் பெரும்பான்மையினர் கலந்துக் கொண்டு, 5 பேருக்கு அதிகாரம் அளித்தால், அவர்கள் அனுமதித்தால் கையெழுத்துப் போடலாம் என்று விதி 25(2-பி)- இல் குறிப்பிட்டிருப்பது போல் அவர்கள் செய்திருக்கிறார்கள். இன்னும் அடிஷனல் இன்பர்மேஷன், அந்த ஐந்து பேர்களில் ஒருவர் தான் அ.தி.மு.க. வைச் சேர்ந்தவர், மற்ற நான்கு பேர்கள் பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள். ஜனதாவின் பிரதிநிதி கூட ஒருவர் இருந்தார் என்று தெரியவருகிறது.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இப்பொழுது படித்துக் காட்டிய இண்டஸ்டிரியல் டிஸ்பியூட் ஆக்ட்டில் இருக்கக்கூடிய விதியின் படி தொழிற்சங்கங்கள் இல்லாத இடத்தில்தான் தொழிலாளர்களில் ஐந்து பேர்களை தேர்ந்து எடுத்து கையெழுத்து இட அனுமதிக்கப்படுவார்கள். ஆனால் இங்கே ஏற்கெனவே தொழிற்சங்கம் இருக்கும் போது அவர்களை விட்டு ஐந்து பேர்களை தேர்ந்தெடுத்து அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி கையெழுத்து இடப்பட்டது ஏன்.?

இரண்டாவதாக, அன்றைக்கு பொது விடுமுறை என்று அறிவித்தார்கள். பொது விடுமுறை எல்லா தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்பட்டதா? அப்படி விடுமுறை கொடுக்கப்படவேண்டும் என்று அரசு அறிவித்தும் அந்த விடுமுறை தினத்துக்கான சம்பளம் எல்லா தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி கொடுக்கப்படவில்லை என்றால், கொடுப்பதற்கு அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-00.]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, முதல் கேள்விக்கு பதில், சட்டப் பிரிவு மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறபடி இல்லை என்பதையும், முழுமையாகவே நான் அந்தப்பிரிவைப் படித்து இருப்பேன், எப்போதுமே பேரவைக்

தலைவர் சுருக்கமாக இருக்க வேண்டும் என்று உயரமாக உள்ள என்னிடத்தில் சொல்லி வருகிறார். ஆகவே, சுருக்கமாகப் படித்தேன். இப்போது முழுமையாகப் படித்து விடுகிறேன். In the case of workmen, either by the President or Secretary of a registered Trade Union of workmen or by......

(Thiru C. Govindarajan rose)

please wait, kindly wait,—or two Office beares of the union authorised by the President or Secretary or by 5 representatives of workmen duly authorised in this behalf at a meeting of the work-men held for the purpose and attended by a majority of the workmen concerned.

அவர்களையோ அல்லது இவர்களையோ என்று சட்டப் பிரிவு இருக்கிற காரணத்தால், அந்த 5 பேர்களையும் நாங்கள் தாண்ட வில்லை. அவர்களாகவே ஒரு கூட்டம் ஏற்பாடு செய்து, அந்தக் கூட்டத்தில் மெஜாரிட்டி தொழிலாளர்கள் 11—10—1978 அன்று தொழிலாளர்கள் கூட்டம் நடந்து இருக்கிறது. அதிலே பெருவாரியான தொழிலாளர்கள் ஆதரவு தந்த காரணத்தால் 14—10—1978 அன்று ஒப்பந்தம் செய்யப்பட்டு, 16-ம் தேதி தொழிற்சாலை திறக்கப்பட்டது.

விடுமுறை அறிவிக்கப்பட்டது. under Negotiable Instruments Act அது எல்லாத் தனியார் நிறுவனங்களையும் கட்டுப்படுத்த முடியாது. வேண்டுகோள் வைக்கத்தான் முடியும். இதில் சட்ட நிலைமையை நான் இங்கே விளக்கிக் கூற விரும்புகிறேன். You cannot compel any employer to declare a holiday and pay wages. We can only make a request.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: பேரவையின் அனுமதி யோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர்-தலைமை.)

<u>திரு. வி. கே. கோதண்டராமன்</u>: சார், தோழர்கள் கே.டி.கே. தங்கமணி, கோபு அவர்களை தலைவராகவும், செய லாளராகவும் கொண்டு அந்தத் தொழிற்சாலையில் அமைக்கப் பட்டுள்ள குழுவை ஏற்றுக் கொண்டார்கள். நன்றி. அப்படி அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கம் இருக்கிறபோது, அந்த ஜெனரல் பாடியை தொழிலாளர்கள் அந்த சங்கம் மூலமாகத்தானே கூட்டி யிருக்க முடியும். அப்படி இல்லாமல், முதலாளிகள் தலைமையின் கீழ் இயங்கும் ஒருசிலரைக் கொண்டு தொழிலாளர்களே கூட்டினார் கள். 5 பேர் தேர்ந்தெடுத்தார்கள். 5 பேர் கொண்ட அந்தக் கமிட்டியின் முடிவு என்று சொல்வது. அது தொழிற்சங்க ஜன நாயகத்திற்கு உகந்ததுதானா என்பதை கனம் முன்னாள்





தொழிற்சங்கத் தலைவர் கொஞ்சம் நெஞ்சிலே கை வைத்து சரிதான் என்று ஏற்றுக் கொள்வாரா என்று அறிய விரும்பு கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u>: துணைத் தலைவர் அவர்களே, நெஞ்சிலே கை வைத்துச் சொல்கிறேன். இந்தக் கேள்வி கேட்கப்பட வேண்டியது அங்கேயுள்ள தொழிலாளர்களை, அவர்கள் தேர்ந்தெடுத்தார்களே அந்த 5 தலைவர்களை என்ப தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. மு. அம்பிகாபதி</u>: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிற்சாலையில் இருக் கின்ற தொழிலாளர்கள் கூட தேர்தலை நடத்தி கே. டி. கே. தங்கமணியையும், கோபுவையும், தலைவராகவும், செயலாள ராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் யாரோ நவீன பஞ்சபாண்ட வர்கள் கூடி எங்களைத்தான் தேர்ந்தெடுத்தார்கள் என்று சொன் னால், அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதா? இந்த நிலைமை நீடித்தால் தொழில் அமைதி இருக்குமா என்பதை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u>: தலைவர் அவர் களே, இதைப் பற்றி நான் இரண்டு மூன்று முறை பதில் சொல்லி விட்டேன். இருந்தாலும், one more additional information கூடுதலான தகவல் சொல்கிறேன். அந்த ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு ஒவ்வொரு தனிப்பட்ட தொழிலாளர்களிடத்திலும் கை யெழுத்து வாங்கினார்கள் என்று புரட்சித் தலைவருக்குத் தக வல் வந்தது. பிறகு, இனி மேல் எந்த ஒரு முதலாளியும் தனிப் பட்டு தொழிலாளர்களிடத்தில் கையெழுத்து வாங்கக்கூடாது என்ற சட்டம் இயற்ற வேண்டும் என்று அவர்கள் என்னை அழைத்துச் சொன்னார்கள். அப்படி ஒரு சட்டம் கொண்டு வருவதற்கும், இந்த அரசு ஆய்வு செய்து கொண்டு இருக்கிறது என்று இந்த நேரத்தில் பெருமகிழ்ச்சியோடும், பெருமையோடும் சொல்லிக்கொள்கிறேன்.

<u>திரு. க. சுப்பு</u>: துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சட்ட வியாக்கியானம் ரொம்பத் தப்பானது. இந்த நேரத்தில் அதைப் பற்றிப் பேசக்கூடாது. தலை வர் செயலாளர் அல்லது 5 தொழிலாளர்கள் என்பதற்கு அமைச் சர் விளக்கம் சரியாக இல்லை. அவர் ஒரு சதல்வாட், எப்படி வேண்டுமானாலும் வியாக்கியானம் செய்யலாம். நான் கேட்க விரும்புவது, பொது விடுமுறை சர்க்கார் அறிவித்து இருக்கிறது. யாரும் வேண்டும் என்று கேட்கவில்லை. அதை சில தொழிற் சாலைகளில் கொடுக்கவில்லை. பொது விடுமுறை விட்டதற்கு

[1979 மார்ச் 17

நாங்கள் சம்பளம் தரமாட்டோம் என்று சொல்லிவிட்டால்,
அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்று சொல்கிறார்
கள். இப்படி கையாலாகாதவர்கள் ஏன் பப்ளிக் ஹாலிடே விடு
கிறீர்கள். சம்பளம் கொடுக்க வேண்டும் என்று மேனேஜ்
மென்டை கட்டாயப்படுத்த முடியாது, எங்களுக்கு அதிகாரம்
இல்லை என்று சொல்கிறபோது, இப்படி பப்ளிக் ஹாலிடே விடு
வதற்கு மட்டும் முடியுமா? அப்படி பொறுப்பு ஏற்றுக் கொள்ள
முடியாத சர்க்கார் இப்படி அறிவித்து இருப்பது முறைதானா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே,
சட்ட விதிகளின்படி இந்த அரசு நடந்துகொண்டிருக்கிறது என்
பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, கனம் அமைச்சரவர்
கள் கூறுகிறபோது கையெழுத்துப்போட்ட பெருவாரியான தொழி
லாளர்கள் கலந்துகொண்டு 5 பேர்களைத் தேர்ந்தெடுத்தார்கள்
என்று சொன்னார். அதைப்பற்றி தொழிலாளர்களைக் கேட்க்
சொல்கிறார். ஆனால் பல தீர்ப்புகளில் கையெழுத்து போட்ட
தால் மட்டும் அது அக்ரிமென்ட் ஆகாது ; அதை அங்கீகரிக்க
முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால் அந்த
கையெழுத்துப் போட்ட தொழிலாளர் ' ஆஸ் எ ஃப்ரி ஏஜென்ட்'
என்ற முறையில் போடவில்லை. அவர்கள் 'கம்பல்ஷன்'
டைரக்ட்லி ஆர் இன்டைரக்ட்லி, இன்டைரக்ட்லி என்று சொல்லு
லும்போது பட்டினி போட்டு—முறையிலேதான் கையெழுத்துப்
போட்டிருப்பார்கள் என்று தீர்ப்பு இருக்கிறது. இந்த கேஸில்
'ஃப்ரி ஏஜென்ட்' என்ற முறையில் கையெழுத்துப் போடவில்லை.
8 மாதம் பட்டினி போட்டதால்தான் கையெழுத்துப் போட்டிருக்
கிறார்கள். ஆகையால் அரசாங்கம் அதை அங்கீகரிக்கக்கூடாது.
முதலமைச்சருக்கேத் தெரியும். இதற்கு முன்னால் டி.வி.எஸ்.-ல்
என்ன நடந்தது என்ற அனுபவம் அவருக்கு நன்றாகத் தெரியும்.
அப்படி தெரிந்த பிறகும் அமைச்சர் இதை அங்கீகரித்துக்கொண்டு
அதற்கு சட்டத்தைப் கோட் பண்ணிக் கொண்டிருக்கிறார். அது
சரியா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே,
தொழிலாளர்களர்க் கூடி, ஒரு முடிவு எடுத்து, பிரதிநிதிகளைத்
தேர்ந்தெடுத்து, அவர்களும் முதலாளியும் இருசாராரும்
கையெழுத்திடுவதை அரசு தடுக்க முடியாது. அந்த ஒப்பந்தத்தை
அரசுக்கு அனுப்புகிறார்கள். நாங்கள் ரெஜிஸ்டர் செய்துகொள்
கிறோம். அதுசரியான முறை. 'It is always open to any party
to raise industrial dispute ' ஒரு தொழில் தகராறை, விரும்பு
கிறவர்கள் எழுப்பலாம் ; அதற்குமேல் நடவடிக்கை எடுக்கப்படும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1979 மார்ச் 17]

## கலசப்பாக்கம் பகுதியில் குடிநீர் வழங்கு திட்டங்கள்.

* வினா எண் 447—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்பு
மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி
யைச் சேர்ந்த வீரளூர் ஊராட்சி, சிறுவள்ளூர் ஊராட்சி, கேட்ட
வரம்பாளையம் ஊராட்சி ஆகிய இடங்களில் தமிழ்நாடு அரசின்
சார்பில் அல்லது குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் குடிநீர்த்
திட்டம் செயல்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) அதற்கான ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு,
திட்டம் பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, நான்
கேட்ட கேள்வி அனுமதிக்கப்பட்டுள்ளதா என்பது. அமைச்சர்
பதிலிலிருந்து இதுவரை அனுமதிக்கப்படவில்லை என்று அறிந்து
கொள்கிறேன். அந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்
கிறதா? எப்போது எடுத்துக் கொள்ளப்படும்? அது எவ்வளவு
மதிப்பீடு என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள
மாபெரும் 'டைப் சிக்ஸ்' 6-வது பிரிவின்கீழ் வரு
மூன்று ஊராட்சிகளும் அதாவது குடிநீர் எப்பொழுதும் உள்ள கிராமங்கள்
கின்றன. இருப்பினும் அங்கே மேற்கூறிய
என்ற தலைப்பில் வருகின்றன. நிரந்தர அடிப்படையில் குடிதண்ணீர் வழங்கும்
3 ஊராட்சிகளும் செலவில் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்
திட்டத்திற்கு ரூ. 14,500 குடிநீர் வடிகால் வாரியத்தால் ஒப்புதல்
பட 1976-ல் தமிழ்நாடு 3 ஊராட்சிகளும் இந்த ஆய்வுத்
அளிக்கப்பட்டிருக்கிறது. செலுத்தியுள்ளன. இத்திட்டத்திற்
தொகையை வாரியத்திற்கு முழுமையாக முடிவுற்று, திட்ட மதிப்பீடும்
கான ஆய்வு வேலைகள் வாரியத்தால் ஒப்புதல் வழங்கப்
தயார் செய்யப்பட்டுள்ளது. 'டெபாசிட் ஸ்கீம் ஒர்க்ஸ்'
பட்டவுடன் 'முன் வைப்புத் திட்டம்' இவ்வேலையை செயல்படுத்துவதற்கு
—என்ற அடிப்படையில் என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால்
எடுத்துக் கொள்ளப்படும்
வாரியம் தெரிவித்துள்ளது.

[1979 மார்ச் 17

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இது வரையில் 'ரூரல், அர்பன்' என்ற இரண்டு திட்டங்கள்தான் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாரியத்திலிருந்து அனுப்பியுள்ள புத்தகத்தில் இருக்கின்றன. இப்போது "டெபாசிட் திட்டம்" என்று ஒன்றை அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். டெபாசிட் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொண்டால், அந்தத் தொகையை ஊரட்சிகள் திருப்பிச் செலுத்த வேண்டுமா? திருப்பி செலுத்தக் கூடிய சக்தி ஊராட்சிகளுக்கு இருக்கிறதா என்பதை யார் சொல்வது என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன் முன் வைப்புத் தொகை டெபாசிட் ஸ்கீம் ஒர்க்ஸ் செயலாற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தெரிவித்திருக்கிற காரணத்தால், அந்த ஊராட்சிகளே இதை டெபாசிட் ஸ்கீம் ஒர்க்ஸாக எடுத்துக் கொள்ள ஒப்புக்கொண்டுள்ளன என்பது 'இம்பிளைடு மீனிங்' என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில்சொல்லும்போது எல்லோரையும் மாண்புமிகு உறுப்பினர் என்று அழைக்கும்போது தற்போது தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் மாண்புமிகு மாபெரும் உறுப்பினர் என்று பாகுபடுத்தி கூறினார்கள். ஏன் அப்படி கூறினார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு வேளை திருவேங்கடம் அவர்கள் கொஞ்சம் மாபெரும் 'சைஸ்' ஆக இருப்பதால் அப்படி சொல்லியிருப்பார்கள் என்று கருதுகிறேன்.

(முற்பகல் 10·10.)

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் அமைச்சரவர்களிடத்திலே தெரிந்துகொள்ள விரும்புவது என்னவென்றால் டெபாசிட் ஸ்கீம் என்று வருகிறபோது அந்தப் பணத்தை எவ்வாறு செலுத்த வேண்டும் என்பது தான். கடன் அடிப்படையிலே வருகிறதா அதற்கு வட்டி உண்டா? வட்டி இல்லையா? அந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு சக்தி இருக்கிறது என்று யார் சொல்வது என்பதைத்தான் நான் கேட்டேன். அதற்குத் தாங்கள் பதிலளிக்கவில்லை. அதற்கு பதிலளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1979 மார்ச் 17]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இந்த டெப்பாசிட் ஓர்க் என்பதன் படி பணத்தை அவர்கள் கட்டிவிடுகிறார்கள். (Execution side of it) பணத்தைக் கட்டினால் தான் எழும். இதுதான் நான் அறிந்துள்ள பொருளாகும். டெப்பாசிட் கட்டி விடுகிறார்கள் என்பது தான் அதன் பொருள்.

## கும்பகோணத்தில் அரிசன நலத்துறைக்கு நில ஆர்ஜிதம்.

* வினா எண்: 448—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் நகரத்தில் அரிசன நலத்துறைக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ள இடத்தில் 25 வீடுகள் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) வீடுகள் இல்லையென தவறான தகவலுடன் அந்த இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) கும்பகோணம் நகரத்தில் அரிசன நலத்துறைக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ள இடத்தில் பிரிவு 4(1) அறிவிக்கை வெளியிடப்பட்ட பின்பு எழுப்பப்பட்டுள்ள 22 கட்டிடங்கள் (19 வீடுகளும் 3 மாட்டுக் கொட்டகைகளும்) மட்டுமே இருப்பது அரசுக்குத் தெரியும்.

(ஆ) தீர்ப்பினை வழங்கு முன்பு உரிமை பெறும் நிலங்களை பார்வையிடும்பொழுது, இந்நிலங்களில் 19 வீடுகளும் 3 மாட்டுக் கொட்டகைகளுமாக மொத்தம் 22 கட்டிடங்கள் இருந்தன. இக்கட்டிடங்களிலுள்ளோர் வெளியேறிய பின்னர் நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கி 6–10–78-ல் நிலங்கள் கையகப் படுத்தப்பட்டுள்ளன. எனவே மாறான தகவலுடன் அந்த இடம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. ஆகவே இதனை அரசு பரிசீலனை செய்யத் தேவையில்லை.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரிசன மக்களுக்கென்று நில ஆர்ஜிதம் செய்யப்படுவதைப் பற்றி ஆட்சேபனை இல்லை. அப்படி ஆர்ஜிதம் செய்த நிலங்களை உடனடியாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதிலும் ஆட்சேபனை கிடையாது. ஆனால் இந்த

இடத்தில் என்ன நடந்திருக்கிறது என்று பார்க்கிறபோது அரசு
அறிவித்த பின்னால் அந்த விவரம் புரியாத மக்கள் அந்த நிலத்தை
வாங்கி இருக்கிறார்கள். இதுதான் இதிலே பரிதாபகரமான
விஷயம். அப்படி வாங்கியதோடு மட்டுமல்ல, 10 ஆயிரம் 20
ஆயிரம் என்று செலவழித்து வீடுகளையும் கட்டிவிட்டார்கள்.
ஆனால் இப்போது கட்டிய வீடுகளை இடிக்க வேண்டிய நிலை
ஏற்பட்டிருக்கிறது. எனவே, அரிசனங்களுக்கு என்று நிலங்களை
ஆர்ஜிதம் செய்கின்றபோது, அப்படிப்பட்ட இடங்களை விற்
கவும் முடியாமல், யாரும் வாங்கவும் முடியாமல் செய்கின்ற
அளவுக்கு அரசு அறிவிப்பு செய்ய முன்வருமா என்பதை அறிந்து
கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவ
ரவர்களே, இந்த நிலத்தை வாங்கிய மக்கள் விவரம் புரியாமல்
வாங்கி விட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்
கிறார். அவர்கள் விவரம் தெரிந்த பிறகுதான் வாங்கியிருக்
றார்கள். இந்த நிலம் இரத்தினசபாபதி செட்டியார் என்பவருக்
குச் சொந்தமானது. அவர் புத்திசாலித்தனமாக கருப்பையா
படையாச்சி என்பவருக்கு விற்றிருக்கிறார். அவர் புத்திசாலித்
தனமாக அந்த நிலத்தை இவர்களுக்கு விற்றிருக்கிறார். எல்
லோரும் சேர்ந்துகொண்டு அரசை ஏமாற்றப் பார்த்தார்கள்.
இறுதியில் அவர்கள்தான் ஏமாந்து போனார்கள்.

திரு. எஸ். ஆர். ராதா : பேரவைத் துணைத் தலைவரவர்
களே, இது புத்திசாலித்தனமாக மாத்திரம் அல்ல. மிகப் பெரிய
தவறு நடந்திருக்கிறது. அதனால் ஏறத்தாழ ஒரு பத்தாண்டுக்
காலம் அங்கே இருக்கின்ற ஆதிதிராவிட மக்கள் வீடுகள் இல்லா
மல் கஷ்டப்படுகிறார்கள். நீண்ட நாட்களுக்குப் பிறகு இந்த
அரசு அவர்களுக்கு நிலம் அளித்திருக்கிறது. ஆகவே, அந்த
நிலங்களில் விரைவில் வீடு கட்டித்தர அரசு முன்வருமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்
களே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஏமாற்றுபவர்
களையும் விட்டுவிடத் தயாராக இல்லை, ஏமாந்து போனவர்
களையும் விட்டுவிடத் தயாராக இல்லை. ஆகவே, அவசியம்
வீடு கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, அமைச்
சரவர்கள் சொல்வது போல் நில ஆர்ஜித நடவடிக்கை எடுத்த
பிறகு அரசாங்கத்தை ஏமாற்றுகிற அளவுக்கு இதுபோன்ற சம்
பவம் நடைபெற்றிருக்கிறது. எனவே, அதற்குரிய நஷ்ட ஈட்டுத்
தொகை வாங்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல. இது மிகப்





பெரிய கிரிமினல் குற்றமாகும். அதிலேயும் அரிசன மக்களுக்காக
வீடு கட்டுவதற்கென்று ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திலே இவ்
வாறு நடந்திருக்கிறது. ஆகவே, இதிலே கிரிமினல் நடவடிக்கை
எடுக்க அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த நிலத்தை
கையகப்படுத்தும்போது யார் சொந்தக்காரர்களாக
இருந்தார்களோ அவர்களுக்குத்தான் நஷ்டயீட்டுத் தொகை வழங்
குவது வழக்கம். பின்னால் வாங்குபவர்களுக்குத் தர முற்படு
வோமானால் இன்னும் பல தவறுகள் ஏற்பட ஏதுவாகும். இது
போன்ற தவறுகள் செய்பவர்கள்மீது அரசாங்கம் கண்டிப்பாக
கிரிமினல் நடவடிக்கைகள் எடுப்பதற்கு இனிமேல் முன்வரும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : ஹரிசனங்களுக்கு வீடுகள் கட்
டிக் கொடுப்பதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்வதற்காக இரண்
டாண்டுகளுக்கு முன்பு லான்ட் அக்விஸிஷன் ஸ்பெஷல் தாசில்
தார்கள் போட்டும் இந்தளவு தாமதத்திற்குக் காரணம் என்ன?
கடந்த ஒரு ஆண்டுக்காலமாக வீடுகள் கட்டிக் கொடுப்பதில்
தாமதம் ஏற்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி
யானால் அதைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்
கிறது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மூலக்கேள்வி
கும்பகோணத்தைச் சேர்ந்த உள்ளூர் பற்றியது. மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் அசலூர் பற்றிக் கேட்கிறார்கள். தனிக்
கேள்வி போடவும்.

திரு. என். கிட்டப்பா : தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு
வீடுகள் கட்டித் தரப்படுவது பற்றிய கேள்வியையொட்டி,
மாயூரம் பகுதியில் நந்தனார் பிறந்த இடத்தில், மேலாநல்லூரில்
தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, நந்தனார் வசித்ததாகச் சொல்லப்
படுகிற இடத்தில் அதே தெருவில் 27 வீடுகள் கட்ட ஏற்பாடு
செய்யப்பட்டது. அந்த வீடுகள் இதுவரை கட்டி முடிக்கப்பட
வில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது கும்ப
கோணத்தில் அரிசன நலத்துறைக்கு நில ஆர்ஜிதம் பற்றியது.

திரு. என். கிட்டப்பா : நான் பல தடவை கேட்டிருக்கிறேன்.
நீண்ட கால வினா கொடுத்தாலும் மறுக்கிறார்கள், ஷார்ட்
நோட்டீஸ் க்வஸ்டின் கொடுத்தாலும் மறுக்கிறார்கள். அந்த்

27 வீடுகள் இன்னும் கட்டி முடிக்கப்படவில்லை. முன்னால் ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஏற்பாடு என்று சொன்னார்கள், ஒத்துக் கொள்கிறேன். இந்த 27 வீடுகள் எப்போது கட்டி முடிக்கப்பட இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களின் கேள்வியை கூர்ந்து கேட்டேன். அனுதாபத்தோடு கவனிக்கும் இந்த அரசு.

திரு. சி. மாணிக்கம் : இது எந்த ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது ? அப்போது ஆண்டவர்கள் யார் ? காலதாமத்திற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 1971 ஆம் ஆண்டு நில ஆர்ஜித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டைச் சொல்லிவிட்டேன். அப்போது ஆண்டவர்கள் யார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊகித்துக் கொள்ளலாம். தாமதத்திற்கான காரணம், நில ஆர்ஜித நடவடிக்கைகள் குறித்த கால தாமதத்திற்கு காரணம், முதல் சொந்தக்காரர்கள் நிலத்தை இன்னொருவரிடம் விற்று விட்டார். இரண்டாவது சொந்தக்காரர் நிலத்தை இன்னொருவரிடம் விற்றுவிட்டார். அவர் தம்பி கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இன்னும் பல காரணங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : மன்னார்குடி தாலுக்காவில் செருகுளத்தூர், கர்ணாவூர் போன்றயிடங்களில் ஆர்ஜிதம் செய்யப்பட்டு மனைகள் வழங்கப்படாமல் இருக்கிறது. காலதாமதமாகிறது. அது விரைவில் கவனிக்கப்படுமா ?

(பதில் இல்லை.)

## அரிசன மாணவர்களுக்கு சிறப்பு உதவித் தொகை.

* .வினா எண். 449— திரு. நா. பழனிவேல் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

**தமிழ் நாட்டில் கல்வி பயிலும் அரிசன மாணவர்களுக்கு 10 ஆம் வகுப்பில் 60 சதவீதத்துக்கு மேல் மதிப்பெண்கள் பெற்றால் சிறப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறதா?**



மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தற்போது 11 ஆம் வகுப்பில் பள்ளி இறுதித் தேர்வில் அதாவது 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் 60 விழுக்காடும் அதற்கு மேலும் மதிப்பெண்கள் பெற்ற பழங்குடியினர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் அதிலிருந்து மதம் மாறிய வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தகுதி மானியமாக ரூ. 300 வழங்கப்பபட்டு வருகிறது. புதுக் கல்வி திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளதால் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்த 10 ஆம் வகுப்புத் தேர்வில் 60 விழுக்காடும் அதற்கு மேலும் மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு மேற்கண்ட திட்டத்தை விரிவுபடுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

[முற்பகல் 10—20]

திரு. நா. பழனிவேல் : தமிழகத்தில் கல்வி பயிலுகின்ற ஆதிவாசி மாணவர்களுக்கு ஏற்கெனவே இருந்து வந்தது போல், எஸ்.எஸ்.எல்.சி. வகுப்புகளில் 60 மதிப்பெண்கள் பெற்றிருந்தால் சிறப்பு உதவித்தொகை வழங்கப்பட்டு வந்தது. இப்போது 11 ஆம் வகுப்பு மேல்படிப்புக்குச் சென்று விட்டது. ஆகையால் இப்போது பத்தாம் வகுப்பிலும் 60 மதிப்பெண்கள் பெறக்கூடிய மாணவர்களுக்கு சிறப்பு உதவித் தொகை வழங்குவதற்கு இந்த ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படுமா ? அப்படி வழங்கப்படும் உதவித் தொகையானது எந்த ஆண்டோடு முடிவு பெறும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கல்வித் திட்டத்தில் மாறுதல் ஏற்பட்டதின் காரணமாக கல்வித்துறை இயக்குநர் அவர்களிடத்தில் இதுபற்றி அறிக்கை கேட்டிருக்கிறோம். அந்த அறிக்கை வந்த பிறகு 10-வது வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கும் இந்தத் தொகை தொடர்ந்து வழங்கப்படும். எந்த ஆண்டு வரை கொடுக்கப்படும் என்று கேட்டார்கள். இந்த கல்வித் திட்டம் தொடரும் வரை இந்த உதவித் தொகை தொடர்ந்து வழங்கப்படும்.

திரு. இ. தமிழரசன் : 10 ஆம் வகுப்பில் 60 மதிப்பெண்கள் பெறக்கூடிய மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கும் இந்த உதவித் தொகை வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்துவருகிறதா ? அப்படியென்றால் கடந்த ஆண்டு மொத்தம் எத்தனை மதம் மாறிய கிறிஸ்துவ மாணவர்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கும் இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. எத்தனை பேர்கள் என்கின்ற விவரம் இங்கே இல்லை. தனியாக கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

[1979 மார்ச் 17

திரு. நா, பழனிவேல் : துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரிசன மற்றும் பிற்படுத்தப்பட்ட ஆதிவாசி மாணவர்கள் இவர்களுக்கு உதவித் தொகை அளிக்கப்படுவதாக சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட மாணவர்கள் பத்தாவது வரை படிப்பதே மிக பெரியதொரு பிரச்னை. மேலும் 60-க்கு மேற்பட்ட மதிப்பெண்கள் வாங்குவது அதிலும் ஒரு பிரச்னை, ஆகவே, இந்தப் பகுதி மக்களை கல்வியிலும் மற்ற பதவிகளிலும் முன்னுக்கு கொண்டுவரவேண்டும் என்று முயற்சி எடுக்கக்கூடிய வகையில், இந்த மாணவர்களுக்கு பட்டப்படிப்பு முடியும் வரை இந்த உதவித் தொகையை வழங்குவதற்கு இந்த ஆண்டிலிருந்தே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? நடவடிக்கை எடுக்கவில்லை யென்றால் இந்த ஆண்டிலிருந்தே உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 1976 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இந்தத் திட்டம் ஆரம்ப காலத்தில் 70 மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு மட்டும்தான் இந்த உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. இந்த அரசாங்கம் பதவி யேற்ற பின்னால், 70 மார்க்கு என்றிருந்ததை 60 மார்க்காக குறைத்திருக்கிறது. தற்போதுள்ள நிலைமையில் 10-ம் வகுப்பு வரையிலும் அல்லது எஸ். எஸ். எல். சி. வரையிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மற்ற உதவித் தொகை எல்லா கல்விகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைலர் : கேள்வி எண் 450..

திரு. சு. பாலன் : இந்த இலாகாதான் பின்தள்ளப்பட் டிருக்கிறது என்றால், கேள்வி கேட்பதையும் ஏன் பின் தள்ளுகிறீர்கள்?

(திரு. சு. பாலன், திரு. தீ. சு. நல்லதம்பி இவர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள், அடுத்த கேள்வியில் கேளுங்கள். தயவு செய்து உட்காருங்கள்.

## பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்குக் கூடுகள் கட்டுதல்.

*வினா எண் 450—திரு. மு. அண்ணாமலை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :—



1979 மார்ச் 17]

நிலசுவான்தார் போராட்டத்தின்போது குடியாத்தம் பகுதியில் எரிக்கப்பட்ட இரண்டு பல்லவன் போக்குவரத்து பஸ்களை பாடி கட்ட, பி. டி. சி. டிப்போ இருந்தும் சேலம் டிப்போவில் காண்டிராக்ட் முறையில் பாடி கட்டப்படும் புகார் அரசுக்கு வந்ததா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அரசுக்கு புகார் ஏதும் வரவில்லை. எரிக்கப்பட்ட இரண்டு பேருந்துகளுள் ஒன்று உபயோகமற்றதாகி விட்டது. மற்றொன்றின் கூண்டினைப் புதுப்பித்து பெரும் பழுது பார்க்கும் பணியினை சேலத்திலுள்ள ஒரு தனியார் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பணி, கழகத்தின் சேலம் பணிமனையில் கழக மேற்பார்வையில் நடக்கிறது. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் பெருநகர்ப் பிரிவுக்குச் சொந்தமான தொழிற்பட்டறையில் ஏற்கனவே உலகவங்கி திட்டத்தின்படி பேருந்து கூண்டு கட்டுமான வேலைகள் அதிகமாக இருப்பதால்தான் தொழிலாளர்கள் கூலி ஒப்பந்தத்தின் அடிப்படையில் தனியாரிடம் இப்பணியினை ஒப்படைக்க வேண்டியதாயிற்று.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு, தென் ஆற்காடு, திருச்சி ஆகிய மாவட்டங்களை மையமாகக் கொண்டு, சேலத்தில் பேருந்துகளுக்கு பாடி கட்டும் தொழிற்சாலையை உருவாக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய பரிசீலனை இப்போது அரசிடம் இல்லை.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் நிலச் சுவான்தார்கள் போராட்டம் என்று விவசாயிகள் போராட்டத்தை மாற்றிப் போட்டிருக்கிறார்கள். இப்படிப் போட்டிருப்பது சரிதானா ? விவசாயிகள் போராட் டத்தை, நிலச்சுவான்தார்கள் போராட்டம் என்று ஒப்புக் கொள்ளுகிறீர்களா ? இது விவசாயிகளுக்கு ஏற்படுத்தப்பட்ட மிகப் பெரிய கொடுமை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை எழுப்பிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் எழுப்புவது நல்லது.

திரு. சொ. நா. பழனிசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் நிலச்சுவான்தார் என்று இருப்ப தற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகவும் கோபமாகக்

கேட்டார்கள். நிலங்கள் சிறிதளவு இருந்தாலும் அவர்கள் நிலச்சுவான்தார்கள் என்றுதான் இன்றைய சட்ட அமைப்பு கூறுகிறது. ஆகவே, நிலச்சுவான்தார்கள் என்பதில் என்ன தவறு இருக்கிறது என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ந. தலசேகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலச்சுவானதார்கள் போராட்டத்தில் பஸ்கள் எரிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். அப்படி நிலச்சுவான் தார்கள் போராட்டத்தில் எரிக்கப்பட்ட பஸ்கள், பழுதடைந்த தன் காரணமாக அங்கே எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது ? எத்தனை பேர்கள் தண்டிக்கப்பட் டார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகள் தற்போது என் னிடம் இல்லை.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : துணைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்து பஸ்கள் பாடி பழுதடைந்த போது, எந்தெந்த இடங்களில் அவை பழுது பார்க்கப்பட்டது, பாடி கட்டப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குரோம்பேட்டை தொழிற்கூடத்தில் பெரும்பாலான பணிகள் மேற் கொள்ளப்படுகின்றது. கன்னியா குமரியில், ராணித் தோட்டத்திலும் இந்தப் பணிகள் மேற் கொள்ளப்படுகின்றன. மற்றும், போக்குவரத்துக் கழகங்களில் ஆங்காங்கே தொழிற்கூடங்கள் இருக்கின்றன.

திரு. சி. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய போக்குவரத்துக் கழகங்களில் எத்தனை இடங் களில் பாடி கட்டுகின்ற நிலையங்கள் இருக்கின்றன ? அதிலே ஆண்டுக்கு எவ்வளவு பாடிகள் கட்டி, அந்தக் கழகங்களுக்குத் தருகின்றன ? பொதுவாக, தொழிற்சாலை அமைப்பு போத வில்லை என்றால், வெளியிலே கட்டுகிறார்கள். எவ்வளவு வண்டிகள் அவ்வாறு கொடுக்கப்படுகின்றன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்துப் போக்குவரத்துக் கழகங் களிலும் பாடி கட்டும் தொழிற் கூடங்கள் இருக்கின்றன. சில நேரங்களில், அதிகப்படியான பேருந்துகளுக்கு உரிமங்கள் வழங் கப்படுகின்ற நேரங்களில், 4 மாதங்களுக்குள் மோட்டார்



வாகனச் சட்டப்படி பாடி கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகின்றது. அப்படி இதிலே சிரமங்கள் ஏற்படுமானால், அப்படி இருக்கின்ற இடத்திலே இந்த நான்கு மாதங்களுக்குள் பாடி கட்டுவதற்காக அப்போது தனியார்களிடம் ஒப்படைக்கப் படுகின்றது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, பாடி கட்டு வதற்குத் தனியார்களிடம் காண்ட்ராக்ட் விடுவதற்குப் பதிலாக, அரசுத் தரப்பிலேயே பாடி கட்டும் தொழிற்சாலையை மேலும் அதிகப்படுத்தி, அதிலே அதிகப்படியான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆண்டிலே மாதங்கள் பூராவும், வாரங் கள் பூராவும் பேருந்துகளுக்கு பாடி கட்டும் நிலை இல்லாத காரணத்தாலும், அவ்வப்போது பேருந்துகளுக்கு உரிமம் வழங் கப்படுகின்றபோது, பாடி கட்டும் நிலை ஏற்படுகின்றது. எனவே, ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி, பணியாளர்களை அதிகப்படியாக அமைத்து விடுவோமானால், பல மாதங்கள், வேலை இல்லாமல் இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விடும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : துணைத் தலைவர் அவர் களே, அமைச்சர் அவர்கள், போக்குவரத்துக் கழகங்களிலே பாடி கட்டப்படுகின்றது என்றும், சில நேரங்களிலே தனியார் களிடமும் பாடி கட்டப்படுவதாகச் சொன்னார்கள். தனியார் களிடம் அப்படி பாடி கட்டும்போது, எவ்வளவு அதிகமாகச் செலவாகிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலே செலவாவதைவிட ரூ. 3,000 முதல் ரூ. 5,000 வரை குறைவாகத் தான் தனியார்களிடம் பாடி கட்டுவதால் ஏற்படுகின்றது என்ற கணக்கு அரசுக்கு வந்திருக்கிறது.

## Cycle Rickshaws used for school students.

* Q. No. 451—

THIRU SALEM M. ARUMUGAM : Will the Hon. the Minister for Transport be pleased to state :

[1979 மார்ச் 17

(*a*) whether the Police administration in Madras City is aware of Cycle rickshawmen carrying a large number of school students to schools; and

(*b*) if so, the action taken to prevent such practices?

[முற்பகல் 10-30]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சிறார்களை அவர்களின் வீட்டிலிருந்து பள்ளிக்கும் பள்ளியில் இருந்து வீட்டுக்கும் அழைத்துச செல்வதற்குப் பயன்படுத்தப்படும் தனியார் பள்ளிகளுக்குச் சொந்தமான சைக்கிள் ரிக்ஷாக்கள் 1911-ஆம் ஆண்டு மத்திய வாடகை வண்டிச் சட்டத்தின் (Hackney Carriage Act) வரம்பின் கீழ் இதுகாறும் கொண்டு வரப்படாததால் அத்தகைய ரிக்ஷாக்கள் மீது நடவடிக்கைகள் ஏதும் சட்ட ரீதியாக எடுக்கப்படவில்லை. தனியார் பள்ளிகள் மாணவர்களிடமிருந்து மாதச் சம்பளத்தில் இதற்கும் வாடகை வாங்குவதான தகவல் அரசுக்கு வந்திருக்கிற காரணத்தாலும், இந்த வாகனங்கள் தகுதிச் சான்றிதழ் (Fitness Certificate) பிரேக் தகுதி (brake efficiency) போன்றவற்றுக்கும் இதுகாறும் உட்படுத்தப்படவில்லை என்ற காரணத்தாலும் பாதுகாப்பு கருதி இத்தகைய வாகனங்களை (Hackney Carriage Act) கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உடனடி நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: சைக்கிள் ரிக்ஷாக்களில் சிறுவர்களை ஏற்றிச் செல்வதைத் தவறு என்று கூறவில்லை. பாதுகாப்புக் கேற்ற சூழ்நிலை இல்லாத காரணத்தால் விபத்து ஏற்படுகிற நிலை இருப்பதால் 'வேன் டைப்' ல் கூடு கட்டிய வண்டிகளாக அமைத்துக் கொள்ள வேண்டுமென்று அரசு அறிவுறுத்துமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: கூடு கட்டின வண்டிகளைப் பல பள்ளிகள் நடைமுறையில் வைத்திருக்கின்றன. அதிகமான அளவில் இந்த சைக்கிள் ரிக்ஷாக்களில் சிறுவர்களை ஏற்றிச் செல்லுகிற காரணத்தால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதை அரசு உணர்ந்து ஹாக்னி காரேஜ் ஆக்டின் வரம்புக்குள் கொண்டுவந்து கட்டுப்படுத்த முடிவு செய்திருக்கிறது.

திரு. அ. க. அரங்கநாதன்: கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு ஏற்பாடு செய்து அதன் மூலம் மாணவர்களை ஏற்றிச் செல்வதற்கு வழிவகை செய்ய முடியுமா?



1979 மார்ச் 17]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக சைக்கிள் ரிக்ஷாக்களை அளித்துத்தான் சிறுவர்களைப் பள்ளிக்கு அழைத்துச் செல்லவேண்டுமென்றில்லை. அந்த சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் அதிகப்படியான குழந்தைகளை ஏற்றிச் செல்கிற காரணத்தால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதைக் கணக்கில் எடுக்காமல் இருக்கும் காரணத்தால் இதை வாகனச் சட்டத்தின் கீழ் உட்படுத்த அரசு முடிவு செய்து பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. கே. பண்ணை சேதுராம்: பள்ளிகளுக்குச் சிறார்களை ஏற்றிச் செல்லுகிற ரிக்ஷாககள் டிராபிக் அதிகமாக இருக்கும் காரணத்தால் குறித்த நேரத்தில் போகமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, அரை ஹார்ஸ் பவர் மோட்டார் வைத்து அந்த ரிக்ஷாக்களை ஓட்டவேண்டுமென்று அரசு ஆணையிடுமா? அந்த சைக்கிள் ரிக்ஷாக்காரர்களுக்கு மோட்டார் வாங்கிக் கொடுக்கவும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஏற்கெனவே அரசு மோட்டாரைஸ்டு சைக்கிள் ரிக்ஷாக்களாக மாற்ற முன்வருகிறவர்களுக்கு உதவி செய்வதாக அரசு ஆணையிட்டிருக்கிறது. அந்த வகையில் பல ரிக்ஷாக்கள் மோட்டாரைஸ்டு ரிக்ஷாக்களாக மாற்றப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில் மோட்டாரைஸ்டு சைக்கிள் ரிக்ஷாக்களும் அதிகப்படியான மாணவர்களை ஏற்றிச் செல்வதன் காரணமாகத்தான் விபத்து ஏற்படுகிறது.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: பள்ளிகளுக்குச் சிறார்களை ஏற்றிச் செல்லும் சைக்கிள் ரிக்ஷாக்களை சில மாவட்டங்களில் கூண்டு வண்டி போல் அமைத்திருக்கிறார்கள். சென்னை நகரத்திலுள்ள பள்ளிகளுக்குச் செல்லும் சைக்கிள் ரிக்ஷாக்களை அந்த முறையில் அமைக்க வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா? இன்னொரு கேள்வி இது சம்பந்தப்பட்டது அல்ல என்றாலும் அமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒருவரே பத்து பதினைந்து சைக்கிள் ரிக்ஷாக்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ரிக்ஷாக்கள் ஓட்டுநர்களுக்கே சொந்தம் என்ற முறையில் கொண்டுவர அந்த ரிக்ஷாக்களின் உரிமையாளர்கள் அதை விற்க முனையும்போது ஓட்டுநர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்ற முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி கூடு கட்டிய சைக்கிள் ரிக்ஷாக்களைப் பயன்படுத்தினால் விபத்துக்கள் குறையும் என்ற அடிப்படையில் பள்ளி நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கலாம்.

இரண்டாவது ஒட்டுநர்களுக்கே உரிமம் வழங்கவேண்டுமென்பது பற்றியது. ஹாக்னி காரேஜ் ஆக்டில் ஓட்டுநர்களை உரிமையாளர்கள் என்ற முறையில் புதிய சட்டம் கொண்டு வர இருக்கிறோம். அந்தச் சட்டம் வந்த பிறகு இந்தப் பிரச்சினை நீங்கிவிடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## பொய்கை ஆற்றின் குறுக்கே அணை.

*வினா எண். 452—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், தோவாளை வட்டத்திற்கு உட்பட்ட ஆரல்வாய்மொழி பகுதியிலுள்ளவர்களது பாசன வசதி மற்றும் குடிநீர் வசதிகளுக்காக பொய்கை ஆற்றின் குறுக்கே அணை ஏதேனும் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில், அத்திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் 1979–80 ஆம் ஆண்டிற்கான சிறப்பு சிறு பாசனத் திட்டங்களில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு அரசின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1979–80 ஆம் ஆண்டிலே இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்திலே அந்தத் திட்டத்தினால் குமரி மாவட்டம் மட்டுமல்லாமல் அதனையொட்டியிருக்கிற இராதாபுரம் தொகுதியிலே உள்ள வறட்சி மிகுந்த பகுதிகளுக்கும் பாசன வசதியையும், குடிநீர் வசதியையும் ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினாலே ஏறத்தாழ 716 ஏக்கர் 49 சென்ட் நிலத்திற்கு நிரந்தரப் பாசனம் உறுதியளிக்கப்படுகிறது. 582 ஏக்கர் 45 சென்ட் நிலம், பாசனம் இல்லாமல் விடப்பட்ட நிலம் பாசனத்திற்குக் கொண்டுவரப்பட முடிவு



எடுக்கப்பட்டிருக்கிறது. அத்திட்டத்துக்கு 22 இலட்சத்து [illegible] ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. மேலும், இராதாபுரம் தொகுதியிலே இன்னும் பாசன வசதியை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் கன்னியாகுமரி மாவட்டத்திலே எத்தனை ஏக்கர் நிலம் பயன்பெறும் ? நெல்லை மாவட்டத்திலே எத்தனை ஏக்கர் நிலம் பயன்பெறும் என்று அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட வாரியாக என்னிடத்திலே தற்போது குறிப்பு இல்லை. தனியாகக் கேட்டால் விவரங்கள் சொல்லலாம்.

## சடையநேரிக்குளத்தில் ஆக்கிரமிப்பு.

*வினா எண். 453—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், மெஞ்ஞானபுரம் சடையநேரிக் குளம், பலரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) திருநெல்வேலி மாவட்டம், மெஞ்ஞானபுரம் கிராமத்தில் உள்ள சடையநேரிக் குளத்தின் 1.34 ஏக்கர் நிலங்களை கிராம முன்சீப் ஒருவர் மட்டும்தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்.

(ஆ) ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு வருவாய்த் துறையின் உதவியுடன் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. இரா. அமிர்தராஜ்: துணைத் தலைவர் அவர்களே, அந்தக் குளத்திலே ஆக்கிரமிப்புச் செய்துள்ளவர் கிராம முன்சீப். அவர் ஆக்கிரமிப்புச் செய்துள்ளதால் மற்ற விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள், ஆகவே, அந்த ஆக்கிரமிப்பாளரை உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, தற்போது ஆக்கிரமிப்பு செய்திருக்கிறவருடைய, பெயர் சுடலைமாட நாடார் என்பது. 1.34 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்ததன் காரணமாக வருவாய்த்துறை மூலமாக சர்வேயர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

Specific research for agro-ecological findings.

*Q. No. 454— Thiru SALEM M. ARUMUGAM : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state :

(a) whether there is any proposal to conduct Location Specific Research for agro-ecological findings in this State with the financial assistance from the International Bank of Reconstruction and Development ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் மூலம் உலக வங்கி நிதி உதவியுடன் வேளாண்மை மண் அமைப்புப் பற்றித் தனி சிறப்பு ஆராய்ச்சி (Location specific research for agro-ecological findings) நடத்துவதற்கான செயற்குறிப்பு ஒன்று தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் தயாரிக்கப்பட்டு, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக-பன்னாட்டு புனரமைப்பு மற்றும் வளர்ச்சி வங்கி இணைந்த குழு (ICAR-IBRD Inter disciplinary scientific panel) லின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. நாளாவட்டத்தில் அக்குழுவின் கூட்டம் நடந்து அதன் முடிவுகள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்திற்கு தெரிவிக்கப்படும். மேற்படி செயற்குறிப்பு ஒப்புதல் பெற்றால் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் திட்டம் செயல் படுத்தப்படலாம்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : துணைத்தலைவர் அவர்களே, தற்பொழுது அமைச்சர் அவர்கள் அறிவித்த பன்னாட்டு வேளாண்மை மண் வளப் பரிசோதனை ஆராய்ச்சியின் முடிவும் தமிழக மண் வளப் பரிசோதனை ஆராய்ச்சியின் முடிவும் ஒருமைப்பாட்டுடன்





இருக்கிறதா அல்லது இரண்டிற்கும் முரண்பாடுகள் இருக்கின்றனவா? அப்படியென்றால் அந்த முரண்பாடுகளைப் போக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இதனால் வேளாண்மைத் துறையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி என்ன?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, It is a location for Specific Research for agro-ecological findings. அவர்கள் செய்வது. ஆனால் நம்மிடத்திலே நடைபெற்று வருவது சாயில் கன்சர்வேஷன் ஸ்கீம். ஆகவே அதற்கும் இதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அவைகளையெல்லாம் பரிசீலனை செய்து வேளாண்மை பல்கலைக் கழகம் விவரமான அறிக்கையைக் கொடுக்க இருக்கிறது.

[முற்பகல் 10-40]

திரு. எச். ஜி. ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பன்னாட்டு புனரமைப்பு மற்றும் வளர்ச்சி வங்கிக்குழுவின் நிதி உதவியுடன் தர்மபுரி மாவட்டத்தில் ஒரு ஆராய்ச்சிக் கழகம் ஏற்படும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். இதுவே பரிசீலனையில் இருந்து வருகிறது என்று. இது தர்மபுரி மாவட்டத்திற்கு என்று தனியாகப் பரிசீலனை செய்யப்படும்.

வடாற்காடு மாவட்டத்தில் நீர் ஊற்றுக்கள் பாதிக்கப்படுதல்.

வினா எண் 455.— திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வடாற்காடு மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளினால் நீர் ஊற்றுக்கள் பாதிக்கப்பட்டு Water Pollution ஏற்படுவதைத் தடுக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: ஆம்.

திரு. இரா. மார்க்கபந்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாக ஆம்பூர், வேலூர், இராணிப்பேட்டை, வாணியம்பாடி ஆகிய நான்கு இடங்களிலே இருக்கின்ற தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் காரணமாக வெளியே விடப்படும் கழிவு நீர் ஏறக்குறைய அந்தச் சுற்று வட்டாரத்தில் 15 மைல் தொலைவுக்கு இருக்கின்ற நல்ல நிலங்களைக் களர் நிலமாக மாற்றியிருக்கிறது. குடிநீர் உப்பு நீராக மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரு தனிப்பட்ட முதலாளி வாழ, அந்தப் பகுதியில் உள்ள பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் தங்களுடைய நிலங்களில் பயிர் செய்ய முடியாத நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா? இல்லையென்று சொன்னால் இந்த அரசாங்கம் ஏற்கெனவே இங்கே அறிவித்ததைப் போன்று உடனடியாக நடவடிக்கைகள் எடுத்து புனரமைப்பு செய்து ஏதாவது நஷ்ட ஈட்டுத் தொகையை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதை இந்த அரசு எண்ணித்தான் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தால் அமைக்கப்பட்ட பணிக் குழு பல்வேறு பதப்படுத்தும் முறைகளைப் பின்பற்றும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிப்படும் கழிவுப் பொருள்களை சீர் செய்து முடிவு செய்வதற்கான பல்வேறு முறைகளை விரிவாக ஆராய்ந்து இதற்கான தகுந்த சிக்கன முறைகளை வகுத்து "தமிழ்நாட்டில் தோல் பதனிடு தொழிற்சாலைக் கழிவுகளைச் சீர் செய்தல், முடிவு செய்தலுக்கான மேலாண்மை முதலீட்டு அறிக்கையை" வெளியிட்டது. இவ்வறிக்கையில் பல்வேறு சீர் செய்யும் அமைப்புகள் அவற்றின் அளவுகள், அதற்குத் தேவைப்படும் நிலம், கழிவுப் பொருளின் பயன்பாடு, செலவு மதிப்பீடு முதலியன பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவைகள் அந்தந்தத் தொழிற்சாலை முதலாளிகளிடம் தரப்பட்டிருக்கிறது. தகுந்த நடவடிக்கை உடனே எடுக்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது.

திரு. துரைமுருகன் : துணைத் தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரை, செப்டிக் டேங்க் மாதிரி கட்டி அதிலே தேக்கி வைக்க வேண்டும், அப்படித் தேக்கி வைக்காவிட்டால், கழிவு நீரை வெளியிலே விடுவதால் திரு. மார்க்கபந்து அவர்கள் சொன்னதைப் போல் பயிர்களுக்கும் கெடுதல், குடிநீருக்கும் கெடுதல், ஊரிலே நாற்றம், இராணிப்பேட்டை பக்கம் வந்தால் ஐவ்வாது மணம் வரும். அப்படி செப்டிக் டேங்கைக் கட்டி அதில் தேக்கவில்லை



யென்றால் உரிமம் ரத்து செய்யப்படும் என்று சர்க்கார் அறிவித்து ஆறுமாதம் ஆகிறது. இதுவரையில் எந்தத் தொழிற்சாலையின் உரிமமாவது ரத்து செய்யப்பட்டிருக்கிறதா அல்லது இப்படி நாங்கள் சட்ட மன்றத்தில் கேட்கும் பொழுது ஒரு தாக்கீதை அனுப்பிவிட்டு, மறுபடியும் பழைய மாதிரியே இருப்பது என்ற நிலைமை இருக்கிறது. இதை மாற்றி இந்தத் தேதிக்குள் செப்டிக் டேங்க் கட்டி கழிவு நீரைத் தேக்காவிட்டால் உரிமம் ரத்து செய்யப்படும் என்று தேதி நிர்ணயிக்க அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, இதைக் கருத்திற் கொண்டுதான் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இந்தக் கழிவுப் பொருள்களை அகற்றுவதில் 31-3-1978-க்குள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் அப்படித் தவறினால் அவர்கள் மேல் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. இந்தத் தொழிற்சாலைகளைப் பார்வையிட்ட உதவி சுகாதார இயக்குனர் கழிவுப் பொருள்களை நீக்குவதில் உண்மையாகவே நடவடிக்கை எடுக்கவில்லை என கூறியிருக்கிறார். தோல் பதனிடும் தொழிற்சாலைகளைச் சேர்ந்தவர்கள் காலக் கெடு வேண்டுமென்று கேட்டார்கள். கொஞ்சகாலம் தரப்பட்டது. அந்தக் காலமும் முடிந்துவிட்ட காரணத்தால் அவர்களிடத்தில் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு தாக்கீதுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

திரு. சி. மாணிக்கம் : தலைவரவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவு நீரை அகற்றுதற்கு எவ்வளவு செலவாகும்? அதிகப்படியாக செலவாக இருந்தால் சிறு தொழிற்சாலைகள் அதை எப்படிச் செய்ய இயலும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே. கழிவுப் பொருள்களை அகற்ற சுமார் 35,000 ரூபாய் செலவாகும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். சிறிய தொழிற்சாலைகளாக இருந்தால், அவர்கள் ஒருங்கிணைந்து கழிவுப் பொருள்களை அகற்றுவதற்கு பொதுவாகச் செய்யப்படும் செலவினைப் பகிர்ந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம்.ஏ. லத்தீப் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதிலே தோல் பதனிடும் அதிபர்கள் மட்டுமல்லாமல்—அவர்கள் ஒரு சிலர் தான்—பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகையினால் இந்தத்

[1979 மார்ச் 17

தொழில் சிறு தொழிலிலே வருகிறது. அந்தச் சிறு தொழில் பாதிக்காத வகையிலும் அந்தத் தொழில் தொடர்ந்து நடைபெறும் வகையிலும் ஒவ்வொரு சிறு தொழிலும் இந்த 'எப்ளுயன்ட் பிளான்ட்' என்று சொல்லக்கூடியதை வைத்துக் கொள்ளும் வகையிலும் அரசாங்கம் திட்டம் வகுக்கவில்லை. மத்திய தோல் ஆராய்ச்சி நிலையம் இது பற்றி என்ன கருத்து தெரிவித்திருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா? அதே நேரததில், அதைக் குடிநீர்வடிகால் வாரியத்தின் வாயிலாக தனிப்பட்ட—சிறு தொழில் அதிபர்கள் செய்ய முடியாத காரணத்தாலே வடிகால் வாரியமே அதை எடுத்துக் கொண்டு ஒருங்கிணைந்த முறையில் 'எப்ளுயன்டுகளை.' அகற்ற நடவடிக்கை எடுக்க அரசு திட்டம் ஏதாவது வைத்திருக்கிறதா? அப்படி இல்லாவிட்டால், திட்டத்தை வகுத்துச் செயல்படுத்துமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்னையை மனதிலே கொண்டு மத்திய தோல் ஆராய்ச்சி இயக்குனரோடும், தோல் பொறுப்பாளரோடும், பொதுச் சுகாதார இயக்குனரோடும் இந்த அரசு விவாதித்து இதற்கு உடனடியாக முடிவு காணவேண்டுமென்று, இன்றைக்கு அதற்கான செயல் திட்டங்கள் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளி வரும் கழிவு நீரைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதே போல், சேலம் மேட்டூர் கெமிக்கல் அண்ட் கெம்ப்ளாஸ்ட் கம்பெனியில் வாஷிங் சோடா, ப்ளீச்சிங் பவுடர் முதலியவற்றைத் தயார் செய்கிறார்கள். அங்கிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் அங்குள்ள பயிர்களைத் தீய்த்துவிடுவதால், பயிரிட முடியவில்லை. ஆகவே, அதனால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு அரசு நஷ்டஈடு கொடுக்குமா அதோடு இதன் காரணமாக நிலத்தடி நீர் கெட்டுவிடுகிறது. அதன் காரணமாக, பொது மக்களது சுகாதாரம் கெடுவதைத் தடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, மூலக் கேள்வி வடாற்காடு மாவட்டத்திலே இருக்கிற தோல் பதனிடும் தொழிற்சாலையைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடுவாரானால் விடை தயாரித்துத் தரப்படும்.

திரு. துரை. முருகன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட கழிவுநீர் டேங்க் கட்ட, மத்திய சர்க்கார் சப்சிடி கொடுக்கிறார்கள் அதை வாங்கிக் கட்டலாம். இதுவரையிலே கட்ட முடியவில்லை



1979 மார்ச் 17]

யென்று சொன்னால், அந்தக் கழிவு நீரால் பல கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியில்லாமலும் பயிர் செய்ய முடியாமலும் போகிறது. எனவே குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் எந்த எந்தக் கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனவோ, அந்தந்தக் கிராமங்களுக்கு முன்னுரிமை தந்து, உடனடியாகக் குடிநீர் வழங்கவேனும். இதற்கு இடைக்கால நிவாரணம்போல் அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய அரிய யோசனையை இந்த அரசு பரிசீலிக்கும்.

## மதுரை அரசு மருத்துவ மனை.

* வினா எண். 456—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரையில் அரசு மருத்துவமனையில் கரானரி யூனிட் அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மதுரையில் அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனையில் நான்கு படுக்கைகளும், அடிப்படை தேவைகளுக்கேற்ற உபகரணங்களையும் கொண்ட கரானரி கேர் யூனிட் ஒன்று ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டு கடந்த ஓராண்டு காலமாக செயல்பட்டு வருகிறது.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : துணைத் தலைவரவர்களே, சென்னையை அடுத்த மாநகராட்சி மதுரை. அங்கு மூளை வியாதிகளுக்கும் விபத்தினால் ஏற்படும் சம்பவத்திற்கும் ஒரு பிரிவு மதுரை ஆஸ்பத்திரியிலே அமைக்கும் உத்தேசம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : தலைவரவர்களே, மூலக் கேள்வி மதுரையில் அரசு மருத்துவமனையில் கரானரி யூனிட் அமைக்கும் உத்தேசம் உள்ளதா என்பதுதான். மாண்புமிகு உறுப்பினரவர்கள் நியூராலஜி பற்றி இங்கே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே அதைப்பற்றி ஆராய

ஒரு பேராசிரியரும் அங்கே இருக்கிறார். அறுவை சிகிச்சை நிபுணரும் அங்கே இருக்கிறார். எல்லாவிதமான வசதிகளும் அங்கே இருக்கின்றன. விபத்துக்களிலே பாதிக்கப்பட்டவர்களைப் பராமரிக்கவும் உடனடியாக சிகிச்சை அளிக்கவும் அவசர சிகிச்சைக் கூடமும் இருக்கிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தென் மண்டலப் பகுதியினுடைய தலை நகரான மதுரையில் எர்ஸ்கின் ஆஸ்பத்திரிதான் மிகப் பெரிய ஆஸ்பத்திரி. அப்படிப்பட்ட ஆஸ்பத்திரியில் கரானரி யூனிட் சென்ற ஆண்டுதான் துவக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த கரானரி யூனிட்டில் என்னென்ன கருவிகள் தற்பொழுது இருக்கின்றன? மற்ற பெரிய ஆஸ்பத்திரிகளில் புதிய நவீன கருவிகள் இருப்பதைப் போல் இங்கும் அமைக்க இந்த அரசுக்கு ஏதேனும் உத்தேசம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10–50]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்தரராஜன் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டுதான் துவக்கப்பட்டுள்ளது என்று நான் சொல்லவில்லை. செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்றுதான் சொன்னேன். அந்த மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனையில் சிகிச்சைப் பெறுகின்ற இடத்தில் மானிட்டர்ஸ், டைவர்சிபிலேட்டர்ஸ், பேஸ்மேக்கர்ஸ் என்ற உபகரணங்கள், இருதய நோய், நரம்புத் தளர்ச்சி நோய்கள் சம்பந்தமாக இருக்கின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

*வினா எண். 457—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை அரசாங்க மருத்துவமனையில் இருதய நோய் சிகிச்சை பிரிவு நல்ல முறையில் அமைக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் என்றால் அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?





மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்தரராஜன் :

(அ) மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனையில் இருதய நோய் சிகிச்சைப் பிரிவு (Cordiology Department) இன்னும் அமைக்கப்படவில்லை.

(ஆ) மருத்துவக் கல்வி இயக்குநரிடமிருந்து தகுந்த செயற்குறிப்புகள் கோரப்பட்டுள்ளன.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை, திருச்சி, கோவை ஆகிய ஜில்லாக்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மதுரைக்கு மட்டும் சுகாதார மருத்துவத்திற்கு நிதி ஒதுக்கப்படவில்லை. மற்றும் வெளி நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பது அதிகப்படுத்தும் உத்தேசம் உள்ளதா ? நரம்புத் தளர்ச்சி, உட்பிரிவு விரிவுபடுத்த திட்டம் உள்ளதா ? இருதய நோய் சம்பந்தமான கருவிகள் அமைக்கப்படுமா ? அங்குள்ள நோயாளிகளுக்குப் படுக்கை வசதிகள் இல்லாமல் நோயாளிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு கூடுதலாக 500 படுக்கைகள் அமைக்க அரசு முன் வருமா என்றும், இராமநாதபுரம், கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களுக்கும் மத்தியமாக இருக்க மதுரையில் இருதய நோய் சிகிச்சைப்பிரிவு அமைக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்தரராஜன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் இருதய நோய் சிகிச்சைப்பிரிவு அமைக்க உத்தேசம் இருக்கிறதா என்றுதான் கேட்டிருக்கிறார்கள். வெளிநோயாளிகள் எவ்வளவு பேர் வந்தாலும் அவர்கள் எல்லோருக்கும் அங்கே சிகிச்சை அளிக்கப்படுகிறது. அங்கே 9,500 படுக்கைகள் ஏற்கெனவே இருக்கிறது. புது படுக்கைகள் ஏற்படுத்தும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, இருதய நோய் சிகிச்சைப் பிரிவுக்கான செயற்குறிப்பு அரசுக்கு வரப்பட்டிருக்கிறதா ? அப்படி வரவில்லை என்று சொன்னால் அதைப் பெறுவதற்கான நடவடிக்கை என்ன எடுத்து வருகிறது? நல்ல முறையில் அந்த பிரிவு சிகிச்சை தருவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை எவ்வளவு - அது எப்பொழுது அமைக்கப்படவிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்தரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனையில், இருதய நோய் சிகிச்சைப் பிரிவு எதுவும் இதுவரை

ஏற்படுத்தவில்லை. அப்படி ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு மருத்துவ கல்வித்துறை இயக்குநரிடம் கோரப்பட்டு பெறப்பட்டது. இதய நோய் கிசிச்சைப் பிரிவு பகுதி மற்றும் உபகரணங்களையும் வாங்குவதற்காக 1,31,512 ரூபாய் தொடர் செலவாகவும், ரூபாய் 9.5 லட்சம் தொடராச் செலவாகவும் மருத்துவக் கல்வி இயக்குநர் குறிப்பில் இருக்கிறது. ஆனால், இந்தக் கருத்தை ஆய்வு செய்து பார்த்ததற்கு பின்னர் நிதித் துறையின் கருத்தை வைத்து 1980–81-ம் ஆண்டில் 2-வது நிதி திட்டமாக செய்யலாம் என்று பரிசீலனையில் இருக்கிறது.

## கால்நடை ஆய்வாளர் பயிற்சி.

* வினா எண். 458— திரு. கே. ஜே. சுப்பிரமணியன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை ஆய்வாளர் பயிற்சி வருகிற 1978–79ஆம் ஆண்டு துவக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேருக்கு பயிற்சி அளிக்கப்படும் ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :

(அ) துவக்கப்படாது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. ஜே. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, கால்நடை ஆய்வாளர் பயிற்சிக்கான குறைந்த பட்ச கல்வித் தகுதி என்ன ? அப்படி எத்தனை பேர் வேலையில் இருக்கிறார்கள் என்று அமைச்சர் அறிவிப்பாரா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை ஆய்வாளர் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட குறைந்த பட்ச தகுதி எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும். இந்த பயிற்சியின காலம் 11 மாதம். இது சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டது. தமிழ்நாட்டில் 3,024 கால்நடை ஆய்வாளர்கள் உள்ளனர். இதில் 1,071 கால்நடை ஆய்வாளர் நிலை 1-ம், 1953 கால்நடை ஆய்வாளர் நிலை 2-ம் அடங்கும்.





திரு. கே. ஜே. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, கால்நடை ஆய்வாளர்களுககு டெக்னிகல் பயிற்சி அளிக்கப்படுமா ? அப்படி அளிப்பதாக இருந்தால் இந்த ஆண்டு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

திரு. துரை. கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத தலைவர் அவர்களே, கால் நடை ஆய்வாளர் பயிற்சியை துவக்க உத்தேசம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள், ஆனால், இப்பொழுது நம்முடைய அரசு கிராமங்களில் உள்ள சிறு விவசாயிகளுக்கு, மானியமாக கறவை மாடுகள், உழவு மாடுகள் கொடுத்து வருகின்றன என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் கால் நடை ஆய்வாளர் பயிற்சியே தொடங்கப்படவில்லை என்றால் அந்த கால் நடைகளுக்கு எப்படி வைத்தியம் செய்ய இயலும்? அதனால் இப்பயிற்சியை துவக்குவதற்கு, அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால் நடை ஆய்வாளர் பயிற்சி நிறுத்தப் பட்டதால் காலி இடங்களைப் பூர்த்தி செய்ய களப்பணி உதவி யாளர்களை நியமிக்க ஏற்கனவே அரசுக்கு பிரேரணை அனுப்பப் பட்டது. கால் நடை ஆய்வாளர்களை விட குறைந்த சம் பளத்தில் களப்பணி உதவியாளர்களை நியமிப்பதற்கு அரசுக்கு அனுப்பப்பட்ட பிரேரணை இது வரை ஒத்துக் கொள்ளப்பட வில்லை. ஆகவே, 1979–80 ஆம் ஆண்டிற்குப் பின்னால் தான் அது துவக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு துணைத் தலைவ ரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரை கோவிந்தராசன் அவர்கள் அமைச்சருக்குப் பக்கத்தில் இருக்கிறார், அங்கேயே கேட்டிருக்கலாமே.

திரு. இ. தமிழரசன் : பேரவைத் துணைத் தலைவரவர் களே, கால்நடை மருத்துவர்கள் எத்தனை பேர் வேலையில்லா மலிருக்கிறார்கள் ? அவர்களுக்கு வேலை கொடுக்க என்ன திட்டம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கால் நடை மருத்துவர்களைப் பற்றிய கேள்வியல்ல இது, கால் நடை ஆய்வாளர்களை ஒட்டியது மூலக் கேள்வி.

[1979 மார்ச் 17

ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் மருத்துவ வசதி.

*வினா எண். 459— திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் மக்களுக்கு கொடுக்கப் படும் ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட ஆடு களுக்கு வைத்திய உதவி சரியாக செய்யப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : (அ) இது குறித்து புகார்கள் எதுவும் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் ஆடு வளர்ப்பு திட் டத்தின் கீழ் கடன் கொடுக்கிற நேரத்தில் ரூ. 1,000 சொத்து ஜாமீன் கொடுத்தால்தான் கடன் கொடுக்கப்படுவதாக அரசு அறிவித்திருக்கிறது. ஆகவே, ஏழை விவசாயிகளுக்குக் கொடுக் கப்படுகிற இந்தக் கடன் திட்டத்தில், இந்த சொத்து ஜாமீனை செலுத்தாமல் இருக்கும் வகையில் மறுபரிசீலனை செய்து, இனா மாகக் கொடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பற்றிய குறிப்பெதுவும் அரசின் கவனத்திற்கு வரவில்லை. வந்தால் பரிசீலிக்கலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத்தலைவ ரவர்களே, தமிழ்நாட்டில் உள்ள ஆடு வளர்ப்புச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை என்ன ? எந்தத் திட்டத்தின்கீழ் இது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது ? உலக வங்கியின் உதவியோடு ரூ. 47 கோடி அளவில் போடப்பட்ட ஆடு வளர்ப்புத் திட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளதா? அது குறித்த விவரம் என்ன என்று அறியவிரும்புகிறேன்.



1979 மார்ச் 17]

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்வேறுபட்ட கால்நடை பராமரிப்பு திட்டங்களின் கீழ் ஆடுவளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் 227 இருக்கின்றன. வேளாண்மை மறுநிதி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 39-ம் மலைப்பகுதி மேம்பாட்டு அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 4-ம், சிறப்பு கால்நடை திட்டத்தின்கீழ் 83-ம், தீவிர வறண்டநில அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 60-ம், பழங்குடி மக்கள் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 2-ம் மற்றவைகள் 39-ம் ஆக, மொத்தம் 227 சங்கங்கள் இருக்கின்றன.

மாநில அரசு ஆடு வளர்ப்புத் திட்டங்களுக்காக உலக வங்கி நிதியுதவி பெறும் பொருட்டு ரூ. 47 கோடி செலவில் ஒரு ஆடு வளர்ப்புத் திட்ட அறிக்கையினை தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. இத் திட்டத்தின் நோக்கம் ஏழை விவசாயி களின் பொருளாதார நிலையினை உயர்த்துவதே ஆகும். ஆட்டுப் பிரிவு ஒன்றின் மூலம் விவசாயி 6-வது ஆண்டின் இறுதி யில் ரூ. 8,500ஐ நிகர வருமானமாகப் பெறுவார். 33,000 ஆட்டின பிரிவுகளை ஏற்படுத்துதல் ; தீவிர ஆடு வளர்ப்புத் திட்டம் ஏற்படுத்துதல் பெரிய அடலின ஆடு வளர்ப்புப் பண்ணை நிறுவுதல் - கலப்பின ஆடு விருத்திப் பண்ணை நிறுவுதல் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, பழங்குடி மேம் பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் இரண்டும், மலைப்பகுதி மேம்பாட்டு அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படையில் 4 ம் இருக் கின்றன. அந்த 6 சங்கங்கள் எந்த, எந்த இடத்திலே இயங்கு கின்றன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

திரு. செ. சதாசிவம் : துணைத் தலைவரவர்களே, இந்த ஆடு வளர்ப்பு முன்னேற்ற திட்டங்கள் எல்லாம் கிராமப் புறங் களில் செயல் படுவதால், கிராமப் புறங்களில் ஊராட்சி மன்றங் கள் அதைக் கவனித்து வருவதால், இப்பொழுது, பி.வி.எஸ்.ஸி. டாக்டர்கள் ஏராளமானபேர், படித்து விட்டு, பட்டம் பெற்ற வர்கள் வேலையில்லாமலிருக்கும் நேரத்திலே, ஊராட்சி ஒன்றியங்களிலே ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் எக்ஸ்டென்ஷன் ஆபீசர் என்ற முறையிலே அவரை நியமித்து இது போன்ற கால்நடைகளுக்கு வைத்திய வசதி ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 3 ஆடு வளர்ப்புக் கூட்டுறவு சங்கங்களுக்கு ஒரு கால் நடை உதவி மருத்துவர் வீதம் 39 சங்கங்களில் ஏற் கனவே செயல்பட்டு வருகிறார்கள்.

[1979 மார்ச் 17

[முற்பகல் 11.00]

•

திரு. வி. கோ. சின்னசாமி : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் ஆடு வளர்ப்புத திட்டத்தின் கீழ் மக்களுக்கு கொடுக்கப்படும் இந்த உதவி சரியாகச் செய்யப்பட வில்லை. ஆனால் இது பற்றி இது வரையில் புகார் எதுவும் வரவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வதெல்லாம், ஒவவொரு ஊராட்சி ஒன்றியத் திற்கும் மேலும் இரண்டு 'சப் சென்டர்ஸ்' திறந்து— திறக்கப் படும் என்று சொன்னதாக எனக்கு ஞாபகம்— நாளுக்கு நாள் பெருகி வருகின்ற கால் நடைகளை சரியாகப் பராமரிப்பதற் காக புதிதாக ஒரு பி.வி.எஸ்.ஸி. டாக்டரையும் நியமித்து தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச் சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : தலைவரவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. வ. துலுக்காணம் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவும் கிராம கூட்டுறவு சொசைட்டிகள் மூலமாகவும் எங்கள் பகுதிக்கு ஆடுகள் வழங்கப்பட்டன. அப்படி வழங்கப்பட்ட ஆடுகள் பல இறந்து விட்டன. அதனால் கொடுக்கப்பட்ட கடனை அரசு தள்ளுபடி செய்ய முன் வருமா ? சரியான பாதுகாப்பு வசதியும், பாதுகாப்பும் இல்லாத கார ணத்தால் இறந்து விடுகின்ற ஆடுகளுக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட கடனை தள்ளுபடி செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸவதி : அது பற்றிய செயற் குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மானியம் முறையில் ஆடு வளர்ப்புக்கான அந்தத் திட்டம் எல்லா மாவட்டங்களிலும் இல்லை என்று நினைக்கிறேன். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆடு வளர்ப்புக்கான எல்லா வாய்ப்பும் இருந்தும் இத்திட்டம் அங்கே இல்லை. அது பற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவவொரு வகையானத் திட்டம் செயல் படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்டத் தில் இந்தத் திட்டம் இல்லை என்று சொல்லுகிறார்கள். அது பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், ஆராய்ந்து முடிவு செய்யப்படும்.



1979 மார்ச் 17]

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் பரம்பரையாக ஆடுகளை வளர்த்துக் கொண்டிருப் பவர்களுக்கு இந்த அரசாங்கம் ஏதாவது உதவிகள் செய்திருக் கிறதா ? அவர்களில் எத்தனைபேர், எத்தகைய கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை இந்தக் கால்நடை வளர்ப்புத் துறை அறியுமா ?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : அது பற்றி அர சாங்கத்தின் கவனத்திற்கு இதுவரையில் எந்தவிதமான புகாரும் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்).

## 2. தகவல் கோரல்.

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து.

திரு. பொ. விஜயராகவன் : சார், நேற்றையதினம் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஊழியர்கள் தார்ணா போராட்டம் நடத்தி 19 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மேலும்..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதுபற்றி அறையிலே கேட்கவேண்டுமே தவிர அவையில் கேட்கக்கூடாது. தயவு செய்து உட்காருங்கள். நான், என்ன பிரச்சனையை எடுத்துக் கொள்ளப் போகிறேன் என்பதைப் பார்த்துவிட்டு, அதன் பிறகு ஒழுங்குப் பிரச்சனையை எழுப்புங்கள்.

### (ஆ) சட்டமன்றத் துறைக்கு போதுமான இடம் ஒதுக்குவது குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : சார், சட்டமன்ற உறுப்பினர் களாகிய நாங்கள் செம்மையாகச் செயல்பட வேண்டியிருக்கிறது. இங்கே ஆர். ஆர். செக்ஷன் என்று ஒன்று இருக்கிறது. அங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் போய் நின்று, அல்லது உட்கார்ந்து எழுதிக் கொடுத்து, தட்டெழுத்து செய்து வாங்க வேண்டும். ஆனால் அங்கே உட்கார இடம் கிடையாது. ஒரு பெரிய கட்டடத் தைக் கட்டியிருக்கிறோம். இங்கே இருக்கின்ற மற்ற இலாக்காக்

களை அந்தக் கட்டடத்திற்கு மாற்றிவிட்டு, இந்தக் கட்டடத்தின் கீழ்ப்பகுதி முழுவதையும் சட்டமன்றத் துறைக்கு ஒதுக்கி இருக்கலாம். அப்படிச் செய்யாததால் சட்டமன்ற உறுப்பினர்கள் உட்கார்ந்து எழுதுவதற்கு இடமில்லை ; சட்டமன்ற உறுப்பினர்கள் ஓய்வு எடுத்துக் கொள்ள இடமில்லை. ஆர். ஆர். செக்ஷனில் போய் உட்கார்ந்து, எழுதி தட்டெழுத்தரிடம் கொடுத்து தட்டெழுத்து செய்து வாங்குவது பெரிய பிரச்சனையாக இருக்கிறது ; மிகுந்த வேதனையாக இருக்கிறது. அடிக்கடி அதைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்லியும் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அகவே, துணைத் தலைவரவர்களே, இதுபற்றி யோசனை செய்து குறைந்தபட்சம் உட்கார்ந்து எழுத ஒரு அறை, ஓய்வு எடுத்துக்கொள்ள ஒரு அறை என்று ஒதுக்குவதற்கு . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; சட்டமன்றம் பற்றிய டிமாண்ட் வரும்போது தங்களுடைய ஆலோசனைகளை எல்லாம் விரிவாகச் சொல்லலாம். அதுபற்றி தேவையான நடவடிக்கையை இலாகாவினர் எடுக்க வசதியாக இருக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, தாங்கள் சட்டமன்ற மானியக் கோரிக்கை வரும்போது கூறலாம் என்று சொன்னீர்கள். அது நம்முடைய சட்டமன்ற நிகழ்ச்சியின் இறுதியில் தான் வரும். ஏறத்தாழ இன்னும் ஒன்றரை மாதம் நாங்கள் பணியாற்ற வேண்டும். அந்த பலமாடிக் கட்டடம் கட்டுவதற்கு முன்பு இங்கே இருக்கிற மற்ற ஆபீஸ் எல்லாம் அங்கே மாற்றப்படும் என்றும், இந்தக் கட்டடத்தின் கீழ் மாடத்தில் இருக்கிற அறைகளை எல்லாம் சட்டமன்ற இலாக்காவுக்கு கொடுப்போம் என்றும் அரசு கூறியது. ஆகவே, இப்போதே அதைச் செய்வது உசிதமாக இருக்கும், வசதியாக இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, சட்டமன்ற விடுதிக்கு முன்னால் ஒரு ரேடியோ வைத்திருக்கிறீர்கள். அது மத்தியில் இல்லாததால் ஆறாவது மாடியில் இருக்கிறவர்களுக்கு சரியாகக் கேட்கவில்லை. . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகள் எல்லாம் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. இராமசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது பரிசீலிக்கப்படும் என்று கூறுகிறீர்கள். இது அதிக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை. இது உடனடியாக





செய்ய வேண்டிய காரியமாக இருப்பதால் இரண்டொரு தினங்களில் இதற்கு ஒரு நல்ல முடிவை அறிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதனை உடனடியாகப் பரிசீலிப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. திருவேங்கடம், திரு. வி. கே. கோதண்டராமன் இருவரும் எழுந்து நின்றனர்.)

உட்காருங்கள். இப்படியே 235 உறுப்பினர்களும் எழுந்து பேச ஆரம்பித்தால் எப்படி அவையை நடத்த முடியும்.

(இ) சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் நடைபெறும் திருட்டு குறித்து.

திரு க. மருதாசலம் : தலைவரவர்களே, நேற்று நான் சட்டமன்றத்திற்கு வரும்போது என்னிடைய அறையைப்பூட்டி விட்டு வந்தேன்: அந்த அறையினுடைய பூட்டைத் திறந்து என்னுடைய இரண்டு புதிய சட்டைகளையும் இரண்டு புதிய வேஷ்டிகளையும் 368 ரூபாயையும் திருடிக்கொண்டு போய் விட்டார்கள்.

(கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற திருட்டு சம்பந்தமாக எழுத்து மூலமாக எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. காவல் துறை தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

(மீண்டும் கூச்சல், குழப்பம்)

சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலும் பாதுகாப்பு அதிகரிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. உரிமைப் பிரச்னை

மின்சாரத்துறை அமைச்சர்மீது

மாண்புகு பேரவைத் துணைத் தலைவர் அடுத்து பேரவையின் 184-வது விதியின்கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ரா. உமாநாத் அவர்கள் அவை உரிமைமீறல் பிரச்சினை குறித்து அவையில் எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப் படுகிறது அதே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்களும் அவை உரிமை மீறல் பிரச்சினையை அவையில் எழுப்ப அனுமதி கேட்டு உள்ளார்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இந்த உரிமை மீறல் பிரச்சினையில்.................

திரு. ரா. உமாநாத் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த உரிமை மீறல் பிரச்சினை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களுக்கு எதிரானது. மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசுகின்றபோது திருப்பரங்குன்றம் சம்பவம் சம்பந்தமாக அரசாங்கத்தினுடைய முடிவை அவர் குறிப்பிட்டார். மூவர் கொண்ட கமிட்டி அமைப்பது பற்றி அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இது சம்பந்தமாக நான் கேள்வி கேட்கிறபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் அழுத்தமாக, அரசாங்கத்தினுடைய முடிவை மெட்ராஸ் பார் கவுன்சில்ஸ் அண்ட் மெட்ராஸ் பார் அசோசியேஷன் ஆகிய இருவரும் வரவேற்றிருக்கிறார்கள் என்று சொன்னார். அப்போது இரண்டுதரம் நான் சேலஞ்ச் பண்ணினேன். அவருடைய ஸ்டேட்மென்டை இரண்டு தடவையும் அவர் அதை ரிப்பீட் செய்து, ரீஅஃப்பரம் செய்து, கன்ஃபர்ம் பண்ணி அழுத்தமாகச் சொன்னார்கள்.

அதேபோன்றுதான் அதாவது அந்த இரண்டு அசோசியஷன்களும் வரவேற்றிருக்கிறார்கள் அந்த முடிவை என்று, மாண்புமிகு அமைச்சரவர்களும் நான் கேள்வி கேட்கின்றபோது குறிப்பிட்டார்கள். அப்போது அமைச்சரவர்கள் சொன்னதைச் சொல்கிறேன். ''நான் சொல்ல விரும்புவது வழக்கறிஞர்களைக் கலந்து கொண்டு பிறகு முடிவெடுத்து அந்த போர்ட் ஆப் என்கொயரி அமைத்து அந்தப் பிரச்சினையை முடித்து வைத்திருக்கிறார்கள்'' என்று அவர் இங்கே சொன்னார். அந்த கான்டெக்ஸ்ட் பிரகாரம் பார்க்கிறபோது வழக்கறிஞர் என்று சொல்வது அந்த இரண்டு ஆர்கனைசேஷன்களைத்தான் மீன் பண்ணும். ஆனால், அந்த இரண்டு ஆர்கனைசேஷன்களும், எங்களை கன்சல்ட் பண்ணவில்லை என்று சொல்கிறார்கள். இன்று காலையில் கூட பத்திரிகையில் பார்த்தபோது பார் கவுன்சில் சேர்மென் ஸ்டேட்மென்ட் விட்டிருக்கிறார், எங்களுடைய சங்கம் அதனை வரவேற்கவில்லை என்று. மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்கள் சொல்வது சரியல்ல, உண்மையல்ல என்று மறுத்திருக்கிறார். நான் பார் அசோசியேஷன் ப்ரெசிடென்டுக்கு அவசரமாக ஒரு கடிதம் எழுதினேன். அவர் அதற்குப் பதில் அனுப்பியிருக்கிறார். அந்த பதிலை மட்டும் படிக்கிறேன்.

Thiru A. Ramachandran. President of the Madras Bar Association addressed to Thiru R. Umanath. M. L. A. I have your letter of 17th March 1979. It is wholly erroneous for anyone to state that the decision of the Tamil Nadu Government



to appoint an Enquiry Panel consisting of a District Judge, a representative of advocates and a representative of the police was taken in consultation with the Bar Association. I further state that consequently there was no occasion for the Bar Association to have welcomed this proposal since we were wholly ignorant of it. I may say that this is perhaps the first time when an Enquiry Panel has been constituted consisting of a member of the police. It may interest you to note that the Evidence Act forbids Courts of Law from taking into consideration any statements made to police officers.

[முற்பகல் 11-10]

அவர்கள் க்ளியராக காண்ட்ரடிக்ட் செய்திருக்கிறார்கள்... ஆகவே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது உண்மைக்குப் புறம்பானதாகும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

It will amount to misusing the names of these organisations to make the House believe that they have welcomed it.

M. Pandian has said that these two organisations have welcomed it.

அவர்களே வெல்கம் செய்கிறபோது நாம் தலையிடுவானேன் என்றுதான் கிட்டத்தட்ட அந்தப் பிரச்சனையைக் கிளப்பவில்லை. இந்த இரண்டு ஆர்கனைசேஷன்களையும் அவர்கள் மீன் செய்ய வில்லை என்றால், வக்கீல்களைக் கலந்து அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று என்றிருக்கக்கூடிய அந்த க்ளாஸ் இருக்கக்கூடாது. எந்த வக்கீல்களைக் கலந்தார்கள் ?

The whole thing seems to be a mystery for this House.

பேராசிரியர் அவர்கள் சொல்கிறார்கள், பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் என்று. பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் என்றால் வக்கீல், வக்கீல் என்றால் பப்ளிக் ப்ராஸிக்யூட்டரா ? இது புதுமையாக இருக்கிறது. ஆகவே அவர்கள் அந்த இரண்டு ஆர்கனைசேஷன்களை மீன் செய்யவில்லை என்றால் அது இந்த அவைக்குத் தெரிய வேண்டும். அவர்களைக் கலந்து கொண்டு முடிவு எடுத்தோம் என்று சொன்னால் எந்த எந்த வக்கீல்களைக் கலந்து கொண்டு முடிவெடுத்தார்கள் ? எந்த ஸ்தாபனங்களைக் கலந்து கொண்டார்கள்,

Other than these two organisations ?

ஸ்தாபனங்கள் இல்லை என்று சொன்னால் தனி நபர்கள் யார் யாரைக் கலந்து கொண்டார்கள் ? அப்படியானால் தனி நபர்

களைக் கலந்து கொண்டார்கள் என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கவேண்டும். அந்த மாதிரிச் சொல்லாமல் இருக்கிறார்கள். The whole thing is a mystery.

ஆகவே, யார் யாரைக் கலந்து கொண்டார்கள், எப்படி இந்த முடிவை எடுத்தார்கள் என்பதெல்லாம் அவைக்குத் தெரியவேண்டும், ஆகவே இதை நிச்சயமாக ப்ரிவிலேஜஸ் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும். அங்குதான் இதைப்பற்றி டிஸ்கஸ் செய்ய வாய்ப்பு இருக்கும். பார் கவுன்சில் ப்ரெசிடென்ட் வருவார், பார் கவுன்சில் செக்ரட்டரி வருவார், மற்ற ஆபீஸ் பேரர்ஸ் வருவார்கள். எல்லோரையும் கேட்டு, விரிவாக ஆராய்ந்து ஒரு முடிவு எடுக்கமுடியும். ஆகவே இதை ப்ரிவிலேஜஸ் கமிட்டிக்கு ரெபர் செய்ய வேண்டும். Then only the whole thing will come out.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, இந்த உரிமை மீறல் பிரச்சனையைப் பொறுத்தவரையில் ஒன்றைக் கூறவிரும்புகிறேன். பிமைச்சர் அவர்களின் ஸ்டேட்மன்ட்,

Whether it is deliberately misleading the House or not? இதுதான் விஷயம். வேண்டுமென்றே இந்தச் சபையை தவறாக இட்டுச் செல்லக்கூடிய அளவில் ஸ்டேட்மெண்ட் கொடுத்தார்களா அல்லது தற்செயலாகக் கொடுத்தார்களா என்பதுதான் பிரச்னை. தற்செயலாகக் கொடுத்தார்கள் என்பதற்கு எந்த விதமான ஆதாரமும் இல்லை. வேண்டுமென்றே கொடுத்தார்கள் என்பதற்குத்தான் ஆதாரங்கள் இருக்கின்றன. திரு. பாண்டியன் அவர்கள் ஆரம்பத்தில் பேசுகிறார்கள். அது உண்மைக்கு மாறானது. அவர்கள் மீதே உரிமை பிரச்னை கொண்டுவந்திருக்கவேண்டும். நீங்களே அதை 'ஸுவோ மோட்டா'வாக எடுத்திருக்க வேண்டும். அவர்கள் சக சட்ட மன்ற உறுப்பினராக இருப்பதால் வேண்டாமென்று நாங்கள் விட்டுவிட்டோம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அப்படியானால் அமைச்சர்கள் சக உறுப்பினர்கள் இல்லையா?

திரு. க. சுப்பு: நாங்கள் அந்த மாதிரி கருணைகாட்டிவிடத் தயாராக இருக்கிறோம், ஆனால் சட்டம் விடாது. சட்டம் அதன் வேலையைச் செய்யும்.

திரு. பாண்டியன் அவர்கள் இங்கு சொல்லும்போது நேற்று சொன்னார்கள்1.

The proposal to constitute the Board had been welcomed by he Bar Council and the Bar Association.



என்று சொல்கிறார்கள். பார் அசோஸியேஷன், பார் கவுன்சில் இந்த ப்ரப்போஸலை, மூன்று பேர்களைக் கொண்ட போர்ட் ஆப் என்க்கொயரி ப்ரப்போஸலை வழக்கறிஞர்கள் வரவேற்றிருக்கிறார்கள், ஒரு சிலர்தான் எதிர்த்திருக்கிறார்கள் என்று சொலகிறார்கள். அதை சப்ளிமெண்ட் செய்வது மாதிரி அமைச்சர் அவர்கள் பேசுகிறார்கள். பார் கவுன்சில் சேர்மென் திரு. ராஜையா—பார் கவுன்சில் செகரட்ரி தொடர்பு கொண்டு சொன்னார்கள். அவர்கள் ஸ்டேட்மெண்ட் இந்துவில் வந்திருக்கிறது. 11ஆம் தேதி பார் கவுன்ஸில் மீட்டிங் நடந்திருக்கிறது. அதற்குப் பிறகு மீட்டிங்கே இல்லை. அப்படி மீட்டிங்கே நடக்காதபோது பார் கவுன்சிலால் முடிவெடுக்கப்பட்டது என்று சொல்வது தவறானதாகும், அது 'மிஸ்லீடிங்காகும்.' அதை மையமாக வைத்து ஸெட்டில்மென்ட் செய்கிறார்கள்.

The Hon. Minister appeals to the Lawyers to accept the Government's proposal.

என்றால் என்ன அர்த்தம்? வேண்டுகோள் விடுக்கிறீர்கள். இந்த ப்ரப்போஸலை ஏற்றுக்கொள்ள வேண்டும்என்று வேண்டுகோள் விடுகிறீர்கள். அதுதான் அர்த்தம்.

இங்கு கூட சொன்னார்கள், பாண்டியன் ஒரு வழக்கறிஞர், மார்க்கபந்து அவர்கள் கவுரமிக்க ஒரு வழக்கறிஞர், எங்களை எடுத்துக்கொண்டால் எங்களுக்கு பிராக்டீஸ் கிடையாது. இப்படி இந்த இரண்டு பேர்களை எடுத்துக்கொண்டால் இவர்கள் இரண்டு பேர்களையும் கலந்து கொண்டு தான் இப்படி சொன்னார்களா. பார் அசோஸியேஷன் வரவேற்கிறார்கள் என்றால் அவர்களை கலந்து கொண்டிருந்தார்களா, நமது அமைச்சர் அவர்கள் எதையும் ஆழ்ந்து படித்துப்பார்த்துத்தான் தெரிவிப்பார். தெரியாமல் எதையும் சொல்லமாட்டார். இந்த விஷயத்தை தெரிந்தே தான் செய்திருக்கிறார். மிஸ் லீட் செய்ய வேண்டும் என்று கருதியே தான் இப்படி சொல்லியிருக்கிறார். கடைசியில் 'அப்பீலும்' செய்திருக்கிறார். அதே நேரத்தில் இந்த ஸ்டேட்மென்டையும், பார் அஸோசியேஷனிலிருந்து சொல்லியிருப்பதையும் சேர்த்து ஒப்பிட்டுப் பார்த்து எடை போட்டு பார்க்கவேண்டும். இங்கு நீங்கள் ஸ்டேட்மென்ட் கொடுத்த மறுகணமே அவர்கள் கோர்ட்டை பாய்-காட் டண்ணியிருக்கிறார்கள்.

இன்றைக்குள்ள மாணவர்கள் எல்லாம் நாளைய தினம் வழக்கறிஞர்களாக வருகின்றவர்கள், மாணவர்களும் சேர்ந்து, வழக்கறிஞர்கள் முதலமைச்சர் அவர்களைச் சந்திப்பதற்கு ஊர்வலமாக வந்திருக்கிறார்கள். முதலமைச்சரை சந்தித்து சொல்லியிருக்கிறார்கள். போடப்பட்டிருக்கின்ற போர்ட் ஆப் என்கொயரி என்பதே ஜுடிஷியரியை அன்டர்மைன் பண்ணு

வதாக இருக்கிறது. ஜட்ஜையும் போட்டுவிட்டு போலீஸ் அதிகாரியையும் போட்டால் என்ன பொருள்? போலீசை காப்பாற்றுவதற்கு ஆளே இருக்காது என்று நினைக்கிறீர்களா? சீராளன் கேஸில் கூட போலீஸ்காரர்கள் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். ஆகவே ஜட்ஜ்கள் இன்டிப்பன்டன்டாக வேலை செய்ய மாட்டார்கள் என்று நீங்கள் ஏன் நினைக்கவேண்டும்? ஜட்ஜ்-கள் அல்லது ஜுடிஷியறி மீது உங்களுக்கு நம்பிக்கை இருக்கவேண்டும். அவர்கள் மீது நம்பிக்கையில்லாமல் சர்க்கார் கூட அடிக்கடி ஒரு கோர்ட்டிலிருந்து இன்னொரு கோர்ட்டுக்கு மாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இப்படி அசிங்கமான காரியங்கள் நறைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அசிங்கமான முடிவுகளுக்குத் தான் வருவோம் என்று சொல்லிவிட்டால் வேறு என்ன செய்வது? பொதுவாக ஜுடியஷியறியை அண்டர்மைன் செய்வது என்பது தவறு. ஜட்ஜ் தனிப்பட்ட முறையில் விசாரித்து நடவடிக்கை எடுக்க முடியாதா? இதற்கு எதற்கு கோர்ட், வக்கீலுக்கு ஒரு ஆள், போலீசுக்கு ஒரு ஆள் என்றெல்லாம் ஒரு போர்டு போடுவது என்பது மிகவும்வருந்தத்தக்கது. அதைவிட இன்ஸல்ட்டாக இருக்கிறது. Adding insult to injury, போலீஸ் அதிகாரிகளைக் கலந்து கொண்டு நடவடிக்கை எடுக்கிறேன் என்கிறார் முதலமைச்சர். இதைவிட ஐ.ஜி.யின் கையிலேயே இதை விசாரிக்கும்படி கூறியிருக்கலாமே, இதைவிட ஒரு எஸ். ஐ. யே விசாரணை நடத்தலாமே இப்படி சொல்லுகின்ற முதலமைச்சரை விட எஸ்.ஐ. எவ்வளவோ மேலாக இருப்பார் போலிருக்கிறது. போலீஸ்காரர்களிடம் கேட்டால், அவர்கள் என்ன செய்வார்கள்? நாம் என்ன சொல்லுகிறோம். இன்டிபென்டன்ட் ஜுடிஷியரி வேண்டும் என்று சொல்லுகிறோம். இன்டிபென்டன்ட் கெவர்மென்ட் வேண்டும் என்கிறோம். அப்படியானால். போலீஸின் கையில் விசாரணையை கொடுத்தால் என்ன ஆகும். நேற்று கூட பாராளுமன்றத்தில் டெல்லியில் சிவில் ரைஸ் சட்டத்தைப்பற்றி சொன்னார்கள். பீகாரில் பார்பரஸ் அட்டாக்' நடந்திருக்கிறது என்று சொல்லப்பட்டது. குறிப்பிட்ட ஒரு ஏ.எஸ்.ஐ. மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரப்பட்டது. அந்த ஏ. எஸ். ஐ. சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார். இங்கே என்னவென்றால்—டிரான்ஸ்பர் செய்யப்படுகிறார். டிரான்ஸ்பர் என்பது பனிஷ்மென்ட் இல்லை.......

Transferisnot at all a punishmeut.

சஸ்பென்ட் செய்வது என்பது வேறு. டிரான்ஸ்பர் செய்வது வேறு. நீங்கள் வேறு ஏன் போய் மிஸ் லீட் செய்கிறீர்கள்.... ஆச இங்கே அமைச்சர் கொடுத்த ஸ்டேட்மென்ட் ஜுடிஷியறியை அன்டர்மைன் செய்வதாக இருக்கிறது. பாண்டியன் அவர்கள் சொல்வது 'லட்டர், அன்ட் ஸ்பிரிட் ஆப் தி ரெஸலூஷனை மிஸ்-இன்டரப்ட் செய்வதாக இருக்கிறது.



ஆகவே இந்த விஷயத்தில் அமைச்சர் அவர்கள் ஸ்லிப்பாகியிருக்கிறார். சாதாரணமாக அவர்கள் எதிலும் ஸ்லிப்பாக மாட்டார். ஆனால் இதில் ஸ்லிப்பாகியிருக்கிறார். ஆகவே இநதப் பிரச்னையை பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பினால் தான் இந்த அறிக்கைகளை எல்லாம் விரிவாக விவாதிக்க முடியும், பார்-கௌன்ஸில் சேர்மென், செக்ரட்டரி இவர்களை எல்லாம் வரவழைக்க முடியும், அவர்களை எப்போது நான் அழைத்து கேட்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படப்போகிறது, பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பினால் இவர்களை எல்லாம் சம்மன் செய்து அவர்களுடைய கருத்துக்களையும் கேட்டு இதில் முடிவு எடுக்க முடியும். ஆகவே இதை உரிமைக்குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் பேச எழுந்திருந்தார்..)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் இப்போது இதில் பேச வேண்டியதில்லையே, தயவு செய்து உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்?

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையில் எழுப்பப்பட்டது 15 ஆம் தேதியன்று கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்தபோது நான் தெளிவாக இதைப்பற்றி குறிப்பிட்டேன். அன்றையதினம் நான் குறிப்பிட்டது என்ன என்பது சட்டசபைக் குறிப்புகளை பார்த்தால் தெரியும், அதில் இந்த போர்ட் ஆப் என்கொயரியைப் பற்றி நம்முடைய மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்கள் சந்தேகங்களை கிளப்பியபோது நான் பதில் சொன்னேன். அதில் குறிப்பிட்டிருப்பது—''சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் ஓரளவு கலந்து இந்த போர்ட் ஆப் என்கொயரியை போட்டிருப்பதால் வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பாக நிச்சயமாக இதை ஏற்றுக்கொண்டு தங்கள் பணிகளை தொடங்குவர்கள் என்று நம்புகிறேன்".

[மாண்புமிகு பேரவைத் தலைவர்— தலைமை]

[முற்பகல் 11-20]

ஆகவே, அன்றையதினம் குறிப்பிட்டதுகூட, அவர்கள் சம்மதம் தர வேண்டுமென்றோ அல்லது வழக்கறிஞர்கள் சங்கத்தோடு கலந்துகொண்டு இந்த முடிவெடுத்தோம் என்றோ நான் நிச்சயமாக அன்றையதினம் குறிப்பிடவில்லை. அதை போலவே, நேற்றைய தினம் இந்தப் பிரச்னை வந்தபோது, மாண்புமிகு உறுப்பினர் பாண்டியன் அவர்களும், மாண்புமிகு

உறுப்பினர் உமாநாத் அவர்களும் இதைப் பற்றிய விவாதத்தை மேற்கொண்டார்கள். அப்பொழுதும் நான் ஜாக்கிரதையாகவே குறிப்பிட்டேன். வழக்கறிஞரைக் கலந்துகொண்டு என்று.

ஆனால், மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்களும் வழக்கறிஞர் யார் என்ற கேள்வியைக் கேட்டார்கள். ஒருவேளை இந்த அவையிலே இருக்கின்ற வழக்கறிஞரா அல்லது வெளியிலே இருக்கின்ற வழக்கறிஞரா என்று உடனே கேட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புவது. இதிலே அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் சட்டப் பேரவைக்கு தவறான தகவலை நிச்சயமாக நான் தர நினைக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், மாண்புமிகு முதல்வர் அவர்களே இதிலே ஒரு சுமுகமான முடிவுக்கு வரவேண்டுமென்பதற்காக, அவர்கள் இதிலே அக்கறை எடுத்துக் கொண்டு வழக்கறிஞருடன் தொடர்பு கொண்டார்.

குறிப்பாக, இதில் லட்சுமிநாராயணன் என்ற வழக்கறிஞர், அவர் இந்த சென்னை வழக்கறிஞர்கள் சங்கத்திலே நிர்வாகப் பொறுப்பிலே, ஒரு கமிட்டி உறுப்பினராக இருக்கிறார் என்று அறிகிறேன். அவரிடத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைபேசி மூலம் இந்தப் பிரச்னையைப் பற்றிப் பேசினார்கள். 14ஆம் தேதி மீண்டும் அந்த வழக்கறிஞர் லட்சுமி நாராயணன் அவர்கள் முதல் அமைச்சர் அவர்களுடைய தனிச் செயலருடன் தொடர்புகொண்டு, 'போர்டு ஆப் என்கொயரி'யைப் பொறுத்தவரையிலே எங்களுக்கு ஒன்றும் பிரச்னை இல்லை. ஆனால் வழக்கறிஞர்கள் ஒரு மரியாதையாக நடத்தப்பட வேண்டும். சப்-இன்ஸ்பெக்டர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட வேண்டும். போர்டு ஆப் என்கொயரியிலே ஆட்சேபணை இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இதை முதல் அமைச்சர் அவர்களின் தனிச் செயலர் அவர்களிடம் சொன்னார்கள் இன்னும் சொல்லப்பேனால், அந்த வழக்கறிஞர் இது பற்றிய அறிவிப்பும் அன்றையதினமே பத்திரிகையிலே வர வேண்டும். ஏனென்றால், அப்படி அன்றையதினமே பத்திரிகையிலே வந்தால்தான், வெளியிலே இருக்கிறவர்களுக்கு 16ஆம் தேதி வேலை நிறுத்தத்திற்கு தொடர்பானவர்களுக்கு உரிய நேரத்தில் போய்ச் சேரும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள்.

ஆகவே, அந்த அடிப்படையில் 14 ஆம் தேதிகூட சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கின்றபோது, 82 ஆவது விதியின்கீழ் ஒரு அறிவிப்பை நான் செய்யவேண்டுமென்ற அளவிற்கு நிலைமை வந்தது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கெனவே கவன ஈர்ப்பு கொடுத்திருக்கின்ற காரணத்தால் நான் 82 ஆவது விதியின்கீழ் இதே பிரச்னையைப் பற்றி ஒரு ஸ்டேட்மெண்டு கொடுத்துவிட்டால், 41 ஆவது விதி கொடுத்ததற்கு ஒரு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். 41 ஆவது விதியின்கீழ் ஸ்டேட்-



மென்டுக்காக 'காலிங் அடென்ஷன்' கொடுத்திருக்கும் போது, 82-வது விதியின்கீழ் அமைச்சர் ஸ்டேட்மென்ட் அதே சப்ஜெக்டில் படிப்பது நியாயமாகாது என்ற அடிப்படையிலே மறுநாள் வைத்துக் கொள்ளலாம் என்ற அளவிலே மறுநாள் காலிங் அடென்ஷனாக வந்திருக்கிறது. இதிலே எழுந்திருக்கின்ற பிரச்னை, இந்த வழக்கறிஞர் லட்சுமிநாராயணன் அவர்கள், அந்த வழக்கறிஞர்கள் சங்கத்தோடு கலந்து கொண்டு முடிவெடுத்தாரா? அவர்களுடைய சம்மதத்தைப் பெற்று முடிவெடுத்தாரா என்பது தெரியவில்லை. இப்போது இருக்கின்ற பிரச்னை, தொலைபேசியில் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

இதிலே, நான் ஜாக்கிரதையாக வழக்கறிஞருடன் ஓரளவு கலந்துகொண்டுதான் என்று கூறினேனே தவிர, அவர்களுடன் பேசி சம்மதம் வாங்கியிருக்கிறேன் என்றுகூட குறிப்பிடவில்லை. ஆகவே, இதிலே என்ன நடந்தது என்கிற 'பாக்டிலே' 'டிஸ்பியூட்' ஆகியிருக்கிறது. உண்மையிலேயே டிஸ்பியூட் இருக்கின்ற காரணத்தினால், இதில் வேண்டுமென்றே அவைக்கு திருத்தி தவறானத் தகவலைத் தரவேண்டுமென்று இந்த அரசு கருதவில்லை.

There is neither gross nor wilful misrepresentation of fact.

அதோடு மட்டுமல்ல, வேண்டுமென்றே இது ஏற்படவில்லை. நடந்த அடிப்படையிலேதான் அறிவிப்புகள் வந்தது. ஆனால், அரசாங்கம் அத்தகைய அறிவிப்பைத் தருவதற்கு வழக்கறிஞர் களின் சங்கத்தின் சம்மதத்தைப் பெற வேண்டுமென்ற கட்டாயம் கிடையாது. என்றாலும் ஓரளவு அவர்களுடைய எண்ணத்தைப் புரிந்து, தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அடிப்படையிலே, நல்ல எண்ணத்தோடு இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, முதலிலே இப்படித் தகவலைத் தந்துவிட்டு அதற்குப் பின்னாலே வழக்குரைஞர்கள் சங்கத்திலே இருந்து நாங்கள் இதை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற வகையில் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இதுதான் உண்மை நிலையே தவிர, சட்ட சபைக்குத் தவறான தகவலைக் கொடுக்கவேண்டும், மன்ற உறுப்பினர்களுக்கு தவறான எண்ணத்தைக் கொடுக்க வேண்டும் என்று நிச்சயமாக நானோ, இந்த அரசோ கருதவில்லை என்ற காரணத்தால் இதிலே ஒன்றும் உரிமைப் பிரச்சினை இல்லையென்பதைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. க. சுப்பு : ஒரு கிளாரிபிகேஷன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது கொஞ்சம் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். லட்சுமிநாராயணன் என்ற வழக்கறிஞர் தொடர்பு கொண்டதாகச் சொன்னார்கள். முறைப்படியான பார் கவுன்சில் இருக்கிறது. சேர்மன், செக்ரடரி இருக்கிறார்கள். ரெப்ரசண்டேட்-

டிவ்ஸ் இருக்கிறார்கள். அவர்களை அணுகாமல் முதலமைச்சரை அணுகவதற்குப் பதிலாக முசிறிப்புத்தனை அணுகிப் பேசினால் போதும் என்று சொன்னால் எப்படியோ. .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினையைப் பற்றி மட்டும் கேளுங்கள்.

திரு. க. சுப்பு : பார் கவுன்சில் சேர்மன், செக்ரடரி, பார் கவுன்சில் ராஜையா ஸ்டேட்மென்ட் என்ன என்று. . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; ஏற்கெனவே விளக்கமாகச் சொல்லியாகிவிட்டது. வேறு ஏதாவது இருந்தால் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. க. சுப்பு : அந்த அசோசியேஷன் ரெப்சரன்டேட்டிவ்ஸை, தலைவர்களை அணுகவில்லை. தொழிற் சங்கங்களை, என்.ஜி.ஓ. சங்கங்களை ஸ்ப்ளிட் பண்ணுவது போன்ற வேலையை இதிலும் ஆரம்பித்து விட்டதாகச் தெரிகிறது.

*மாண்புமிகு திரு. எம். ஜி. இராமசந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு சுப்பு அவர்கள் முதலமைச்சரை அணுக முசிறிப்புத்தனை அணுகுவதா என்று சொன்னார்கள். அவர்களுடைய தகுதிக்கேற்ப யாரிடத்தில் தொடர்பு கொண்டால் சரியாக இருக்குமோ அதற்கேற்ப அவர்கள் அந்தப் பணியை ஏற்றுக்கொள்வதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை.

ஆனால் ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்பிகிறேன். இதுபோன்ற பிரச்சினைகள் பொதுவாக ஏற்படும்போது வழக்கு மன்றத்திற்குப் போக வேண்டிய வழக்குகளை வழக்கு மன்றத்திற்கு அனுப்புவதுதான் வழக்கம். இதிலே வழக்குரைஞர் என்ற நிலைமை ஏற்பட்டு விட்டதாலும், நான் மதுரைக்குச் சென்ற போது வழக்கறிஞர்கள் என்னிடம் வந்து தெரிவித்ததாலும், வழக்கறிஞர் யார் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறதோ அவரே தான் தாக்கியதாக நேரில் என்னிடம் ஒப்புக்கொண்டதாலும் இது விசேஷ முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை ஆகிவிட்டிருக்கிறது. இதைச் சுமுகமாகத் தீர்க்கவேண்டுமென்ற எண்ணத்தோடு உடனடியாக இதிலே சம்பந்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட்ட அதிகாரிகளை அங்கிருந்து வேறு இடங்களுக்கு மாற்ற உத்தரவிட்டேன்.

அதற்குப் பிறகு சென்னைக்கு வந்த பின்பு நிலைமை வேறு விதமாக மாறுகிறது என்று தெரிந்தபோது நான் தனிச் செயலாளரிடம் சொல்லி யாரிடத்தில் தொடர்பு வைத்துக்கொள்ள



வேண்டுமென்பது பற்றிச் சொல்லும்போது தன்னைச் செயலாளர் என்று கூறிக்கொண்டு லட்சுமிநாராயணன் என்ற வழக்கறிஞர் தொடர்பு கொண்டு பேசினார்.

நேற்றையதினம் என்னை வந்து சந்திக்கும்போது அவர் தன்னைப் பற்றிக் குறிப்பிடும்போது செயலாளர் என்று குறிப்பிட்டுக் கொண்டார். இதிலே, தலைவர், சேர்மன், பிரசிடென்ட் என்றெல்லாம் சொல்லிக்கொண்டு நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. வழக்கை எப்படி நடத்த வேண்டுமென்று அரசு விரும்புகிறதோ அந்த நியாய உணர்வுப்படி நடத்த வேண்டுமென்பது இந்த அரசின் நோக்கமாகும். எந்த வகையில் இந்த வழக்கை எப்படி நடத்த வேண்டுமென்று இனிமேல் நாங்கள் சரியான பாதையை சட்டப்படி பின்பற்றவேண்டுமோ அதற்கேற்ப அந்த வழியில் இந்த வழக்கை நாங்கள் நிச்சயமாக வழக்கு மன்றத்தில் எடுத்துக் கொள்வோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

ஆகவே, மீண்டும் இன்னொரு முறை கூறுகிறேன். ஒன்று மாண்புமிகு ராமச்சந்திரன் அவர்கள் இங்கே சொல்லிய கருத்து ஒரு முடிவான கருத்து அல்ல. பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது என்ற அடிப்படையில்தான் சொல்லியிருக்கிறார்கள். என்பதைப் படித்துக் காட்டியதிலிருந்து தெரிந்திருப்பார்கள். நேரில் பேசும்போது வேறு பிரச்னை உருவாகியிருக்கிறது. இன்று காலையில் கூட வழக்கறிஞர்களில் பிரபலமடைந்த ஒருவர் வானமாமலை என்பவர் வந்து பேசினார். உத்தரவாதம் என்று எடுத்துக் கொள்ளமுடியாது, அது அதிகாரபூர்வமான பேச்சல்ல. எப்படி சுமுகமாகத் தீர்க்கலாம் என்ற யோசனை பேசப்பட்டது. இந்தப் பிரச்சினையில் நாங்கள் எந்த வழியில் சுமுகமாகத் தீர்க்க வேண்டுமென்று, விரும்புகிறபோது, அப்படி விரும்புகிறோம் என்று சொல்லுகிறபோது ஏமாற்றுவதற்காகவோ, திசை திருப்புவதற்காகவோ சொல்லுகிற கருத்து என்று எடுத்துக் கொள்வது என்ற முடிவுக்கு இந்த அவை வருமானால் நான் பணிவோடு சொல்லுகிறேன்—இந்தப் பிரச்சினையில் எல்லாம் சட்டப்படி நடக்கும், அதுபோல் செய்வோம் என்று சொல்லுகிற அளவுக்கு எங்களைக் கட்டாயத்திற்குத் தள்ளிவிட்டீர்கள் என்று சொல்வதைத் தவிர வேறு வழி இல்லை என்பதை வருத்தத்தோடும் பணிவோடும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11–30]

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு வழக்கறிஞர்கள் சார்பாக நேற்று அவர்கள்

முதலமைச்சரைச் சந்தித்து இருக்கிறார்கள். பத்திரிகைகளிலே வந்திருக்கிற செய்திப்படி முதலமைச்சர் 1 மணிக்குள் சொல்லி விடுவார்கள் என்று போடப்பட்டிருக்கிறது, இப்போதே 11 மணி ஆகிறது, ஆகவே முதலமைச்சரின் முடிவு என்ன ? அந்த முடிவை நானும் தெரிந்து கொள்ளலாமா. இந்தப் பிரச்சினையை இன்றோடு முடிக்கக்கூடிய முறையிலே முதலமைச்சர் அதைக் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு மணிக்குள் சொல்வதாக அவர்களுக்குத் தான் சொல்லப்பட்டதே தவிர, இந்த அவையிலே சொல்வதாக உத்திரவாதம் தரப்படவில்லை என்று கருதுகிறேன். பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது, முடிவை இப்போது சொல்லமுடியாது என்பதையும், அதைச் சொல்வதாக இங்கே நான் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளமுடியாது என்பதையும் இந்த அரசு எப்படி நியாயமாக சட்டப்பூர்வமாக அதைச் சந்திக்கமுடியுமோ அந்த வகையில் சந்தித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய தீர்ப்பைத் திங்கட்கிழமை அறிவிக்கிறேன்.

## (4). ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### என். எம். ஆர். தொழிலாளர்கள் உண்ணாவிரதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறை, கூவம் பக்கிங்காம் கால்வாய், அண்ணா சதுக்கம், கோட்டைப் பூங்கா, மெரினா, மணல் சுத்திகரிப்பு ஆகிய பிரிவுகளில் 5 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் என்.எம்.ஆர். தொழிலாளர்கள் வேலையை நிர்ணயம் செய்யக் கோரி 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் நாள் முதல் உண்ணாவிரதம் தொடர்ந்து இருந்து வரும் பொது முக்கிய விஷயத்தைக் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டு திருவாளர்கள் ஏ. ஆர். மாரிமுத்து, எஸ். சிவசாமி, பொ. உத்திராபதி, நா. சுந்தரராஜ், பொ. விஜயராகவன், புஷ்பராஜ், அ. நடராசன் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.





இது எப்படி அவசர முக்கியத்துவமானது என்பதைக் குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, அரசுத் துறையிலே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தினக்கூலிகளாக வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள், என்பதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு உறுப்பினர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படிப் பல ஆண்டுகளாக தினக்கூலிகளாக வேலை செய்து வருகிறவர்களை நிரந்தரமாக்கவேண்டுமென்ற கொள்கையை அரசு அறிவிக்கவேண்டும்மென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையிலே பொதுப்பணித் துறையைச் சேர்ந்த 8 ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள், அவர்களிலே 5 ஆண்டுகளுக்கு மேலாக வேலை செய்யக் கூடியவர்கள் 1,500 பேர்கள் இருக்கிறார்கள், அண்ணா சமாதி பிரிவு, கூவம் நதி பராமரிப்பு கோட்டை தோட்டப் பிரிவு, மெரினா தோட்டப் பிரிவு, ஆகிய இடங்களிலே வேலைசெய்கிற தொழிலாளர்கள் எல்லாம் இன்றைய தினம் வேலையை நிரந்தரமாக்க வேண்டுமென்று கோரி உண்ணாவிரதம் இருக்கிறார்கள், கடந்த 5 ஆம் தேதியிலிருந்து உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் கோரிக்கைகளைப்பற்றி எடுத்துக் சொல்லி பல தடவைகள் கேட்டும் அரசு கவனிக்கவில்லை என்பதால் அவர்களை நிரந்தரமாக்கவேண்டுமென்ற கோரிக்கையையும் மற்ற கோரிக்கைகளையும் வலியுறுத்தி உண்ணாவிரதம் ஆரம்பித்து இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை கருத்திலே கொண்டு அவைகளை ஏற்றுகாள்ளவேண்டுமென்ற முறையிலே, அதைப்பற்றி இந்த அவையிலே விவாதித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, கடந்த பத்து ஆண்டுகளாகவே இந்த தினக்கூலிகள் பற்றி எந்தவிதமான முடிவையும் அரசு எடுக்காமல் அவர்களை நிரந்தரமாக்காமல் தாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்களைப் பொறுத்தவரையிலே அரசு என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம், எப்படி வேண்டுமானாலும் வெளியேற்றலாம் என்ற நிலைமை இருக்கிறது. அவர்கள் வாழ்க்கைக்கு உத்திரவாதம் செய்கின்ற முறையிலே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, கடந்த 5 ஆம் தேதியிலிருந்து பொதுப்பணித் துறையில் இருக்கிற தினசரி கூலியாட்கள் உண்ணாவிரதம் இருந்துகொண்டு தங்களுடை

கோரிக்கைகளை வலியுறுத்திக்கொண்டு இருக்கிறார்கள். ஏறத்தாழ 8 ஆயிரம் பேர்கள் இப்படி இருப்பதாகவும் அவர்களிலே 1,500 பேர்கள் 5 ஆண்டுக்கு மேலாக அப்படியே இருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். 5 ஆம் தேதியிலிருந்து உண்ணாவிரதம் இருந்தும், அரசு அவர்களைப்பற்றி சிரத்தை காட்டாமல் அவர்களை அழைத்துப் பேசி முடிவு எடுக்காமல் இருந்து வருவது வேதனைக்குரியது. இதுபோன்ற நிலைமையிலே நிரந்தரப்படுத்தாது காலதாமதப் படுத்திக்கொண்டேபோவது என்று அரசாங்கம் நினைத்தால் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது கூட அரிதாகிவிடும்.

ஆகவே, இது குறித்து விளக்கமாகவும் விரிவாகவும் இந்த அவையிலே விவாதிதது அந்தப் பிரச்னைகளுக்கு முடிவு கட்டுகின்ற வகையில் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. ஆ. நடராசன் :</u> பேரவைத் தலைவரவர்களே, இன்றைய தினம் என். எம். ஆர். தொழிலாளர்கள் உண்ணா நோன்பு ஆரம்பித்து ஏறக்குறைய 12 தினங்கள் ஆகின்றன. அரசாங்கம் இந்த 12 தினங்களாக எந்த விதமான நடவடிக்கையையும் எடுக்காத நிலையிலே இருந்து வருகிறது. அதுமட்டுமல்ல, இன்றைய தினம் நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் என்று வேலைவாய்ப்பு இல்லாதவர்களுக்கு உறுதியான திட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டு வரும் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் வேலையிலே இருக்கின்றவர்கள் நிரந்தரமாக இருக்கும் நிலையில்லாமல் அத்துக் கூலிகளாக இருக்கின்ற பரிதாபகரமான நிலை கூவம் நதித் திட்டத்தில் மட்டுமல்ல, கூவம், பக்கிங்காம் திட்டத்திலேயும், அண்ணா பூங்கா, கோட்டைப் பூங்கா தொழிலாளர்கள் மட்டுமல்ல, தமிழகத்திலே 8,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த பொழுது இந்தத் தொழிலாளர்கள் நிரந்தரம் செய்ய உத்தரவைப் பிறப்பித்து சிலரை நிரந்தரம் செய்தார்கள்.

இந்த அரசாங்கம் கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக நிரந்தரம் செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கையை கவனிக்காத காரணத்தினால் இன்றைய தினம் அவர்கள் போராட்டத்திலே ஈடுபடுகின்ற வாய்ப்பினை ஏற்படுத்துகின்ற நிலைமையிருக்கிறது. 1977-ஆம் ஆண்டு பொங்கல் பரிசாக, அன்றைய தினம் அவசர யாலத்தில் ஆளுநராக இருந்த சுகாதியா அவர்களே நிரந்தரம் செய்யப்படும் என்று அறிவித்தார்கள். இன்னும் அந்த வாக்



குறுதி நிறைவேற்றப்படவில்லை என்பதோடு, நீலகிரி மாவட்டம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொழுது அங்கே பணியாற்றிய என்.எம்.ஆர். தொழிலாளர்களை. . . . . . . . . . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மற்ற உறுப்பினர்கள் எவவளவு சுருக்கமாக பேசினார்கள். விரைவில் முடித்துக் கொள்ளுங்கள்.

<u>திரு. ஆ. நடராசன் :</u> எனவே, அவர்களுக்கும் கூடுதல் ஊதியத்தைத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டு, அவையின் இதர அலுவல்களையெல்லாம் ஒத்தி வைத்து இந்தப் பிரச்னையை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. எம். வின்சென்ட்</u> (அமைச்சரின் பேரவைச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்.எம்.ஆர். பணியாட்கள் அவசர வேலைகளுக்காக குறுகிய காலத்திற்கு தினக் கூலியில் அமர்த்தப் படுகிறார்கள். எந்த வேலைகளுக்காக அமர்த்தப்பட்டார்களோ, அந்த வேலைகள் முடிவுற்றபின் பணியாட்களை பணியிலிருந்து நிறுத்தப்படுகிறார்கள். நடைமுறையில், அதிலும் குறப்பாக பாசனத் திட்டங்களில் பெரும்பாலான பணியாட்கள் பத்து ஆண்டுகளுக்கு மேலாக பணியில் தொடர்ந்து அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

என்.எம்.ஆர். பணியாட்களின் பணியினை மாநில சேவையாக்குவது குறித்து அரசு ஆய்வு செய்து 1-4-1975-ம் தேதியன்று பத்து ஆண்டுகளுக்கு மேலாக பணியில் உள்ள என்.எம்.ஆர். பணியாளர்களை 1--10--76 முதல் சம்பள ஏற்ற முறை, மற்றும் இதர பலன்களுடன், மாநில சேவையாக்கப்பட்டு மாநில சேவையாக்கப்பட்ட வேலை நிதி அமைப்பின்கீழ் கொண்டு வருவதற்கு 14--7--76 நாளிட்ட 1035-ம் எண் பொதுப் பணித் துறை ஆணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி ஏற்கெனவே 303 என்.எம்.ஆர். பணியாட்களை மாநில சேவையாக்கப்பட்டவேலை நிதி ஊழியர்களாக நிரந்தரம் செய்யப்பட்டு மற்றைய மாநில சேவையாக்கப்பட்ட ஊழியர்கள் பெற்று வருகிற சலுகைகள் அனைத்தும் அவர்களும் பெறத்தக்க முறையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கூவம் மற்றும் பக்கிங்காம் கால்வாய்கள் பிரிவினை பொருத்தமட்டில் இங்குள்ள என்.எம்.ஆர். கள் அனைவரும் நான்கிலிருந்து ஏழாண்டுகள் வரை தொடர்ந்து பணியாற்றியவர்களாக இருக்கின்றனர். இவர்கள் அனைவரையும் பணி நிரந்தரப்படுத்தி அனைத்து பணி சலுகைகளையும் தங்களுக்கு வழங்குமாறு கோரியுள்ளனர். ஆனால் இப்பிரிவில் ஏற்கெனவே தேவைக்கு அதிகமான என்.எம். ஆர். கள் இருப்பதாலும், மாநில சேவையாக்கப்பட்ட

பணிக்குக் கொண்டுவர இவர்களுக்குத் தகுதியில்லாததாலும், இவர்களில் பலரை பணியிலிருந்து நிறுத்தாமல் வேறு பணிகளுக்கு முடிந்த அளவில் பயன் படுத்துவது என்று அரசு கருதியது. குறிப்பாக ''இன்டெக்ரேடட் மெரினா காம்ப்ளெக்ஸ்'' திட்டத்தின் கீழ் பணியமர்த்தலாமென கருதியது. இதற்கு கட்டிட தலைமைப் பொறியாளர் அவர்கள் சென்னை பிரிவின்கீழ், ஏற்கனவே அதிகமான என்.எம்.ஆர். கள் இருப்பதால் இவர்களை பணியில் அமர்த்த இயலாது என தெரிவித்துள்ளார். ஆகவே, உபரியாகவுள்ள என்.எம். ஆர். பணியாளர்களை எங்கெங்கு தேவைப்படுகிறதோ அங்கங்கு அவர்களை பயன்படுத்திக் கொள்ளுமாறும், அதிலும் உபரியாக உள்ளவர்களை பணி நிறுத்தம் செய்யலாமென அரசு கருதியது. ஆனால் இது பற்றி பின்னர் முடிவு எடுக்கலாமென அரசு தீர்மானித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிதி அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 5. ஒழுங்குப் பிரச்சினை.

முருகையன் படுகொலை சம்பந்தமாக ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து கொடுக்கப் பெற்றுள்ள அறிவிப்பை எடுத்துக் கொள்வது குறித்து.

[முற்பகல் 11–40]

திரு. மு. அம்பிகாபதி : பாய்ன்ட் ஆப் ஆர்டர், ஒரு முக்கியமான விஷயம். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தோழர் எச். ஜி. முருகையன் அவர்களுடைய படுகொலை சம்பந்தமாக இப்போழுது எழுந்துள்ள பதட்ட நிலை சம்பந்தமாக உங்களுடையு கட்சியின் சார்பில் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். என்ன பதட்ட நிலை என்று சொன்னால்...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மன்னிக்க வேண்டும். சொல்லிவிட மாட்டேன். நீங்கள் என்ன ஆயிற்று என்று கேட்கலாம். அதற்கு அனுமதி தருவதற்கு முன்னாலே, நீங்கள் எழுந்து பேச ஆரம்பித்தால் எந்த விதியின்கீழ் அனுமதி கொடுப்பது ஏற்றுக் கொள்ளாதது ஏன் என்ற பிரச்னைகளையெல்லாம் என்னிடம் கேட்க வேண்டிய இடத்தில் கேட்டு அது அவசரம் என்று என்னிடத்தில் உணர்த்தி, கொண்டு வர முயற்சிப்பதுதான் உங்கள்





கடமையே தவிர, கொண்டு வராமல் இருக்கிற பிரச்னையைப்
பற்றி என்ன ஆயிற்று என்று கேட்பதோடு நிற்காமல், அதுபற்றிய
பிரச்சினைகளை விவாதித்தால் எந்த விதியின்கீழ் அனுமதிப்பது?

திரு. மு. அம்பிகாபதி : எங்கள் கட்சியினரைக் கைது செய்
கிறார்கள். 42-வது விதியின்கீழ் ஒரு எம்.பி. கொலை செய்யப்
பட்டதை பற்றி நான் அறிவிப்பு கொடுத்ததை அனுமதித்திருக்கி
றீர்களா? நெல் பயிர் போச்சு என்பதைப்பற்றி 41 வது விதியின்கீழ்
நீங்கள் அனுமதித்திருக்கிறீர்கள். இது எந்த வகையில் நியாயம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்னுடைய
அறையில் வந்து பேசினீர்கள். உங்களுடையதை மறுக்கவில்லை
நான் இன்னும்.

திரு. சோ. அழகர்சாமி : எங்கள் வட்டாரத்தில் பல பேர்
கைது செய்யப்படுகிறார்கள். 42-வது விதியின்கீழ் கொடுத்த
தற்கு நான் விளக்கம் கூறுகிறேன். சித்தமல்லியில் பலர் கைது
செய்யப்பட்டிருக்கிறார்கள். . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் அனுமதி தரப்
படவில்லை, எந்த விதியின்கீழ் சொல்ல முடியும்? (குறுக்கீடு) அது
எனக்குத் தெரியாது. நெல் அறுவடையைப் பற்றிய கால் அட்
டென்ஷனுக்கும் இதற்கும் சம்பந்தம் இருப்பதாக யூகித்துக்
கொள்ளச் சொல்கிறீர்கள். அது இன்னும் எனக்குத் தெரியாது
42-ன் கீழ் தாங்கள் கொடுத்தது ஏன் வரவில்லையென்று.
கேட்கலாமே தவிர, சித்தமல்லிக்கும் இதற்கும் இணைப்பு இருக்
கிறது என்று பேரவைத் தலைவருக்குத் தெரியாது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே,
ஏற்கெனவே 41-ல் ஒன்று வந்து அதை அனுமதித்து, அது இந்த
அவைக்குக் கொண்டு வர அனுமதித்திருக்கிறீர்கள். அதற்குப்
பிறகு, 42-வது விதியின்கீழ் வந்திருக்கிறது என்று நினைக்
கிறேன். 42-ஐப் பற்றி தாங்கள் தீர்ப்பு அளிக்க வில்லையா
என்பது எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 42-ன் கீழ் நீங்கள்
கொடுத்த அறிவிப்பின் தலைப்பும், பொருளும், வேறு. 41-ன் கீழ்
கொடுக்கப்பட்டிருக்கிற துரை கோவிந்தராஜனுடைய அறிவிப்பின்
தலைப்பும், விளக்கமும் வேறு. ஆனால், அதை அலசிப் பார்க்கும்
போது உங்களுக்குள் தெரிந்திருக்கலாம், அதனுடைய இணைப்பு
என்று. ஆனால், பேரவைத் தலைவருக்குத் தெரியாது. நெல்
அறுவடை பாதிப்பைப் பற்றி கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மா

னத்தை அனுமதித்தேனே தவிர, அதற்கும் இதற்கும் சம்பந்தம் உண்டு என்று பேரவைத் தலைவருக்குத் தெரியாது. ஆனால், உங்களுடைய பிரச்னைக்கு இன்னும் அனுமதி மறுக்கப்படவில்லை. அது ஆய்விலே இருக்கிறது. அதனை ஒட்டிய 41-ன் கீழ் கொடுக்கப்பட்டதற்கு பேரவைத் தலைவர் முதலிடம் தந்தார் என்று நினைக்கக்கூடாது. இரண்டுக்கும் இருக்கிற இணைப்பு எனக்குத் தெரியாது. எனக்குத் தெரியாத ஒன்றை, தெரியும் என்று நீங்களாகவே கற்பனை செய்யக் கூடாது.

திரு. மு. அம்பிகாபதி : நாங்கள் கொடுத்ததற்கு அனுமதி அளிப்பதைப் பரிசீலிக்கிறேன் என்று சொன்னீர்கள், நன்றி. எங்கள் கட்சியைப் சேர்ந்த 50 பேர்—முன்னால் எம்.எல்.ஏ., ஏ.கே. சுப்பையா உட்பட கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். போலிஸ் த்ரெட்டன் செய்கிறார்கள். பெண்கள் பயமுறுத்தப்படுகிறார்கள். சித்தமல்லியில் ஒரு பதட்டமான நிலை நிலவுகிறது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சவரர்கள் உத்தரவாதம் கொடுக்கும் வரையில் நாங்கள் உட்காரப் போவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிப்பட்ட பிரச்னை என்னுடைய கவனத்திற்கு வந்திருக்குமானால், நான், 41-ன் கீழும் கொண்டு வர அனுமதித்திருக்கவே மாட்டேன்.

திரு. சோ. அழகர்சாமி : இரண்டும் ஒரே பொருள் பற்றி இருக்கும்போது, 41-ன் கீழ் அனுமதித்திருக்கிறீர்கள். 42-ன் கீழ் இன்னும் எடுத்துக் கொள்ளவில்லை. பதட்ட நிலை நிலவும் போது. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அழகர்சாமி அவர்கள் அவைக்குத் தவறான தகவல் தரக் கூடாது. நான் சொல்வது, 42-ன் கீழ் கொடுக்கப்பட்டிருக்கிற தலைப்பும் பொருளும் வேறு. ஆனால், துரை கோவிந்தராஜன் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் தலைப்பும் பொருளும் வேறு. இரண்டும் இணைந்தது தான் என்று எனக்குத் தெரியாது. நான் கவன ஈர்ப்புத் தீர்மானம் என்ற அடிப்படையிலே அனுமதித்தேன். 42-லே தாங்கள் கொடுத்தது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. அதற்கும், இதற்கும் இணைப்பு இருக்கிறது என்று இப்பொழுது சொல்லி, அதை அனுமதித்தீர்கள், என்னுடையதை அனுமதிக்கவில்லையென்று தாங்கள் சொல்கிறீர்கள், அதை எப்படி அவைத் தலைவர் இணைப்பு இருக்கிறது என்று ஊகிக்க முடியும்?



திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே உங்களுடைய கவனத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வருகிறேன். ஒரு பாராளும் மன்ற உறுப்பினர் படுகொலை செய்ததற்காக 42 வது பிரிவின் கீழ் விவாதிப்பதற்கு நீங்கள் அனுமதி கொடுக்கவில்லை நெல் உளுத்துப் போய்விட்டது, வாழை இலை கிழிந்து விட்டது, தென்னங்கன்று வெட்டப்பட்டது என்பதற்கு நீங்கள் விவாதிக்க அனுமதி கொடுக்கிறீர்கள்— அவ்வளவுதான் சொல்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, கெரோசின் பற்றாக் குறையின் காரணமாக நாட்டில் பெரிய பதட்ட நிலை ஏற்படுகிறது என்றும் அது சம்பந்தமாக விவாதிக்க 42-ன் கீழ் திருத்தம் கொடுத்தேன், கொடுத்தது 4, 5 நாட்கள் ஆகி விட்டன. இன்னும் கொடுக்கவில்லை என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 41-வது விதியின் கீழ் அது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அது நாளை அல்லது மறு நாள் கழித்து வரும்.

## 6. அறிவிப்பு.

### மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு—தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப்பெற்றுள்ளது என்று மாண்புமிகு மேலவைத் தலைவர் இடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது :—

1. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். [illegible]/1979).

2. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 9/1979).

3. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 10/1979).

## 7. அரசினர் தீர்மானம்.

### விதி 41 (3)ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, " பேரவையின் 41 (3) வது விதியின்கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும் " என்று கோருகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, * * *

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர், உறுப்பினர் கொடுத்த அறிக்கையை படிக்கவில்லை, எதையோ பேசுகிறார், அப்படி பேசுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதா ? வேறு ஏதாவது உறுப்பினர்கள் இஷ்டம்போல் பேசலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானே அதை மணி அடித்து தடுக்க இருந்தேன். துரை கோவிந்தராசன் அவர்கள் தயவு செய்து கொடுத்திருக்கும் அறிக்கையை படிக்கவும். அவர் இதுவரையில் படித்ததை எல்லாம் குறிப்பேட்டில் இருந்து நீக்கி விட வேண்டும் என்று உத்தரவு இடுகிறேன். அவர் இனிமேல் புதிதாக படிக்க ஆரம்பிக்கட்டும்.

## 8. கவன ஈர்ப்புகள்.

### (அ) சித்தமல்லிப் பகுதியில் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, " தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி தாலூகா சித்தமல்லி பகுதியில் சுமார் 16 ஏக்கர் நிலத்தில் விளைந்த 300 மூட்டை நெல் கொள்ளையடிக்கப்பட்டும் வைக்கோல் போர்கள் [illegible] வைக்கப்பட்டும் தென்னை, வாழை உயிர்வேலி மற்றும் மூங்கில்கள் வெட்டி அழிக்கப்பட்டும் உள்ளதால் அப்பகுதி விவசாயிகளிடையே நிலவும் பதட்ட நிலை குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானத்தை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சித்தமல்லிப் பகுதி உள்ளூர் கம்யூனிஸ்ட் கட்சி (C. P. I.) தி.மு. கழக உறுப்பினர்கள் கோஷ்டியென்றும், திரு. ஷேக்தாவூத் மற்றும் அவரைச் சேர்ந்தவர்கள் கோஷ்டியென்றும் இரு கோஷ்டிகளுக்குமிடையே பகைமையுணர்வு இருந்து வந்தது. கம்யூனிஸ்ட் (C. P.I .) கட்சியின் அனுதாபியாக இருந்த திரு. ஷேக் தாவூத் என்பவர் ஓராண்டிற்கு முன்பு அக்கட்சியிலிருந்து தனது தொடர்பை அறுத்துக் கொண்டார். தி.மு. கழகமும், கம் கம்யூனிஸ்ட் கட்சியும் 23-10-1978-ம் நாளன்று ஏற்பாடு செய்த மாநிலம் தழுவிய " பந்தில் " திரு. ஷேக் தாவூத் தனது ஒத்துழைப்பை நல்கவில்லை. 6-1-1979 அன்று ஏற்பட்ட திரு. எஸ். ஜி. முருகையன், எம்.பி., அவர்களுடைய கொலை நிகழ்ச்சிக்குப் பின்னர் திரு. ஷேக்தாவூத் அவர்களுக்குச் சொந்தமான தென்னை, வாழைத் தோப்புகளை அழித்தல், அவருடைய நெல் களவாடப்படுதல் ஆகிய நிகழ்ச்சிகள், 22-1-1979-க்கும் 25-2-1979-க்கும் இடைப்பட்ட காலத்தில் அடிக்கடி நடைபெற ஆரம்பித்தன. வைக்கோல் போர் ஒன்றும் தீக்கு இரையாக்கப்பட்டிருக்கிறது. மொத்த சேத மதிப்பு ரூ. 10,000 வரை இருக்குமென மதிப்பிடப்படுகிறது. இது தொடர்பாக பெருகவழுத்தான் காவல் நிலையத்தில் கீழ்க்கண்ட ஒன்பது வழக்குகள் பதிவாகியுள்ளன.

| | | |
|---|---|---|
| குற்ற எண். 2/79 | .. .. | இ.பி.கோ. பிரிவு 379. |
| குற்ற எண். 8, 11, 14/79 | .. | இ.பி.கோ. பிரிவு 147, 447, 379. |
| குற்ற எண். 18/79 | .. .. | இ.பி.கோ. பிரிவு 435. |
| குற்ற எண். 20, 23/79 | .. | இ.பி.கோ. பிரிவு 147, 447, 379, 427. |
| குற்ற எண். 24/79 | .. .. | இ.பி.கோ. பிரிவு 379, 427. |
| குற்ற எண். 26/79 | .. .. | இ.பி.கோ. பிரிவு 147, 447, 379. |

திரு. ஷேக் தாவூத், சந்தேகத்தின் பேரில் குறிப்பிட்ட நபர்களை விசாரணை செய்யப்பட்டு ருசுவாகவில்லை. இந்நிகழ்ச்சிகள் இரவில் நடைபெற்றமையாலும், நேரடி சாட்சிகள் இல்லாமையாலும், இது வரை யாரும் கைது செய்யப்படவில்லை. இவ்வழக்குகள் புலன் விசாரணையில் இருக்கின்றது.

(முற்பகல் 11-50).

(ஆ) அம்பைத் தொகுதியில் காட்டுப் பன்றிகளைக் கொல்லும் விவசாயிகளை காட்டு இலாக்கா அதிகாரிகள் மிரட்டுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ஆர். கிருஷ்ணன், டி. ஞானசிகாமணி, பி. எச். பாண்டியன் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. தே. ஞானசிகாமணி : தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அம்பைத் தொகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலை ஓரங்களில் உள்ள நஞ்சை, புஞ்சை நிலங்களில் பயிர்களை அழித்து வரும் மலைப் பன்றிகளைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளைக் காட்டு இலாகா அதிகாரிகள் மிரட்டுவதால் எழுந்துள்ள பதட்டநிலை குறித்து" என்கிற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, என் பெயரும் சேர்க்கப்பட்டுள்ளதால் சேரன்மாதேவியையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் அம்பை தொகுதியில் உள்ள மேற்கு மலைத் தொடர் பகுதியில் காட்டுப் பன்றிகள் விவசாயப் பயிர்களுக்கு சேதம் விளைவிப்பது சில சமயங்களில் நடக்கக்கூடிய நிகழ்ச்சியாகும். 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம் அமுலுக்கு வந்த பின்பு மேற்படி சட்டத்தின் அட்டவணை III-ல் காட்டுப் பன்றிகள் சேர்க்கப்பட்டுள்ளதால் அவைகளை வரைமுறையின்றி கொல்வது அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால், 1975 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வனவிலங்கு பாதுகாப்பு விதிகள் 10 இன்கீழ் குறிப்பிட்டுள்ள உரிமக் கட்டணத்தை செலுத்தியபின், தலைமை கானுயிர் காப்பாளரிடமிருந்து முறையான உரிமம் பெற்றபின் காட்டுப் பன்றிகளைக் கொல்லலாம். இந்த விதிகளின்படி 1977–78-ல் முண்டந்துறை வனவிலங்கு காப்பாளர் 13 உரிமங்களை வழங்கியுள்ளார். அக்டோபர் மாதம் வரை நடப்பு ஆண்டில் வழங்கியுள்ள உரிமங்களின் எண்ணிக்கை 17 ஆகும்.





ஆகையால், காட்டுப்பன்றிகளைக் கொல்வதற்கான உரிமங்கள் தாராளமாக வழங்கப்பட்டுள்ளன. மேலும் பயிர்களை நாசப்படுத்தும் காட்டுப்பன்றிகளைச் சுட்டுக் கொல்ல விரும்பும் விவசாயிகளுக்குத் தேவையான அனுமதிகளை வழங்க சம்பந்தப்பட்ட வனவிலங்கு காப்பாளருக்கு, தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. சட்ட விதிகளின்படி அனுமதி பெறாமல், வேட்டையாட முயற்சிக்கும் நபர்களின் மீது, வனத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முற்பட்டிருக்கலாம். இந்த, சங்கடங்களைத் தவிர்க்க முறையாக விண்ணப்பித்து, காட்டுப் பன்றிகளைக் கொல்ல அனுமதிப் பெற்றுக் கொள்வதில் தடை ஒன்றும் இல்லை. எனவே, காட்டுப் பன்றிகளால் பயிர் நாசமடைவதைத் தடுக்க முயற்சிக்கும் விவசாயிகளை வனத்துறை அதிகாரிகள் மிரட்டுகிறார்கள் என்பதற்கு ஆதாரமில்லை. இதன் காரணமாக அம்பாசமுத்திரம் பகுதியில் விவசாயிகளிடையே பதட்ட நிலை ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது பதட்ட நிலை இல்லை என்று சொன்னார்கள். குறிப்பாக, சேரன்மாதேவி பகுதியில் எலுமிச்சம்பழத்தை வைத்துத்தான் பன்றிகளை விரட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். எல்லோராலும் துப்பாக்கி வாங்க முடியாது. ஆகவே, கல்வீச்சி விரட்டுவதற்கு அனுமதி அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, சட்டத்திலே சுட்டுக் கொல்வதற்குத்தான் அனுமதி வழங்கலாம் என்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் புதிய முறையைச் சொல்கிறார்கள். அவர்கள் முறையாக அரசுக்கு எழுதித் தருவார்களானால் உடனடியாக அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) புகுமுக வகுப்புகளுக்குஉரிய பாடங்கள் கல்லூரிகளில் முடிக்கப்பெறாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. மணிமாறன் அவர்கள் ஒரு அவசர பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டிலுள்ள பெரும்பான்மையான கல்லூரிகளில் இன்னும் புதுமுக வகுப்புகளுக்கு உரிய பாடங்களை முடிக்கப் பெறாமல் இருக்கும்போது தேர்விற்காக மாணவர்களுக்கு படிப்பு

விடுப்பு கொடுக்கப்பட்டதை குறித்து'' ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் உள்ள பெரும்பான்மையான கல்லூரிகளில் இன்னமும் புகுமுக வகுப்புக்களுக்குரிய பாடங்கள் முடிக்கப் பெறாமல் இருக்கும்பொழுது தேர்விற்காக மாணவர்களுக்குப் படிப்பு விடுப்பு கொடுக்கப்பட்டதைக் குறித்து சட்ட மன்ற உறுப்பினர் திரு. நன்னிலம் மணிமாறன் அவர்கள் இக்கவன ஈர்ப்பு பிரேரணையைக் கொணர்ந்துள்ளார்.

2. இங்ஙனம் பாடப் பகுதிகள் முடிக்கப்பெறாமல் இருக்கும் பொழுது, தேர்விற்கான விடுப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்று உறுப்பினர் அவர்கள் பொதுவாகக் குறிப்பிட்டுள்ளாரேயன்றி குறிப்பிட்ட கல்லூரியை உறுப்பினர் சுட்டிக் காட்டவில்லை. எனினும் இது குறித்துக் கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்து ஆய்ந்தறியப் பட்டதில் பொதுவாக கல்லூரிகளில் தேர்வுகளுக்கு ஓரிரு வாரங்களுக்கு முன்னரே, படிப்பு விடுப்பு வழங்கப் பெறும், பாடங்கள் முழுதும் முடிக்கப்பட்ட நிலையில் தான் படிப்பு விடுப்பு வழங்கப்படுமென்றும், இத்தகைய படிப்பு விடுப்புக்கு அரசின் அனுமதியோ இயக்குநரின் அனுமதியோ தேவையில்லை என்றும் அந்தந்த கல்லூரி முதல்வர்களே வழங்கலாம் என்றும் இயக்குநர் கருத்துத் தெரிவித்துள்ளார். அல்லாமலும் இத்தகைய விடுப்பு அனைத்துக் கல்லூரிகளிலும் ஒரே சமயத்தில் விடப்படுவதில்லை என்றும், படிப்பு விடுப்பு வழங்கிய கல்லூரிகளில் பாடங்கள் முடிக்கப்பெறப்பட்டிருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சரின் செயலருக்கு நன்றாகத் தெரியும். தமிழ் நாட்டில் கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் நடைபெற்றபோது பல பேராசிரியர்கள் கைது செய்யப்பட்டார்கள். அதனால் கல்லூரிகளில் பாடங்கள் சரியாக நடத்தப்படவில்லை. இந்தத் தீர்மானம் அந்த நேரத்தில் என்னால் கொடுக்கப்பட்டது. பல நாட்கள் ஆகிவிட்டபடியால், இப்போது நிலைமை மாறியிருந்தால் அதற்கு நான் குற்றவாளி அல்ல. எந்தக் கல்லூரியிலாவது பாடங்கள் இன்னும் முடிக்கப்படாமல் இருந்தால், அதை தொடர்ந்து நடத்த அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





திரு. ஆ. வெள்ளைச்சாமி : (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவரவர்களே, பொதுவாக கல்லூரிகளில படிப்பு விடுப்பு விடுகிறார்கள் என்றால் பாடங்கள் எல்லாம் முடிந்த பின்னால்தான் விடுவார்கள். அப்படி பாடங்கள் முடிய வில்லை என்றால், விடுப்பு விட்டிருந்தாலும் 'ஸ்பெஷல வகுப்பு' வைத்து பாடங்களை முடிக்கும் முறை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) அரிசன மாணவர்களுக்கு உதவித் தொகை கிடைக்காதது குறித்து :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திருவாளர்கள் அ. செல்லப்பா, தாழை மு. கருணாநிதி, மா. மணிமாறன், வ. துலுக்காணம், கே. பண்ணை சேதுராம் ஆகியோர் மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் கொண்டு வருவார்கள்.

திரு. அ. செல்லப்பா : தலைவரவர்களே, ''சென்னை, தஞ்சை போன்ற மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளில் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் அரிசன மாணவர்களுக்கு உதவித் தொகை கிடைக்காதது பற்றியும், மாணவர்கள் தேர்வு எழுத முடியாத நிலை குறித்தும்'' ஆன அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே,

இந்த அரசு பதவி ஏற்றவுடன் 1977 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 8 ஆம் நாள் மருத்துவம் பொறியியல் கல்லூரிகள் உட்பட சென்னையில் உள்ள அனைத்துக் கல்லூரி முதல்வர்களையும் அழைத்து படிப்புதவித் தொகை விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்தல், படிப்புதவித்தொகை வழங்குதல் அனைத்தும் ஒரு மாத காலத்துக்குள் முடிக்கப்பட்டு எப்பகுதியிலிருந்தும் புகார் வராமல் பார்த்துக் கொள்ளுமாறு அரிசன நல அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

2. பழங்குடியினர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் அதிலிருந்து மதம் மாறிய வகுப்பைச் சார்ந்த தகுதியுடைய மாணவர்களுக்கு இந்திய அரசு மற்றும் மாநில அரசு படிப்புதவித்

தொகை விதிமுறைகளின் கீழ் தங்கிப் பயிலுவதற்கென படிப்புதவித்தொகை வழங்கப்படுகின்றது. விண்ணப்பம் பெற்ற தேதியிலிருந்து கூடுமானவரை 45 நாட்களுக்குள் விண்ணப்பங்கள் ஒப்பளிக்கப்பட்டு காசோலைகள் அனுப்பப்படுகின்றன.

3. சென்னை நகரில் மெட்ரிக் படிப்புக்கு மேற்பட்ட படிப்பு பயிலும் மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | இந்திய அரசு படிப்புதவித் தொகை. | மாநில அரசு படிப்புதவித் தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. பெறப்பட்ட விண்ணப்பங்கள் | 3,138 | 655 |
| 2. ஒப்பளிக்கப்பட்ட விண்ணப்பங்கள் .. .. | 2,447 | 477 |
| 3. குறைபாடுகளை நிவர்த்தி செய்ய திருப்பி அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் .. | 207 | 128 |
| 4. தள்ளுபடி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் .. .. | 67 | 30 |
| 5. நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் .. .. | 417 | 20 |

நிலுவையில் உள்ள 417 இந்திய அரசு படிப்புதவித் தொகை விண்ணப்பங்களில், 394 விண்ணப்பங்கள், அரிசனம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பிற்பட்டோர் நலத்துறை ஆகியவற்றின் கீழ் சென்னை நகரில் கல்லூரி மாணவர்களுக்கென நடத்தப்படும் அரசு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்கள் சம்பந்தப்பட்டதாகும். வழக்கமான நடைமுறைப்படி இந்திய அரசு படிப்புதவித் தொகை பெறத் தகுதியுடைய மாணவர்களைப் பணம் செலுத்தி உணவு கொள்பவராகக் கருதி விடுதிக்கு அவர்களிடமிருந்து உணவுக் கட்டணம் பிடித்தம் செய்யப்படுகிறது. 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் தேதியிலிருந்து சென்னை நகரில் உள்ள கல்லூரி மாணவர்களுக்காக நடத்தப்படும் அரசு விடுதிகளில் உணவுக் கட்டணம் மாதம் ரூ. 65 லிருந்து ரூ. 80 ஆக உயர்த்தப்பட்டது. ஆனால் இந்திய அரசு படிப்புதவித் தொகை விதிமுறைகளின் கீழ் வழங்கப்படும் பராமரிப்புப்படி ரூ. 70 மட்டும்தான். அதன் காரணமாக, மாதம் ரூ. 80 விகிதத்தில் பிடித்தம் செய்யப்படுவதற்கு பதிலாக அத்தொகையை மாதம் ரூ. 65 அல்லது ரூ. 70 ஆகக் குறைத்துப்





பிடித்தம் செய்து எஞ்சியுள்ள நிகரத் தொகையைக் கணக்கிட்டு காசோலையாக மேற்கண்ட மாணவர்களுக்கு வழங்கலாம் என அரிசனம் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரிடமிருந்து செயற்குறிப்பு வரப்பெற்று அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும். இதன் மூலம் மேலே சொல்லப்பட்ட 394 விண்ணப்பங்களுக்குத் தீர்வு காணப்படும்.

4. சென்னை நகரில் உயர் இடைநிலைக் கல்வியில் முதலாண்டு பயிலும் மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள், எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | இந்திய அரசு படிப்புதவித் தொகை. | மாநில அரசு படிப்புதவித் தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. பெறப்பட்ட விண்ணப்பங்கள் | 314 | 74 |
| 2. ஒப்பளிக்கப்பட்ட விண்ணப்பங்கள் .. .. | இன்னும் முடிவு செய்யப்படவில்லை. | இன்னும் முடிவு செய்யப்படவில்லை. |
| 3. குறைகளை நிவர்த்தி செய்ய திருப்பி அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் .. | 150 | 40 |
| 4. தள்ளுபடி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் .. | 3 | 3 |
| 5. எஞ்சியுள்ளவை .. .. | 161 | 31 |

தஞ்சாவூர் மாவட்டத்தில் மெட்ரிக் படிப்புக்கு மேற்பட்ட படிப்பு பயிலும் மாணவர்களிடமிருந்து இந்திய அரசுப் படிப்புதவித் தொகைக்காக 2,459 விண்ணப்பங்களும், மாநில அரசு படிப்புதவித் தொகைக்காக 558 விண்ணப்பங்களும் பெறப்பட்டன. இரண்டு தவணைகளுக்காக காசோலைகளும் அனுப்பப்பட்டு விட்டன எனவும் விண்ணப்பங்கள் நிலுவையில் இல்லை எனவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். உயர் இடைநிலைக் கல்வி பயிலும் மாணவர்களிடமிருந்து இதுவரை 633 விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன எனவும் மாவட்ட ஆட்சித் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

5. இவ்வாண்டு முதல் புதிதாகத் துவக்கப்பட்டுள்ள உயர் இடைநிலைக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்க்கு இந்திய அரசு படிப்புதவித் தொகை விதிகளின் கீழ்ப் படிப்புதவித் தொகை புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு வழங்கும் விகிதத்தில் வழங்க இந்திய அரசிடமிருந்து கோரப்பட்ட இசைவு அண்மையில்தான் கிடைக்கப்பெற்றது. இது பரிசீலனையில் உள்ளது. விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும். இவ்வாண்டு முதல் இந்த உயர் இடை நிலைக் கல்வி காரணமாக சில விண்ணப்பங்கள் தாமத மாகி இருக்கின்றன என்பதை உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

(நண்பகல் 12-00)

திரு. அ. செல்லப்பா: பேரவைத் தலைவரவர்களே, தற் போது பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவர்கள் அதாவது தாழ்த் தப்பட்ட மாணவர்கள் உதவித் தொகை பெறாத காரணத்தால் அவர்கள் தாங்கள் கட்டவேண்டிய கட்டணத்தைக் கட்ட இயல வில்லை. அதனால் அவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவ தில்லை. மேலும் அவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்ற காரணத்தால் விரைவாக அவர்களுக்கு, உதவி வழங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர் களே, உதவித் தொகையை விரைவாக வழங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யும். அதோடு, மாணவர்கள் விடுதியிலிருந்து வெளியேற்றப்படாமல் இருப்பதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன்: தலைவரவர்களே, இந்தப் புரட்சிகரமான அரசு ஏற்பட்டதற்குப் பின்னால் இப்போது இந்த ஸ்காலர்ஷிப் வழங்குவதிலேயும் புரட்சிகரமான காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இன்றைய தினம் ஸ்காலர்ஷிப் கிடைக்காத மாணவர்கள் தேர்வு எழுத முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை மிக வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, மேல் நிலைப்பள்ளி ஏற்பட்ட தற்குப் பிறகும் இன்றுவரை அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்க வில்லை. இதற்குக் காரணம் கேட்டால் நிதித்துறை ஒப்புதல் தரவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே அந்த மாதிரி எல்லாம் சொல்லாமல் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவித் தொகை கொடுக்க அரசு முன்வரவேண்டும் என்றுகேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர் களே, உபகாரச் சம்பளத்தை இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு உயர்த்தவில்லை. விடுதியின் கட்டணத்தைத்தான் உயர்த்தி



இருக்கிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை இந்த அவைக்குத் தருகிறார்கள். இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு மாணவர்களுக்கு உபகாரச் சம்பளத்தை அதிகமாக வழங்கவேண்டும் என்பதற் காகத்தான் எல்லாக் கல்லூரி முதல்வர்களையும் அழைத்துப் பேசி அவர்கள் விண்ணப்பங்களை ஒரு மாதத்திற்குள் அனுப்ப வேண்டும் என்று இந்தத் துறையைப் பொறுத்த வரையி லும் துரிதமாக நடவடிக்கை எடுத்து மாணவர்களுக்குச் சேர வேண்டிய உபகாரச் சம்பளத்தை விரைவில் தர வேண்டும் என்று ஆணையிடப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது இருக் கின்ற பிரச்சினை மேல்நிலைக் கல்வியில் மாற்றம் ஏற்பட்ட காரணத்தால் மத்திய அரசு தருகின்ற உதவித் தொகையை மீண்டும் இந்த அரசு பெற்றாக வேண்டியிருக்கிறது. அதற் காகத்தான் மாநில அரசு எழுதிக் கேட்டபோது அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். அதுதான் பரிசீலனையில் இருக்கிறது. உபகாரச் சம்பளத்தை அதிகமாக வழங்குவது என்பது தவறு.

திரு. வ. துலுக்காணம்: தலைவரவர்களே, மத்திய அரசு தரவேண்டிய தொகை தரப்படவில்லை என்று தெரிகிறது.. அதிலேயும் குறிப்பாக அரிசன மாணவர்களுக்குரிய தொகை வழங்கப்படுவதில்லை என்று தெரிகிறது. ஆகவே அந்த குறிப்பிட்ட தொகையை மாநில அரசே வழங்கி அவர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இப்படிப்பட்ட வேறுபாடுள்ள கட்டணத்தை சரிக்கட்டுவதற்கு மாநில அரசு அவ்வப்போது நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தின் பல இடங்களில் உள்ள தனியார்கள், அதாவது சிறுபான்மையோர் நடத்தும் உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயில்கின்ற மாணவர்களுக்கு அவர்கள் விடுதி களில் தங்கிப் படிப்பதற்காகக் கொடுக்கப்படும் உதவிக் கட்ட ணத்தை வழங்காத காரணத்தால், அவர்கள் தங்கிப் படிக்க முடியாத நிலை ஏற்பட்டு அதன் காரணமாக தேர்வும் எழுத முடியாத சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. எனவே இந்த அரசு, ஜூன், ஜூலை மாதங்களிலே பள்ளிகள் ஆரம்பிப்பதற்கு முன்பே டிசம்பர் 31 ஆம் தேதிக்குள்ளாகவே அந்தத் தொகை மாணவர்களுக்குக் கிடைப்பதற்கான ஆணையைப் பிறப்பித்தால் அவர்கள் மார்ச், ஏப்ரல் மாதங்களில் தேர்வுகளை எழுதுவதற்கு வாய்ப்பு உண்டாகும். ஆகவே டிசம்பர் 31 ஆம் தேதிக்குள் ளாகவே அந்தக் கட்டணங்களை அரசு தருவதற்கான ஏற்பாடு களைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: உபகாரச் சம்பளத்தைத் துரிதமாக தருவதில் அரசைப் பொறுத்தவரையில் சிக்கல் இல்லை. வருகிற விண்ணப்பங்கள் பல தவறான தகவலோடும் முறைகேடான தகவலோடும் வருகின்ற காரணத்தால்தான் திரும்பவும் அதை நிவர்த்தி செய்வதற்கு அனுப்பிக் கொண்டிருக்கிறோம். அங்கிருந்து தாமதமாகிற காரணத்தால்தான் உபகாரச் சம்பளம் உடனடியாக வழங்க தாமதம் ஏற்படுகிறது. இந்தக் குறைபாடுகள் இங்கு மட்டுமல்ல, கல்லூரி அளவிலும், மாணவர்கள் மத்தியிலும் இருக்கிற காரணத்தால்தான் இந்த சிக்கல் வளர்கிறதே தவிர அரசாங்கம் இதற்குக் காரணம் அல்ல. அப்படிப்பட்ட சிக்கல் வருமானால் நிவர்த்தி செய்ய இந்த அரசு தயங்காது என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். பழனிவேல்: ஹரிஜன மாணவர்களுக்கு உதவித் தொகை கொடுப்பதில் 45 நாட்களுக்குள்ளாக பைசல் செய்யப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது கல்வி ஆண்டு முடியும் தருவாயிலிருக்கிறது. இவ்வளவு நடந்தாலும் இன்னும் பல கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு அந்த உதவித் தொகை வந்து சேரவில்லை. இது சம்பந்தமாக நானே இரண்டு மூன்று தடவை ஞாபகப்படுத்தியிருக்கிறேன். இது சரிதானா? மேலும் உயர்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு ரூ. 23, ரூ. 25 தான் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு வேறு நோட்புக்ஸ் வாங்கவே ரூ. 40-க்கு கிட்டத்தட்ட ஆகிறது. ஆகவே இவையெல்லாம் கவனிக்கப்படும், பரிசீலிக்கப்படும், என்று சொல்லி காலம் கடத்துவதினால் அந்த மாணவர்களுக்கு எந்த வித பயனுமில்லை. ஆகவே சொல்லை செயலளவில் ஆக்குவதற்கு ஏதாவது உருப்படியான நடவடிக்கைகள் எடுத்தால்தான் அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருந்த மதுரை மாவட்டத்திலேயே பல விண்ணப்பங்கள் தவறான தகவலோடு வந்த காரணத்தால் திரும்ப அனுப்பப்பட்டிருக்கிறது. அதுவே இன்னும் வந்து சேரவில்லை. ஏதோ பரிசீலிக்கிறோம், காரியங்களை ஆற்றிக்கொண்டிருக்கிறோம், விரைவில் ஆணையிடப்படும் என்று சொல்லுவது காலம் கடத்துவதாகும் என்று சொல்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் உரிய காலத்தில் உபகாரச் சம்பளம் வழங்கவேண்டும் என்பதற்காகத்தான் பொறுப்பேற்ற பிறகு எடுத்த நடவடிக்கைகள் பற்றி முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். துரிதமாகத் தரவேண்டும் என்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறை எடுத்து நடவடிக்கைகள் எடுத்துவருகிறது.





(உ) அரிசனங்களுக்கு அணைக்காரப் பட்டியில் ஒதுக்கப் பெற்ற சுடுகாடு நிலம் உயர்ந்த சாதியினரால் ஆக்கிரமித்துக் கொள்ளப் பெற்றிருப்பது குறித்து :

*திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ''திருவில்லிப்புத்தூர் தொகுதி வ. புதுப்பட்டி பஞ்சாயத்தைச் சேர்ந்த அணைக்காரப்பட்டி கிராமத்தில் வாழும் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட சுடுகாடு நிலத்தை உயர்ந்த சாதியினர் விவசாயம் செய்யப் பயன்படுத்துவதால் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருவில்லிப்புத்தூர் தொகுதி வ. புதுப்பட்டி ஊராட்சியில் உள்ள அணைக்கரைப்பட்டி. கிராம அரிசனங்களின் சுடுகாட்டு நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதெனவும், ஆக்கிரமிப்பை வெளியேற்றும் படியும் செப்டம்பர் 1978-ல் கேரினார்.

2. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர், திருவில்லிப்புத்தூர் வட்டாட்சியரை, அணைக்கரைப்பட்டி, அரிசனங்களில் சுடுகாட்டு நிலத்தில் செய்துள்ள ஆக்கிரமிப்பை துரித நடவடிக்கை எடுத்து வெளியேற்றும்படி பணித்தார். அணைக்கரைப்பட்டியில் அரிசனங்களின் சுடுகாட்டு நிலத்தை திரு. வடக்குத்திய தேவர் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். ஆக்கிரமிப்பை வெளியேற்ற, திருவில்லிப்புத்தூர் வட்டாட்சியர் எடுத்த நடவடிக்கையை எதிர்த்து, திரு வடக்குத்திய தேவர், திருவில்லிபுத்தூர் மாவட்ட முனிசீப் நீதிமன்றத்தில் 688/78 எண்ணிட்ட உரிமையியல் வழக்கு மற்றும் 1117/78 எண்ணிட்ட உறுத்துக் கட்டளை மனு (Injunction Application) தொடர்ந்துள்ளார். வழக்கை எதிர்த்து எதிர் ஆணையுறுதிப் பத்திரம் (Counter Affidavit) மற்றும் எழுதிய வாக்கு மூலம் (Written Statement) 24—1—1979 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. ஆக்கிரமிப்பு வெளியேற்ற நடவடிக்கையை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளதால், வழக்கு முடிந்து தீர்ப்புரை கிடைத்தபின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

[பிற்பகல் 12.10]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே' நமது தாழ்த்தப்பட்ட அமைச்சர் அவர்களும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அங்கு சுடுகாடு இல்லை என்று சொல்கிறார்கள்,

கிராம முன்சீபே அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது வேலியே பயிரை மேய்வது போல் இருக்கிறது. அங்குள்ள கிராம முனிசீப்பும் அங்குள்ள உயர் ஜாதி மக்களும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சுடுகாடு இல்லை என்று வர்தம் செய்கிறார்கள். இதன் காரணமாக அங்குள்ள மக்கள் தங்கள் வீடுகளில் ஏற்படுகின்ற இறப்பிலேயோது, பிணங்களை தங்கள் வீடுகளுக்கு முன்னால் உள்ள முற்றத்திலோ அல்லது கொல்லைப்புறத்திலோ கொண்டு போய் புதைக்கிறார்கள். இனிமேல் அதற்கும் வசதியில்லாதவர்கள் தங்கள் வீடுகளில் குடுவையில் தான வைதது்க் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும். இனிமேல் நான் எங்கள் பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களின பிரேதம் விழுந்தால் அந்த பிரேதத்தை தானே இங்கு சென்னைக்கு கொண்டு வந்து * * *

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :</u> தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்கள் நீதிமன்றத்தில் ஸ்டே வாங்கியிருப்பதால்தான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை என்று குறிப்பிட்டேன். என்னைப் பொறுத்த வரையில், வேலியாக இருந்துகொண்டு உள்ளே மேய விரும்பவில்லை. இந்த மக்களுக்கு பாதுகாப்பாக இருந்து கொண்டிருக்க வேண்டும் என்றுதான் நாளும் இந்த அரசும் பொறுப்பேற்றிருக்கிறோம் என்பதை மாண்புமிகு தாமரைக்கனி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அவர்கள் சொன்னதைப் போல் எந்தவிதமான நிலையும் இல்லை என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் யார் ஆக்கிரமிப்பு செய்திருந்தாலும் அதை அகற்றி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்த இடத்தை கொடுக்க முன் வருமே தவிர இந்த காரியத்தில் ஈடுபட்டவர்களுக்கு துணை போக இந்த அரசோ அல்லது இந்தத் துறையை பொறுப்பேற்றிருக்கிற நானோ தயாராக இருக்க மாட்டோம் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பிணங்களை புதைப்பதற்கு தற்போது இடமில்லை [ * * ] என்று ஆவேசமாக சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, இப்போது அவர்கள் பயன்படுத்துகின்ற சுடுகாடு எதுவாக இருந்தாலும் அங்கு பிணங்களை புதைப்பதற்கு தகுந்த பாதுகாப்பு தரப்படும். மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் ஏற்கனவே பலமுறை அங்குள்ள சிரமங்களை கூறியிருக்கிறார்கள். அது எனக்கும் தெரியும். இருந்தாலும் அங்குள்ள மக்கள் இப்போது புதைக்கிற இடத்திலேயே புதைப்பதற்கு இப்போதும் தாயராக இருக்கிறார்கள் என்பதுதான் எனக்கு வந்த தகவல், ஆகவே இதை தொடர்ந்து செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உறுதுணை புரிய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



<u>திரு. க. சுப்பு :</u> பாயின்ட் ஆப் ஆர்டர், இங்கு எழுப்பப்பட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போதும், ஏதோ உறுப்பினர் அவர்கள் * * * என்றும் அதற்கு அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் அதற்கு தயாராக இல்லை என்று சொல்வது மாதிரியும் இருந்தது. இவையெல்லாம் அனுமதிக்கப்படலாமா ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தாமரைக்கனி அவர்கள். பேசும்போது சற்று வினயமாக பேசுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

<u>திரு. இரா. தாமரைக்கனி :</u> நான் பேசும்போது, அமைச்சரை வேலியே பயிரை மேயலாமா என்று சொல்லவில்லை, அங்குள்ள கிராம முனிசீபும் உயர் ஜாதி மக்களும் இருந்து வருவதைத்தான் குறிப்பிட்டேன். நான் ஆவேசமாக பேசினேன் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் நிலைமை ஆவேசப்படும்படியான நிலைமையில் இருப்பதால் தான் அப்படி சொன்னேன். நான் கூறியவை சபைக் குறிப்புகளில் இருக்கக்கூடாது என்றால் அவற்றை நீக்கிவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தாமரைக்கனி அவர்கள் பேசும்போது குறிப்பிட்ட * * * என்று சொன்ன வாக்கியங்களை நீக்கிவிடுமாறு உத்தரவிடுகிறேன்.

## (ஊ) தஞ்சை மாவட்ட தாளடிப்பயிருக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடுவது குறித்து.

*<u>திரு. ரெ. வீ. சவுந்தரராஜன் :</u> தலைவர் அவர்களே " தஞ்சாவூர் மாவட்டத்தில் 1978 அக்டோபர், நவம்பர் மாதங்களில் பெய்த பெருமழையின் காரணமாக தாளடிப் பயிர் வீணாகி மீண்டும் நடவு, நட்ட பயிர் கெடாதிருக்க 1979ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் தேதிவரை மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விட வேண்டிய அவசியம் குறித்த " பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> தலைவர் அவர்களே, மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் விடுவதை ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 28ஆம் தேதி நிறுத்தி

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

விடுவது வழக்கம். ஆனால், இம்முறை 1978 ஜுன் 12ஆம் தேதி நீர்த்தேக்கத்தைத் திறந்து தண்ணீர் விடுவதற்குப் பதிலாக 1978 ஜுலை 5ஆம் நாள் தண்ணீர் விடப்பட்டதன் காரணமாகவும், 1978 நவம்பர்—டிசம்பர் மாதங்களில் பெய்த மழையினால் தாளடி பயிர்களுக்கு ஏற்பட்ட சேதத்தின் காரணமாகவும், 1979ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் தேதிக்குப் பிறகும் தண்ணீர் விடுவதற்கு அரசு முடிவு செய்தது. பெரும் மழைக்குப் பிறகு, சில இடங்களில் மறுபடியும் நடவு செய்ய வேண்டியிருந்தது என்ற விஷயம் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதுபற்றி செறிவு வேளாண்மை அபிவிருத்தி (I.A.D.P.) கூட்டத்தில் விவாதிக்கப் பட்டது. தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் மற்றும் வேளாண்மை அதிகாரிகள் ஆகியோரின் இசைவோடு, 1979 பிப்ரவரி மாத இறுதிவரை தண்ணீர் விட்டால்போதும் என்று தீர்மானிக்கப் பட்டது. இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு, 1979 பிப்ரவரி 28ஆம் தேதிவரை மட்டுமே மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விடுவதற்கு அரசு ஆணை பிறப்பித்தது. அவ்விதமே 1979 பிப்ரவரி 28ஆம் தேதி மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விடுவது நிறுத்தப்பட்டது.

*திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: தலைவர் அவர்களே, இந்தப் பெருமழையினால் தாளடிப் பயிர்கள் பாதிக்கப்பட்டு, பல விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதுயாதிரி நஷ்டம் அடைந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எவ்வளவு விதை நெல்கள் இனாமாகக் கொடுக்கப்பட்டது? என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானம் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடுவதைப்பற்றி. ஆனால் தாளடிப் பயிரிட்டவர்களுக்கு விதை வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். தனியாக ஒரு கேள்விபோட்டால், நான் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால், தண்ணீர் விடுவதுபற்றி கேட்டால் நான் தகுந்த முறையிலே பதில் சொல்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே குத்தாலம் தொகுதியில், குடவாசல் பகுதிகளைச் சேர்ந்த கருப்பூர், மாந்தை, கம்பூர், சுரைக்காலூர், சருக்கை, இள்ளியூர், வடக்குவெளி, திருப்பாம்புரம், துளார், உக்கடை, என்னக்குடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தாளடிப் பயிருக்கு தண்ணீர் மார்ச்சு மாத கடைசிவரை தேவை என்றும், தண்ணீர் விடா விட்டால் பயிர் அழிந்து ஏராளமான நஷ்டம் அடைய நேரிடும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசுக்கும், இதேபோல் எனக்கும் தந்தி மூலமும், மனு மூலமும் தெரிவித்





துள்ளார்கள். அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில்தான் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை சென்ற மாதம் இந்த, அவையிலே கொடுத்திருந்தேன். அன்றைய தினம் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்..................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து வேறு என்ன புதிய தகவல்கள் தேவை என்பதைச் சொல்லுங்கள். வரலாறு படிக்க வேண்டாம். ஏற்கனவே அது தெரியும். புதியதாகத் தகவல் வேண்டுமென்றால், அதைக் கேளுங்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மார்சசு 5ஆம் தேதி கலந்து பேசி, மீண்டும் தண்ணீர் தேவையானால், தண்ணீர் கொடுப்பதாக அன்றைய தினம் சொன்னார்கள். ஆனால், நேற்றைய தினம் நான் ஊருக்குச் சென்றிருந்தபோது, அந்தப் பகுதி மக்கள் தண்ணீர் இல்லாத காரணத்தால் பயிர்கள் அழிந்து, சேதமடைந்துள்ள தாகச் சொன்னார்கள். எனவே, கல்லறையில் தண்ணீர் இருந் தால், இரண்டு நாட்களுக்கு அரசலாறு பகுதிக்குதண்ணீர் கொடுக் கப்படுமா? அல்லது மேட்டூரிலிருந்து இரண்டு நாட்களுக்கு, இந்த அரசலாறு பகுதிக்கு தேவையான தண்ணீர் விடுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணையிலிருந்து வருடா வருடம் எப்போதுமே ஜனவரி 28ஆம் தேதி வரையிலும் தண்ணீர் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால், இந்த ஆண்டில் குறிப்பாக 1978 நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்த மழையின் காரண மாக, தாளடிப் பயிர் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்ற காரணத் திற்காக, ஜனவரி 28ஆம் தேதிக்குப் பதிலாக, பிப்ரவரி 28ஆம் தெதிவரையில் தண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், ஐ.ஏ.டீ.பி. (இன்டென்சிவ் அக்ரிகல்சுரல் டெவலெப்மெண்டு புரோக்ராம்) கூட்டத்திலே ஆட்சியாளர் அவர்களும், அங்கே இருக்கக்கூடிய விவசாயத்துறை இயக்குநர் அவர்களும், மற்று முள்ளவர்களும் கலந்து கொண்டு பேசிய கூட்டத்தில், பிப்ரவரி 28ஆம் தேதி வரையில் தண்ணீர் விட்டால் போதும் எனறு முடிவு செய்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் இராச மாணிக்கம் அவர்கள் சொல்வதுபோல் இங்கே மேட்டூரிலிருந்து தண்ணீர் விட்டால், அந்த அணையிலிருந்து இங்கே தஞ்சைக்கு எட்டுவதற்கு ஏறத்தாழ 4, 5 நாட்களுக்கு மேலாகும். 100 ஏக்கர் தண்ணீர் விடுவதற்கு, 10,000 ஏக்கருக்குரிய தண்ணீர் வீணாகி விடும். இதை மனதிலே அவர்கள் வைத்துக்கொண்டு, நமக்கு நாளைக்கு தண்ணீர் வேண்டுமென்று சொல்கிறபோது,

இதே உறுப்பினர் எங்களுக்கு ஏன் தண்ணீர் கொடுக்கவில்லை என்று கேட்க மாட்டாரா என்ற வினாவை அவரே எழுப்பி, அதற்கு பதில் என்ன என்பதை அவர்களே புரிந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் தண்ணிர் வீணாக்கக் கூடாது என்ற எண்ணத்தோடு, அவர்களும் இந்த அரசுக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(எ) அன்னப்பநாயக்கன் அணை கால்வாயில் ''துபா'' வைத்து நீர் கொண்டு செல்ல அனுமதி மறுப்பது குறித்து.

திரு க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, ''செங்கல்பட்டு மாவட்டம், அன்னப்ப நாயக்கன் குப்பத்தைச் சேர்ந்த ராமநாயக்கன் கண்டிகை கிராமத்தில் கட்டப்பட்டுள்ள அன்னப்ப நாயக்கன் அணை கால்வாயில் ''துபா'' வைத்து நீர் கொண்டு செல்ல அனுமதி மறுக்கப்பட்டதால் நெல், வேர்கடலை, மிளகாய், சர்க்கரை வள்ளிக்கிழங்கு, கேழ்வரகு போன்ற பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து'' மாண்புமிகு வேளாண்மை, மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தை வேலு: தலைவர் அவர்களே, நடைமுறை விதிகளின்படி பொதுப்பணித்துறை நீர்ப்பாசன ஆதாரங்களிலிருந்து (ஆறு, அணைக்கால்வாய்கள் உள்பட) நேரே தனியாரது குழாய்/வடிகால்கள் வழியே நீரை எடுத்துச் செல்வது சட்டவிரோதமாகும். இந்நிலையில் அன்னப்பநாயக்கன் அணையின் மேற்புறம் இடது கரையில் ''துபா'' வைத்து நீர்கொண்டு செல்வது முறையற்றதாகும். ஆகையால் விதிமுறைக்கு எதிராக தண்ணீர் எடுப்பது தடை செய்யப்பட்டது.

[பிற்பகல் 12-20]

திரு. க. சுப்பு: இந்தக் கால்வாய் கட்டப்படுகிற நேரத்தில் ஏற்கனவே போய்க்கொண்டிருந்த ஓடையில் இருந்து ஊர் மக்கள் துன்ரை எடுத்து விவசாயம் செய்து கொண்டிருந்தார்கள். இந்தக் கால்வாயை எடுத்து அரசாங்கம் அதைக் கட்டுவதற்கான வேலைகளில் ஈடுபடும்போது தங்களுக்கும் தண்ணீர் விட வேண்டுமென்று அவர்கள் கேட்டு அரசாங்கமே குழாய் வைத்துக் கொடுத்து அவர்கள் விவசாயம் செய்து வந்தார்கள். ஆனால் திடீரென்று ஒரு எஞ்சினியரும் அசிஸ்டென்ட் எஞ்சினியரும் வந்து அவ்வாறு தண்ணீர் எடுக்கக்கூடாது என்று கூறி குழாயை உடைத்துவிட்டு சென்று விட்டனர். தலைமைப் பொறியாளரை நானே போய்ப்பார்த்து மகஜர் தந்திருக்கிறேன். அந்த மகஜர் உங்கள் கைக்குக் கிடைத்திருக்கிறதா என்று



தெரியவில்லை. இலாகாவிலிருந்து இதை உங்களுக்குக் கொடுத்தால் அதிலே உள்ள விவரங்களை எல்லாம் நீங்கள் பார்க்கலாம். அந்த மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய உரிமை பறிபோயிருக்கிறது. இந்த உண்மையை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மீண்டும் அந்த விவசாய மக்கள் உரிமை பெற நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இந்த அரசாங்கமே முன் வந்து குழாய் வைத்துக் கொடுத்ததாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அதைப் பற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. மேலும் மகஜர் ஒன்றை இந்த அரசாங்கத்திற்கு அனுப்பியதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். அப்படிப்பட்ட மகஜர் வந்ததாகத் தெரியவில்லை. அப்படி மகஜர் வந்து அரசாங்கமே முன்வந்து குழாயை அமைத்திருந்தால் அதுபற்றிக் கவனிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஏ) விவசாயிகள் கொடுத்து வந்த கரும்பை பெரம்பலூர் சர்க்கரை ஆலை, வாங்க மறுப்பது குறித்து:

* திரு. ரெ.வி. சவுந்தரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம் குருங்குளம் சர்க்கரை ஆலையில் பதிவு செய்யாத கரும்பு விவசாயிகள், திருச்சி மாவட்டம், பெரம்பலூர் சர்க்கரை ஆலைக்கு அனுப்பி வந்த கரும்பை குருங்குளம் சர்க்கரை ஆலை நிர்வாகத்தின் தலையீட்டினால் பெரம்பலூர் சர்க்கரை ஆலை கரும்பை வாங்க மறுத்துள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை தனது 1978–69 அரவை பருவத்திற்குத் தேவையான கரும்பினைச் சென்று ஆண்டு நடவு பருவத்திலேயே 6,858 ஏக்கர் என்ற அளவில் பதிவு செய்து கொண்டது. போதுமான அளவிற்கு கரும்பு இருப்பதினால் பதிவு செய்யப்படாத கரும்பிற்கு முன்னுரிமை தந்து அரவைக்கு எடுத்துக் கொள்வது என்பது இயலாது.

ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை, பெரம்பலூர் வட்டம், திருச்சி மாவட்டம் தொடர்ச்சியாக நாள்தோறும் 1,250 டன்கள் அரவை செய்வதற்கு குறைந்த அளவில் பதிவு செய்யப்படாத கரும்பைத் திருவையாறு துணை வட்டத்திலிருந்து மட்டும் எடுத்துக் கொள்வதற்கு கரும்பு ஆணையரது அனுமதியைப் பெற்று உள்ளது. பதிவு செய்யப்படாத கரும்பினை 26—1—1979-ந் தேதியிலிருந்து எடுத்து நாளது வரை 2,150 டன்கள் அரைத்து உள்ளது. பிப்ரவரித் திங்கள் முடிய காவேரி சர்க்கரை ஆலை தனது அரவையினைத் துவங்காததால் 14, 15 மாதங்களுக்கு மேல் முதிர்ச்சி அடைந்த கரும்பை அரைக்க வேண்டும் என்று கரும்பு விவசாயிகள் அனுப்பியுள்ள மனுவின் பேரிலும், ஆலை நிர்வாகத்தினரின் வேண்டுகோளின் பேரிலும், பெரம்பலூர் சர்க்கரை ஆலைக்கு 20,000 டன்களும் கோத்தாரி சர்க்கரை ஆலைக்கு 5,000 டன்களும், அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைக்கு 5,000 டன்களும் கரும்பு ஆணையரால் ஒதுக்கப்பட்டன. பதிவு செய்து உள்ள கரும்பினை ஒரு ஆலை அரைக்க இயலாவிட்டால் மற்ற ஆலைகள் அதற்கு இடம் அளிக்க உதவுவது முறையாகும் என்ற அடிப்படையில் மேற்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

கீழேயுள்ள அனுபந்தத்திலிருந்து 5 சர்க்கரை ஆலைகள் 1977—78-ல் அரைத்த, 1978—79 அரைக்க இருக்கும் கரும்பின் அளவுகளைத் தெரிந்து கொள்ளலாம்.

| வரிசை எண்ணும், சர்க்கரை ஆலையின் பெயரும். | 1977—78-ல் அரைத்த கரும்பு, மொத்த அளவு. (லட்சம் டன்களில்) | 1978—79-ம் அரவைப் பருவத்திற்கு அரவைக்கு இருக்கும் கரும்பின் அளவு. (லட்சம் டன்களில்). |
|---|---|---|
| 1. கோத்தாரி . . . | 2.67 | 2.42 |
| 2. அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, தஞ்சாவூர். | 2.19 | 2.25 |
| 3. ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை, பெரம்பலூர். | 1 41 (சோதனை ஓட்டம்). | 2.00 |
| 4. காவேரி .. .. | 1.47 | 1.83 |
| 5. திரு. ஆரூரான் .. | 2·24 | 2.15 |



பதிவு செய்வதற்குச் சென்ற ஆண்டே வாய்ப்பு இருந்தும், பதிவு செய்யத் தவறிய கரும்புக்கு முன்னுரிமை அளிப்பது இயலாது ஒன்று. தற்சமயம் சர்க்கரை உற்பத்தி அதிகமாக இருப்பதினால், அதிக அளவில் கரும்பு அரைக்க முன்வரும் சூழ்நிலையில் ஆலைகள் இல்லை. ஆலைகள் தங்களது திறனுக்கு அதிகமாகவே கரும்பு பிழிந்து கொண்டு இருக்கின்றன. பதிவு செய்துள்ள கரும்பினை அரைத்தால் மே/ஜூன் மாதம் வரை பருவம் நீடிக்கக்கூடிய வாய்ப்பு தற்போது உள்ளது. இந்தச் சூழ்நிலையில் பதிவு செய்யப்படாத கரும்பினை பெரும் அளவில் எடுக்க இயலாது. மிகச் சிறிய விவசாயிகள் அல்லலுற்றால் கரும்பு ஆணையரோடு தொடர்பு கொண்டு தங்களது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம். திருச்சி மாவட்டத்திலுள்ள பேட்டைவாய்த்தலையில் உள்ள காவேரி சர்க்கரை ஆலை தனது 1978—79-ம் முக்கிய பருவத்தின் அரவையை 3—3—1979 முதல் துவங்கியுள்ளது. ஆகவே, சுற்றுப்பகுதியிலுள்ள கரும்பு விவசாயிகள் தங்களது கரும்பினை அரவைக்கு அளிப்பதில் சிரமம் ஏதும் இராது என நம்புவதற்கு வாய்ப்பு உள்ளது.

* திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவர் அவர்களே, ஒரு ஆலையிலிருந்து பதிவு செய்யாத கரும்பு விவசாயிகள் வேறு ஆலைக்கு அனுப்புவதற்குக் காரணம் என்ன? அப்படி அனுப்பப்படாமல் தடை செய்யாததற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதைத்தான் விவரமாக அறிக்கையில் விவரமாக சொன்னேன். ஒரு ஆலையிலிருந்து இன்னொரு ஆலைக்கு கொண்டு போகக்கூடிய நிர்ப்பந்தம், ஒரு ஆலைக்குக் கரும்பு தேவையாக இருந்தால் தேவையாக இருக்கக்கூடிய ஆலைக்கு அதிகமாக உற்பத்தி செய்திருக்கிற கரும்பை கொண்டு செல்கிற வழக்கம் இருக்கிறது.

## (ஐ) இராமேஸ்வரத்தில் மர்மக் காய்ச்சலினால் சிறுவர்கள் இறந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். ஜே. சாதிக் பாட்சா, க. சுப்பு, மு. அம்பிகாபதி, மு. அரங்கநாதன், ஓ. எஸ். வேலுச்சாமி, எஸ். எம். வாசன் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

[1979 மார்ச் 17

*திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, 'இராமேஸ்வரத்தில் கடந்த 1978-ஆம் ஆண்டு டிசம்பா மாதத்திலிருந்து மர்மக் காய்ச்சலின் காரணமாக 20 சிறுவர்கள் இறந்ததினால் பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள 'பதட்ட நிலை' குறித்து' ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமேஸ்வரம் பகுதி மலேரியா நோய் பரவும் வாய்ப்புள்ள பகுதியாகும். சென்ற ஆண்டை விட இந்த ஆண்டில் மலேரியா நோயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை இப்பகுதியில் சற்று கூடியுள்ளது. பூச்சி மருந்து தெளிக்கும் பணிக்கு இப்பகுதியில் போதுமான வரவேற்பு இல்லாததாலும், இங்குள்ள தென்னந்தோப்புகளில் உள்ள நீர் தேங்கும் குழிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதும் இதற்கு காரணமாகும். இதனால் இப்பகுதியிலுள்ள அரசு மருத்துவ மனைகளிலும், மருந்தகங்களிலும் சிகிச்சை பெற்ற உள், புற நோயாளிகளின் எண்ணிக்கை சனவரி, பிப்ரவரித் திங்களில் சற்று கீழ் வருமாறு கூடியுள்ளது:

| | புற நோயாளிகள். | | உள் நோயாளிகள். | |
|---|---|---|---|---|
| | சனவரி. | பிப்ரவரி. | சனவரி. | பிப்ரவரி. |
| 1978 | 384 | 247 | 45 | 22 |
| 1979 | 441 | 304 | 89 | 62 |

இராமேஸ்வரத்திலுள்ள மருத்துவ மனையில் 1979-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22—2—79 வரை இறந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆகும். இவர்களில் மூவர் (குழந்தைகள்) மட்டுமே, ஐயப்பாட்டிற்குரிய மூளைக் காய்ச்சல் அல்லது டி.பி. மெனின்ஜிடிஸ் அல்லது மலேரியா காய்ச்சலால் இறந்தனர். வேறு எவரும் ஐயப்பாட்டிற்குரிய நோயினால் இறக்கவில்லை. பிறப்பும்-இறப்பு பதிவேட்டின்படி இப்பகுதியில் மேற்கூறிய கால கட்டத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 26. அதில் 9 பேர் மட்டுமே காய்ச்சலால் இறந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, மேலும், 3 பேர் மூளைக் காய்ச்சலால், மலேரியா நீங்கலாக மற்றவகைக் காய்ச்சலால் இறந்தனர். (அரசு மருத்துவ மனையில் இறந்தோர் 3, வெளியில் இறந்தோர் 9 நீங்கலாக ஏனையோர் 8 மாதத்திலிருந்து 18 வயதிற்குட்பட்டோர். இவர்களது நோயின் அறிகுறிகள் தலைவலி, காய்ச்சல், வாந்தியாகும். அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் இறந்தோர்





அனைவரும் வெளியில் சிகிச்சை பெற்று, நிலைமை மோசமடைந்து பின்னரே மருத்துவ மனைகளை அணுகினர். தக்க சிகிச்சை அளித்தும், தக்க நேரத்தில் அவாகள் மருத்துவ மனையை நாடாததால் அவ்வுயிர்களைக் காப்பாற்ற முடியவில்லை.

அங்கு மர்மமான வியாதி பரவியுள்ளது என்கிற செய்தி வெளிவந்ததும் மாவட்ட மருத்துவ அதிகாரியும், மாவட்ட பொது சுகாதார அதிகாரியும் அங்கு விரைந்தனர். சென்னையிலிருந்து சீப் என்டோமாலிஜிஸ்ட் அவாகள் பரிசோதனை உதவியாளர் குழு ஒன்றுடன் தேவையான மருந்துகள், ஊசி மருந்துகளுடனும் அங்கு அனுப்பி வைக்கப் பட்டாா. மாவட்ட மலேரியா அலுவலரும் அங்கு முகாமிட்டு மருந்து தெளிக்கும் பணியில் ஈடுபட்டார். இராமநாதபுரம் அரசு மருத்துவ மனையிலிருந்தும் ஒரு குழந்தை சிகிச்சை மருத்துவ அதிகாரி இராமேஸ்ரவத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார். இது தவிர, மதுரை மருத்துவ கல்லூரியில் பூச்சியியல் பேராசிரியர் ஒருவரும், குழந்தைகளின் சிகிச்சை உதவிப் பேராசிரியர் ஒருவரும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள மருத்துவர்களுக்கு தக்க ஆலோசனை கூறியுள்ளார். பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரும் அங்கு முகாமிட்டு தக்க அறிவுரைகள் வழங்கியுள்ளார். மருத்துவ மனையில் போதுமான அளவு மருந்துகள் கைவசம் உள்ளது.

மத்திய அரசால் வழங்கப்பட்ட விரைவாகவும், அதிக அளவிலும் பூச்சி மருந்து தெளிக்கும் இயந்திரம் ஒன்று அது சென்னை வந்து சேர்ந்தவுடனேயே இராமேஸ்வரத்திற்கு அனுப்பப்பட்டு அது பூச்சி மருந்துதெளிக்கும் பணியில்ஈடுபட்டுளது இதனால்அப்பகுதியில் நோய் பரப்பும் (மலேரியா,மூளைகாய்ச்சல்) கிருமிகள் விரைவில் ஒழிக்கப்படும். இது தவிர, ஐயப்பாட்டிற்குரிய சில நோய்கள் பெரும்பாலும் சில நுண் கிருமிகளால் ஏற்படுகிறது. இது பற்றிய ஆராய்ச்சி செய்வது மிக அவசியமாகும். எந்த வகை நுண் கிருமி என்றறிந்து அதை ஒழிக்க ஒரு மருந்தை உபயோகித்தால் சில காலம் கழித்து அந்நுண்கிருமிகள் அம் மருந்திற்கு எதிர்ப்புச் சக்தியை தன்னுள் உருவாக்கும். எனவே, இது பற்றிய ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற வேண்டியதாகும். தமிழ்நாட்டில் அதற்கு தற்போது வசதியில்லை. எனவே மதுரையில் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவின் (I. C. M. R.) நிதி உதவியுடன் நுண் கிருமிகள் ஆராய்ச்சிக்காக ஒரு நிலையம் அமைப்பதைபற்றி அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. மேலும் அரசு நிலைமையை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறது. மக்கள் நலம் காக்க வேண்டி எந்த விதமான தடையுமில்லாமல் அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

[பிற்பகல் 12-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் அமைச்சரவர்கள் இலாக்கா அதிகாரிகளிடம் சொல்லி சுருக்கமாக விளக்கத்தைக் கொடுக்கச் சொல்ல வேண்டும். அப்படி இல்லையென்றால்

அச்சடித்து எல்லோருக்கும் மேசையில் வைக்க வேண்டும். ஏனென்றால் நீண்ட விளக்கமாக இருந்தால் அதற்காக விளக்கத்தை உறுப்பினர்கள் கேட்பதும் அதிகமாக இருக்கிறது. பதிலும் அதிகமாக இருக்கிறது. எனவே, தாங்கள் அதிகாரிகளிடம் சொல்லி சுருக்கமாகத் தரச்சொல்லவேண்டும். இல்லையென்றால் ஒரு சில கேள்விக்குக்கூட நேரம் அதிகமாகிறது.

திரு. க. சுப்பு:—பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்கம் கொடுத்தது நல்லதுதான். இது கால் அட்டென்ஷன். இது கேள்வி என்றால் அச்சடித்து வைத்து விடலாம்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாங்கள் சொன்னதில் நீங்கள் விளக்கம் தர வேண்டாம். ஒவ்வொரு ஆஸ்பத்திரியைப் பற்றியும் சொல்லி, எத்தனை பேஷண்டுகள், எத்தனைபேர் ட்ஸ்சார்ஜ் ஆனார்கள் என்பதெல்லாம் வேண்டாம். காய்ச்சலினால் எத்தனை பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எத்தனை பேர்களுக்குச் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறோம் என்று இது மாதிரி விவரங்களைச் சொன்னால் போதும். எனவே, இதில் உறுப்பினரவர்கள் வேறு இன்னும் விளக்கமாகச் சொல்வது நல்லது என்று சொல்ல வேண்டாம்.

திரு.க. சுப்பு : தலைவரவர்களே, இராமேஸ்வரம் அவ்வளவு சாதாரண இடம் இல்லை. பெருமளவில் யாத்திரிகர்கள் வரும் இடம். யாருக்கு என்ன நோய் இருக்கும் என்று யாருக்கும் தெரியாது. எல்லாவற்றையும் இராமநாதஸ்வாமிதான் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் அங்கு மலேரியாவை ஒழிக்க வேண்டுமென்று சொல்கிறபொழுது, இந்தப் பிரச்னையில் அமைச்சரவர்களின் ஸ்டேட்மெண்ட் கொஞ்சம் முன்னுக்குப் பின்முரணாக இருக்கிறது.

இரண்டாவது விஷயம் மத்திய அரசால் வழங்கப்பட்ட இயந்திரம் வந்தவுடன், உடனடியாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். அப்படியென்றால் அங்கு பரவியிருக்கிறது என்றுதானே அர்த்தம். முதலில் சொல்லும் பொழுது மூளைக்காய்ச்சலினால் செத்ததாகச் சொல்றார்கள். மூளைக் காய்ச்சலினால் செத்திருந்தால் மலேரியாவில் செத்ததாக ஏன் புகார் கொடுக்கப் போகிறார்கள். புகார் கொடுக்கும் நேரத்தில் இராமேஸ்வரத்தில் நிலைஞமை மோசமாக



இருக்கிறது. மத்திய அரசின் உதவியையும் பயன்படுத்திக் கொள்வதில் இந்த இலாக்கா பின் தங்கியிருக்கிறது. இதையெல்லாம் கவனித்து, செத்த பிறகு போகாமல், சாவதற்கு முன்பாக நடவடிக்கை எடுக்க இனிமேலாவது முன்வருமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். செளந்திரராஜன் : தலைவரவாகளே, ஒரு நோய் பரவியிருககிறது எ௱று தெரிந்தவுடன் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அங்கு மலேரியா நோய் இல்லை என்று நான்சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிக்கையிலே முரண்பாடு இருப்பதாகச் சொன்னார்கள். நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன், மூன்று குழந்தைகள் இறந்திருக்கிறார்கள். அவர்கள் இறந்ததற்கு காரணம் மூளைச் காய்ச்சல் அல்லது டி.பி. மெனீன்ஜிடிஸ் அல்லது மலேரியாக் காய்ச்சல் என்றுதான் குறிப்பிட்டேனே தவிர அங்கு மலேரியாவே இல்லை என்று குறிப்பிடப்படவில்லை. மத்திய அரசு தருகின்ற உதவிகலை இந்த அரசு எற்றுச் செய்கிறது. அந்த இடத்தில் அதிகாரிகளை அனுப்பி அந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, இந்த விஷக்காய்ச்சல் கொசுவினால் பரவுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதை ஒழிக்க அங்கு மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும் உள்ள கொசுக்களை ஒழிப்பதற்காக ஏற்கெனவே மாலத்தியான் என்ற மருந்தை தமிழக அரசு முன்பு சப்ளை செய்து கொண்டிருந்தது. அதைப் பயன்படுத்தி கொசுக்கள் ஒழிக்கப்பட்டன. அந்த மருந்து 1974-ஆம் ஆண்டு வரையில் பயன்படுத்தப்பட்டது. அந்த மருந்தை மீண்டும் வாங்குவதற்கான ஆலோசனை அரசிடத்தில் உண்டா? அந்த மருந்து ஏன் நிறுத்தப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். செளந்திரராஜன் : தலைவரவர்களே, தொடர்ந்து ஒரே மருந்தைக் கொசுவை ஒழிப்பதற்காக அடிக்கின்ற நேரத்தில் அந்தக் கொசுக்களுக்கு அந்த மருந்தின் சக்தியைத் தடுக்கின்ற சக்தி ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, மருந்துகளை மாற்றுவதன் மூலமாக அந்தக் கொசுக்களைக் கொல்லுவதற்குரிய வேகமான தன்மையைப் பெற முடியும் என்ற காரணம் கருதி மருந்துகள் கொஞ்சம் மாற்றப்பட்டிருக்கின்றன. அவ்வளவுதான், வேறு எந்த பிரச்னையும் இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்கள் கூப்பிட்டால்தான் பேசுவதாக இருந்தேன். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீங்கள் கூப்பிட்டால்தான் நான் பேசுவதாக இருந்தேன். இல்லாவிட்டால் பேசுவதாக இல்லை. இந்த நோயே ரொம்ப மர்மமாக இருக்கிறது. வறுமை, பஞ்சம், பசி, பிணி இவற்றை ஒழிக்கவில்லை யென்றாலும் கூட, கொசு, மூட்டைப் பூச்சி இவைகளுக்கு எதிரான யுத்தத்தை நடத்த அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்குமா ? மர்மமாக இறப்பதைத் தடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, மர்மமாக இறப்பது என்பது எதுவும் இல்லை. பொதுவாக, நோய் ஏற்பட்ட உடனே, மருத்துவ மனைக்குக் கொண்டு வந்து காட்டி விடுவார்களானால், அந்த உயிர்களைக் காப்பது என்பது எளிதான காரியமாகும். ஆனால், கை மருந்து வைத்து வைத்தியங்களைச் செய்ததற்குப் பின்னாலே, நோய் அதிகமாகப் பரவிய பிறகுதான் பொதுவாக மருத்துவ மனைக்குக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, அப்படி கொண்டு வருகிற நேரத்திலேயே நோய் முற்றிய தன்மை அடைந்து விடுவதாலே, எவ்வளவு நல்ல சிகிச்சை அளித்தும் அது பயன்பெறாமல் அவர்கள் இறக்கிற நிலையைப் பெறுகிறார்கள். ஆகவே, நோயைத் தடுப்பதற்கும் கொசுவை ஒழிக்கவும் மருத்துவ மனைகளிலே தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஒ) தஞ்சை மாவட்டத்தில் பதனீர் அருந்தியவர்கள் உடல் நிலை பாதிக்கப்பெற்றுள்ளது குறித்து.

திரு. அ. செல்லப்பா : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

> " தஞ்சை மாவட்டம், பாபநாசம் அருகிலுள்ள இடையிருப்பு, மணப்படுக்கை ஆகிய ஊர்களில் பதனீர் அருந்தியதால் ஆண், பெண், சிறுவர்கள் 32 பேர்களுக்கு மயக்கம், வாந்தி உண்டாகியதால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து. "

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, விவர அறிக்கை அவையின்முன் வைக்கப்பட்டிருக்கிறது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிறைய காப்பிகள் தேவைப்படுவதால் வைக்கப்பெறவில்லை. இனிமேல், வேண்டுமானால் வைக்க ஏற்பாடு செய்யலாம். எனவே, தற்போது நீங்கள் அறிக்கையைப் படித்து விடுங்கள்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டம், அம்மாப்பேட்டைக்கு அருகிலுள்ள இடையிருப்பு, மணப்படுகை கிராமங்களைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்கள் (ஆண், பெண், சிறுவர்கள் உட்பட) சிலர் 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி 9 ஆம் நாள் அன்று காலை 6 மணியிலிருந்து 8 மணிக்குள் சில பதனீர் விற்பவர்களிடமிருந்து பதனீர் வாங்கி அருந்தி விட்டு அறுவடை வேலைக்கு சென்றார்கள். வேலைக்குச் செல்லாத சிலரும் இந்தப் பதனீரை அருந்தினார்கள். இந்தப் பதனீரை அருந்திய அவர்கள் (ஆண், பெண், குழந்தைகள்) அனைவருக்கும் காலை 11 மணியிலிருந்து நடுப்பகல் 2½ மணிவரையில் வயிற்று வலியும், வாந்தியும், பேதியும் ஏற்பட்டது. இந்த ஆபத்தான நிலைமையை உணர்ந்த பொதுமக்கள் பாதிக்கப்பட்டவர்களை டிராக்டர் மூலமாக பாபநாசம் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தனர். மெலட்டூர் ஆரம்ப சுகாதார மருத்துவ அதிகாரி, காவல் துறை உதவியுடன் மருத்துவ மனைக்குப் பாதிக்கப்பட்ட சிலரை முதலுதவி கொடுத்து அனுப்பி வைத்தார். இது பற்றி மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து தகவலறிந்த மாவட்ட சுகாதார அதிகாரி ஒரு குழுவினருடன் அக்கிராமங்களுக்குச் சென்றார்.

2. பாபநாசம் அரசு மருத்துவ மனையிலுள்ள பெண் மருத்துவ அதிகாரி பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி சிகிச்சை அளித்தார். பாதிக்கப்பட்டோர்களில் 39 பேர்கள் உள்நோயாளிகளாகவும், 29 பேர் புற நோயாளிகளாகவும் சிகிச்சைப் பெற்றனர். பாபநாசம் மருத்துவமனையில் போதுமான இடவசதி இல்லாததால் அவர்களனைவரும் அன்றிரவு 8 மணிக்கு காவல் துறை மற்றும் சுகாதாரத்துறையைச் சேர்ந்த ஊர்திகளில் தஞ்சையிலுள்ள இராஜா மிராசுதார் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு அவர்களின் சிகிச்சையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் நிலை நன்றாகத் தேறி வருவதாகவும் அவர்கள் விரைவில் மருத்துவ மனையிலிருந்து அவரவர்கள் இல்லங்களுக்கு அனுப்பப்படுவார்களென மாவட்ட சுகாதார அதிகாரி கூறியுள்ளார். பாதிக்கப்பட்டவர்களில் எவரும் இறக்கவில்லை.

(3) பாதிக்கப்பட்டவர்கள் அருந்திய பதனீரின் தரம் ஐயப்பாட்டிற்குறியதால் காவல் துறையினர் பதனீர் விற்ற பானைகளை பறி முதல் செய்து ஒரு வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும், பாதிக்கப்பட்டவர்களில் ஒருவரின் வாந்தியை பரிசோதனைக்காக அனுப்பி

இருக்கிறார்கள். இது தவிர பொது சுகாதார துறையைச் சேர்ந்த ஊழியர்கள் பூச்சிக் கொல்லி மருந்து தெளிப்பதில் ஈடுபட்டுள்ளார்கள். பாதிக்கப்பட்ட கிராமங்களையும் தீவிரமாகக் கண்காணித்து வருகிறார்கள்.

திரு. அ. செல்லப்பா : பேரவைத் தலைவரவர்களே, பதநீர் அருந்தியதால் பாதிக்கப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், நான் கேட்கவிரும்புவது, பதநீர் என்று கருதி அந்த 32 பேரும் அருந்தி இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் மது அருந்தி இருக்கிறார்கள் என்று விவர்கள் மீதே வழக்கு போட்டிருக்கிறார்கள். இந்த அரசுக்குப் பாதிக்கப்பட்டவர்கள் மீது வழக்கு போடுவதுதான் கொள்கையா ? பாதிக்கப்பட்டவர்கள்மீது வழக்கு போடுவதைக் கைவிடுவதுடன் இந்த வழக்கைத் திரும்பப் பெற வேண்டுமென மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : பேரவைத் தலைவரவாகளே. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப் போல் தகவல் என்னிடத்திலே இல்லை. பதநீர் விற்றதாகவும், பதநீர் குடித்ததாகவும் மருத்துவர்களும் காவல் துறையினரும் அறிக்கை அனுப்பி இருக்கிறார்கள. அப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல் இருக்குமானால் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

[பிற்பகல் 12–40].

## (ஓ) சென்னை நகரில் பரவியுள்ள மர்மமான காய்ச்சல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னை நகரில் பரவியுள்ள மர்மமான காய்ச்சல் பற்றி திருவாளர்கள் ஜே. ஜேம்ஸ் எஸ். ஜே. சாதிக் பாட்சா, நல்லதம்பி ஆகியோர் மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள் ; திரு. ஜே. ஜேம்ஸ்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, சென்னை நகரில் பரவியுள்ள மர்மமான காய்ச்சல் பற்றி எழுந்துள்ள பதட்ட நிலையை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தர ராஜன் : தலைவர் அவர்களே மருத்துவக் கல்லூரி இயக்குநரிடமிருந்து வந்துள்ள அறிக்கையின்படி சென்னை நகரிலுள்ள அரசு மருத்துவமனை





களில் மர்மமான காய்ச்சலுடன் ஒருவரும் அனுமதிக்கப்படவில்லை என்று தெரிகிறது. இம் மருத்துவமனைகளில் டைபாய்டு, வைரஸ், காய்ச்சல், மலேரியா நோய்களுக்காக அனுமதிக்கப்பட்டோரின் விவரம் கீழ் வருமாறு :—

(1) அரசினர் பொது மருத்துவமனை, சென்னை. — விஷ ஜுரம் எதுவுமில்லை. விஷ ஜுரம் பரவவுமில்லை.

(2) அரசினர் இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை. ..

| விவரம். | பாதிக்கப்பட்டோர். (ஜனவரி, 1979). | | பாதிக்கப்பட்டோர். (டிசம்பர் 1978). | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | இறப்பு. | எண்ணிக்கை. | இறப்பு. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (1) காரணம் கண்டு பிடிக்க இயலாத காய்ச்சல். | 33 | .. | 35 | .. |
| (2) டைபாய்டு காய்ச்சல் | 116 | 2 | 72 | 1 |
| (3) '' வைரஸ் '' காய்ச்சல். | 87 | .. | 44 | .. |
| (4) மலேரியா காய்ச்சல் | 1 | .. | 3 | .. |

(3) குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலையம். — விஷ ஜுரத்தால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையில் எந்த வித ஏற்றமும் இல்லை. ஆயினும் நெருக்கடி நிலைமையினை சமாளிப்பதற்கு வேண்டிய மருத்துவ வசதிகள் இங்குள்ளன.

(4) அரசினர் ஸ்டான்லி மருத்துவமனை, — விஷ ஜுரம் பரவுகின்றது என்பதற்கு எந்தவித ஆதார பூர்வமான குறிப்பேடும் இம்மருத்துவ மனையில் இல்லை,

| | அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | | இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|
| | சனவரி. | பிப்ரவரி. | சனவரி. | பிப்ரவரி. |
| (5) அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை : தொத்து நோய். | | | | |
| இன்பெக்டிவ் ஹேபடிடிஸ் | 24 | 24 | .. | .. |
| டைபாய்டு .. .. | 64 | 39 | 1 | .. |

இதிலிருந்து பதட்ட நிலைமை ஏற்படக்கூடிய அளவுக்கு சென்னை நகரில் எந்தவிதமான மர்மக்காய்ச்சலும் பரவவில்லை என்பது தெளிவாகும். குறிப்பாக குளிர்காலம் கழிந்து கோடை காலம் வரும்போது பருவநிலையில் ஏற்படும் மாறுதல் காரணமாக சிலர் பாதிக்கப்படுவதற்கு எப்பொழுதும் வாய்ப்புண்டு. ஆயினும், சென்னை நகரில் அத்தகைய நோய் பெருமளவில் பரவினாலும், அந்த நிலைமையை சந்திக்க சென்னையிலுள்ள அரசு மருத்துவமனைகள் எப்பொழுதும் தயார் நிலையிலுள்ளது என்றும், அரசு வேண்டிய நடவடிக்கைகளை எவ்வித தயக்கமுமின்றி எடுத்து மக்கள் நலம் காக்கும் என்றும் கூறிக்கொள்கிறேன்.

*திரு. தீ. சு. நல்ல தம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சென்னை நகரில் பரவியுள்ள மர்மமான காய்ச்சல் பற்றிய பதட்ட நிலைக்கு பதில் சொல்லும்போது, அப்படிப்பட்ட மர்மமான நோய் எதுவுமே இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். கடந்த நாட்களில், தலைவர் அனுமதித்தால் தினமணி பேப்பரில் இருந்து சில...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்தான் பதில் சொல்லிவிட்டாரே, அதைப்பற்றி அடிஷனலாக கேள்வி இருந்தால் கேட்கவும்— அந்த பழைய விஷயங்களை திரும்பவும் வேண்டாம்.

திரு. தீ. சு. நல்லதம்பி : தலைவர் அவர்களே, என்னுடைய வட்டத்திலே கடந்த 6-ம் தேதியன்று ஷண்முகம் என்பவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு 14-ம் தேதியன்று ஓட்டேரி சுடுகாட்டுக்கு அனுப்பப்பட்டார், அதுபோல் எனக்குத் தெரிந்த



ஒருவர் புதிதாக திருமணம் ஆனவர், காய்ச்சல் என்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர் 4 நாட்களில் இவ்வுலகத்தை விட்டு விட்டு வேறு உலகத்துக்கு சென்று விட்டார். இப்படி சென்னை நகரில் உள்ளவர்கள் இந்தப் புது மர்ம நோயினால், நான்கைந்து நாட்களில இவ்வுலக வாழ்க்கையை விட்டு வேறு உலகத்திற்கு சென்று கொண்டிருக்கின்றனர். இது பற்றி மருத்துவ துறை அதிகாரி ஒருவர் பேட்டி கொடுத்திருக்கிறார். அதுதான் பேப்பரில் தினமணியில் வந்திருக்கிறது என்று சொன்னேன் அந்த நோயைப் பற்றி மருத்துவத்துறை அதிகாரிகள் இது சமீபத்தில் பெய்த புயல், வெள்ளத்தாலும், மழையாலும், குடி தண்ணீர் கழிவு நீருடன் கலந்து போய்விட்டதாலும் ஏற்படுகிறது. இதைப்பற்றி எவ்வளவு எடுத்துச் சொன்னபோதிலும் நகராட்சிகள் இதை கவனிப்பதில்லை என்று சொல்லியிருக்கிறார். ஆனால், நமது அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட மர்ம நோயே இல்லை என்று கூறுகிறார். இனிமேலாவது அதைத் தடுப்பதற்கான நடவடிக் ககள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மருத்துவ மனையில் இறந்த இரண்டு பேரின் எண்ணிக்கையைக் காட்டி, ஒரு பதட்ட நிலை உருவாகி இருக்கிறது என்று சொன்னார்கள். நானே படித்துக் காட்டிய நேரத்தில் மருத்துவ மனையில் இறந்தவர்கள் எண்ணிக்கையைச் சுட்டிக் காட்டியிருக்கிறேன் மர்மக் காய்ச்சலால் யாரும் இறக்கவில்லை என்றும் சொல்லியிருக்கிறேன். மர்மக் காய்ச்சல் பரவவில்லை என்றுதான் அறிக்கையிலும் படித்துக் காட்டினேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (9). அரசினர் சட்ட முன்வடிவு.

தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். எஸ். வீரப்பன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:— அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகிறது.

*1979ம் ஆண்டு மார்ச் திங்கள் 7ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றது

[1979 மார்ச் 17

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் இதுவரையிலும் தமிழ் நாட்டோடு நிறுத்தப்பட்டு இருந்த தனியார் வனப் பாதுகாப்புச் சட்டத்தை நீட்டிப்பதற்கு இந்த அவையில் திருத்தம் கொண்டு வந்து இருக்கிற ஒரு மசோதா மீது சில கருத்துக்களைச் சொல்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் தாயகத்தோடு சேர்ந்து ஏறத்தாழ 23 ஆண்டுகள் ஆகின்றது. இதுவரையிலும் அந்தச் சட்டத்தை அந்தப் பகுதிக்கு நீடிக்கவேண்டும் என்ற தேவை ஏற்படவில்லை. ஆனால் என்ன காரணத்தாலோ இப்போது அந்த அவசியம் ஏற்பட்டு இருக்கிறது. அந்தக் காரணங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கிக் கூறுவார்கள் என்று எண்ணுகிறேன்.

இருந்தாலும், இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதால் ஏற்படுகின்ற சில இன்னல்களையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். பெரும் அளவிற்கு அந்த மாவட்டத்தில் தனியார்களுக்குக் காடுகள் இல்லை. ஏழைகள் குறைந்த அளவிற்கு நிலங்களை காடுகளுக்கு அருகாமையில் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்த நிலங்கள் வருவாய்த்துறைக்குச் சொந்தமானவை. அந்த நிலங்கள் காட்டோடு ஒட்டி இருப்பதால், வன இலாகாவை நிர்வகிக்கும் அதிகாரிகள் வனத்தைப் பாதுகாக்கவேண்டும் என்ற ஆர்வத்தில், அது ரெவின்யூ இலாகா நிலமாக இருந்தாலும், அதை தனியார் அனுபவிப்பதாக இருக்கக்கூடாது என்று அங்கேயுள்ள ஏழைகளை அப்புறப்படுத்தும் சூழ்நிலை இருக்கிறது.

இந்தச் சட்டம் அந்தப் பகுதிக்கு விஸ்தரிக்கப்படுகிறபோது, நிச்சயமாக அந்த அதிகாரிகள் தீவிரமாக இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி, அந்த ரெவின்யூ புறம்போக்கு நிலங்களில் உள்ள ஏழை எளிய மக்களை அப்புறப்படுத்தும் சூழ்நிலை ஏற்படும். ஆகவே, அந்த ஏழை எளிய மக்களைக் காப்பாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்தச் சட்டத்தின் அடிப்படையில் 30 ஏக்கருக்கு மேலாக சொந்தமாகக் கையில் வைத்து இருப்பவர்களுக்குத்தான் இந்தச் சட்டம் பாதிக்கிறது என்று இருந்தாலும்கூட பெரும் அளவிற்கு நிலங்களை வைத்து இருப்பவர்களுக்கு இந்தச் சட்டத்தை அமல் படுத்துவதில் எங்களைப் போன்றவர்களுக்கு ஆட்சேபனை இல்லை. இந்தச் சட்டத்தால் ஏழை எளியவர்கள் பாதிக்கப் படக்கூடாது என்பதுதான் எங்களுடைய கோரிக்கை.



1979 மார்ச் 17] [திரு. ஜே. ஜேம்ஸ்]

இந்தச் சட்டத்தின் அடிப்படையில் ஓனர் என்று சொன்னால் மார்ட்கேஜி, லெஸ்ஸி, அல்லது அனுபவத்தில் கைவசத்தில் வைத்து இருப்பவர்கள் அனைவரும் அதிலே உட்பட்டு வருகிறார்கள், ஏனென்றால் இந்தச் சட்டத்தின் அடிப்படையில் அப்படி கைவசம் வைத்து இருந்தால் அவர்கள் அந்த நிலங்களை ஏலியநேட் செய்வதற்கு உரிமை இல்லை, கலெக்டரின் அனுமதி பெற்றுத்தான் அவர்கள் நிலங்களை விற்க முடியும், குத்தகைக்கு விட முடியும் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே இம்மாதிரி சூழ்நிலை இருக்கிற காரணத்தால் இந்தச் சட்டத்தால் பாதிப்பு ஏற்படும் நிலை இருக்கிறது என்பதை இங்கே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[பிற்பகல் 12-50.]

தனியார் காடுகளில் இருக்கின்ற மரங்களை வெட்டி, பாழ் படுத்தக் கூடாது என்பதை ஏற்றுக் கொள்கிறேன். தனியார் காடுகளையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. காட்டு வளம் நமக்கு மிகத் தேவையாக இருக்கிறது என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இந்தச் சட்டத்தை அமல் படுத்தும்போது காட்டு நிலங்களில் வசிப்பதற்குள்ள உரிமை மட்டும் இழக்கவில்லை; அந்த நிலங்களை விற்கவேண்டுமென்றால் கூட அவர்களுக்கு சுவாதீனமாக செய்ய முடியாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே பல்வேறு இடையூறுகள் அங்கே இந்தச் சட்டம் வருவதால் ஏற்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. அந்தப் பகுதியில் வன இலாகாவுக்குச் சொந்தமான நிலங்களில் கூட சில ஏழை எளிய மக்கள் பல்லாண்டு காலமாக விவசாயம் செய்து, வாழ்க்கை நடத்திக்கொண்டு வருகிறார்கள். குறிப்பாக பத்துக்காணி, ஆறுகாணி போன்ற பிரதேசங்கள் காட்டு இலாகாவுக்கு ஒரு காலத்தில் சொந்தமாக இருந்தாலும், பல்லாண்டுகாலமாக ஏழை எளிய தனியார்கள் சிறு வீடுகள், குடிசைகள் வைத்துக்கொண்டு, அங்கே விவசாயம் செய்து வாழ்ந்து வருகிறார்கள். அந்த நிலத்தை அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கோரிக்கையை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள்; அது நீண்டநாட்களாக அரசின் கவனத்தில் இருந்துகொண்டிருக்கிறது. பாரஸ்ட் நிலத்தை எப்படி பட்டா செய்து கொடுக்க முடியும் என்ற ஐயப்பாட்டின் காரணமாக அந்த நிலங்களை இதுவரையில் பட்டா செய்து கொடுக்கவில்லை. ஆனால் இப்போது இருக்கிற அரசின் சமூக நீதி என்ற அடிப்படையில் நிச்சயமாக—அந்த பிரதேசத்தில் அரை ஏக்கர், ஒரு ஏக்கர் என்ற அளவுக்கு மிகக் குறைந்த அளவு விஸ்தீரணம் நிலத்தைத்தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்—அதை அவர்களுக்கு பட்டா செய்து கொடுத்தால் நல்லது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அங்கே அரசுக்குச் சொந்தமான காடுகளில் காணிக்காரர்கள் என்று சொல்லப்படுகின்ற 'ஹில் ட்ரைப்ஸ்'— மலை ஜாதி மக்கள் வசிக்கிறார்கள். தொன்றுதொட்டே அரசுக்குச் சொந்தமான நிலங்களை அவர்கள் பயன்படுத்தி, வாழ்க்கையை நடத்திக் கொள்வதற்கான உரிமை அவர்களுக்கு இருந்துவருகிறது. அதை இப்போதும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் வன இலாகா அதிகாரிகளின் தொந்தரவு, அவர்களின் இன்னல்கள் இருக்கின்றன. மலை ஜாதி மக்கள் பயிரிடுகின்ற விளைபொருட்களை கூட நியாய விலைக்கு விற்க அந்த அதிகாரிகள் இடையூறு செய்கிறார்கள். ஆகவே, இந்த மலை ஜாதி மக்களுக்கு அவர்கள் கைவசம் இருக்கிற குறைந்த அளவு விஸ்தீரணம் உள்ள நிலத்தை பட்டா செய்து கொடுத்துவிட்டால் அரசாங்கம் இந்தச் சட்டத்தை அமுல்நடத்த வசதியாக இருக்கும் என்று சொல்லி, தனியார் காடாக இருந்தாலும் சரி அல்லது அரசுக்குச் சொந்தமான காடாக இருந்தாலும் சரி, அவற்றை பாழ் படுத்துவதை நாங்கள் ஆதரிக்கவில்லை- அதன்மீது அரசாங்கம் தீவிர கவனம் செலுத்துவதை பாராட்டுகிறேன். அதே நேரத்தில் ஏழை எளிய மக்கள் இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படக் கூடாது என்று கேட்டு அமர்கிறேன்.

திரு. கே. ஞானசிகாமணி : தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை ஆதரிக்கிற அதே நேரத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கழிந்த பல ஆண்டுகளாக தனியார் காடுகளைக் கண்டு பிடித்து, அரசாங்கத்தினுடைய காடுகளிலிருந்து விலக்க முயற்சி எடுக்கவில்லை. அதற்குக் காரணம் தனியார் காடு அங்கு இல்லை என்ற எண்ணம் இருந்தது. ஆகவே, ஒரு கிளாரிபிகேஷன் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதாவது, எத்தனை ஏக்கர் தனியாருக்கு இருக்கிறது. யார், யார் பெரிய காடுகளாக வைத்திருக்கிறார்கள் என்ற விளக்கத்தைத் தந்தால் நல்லது.

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, நீண்ட விவாதம் நடைபெற்று, அதற்குப் பிறகு மன்றம் ஏற்றுக் கொள்கின்ற அளவிலே இந்த மசோதாவில் ஒன்றும் இல்லை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். என்றாலும் இந்த மசோதா சம்பந்தப்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் சில கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் இதிலே அய்யப்படுகிற அளவுக்கு இந்தச் சட்டம் பயன்படுத்தப்படப் போவதில்லை. தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு காடுகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று இருக்கிற நிலையைத்தான் கன்னியா





குமரி மாவட்டத்திற்கும் இப்போது நீட்டிக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்த பிறகு செங்கோட்டைப் பகுதிக்கு இந்தச் சட்டம் நீட்டிக்கப்பட்டபோது, கன்னியாகுமரியில் தனியார் காடுகள் இல்லை என்ற முறையில் அப்போது கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இந்தச் சட்டம் நீட்டிக்கப்படவில்லை. ஆனால் அதன் பிறகு ஒரு வழக்கில் தனியார் ஒருவர் 600 அல்லது 700 ஏக்கருக்கு மேற்பட்ட ஒரு காட்டுப் பகுதியை— 900 ஏக்கர் என்று நினைக்கிறேன், சரியாக ஞாபகம் இல்லை— தனது சொந்தக் காடு என்று சொல்லி அனுபவித்துக்கொண்டுவந்தபோது, அதை அரசாங்க காடு இல்லை என்று வழக்காட முற்பட்ட பின்புதான் இப்படிப்பட்ட பிரச்சனை எழுந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் இந்தச் சட்டத்தை அங்கும் நீட்டிக்க வேண்டுமென்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் அங்கே வளர்வதற்குரிய காரணத்தைச் சொல்கிறேன். நம்முடைய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துக் கொண்டதைப்போல இதுவரை அங்கே காடுகள் என்ற பெயராலே இல்லாமல் தோட்டங்கள் அதாவது எஸ்டேட்டுகள் என்ற பெயராலே சுமார் 6,300 ஏக்கர்கள் தனியாருக்கு இருக்கின்றன. ஆனால் அந்த எஸ்டேட்டுகளுக்கிடையேதான் முன்பு குறிப்பிட்டபடி 900 ஏக்கர் காடுகளும் இருக்கின்றன. அந்தக் காடுகளிலே உள்ள மரங்களை வெட்டி விற்றும் விட்டார்கள். அவை பல இலட்சக்கணக்கான ரூபாய் பெருமானம் உள்ளவை. அது சம்பந்தமாக உச்ச நீதிமன்றத்திற்குப் போய் இப்போது அரசுக்குச் சாதகமாக தீர்ப்பு பெறப்பட்டிருக்கிறது.

எனவேதான் அந்த அடிப்படையில் இந்தச் சட்டமுன்வடிவை இங்கே அறிமுகப்படுத்தி இருக்கிறோம். ஆகவே, இந்தச் சட்டத்தை நிறைவேற்றி அதன் மூலம் காடுகளைப் பாதுகாக்கக் கூடிய முயற்சிக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைப்பு தர வேண்டும் என்று கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 15/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 முதல் 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம ஆண்டு தனியார் வனங்களைப் பாது காத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 15/1979) சட்டமாக நிறைவேற்றப்பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

## 10. அரசினர் தனித் தீர்மானம்.

### (அ) மாவட்ட நகராட்சிச் சட்டம் (1920)-ன் கீழ் புதிய விதி 62ஏ-யைச் சேர்த்தல்.

மாண்புமிகு திரு. சா. சாளிமுத்து : தலைவரவர்களே, தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) IV ஆம் விவர அட்டவணையில் விதியொன்றைச் சேர்க்கும் வகையில், அச்சட்டத்தின் 305-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ், தமிழ்நாட்டு ஆளுநரால் செய்யக் கருதப்பட்டுள்ள ஒரு திருத்தத்தின் கீழ்க்காணும் வரைவு ஏற்கப்பட வேண்டுமென முன்மொழிகிறேன் :—

### வரைவுத் திருத்தம்

தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1970) IV ஆம் விவர அட்டவணையில் 62-வது விதிக்குப் பின்னர் கீழ்க்காணும் விதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும் ; அதாவது :

"62-A நகராட்சிகள், அரசு முடிவு செய்யக்கூடிய ஊதியத் தொகையை நகராட்சி நிதியிலிருந்து தணிக்கையாளர்களுக்குக் கொடுக்க வேண்டும்."

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த திருத்தத் தீர்மானத்தை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். எக்சாமினர் ஆப் லோகல் பண்ட் அக்கவுண்ட்ஸ் அவர்களின் கணக்கின்படி ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள், நகராட்சிகள், கார்ப்பரேஷன்கள் இவைகள்





மூலமாக வரக்கூடிய மொத்த வருமானம் ஆண்டுக்கு சுமார் 312 கோடி. அதில் நகராட்சிகளும், கார்ப்பரேஷன்களும் அவைகளின் வருமானத்தில் 0.5 சதவீதம் தணிக்கையாளர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இவை எல்லாவற்றிலும் வரக்கூடிய மொத்த வருமானம் சுமார் 312 கோடி ரூபாய் என்றால் இதிலே 0.5 சதவீதம் தணிக்கையாளர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் கிட்டத்தட்ட ரூ. 15 கோடியே 60 இலட்ச ரூபாய் அரசு எதிர்பார்க்கிறது என்றுதான் அர்த்தம்.

[பிற்பகல் 1·00]

இது அநேகமாக ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் இவற்றிற்குக் கிடையாது. நகராட்சி மன்றங்களைப் பாதிக்கக்கூடிய வகையில் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே நகராட்சிகளுடைய நிதி நிலைமை படுமோசமாக இருந்துகொண்டிருக்கிறது. வரிகளுக்கு மேல் வரிகள் தனி அதிகாரிகளால் ஆலோசனைக் குழுவின் ஆலோசனையை மீறி போட்டு வந்தாலும், அங்குள்ள நிதி நிலை படுமோசமாக இருக்கிறது. படுமோசம் என்று நான் சொல்லும் போது அங்கு ரோடு வசதிகள் இல்லை. வெள்ளத்தால் பாழ்பட்ட ரோடுகள் சீர்செய்யப்படவில்லை. அவற்றிற்கான பராமரிப்பு சரியாக இல்லை. தெரு விளக்குகள் சரிவர எரிவதில்லை. எதற்கெடுத்தாலும் நிதி இல்லை நிதி இல்லை என்று சொல்கிறார்கள். சுகாதார வசதி மோசம். சாக்கடையை துப்புரவு செய்து எடுக்க வண்டி கிடையாது. தண்ணீர் எடுக்க வண்டி கிடையாது. ப்ளீச்சிங் பவுடர் வாங்க வசதி இல்லை என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு சப்ஜக்ட்ஸ்க்கு போகிறீர்களே. இது தணிக்கையாளர்களுக்கு ஊதியத்தொகை கொடுப்பது பற்றியது.

திரு. சி. கோவிந்தராசன் : இதற்கெல்லாம் நிதி இல்லை என்று சொல்லும்போது, முனிசிப்பாலிட்டியின் வருவாய் ரூ. 20 லட்சம் என்றால் கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாய் தணிக்கையாளர்களுக்குக் கொடுக்கவேண்டிய சூழ்நிலை வருகிறது. ஆக, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இது சரியல்ல. பேரூராட்சிகள் தான் மூன்றாம்தர முனிசிப்பாலிட்டியாக மாற்றப்படுகின்றன. ஆகவே இப்படிப்பட்ட ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்து மேலும் நிதிப்பளுவைக் கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்று கூறி அமர்கிறேன்.

[1979 மார்ச் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

பேரவை முன்னுள்ள கேள்வி—

" தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) IV ஆம் விவர அட்டவணையில் விதியொன்றைச் சேர்க்கும் வகையில், அச்சட்டத்தின் 305-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ், தமிழ்நாட்டு ஆளுநரால் செய்யக் கருதப்பட்டுள்ள ஒரு திருத்தத்தின் கீழ்க்காணும் வரைவு ஏற்கப்படவேண்டுமென முன்மொழிகிறேன் :—

வரைவுத் திருத்தம்.

தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) IV ஆம் விவர அட்டவணையில் 62-வது விதிக்குப் பின்னர் கீழ்க்காணும் விதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும் ; அதாவது :—

' 62-A நகராட்சிகள், அரசு முடிவு செய்யக்கூடிய ஊதியத் தொகையை நகராட்சி நிதியிலிருந்து தணிக்கையாளர்களுக்குக் கொடுக்க வேண்டும் '.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

(ஆ) பருத்தி போக்குவரத்துச் சட்ட விதிகளில் திருத்தம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :

" தமிழ்நாடு பருத்திப் போக்குவரத்து விதிகளின் 7, 8-வது விதிகளைத் திருத்தி, 1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3/1923) 7-வது பிரிவின்கீழ் அரசால் வெளியிடப்படவிருக்கும் கீழ்க்கண்ட வரைவு அறிவிப்பு, மேற்சொன்ன சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்பளிக்கப்படலாம்.

வரைவு அறிவிப்பு.

1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3/1923) 7-வது பிரிவின்கீழ் வழங்கப் பெற்றுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள்,



1979 மார்ச் 17] [திரு. ப. குழந்தைவேலு]

முன்னாள் உணவு-வேளாண்மைத் துறையில் 7—12—1950 அன்று பிறந்து, 26-12-1950 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம் 1-ன் விதிகள் இணைப்பின் 575—583 பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட (இது பின்னர் திருத்தப்பட்டுள்ளது) 51-ம் எண் அறிவிப்புடன் வெளியிடப்பட்ட விதிகளில் கீழ்க்கண்ட திருத்தங்களை இதனால் செய்கிறார். மேற்சொன்ன சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு தமிழ்நாட்டு சட்டமன்றத்தின் இரு அவைகளினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மூலம் இவற்றிற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

திருத்தம்.

"மேற்சொன்ன விதிகளில், 7-வது 8-வது விதிகளில் 'தலைமைக் காவலர்' என்னும் சொற்கள் எங்கெல்லாம் வருகின்றனவோ அங்கெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக 'காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்' என்னும் சொற்கள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, நான் இதில் பேச வேண்டாம் என்றிருந்தேன். ஆனால், பேசாவிட்டால் சட்டமன்ற உறுப்பினர்கள் * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்கள் பேசுவதாக இருந்தால் பேசவிட்டிருப்பேன்.

திரு. கே. பண்ணை சேதுராம் : பாயின்ட் ஆப் ஆர்டர். திரு. சுப்பு அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களை * * * என்று சொல்லலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்ற உறுப்பினர்கள் * * * என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

## II: பருத்திப் போக்குவரத்துச் சட்ட விதிகளில் திருத்தம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—

"தமிழ்நாடு பருத்திப் போக்குவரத்து விதிகளில் திருத்தம் செய்து 1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3/1923) 7-வது பிரிவின்கீழ் மாநில அரசால் வெளியிடப்படும் கீழ்க்காணும் வரைவு அறிவிப்புக்கு, மேற்சொன்ன சட்டத்தின் 8 ஆவது பிரிவில் கூறியுள்ளவாறு ஒப்புதல் வழங்கப் பெறவேண்டும்."

### வரைவுத் தீர்மானம்.

தமிழ்நாடு பருத்தி போக்குவரத்து விதிகளில் திருத்தம் செய்து, 1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3/1923) 7 ஆவது பிரிவின்கீழ் மாநில அரசால் வெளியிடப்படும் கீழ்க்காணும் வரைவு அறிவிப்புக்கு, மேற்சொன்ன சட்டத்தின் 8 ஆவது பிரிவில் கூறியுள்ளவாறு ஒப்புதல் வழங்கப் படுவதாக.

### வரைவு அறிவிப்பு I.

1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் மத்தி(யச் சட்டம் 3/1923) 3 ஆவது பிரிவில் வழங்கப்பெற்றுள்ள அதிகாரங்களைக் கொண்டும், முன்னாள் வளர்ச்சித் துறையில் 19—9—1928-ல் உருவாகி, 25—9—1928 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் பாகம் 1, பக்கம் 1455—1461-ல் (ஆங்கிலத்தில்) வெளியிடப் பெற்ற 278 ஆம் எண்ணுள்ள அறிவிப்பை ரத்து செய்து அதற்குப் பதிலாகவும், மேற்சொன்ன சட்டத்தின் 8 ஆவது பிரிவில் சொல்லியுள்ளவாறு சட்டமன்ற இரு அவைகளில், தீர்மானங்களால் ஒப்புதல் வழங்கப் பெற்றதைக் கொண்டும் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், தமிழ்நாட்டிற்குள், இரயில், சாலை, ஆறு, கடல் வழியில் அல்லது இவற்றுல் ஒன்று அல்லது பல வழிகளில் கப்பாஸ் பருத்தி, விதை எடுக்கப்பெற்ற பருத்தி, கழிவுப் பஞ்சு, பருத்தி விதை ஆகியவை இறக்குமதி செய்யப்படுவதற்கு மேற்சொன்ன 3 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ் தடை விதிக்கிறார். உரிமத்தில் நிபந்தனைகளின்கீழும் அதற்கிணங்க அன்றி மற்றப்படியும் மேற்சொன்ன 3-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்கீழ் அன்றி மற்றப்படியும், தமிழ்நாட்டில் அமைந்திராத ஓர் இரயில் நிலையத்திலிருந்து கப்பாஸ் பருத்தி விதை, எடுக்கப்பெற்ற பருத்தி, கழிவுப் பஞ்சு, பருத்தி விதை ஆகியவை அனுப்பிவைக்கப்படும்போது, அவற்றை தமிழ்நாட்டிற்குள் இரயில்



வழியாக இறக்குமதி செய்வதற்கான உரிமத்தை ஒருவர் வைத்திருந்தாலன்றி மற்றப்படி தமிழ்நாட்டிலுள்ள ஓர் இரயில் நிலையத்தில் அத்தகைய ஒருவருக்கு ஒப்படைக்கக்கூடாது. மற்றும் அத்தகையவர் யாரும் எடுக்கக்கூடாது.

### வரைவு அறிவிப்பு II.

1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3/1923) 7 ஆவது பிரிவில் வழங்கப்பெற்றுள்ள அதிகாரங்களைக்கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், முன்னாள் உணவு வேளாண்மைத் துறையில் 7—12—1950-ல் உருவாகி, 26—12—1950 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் விதிகளின் பிற்சேர்க்கையில் பாகம் 1, பக்கம் 575—583-ல் (ஆங்கிலத்தில்) வெளியிடப் பெற்ற 51 ஆம் எண்ணுள்ள அறிவிப்பில் (இது பின்னர் திருத்தப்பட்டது) கீழ்க்காணும் திருத்தங்களை இதனால் செய்கிறார். மேற்சொன்ன சட்டத்தின் 8 ஆவது பிரிவில் சொல்லியுள்ளவாறு இதற்குச் சட்டமன்ற இரு அவைகளின் தீர்மானங்களால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது :—

### திருத்தங்கள்.

மேற்சொன்ன விதிகளில்,—

1, 3 ஆவது விதியில்,—

(a). (ii) துணை விதியில் வரும்,—

" செயலாளர், இந்திய மத்தியப் பருத்திக் குழு " என்னும் சொற்களுக்குப் பதிலாக, " உரிமம் வழங்கும் அதிகாரி " என்னும் சொற்களை அமைத்துக் கொள்ள வேண்டும்; மற்றும்,

(b). (iv) துணை விதிக்குப் பிறகு, கீழ்க்காணும் (v) துணை விதியைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் :—

அதாவது :—

" (v) சரக்கு வந்தடைவதன்பேரில் உரிமம் வழங்கும் அதிகாரியிடம், ஆண்டுப் பொது உரிமத்தின் சான்றளிக்கப்பட்டு" பயன்படுத்தப்பட்ட நகல்களைக் கொடுத்துவிட வேண்டும்ப மற்றும்

2. A, B, C, D, E, F, G, GG, H, I, J ஆகிய படிவங்களுக்குப் பதிலாக, கீழ்க்காணும் படிவங்கள் அமைத்துக் கொள்ள வேண்டும்; அவையாவன :—

படிவம் " A ".

(1 ஆவது விதியைக் காண்க.)

பெறுநர் :

வேளாண்மை மாவட்ட அதிகாரி,

(சான்றளித்தல்—பருத்திச் சட்டத்தை செயல்படுத்துதல்)

இராஜபாளையம்/திருப்பூர்.

ஐயா,

கீழே கையொப்பமிட்டுள்ள நான்/நாககள்............... மேற்படாத ............... [விதையெடுக்கப்பெற்ற பருத்தியா, விதையெடுக்கப்படாத பருத்தியா (கப்பாஸ்), கழிவுப் பஞ்சா அல்லது பருத்தி விதையா என்பதைச் குறிப்பிடவும்] பேல்களை, உரிமதாரரின் ஆலை அல்லது ஆலைகளில் உற்பத்தி செய்யும் காரியத்திற்காக மட்டும்/உரிமதாரரால் ஏற்றுமதி செய்வதற்காக, இரயில்/சாலை/ஆறு/கடல் வழியாக தமிழ்நாட்டில் உள்ள ................... மாவட்டத்தில் ............... இரயில் நிலையத்திலிருந்து இறக்குமதி செய்வதற்காக ........ லிருந்து ............... வரையில் உள்ள கால அளவிற்கு உரிய பொது/தனி உரிமத்தை வழங்குமாறு, 1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் (மத்திய சட்டம் 3/1923) விண்ணப்பிக்கிறேன்/விண்ணப்பிக்கிறோம்.

உரிமத்தில் சான்றளிக்கப்பட்ட நகலை வழங்குமாறு (மேற்சொன்ன சட்டத்தில் சொல்லியுள்ளவாறு) நான் விண்ணப்பிக்கிறேன்/நாங்கள் விண்ணப்பிக்கிறோம்.

விதையெடுக்கப்பெற்ற அத்தகைய பருத்தி/விதையெடுக்கப்படாத பருத்தி (கப்பாஸ்) /கழிவுப் பஞ்சு/பருத்தி விதை மேற்சொன்ன காரியத்திற்காக மட்டுமே தேவைப்படுகிறது என்றும், உரிமம் வழங்கும் அதிகாரியின் கட்டளைகளின் கீழ் அன்றி மற்றப்படி அதனை எந்தவொரு நபருக்கும் மொத்தமாக அல்லது பகுதியாக விற்கப்படமாட்டாது அல்லது கொடுக்கப்படமாட்டாது. அல்லது மாற்றிக் கொடுக்கப்பட மாட்டாது என்று இதன் மூலம் நான் உறுதியளிக்கிறேன்/நாங்கள் உறுதியளிக்கிறோம். ஏன் இறக்குமதி தேவை என்பதற்கான காரணங்களைக் குறிப்பிடவும்.



நான்/நாங்கள்—

(1) மேற்சொன்ன உரிமத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பெற்ற விதையெடுக்கப்பெற்ற பருத்தி/விதையெடுக்கப்படாத பருத்தி (கப்பாஸ்)/கழிவுப் பஞ்சு/பருத்தி விதை எக்காரியத்திற்காக இறக்குமதி செய்யப்பட்டதோ அக்காரியத்திற்கு பயன் படாத போது அதனை எந்தவொரு நபருக்கும் மொத்தமாக அல்லது பகுதியாக விற்காமல் அல்லது கொடுக்காமல் அல்லது மாற்றிக் கொடுக்காமல், அது குறித்து உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்குத் தெரிவித்து, அந்த விதையெடுக்கப்பெற்ற பருத்தி விதையெடுக்கப்படாத பருத்தி (கப்பாஸ்)/கழிவுப் பஞ்சு/பருத்தி விதை எனது/எங்களது வளவை விட்டுச் செல்வதற்கு முன்னர் அதனை வேறு வகையில் முடிவு செய்வதற்கு மேற்சொன்ன உரிமம் வழங்கும் அதிகாரியின் ஒப்புதலை எதிர்ப்பார்ப்பேன்/எதிர்பார்ப்போம் என்று உறுதியளிக்கிறேன்./உறுதியளிக்கிறோம்.

(2) மேற்சொன்ன உரிமத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பெற்ற விதையெடுக்கப்பெற்ற பருத்தியை/விதையெடுக்கப்படாத பருத்தியை (கப்பாஸ்)/கழிவுப் பஞ்சை/பருத்தி விதையை, மறு ஏற்றுமதி செய்வதற்காகத் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பெற்ற விதையெடுக்கப்பெற்ற பருத்தியுடன்/விதையெடுக்கப்படாத பருத்தியுடன்/கழிவுப் பஞ்சுடன்/பருத்தி விதையுடன் கலப்பதற்கு அல்லது கலப்படம் செய்யப் பயன்படுத்துவதற்கு எச்சூழ்நிலையிலும் நான் அனுமதிக்கமாட்டேன்/நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்றும், அதனைத் தவறான பெயரில் மறு ஏற்றுமதி செய்வதற்கு நான் அனுமதிக்க மாட்டேன்/நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்றும் நான் /உறுதியளிக்கிறேன் நாங்கள் உறுதியளிக்கிறோம்.

மேற்சொன்ன சரக்கைத் தமிழ்நாட்டிற்குள் கொண்டுவரும் போது, தமிழ்நாட்டில் நுழையும் இடத்தில் உள்ள காவல் நிலையத்திலும் அவ்வாறு கொண்டு வரப்படும் நேரத்தில் தமிழ்நாட்டின் எல்லைப் பகுதிக்கு அருகில் உள்ள காவல் நிலையத்திலும், உரிமத்தைக் காண்பிக்க நான் உறுதியளிக்கிறேன்/நாங்கள் உறுதியளிக்கிறோம் ; மற்றும்

(3) இந்த உரிமத்தின்கீழ் இறக்குமதி செய்யப்பெற்ற விதை யெடுக்கப்பெற்ற பருத்தி/விதையெடுக்கப்படாத பருத்தி (கப்பாஸ்)/கழிவுப் பஞ்சு பருத்தி விதை சம்பந்தமாகவும், அதனைப் பின்னர் முடிவு செய்வது சம்பந்தமாகவும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் வரையறுக்கப் பெற்றுள்ள விவரங்களைக் கொடுப்பதோடு, மேற்சொன்ன உரிமத்தையும், பயன்படுத்தப்

பெறாத அதன் நகல்களையும், எக்கால அளவிற்காக அவை வழங்கப்பெற்றனவோ அக்கால அளவு முடிவடைந்த பிறகு ஒரு திங்களுக்குள் உரிமம் வழங்கும் அதிகாரியிடம் நான் கொடுக்கிறேன்/நாங்கள் கொடுக்கிறோம் என்று நான் உறுதியளிக்கிறேன்/நாங்கள் உறுதியளிக்கிறோம்.

இடம் : தங்கள் உண்மையுள்ள,

நாள் : (கையொப்பம்.)

1. கால அளவைக் குறிப்பிடவும்.
2. பேல்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடவும்.
3. பருத்தியின் வகையைக் குறிப்பிடவும்.
4. மாவட்டத்தின் பெயரைக் குறிப்பிடவும்.
5. ஏற்றுமதி செய்யப்படும் இடத்தின் பெயரைக் குறிப்பிடவும்.

படிவம் " B ".

ஆண்டுப் பொது உரிமம்.

[3(i) விதியைக் காண்க.]

எண் : நாள் :

உற்பத்தி செய்யும் காரியத்திற்காக/உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு விற்கப்படுவதற்காக, இந்தியாவிற்குள் உள்ள அல்லது இந்தியாவிற்கு வெளியே உள்ள யாதேனுமொரு துறைமுகத்திற்கு அல்லது துறைமுகங்களுக்கு ஆனால், அது அல்லது அவை தமிழ்நாட்டிற்குள் இருக்கக்கூடாது) 1–2–19.. ஆம் நாளிலிருந்து ஏற்றுமதி செய்வதற்காக, கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தமிழ்நாட்டில் ........................ மாவட்டத்தில் ............ பேல்/குவிண்டால் ............ இரயில், சாலை, ஆறு, அல்லது கடல் வழியாக இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளித்து, 1923ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 3/1923) இதன் மூலம் உரிமம் அளிக்கப்படுகிறது ; அந்நிபந்தனைகளாவன :

(a) சரக்கை இரயில் மூலம் அனுப்பும் போது, அவ்வாறு அனுப்பப்படும் ஒவ்வொரு சரக்குக்கும், அச்சரக்கு எந்த இரயில் நிலையத்திலிருந்து அனுப்பப்படுகிறதோ அந்த இரயில் நிலையத்தில், உரிமத்தின் சான்றளிக்கப் பெற்ற நகல் ஒன்றைக் கொடுக்க



வேண்டும். அச்சரக்கு எந்த இரயில் நிலையத்தில் ஒப்படை செய்யப்படவிருக்கிறதோ அந்த இரயில் நிலையத்திற்கு இரயில்வே பொருள் விவரப்பட்டியையும், சேர்த்து அனுப்பிவைக்க வேண்டும். அந்த பிறகு, அதனை. சம்பந்தப்பட்ட இரயில்வே அதிகாரி, இரயில்வே தணிக்கை அதிகாரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அவர், அதனை, உரிமம் வழங்கும் அதிகாரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் ;

(b) சரக்கை சாலை, ஆறு அல்லது கடல் வழியே அனுப்பும் போது, அவ்வாறு அனுப்பப்படும் ஒவ்வொரு சரக்குக்கும், உரிமத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் ஒன்றைக் கொடுக்க வேண்டும். அதனை, அச்சரக்கு வந்தடைந்ததன் பேரில் உரிமம் வழங்கும் அதிகாரியிடம் கொடுக்க வேண்டும்.

(c) இந்த உரிமத்தின்கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பருத்தியை, உரிமம் வழங்கும் அதிகாரியின் கட்டளைகளுக்கு இணங்க அன்றி மற்றப்படி, மேலே கூறப்பட்ட காரியத்திற்காக அல்லாது பிறவற்றிற்காகப் பயன்படுத்தக்கூடாது ; மற்றும்

(d) இந்த உரிமத்தின் கீழ் இறக்குமதி செய்யப் பெற்ற, விற்பனை செய்யப்பட்ட பருத்தி பேல்கள் குறித்த கணக்கை உரிமதாரர் வைத்துவர வேண்டும். கோரப் பெறுவதன் பேரில், அந்தப் பேல்களையும் அவை குறித்த கணக்குகளையும் ஆய்வு செய்வதற்காக வேளாண்மை இயக்குநரிடம் அல்லது அவரது சார்புநிலை அதிகாரியிடம் காண்பிக்க வேண்டும்.

உரிமம் வழங்கும் அதிகாரி.

படிவம் " C "

ஆண்டுப் பொது உரிமத்தில் சான்றளிக்கப்பட்ட நகல்.
[ 3 (ii) விதியைக் காண்க. ]

உரிமம் எண் ................197........'7 நகல் எண்;

உற்பத்தி செய்வதற்காக/உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு விற்கப்படுவதற்காக இந்தியாவிற்குள் உள்ள அல்லது இந்தியாவிற்கு வெளியே உள்ள யாதேனுமொரு துறைமுகத்திற்கு அல்லது துறைமுகங்களுக்கு (ஆனால் அது அல்லது அவை தமிழ்நாட்டிற்குள் இருக்கக் கூடாது). 1–2–19......விருந்து 31-1-19...... வரை இறக்குமதி செய்வதற்காக கீழ்க் காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தமிழ்நாட்டில் ........மாவட்டத்தில் 50 (ஐம்பது) பேல் விதையெடுக்கப்பெற்ற பருத்தியை/விதையெடுக்கப்படாத பருத்தியை/கழிவுப் பஞ்சை/பருத்தி விதையை, இரயில் அல்லது சாலை அல்லது ஆறு அல்லது கடல் வழியாக இறக்குமதி செய்ய, திருவாளர்கள்.......................................க்கு அனுமதி அளித்து, 1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்கு வரத்துச் சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 3/1923) இதன் மூலம் உரிமம் அளிக்கப் படுகிறது; அந்நிபந்தனைகளாவன :

(a) சரக்கை இரயில் மூலம் அனுப்பும்போது, அவ்வாறு அனுப்பப்படும் ஒவ்வொரு சரக்குக்கும், அச்சரக்கு எந்த இரயில் நிலையத்திலிருந்து அனுப்பபடுகிறதோ அந்த நிலையத்தில் உரிமத்தின் சான்றளிக்கப்பெற்ற நகல் ஒன்றைக் கொடுக்க வேண்டும். அச்சரக்கு எந்த இரயில் நிலையத்தில் ஒப்படை செய்யப் படவிருக்கிறதோ அந்த இரயில் நிலையத்திற்கு இரயில்வே பொருள் விவரப் பட்டியைச் சேர்த்து அனுப்பி வைக்க வேண்டும். அதன் பிறகு, அதனை சம்பந்தப்பட்ட இரயில்வே அதிகாரி, சம்மந்தப் பட்ட உரிமம் வழங்கும் அதிகாரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்;

(b) சரக்கை சாலை, ஆறு அல்லது கடல் வழியாக அனுப்பும் போது, அவ்வாறு அனுப்பப்படும் ஒவ்வொரு சரக்குக்கும், உரிமத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் ஒன்றைக் கொடுக்க வேண்டும். அதனை, அச்சரக்கு வந்தடைந்ததன் பேரில் உரிமம் வழங்கும் அதிகாரியிடம் கொடுக்க வேண்டும் -

(c) இந்த உரிமத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பெற்ற பருத்தியை, உரிமம் வழங்கும் அதிகாரியின் கட்டளைக்கு இணங்க அன்றி மற்றப்படி. மேலே கூறப்பட்டுள்ள காரியத்திற்காக அல்லாது பிறவற்றிற்காகப் பயன்படுத்தக்கூடாது. மற்றும்

(d) இந்த உரிமத்தின்கீழ் இறக்குமதி செய்யப்பட்ட, விற்பனை செய்யப்பட்ட பருத்தி பேல்கள் குறிந்த கணக்கை உரிமதாரர் வைத்துவர வேண்டும். கேட்கப்பெறுவதின் பேரில், அந்தப் பேல்களையும் அவை குறித்த கணக்குகளையும் ஆய்வு செய்வதற்காக வேளாண்மை இயக்குநரிடம் அல்லது அவரது சார் நிலை அதிகாரியிடம் காண்பிக்க வேண்டும்.

(ஒ.ம்.) உரிமம் வழங்கும் அதிகாரி.

மேலே கொடுக்கப்பட்டுள்ள மூல உரிமத்தின் உண்மை நகல் என்று சான்றளிக்கப்படுகிறது.

உரிமம்

நாள்.: உரிமம் வழங்கும் அதிகாரி.

சரக்கு அனுப்புபவர் பெயர் :

பேல்களின் எண்ணிக்கை :

பருத்தியின் வகை.

சரக்கு அனுப்புபவரின் கையொப்பம்
நிலைய அதிகாரியின் கையொப்பம்
அல்லது............ பொறுப்பு
வகிக்கும் அதிகாரியின் கையொப்பம்



படிவம் 'D'

உரிமம் எண் :

ரயில் மூலமாகச் சரக்குகளை அனுப்பி ஒப்படைப்பதற்காக வழங்கப்படுகின்ற ஒரே உரிமம்.

[4(i) விதியைப் பார்க்க.]

1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் (மத்திய சட்டம் III /1923) திருவாளர்கள்/திரு. (1) ...... ........................ தமிழ்நாடு மாநிலத்திலுள்ள/ (2) .................... க்கு ............... (3) பேல்கள் (4) ........................ * வகைப்பருத்தியை (5) ...... விருந்து (6) ..................... க்காக இறக்குமதி செய்ய உரிமம் ஒன்று வழங்கப்படுகிறது. இந்தியாவிற்குள் அல்லது இந்தியாவிற்கு வெளியேயுள்ள ஒரு துறைமுகம் அல்லது துறைமுகங்களுக்கு ஏற்றுமதி செய்ய உரிமம் ஒன்று வழங்கப் படுகிறது. ஆனால் மேற்சொன்ன துறைமுகம்/துறைமுகங்கள் தமிழ்நாடு மாநிலத்திற்குள் இருக்கக் கூடாது. இந்த உரிமம் ஒரு ஒப்படைச் சரக்கிற்கு மட்டுமே செல்திறன் உள்ளது. சரக்கு வந்து சேர்ந்ததும் சரக்கு எடுத்து வழங்கப்படும் நிலையத்தின் நிலைய அதிகாரியால் அல்லது நிலையத்திற்கு சரக்குகளும் சிப்பங்களும் வரப்பெறுவதற்கும் அங்கிருந்து அவற்றை வழங்குவதற்கும் பொறுப்புடைய ஏனையவொரு ரயில்வே பணியாளரால் முறைப்படி மேலொப்பம் செய்யப்பட்டு கீழே கையொப்பமிட்டவரிடம் இந்த உரிமம் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும்.

(a) இந்த உரிமத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் ஒன்று சரக்கு அனுப்பி வைக்கப்படும், நிலையத்தில் சரக்குடன் சேர்த்துக் கொடுக்கப்பட வேண்டும்.

(b) இந்த உரிமத்தின்கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி, உரிமம் வழங்கும் அதிகாரியின் கட்டளைகளின்படியன்றி மற்றபடி மேற்சொன்ன காரியங்களுக்குத் தவிர வேறு வகையில் பயன்படுத்தப்படக்கூடாது.

| | |
|---|---|
| மாவட்ட வேளாண்மை அதிகாரியின் அலுவலகம் (சான்றளிப்பும் செயற்படுத்துதலும்.) | உரிமம் வழங்கும் அதிகாரி மாவட்ட வேளாண்மை அதிகாரி (சான்றளிப்பும் பருத்திச் சட்டத்தைச் செயற்படுத்துதலும்.) |

ராஜபாளையம்,

நாள் : 1972.

* இன்ன வகை என்பதைக் குறிப்பிடுக : அரைத்த பஞ்சு கழிவு, பருத்தி விதை கப்பாஸ் (1) ஆலை/வணிகம் முதலியோரின் பெயர், (2) இறக்குமதி செய்யப்படும் இடம் (3) அளவு, (4) பருத்தி.வகை,(5) ஏற்றுமதி செய்யப்படும் இடம், (6) எக்காரியத்துக்காகப் பருத்தி இறக்குமதி செய்யப்படுகிறது என்பது.



படிவம் 'E'.

சான்றளிக்கப்பெற்ற இந்த நகல் இரயில்வே தணிக்கை அலுவலகத்துக்கு சரக்கு அனுப்புகைப் பட்டியலுடன் சேர்த்து அனுப்பப்பட வேண்டும். அங்கிருந்து இது பம்பாயிலுள்ள இந்திய மத்தியப் பருத்திக் குழுவின் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

படிவம் ' D ' யில் வழங்கப்படும் ஒரே உரிமத்தின் சான்றளிக்கப்பட்ட நகல்.

[4(iii) விதியைப் பார்க்க.]

உரிமம் எண்.......................197 .

1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3/1923) கீழ் திருவாளர்கள்/திரு. (1)........................................ தமிழ்நாடு மாநிலத்திலுள்ள (2)...................... க்கு.................. (3) பேல்கள் (4)* .................. வகைப்பருத்தியை (5)......................லிருந்து (6)..........க்கு இறக்குமதி செய்ய உரிமம் ஒன்று வழங்கப்படுகிறது. இந்தியாவிற்குள் அல்லது இந்தியாவிற்கு வெளியேயுள்ள ஒரு துறைமுகம் அல்லது துறைமுகங்களுக்கு ஏற்றுமதி செய்ய உரிமம் ஒன்று வழங்கப்படுகிறது; ஆனால், மேற்சொன்ன துறைமுகம் அல்லது துறைமுகங்கள் தமிழ்நாடு மாநிலத்திற்குள் இருக்கக் கூடாது.

இந்த உரிமம் ஒரே ஒரு ஒப்படை சரக்கிற்கு மட்டுமே செல்திறன் உள்ளது. சரக்கு வந்து சேர்ந்ததும் சரக்கு எடுத்து வழங்கப்படும் நிலையத்தின் நிலைய அதிகாரியால் அல்லது நிலையத்திற்கு சரக்குகளும் சிப்பங்களும் வரப்பெறுவதற்கும் அங்கிருந்து அவற்றை வழங்குவதற்கும் பொறுப்புடைய ஏனைய வேறொரு ரயில்வே பணியாளரால் முறைப்படி மேலொப்பம் செய்யப்பட்டு கீழே கையொப்பமிட்டவரிடம் இந்த உரிமம் திரும்பி ஒப்படைக்கப்பட வேண்டும்.

(1) இந்த உரிமத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் ஒன்று சரக்கு அனுப்பி வைக்கப்படும் நிலையத்தின் சரக்குடன் சேர்ந்துக்கொடுக்கப்பட வேண்டும்.

(2) இந்த உரிமத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி, உரிமம் வழங்கும் அதிகாரியின் கட்டளைப்படியன்றி மற்றபடி மேற்சொன்ன காரியங்களுக்குத் தவிர வேறு வகையில் பயன்படுத்தக் கூடாது.

சரக்கு அனுப்புபவர் பெயர்.................................

பேல்கள் எண்ணிக்கை .................................

இன்ன வகைப் பருத்தி என்பது.................................

நாள் :

உரிமை வழங்கும் அதிகாரி,
மாவட்ட வேளாண்மை அதிகாரி,
(சான்றளிப்பு பருத்திச்
சட்டத்தை செயல்படுத்துதலும்).

---

இன்னவகை என்பதைக் குறிப்பிடுக; அரைத்த பஞ்சு, கழிவு பருத்தி விதை, கப்பாஸ் (1) ஆலை/வணிகர் முதலியோரின் பெயர், (2) இறக்குமதி செய்யப்படும் இடம், (3) அளவு, (4) பருத்து வகை, (5) ஏற்றுமதி செய்யப்படும் இடம், (6) எக் காரியத்துக்காகப் பருத்தி இறக்குமதி செய்யப்படுகிறது என்பது.



படிவம் 'F'

உரிமம் எண் :

தொடர் எண் :

கடல் வழியாகச் சரக்குகளை அனுப்பி ஒப்படைப்பதற்காக வழங்கப்படுகின்ற ஒரே உரிமம்

[5(1) விதியைப் பார்க்க.]

1923/ஆம் ஆண்டு பருத்திப் போக்கு வரத்துச் சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 3/1923) திருவாளர்கள்/திரு ..........க்கு .......... லிருந்து.. .................................. பேல்களுக்கு (இன்ன வகைப் பருத்தி என்பதைக் குறிப்பிடுக; அரைத்த பஞ்சு/கழிவுபஞ்சு/கப்பாஸ்/பருத்தி விதை).மேற்படாத அளவை மட்டும்...................ஆலையின் பெயரில் வழங்கப்பட்ட உரிமத்தில் குறிப்பிட்டுள்ள தயாரிப்புக் காரியத்திற்காக தமிழ்நாடு மாநிலத்தில் அமைந்துள்ள ..................க்கு இறக்குமதி செய்ய உரிமம் ஒன்று வழங்கப்படுகிறது. இந்தியாவிற்குள் அல்லது இந்தியாவிற்கு வெளியேயுள்ள ஒரு துறைமுகம் அல்லது துறைமுகங்களுக்கு ஏற்றுமதி செய்ய உரிமம் ஒன்று வழங்கப்படுகிறது. ஆனால் மேற்சொன்ன துறைமுகம்/துறைமுகங்கள் தமிழ்நாடு மாநிலத்திற்குள் இருக்க கூடாது. இந்த உரிமம் ஒரே ஒரு ஒப்படைச் சரக்கிற்காக மட்டுமே செல்திறன் உள்ளது. சரக்கு வந்து சேர்ந்ததும் துறைமுகத்தின் பொறுப்பிலுள்ள அதிகாரியிடம் இந்த உரிமம் திருப்பி ஒப்படைக்கப்படவேண்டும்.

இந்த உரிமத்தின்கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி உரிமம் வழங்கும் அதிகாரியின் கட்டளையின்படி அன்றி மற்றபடி மேற்சொன்ன காரியங்களுக்குத் தவிர வேறு வகையில் பயன்படுத்தபடக் கூடாது.

மாவட்ட வேளாண்மை
அதிகாரியின் அலுவலகம்
(சான்றளிப்பும் செயற்படுத்தலும்).

நாள்: 19 .

உரிமம் வழங்கும் அதிகாரி
மாவட்ட வேளாண்மை அதிகாரி,
(சான்றளிப்பும் பருத்திச்
சட்டத்தை செயல்படுத்துதலும்).

அடிச் சீட்டு
உரிமம் எண்
படிவம்
தொடர் எண்

பெயர்.

இறக்குமதி
செய்யப்
படும் இடம்

அளவு எடை

பருத்தியின்
வகை.

ஏற்றுமதி
செய்யப்
படும் இடம்

தயாரிப்பின்
நோக்கம்

நாள் 1

மாவட்ட
வேளாண்மை
அதிகாரி

(சான்றளிப்
பும் பருத்தி
சட்டத்தை
செயற்படுத்
துதலும்.)

படிவம் 'G.'

அடிச் சீட்டு
உரிமம் எண்,
படிவம்.
தொடர்எண்
பெயர்.
இறக்குமதி
செய்யப்
படும்இடம்.
அளவு எடை
பருத்தியின்
வகை.
ஏற்றுமதி
செய்யப்
படும்இடம்
தயாரிப்புக்
காரியம்
நாள் 19.
மாவட்ட
வேளாண்மை
அதிகாரி
சான்றளிப்
பும் பருத்திச்
சட்டத்தை
செயற்படுத
துதலும்).

உரிமம் எண்.

தொடர் எண்.

சாலை, ஆறு வழியாகச் சரக்குகளை அனுப்பி ஒப்படைப்பதற்
காக வழங்கப்படுகின்ற ஒரே உரிமம்.

[6(1) விதியைப் பார்க்க.]

1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 3/1923) திருவாளர்கள்/திரு.......... ...........................க்கு .........இருந்து.. ............................ பேல்களுக்கு (என்ன வகை என்புதைக் குறிப்பிடுக; அரைத்த பஞ்சு/கழிவு/கப்பாஸ்/பருத்தி விதை) மேற்படாத அளவை மட்டும்.............. தயாரிப்புக் காரியத்திற்காக தமிழ்நாடு மாநிலத்தில் அமைந்துள்ள ..........................க்கு இறக்குமதி செய்ய உரிமம் ஒன்று வழங்கப்படுகிறது.

இந்த உரிமம் ஒரே ஒரு முறை ஒப்படைச் சரக்கிற்காக மட்டுமே செல்திறன் உள்ளது. சரக்கு வந்து சேர்ந்ததும் துறை முகத்தின் பொறுப்பிலுள்ள அதிகாரியிடம் இந்த உரிமம் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும்.

இந்த உரிமத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி, உரிமம் வழங்கும் அதிகாரியின் கட்டளையின்படி அன்றி மற்றப்படி, மேற்சொன்ன காரியங்களுக்குத் தவிர வேறு வகையில் பயன் படுத்தக் கூடாது.

மாவட்ட வேளாண்மை
அதிகாரியின் அலுவலகம்
(சான்றளிப்பும் செயற்படுத்துதலும்).
நாள் : 19 .

உரிமம் வழங்கும் அதிகாரி,
மாவட்ட வேளாண்மை அதிகாரி
(சான்றளிப்பும் பருத்திச்
சட்டத்தைச் செயல்படுத்துதலும்).



படிவம் 'GG'.

தமிழ்நாடு மாநிலத்துக்கு வெளியிலிருந்து தமிழ்நாடு மாநிலத்தின் வழியாக மற்ற மாநிலத்துக்கு/மாநிலங்களுக்குச் சாலை வழியாகச் சரக்கினை அனுப்புவதற்கு வழங்கப்படும் உரிமம்.

.....................ஆம் நாள் வரையில் செல்திறனுள்ளது.

உரிமம் எண். நாள்..................19 .

படிவம் 'GG'. தொடர் எண்.

சாலை வழியாகச் சரக்குகளை அனுப்பிப் பெறுவதற்கு வழங்கப் படும் ஒரே உரிமம்.

[6(1) விதியைப் பார்க்கவும்.)

1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின்கீழ் (மத்தியச் சட்டம் 3/1923) திரு/திருவாளர்கள் .......... (மத்தியச் சட்டம் 3/1923) திரு/திருவாளர்கள் .......... (ஏற்றுமதி செய்யப்படும் இடம்) தமிழ்நாடு மாநிலத்தின் லிருந்து (ஏற்றுமதி செய்யப்படும் இடம்) தமிழ்நாடு மாநிலத்தின் வழியாக பாதுகாக்கப்படாத பகுதியாகிய............... ..................க்கு................ பேல்கள் மனுக்களை (இன்ன வகை என்பதைக் குறிப்பிடுக; அரைத்த பஞ்சு/கழிவு/கப்பாஸ்/...... ........காரியத்துக்காக இறக்குமதி செய்ய உரிமம் ஒன்று வழங்கப்படுகிறது.

இந்த உரிமம் ஒரே ஒரு ஒப்படைச் சரக்கிற்காக மட்டுமே வழங்கப்படுகிறது. சரக்கு வரப்பெற்றதும் கீழே கையொப்ப மிட்டவரிடம் இந்த உரிமம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்.

இந்த உரிமத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி, உரிமம் வழங்கும் அதிகாரியின் கட்டளையின்படிக்கன்றி மற்றபடி, மேற்சொன்ன காரியங்களுக்குத் தவிர வேறு வகையில் பயன் படுத்தப்படக்கூடாது.

மாவட்ட வேளாண்மை அதிகாரி
அலுவலகம் (சான்றளிப்பும்,
பருத்திச் சட்டத்தைச் செயல்
படுத்தலும்).

உரிமம் வழங்கும் அதிகாரி,
மாவட்ட வேளாண்மை
அதிகாரி (சான்றளிப்பும்
பருத்திச் சட்டத்தைச்
செயற் படுத்தலும்).

இராஜ பாளையம்,
நாள் :

சரக்கு அனுப்புபவரின் கையொப்பம்.

## படிவம் 'H'.

தமிழ்நாடு மாநிலத்திற்குள் பருத்தி இறக்குமதி செய்யப்பட்டது குறித்த ஆவணம். ....................ஆலையால்/நிறுவனத்தால்
[3(iii) விதியைக் காண்க.]

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| உரிமம் எண் | சான்றளிக்கப்பட்ட நகல் எண். | இறக்குமதியாளருக்கு உரிமம் வழங்கப் பட்ட நாள். | எந்த இடத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டது என்பது. | சரக்கு ஒப்படை பெறும் நிலையம். | எந்த முறையில் போக்குவரத்து செய்யப் பட்டது என்பது. | தமிழ்நாடு மாநிலத்திற்குள் பருத்தி வந்து இறங்கிய நாள். | இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி அளவு. | பருத்தியின் வகை. | பருத்தி எவ்வாறு முடிவு செய்யப்பட்டது என்பது. |



## படிவம் 'I'

தமிழ்நாடு மாநிலத்திற்குள் .................... மாதத்தில் .................... ஆலையால்/நிறுவனத்தால் பருத்தி இறக்குமதி செய்யப்பட்டது குறித்த தகவல் [3(iii) விதியைக் காண்க.]

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உரிமம் எண். | சான்றளிக்கப்பட்ட நகல் எண்/நாள். | இறக்குமதியாளருக்கு உரிமம் வழங்கப் பட்ட நாள். | எந்த இடத்திலிருந்து அனுப்பி வைக்கப் பட்டது என்பது. | சரக்கு வந்து சேர்ந்து வழங்கப்படும் இடம். | தமிழ்நாடு மாநிலத்திற்குள் பருத்தி வந்து சேர்ந்த நாள். | இறக்குமதி செய்யப்பட்ட பருத்தியின் அளவு. | பருத்தியின் வகை. | எவ்வாறு போக்குவரத்து செய்யப்பட்டது என்பது. | எவ்வாறு பருத்தி முடிவு செய்யப்பட்டது என்பது. | கைவசம் எஞ்சியுள்ள சான்றளிக்கப்பட்ட நகல்கள். |

படிவம் "J"

........ஆம் ஆண்டில் முடிவடைந்த........ஆலையால்/ ......வணிகரால் ...... தமிழ்நாடு மாநிலத்திற்குள் பருத்தி இறக்குமதி செய்யப்பட்டது குறித்த தகவல் [3(iii) விதியைக் காண்க.]

(1) உரிமம் எண்.

(2) சான்றளிக்கப்பட்ட நகல் எண்/நாள்.

(3) இறக்குமதியாளருக்கு உரிமம் வழங்கப்பட்ட நாள்.

(4) எந்த இடத்திலிருந்து அனுப்பி வைக்கப் பட்டது என்பது.

(5) சரக்கு ஒப்படை பெறும் இடம்.

(6) தமிழ்நாடு மாநிலத்திற்குள் பருத்தி வந்து சேர்ந்த நாள்.

(7) இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி அளவு.

(8) பருத்தியின் வகை.

(9) எவ்வாறு போக்குவரத்து செய்யப்பட்டது என்பது.

(10) எவ்வாறு பருத்தி முடிவு செய்யப்பட்டது என்பது.

(11) கைவசம் எஞ்சியுள்ள சான்றளிக்கப்பட்ட நகல்கள்.



விளக்கக் குறிப்பு.

இம்மாநிலத்தில் பயிராகும் பருத்தியின் தரத்தையும், புகழையும் நிலை நிறுத்துவதற்காக, பருத்திப் போக்குவரத்திற்குத் தடையையும், கட்டுப்பாட்டையும் விதிக்க, 1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டம்(மத்தியச் சட்டம் 3/1923)வகை செய்கிறது. மேற்சொன்ன சட்டத்தின் 3-வது பிரிவைச் சேர்ந்த (1), (2) உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு மாநில அரசு அச்சட்டத்தின் 1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டம் (மத்தியச் சட்டம் 3/1923) 3-வது பிரிவின்கீழ் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு, தமிழ்நாடு மாநிலத்தை, கீழே குறிப்பிட்டுள்ளவாறு "கம்போடியா பகுதி" என்றும் "திருநெல்வேலி பகுதி" என்றும் இரண்டு பாதுகாக்கப் பட்ட பகுதிகளாக எல்லை வரையறை செய்துள்ளது.

கம்போடியா பகுதி.—செங்கற்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களும், திருநெல்வேலி பகுதிக்குப் புறம்பாய் உள்ள மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த சில பகுதிகளும்.

திருநெல்வேலிப் பகுதி.—திருநெல்வேலி மாவட்டமும், கம்போடியாப் பகுதிக்குள் வராத மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த பகுதிகளும்.

2. கம்போடியாப் பகுதிக்குள் பருத்தி விதைகளைப் போக்குவரத்து செய்வது தடையின்றி அனுமதிக்கப்படுகிறது. ஆனால் ஓராண்டில் டிசம்பர் முதல் நாள் தொடங்கி, அதற்கு மறு ஆண்டில் மே திங்கள் 31 ஆம் நாள் வரையிலான கால அளவில், திருநெல்வேலி பகுதிக்குள் பருத்தி விதைகளைப் போக்குவரத்து செய்வது உரிமம் வழங்கும் அதிகாரியின் விருப்பத்தின் பேரிலேயே அனுமதிக்கப்படுகிறது.

3. மேற்சொன்ன அறிவிப்பு 1928 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டது. பருத்தி வளர்ச்சிக்கான உயர்மட்டக் குழு, 1974 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ஆம் நாளன்று நடைபெற்ற கூட்டத்தில், 1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 3/1923) இம் மாநிலத்தை இரண்டு பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக எல்லை வரையறை செய்து 1928 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட மேற்சொன்ன அறிவிப்பு ரத்து செய்யப்படலாமென்றும், ஒருமனதாகப் பரிவுரை செய்துள்ளது. மேலும், நம் மாநில எல்லைகளைப் பொறுத்தவரை மேற்சொன்ன சட்டத்தின்கீழ் விதிக்கப்பெற்றுள்ள

கட்டுப்பாடுகள் தொடர்ந்து பேணி வரப்பட வேண்டுமென்றும் இல்லையெனில் ஆந்திர மாநிலத்திலிருந்தும் ஏனைய அண்டை மாநிலங்களிலிருந்தும் தரம் குறைந்த பருத்தி விதைகள் நம் மாநிலத்திற்குள் கொண்டு வரப்பட்டு விடுமென்றும் அக் குழு ஒப்புக்கொண்டது. எனவே, வேளாண்மைத் துறை இயக்குநர் மாநிலம் முழுவதையும் ஒரே பகுதியாகக் கருதும் பொருட்டு கமபோடியா பகுதி, திருநெல்வேலி பகுதி என்றிருக்கும் இரண்டு பாதுகாக்கப்பட்ட பகுதிகளையும் ஒன்றாக்கி விடுவதற்கான செயற் குறிப்புகளைப் பணிந்தனுப்பியுள்ளார். அச்செயற் குறிப்புகளைத் தொடர்ந்து, பருத்திப் போக்குவரத்து விதிகளின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள தற்போதைய படிவங்களும் மாற்றி அமைக்கப்பட வேண்டியுள்ளன.

4. 1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டம் (மத்தியச் சட்டம் 3/1923) 7 ஆவது பிரிவின்கீழ் மாநில அரசு அப்பிரிவில் வரையறுக்கப்பட்டுள்ள பொருள்களில் ஒன்றைக் குறித்து வகை செய்ய விதிகளை இயற்றலாம்.

5. 1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3/1923) 8 ஆவது பிரிவையொட்டி, 1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின்கீழ் (மத்தியச் சட்டம் 3/1923) வெளியிடப்பட்ட தமிழ்நாடு பருத்திப் போக்குவரத்து விதிகளுக்குச் சில திருத்தங்களை வெளியிடுவதற்கான தீர்மானம் ஒன்றை அரசு கொண்டுவர கருதியுள்ளது.

திரு. க. சுப்பு: இந்தச் சட்டத் திருத்தமே அதிசயமாக இருந்தது. பருத்திப் போக்குவரத்து விதிகளுக்கும், மோட்டார் வாகனச் சட்டத்திலுள்ள விதிகளுக்கும் முரண்பாடு இருப்பதால்—ஹெட் கான்ஸ்டபிள் ராங்கில் போடலாம் என்று பருத்தி போக்குவரத்து விதிகளில் இருக்கிறது. மோட்டார் வாகனச் சட்டத்தில் இதே வேலையை சப்-இன்ஸ்பெக்டர் பதவிக்குக் கீழ் உள்ளவர்கள் செய்யக் கூடாது என்றிருக்கிறது. இந்த முரண்பாடு, ஒரு வழக்கு வந்தபோது கண்டுபிடிக்கப்பட்டு ஜி.ஜி. சொன்னார்கள். ஆகவே, அதற்கான ஒரு திருத்தம் கொண்டு வந்திருப்பதாக சொல்கிறார்கள். அதுவரை அவ்வளவு அதிகாரிகளும் மீனா நித்திரையில் இருந்தார்களா? காரணம் என்ன? அதுவரை பேசாமலிருந்ததற்குக் காரணம் என்ன என்று கண்டுபிடித்து அந் அதிகாரிகளிடம் ஒரு விளக்கமாவது கேட்க வேண்டும். இந் டிஸ்க்ரிபன்ஸி இருக்கிறது என்று கண்டு பிடிக்காத அளவி சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிறார்களா என்று கேட்டு இதோ விட்டுவிடுகிறேன்.



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் நாள், திங்கட்கிழமை அன்று காலை 9—00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 1.05 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

120. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இயல்பு மாற்றப்பட்ட சாராவி, மெதில் ஆல்கஹால், வார்னிஷ் (பிரஞ்சு பாலிஷ்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்த உள்துறையின் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் தேதியிடப்பெற்ற 3099 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் )தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

121. 1925 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்த வணிக வரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6 ஆம் தேதியிட்ப்பெற்ற 107 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 2/1899) 75-A(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.



## இணைப்பு I.

[..401ம் பக்கத்திலுள்ள வினா எண் 442-க்கான விடையைக் காண்க]

1976–77 ஆம் ஆண்டில் அரசு விளம்பரங்கள் தினசரிப் பத்திரிகைகளுக்கு கொடுக்கப்பட்ட புள்ளிவிவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| வரிசை எண். (1) | பத்திரிகையின் பெயர். (2) | விளம்பரத்தின் மதிப்பு. (3) |
|---|---|---|
| | ஆங்கிலம். | ரூபாய். |
| 1. | இந்து | 9,86,706 |
| 2. | இந்தியன் எக்ஸ்பிரஸ் | 3,76,020 |
| 3. | மெயில் | 1,53,328 |
| 4. | டைம்ஸ் ஆப் இந்தியா | 1,37,096 |
| 5. | எகானாமிக் டைம்ஸ் | 60,089 |
| 6. | பைனான்சியல் எக்ஸ்பிரஸ் | 1,773 |
| 7. | பிரி பிரஸ் ஜர்னல் | 40,477 |
| 8. | டெக்கான் ஹெரால்ட் | 31,050 |
| 9. | டெக்கான் க்ரானிக்ஸ் | 1,167 |
| 10. | இந்துஸ்தான் டைம்ஸ் | 87,161 |
| 11. | பேட்ரியட் | 13,530 |
| 12. | நேஷனல் ஹெரால்ட் | 56,287 |
| 13. | டிரிபியூன் | 5,319 |
| 14. | அமிர்தபசார் பத்திரிகா | 1,32,050 |
| 15. | ஸ்டேட்ஸ்மென் | 27,334 |
| 16. | பிசினஸ் ஸ்டாண்டர்ட் | 13,006 |
| 17. | அஸ்ஸாம் டிரிபியூன் | 537 |
| | தமிழ். | |
| 18. | தினத்தந்தி | 2,83,999 |
| 19. | தினமணி | 86,156 |
| 20. | முரசொலி | 42,026 |
| 21. | மாலை முரசு | 78,937 |
| 22. | அலை ஓசை | 20,553 |
| 23. | மக்கள் குரல் | 25,233 |
| 24. | தென்னகம் | 22,902 |
| 25. | நவசக்தி | 8,202 |
| 26. | நவ இந்தியா | 2,240 |
| 27. | செய்தி | 11,306 |
| 28. | சுதேசமித்திரன் | 53,409 |

**மாநகராட்சி—**

சென்னையில் வீடுகளுக்கு புது எண்கள் இடுதல், எதிர்ப்பு 271—273

**மார்க்கபந்து, திரு. ரா.—**

கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 115—116

தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 235—236

நீர் ஊற்றுக்கள் பாதிப்பு, வட ஆற்காடு, தோல் பதனிடும் தொழிற்சாலைகளால் 429—433

வழக்கறிஞர் தாக்கப் பெற்றமை, திருப்பரங்குன்றம் (க.ஈ.) 192, 194

**மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.—**

உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 353—354

என்.எம்.ஆர். தொழிலாளர்கள், வேலை நிர்ணயம் கோரி உண்ணாவிரதம் (ஒ.தீ.) 454, 455

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களது மறியல் போராட்டம் (ஒ.தீ.) 53—54

மத்திய கூட்டுறவு வங்கியின் கடன் வசதி, உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (தீ.) 360—361

**மின்சாரம்—**

தேயிலைத் தோட்டத் தெருக்களுக்கு விளக்குகள் 148—149

**மீனளம்—**

மீன்பிடி படகுகளுக்கான யமாகா அவுட் போர்டு மோட்டார் வாங்கல் 11—13

**மீனாட்சிசுந்தரம், திரு. மா.—**

தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 239—240

**மூசிறிப்புத்தன், திரு. பி.—**

நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 220



**முத்தையா, திரு. இரா.—**

பக்கங்கள்

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 82—85, 85—86

நிறுவனங்களில் பெயர்ப் பலகைகள், தூய தமிழில் 149—152

**முந்திரி—**

விநியோகம் 32

**மூலிகைச் செடி—**

துளசிச் செடித் தோட்டம், திருவில்லிபுத்தூர் 123—128

**மொழிகள்—**

நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள், தூய தமிழில் 149—152

ய.

**யூசப் திரு. யா. சை. மு.—**

குமரி அணை, கன்னியாகுமரி செப்பனிடல் 160—161

பொய்கை ஆற்றின் குறுக்கே அணை, தோவாளை, கன்னியாகுமரி 426—427

ர.

**ரகுமான்கான், திரு. அ.—**

மாலை முரசு நாளேடு மீதும், திரு. இரா. நெடுஞ்செழியன் மீதும் (உ.பி.) 171, 176—178

**ரமணி, திரு. கு.—**

கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 220

கோவில்களில் உள்ள கடைகள், கட்டடங்கள், வீடுகள், நியாய வாடகைக் குழு 138—142

சிங்காநல்லூரில் அரிசன நல சங்கம் என்ற பெயரால் வசூலிக்கப்பட்ட தொகை 22—23

நோட்டுப் புத்தகங்கள் வழங்கல், கோவை 267—271

| வரிசை எண். | பத்திரிகையின் பெயர். | விளம்பரத்தின் மதிப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | இந்தி. | ரூபாய். |
| 29. | நவபாரத் டைம்ஸ் .. .. .. .. | 2,285 |
| 30. | சுவதந்தரபாரத் .. .. .. .. | 951 |
| | உருது. | |
| 31. | முசல்மான் .. .. .. .. | 1,733 |
| 32. | இட்டஹாட் .. .. .. .. | 3,390 |
| 33. | தமிழ்நாடு டைம்ஸ் .. .. .. | 574 |
| 34. | ஓம்ஸாபர் .. .. .. .. | 192 |
| 35. | ரஹ்னுமா-இ-டெக்கான் .. .. | 672 |
| | தெலுங்கு. | |
| 36. | ஆந்திர பத்திரிகா .. .. .. .. | 1,220 |
| | கன்னடம். | |
| 37. | பிரஜாவாணி .. .. .. .. | 2,540 |
| 38. | லோக்வாணி .. .. .. .. | 156 |
| | மலையாளம். | |
| 39. | மாத்ருபூமி .. .. .. .. | 6,076 |
| 40. | மலையாள மனோரமா .. .. .. | 10,189 |
| 41. | மற்ற பிறமொழிப் பத்திரிகைகள் .. .. | 47,616 |

V211,31 N79
N80-26-2
122148